# நிகழ்

32

காலாண்டிதழ்

மே 1996



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சுபமங்களா
இதழின் மூலம்
தமிழிலக்கிய வரலாற்றில்
தன்னைப் பதித்துக் கொண்ட
கோமல் சுவாமிநாதன் அவர்கள்
இன்று நம்மோடு இல்லை.
சுபமங்களாவின் மூலம்
சிற்றிதழ்காரர்கள் இந்தியா டுடே,
இப்பொழுது தினமணி ஆகிய இதழ்களில்
உரிமையோடு இடம் பெற்று இருக்கிறார்கள்.
முதலாளியத்தோடு நாம் முரண்படுவதற்கும், போராடுவதற்கும்
இப்படி வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.
முதலாளியம் நம்மை
உள்வாங்கிக் கொள்வதாகிய ஆபத்தையும்
புரிந்து கொண்டு
நம்மால் செயல்பட முடியும்.
சிற்றிதழ்கள், தமக்குரிய பணியை
இப்பொழுது திட்பமாக வரையறுத்துக் கொண்டு
செயல்பட வேண்டும்.

தோழர்
பொன்னீலன் அவர்களை அடுத்து
நண்பர் பிரபஞ்சனுக்கு
சாகித்ய அகாதமி பரிசு கிடைத்திருக்கிறது.
இதற்காக நாம் பெரிதும்
மகிழ்ச்சி அடைகிறோம்.
தமிழியக்கம் கூடுதலாக முன் செல்வதற்கும்
இது வாய்ப்பாக அமைய முடியும்.
எம்.டி. வாசுதேவன் நாயர் அவர்களுக்குக்
கிடைத்த ஞானபீடப் பரிசு
அவரிடம் நமக்கு இன்னும் கூடுதலான மரியாதையை
ஏற்படுத்துகிறது.
ஞானபீட உயரத்தின் அளவுக்கு
ஜெயகாந்தன் இல்லல்யா?
லா.ச.ரா , அசோகமித்திரன், சுந்தர ராமசாமி
இவர்களுக்கும் இந்தத் தகுதி இல்லையா?
தமிழனைப் புறக்கணிப்பவை எந்தச் சக்திகள்?
நம்மை நாமே மட்டம் தட்டி
நமக்கான வாய்ப்புகளை
அழித்துக் கொள்கிறோமா?
நமக்குள் கிளறிக் கொள்ளத்தான் வேண்டும்.
நம்மை நாமே காயப்படுத்துவதை
நிறுத்திக் கொள்ளவும் தான் வேண்டும்.
வளர முயற்சி செய்வோம்.

## நிகழ் - 31 குறிப்பில் ஒரு திருத்தம்

ஆசிரியர் குழு செய்த முடிவில் தனக்கு உடன்பாடு இல்லை என்று நிகழுக்கு தெரிவித்தவர் நண்பர் தபசி. வ.உ. துளசி என்று நிகழில் வெளியிட்டிருந்தேன். தவறுக்கு வருந்துகிறேன். இதைச் சுட்டிக் காட்டிய 'களம் புதிது' ஆசிரியர் கரிகாலன் அவர்களுக்கு என் நன்றி.

- ஞானி

www.padippakam.com


# நிகழ்

(காலாண்டிதழ்)

32

ஆசிரியர் :
கி. பழனிச்சாமி

சிறப்பாசிரியர் :
எஸ்.என். நாகராஜன்


## ஆசிரியர் உரை

இந்தியாவில் சில கட்சிகளும் தலைவர்களும் கடுமையான அதிர்ச்சிக்கு உள்ளாகும் சூழல் எழுந்துள்ளது. தோண்டிய இடங்களில் எல்லாம் ஊழல் சேறு பெருக்கெடுக்கிறது. இதுவரை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உள்ளிருந்தே சிதைத்தவர்களை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு உட்படுத்துகிறது. ஊழல் பெருச்சாளிகள் அவர்களின் பதுங்கு குழிகளிலிருந்து வெளியே ஒவ்வொருவராகக் கொண்டு வரப்படுகிறார்கள். ஊழல் மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் சீர்கேடுகளுக்கும் மனித உரிமை நாசங்களுக்கும் காரணமானவர்கள் சமூகத்தின் முன்னிலையில் குற்றவாளிகளாக நிறுத்தப் படுகிறார்கள். விசாரணை இப்பொழுது தொடங்கியிருக்கிறது. விளைவுகள் பற்றி இப்பொழுது உறுதியாக சொல்வதற்கில்லை.

நாற்பது ஆண்டுகளுக்குமேலாக மக்களைச் சுரண்டியவர்கள் மற்றும் மக்களின் மீது ஒடுக்குமுறையைத் திணித்தவர்கள் இவர்கள் கட்சித் தலைவர்கள், மற்றும் அரசு அதிகாரிகள். இவர்களுக்குப் பின்னிலையில் இருப்பவர்கள் முதலாளியச் சக்திகள். ஓரா குழு சுட்டிக்காட்டியபடி இந்த அரசியல் வாதிகளும், குற்றவாளிகளும் கைகோர்த்துச் செயல்படுகின்றனர். இந்தியாவில் மக்களாட்சி, சோசலிசம் முதலியவற்றைக் குழிதோண்டி இவர்கள்தான் புதைத்தனர். சமுதாய மாற்றம் கருதி இயக்கம் அமைத்தவர்கள் மற்றும் போராட்டங்களை உருவாககியவர்களை இவர்கள்தான் ஒடுக்கினர். அரசு அதிகார நிறுவனம் இவர்களுக்கேற்றவாறு உருவாக்கப்பட்டது இந்தியாவின் பொருளியல் முதற்கொண்டு அனைத்து அரங்கங்களையும் இவர்கள்தான் ஆக்கிரமித்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் இப்பொழுது குற்றவாளிகளாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுக்குப் பின்னிருக்கும் முதலாளிய சக்திகள் இந்தப் புதிய சூழலை ஏற்க மாட்டார்கள். இதுதான்வரை அதிகார பீடங்களில் இறுமாப்போடு ஏறி அமர்ந்தவர்கள், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் எதிர்நிலையை ஏற்க மாட்டார்கள். இதற்கான அடையாளங்கள் இப்பொழுதே தெரியத் தொடங்கி உள்ளன. நீதிமன்றத்தை, அரசியல் அமைப்புச் சட்டத்தை முறிப்பது உட்பட இவர்கள் எதனையும் செய்வார்கள். இப்பொழுது அமைதியாக இருப்பதைப் போலத் தோற்றம் தரும் முதலாளிய சக்திகளும், குற்றப் பரம்பரையினரும், இவர்களின் வழியே தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள விரும்பும் அந்நியச் சக்திகளும் எதிர் தாக்குதலைத் தொடுக்கவே செய்வார்கள்.

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மக்களின் விடுதலையை நோக்கமாகக் கொண்டவை அல்ல. தொழிற்சங்கம் முதலிய இயக்கங்கள் தம் வலிமையை இழந்து விட்டன. சந்தைப் பொருளாதாரம் என்ற பெயரில் இந்திய நாட்டுக்குள் தொடர்ந்து ஊடுருவி வரும் அந்நியச் சக்திகளை இவர்கள் ஆதரிக்கவே

படிப்பகம்

www.padippakam.com

செய்கின்றனர். உள்நாட்டில் பத்திரங்கள் மூலம் பணம் திரட்டுவது, பேரளவில் அரசுக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது உட்பட அனைத்து வழிமுறைகளிலும் மூலதனத்தை முதலாளிகள் திரட்டுவதை இவர்கள் கேள்விக்கு உட்படுத்தவில்லை. தம் தொழில் பெருக்கம் முதலியவற்றுக்கான வசதி வாய்ப்புக்களைத் திரட்டிக் கொள்வதற்கு ஏற்றமுறையில் அன்பளிப்புத் தரும் ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவிலும் மறுக்கப்படவில்லை. இந்தியத் தொழில்களை அழிப்பது உட்பட எதனையும் அந்நியச் சக்திகள் செய்வதில் உறுதியாக இருக்கின்றன. இந்திய முதலாளிகளுக்கு மக்களின் வாழ்க்கை மேம்பாடு என்பது என்றுமே நோக்கமாக இருக்கவில்லை. இவர்கள் தரகர்கள், மற்றும் பொறுக்கிகள் என்று அரசியல் அறிஞர்கள் இவர்களைச் சரியாகவே வருணித்துள்ளனர். இவர்களுக்கு நாட்டுப்பற்று இல்லை. இந்தியாவின் சுதந்திரத்தை இவர்கள் விட்டுக் கொடுப்பதன் மூலம் தம் வலிமையைப் பெருக்கிக்கொள்ளவே முனைவார்கள். இவர்களோடு பெரும்பாலான கட்சிகள் ஒத்துழைக்கவே செய்யும்.

இந்திய மக்கள் இந்த நெருக்கடியிலிருந்து தப்பமுடியுமா? பெருகிவரும் ஆதிக்க சக்திகளை எதிர்த்து முறியடிக்கும் அளவில் இங்கு எந்த இயக்கங்கள் உள்ளன? சிற்சில இயக்கங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்குள் மெல்ல மெல்ல உருவாகி வருகின்றன. நுகர்வோர் இயக்கம், சுற்றுச்சூழல் இயக்கம், மனித உரிமை இயக்கம் ஆகிய இவற்றோடு பெண்ணுரிமை இயக்கமும், தலித் இயக்கமும் மெதுவாக—எனினும் உறுதியாக வளர்ந்து வருகின்றன. அரசியல் சட்ட அங்கீகாரத்தோடு இவற்றின் தோற்றமும், வளர்ச்சியும் அமைந்திருக்கின்றன. இவை பகுதி இயக்கங்கள். ஒட்டுமொத்தமாகச் சமூகச் சூழலை மாற்றும் நோக்கம் இவற்றுக்கு இப்பொழுது இல்லை. இந்திய சமூக மாற்றத்திற்கான பேரியக்கம் என ஒன்று இல்லாத சூழலில் இவை பகுதி இயக்கங்களாக இருப்பதிலும் வியப்பில்லை. மெல்ல மெல்ல ஒரு பேரியக்கம் அல்லது தேசிய இனங்கள் சார்ந்த பேரியக்கம் உருவாவதன் தேவை நமக்கு நன்கு புரிகிறது. மக்கள் சக்திமுழுவதையும் திரட்டி ஆதிக்கங்களுக்கு எதிராக மக்களை நிறுத்துவதன் மூலமே மக்கள் தங்களைக் காத்துக்கொள்ள இயலும். பேரியக்கம் எழாத நிலையில் பகுதி இயக்கங்கள் நாளடைவில் முடக்கப்படும் சூழல் ஏற்படலாம்.

இப்பொழுதைக்கு இப்படிச் சொல்லலாம். நீதிமன்றத்தின் விசாரணைக்கு மக்களின் எதிரிகள் தம்மை உட்படுத்திக் கொள்வார்கள் என்று நாம் மகிழ்ந்திருக்க முடியாது. அரசியல் சக்திகளுக்குப் பின்னால் மாபெரும் பொருளியல் சக்திகள் செயல்படுகின்றன. இவைதான் மக்களுக்கான தளைகளை தயாரிக்கின்றன. பகுதிஇயக்கங்கள்இந்தப் பேராபத்தைப் புரிந்து கொள்ள முடியும். கலைஞர்களோ, இலக்கியவாதிகளோ இந்தச் சூழலிலிருந்து விடுபட்டு நிற்கமுடியாது. கனவுலகம் இவர்களைக் காப்பாற்றாது. அடுத்து வரும் எதிர்காலத்தில் எதுவும் நேரலாம். நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பகுதி இயக்கங்களை பலப்படுத்துவது உட்பட எதிர்வரும் பேரியக்கத்திற்கு நாம் ஆக்கம் தர வேண்டும்.

* * *

அரசுநிர்வாகத்தை நாங்கள் நடத்துவதா? அல்லது நீதிமன்றம் எடுத்துக் கொள்வதா? என்ற அரசியல் நெருக்கடி முன்னுக்கு வந்த நிலையில், பொருளியல் நெருக்கடி பின்னுக்குப் போவது போலத் தோன்றுகிறது. உண்மையில் பொருளியல் நெருக்கடியின் கோர வடிவம் நாளுக்கு நாள் வெளிப்படையாகத் தெரிகிறது. விலைவாசிகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. ஆனால் நிதியமைச்சர், பணவீக்கம் குறைந்து வருகிறது என்று பொய் சொல்கிறார். முதலாளிகளிடம் மூலதனக்குவிப்பும் லாப விகிதமும் அதிகரித்து வரும் விகிதத்திற்கு ஒத்த அளவில் உழைக்கும் மக்களின் வருமானம்- உண்மையான வருமானம் — உயரவில்லை. மாறாக, குறைந்து வருகிறது. இந்நிலையில் முதலாளி, தொழிலாளி இருவர் வருமானத்தையும் கூட்டி சராசரியைக் கணக்கிட்டு தேசிய வருமானம் அதிகரித்துள்ளது என்று அறிவிப்பது பித்தலாட்டம். உள்நாட்டு கடன்கள், அதைப்போலவே வெளிநாட்டுக்கடன்கள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. வட்டி கொடுத்து மாளாத நிலை. பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்படுகின்றன. அதுவும் குறைந்த விலைக்கு. இவற்றையும் முதலாளிகள் அகப்படுத்திக் கொள்ளலாம். அரசின் பொருளாதாரத் திட்டங்களில் இடப்படும் தொகையின் பெரும்பகுதி-80 முதல் 85 சதம் மீண்டும் மேட்டுக்குடிகளுக்கே போய்ச் சேருகின்றது. உழைக்கும் மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கான



படிப்பகம்

www.padippakam.com

இடப்பறிவதாகச் சொல்லப்படும் திட்டங்கள் இவ்வாறு முதலாளியப் பெருக்கத்திற்கே உதவுகின்றன. மக்களிடமிருந்து சுரண்டிய பெருந்தொகையில் ஒரு பகுதியை சுகாதாரம், கல்வி, வேளாண்மை, வேலை வாய்ப்பு, மருத்துவம் முதலிய மக்கள் நலத்திட்டத்திற்காக அரசு வழங்கும் மானியங்கள் என்பவை மீண்டும் முதலாளியப் பெருக்கத்தையே நோக்கமாகக் கொண்டவை. ஏற்றுமதியை பெருக்கினாலொழிய இந்தியாவுக்கு வாழ்வில்லை என்ற முறையில் எல்லாவற்றையும் ஏற்றுமதி செய்யலாம்; ஏற்றுமதி செய்ய வேண்டும் என்கிறார்கள். காடுகளை அழித்து காகிதங்களை ஏற்றுமதி செய்யலாம். மலைகளை மொட்டை அடித்து காப்பிக்கொட்டை ஏற்றுமதி செய்யலாம், பழத்தோட்டங்களை ஏற்படுத்தி, பழங்களைப் பக்குவப்படுத்தி அந்நிய நாடுகளுக்கு அனுப்பலாம். அந்நிய நாடுகள் அழகிய வண்ணச் சட்டைகள், காலணிகள் அணிவதற்காக நம்நிலங்களை, ஆறுகளை நாசமாக்கலாம். ஆடுகள், கோழிகளை லட்சக்கணக்கில் வளர்த்து அவற்றைக் கொன்று இறைச்சியைப் பக்குவப்படுத்தி அனுப்பலாம். மக்களின் கண்களை, சிறுநீரகங்களைக் கொள்ளை அடித்து அனுப்பலாம். தேக்கு மரங்களை வளர்த்து அவற்றை வெட்டி அனுப்பலாம். கருங்கற் பாறைகளைச் செதுக்கி அனுப்பலாம். இவற்றையெல்லாம் உற்பத்தி செய்யும் முறையில் அந்நிய நிறுவனங்களை இங்கு வரவழைக்கலாம். அவற்றிடம் அதிகாரங்களை மக்களின் உரிமைகளை ஒப்படைக்கலாம்.

இந்தியரைவிட 70/80 மடங்கு அதிகமாக மேற்கத்தியான் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறான். பயணம் செய்கிறான். படிக்கிறான். ஆராய்ச்சி செய்கிறான். உண்டு கொழுக்கிறான். மூன்றாம் உலக நாடுகளை நாசம் செய்கிறான். இவனை இன்னும் பெருக்குவதற்காக, உலக அளவில் இவனிடம் அதிகாரத்தைக் குவிப்பதற்காக, நம் மக்கள் உழைக்க வேண்டும். ஏற்றுமதி செய்ய வேண்டும். டாலர்களை யார் எடுத்துக் கொள்வார்கள்? ஏழைகளுக்கும் டாலர்களுக்கும் என்ன உறவு? இறுதியில் இந்த உழைப்பாளியிடம் என்ன எஞ்சி இருக்கும்? வேறு வழி இல்லை என்கிறார்கள் அரசியல் மலடர்கள். கொள்ளையில் இவர்களுக்குக் கொஞ்சம் கிடைக்கிறது என்பதற்காக இவர்கள் மலட்டு அரசியல் பேசுகிறார்கள். இவர்களை நம்பி இவர்களிடம் வங்கிகளை ஒப்படைக்க முடியாது. அரசியலை, தேசத்தை ஒப்படைக்க முடியாது. மேற்கத்தியானின் வெள்ளை நாகரிகத்திற்கு நம்மைப் பலியிட முடியாது.

மத்தியதர வர்க்க படிப்பாளிகள் மேற்கத்தியான் தமக்குள் கிளப்பும் நுகர்வு வெறிக்கு பலியாகி இருக்கிறார்கள். இவர்களிடம்தான் இந்திய மக்களுக்கான கல்வி, மருத்துவம், கணக்கு, சட்டம், வேளாண்மை, ஆய்வுகள் முதலிய அனைத்தின் நிர்வாகமும் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அரசு மற்றும் முதலாளிகளின் தேவைகளை நிறைவேற்றும் முறையில் இவர்கள் தீவிரமாகச் செயல்படுகிறார்கள். மக்களின் வாழ்வைப் பறிப்பதில் தமக்குள்ள பங்கை இவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை மக்களின் எதிரிகளுக்குச் சேவை செய்வதன் மூலம் வாழ்வின் நிறைவு என இவர்களுக்கு என்ன கிடைத்துவிடும்? கூலி அடிமைகளுக்கு வாழ்வின் நிறைவு எப்படி வாய்க்கும்?

● ● ●

இப்பொழுது தமிழகத்தின் நிலவரம்பற்றிக் குறிப்பாக சிலவற்றைப் பார்க்கலாம். நமக்கு காவிரி இல்லை. கர்நாடகத்திற்கே காவிரி சொந்தம். சர்க்கரை உற்பத்தி பெருகுவதற்கு கர்நாடகத்திற்கு காவிரி வேண்டும். சர்க்கரைத் தொழில், ஒரு பெரும் தொழில். உலகச் சந்தையோடு சர்க்கரை உற்பத்தி இணைந்திருக்கிறது. உற்பத்தி பெருகுவதில் கொள்ளை லாபம் முதலாளிகளுக்கே சொந்தம். உழவனுக்கு என்ன கிடைத்து விடும்? பெருந்தீனிக்குப் பயன்படுவதல்லால் சர்க்கரைக்கான தேவையென எதுவும் இல்லை. உடல் நலத்திற்கு சர்க்கரை அவசியம் இல்லை. நோய் நொடிகளைப் பெருக்க சர்க்கரை பெரிதும் பயன்படும். மருத்துவர்களுக்கும் காசு சேரலாம்.

தஞ்சை நெற்களஞ்சியமாக இருக்க வேண்டியதில்லை. ஆந்திராவில் அதிகம் விளை



படிப்பகம்

www.padippakam.com

கிறது. இறக்குமதி செய்து கொள்ளலாம். பஞ்சாபின் கோதுமை விளைச்சல் நமக்கும் பயன்படும். அரிசியைவிட கோதுமை நல்லது. மார்வாடிகளோடு ஆந்திராவின் முதலாளிகளும் தமிழகத்தை ஆக்கிரமித்து வருகிறார்கள். பெரும் தொழில்களை அவர்கள் வசப்படுத்தி வருகிறார்கள். இயற்கையை நாசம் செய்யும் எல்லாப் பெருந்தொழில்களுக்கும் வாய்ப்புத் தருவது தமிழகச் சூழல். இறால் பண்ணைகள் மூலம் தமிழகம் அந்நியச் செலாவணி சம்பாதிக்கலாம். இந்தியாவின் பெருந்தொழில் மாநிலங்களில் தமிழகம் ஒன்றாக மாறிவிடலாம். கையூட்டுப் பெறுவதற்காக அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் காத்துக்கிடக்கிறார்கள். இந்தியாவுக்குள்ளேயே தமிழகம் ஒரு காலனியாகி விடலாம். குப்பைத் தொட்டியாகி விடலாம்.

தமிழினம், தமிழ் நாகரிகம், தமிழ்மொழி என்ற உணர்வுகளையெல்லாம் அழித்து ஒழிப்பதற்கு இதுவே நல்ல வழி. மத்திய அரசும் அண்டை மாநில அரசுகளும் தமிழனை ஒடுக்குவதில் குறியாக உள்ளன. தொன்மையான நாகரிகம் உடைய தமிழனுக்கு உலகில் ஒரு தனிநாடு என்று ஏற்பட்டு விடக்கூடாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கத்தான் வேண்டும். தமிழகத்தின் உள்ளிருந்தே தமிழ் தேசிய உணர்வை ஒடுக்குவதற்கும், தெலுங்கு இனம் முதலியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நாற்காலி வெறி தமிழினத் தலைவர்களை வலுவாகப்பற்றியிருக்கிறது. நாற்காலிக்காக எதையும் விட்டுக்கொடுக்கலாம். எய்ட்ஸ் நோய் கூடத் தமிழகத்தில்தான் அதிகம் என்று பெருமைபேசலாம். சிவப்பு விளக்குப் பிரதேசங்களுக்குத் தமிழ்ப் பெண்களை அனுப்பிவைக்கலாம். இன்னும் தனியார் தொலைக்காட்சிகளை கூடுதலாக அமைக்கலாம். பொறுக்கிமுதலாளிகளிடம் கல்வி நிறுவனங்களை ஒப்படைத்து விடலாம். வசதி குறைந்தவனுக்கு கல்வி அறிவு தேவை இல்லை. ஊழல் மற்றும் ஆர்ப்பாட்ட அரசியல் வெற்றிக்கு மக்களிடம் அறியாமை நிலைபெற வேண்டும். திரைப்படங்கள் முதலிய பொழுது போக்குகளால், ஆர்ப்பாட்ட அரசியலால் தனக்குள் மன உறுதி குலைந்து, மலினப்பட்டு, யாரும் எடுத்து விளையாடுவதற்கு ஏற்ற பொம்மையாய் தமிழன் மாறி இருக்கிறான். இவன் இனி விழித்தெழ முடியாது.

தமிழ்இன எதிரிகள் இப்படித்தான் முடிவு செய்து செயல்படுகிறார்கள். இந்தப் போக்கை நாம் ஏற்றுக் கொள்ளலாமா? நாம் தீவிரமாக சிந்திக்கத்தான் வேண்டும். தமிழ்இன அறிவாளிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ஃ ஃ ஃ

அண்மைக் காலத்தில் இந்தியாவிலும் தமிழகத்திலும், அரசியல் கட்சிகளுக்கு அப்பால் மக்கள் மத்தியில் சில எழுச்சிகள் ஏற்பட்டு வருகின்றன. அரசியல் வாதிகளின் முகமூடிகளைக் களைந்து பார்க்கும் உறுதி மக்களிடம் ஏற்பட்டு வருகிறது. தமிழ் உணர்வின் தளங்கள் விரிவடைகின்றன. எல்லாவற்றையும் புரட்டிப்போட்டுப் பார்த்துவிட வேண்டும் என்ற உணர்வு தீவிரப்பட்டிருக்கிறது. மக்கள் உணர்வுக்கிணையாக, இலக்கியவாதிகளின் உணர்வு இல்லை. மத்தியதர வர்க்க மனப்பான்மையிலிருந்து இவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். இடி முழக்கம் கேட்கத் தொடங்கி இருக்கிறது. பெருமழை எந்த நேரமும் வரலாம் நிலங்களை, கருவிகளை நாம் பக்குவப்படுத்தி வைக்க வேண்டும். விடுதலைக்கு நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். வாய்ப்பைத் தவறவிடுபவன் கோழை, வாழும் தகுதி இவனுக்கு இல்லை. இந்தச் சூழலிலும் எதைத் திருடலாம், சேர்த்துக் கொள்ளலாம் என்று காத்திருப்பவன் மக்களின் துரோகி. கவிதைத்தொகுதிகள் உட்பட இன்னும்பல இந்தச் சேர்க்கையில் அடங்கும் தற்பெருமையும் இவற்றில் ஒன்று. வரலாற்றில் நமக்கு இன்னொரு வாய்ப்பு இனி இல்லை. தமிழிலக்கியக் களத்தையும் இதற்காகத் தயார் செய்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

## நிகழ்-32

### சில குறிப்புகள்

நிகழ்-32 அநேகமாக இறுதி இதழ். வாய்ப்புக்கள் கூடுமானால் அடுத்த ஆண்டு இதைப்போல இன்னொரு கனமான இதழ் வெளிவரலாம். இன்னும் பல நேர்காணல்கள் அதில் இடம் பெறும். மக்கள்நல மருத்துவம், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, ஆதிவாசிகளின் வாழ்க்கை மேம்பாடு என்ற முறையில் நேர்காணல்கள் இந்த இதழில் இல்லை. தரம்பால் அவர்களிடம் பதிவுசெய்த விரிவான நேர்காணலை இங்கு வெளியிடும் வாய்ப்பு இல்லை. தோழர் எஸ்.என். நாகராசன் அவர்களின் 54 முதல் 70 வரையிலான கட்சி அனுபவங்கள் இந்த இதழில் இடம்பெறவில்லை. இவற்றுக்காக வருந்துகிறேன். நேர்காணல் மூலம் தமிழகத்தின் வாழ்வியல் மற்றும் வரலாற்றை எதிர்காலத் தேவை கருதி விரிவாகப் பதிவு செய்வதற்கான தேவையை இப்பொழுது நான் கூடுதலாக உணர்கிறேன் வாழ்வின் அடித்தளங்களில் இருப்பவர்களின் அனுபவங்கள் நம் வரலாறு பற்றிக் கூடுதலான புரிதலை ஏற்படுத்தும்.

இந்த இதழில் உள்ள கட்டுரைகளும் நேர்காணலும் நண்பர்களுக்குள் சில அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடும் இவற்றைவரவேற்கிறேன். கடிதங்கள் இந்த இதழில் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. நிகழ் இதழை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நிறுத்துவது பற்றி நானோ, நண்பர்களோ கவலைப்பட வேண்டியதில்லை. என்னைப் பொறுத்தவரை நண்பர்களோடு தொடர்ந்து உறவு கொண்டிருக்கிறேன். மார்க்சியம், மதம், தமிழ் இலக்கியம் என்று எழுதுகிறேன். இவை தனி நூலாகப் பிறகு வெளிவரலாம். கவிதாசரண், கோடாங்கி, கனம்புதிது முதலிய இதழ்களில் என்னைப் பற்றி, எனது நூல்பற்றிச் சில விமர்சனங்கள், கண்டனங்கள் வெளிவந்துள்ளன. என்னோடு நேரில் பழகாதவர்களும், என் கட்டுரைகள் மூலம் என்னைப் புரிந்து கொள்ளமுடியும். நான் திறந்த மனமுடையவன். நண்பர்கள் மூலம் தொடர்ந்து கற்றுக் கொள்கிறேன். அவதூறுகளும், பொய்களும் என்னைக் காயப்படுத்த நான் அனுமதிப்பதில்லை. நண்பர்களின் உறவை, கடிதங்களைப் பெரிதும் எதிர்பார்க்கிறேன். இந்த இதழின் அட்டைக்கான செலவை ஏற்றுக்கொண்டவர் நண்பர் மதுசூதனன்.

○ ○ ○

### மார்க்சியம்-கிழக்கும் மேற்கும் பற்றி
### ஸ்ரீவரத எத்திராஜ ஜீயர் (திருப்பெரும்புதூர்)

அன்பு, பாசம், பணி, தன்னடக்கம் போன்றவைகளை மேற்கத்திய மார்க்சியம் நடைமுறைப்படுத்தவுமில்லை, தெளிவுபடுத்தவுமில்லையாதலால், அதன் விளைவுகள் அல்லது எதிரொலிகளை அது சந்தித்தாக வேண்டுமென்று தன் 35 ஆண்டு அநுபவத்தில் ஊன்றி எஸ்.என். நாகராசன் சுட்டிக் காட்டுகிறார். கிழக்கத்திய பண்பாட்டுணர்வுப்படி 'மக்களுக்கு ஊழியம் செய்து அதன் வழியாக அகந்தையை ஒழிப்பது' வர்க்கப் போராட்டத்தில் மிகப்பெரிய ஒன்றாகும். இதைத் தெளிவுபடுத்தியவர் மாவோதான் என்கிறார் ஆசிரியர்.

இந்த நூற்றாண்டில் கிறிஸ்துவ நாடுகள் உலகில் பிறமக்களை பழங்குடிகளை அடிமைகளாக்கி, நிர்மூலமாக்கி ஏகாதிபத்தியத்தை வளர்த்தார்கள். கிறிஸ்துவம் இது குறித்துக் கவலைப்படவில்லை. மாறாக அநியாயங்களுக்கு இசைந்தது. ஆதலால் மார்க்ஸ் மேற்கத்திய சமயத்தைச் சாடினார். அதிகாரத்துடன் இணைந்த இந்தத் திருச்சபை மனிதனுக்கு எதிராக இயங்கியது. இயேசுவுக்கும் இந்தத் திருச்சபைக்கும் உறவுஇல்லை என்பது உண்மை.

ஆனந்த மயமான விடுதலைவாழ்வு ஒரு பெரும்பகுதியை அடிமைப்படுத்தித்தான் பெற



படிப்பகம்

www.padippakam.com

முடியும் என்று தப்பாக நம்புகிறது மேற்கத்திய மெய்யியல். சிறப்புத் திறனாய்வாளர்கள் கூர்ந்து பார்த்த உண்மை ஒன்றுண்டு. அதாவது நமது சகோதரத்துவம் ஒரு பொய்மை, நமது சனநாயகம் ஒரு கேலிக் கூத்தாகும் என்கிறது கூர்மதி. இதுவே மேற்கில் மார்க்சியம் சிக்கல்பட்டு தவிப்பதற்கு மூல காரணமென்கிறார் நூலாசிரியர். உத்தம கம்யூனிஸ்டுகளையும் வரிசைப்படுத்துகிறார் ஆசிரியர்.

வெட்டிக்கொள்வதும் வழியல்ல. கட்டிக் கொள்வதும் விடிவல்ல. பொருளை வென்றறி நிலைதான் மனிதன் விடுபட்டு ஆனந்த வாழ்வினை அனுபவிக்க முடியுமென்கிறது மார்க்சு காட்டும் விடிவு பாதை. பொருளுக்கு இரையானவன் உண்மைப் பொருளைக் காண மாட்டான் என்பது முன்னோர்கள்சொன்னது. நாம் வணங்கினால் நம்மை மலையும் வணங்கும். பக்தன் வணங்க பகவானும் வணங்குவான் என்பது நம்நாட்டுப் பேரறிவு. இதனைத்தான் சீனப் புரட்சியாளர் மாவோ 'அணிகளை நேசி, மக்களை நேசி, மக்களுக்கு ஊழியஞ் செய். அகந்தையை ஒழி' என்றுநடந்து காட்டினார்.

அத்வைதத் துறவியான விவேகானந்தர் சங்கருடைய அன்பற்ற, இதயமற்ற தூய சிந்தனையை ஒப்புக் கொள்கின்றார். ஆனால் இராமானுசர் பரந்த இதயமுள்ளவராகக் காண்பதைப் பாராட்டுகிறார். 'நானே பிரம்மம்' என்பது ஒரு நாத்திக வாதம். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை முற்றிலும் மறுப்பதுதான் 'நானே பிரம்மம்' என்பது. மனிதன் தன்னையே மையமாகக் கருதுவது நாத்திகத்தின் அடிப்படை. அத்வைதிகளுக்குத் தமிழில் புனிதநூல் எதுவுமில்லை. இன்று காணப்படும் சைவ சித்தாந்த நூல்கள் கடன் வாங்கியவை. இல்லறமல்லது நல்லறமில்லை. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம். எனவே எல்லாவிதமான அத்வைதமும் ஒருவிதமான போலித்தனத்தில்தான் சென்று முடியும் என்ற மாயா வாதத்தைத் தெளிவுபடுத்தியது வைணவமாகும் என்பதைத் தன் தந்தை வழி நின்று ஆசிரியர் தெளிவாகப் புரிந்துள்ளார். குழப்பமும், புரட்டலும் நன்கு புரிகிறது அவர் கண்களுக்கு, உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்வது நூலாசிரியரின் சிறப்புக் குணநலனாகக் காணப்படுகிறது. இது ஒரு சிறப்பான ஞானக்கண் பார்வையாகும்.

விசய ஞானத்தைக் காறியுமிழ்ந்து கைங்கர்ய ஞானத்தைக் கைப்பற்ற வேண்டுமென்கிறது வைணவம். இதுதான் 'ஊழியஞ் செய்தல்' என்ற கம்யூனிச மொழியாகும்.

வால்மீகி தொட்டுங்கி அவர்கள் தங்கள் ஆன்ம விடுதலைக்கு அல்லது உயர்வுக்குப் பாடுபட்டார்கள். வள்ளல்இராமானுசர் மட்டும் மற்றவர்கள் வளர்ச்சியை முன்னிறுத்தி தன்னுடைய ஆன்ம உயர்வைப் பின்னால் தள்ளிப் பாடுபட்டார். மதத்தலைவர்கள் யார் ஒருவரையும் பாராட்டாத பாரதிதாசன் இவரைப் பாராட்டிப் பாடியுள்ளார் என்றால் இந்தத் தரிசனத்துக்கு மற்றுமோர் உரைகல் தேவையில் லை.

∴ ∴ ∴

வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதைத் தமிழ் உயர் தமிழல்லவா? இந்நூலாசிரியர் கோதைபிறப்பைக் கொச்சைப்படுத்தியது பொருத்தமல்ல. தவறான பிறப்பென்றாலும் அது ஆண்டாள் குற்றமாகாது. பெற்றோர்கள் குற்றம். சேற்றில் பிறந்த மணிமேகலை காப்பியத் தலைவியாவதுபோல் கோதைத் தமிழ் பெண்பால் ஏற்றத்தைக் காட்டுகிறது.

ஆசிரியர் எஸ்.என். நாகராசன் கருத்துக்கள் அருமையிலும் அருமை. ஒட்டுமொத்தமாக, இங்குமங்கும் ஒரு சில இடங்கள் வேறுபாடு கொள்ள வேண்டியிருந்தும் அவைகள் ஒன்றான கருத்திற்கு உரமிடுவதாகவே ஆகும்.

☐



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் கம்பராயன் அவர்களின் வாழ்வும் பணியும்

*தமிழ்த் தொண்டர் இரா. தம்பித்துரை*

சமூக நோக்கோடு வாழ்ந்து மனித நேயத்தை நேசித்து குமுகாய அவலங்களை நீக்கி புத்துலகு படைக்க தமிழிலக்கிய வானில் தோன்றிய நம்பிக்கை நட்சத்திரம்தான் தோழர் கம்பராயன். மரம் ஓய்வை நாடினாலும் காற்று அதை விடுவதில்லை என்ற மாவோவின் வைர வரிகளுக்கேற்ப வாழ்ந்து காட்டினார். அனைவரிடமும் புன்னகைதவழும் முகத்துடன் பழகிடும் அவரின் பண்பு தனித்தன்மை வாய்ந்தது. வாழ்நாள் முழுவதும் உடல்நிலை நலிவைக் கூடப் பாராது கோவையில் நடைபெற்ற அனைத்து இலக்கிய நிகழ்வுகளிலும் பங்கேற்று, இளைஞர்களை ஊக்குவித்த பண்பாளர். கம்பம் அருகிலுள்ள அனுமந்தம் பட்டியில் 1929-ல் பிறந்தார். சாத்தூரில் ஆசிரியப் பயிற்சி முடித்து துவக்கப் பள்ளி ஆசிரியராகத் தன் வாழ்வைத் துவக்கினார். 1945-லிருந்தே நாடகம், சிறுகதை, கவிதை, வில்லுப்பாட்டு என எழுதி எழுத்துலகில் அறிமுகம் ஆகிறார். பொதுவுடைமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தமிழக மாணவர் சம்மேளனம் எனும் அமைப்பை உருவாக்கி பொது வாழ்வில் ஈடுபடுகிறார்.

அரசியல் கலை நிகழ்ச்சிகள் மூலம் வரலாற்றுப் புகழ் பெற்றவரும், தன் பள்ளி நண்பரும், பொதுவுடைமை இயக்கத் தோழருமான பாவலர் வரதராசன் அவர்களோடு இணைந்து பல முற்போக்கு நாடகங்கள் எழுதியும், நடித்தும் வந்தார். பாட்டாளியின் குரல் எனும் நாடக மேடையில் பாவலர் வரதராசனால் இவருக்கு கம்பராயன் எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காக இராமுண்ணி, ஜப்பராவ் ஆகியோரோடு இணைந்து தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அமைத்து 8 ஆண்டுகள் செயலாளராக இருந்தார். ஆசிரியர்களின் போராட்டத்தில் ஈடுபட்டு இருமுறை சிறை செல்கிறார். 1956-ல் பொதுவுடைமை இயக்கத்தில் இணைந்தார். 28-5-1956ல் சமய சடங்குகள் தவிர்த்து எளியமுறையில் இல்லற மேற்கிறார். 1953-ல் பழிக்கஞ்சாப் பாதிரி எனும் இவரது சிறுநூலை சென்னை ஸ்ரீமகள் கம்பெனி வெளியிடுகிறது. இலக்கிய இதழ்கள் அனைத்துக்கும் துணுக்குச் செய்திகள் நிறைய அனுப்புவார்.

1957-ல் வஞ்சப் பாதிரிகள் வாழட்டும் என்ற நூலை வெளியிட்டதற்காகப் பள்ளியிலிருந்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்படுகிறார். ஆசிரியர் சங்கம் மூலம் போராடி மீண்டும் பணியில் சேர்கிறார். கம்பத்தில் 1962-ல் தலைமையாசிரியாராகப் பணிபுரிந்த சமயம் ஏழை-எளிய மாணவர்கட்காக இலவசமாக வழங்கப்படும் பால்பவுடர், பிஸ்கட், ரொட்டி முதலியவற்றை பள்ளி நிர்வாகம் விற்பனை செய்ததை எதிர்த்தும், ஆசிரியர்களின் உரிமைக்காகவும் போராட்ட களத்தில் குதித்தார். மீண்டும் ஓராண்டு பணிநீக்கம். மதுரை, திண்டுக்கல், சென்னை நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து வெற்றி பெறுகிறார்.

1963-ல் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கு பணி மாற்றலாகி கோவை வருகிறார். 1968-ல் தோழமைக்கழகம் எனும் அமைப்பை தோழர்களுடன் இணைந்து துவக்கினார். மெய்ப்பொருள் எனும் பத்திரிக்கையில் பணியாற்றினார். 27-01-1973ல் செம்மலர் எழுத்தாளர்கள் சங்கம் இவரது 'வேறு யாரை அறைவது,

www.padippakam.com

என்ற கதைக்கும்' பாவிகளாகிய எங்களுக்கு என்ற சிறுகதைக்கும் பரிசளிக்கிறது. முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநிலப் பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்தார். நண்பர்களிடம் பேசும்போது கூட கதைவடிவிலே தான் பேசுவார். தான் சொல்கின்ற செய்திகளைக்கூட கதையாகவே சொல்லுவார். இவரது வேறுயாரை அறைவது? எனும் சிறுகதை தில்லிப் பல்கலைக்கழகத் துணைப்பாடமாக இருந்தது. 37 ஆண்டுகள் ஆசிரியப் பணியிலிருந்து 1988-ல் ஓய்வுபெற்று முழுநேர இலக்கியவாதியாக மாறுகிறார். 12-08-1989 ஆறுவடச்சங்கிலி எனும் சிறுகதை நூலை வெளியிடுகிறார். இந்நூலை உதகை அரசு கலைக்கல்லூரி மாணவி செல்வி ஷீபாஅமலகாந்தி கோவை பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்புக்கு ஆய்வு செய்தார். தான் வாழ்ந்த காலத்தில் தன் மனத்தைப் பாதித்த, கண்முன் நடந்த நிகழ்வுகளையே ஆறுவடச் சங்கிலியாகத் தந்தார். ஒரு கிறித்துவராக இருந்தும் கிறித்துவ மதத்தின் போலி நடவடிக்கைகளைத் தைரியமாகச் சுட்டிக்காட்டினார். மனிதநேயத்தை வலியுறுத்தியே ஆறுவடச் சங்கிலி அமைந்தது. 29-9-91ல் கோவை வானொலியில் ஏற்றப்பாட்டு குறித்து உரையாற்றினார். 1992-ல் த.சி.ச அமைப்பு இவரது சிறுகதைக்கு முதற்பரிசு தந்தது.

உடல்நிலை நலிவடைந்த நிலையில் அவ்வப்போது மருத்துவமனை சென்றார். உடல்நிலை பாதிக்கப்பட்டு தன் 66-ஆவது வயதில் 2-6-1995-ல்

ஓய்வென்றால் என்னவென்றே
அறியாது ஓடி ஓடி உழைத்த
கம்பராயன் ஓய்வை நாடினார்.

தோழர்களிடம் அன்பு-எந்நேரமும் புன்னகை தவழும் முகம்.கவலையே இல்லாது சிரித்த முகத்தோடு அனைவரிடமும் பழகிடும் பண்பு-முற்போக்குச் சிந்தனைகள் இவற்றோடு கம்பராயன் நம் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்பார், தமிழ்த் தொண்டர் இரா. தம்பித்துரை.

# அறிவு நூல்கள்-புதியவை : கடிதங்கள்

## வண்ணதாசன் கடிதங்கள்

கடித இலக்கியம் தமிழில் குறிப்பிடத்தக்க அளவு வளரவில்லை என்பது ஒருபுறமிருக்க, கடிதங்கள் கூட இலக்கியமாகுமா என்ற கேள்வி மறுபுறம் எழலாம். ஒரு எழுத்தாளனின் சலவைக்குறிப்பு கூட முக்கியத்துவம் பெறுகிற வணிக எழுத்துமரபில் வளர்ந்த வாசகர்களைப் போல இலக்கிய வாசகர்களும் இது புதுமைப்பித்தன் எழுதிய பேனா என்று பரவசப்படுவதுண்டு. சாப்ளினின் தொப்பியும், வாக்கிங் ஸ்டிக்கும் பலகோடி ரூபாய்களுக்கு ஏலம் விடப்பட்டதை அறிகிறோம்தானே. படைப்பாளியின் தும்மல்கூட இலக்கியத் தும்மல் என்றளவு தனிநபர்துதியும் மயக்கமும் நீண்டுநெடிந்து விரவியுள்ளது.

எனினும் கடிதம் என்பதே ஆத்மார்த்தமான விஷயம். எத்தனைபேர் கடிதங்களை ஆத்மார்த்தமாக எழுதுகிறார்கள்? தனது தேவை பொருட்டோ எதிராளியின் தேவை பொருட்டோ எழுதப்படும் கடிதங்கள் தான் அனேகம். ஆயினும் வண்ணதாசன் போல அறியப்பட்ட ஒரு எழுத்தாளர் தன் பிரியம் நிறைந்த நண்பர்களுக்கு எழுதிய ஆத்மார்த்தமான கடிதங்கள் தொகுக்கப்பட்டிருப்பது ஆரோக்கியமானது. வண்ணதாசன் என்ற படைப்பாளியை விட கல்யாணசுந்தரம் என்கிற எளிய மனிதர் ஒருவரை இது அறிமுகப்படுத்தியுள்ளது. அறியப்பட்ட படைப்பாளிகள் பலரும் சொந்த வாழ்வில் இப்படிப்பட்ட எளியவர்களாக இருப்பார்களா என்ற சந்தேகமும் ஏற்பட்டு விடுகிறது.

நிலாவை நிலாவாகப் பார்க்கிறவர்வண்ணதாசன் மழைக்கால படிக்கட்டுகளின் மண் விளக்காக இருக்க விரும்புகிறவர் அவர். யாராவது ஒளி ஏற்றுவார்கள் என்று இருப்பின்



படிப்பகம்

www.padippakam.com

மீது நம்பிக்கை கொண்டவர். ஈரப்புல்லில் ஓரமாவது ஒரு தரம் மினுங்கும்-நடுங்கும் ஒளி யில் என்று கூறும்போது அந்த ஒளியின் நடுக் கத்திலுள்ள போராட்டத்தையும் வாழ்வின் சவாலையும் உணர்ந்தவர் வண்ணதாசன்.

ரவி சுப்ரமண்யத்திற்கு எழுதும்போது திருநீறு இடுகிற எல்லா ஆண்களும் பெண் களும் அழகாக இருக்கிறார்கள் என்று கூறு கிறார். எஞ்சிய திருநீறை தானே இட்டுக் கொள்வதும் பழகிப்போனதாகச் சொல்கிறார்.

'பந்தியில் போட்ட வாழையிலையின் குருத்துப் பச்சையை ரசித்து புறவிரல்களால் நீவிக்கொடுக்கிற நமக்குத்தான் சரியான இடங் களில் கிழிந்து போகிறது' என்று கலாப்ரியா வுக்கு எழுதும் போது ஆதங்கப்படுகிறார்.

தூரத்திலிருக்கும்போது பக்கத்திலிருந்த கடல் அருகில் போனதும் தூரம்போய் விட் டது என்று அவதானிக்கிறார்.

ஞானிக்கு எழுதும் போது அவர் வண்ண தாசனின் கைகளைப் பற்றிக் கொண்டதை நினைவு மறக்காத ஒன்றாக கொண்டாடு கிறார். ''நான் சிறிது நேரம் பற்றிக் கொண் டிருந்த ஞானியின் கைகள் முக்கியம். அவர் என் எழுத்துக்களைப் பாராட்டியதை மறந்து விட முடியும். ஆனால் அந்த உள்ளங்கைகளை மறந்து விட முடியாது'' என்கிறார். மனிதர் களை சம்பாதிப்பதற்காக முதலில் ஓடுங்கள் என்று அய்யனாருக்கு அவர் கூறும் அறிவுரை அவரது அனுபவத்தினின்றே பிறந்த ஒன்று என்று நமக்குப் புலனாகி விடுகிறது. தான் பட்ட, உணர்ந்த அனுபவித்ததைத் தவிர பிறருக்கு அதிகமாக எதையும் திணிக்காத நேர்மையும் தெளிவும் இக்கடிதங்களில் காணக் கிடைப்பது மிகவும் ஆச்சரியமளிக்கிறது.

சகமனிதன் மீதான நேசம், இயற்கையுட னான ஒன்றுதல், அரிதாரம் பூசாத எழுத்து, வலிந்து வேர்வையை வரவழைத்துக் கொள் ளாத முற்போக்கு, வாழ்க்கையை குற்ற உணர்வில்லாமல் எட்டி நின்று சிரித்துக் கொண்டே ரசிக்கிற கனிவு இதெல்லாம் ஒரு மனிதரிடம் வாய்க்குமானால் அம்மனிதர் எத் தனை அதிர்ஷ்ட சாலி! அவரது வாசகர் களும் பாக்யவான்கள்! பூமியின் எழுதப்படாத் ஒரு ரகசியம், கண்ணுக்குப் புலப்படாத ஒரு சங்கீதம் அவர் விரல்களிலிருந்து நம் விழி களுக்குப் பரிமாறப்படுகிறது.

இலக்கியம் பற்றிய அவர் அபிப்ராயங் களும் ஆங்காங்கே பதிவாகியுள்ளன. ஜே.ஜே. யின் கருத்துலகில் சஞ்சரிக்க முடிகிற அளவு நகுலனின் கோட்ஸ்டாண்டு கவிதைகளை ஜீரணிக்க முடியவில்லை என்கிற தெளிவு அபாரமானது. ஒரு விஷயத்தை சரியாகச் சொல்வதையும் தவறாகச் சொல்வதையும் புரிந்துக்கொண்ட வண்ணதாசனுக்கு வாழ்க் கையோ, மனிதர்களோ, எழுத்தோ பிரச்னை யாக தெரியவில்லை தான் வாழ்ந்ததை பழகியதை எண்ணியதை எழுத்தாக்குவதிலும் பிரச்னை இல்லை.

மிருகங்களால் கொல்லப்படுகிற, சாவை விழைகிற, ஆற்றுடன் போய்விட ஆசைப்படுகிற அந்த இலக்கிய மனசுடன் தன் குழந்தை களுக்கு தான் தர விரும்பி தர முடியாமல் போன பிரியங்களை தன் நண்பர்கள் வழங் கியதைக் கூறுகிற ஒரு குடும்பஸ்தரின் நிறை வும் கலந்து இழையோடுகிற கடிதங்கள் இவை. இக்கடிதங்களை எழுதியவர், பெற்ற வர்கள், சேகரித்தவர்கள், தொகுத்தவர்கள் வெளியிட்டவர்கள் மட்டுமல்ல இக்கடிதங்களை சுமந்து திரிந்த தபால்காரர்கூட மரியாதைக் குரியவராகத் தோன்றுவது இயல்புதான். இது தனிமனித துதியாகாது. மனிதன்மூலம் வாழ்வின் சூட்சுமங்களை அறிந்து விட்ட ஆனந்தமேயாகும்.

—*செந்தூரம் ஜெகதீஷ்*

*எல்லோர்க்கும் அன்புடன்*
*வண்ணதாசன் கடிதங்கள்*
பக். 208. விலை ரூ. 40 00
வைகறை 4 அ. ஐடியல் பள்ளிச்சாலை
நரசிம்மநாயக்கன் பாளையம்,
கோவை-641031)

## பாரதியும் வள்ளுவரும்

சிந்தனையாளர் மா. அர்த்தநாரி அவர் கள் தமிழ் மக்களின் சிந்தனையை வளர்க்கும் முறையில் சில பத்தாண்டுகளாகக்கட்டுரைகள்,



படிப்பகம்

www.padippakam.com

நாடகங்கள் எனத் தொடர்ந்து எழுதி வெளியிடுகின்றார். அந்த வரிசையில் இந்த நூல் பாராட்டுக்குரிய ஒரு நல்ல நூல்.

கடவுள், விக்கிரக வழிபாடு, சடங்குகள் ஆகியவற்றைத் தமிழ் மக்களுக்குள் தூண்டி வளர்த்து வருகின்றனர் பார்ப்பனர். செல்வம் பெருக, கோயில் வழிபாடு செய், யாகம் செய் என்று தமிழ் மக்களுக்குள் பணத்தாசையைத் தூண்டியதன் மூலம் பார்ப்பனர் வெற்றி பெற்றனர். இந்த இடத்தில் பகுத்தறிவாளர்கள் தோற்றனர் என்ற அடிப்படையை இந்த நூலில் அழுத்தமாக எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

வள்ளுவருக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால் உருவ வழிபாட்டை அவர் ஏற்கவில்லை. வேள்வி முறையையோ, துறவையோ அவர் மதிக்கவில்லை. இல்லறமே அவருக்கு நல்லறம். விதியைமதியால் மனிதன் வெல்லமுடியும், மேல் உலகம் தேவையில்லை, இவ்வாறு மனுநீதிக்கு எதிராக பார்ப்பனியத்திற்கு எதிராக எழுதியவர் வள்ளுவர்-இப்படி எடுத்துரைக்கிறார் ஆசிரியர். பரிமேலழகர் வள்ளுவர் நூலுக்குள் மனுநெறியைக் கண்டுபிடித்தார். மனுநெறிக்கெதிரான குறட்பாக்களை ஒதுக்கிவிட்டு ''வள்ளுவர் வாசகம்'' தந்தார் இராஜாஜி. சாதிச் சங்கங்கள் இன்று பெருகியதற்குப் பெரியாரும் தான் காரணம் என்கிறார் ஆசிரியர். ஆசிரியரின் நோக்கம் நமக்குப் புரிகிறது. பார்ப்பனியத்தை தமிழர் சிந்தனையிலிருந்து, அகற்றுவதன் மூலமே தமிழர்கட்கு வாழ்வு என்று கருதுகிறார் அர்த்தநாரி அவர்கள். பார்ப்பனியத்திற்கு அவர் தரும் புதுவிளக்கம் நம் சிந்தனைக்குரியது.

வெளியீடு : நட்புறவுப் பண்ணை
நங்கவள்ளி-636454.
விலை : 56-00

## தமிழர் சமுதாய வரலாறு களப்பிரர்காலம்

தமிழர் சமுதாய வரலாற்றில் இருண்ட காலம் என்றுகளப்பிரர்காலத்தை வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு குறிப்பிடுபவர்களில் சதாசிவ பண்டாரத்தார் போன்ற சைவர்களும் உள்ளனர். களப்பிரர்காலத்தில் தான் தமிழகத்தில் சமணர் மற்றும் பவுத்தரின் செல்வாக்கு அதிகரித்தது.

உண்மையில் திருக்குறள்' சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கிய நூல்கள் இந்தக்காலத்தில்தான் எழுந்தன. தமிழர் வாழ்வில் பரதத்மை, புலால்கள் முதலியவை இக்காலத்தில் கண்டிக்கப்பட்டன. சங்ககாலம் தொட்டு தமிழகத்திற்குள் நுழைந்து ஆதிக்கம் பெற்றபார்ப்பனியம் இக்காலத்தில் கடுமையாக எதிர்க்கப்பட்டது. சமணர்கள் வேள்வி சாதி முறை மற்றும் மூடநம்பிக்கைகளைக் கடுமையாக மறுத்தனர். சமணர்களும், பவுத்தர்களும் வட்டாரமொழியை, தமிழை வளர்த்தெடுத்தனர். திருமூலர் போன்றவர்களின் ஆற்றல் மிக்க சமரசப்பார்வைக்கு சமணர் தூண்டுகோலாக இருந்தனர். தமிழர் பண்பாடு என இன்னும் நாம் போற்றும் பண்பாட்டுக் கூறுகளுக்கு சமணர்கள் தான் ஆதாரமாக இருந்தனர். இப்படி பலமுனைகளிலிருந்து திரட்டிய ஆதாரங்களை இந்த நூலில் முன் வைக்கிறார் பேரசிரியர் கம்ப. அறவாணன் அவர்கள்.

களப்பிரர் அன்னியர்கள் என்ற கருத்து மேலோங்கியுள்ள சூழலில், களப்பிரர் தமிழர்கள் தான் என்பதற்கும் சான்று தருகிறார். களப்பிரர் வரலாற்றுக்கு வேள்விக் குடி செப்பேடு போலவே தளவாய்புரச் செப்பேடும் ஒரு முக்கியமான சான்றாக விளங்குகிறது. களப்பிரர்காலத்தில் பார்ப்பனரிடமிருந்து சூத்திரர் எடுத்துக் கொண்ட இரண்டு கிராமங்களை, அந்தக் கிராமத்துப் பார்ப்பனர் வேண்டுகோளின்படி ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்த பராந்தக வீரபாண்டியன் சூத்திரர்களிடமிருந்து மீட்டு பார்ப்பனருக்குத் தந்தான் என்று தளவாய்புரச் செப்பேடு கூறுகிறது. களப்பிரர் சூத்திரன் என்றும் செப்பேடு கூறுகிறது. அச்சுதளப்பாளன், அச்சுதவிக்கந்தன், போன்றவர்கள் சமணர்கள். சில அரிய தமிழ் இலக்கண நூல்கள் இவர்கள் காலத்தில் எழுந்தன. களப்பிரர், களப்பாளர், கள்ளர்கள் என்பனவெல்லாம் ஒரு பொருள் குறித்தவை. இப்பொழுது தமிழர் வரலாறு மேலும் நமக்குத் தெளிவாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

மேலும் ஓர் உண்மையை அறவாணன் தருகிறார். பார்ப்பனரோடு உறவுடையது சாத வானப் பேரரசு. அதன் தொடர்ச்சியாகத் தமிழகத்திற்குள் வந்தவர் பல்லவர்கள். இவர்கள் மூலம்தான் பார்ப்பனரும் வடமொழியும் தமிழகத்திற்குள் மீண்டும் நுழைந்தன. பல்லவர் தமிழ்நிலத்தை வென்றனர். பகுத்தறிவும் தமிழ் தேசிய உணர்வும் மிக்கவரான பேராசிரியர் அறவாணன் அவர்களின் பார்வையில் தமிழக வரலாற்றின் ஒரு முக்கிய பகுதி வெளிச்சத்துக்கு வந்திருப்பதில் வியப்பில்லை.

ஆரியர்கள் தென்னகத்திற்குள் நுழைந்து நாளடைவில் திராவிடர்களைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினர். திராவிடப் பண்பாடு தெய்வங்கள் முதலியவை ஆரியத்தோடு கலந்தன. இந்தக் கலப்பியக் கால வரலாற்றை இந்த நூலில் விரிவாகச் சொல்கிறார் ஆசிரியர். ஆரியர் தம் மதி நுட்பத்தால், சதிச் செயலால் மன்னர்களையும் தமிழ் மக்களையும் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினர் என்ற திராவிட இயக்கப் பார்வையைத்தான் அறவாணன் அவர்கள் முன் வைக்கிறார். கருத்தியல் என்பது வரலாற்று இயக்கத்தின் மூலச் சக்தியாக முடியாது தனி உடைமை அரசு ஆதிக்கம் என்ற பொருளியல் சக்திகளோடு இணைத்துப் பேசுவதாகத்தான் கருத்தியல் இருக்க முடியும். எத்தகைய பொருளியல் சூழலில் ஆரியர் இங்கு ஆதிக்கம் பெற்றனர் என்பதாகத்தான் வரலாறு விளக்கம் பெறும். தமிழ் மக்களுக்கும் மன்னர்களுக்கும் இடையிலான முரண்பாடு அல்லது மோதலில் மன்னருக்குச் சார்பாக ஆரியர் இங்கு வந்திருக்க முடியும். தமிழ் மன்னர்கள் நம்மவர்கள் என்ற மயக்கம் நமக்குத் தேவையில்லை. வரலாற்று வரைவில் நமக்கு மேலும் விவரங்கள் மட்டுமல்லாமல் பார்வைத் தெளியும் தேவை என்பதை நாம் மறுப்பதற்கில்லை. தமிழர்களின் சமுதாய வரலாற்றை மேலும் தெளிவான அடிப்படைகளில் பேராசிரியர் அறவாணன் அவர்கள் உருவாக்கித் தருவார் என்பதில் ஐயமில்லை.

வெளியீடு : தமிழ்க்கோட்டம்
11 இரண்டாவது வீதி
மோகன் நகர்
புதுச்சேரி-605 005.

பக்கம் : 180 விலை ரூ. 55/-

## பகத்சிங் சிறைக்குறிப்புகள்

1931ல் இந்திய விடுதலைக்கான போராட்டத்தில் ஈடுபட்டு தூக்குக்கயிற்றை முத்தமிட்டு தன் வாழ்வை முடித்துக் கொண்டவர் மாவீரன் பகத்சிங். சிறையில் இருந்த காலத்தில் தான் படித்த நூல்களிலிருந்து நிறைய மேற்கோள்களைத் தன் குறிப்பேடுகளில் அவர் எழுதிவைத்திருந்தார். வியக்கத்தக்க முறையில் 1942ல் அவரது கையெழுத்துக்களிலேயே இந்தக் குறிப்பேடுகள் கிடைத்தன. அவற்றின் நகலிலிருந்து சென்ற ஆண்டு ஆங்கிலத்தில் வெளியான இந்நூல் இப்பொழுது தமிழில் வெளியாகிறது. மொழியாக்கம் செய்தவர் நண்பர் அ. தேவராசு.

எங்கல்சின் ''தனிச்சொத்து......'' என்ற நூலிலிருந்து நிறைய மேற்கோள்கள், மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், புகாரின், ட்ராட்ஸ்கி ஆகியவர்களிடமிருந்தும் மேற்கோள்கள். வர்க்கப் போராட்டம் அரசு சட்டம் மக்களாட்சி முதலியவைப்பற்றி மார்க்சிய பார்வைதரும் வெளிச்சங்கள், பிரெஞ்சுப்புரட்சி, அமெரிக்காவின் சுதந்திரப்போர் பற்றிய குறிப்புகள். இந்தியாவிலும் பிரதேசங்களிலும் பிரிட்டன் செய்த சுரண்டல், கிரேக்கத்தத்துவம் மற்றும் சட்ட அறிவியலின் வரலாறு, ஐரோப்பிய மெய்யியல் மற்றும் சட்டத்தின்வரலாறு, மதம், திருமணம், ஒழுக்கம் பற்றிய நவீன அறிவியல்சார்பற்றபுரிதல் இப்படி நூற்றுக்கும் மேற்பட்டமேற்கோள்கள் சிறைக் குறிப்பேடுகளில் இடம்பெற்றிருக்கின்றன.

விடுதலை இயக்கத்தைத் தன் உயிர் இயக்கமாக பகத்சிங் கொண்டிருந்தார் என்பதை இந்த மேற்கோள்கள் வழியே திட்டமாக நாம் தெரிந்து கொள்கிறோம். மார்க்சியத்தோடு அவர் வளர்த்துக்கொண்டிருந்த ஆழ்ந்த உறவையும் நேசத்தையும் இந்த மேற்கோள்கள் நமக்கு உணர்த்துகின்றன. வாழ்வின் உயிரியக்கமும், விடுதலையும் அவரிடத்தில் ஒரு மையத்தில் திரண்டிருந்தன. இன்றும் விடுதலையென்றும் மார்க்சியம் என்றும் உணர்வு கொண்டுள்ள தமிழிளைஞர்கள் மற்றும் இயக்கத்தினரின் கைகளில் தவழ வேண்டிய ஒரு வழிகாட்டி நூல் இது.

வெளியீடு : விஜயா பதிப்பகம்.



படிப்பகம்

www.padippakam.com

## மனித நேய பஞ்சாயத்துச் சட்டம்

கூலி உழைப்பு, பரிவர்த்தனை மதிப்பு ஆகியவற்றை ஒழிக்காமல் முதலாளியத்தை கடந்து செல்ல முடியாது. இதன் காரணமாகத் தான் சோவியத் யூனியனில் சோசலிசத்தை உருவாக்க இயலவில்லை. இந்தியாவில் 1992ல் எழுபத்தி மூன்றாவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படும் பஞ்சாயத்து அரசு, முதலாளியத்தைக் கடந்து செல்ல வழி அமைக்கும் என்று மேற்கண்ட நூலின் ஆசிரியர் பாரதி சின்னச்சாமி நம்புகிறார். தொடக்கத்தில் பஞ்சாயத்துக்கள் மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள் விற்பனையில் ஈடுபடும். ஊழியர்களுக்கு பஞ்சாயத்துக்கு அரசு தரும் நிதி உதவியிலிருந்து ஊதியம் தரும். ஆகவே கொள்முதல் விலைக்கே பொருட்களை விற்க முடியும் நாளடைவில் மக்களிடமிருந்து நிதி திரட்டி சிறு தொழில் உற்பத்தியில் ஈடுபட முடியும். இங்கும் உற்பத்திச் செலவிலேயே பொருட்களை விற்க முடியும். இங்கு பரிவர்த்தனை மதிப்புக்கே இடமில்லை. இலவச உழைப்பு/சமூக உழைப்புக்கு வாய்ப்புக்கள் உண்டு. தொடர்ந்து இவ்வாறு செய்வதன் மூலம் முதலாளிய அமைப்புக்கள் சுருங்கி நாளடைவில் மறைந்து போகும். இப்படி விவாதிக்கிறார் ஆசிரியர். இது காந்தியத்திற்கு ஒத்தது என்கிறார். அரசின் வர்க்கத் தன்மையை ஆசிரியர் பார்க்கவில்லை. முதலாளியம் இப்படித் தன்னை அழித்துக்கொள்ளவும் செய்யாது. கற்பனை சோசலிசம் பற்றி மார்க்சியர் அறிவர். எனினும் தமிழில் ஓர் அரிய அறிவு நூல், நம் சிந்தனைகளைத் தூண்டும் நூல் இது என்பதில் ஐயம் இல்லை..

வெளியீடு: விஜயா பதிப்பகம், கோவை.

## பாரதி காட்டிய பகுத்தறிவுப் பாதை

'நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது சங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள் இவையனைத்துக்கும் பொதுப் பெயர் ''ஆர்ய ஸம்பத்து''. காளிதாசன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸிதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி, தஞ்சாவூர் கோயில், திருமலை நாயக்கர் மஹால், தியாகையர் கீர்த்தனங்கள், எல்லோராவிலுள்ள குகைக் கோயில், ஆக்ராவிலுள்ள தாஜ் மஹால், சரபசாஸ்திரியின் புல்லாங்குழல் இவை அனைத்துக்கும் பொதுப்பெயர் ஆர்ய ஸம்பத்து. எனவே, ஆர்ய ஸம்பத்தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரீகம். பாரதத்தில் பிறந்த எல்லோருமே பாரத சாதியினர்-ஆரியர் என்கிறார். ஆரியர் என்பதில் 'பறையர், பள்ளர், பார்ப்பனர், செட்டி, பிள்ளை எல்லோருமே அடங்குவர் என்கிறார்.

'பிராமணன் தனது ஸ்தானத்தை முன் ஜாக்கிரதையாலே கெட்டிப்படுத்திக் கொண்டான். புறத்தை ஒடுக்கு முன்பு ஜனங்களின் அறிவை ஒடுக்கி விட்டான் அறிவின் வேர்களைச் சூத்திரனிடமிருந்து பறித்துவிட்டபடியால் இவன் ஸ்வதந்தர கார்யம் செய்ய ஸாத்தியப்படவில்லை. பிறகு சூத்திரனுடைய தலை பிராமணனுடைய பாத தூண்டலிலே ஈடுபட்டிருப்பதை ஸாவதானமாகக் காக்க வேறு சிரமம் வேண்டியதில்லை ஆயிற்று என பிராமணரின் குறுகிய மனப்பான்மையை இகழ்ந்துரைக்கின்றார்.

'ஆசாரச் சீர்திருத்தம்' என்ற கட்டுரையில் :-

'நான் (பாரதியார்) பிரமராய வாத்தியாரிடம் ''அதென்ன ஸ்வாமி இந்த ப்ராம்மண ஸமூகத்தில் வருஷந் தவறாமல் இன்றைக்கு ஆவணியவிட்டமா, நாளை ஆவணி அவிட்டமா என்று சண்டை நியதமாகவே நடந்துகொண்டு வருகிறதே, காரணமென்ன?' என்று கேட்டேன். அவர் சொன்னார், இந்துக்களிலே பத்தாயிரத்தில் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர் அபண்டிதர்கள். பஞ்சாங்கமே முழுவதும் தப்பிதம்...' என்றார். அங்கு வந்த கோயில் தர்மகர்தா வீரப்ப முதலியார் 'பூணூலை எடுத்துப்போடுங்கள். இந்தியா

www.padippakam.com

முழுவதும் ஒரே ஜாதி, ஒரே உடுப்பு, ஒரே ஆசாரம் என்று செய்துவிட வேண்டும். அது வரை பிராம்மண சபை, அப்ராம்மண சபை, ரெட்டி சபை, வன்னியர் சபை, முதலியார் சபை-இந்த இழவெல்லாம் தீராது. ஒரே கூட்டம் என்று பேசு, பூணுலென்ன, கீணு லென்ன விண்கதை!''

''யாரோ ஒரு ரா ாவாம். அவன் பூணூலை ஒரு தட்டிலும் பொன்னை ஒரு தட்டி லிட வைத்து நிறுத்துப் பார்த்தானாம், பூணூல் கீழ்இழுத்ததாம், பொன் மேலே போய் விட்ட தாம். இதெல்லாம் மூட்டை. சரிசமானமாக ஐரோப்பியர்களைப் போல் நடப்போம். ஜப்பானிலே ஜாதி வித்தியாசத்தை முதலில் நீக்கி விட்டுத்தான் மறுவேலை பார்த்தனர்'' என்றார்.

''ஹிந்துக்களைப்போலவே இருப்போம்'' என்று தான கூறினேன்.

''எப்போதும் பிரிவும், சண்டையும் இருக்க வேண்டும் ன்பது உன் கட்சியோ'' என்றார் அவர். வேண்டியவர்கள் எல்லாம் பூணூல் போட்டுக் கொள்ளலாம். அது யாகத்துக்கு வெளியடையாளமாக அந்தக் காலத்தில் ஏற் பட்டது. இஷ்டமான ஹிந்துக்கள் எல்லாரும் பூணூல் போட்டுக் கொள்ளலாம். மற்றவர்கள் சரிசமானமாக இருக்கலாம். பூணூல் இருந்தா லும் ஒன்றுபோலே, இல்லாவிட்டாலும் ஒன்று போலே, ஹிந்துக்களெல்லாம் ஒரே குடும்பம். அன்பு காப்பாற்றும். அன்பே தாரகம் என் றேன். 'அன்பே சிவம்' என்று பிரமராயர் சொன் னார். (பக்கம்: 80-82)

ஆசிரிய : கலியாணராமன்

## மக்களுக்கான சினிமா

சினிமா ஒரு முக்கியமான கலை என அறிவுலகவாதிகள் அனைவரும் ஒப்புக் கொண் டிருந்தாலும், தமிழில் சினிமா குறித்து வெளி யான நூல்களை இரு கை விரல்களுக்குள் அடக்கி விடலாம். சினிமா என்பது மக்கள் பிரச்னைகளிலிருந்து முற்றிலும் அந்நியப் பட்டு வெறும் கனவுமயமான பொழுதுபோக்கு மீடியாவாக குறுகி விட்ட நிலையிலும் இணை திரைப்படங்களாக (Parallel Cinema) பல முக்கிய படங்களும் உலகின் தலைசிறந்த கலைஞர்களால் உருவாக்கப்படுகின்றன. ஆனாலும் மக்களுக்கான சினிமா மக்களிட மிருந்து அந்நியப்பட்டே கிடக்கிறது. சினிமா பற்றிய புரிதலும் தெளிவும் ஏற்படாத வரை இந்த இடைவெளி இருக்கவே செய்யும். அதை இட்டு நிரப்ப எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய ஒரு முயற்சிதான் சினிமா பற்றிய நூல்கள்.

'மக்களுக்கான சினிமா' ஒரு தொகுப்பு நூல். மூன்றாம் உலகின் முக்கிய இயக்குனர் களான ஜோரிஸ் இவென்ஸ், சோலனாஸ், ஹெய்லி உட்பட பல திரைப்படக் கலைஞர் களின் கட்டுரைகளும் பேட்டிகளும் இதில் இடம் பெறுகின்றன.

டாக்குமெண்டரி படங்கள் எடுப்பது குறித்த ஜோரிஸ் இவென்சின் கட்டுரை சுவா ரஸ்யமானது. கலைப்பட நுட்பங்களை ஆவணப்படங்கள் தவிர்த்து விட வேண்டும் என்கிறார் இவர். டாக்குமெண்டரி என்பது படமாக்கப்பட்ட கட்டுரை என்றும் இந்நூலின் வேறொரு பகுதியில் குறிப்பிடப்படுகிறது. வர்ணனைகள் தாம் இப்படங்களின் உயிர்நாடி என்றும் இக்கட்டுரை விளக்குகிறது.

பிரேசில் இயக்குனரான கிளாபர் ரோச் சாவின் கட்டுரை பசியின் அழகியல் பற்றி விவாதிக்கிறது. பசியின் மிகவும் தம்பகத் தன்மையுள்ள பண்பாட்டு வெளிப்பாடு வன் முறையாகும் என்ற இவர் கூற்று இக்கால வன்முறை நிறைந்த படங்களைப் பரிசீலனை செய்ய உதவக்கூடும். எனினும் அரசியல் அர்ப்பணிப்பு இல்லாத சொல்லாடல் பற்றிய சேகுவேராவின் கருத்தையொட்டி கிளாபர் கூறும் கருத்துக்கள் கலையின் நியாயங்களை பொருட்படுத்தாமல் படங்களை பிரச்சார களத்திற்கு தள்ள முயலுகின்றன.

ஃபெர்னான்டோ சோலனாஸின் நீண்ட கட்டுரை மிகவும் முக்கியமான, அபூர்வமான ஒரு கட்டுரை. கிளாபரின் கருத்தோட்டத்தை



படிப்பகம்

www.padippakam.com

அதிகமாக மீறாமல் ஆனால் கலை பற்றிய ஆழமான புரிதலுடன் எழுதப்பட்ட கட்டுரை இது. கலையில் அரசியலின் குறுக்கீட்டை ஆதரிக்கிற அதே வேளையில் அத்தகைய அரசியல் நோக்கம் சார்ந்த திரைப்படங்களை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்ற தெளிவும் இக்கட்டுரையில் பளிச்சிடுகிறது

மிகவும் பேசப்படும் அமெரிக்காவின் ஹெய்லியின் கருத்துக்களை ஜீரணிப்பது சற்று சிரமம். மிகவும் வறட்டுத்தனமான கலைநோக்குடன் மிகவும் தீவிரத்துடன் அரசியல் படங்களை ஆதரிக்கிறார் அவர். இல்மஸ்குனே என்ற துருக்கிய இயக்குனரின் பேட்டி சிறப்பானது. கலை தானாகவே புரட்சி செய்யாது என்று கருதும் இவர் ''கலைக் கென்று தனிமொழிஉள்ளது. அந்த மொழியை முழுமையாக, முற்றாக மதிக்க வேண்டும். கலையின் மொழியை நாம் மதிக்காவிட்டால் அந்த ஆயுதம் நம்மை கொன்றுவிடும். எய்தவர் மீதே திரும்பிப்பாயும் தன்மையுடையது'' என்று கூறும்போது அது அவர்மீது மிகுந்த மரியாதையை உருவாக்கி விடுகிறது. சத்யஜித்ரே, மிர்னாள்சென், கோவிந்த் நிஹலானி, ஷியாம் பெனகல் உட்பட பல நல்ல கலைஞர்கள் பிரச்சாரத்தையும் கலைமயமாக்கியதால்தான் அவர்களால் உலகப்பட விழாக்களில் தலைநிமிர்ந்து நிற்க முடிந்தது. அத்தகையவர்களின் வெளிவராத பல முக்கிய கருத்துக்களை தொகுத்து இதில் இணைத் திருக்கலாம். எனினும் இந்திய இயக்குனர் களின் கருத்துக்கள் இல்லாத குறையை ஆனந்த பட்டவர்த்தனின் கட்டுரை ஓரளவு ஈடு செய்கிறது. கட்டுரைகளின் மொழி பெயர்ப்புகள் மிகச் சிறப்பானவை.

பொதுவாக சினிமா என்பது அதன் சித்தாந்த கட்டமைப்புடன் நடைமுறை சிக்கலும், தொழில்நுட்பத் திறனும், மிக அதிகமான பொருள் இழப்பும் கூடிய விஷயம். அதிலும் மக்களுக்கான சினிமா எடுப்பவர்களுக்கு சவால்களும் சோதனைகளும் அதிகம். பல படங்கள் தடைசெய்யப்படுகின்றன. இயக்குனர்கள் சிறையிலடைக்கப் படுகின்றனர். சிலர் கொலை செய்யப்படுகிறார்கள். சினிமா பற்றிய நமது பாமரத்தனமான மதிப்பீடுகளிலிருந்து விலகி உன்னதமான மனித விழுமியங்கள் நோக்கி நாம் நகர்கிற போதுதான் நல்ல சினிமா பிறக்கும், செழிக்கும். கலையை மீட்கும் மாபெரும் போராட்டத்தில் கலையும் ஓர் அங்கம் வகிக்கலாம். ஆயினும் அது தன் கலைத்தன்மையை இழக்காமலேயே அதை சாதிக்க வேண்டும். அத்தகைய புரிதலுடன் இது போன்ற புத்தகங்கள் விரிவுபெற வேண்டும்.

**செந்தூரம் ஜெகதீஷ்**

வெளியீடு : தாமரைச்செல்வி பதிப்பகம், சென்னை-78.

விலை ரூ. 50/-

## தன்னனானே

இந்த நாட்டார் வழக்காற்றியல் இரண்டாவது இதழில் இடம்பெற்றுள்ள ஒதாளர் குல வளமைச்சடங்கு, முளைப்பாரி பாடல்கள், அவ்வை நோன்பு, பாலம்மாள் கதை, சிவகாசி சிறுகோவில்கள் ஆகியவை பற்றிய கட்டுரைகளையும், நெதர்லாந்து, உடுப்பி, தஞ்சை முதலிய இடங்களில் நடைபெற்ற கருத்தரங்கக் குறிப்புகளையும் படிக்கிறபோது, நமக்குள் நம் இளமைப்பருவம் நோக்கி, கிராமங்களை நோக்கி, கிராமத்தின் ஆடல் பாடல்கள், நோன்புகள், விழாக்கள், கதைகள் நோக்கி நம் உணர்வுகள் விரிகின்றன. வரலாற்றில் நாம் விரிவடைகிறோம். மண்ணோடும், மரங்களோடும், பறவைகளோடும், மக்களோடும் நாம் உறவுகொள்கிறோம். நமக்குள் இருக்கும் கவிஞனும், கதைசொல்பவனும் விழித்துக் கொள்கிறான். இந்தப் பயணம் எவ்வளவு அழகியது, மனித நேசத்தை நமக்குள் மீட்டுக் கொள்வதற்கு எவ்வளவு தேவையானது என்ற புரிதலைப் பெறுகிறோம். இந்தக்கல்வி நமக்கு இன்றியமையாதது.

வெளியீடு : காவ்யா

இதழ் 2-3, பக்கம் 97-284.

விலை : 50 ரூபாய்.

## என் சிறுகதை பாணி :

நம் மரியாதைக்குரிய சி.சு. செல்லப்பா அவர்கள், தான் மணிக்கொடிக்குள் இடம் பெற்ற வரலாற்றையும் கூடவே மணிக்கொடியின் வரலாற்றையும்இந்த நூலின் முதலிரண்டு அத்தியாயங்களில் விரிவாக எழுதுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

கடைசி இரண்டு அத்தியாயங்களில் சிறுகதை யின் இலக்கணம் பற்றி, அவர் ஆழ்ந்துஅறிந்த அவ்வளவு விவரங்களையும் சில விமர்சனங் களோடு தொகுத்துத் தருகிறார். நூலின் இந்த நான்கு அத்தியாயங்களை செல்லப்பா அவர்கள் மட்டுமே எழுதமுடியும். இதுதவிர, வாடிவாசலில் எந்த மண்ணோடும், விலங்கு களோடும் மக்கள் இனத்தாரோடும் தம்மை செல்லப்பா உறவுபடுத்துகிறாரோ அந்த மக் கள் இனம் பற்றிய இரத்தமும் சதையுமான சுமார் பத்துக் கதைகளைத் தந்ததன் மூலம் தமிழ்ச்சிறுகதை உலகில் செல்லப்பா அழியாத இடம் பெற்றிருக்கிறார். அவரது உளவியல் நோக்கிலான கதைகளைக் காட்டிலும் இன்று இந்த கதைகள்தான் நமக்குள் உயிர்த்துடிப்பை உணர வைக்கின்றன.

விற்பனை : திலிப்குமார், மந்தைவெளி, சென்னை-28.

பக்கம்: 288; விலை: 80 ரூபாய்

## உடலே திரையாக

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் 'இந்தியா' வளர்ந்த நாடுகளைப் போன்றே அந்தஸ்து பெற்றுவிட்டது.

காலம், இடம், தர்க்கம், குறியீட்டு அர்த்தம் ஆகியவற்றை அழித்துப் புனைவு வெளிகளைத் தொடர்புஊடகங்கள்தொடர்ந்து உற்பத்தி செய்து வருகின்றன. இந்தப் புனைவு வெளிகளில் நமது உடல்கள் மிதந்து கொண்டு இருக்கின்றன. நமது எதிர்ப்பை மீறி உறிஞ்சிக் கொள்கின்றன.

கட்டமைக்கப்படும் பிம்பங்களின் வலைப் பின்னலுக்குள் சிலந்திவாய்ப் பூச்சிகளாய்நாம். பிம்பங்களோடு உறவாடுகின்ற நமக்கு நம் உடலே அந்நியம். எதிர்ப்பாலினம் பற்றிய பிம்பங்களுக்கேற்ப மனஅமைப்பு தகவமைக்கப் படுகின்றது. வாழ்வின் ஒவ்வொரு கணத் திலும் பிம்பங்களுக்காய் அலையுறுகின்றோம். பிம்பங்களின் உள்ளுறைக் கருத்தியல்களால் நாம் தன்னிலைகளாய், புள்ளிவிவர உடல் களாய், பிணத்தொகுப்புகளாய் ஆக்கப்படு கின்றோம். இதனால் ஒடுக்குமுறை அதிகாரத் துக்கு ஆட்படுதல் எளிதாகிறது. அதே சமயம் நுண்ணிய அளவில் அதிகாரத்தை நாமே செயல்படுத்தவும் நம்மால் முடிகின்றது. உடல்களின் இடைவெளிகளிலும் சுவர்களின் இருப்பிலும் தொடர்பு ஊடகங்கள் நம்மை ஆள்கின்றன.

பிரதிநிதித்துவம் முக்கிய அரசியல் செயல் பாடாக உள்ளது. புலன் உணர்ந்த விஷயங் களைப் பிறருக்கு எடுத்துரைக்கும் போது சித்தரிப்பு எழுகின்றது. 'பகிர்தல்' என்பதாக உருவான இது பிறகு 'நிர்ணயமாக' மாறி விட்டது. சித்தரிப்புப் பிரதிகளின் வழிதான் பிறரும் புலன் உணர்ந்தாக வேண்டியிருக் கிறது. அதாவது 'X' என்ற பொருளை 'Y' என்பவர் புலன் உணர்ந்து எடுத்துரைத்த 'Z' என்றசித்தரிப்பையே மீதியுள்ளநபர்கள் அனை வரும் புலன் உணர்வாக ஏற்றாக வேண்டி யுள்ளது. 'Z' என்ற பிரதிநிதித்துவம் அதிகார மாகி விடுகின்றது.

இந்தப் புனைவு வெளிகளும் பிம்பங்களும் சித்தரிப்புகளும் கட்டமைக்கப்படுவதன் சூட்சு மத்தைப் புரிந்து கொள்ள தொல்கதைகள், புராணங்கள் மதங்களின் சொல்லாடல்கள் முத லானவற்றைக் கட்டவிழ்த்துப் பார்க்கவும் வேண்டியுள்ளது. அத்தகு செயல்பாட்டுக்கு, பின்புல அறிவைத்தருவதாகத் தான் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.
பக்கம்:143-144.

| | | |
|---|---|---|
| நூல் | : | உடலே திரையாக, |
| ஆசிரியர் | : | சிவக்குமார் |
| வெளியீடு | : | காவ்யா |
| விலை | : | 30 ரூபாய் |

## அ. மாதவையா

தமிழ் முதல் நாவலாசிரியர் மூவரில் யதார்த்தப் போக்கை தமிழ் இலக்கியத்தில் ஆழமாகப் பதித்தவர் என மாதவையாவை நாம் சரியாகவே இனம் கண்டிருக்கிறோம். மாதவையாவையும் அவரது நாவல்களையும் விரிவான வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து, முனைவர் பட்டத்திற்காக இந்த ஆய்வைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் நண்பர் ராஜ் கவுதமன்.



படிப்பகம்

www.padippakam.com

பிரிட்டிசாருக்கு எதிரான இந்தியாவில் விடுதலைப் போராட்டத்தில் அரசியல் விடுதலை மற்றும் சமூக விடுதலையென்ற இரண்டு ஆற்றல் மிக்க கூறுகள் இருந்தன. இரண்டும் இணைந்து சென்றிருக்க வேண்டும். இந்நிலையில் சமூக விடுதலை என்ற நோக்கில் மட்டுமே செயல்பட்டவர்கள் அரசியல் விடுதலைக்காக (அரை குறையாக வேனும்) போராடியவர்களுக்கு எந்த அளவிலும் குறைந்துவிடவில்லை. அ. மாதவையா தன் இறுதிக் காலம் வரையிலும் சமூக விடுதலை என்ற தளத்தில் தீவிரமாக இயங்கினார். குறிப்பாக தான் சார்ந்திருந்த பார்ப்பனிய சமூகத்தைத் திருத்தும் முயற்சியில் இடைவிடாது எழுதினார் கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் நாவல்கள் எனத் தொடக்கத்தில் ஆங்கிலத்திலும் பிறகு தமிழிலுமாக இடைவிடாது எழுதி வெளியிட்டார். அரசு பதவியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்று இதழ் நடத்தினார். தமிழைப்பயிற்சி மொழியாக்க வேண்டும் என்று பேசினார். தனித்தமிழை ஆதரித்தார்.

இந்துமதஎல்லைக்குள் இருந்துதான் அவர் செயல்பட்டார். தீண்டாமையைச் சாடினார். கிறித்துவ மதத்திற்கு மாறுவதை அவர் ஏற்கவில்லை. பிரம்மஞான சங்கத்தவராக அவர் இருந்திருக்கிறார். தனி மனித சுதந்திரம் என்ற ஐரோப்பியக் கருத்து அவருக்குள் ஆழமாக இடம் பெற்றது. தனி மனிதர் என்ற மையத்திலிருந்துதான் அவரது சிந்தனை வீச்சு செயல்பட்டது. இவ்விரு போக்குகளும் நமக்குள் வியப்பை ஏற்படுத்துகின்றன. ஆங்கில நாவலாசிரியர் தாக்கரேயின் பாதிப்பு இவருக்குள் ஆழமாக இருந்தது என்பது நமக்குள் இன்னும் ஒரு வியப்பு. சமூக சீர்திருத்தமோ புரட்சியோ என்று சமூகத்தில் மாற்றம் நிகழும் எல்லாக் காலத்திலும் பெண் என்ற சிக்கல் முன்னுக்கு வருகிறது. இந்த உணர்வின் தாக்கம் மாதவையாவிற்குள் முழுமையாக வெளிப்பட்டது. இதற்குச் சான்றாக இருப்பவை இவர் படைத்த பெண் பாத்திரங்கள்.

மார்க்சியப் பார்வை ராஜ்கவுதமனின் ஆய்வுக்கு வளம் தந்திருக்கிறது. மாதவையாவிடம் பெரியாரை எதிர்பார்க்க முடியாது. தனித்தியத்தைக் கண்டுபிடிக்க முடியாது. ராஜ்கவுதமனின் ஆரோக்யமான பார்வைக்கு இந்த ஆய்வு நல்ல சான்று.

வெளியீடு : காவ்யா

பக்கங்கள் : 152 விலை : ரூ-30/

## சூலூர் வரலாறு

கொங்கு நாட்டு வாழ்வியல்வரலாறு என்ற துணைத்தலைப்புடன் இந்த நூல் வந்திருக்கிறது. கோவையிலிருந்து திருச்சி சாலையில் இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவிலிருப்பது சூலூர். இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட வரலாறு இந்த ஊருக்குச் சொந்தம். பாவேந்தர் பாரதிதாசன் பேரவையினர் ஆறாண்டுகள் முயன்று இந்த வரலாற்றைத் தொகுத்திருக்கின்றனர். சோழர், பாண்டியர் காலத்துக் கல்வெட்டுக்கள், செட்பேடுகள், கோவில்கள், மக்கட்பெயர்கள், அண்மைக் காலத்து ஆவணங்கள், மக்களின் உணவு முறைகள் மற்றும் பழக்கவழக்கங்கள், திருவிழாக்கள், பழமொழிகள் என நூற்றுக்கணக்கான சான்றுகளைத் திரட்டி இந்த நூலை உருவாக்கியுள்ளனர். தமிழகத்தில் எத்தனை ஊர்களுக்கு இப்படி வரலாறு இருக்கிறது அல்லது தொகுக்கப்பட்டிருக்கிறது என்ற வியப்பு நமக்கு ஏற்படுகிறது.

யவனர் தமிழகத்தோடு வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். அதற்கான சான்றுகள் கிடைக்குமிடங்களில் சூலூரும் ஒன்று. எட்டாம் நூற்றாண்டில் சோழர் கொங்கு நாட்டில் உழவர்களை குடியேற்றினர். ஆதிக்குடிகளான இருளரோடு உறவும் மோதலும் ஏற்பட்டிருக்க கூடும். பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாண்டியர் மூலமும் இங்கு குடியேற்றம் நடைபெற்றது. நொய்யலாற்றின் நெடுகிலும் வாய்க்கால்களும் குளங்களும் அமைக்கப்பட்டன. வேளாண்மை வளர்ச்சி பெற்றது.

இது சூலூரின் பழைய வரலாறு. இருபதாம் நூற்றாண்டின் வரலாறு இந்த நூலில் விரிவாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. சூலூருக்கு இரயில்பாதை முதல் சைக்கிள், பேருந்து, திரைப்பட அரங்கு எப்படி வந்து சேர்ந்தன என்ற நுட்பமான விவரங்கள் சூலூரில் ஊராட்சி மன்றத்தில் ஒரு நூற்றாண்



படிப்பகம்

டுக்கும் மேற்பட்ட வரலாறு. கூட்டுறவு சங்கம் மற்றும் கல்வி நிறுவனங்களின் வரலாறு திராவிட இயக்கம் இருபதுகளிலேயே இங்கு வேரூன்றியது. 1942ல் விடுதலைப் போராட்டத்திலும் சூலூர் இடம் பெற்றது. சூலூர் என்றாலே திராவிட இயக்கம் என்று சொல்லும் அளவுக்கு இயக்கம் இங்கு வேரூன்றி இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டு சூலூர் வரலாற்றில் எஸ். ஆர். கருப்பண்ணத்தேவர் நடுநாயகமாகத் திகழ்கிறார்.

மார்க்சிய இயக்கமும் சூலூரில் தன் ஆழ்ந்த பதிவுகளை இன்றுவரை ஏற்படுத்தி இருக்கிறது.

நூலைத் தொடர்ந்து படிக்கும்பொழுது கொங்கு வரலாற்றில் ஒரு நெடுஞ்சாலையில் பயணம் செய்வதைப் போன்ற பேருணர்வு நமக்கு ஏற்படுகிறது. வரலாற்றுப் பேரிலக்கியம் ஒன்றை வாசிக்கின்ற உணர்வு ஏற்படுகிறது. பகுத்தறிவும், மார்க்சியமும், தமிழுணர்வும் சூலூர் மக்களை, இளைஞர்களை ஆட்கொண்டிருக்கின்றன. சூலூர் நவீன நாகரீகத்திற்கு இடம் கொடுப்பதன் மூலம் தன்னை இழந்து விடக்கூடாது என்ற உணர்வையும் இந்த நூல் தனக்குள் தாங்கியுள்ளது. சூலூருக்குள் தன் ஆழ்ந்த தடங்களைப் பதித்திருக்கிற தன்மான இயக்கம், மார்க்சிய இயக்கம் முதலியவற்றின் நெடியவரலாறு உலக அளவிலும் வைத்துச் சொல்லப்படுகிறது. தமிழியக்கத்தின் நெடிய வரலாறு சொல்லப்படுகிறது. தமிழகத்தில் திரைப்பட வரலாறு முதலியவை சொல்லப்படுகின்றன. இளைஞர்களுக்கு இந்த நூல் ஒரு கருத்துக் களஞ்சியம். பாவேந்தர் பேரவையினரும் நூலின் பதிப்பாசிரியராகிய செந்தலை நா. கவுதமன் அவர்களும் தமிழக மக்களின் பாராட்டுக்குரியவர்கள்.

இந்த நூல் பற்றிச் சில கடுமையான திறனாய்வுகளும் எழுந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட சாதியின் மேலாதிக்கம் இந்த நூலைக் கட்டமைத்திருக்கிறது என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். ஊரின் வளர்ச்சியில் வேளாளர் பங்களிப்பு மட்டுமல்லாமல் தலித்மக்களின் பங்களிப்பும் இடம் பெற்றது என்கிறார்கள். கொங்கின் ஆதிகுடிகளாகிய இருளர் பற்றி இந்தநூல் இன்னும் கூடுதலாகச் சொல்லியிருக்கவேண்டும். விடுதலைப் போராட்டத்தில் கண்ணம்பாளையத்தின் பங்கு ஒதுக்கப்பட்டு இருப்பது இந்த நூலில் உள்ள கடுமையான குறை. இவற்றோடு மேலும் ஒன்று. விவரங்கள் மட்டும் தொகுக்கப்படுவது போதாது. விவரங்களின் வழியே வரலாற்றின் முரண் மற்றும் இயக்கம் சொல்லப்பட வேண்டும். வரலாற்று வரைபியல் பற்றி நாம் கற்கவேண்டும். நூலின் குறைகள் நாளடைவில் ஆரோக்யமான விவாதங்கள் மற்றும் கூடுதலாக விவரத் தொகுப்புக்கள் மூலம் தீர்க்கப்படும் என்றே நம்புகிறோம். இதற்கு அனைத்து நண்பர்களின் ஒத்துழைப்பும் கிட்டும் என்றும் நம்புகிறோம். முதல் நூல் என்ற முறையில் இதன் ஆக்கத்தை நாம் பெரிதும் வரவேற்கிறோம்.

வெளியீடு : பாவேந்தர் பாரதிதாசன் பேரவை
சூலூர், கோவை-641402.
பக்கம் 650, ரூ. 125.

# உத்தரகாண்டம்

மலையாளத்தில் :
*கவிஞர் சச்சிதானந்தன்*
தமிழில் :
*ஸ்ரீபதி பத்மநாபா*

குறிப்பு: 94-இல் சீனாவில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக இந்தியாவில் பலமொழி சார்ந்த அறிஞர்களோடு கவிஞர் சச்சிதானந்தனும் சென்றார். தாய்லாந்திலும், சீனாவிலும் சுற்றுப் பயணம் செய்த பொழுது கவிஞர் எழுதிய கவிதைகள் கீழே தரப்படுகின்றன. சீனப்பயண அனுபவம் குறித்து 'மாத்ருபூமி' யில் சச்சிதானந்தன் எழுதிய கட்டுரைகளின் சுருக்கம் நிகழ்-29-இல் வெளியானதை நண்பர்கள் அறிவார்கள். கவிஞர் சச்சிதானந்தனுக்குள் திரண்டிருக்கிற கவிதை வளத்திற்கு, அவரது ஆழ்ந்த மெய்யியல்பார்வையை ஆதாரமாகச் சொல்ல முடியும்.

www.padippakam.com

ஆளுமை சிறுத்துத்தெரிகிற தமிழ்க் கவிதைச் சூழலில், சச்சிதானந்தனின் கவிதை விச்சுக் களை நாம் தவறவிடக்கூடாது.

## தாவோ ஆலயத்துக்குப் போவது எங்ஙனம்?

*(டி. ஆர். நாகராஜஉக்கு)*

விட்டைப் பூட்டக்கூடாது
விடியலின் இறக்கத்தில்
இளங்காற்றின் இலையைப்போல்
கனமில்லாமல் செல்

நன்றாக விடிந்திருந்தால்
சாம்பல் பூசிச் செல்
அதிக அறிவென்றால்
பாதி மயக்கத்தில் செல்,

வேகம் அதிகமானது
விரைவில் தளர்ந்துவிடும்
மெதுவாகச்செல்,
நிச்சலனத்தின் அளவு மெதுவாக.

நீர் போல் உருவிலியாகு,
தாழ்ந்த இடத்தில் தங்கு,
மேலே உயர
முயற்சி செய்யவே வேண்டாம்.

வலம் வரவேண்டாம்,
சூன்யத்திற்கு இடவலமில்லை,
முன் பின் இல்லை.

பெயர் கூப்பிட வேண்டாம்
இவனுடைய பெயருக்குப் பெயர் இல்லை,

வழிபாடுகள் வேண்டாம்,
காலியான பாத்திரம் கொண்டுசெல்,
நிறைந்த பாத்திரத்தைவிட எளிது
பிரார்த்திக்கவும் வேண்டாம்
விருப்பங்கள் உன்னவர்களுக்கான
இடமல்ல இது
பேசவேண்டுமென்றால்
நிசப்தமாகப் பேசு,
பாறை மரங்களோடும்
மரங்கள் பூக்களோடும் பேசுவது போல்.
மிகவும் இனிமையான சப்தம்
மௌனமே;
மிகவும் அழகான நிறம்
இல்லாமையினுடையது.

வருவதை யாரும் காண வேண்டாம்,
போவதையும் காணவேண்டாம்
குளிரில் நதியைக் கடப்பவன்போல்
நாலிலொன்றாய்க் குறுகித்தான்
கோபுரத்தைக் கடக்க வேண்டும்.

கரைகின்ற பனித்துளிபோல்
ஒரு நொடிதான் இருக்கிறதுனக்கு.

நடிப்பு கூடாது;
நீ இன்னும் முழுமையடையவில்லை.
கோபம் கூடாது;
ஒரு தூசி கூடஉன் ஆணையின் கீழில்லை.
துக்கம் கூடாது;
அது ஒன்றையும் பாதிப்பதில்லை.
புகழ் அழைத்தால் வழிமாறி நடைவிடு
ஒரு காலடிச் சுவடுகூட
மீதமில்லாமலிருக்கட்டும்

கைகளை பயன்படுத்தவே வேண்டாம்
அவை எப்போதும் யோசிப்பது
இம்சையைக் குறித்துத்தான்

மகத்துவத்தை நிராகரித்துவிடு
மகத்துவத்தை அடைய வேறு வழியில்லை.
நதியின் மீன் நதியில் கிடக்கட்டும்,
மரத்தின் பழம் மரத்தில்.

உறுதி அதிகமானது ஒடியும்
மென்மையானது வளைந்து கொடுத்து
வாழும்,
பல்லிடம் நாக்கைப் போல்.

ஒன்றும் செய்யாதவனுக்குத்தான்
எல்லாமே செய்ய முடியும்.

படி கடந்து செல்
உனக்காகக் காத்திருக்கிறது,
நிர்மாணிக்கப்படாத விக்கிரகம்.

(தாவோ ஆலயம், சு-ஃபூ)

## தாய்மலை முகட்டில்

*(தூ ய்வேஹேக்கு)*

எல்லா மலைகளும் பிறப்பது
எரிமலைகளாய்த்தான்
மெல்ல மெல்ல சில குளிர்ந்து உறைகின்றன,
தலையிலிருந்து கருணை உருவெடுக்கிறது
காட்டின் வளர்ந்த சடையிலிருந்து
நிலவுப்பிறை எட்டிப் பார்க்கிறது
எரிமலைகள் மட்டும்



படிப்பகம்

www.padippakam.com

எப்போதும் நெற்றிக்கண் திறந்திருக்கின்றன.
இந்தப் பர்வத சிவனின் மூக்கின்
முனையில் தான்
நாமிப்போது நின்று கொண்டிருக்கிறோம்
கீழே அந்த நீலம் பாரித்த வாய்காணமுடிகிறது
இங்கே நிற்கிறபோது
வெள்ளை ஆடையுடுத்த நீ பரிசுத்தமான
பார்வதியாகிறாய்.
ஹே, காமா, உன் அம்பை எய்க,
இம்முறை
மஞ்சள் நதிக்கரையில் விரிகிற
மதுரக் கரும்புத் தண்டில்
இந்தத் தாய்ப் பள்ளத்தாக்கின்
பொன்னரளிப் பூவைத் தொடுத்து,
(தாய் மலைமுகட்டில்)

## வடக்கு மழை
*(வாங்-லூவுக்கு)*

ஒரு யாளியைப் போல்தான்
சைனாவில் மழை நகர்கிறது,
அதன் ஸ்வரம்
புத்தவிகாசத்தின் மணிகளினுடையது,
மணம் பாசிபடர்ந்த
பழைமையான சிலைகளினுடையது.
ருசி பன்னீர் மற்றும் வெடி உப்பினுடையது.

அது பயணிகளிடம் இப்படிச் சொல்கிறது:
''அடித்தளமில்லாத ஒரு கிணற்றிலிருந்து
நான் பிரவாகிக்கிறேன்.
வளைந்த வழிகளை நான் நிமிர்த்துகிறேன்.
பட்டுப்புழுவின் கனவுக்கு பட்டு கொடுக்கிறேன்
இரைகளின் ஆத்மாவுக்கு சிறகுகள்
கொடுக்கிறேன்,
அரண்மனைகளை நான் காட்சியகங்
களாக்குகிறேன்.

பிறக்காத விடியல்களின் பேரிகைகள்
எனக்குள் இருக்கின்றன.
எனக்குள் இருக்கின்றன சமுத்திரத்தில்
மூழ்கி இறந்த மணிகள்,
பிரிந்துபோன மரங்களின் இலைகள்.
என் சப்தத்தை நான்
மொழியில்லாதவர்களுக்கு கொடுக்கிறேன்.
தரித்திரர்களுக்கும் பிராணிகளுக்கும்
கற்களுக்கும்
குன்றுகளில் நான் நடக்கையில்
என் காலடி ஓசை சம நிலங்களில்
எதிரொலிக்கிறது
காற்று என் பின்னால் வருகிறது
காற்றும், மணிகளும், குழந்தைகளும்,

ஒரு நகரமும் எனக்குத்தடைசெய்யப்பட்டதல்ல
சொர்க்கங்களையும் நரகங்களையும்
ஒரேபோல் துலங்கவைக்கிற ஸ்பரிசம் நான்.

என் பின்னால் ஏறிக்கொள்
நான் உனக்குக் காண்பிக்கிறேன்,
இடி மின்னலின் வீடு,
இரவுப் பறவையின் உறக்கம்,
இறந்தவர்களின் கனவு,

வா, பெருமகிழ்ச்சி கொள்,
நீ பூமியில் தனியாக இல்லை,
ஒரு மாய ஸ்பரிசம் உன்னை
நீரோடும் மிருகங்களோடும் பறவைகளோடும்
பாறைகளோடும்
இணைக்கிறது.
அதன் பின் செல்,

சொர்க்கம் பெய்து நனைந்த
இந்த உடலோடு
செல் சக்கரவர்த்திகளின் சரித்திரம்
பதிமூன்று சவக்குடில்களில்
அழுகிக் கொண்டிருக்கிறது.''
('தடைசெய்யப்பட்ட நகர'த்தில்)

## சைனீஸ் சித்திர எழுத்து பார்க்கையில்
*(வே-யோங்குக்கு)*

இதுவாகத்தானிருக்க வேண்டும்
இறைவனின் மொழி,
மண் ஒரெழுத்து, மரம் ஒரெழுத்து,
கிளி ஒன்று, பசு மற்றொன்று,
மனிதன் வேறொன்று.
இப்படித்தானாயிருக்க வேண்டும் உலகம்
உருவாக்கப்பட்டது,

ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளாகக்
கொண்டு,

பிறகு எழுத்துக்கள் கூடிச்சேர்ந்து
புதிய பொருட்கள் உண்டாயின.



படிப்பகம்

www.padippakam.com

மண்ணும் மாமும் சேர்ந்து வசந்தம்
வசந்தமும் கிளியும் சேர்ந்து சங்கீதம்
சங்கீதமும் நீரும் சேர்ந்து நிலவு
நிலவும் கனலும் சேர்ந்து வெயில்
வெயிலும் அன்பும் சேர்ந்து சொர்க்கம்
நரகம் பிறகுதான் உண்டானது,
சாத்தானின் மாற்றுமொழியில்.

(இன்டர்நேஷனல் ஹோட்டல்-பெய்ஜிங்) ●

## பெருஞ்சுவரில்
### (வாங்-மெங்குக்கு)

சுவர்களில் எனக்கு நம்பிக்கையில்லை.
என் நம்பிக்கை நீரில்தான்
நீரில்; பிறகு வேர்களிலும் காதலிலும்.
அவை சுவர்களுக்கெதிராக செயல்படுகின்றன.
எல்லா சுவர்களும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது
ரத்தத்தில்தான்; மனிதனுடைய,
மிருகங்களுடைய,
செடிகளுடைய
நான் எல்லைகளின் காவல்காரனுமல்ல
அவற்றை உருவாக்கியவர்கள் தான்
அவற்றை பாதுகாக்கவும் செய்கிறார்கள்.
ஒரு நூற்றாண்டுக்கும் மற்றொன்றுக்கும்
இடையிலுள்ள
கானலில் இருந்து
நாம் உருவாக்குகிற எல்லைகளின்
தற்காலிகத்தை
நாம் பார்த்தோம்.

முழுக்க மாறிவிட்ட ஓர் உலகப்படத்தில்
இருந்து கொண்டு
நாம் அறிகிறோம், பாட்டனின் வேலிபோல
எதையும் பாதுகாக்க முடியாத
இந்தச் சுவரின் பயனில்லாத கம்பீரத்தை,
சக்ரவர்த்திகள் யோசித்திருக்க மாட்டார்கள்,
ஒருநாள் இது பயணிகளின் அதிசயமாகவும்
குழந்தைகளின் விளையாட்டிடமாகவும்
மட்டும் மாறும் என்பதை,

திரும்பிப் போகையில்
சுவரின், தொட்டால் உடைகிற
களிமண் உருவங்களை நாம் பையில்
இடுகிறோம் :
லாவோத்சுவுக்கு ஒரு நினைவுச் சின்னம்.

(சீனப் பெருஞ் சுவரில்) ●

## தியனென்மென், 1994
### (கணேஷ்டேவிக்கு)

உலர்ந்த ரத்தத்தின் மீதமர்ந்து
இணைகள் காதல் சல்லாபம் நடத்துகின்றன
துப்பாக்கியேந்திய பட்டாளத்துக்காரர்கள்
பீரங்கி வண்டியின் ரத்தமும் மாமிசமும்
கழுவிவிட்டு, வசந்தத்துக்குக் காவல்
நிற்கிறார்கள்

பூமிக்கடியிலிருந்து
சூறாவளி ஊளையிடுகிறது
உயிர்த்தெழுகின்றவனின்
ஜ்வலிக்கிற கண்ணைப்போல்
முழுநிலவு உதித்து உயர்கிறது.
சாதாரணத்துவம்
மீண்டும் நிறுவப்பட்டிருக்கிறது.

(தியனென்மென் சதுக்கம், பெய்ஜிங்) ●

## புத்தகங்கள்

'மிங் ராஜவம்ச காலத்தில்
இந்தப் பொந்தில் ஒளித்து வைத்துத்தான்
பண்டிதர்கள் புத்தகங்களை
அதிகாரிகளிடமிருந்து காப்பாற்றினார்கள்'!

வழிகாட்டி சொன்னாள்.
நான் கேட்டேன். 'இப்போது இந்தப்பொந்தை
யார் உபயோகிக்கிறார்கள்?'

அவள் சொன்னாள். 'இதில்
ஒளித்து வைத்துக் காப்பாற்ற வேண்டிய
புத்தகங்களொன்றும்
நாங்கள் இப்போது எழுதுவதில்லை!

(விண்டர் பேலஸ்) ●

## கடைசிச் சக்கரவர்த்தி
### (ஓம்பிரகாஷ் சிங்காலுக்கு)

கடைசி இளம்சக்கரவர்த்தி
ஊமையாயிருந்தான்
அவனுடைய சப்தம் திரைச்சீலைக்குப்
பின்னாலிருந்து வருகிறது
அவனின் செய்கைக்கு அர்த்தமேயில்லை
முதியவர்கள் அவைகளை தங்கள் விருப்பப்படி
விளக்குகிறார்கள்.

www.padippakam.com

அவன் ஒரு குழந்தைப் பொம்மையை
தூங்க வைக்கையில்
அவர்கள் நாடு முழுவதும் உறக்கச் சட்டம்
பிறப்பிக்கிறார்கள்'
அவன் கனவு முழுக்க நிறைய வெள்ளை
முயல் குட்டிகள் மட்டுமே'
ஆனால், அவர்கள் சொல்கிறார்கள்
அவன் ஆக்கிரமிப்பைக் கனவு காண்கிறான்
என்று
அவன் ஒரு கறுப்புப் பூனைக்குட்டியிடம்
ஊடல் கொண்டால் போதும்
அவர்கள் அயல் நாட்டுடன் போர்
அறிவிக்கிறார்கள்.

அவன் இல்லாமலிருந்தாலும்
நாட்டுக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது.
இருந்தாலும் ஆணை தர ஒரு சக்கரவர்த்தி
இல்லாமல்
மக்கள் நாங்கள் எப்படிக் கழிவோம்
(பழைய அரண்மனை,
தடைசெய்யப்பட்ட நகரம்) ●

## சிவப்பு விளக்கு
### (ககன் கில்லுக்கு)

('ரெட் லான்டெர்ன்' திரைப்படம்
பார்க்கையில்)

நெரித்துக் கொல்லப்பட்டவளின் அலறல்
அரண்மனையின் உட்சுவர்களிலிருந்து
படம் விரித்து நம்மைப் பின்தொடர்கிறது.
க்வாங்த்ஸெவின் தரிசனத்தை முழுக்க அது
விழுங்குகிறது.
கன்ஃபியூஷியஸின் ஞானத்தை தன்
விஷத்தால் தீண்டுகிறது,
பெருஞ்சுவரிலிருந்து கீழே வீசியெறியப்பட்ட
பெண் குழந்தைகளைச் சுற்றி அது
பெண் கருக்களைத் தேடி ஊர்ந்து போகிறது.
சீதையின் சமையலறையிலிருந்து உயர்கிற
புகையில்
தம் பார்வை மங்குகிறது
அது சமையலறையல்ல, சிதை
இந்தச் சிவந்த வெளிச்சம் காமத்தினுடையதும்
அல்ல
இன்று உன்னுடன் உறங்க வருகிற
மரணத்தினுடையது
(பெய்ஜிங் திரையரங்கம்) ●

## மொழிகள்
### (ரமா காந்த் ரத்திற்கு)

இரவை நாம் கவிதைக்கும் மதுவுக்கும்
பகிர்ந்தளிக்கிறோம்—
ஒருவர் மராட்டியில், ஒருவர் குஜராத்தியில்.
ஒருவர் ஹிந்தியில், ஒருவர் கன்னடத்தில்
நீங்கள் ஒரியாவில், நான் மலையாளத்தில்.

பாதியளவு நம் ஒவ்வொருவருக்கும் புரிகிறது.
மீத நம்முடைய மதுவுக்கும் புரிகிறது
விரகத்துக்கும் இருக்கிறது அதன் மொழி
ஒருவர் முணுமுணுக்கிறார், ஒருவர் அழுகிறார்,
ஒருவர் நாட்டுப்பாடல் முணுமுணுக்கிறார்,
ஒருவர் பஜனை.

பாஹியானும் ஹ்யூவன்-சாங்கும்
பயண நூல்களுடன்
நம்மிடையே நுழைந்து வருகிறார்கள்.
சுங் காலத்துச் சக்கரவர்த்தி ஒருவர்
நமக்கிடையில்வந்தமர்ந்து ஹூக்காபிடிக்கிறார்
பனி நதியின் அடித்தளத்திலிருந்து
ஒரு குரங்குமனிதன் சபையில் சேர்ந்து
கொள்கிறான்

காலம் ஒரு பொய்.
நாம் முடிவின்மையின் சிலைகள்.
இந்த நிமிடத்துக்கு நன்றி சொல்லுங்கள்
இந்த மதுவுக்கும்.
(ஷீன்கெங்க்-ஹில் வ்யூஹோட்டல், ஜீனான்)

## பயனற்ற மகிழ்ச்சி
### (லக்ஷ்மன் கெய்க்வாடுக்கு)

இல்லை லக்ஷ்மன்
உன்னுடைய இந்த மகிழ்ச்சி வெற்றுதான்
சுத்தமான ஒன்றும் மீதமில்லை
ஒன்றும்.

இலைகள் கூட ரகசிய ஆலோசனைக்காரர்
களைப் போலத்தான்
முணுமுணுக்கின்றன
காற்று அதன் காதலின்
சாட்சிகளைக் கொன்றுவிடுகிறது
பூக்கள் பூக்கிற பள்ளத்தாக்குகளினூடே
ரத்தத்தின் வாசம் ஏறி வருகிறது
நம்முடைய ஆத்மாவே



படிப்பகம்

www.padippakam.com

ஒரு வாளாக நம்மைப் பிளக்கிறது.
இல்லை, நம்முடைய துக்கம் நிறைந்த
அன்னையரின்
தொலைந்துபோன பூமிக்கு
இன்னும் நிறைய போக வேண்டும்.
அழுக்கடைந்த மூட்டைகளும் அழுகிற
வேர்களுமாக
ஸ்டேஷனில் வந்து இறங்குகிற இந்த
விவசாயிகள்
எந்த வீரக் கதையின் நாயகர்களுமல்ல,
இந்தப் படையினர் காப்பாற்றிக்
கொண்டிருப்பதோ
இன்னும் உருவாக்கப்படாத ஒரு உலகத்தை.

இல்லை லக்ஷ்மன்
நாம் கண்ட நட்சத்திரம்
தீர்க்கதரிசி சொன்ன நட்சத்திரமல்ல,

(பெய்ஜிங் ரயில் நிலையம்)

## அய்ச்சிங், ஒரு நதி
### (கவிஞன் அய்ச்சிங்குக்கு)

அய்ச்சிங், நீ ஒரு கிழக்கு நதி,
மலை உச்சியின் காற்று,
சதையும் தசையுமுள்ள பூ;
பற்கள் இருக்கிற தேன்.

ஏற ஏற குளிர் ஏறுகிற
உன் கவிதையில் நான் மூழ்குகிறேன்.
பழைய சிறைக்கைதி
சங்கிலியின் கிலுகிலுப்பைக் கேட்பதுபோல்
நான் நினைவுகளின் கிலுகிலுப்பைக்
கேட்கிறேன்.

யதார்த்தமான துக்கம் எப்போதும்
உறங்குவதில்லை
காத்திருந்து வசந்தத்தின் வாசத்தை
காராக்கிருகத்தில் அனுபவிக்க வேண்டி
வந்தவன் போல்
அது நிகழை மட்டும் பார்த்துக் கொண்டு
நிற்கிறது.

பாட எத்தனிக்கும் வாயில்
ரத்தம் வந்து நிறைகிறது.
மை படர்கிற தாளைப்போல
மௌனம் மெல்லமெல்ல வார்த்தைகளின்மேல்
கறுத்த சவத்துணி போர்த்துகிறது.
இருந்தாலும் சாம்பலின் கடலிலிருந்து
நீ மீண்டும் மீண்டும் எழுந்து வருகிறாய்.
யுத்தம் தகர்த்து விட்ட வீட்டின் கற்களிலிருந்து
ஒரு அந்திமல்லிப்பூ விரிந்தெழுவது போல்
அவர்கள் உன்னை மாற்றி மாற்றி
கனலிலும் பனியிலும் படுக்க வைக்கிறார்கள்.
நாயகனுடையதும் எதிர் நாயகனுடையதுமான
வேஷங்களை அணிவிக்கிறார்கள்.

எந்த அரசாங்கத்துக்கும் கவிஞர்களைப் புரிந்து
கொள்ள முடியாது.

அய்ச்சிங்,
அவர்களுக்குப் பயம், எப்போதும்
திறந்தேயிருக்கிற
கவிதையின் கண்களை,
ஒவ்வொரு நிமிடமும் மீண்டும்மீண்டும் பிறக்கிற
கவிஞனின் ஆயிரம் ஜென்மங்களை.

நிஜமும் அன்பும்
ஒத்துப் போகாத காலத்திலிருக்கிறோம் நாம்,
கோப்பையில் இன்னும்
விஷம் மீதமிருக்கிறது.

(அய்ச்சிங் படைப்புகளை வாசிக்கையில்,
புதுதில்லி)

## சரியான புத்தன்
### (சீ-:பெங்குக்கு)

புத்தன் ஒருவனல்ல,
காலடி வைக்கிற இடத்தில் தாமரை பூக்க
வைத்த
தவஜாத சித்தார்த்தன்,
உயிரின் உரிமைக்காக தேவதத்தனிடம்
விவாதிக்கிற தயாவனான கௌதமச் சிறுவன்
தங்கத்தின் சிறையில் வாழ்ந்த
யசோதரையின் ராஜகுமாரன்
அழிவின் முன்பாக விழிதிறந்த துக்க புத்தன்
அஸ்தி மட்டுமான சாக்கியமுனி
அபயமுத்திரையிட்டு அமர்ந்திருக்கிற
அவஹிதேசுவரன்
சிஷ்யர்களால் சூழப்பட்ட ஞானேசுவரன்
மருந்தை ஏந்தி பத்மாசனமிட்டு
அமர்ந்திருக்கும் தன்வந்திரி
சிரிக்கிற மஹோதரன், இறக்கிற க்ருசோதரன்





படிப்பகம்

www.padippakam.com

நான் நெருடா அல்ல,
கறுப்பான கல்லிலும் வெள்ளை மரத்திலும்
செய்த
குறுகியவரும் நீண்டவர்களுமான
இந்த ஆயிரம் புத்தர்களுக்கிடையில்
சொந்தக் கூட்டுக்குடும்பத்திலிருப்பதைப்போல்
நான் நிம்மதியாயிருக்கிறேன்.
நாமும் இந்த நிலைகளையெல்லாம் கடந்து
போகிறோம்;
புத்தத்துவம் மட்டும் தூரத்திலேயேயிருக்கிறது.
ஒரு நிலையில் நாமும் புத்தனாகலாம்:
சொந்த மாமிசத்தில்தான்
அந்த புத்தனை செதுக்கியெடுக்க வேண்டும்
சொந்த ஆசையின் கூர்மையான உளியால்.
பிறகு நடக்க வேண்டும்,
உண்மைக்குள்,
சந்ததிகளில்லாமல்,
(பாங்காக்கில் 'உறங்குகிற புத்தனின்' ஆலயம்)

● ● ●

# மார்க்சிய சிந்தனைக்கூடத்தின் ஆறு ஆண்டுகால கடமைகளும் விமர்சன - சுயவிமர்சன உரையும்

● மார்க்சியம் சார்ந்த கட்சித் தோழர்களோடு, தோழர் உலகியான் உள்பட சிந்தனைக்கூட தோழர்களின் பொதுவான அனுபவங்கள் படிப்பினைகள் என்ன ?

மார்க்சிய சிந்தனைக்கூடம் சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் (1991) தாம்பரம் பகுதியில் துவக்கப்பட்டது. அப்போது அடிப்படைத் தோழர்களாக 1. உலகியான் 2 M. சண்முகம் 3. G.K. மூர்த்தி மற்றும் 4. S.K.G. ஏகாம்பரம் ஆகிய நான்கு தோழர்களின் முன் முயற்சியால் மா.சி. கூடம் உருவாயிற்று. நடைமுறையில் நாட்டில் எத்தனையோ மார்க்சியம்சார்ந்த அமைப்புக்கள் மற்றும் கம்யூனிச அமைப்புக்கள் தோன்றி வளர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது புதியதாக ஒரு மா.சி.கூடம் உருவாவதற்கு என்ன அவசியம் இருக்கிறது. என்ன புதிய மார்க்சிய கருத்துக்கள் தேவைப் படுகின்றன என்ற கேள்வி எல்லோருக்கும் எழக் கூடியது என்பது உண்மையே. மார்க்சிய சிந்தனைக்கூடம் உருவாக முன் முயற்சி எடுத்தது சுமார் 4 தோழர்கள் மட்டும் தான் என்றாலும், அது உருவாகி, வளர்ந்து, தேசிய, சர்வதேசிய அளவிற்கு புதிய தத்துவார்த்த உண்மைகளை வெளிப்படுத்தி, சர்வதேச மார்க்சிய வாதிகளுக்கும், சர்வதேச கம்யூனிஸ்டுகளுக்கும் ஒரு புதிய மார்க்சியப் பாதையை வகுத்துக் கொடுத்திருக்கிறதென்றால், அதற்கு முழுப்பொறுப்பு நமது அனைத்துக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும், மார்க்சியத் தத்துவஞானிகளுக்கும், அனைத்துப் பாட்டாளி வர்க்கத்திற்கும், மற்றும் தேசிய அளவிலான மார்க்சிய அறிவு ஜீவிகளுக்கும் சேரும்.

மா.சி.கூடம் உருவாகி அனைத்துக் கம்யூனிஸ்ட் தோழர்களையும் ஒன்று சேர்த்து ஒரே கருத்தமைவில் கொண்டு வந்து தனது செயல்பாட்டைத் துவக்கியது. தொடர்ந்து ஒரு வருட காலம் மா.சி. கூடம் வெளிக்கொண்டு வந்த மார்க்சிய தத்துவார்த்தப் போராட்டத்தை அனைத்துக் கம்யூனிஸ்ட் கட்சி மேல்மட்ட தோழர்களிடமும் தொழிற்சங்க தோழர்களிடமும், விமர்சனம்-சுய விமர்சனம் என்ற அடிப்படையில் செய்து வந்தோம். அப்போது எங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் சொல்லி முடியாது. தத்துவார்த்தப் போராட்டத்தில் விவாதத்தில் சில நேரம் கடுமையான மோதலும் உருவானது. எனினும் தோழமை உணர்வோடு மா.சி.கூடம் அந்தக் கடுமைகளையும்



படிப்பகம்

www.padippakam.com

உள்வாங்கி செரித்துக் கொண்டது. மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் முதல்பணி தனது மார்க்சியத் தத்துவார்த்த கருத்தை உறுதியாகவும், தெளிவாகவும் வலியுறுத்தியது. இதற்காக 1990-இல் ஒரு தத்துவார்த்த நூலைத் தயாரித்து வெளிக்கொண்டு வந்தது. நூலின் பெயர் மார்க்சிய வீச்சில் ஒரு புரட்சி (1990).

இந்நூலின் அடிப்படை சாராம்சம் என்னவென்றால், மார்க்சியத்தின் அடிப்படைத் தத்துவம் இயக்கவியல் பொருள் முதல் வாதம் என்பது இது வரையிலும் தேசிய, சர்வதேசிய அளவிலும் இருந்து வந்த கம்யூனிச அமைப்புகளும், கம்யூனிஸ்ட் தோழர்களும் வலியுறுத்தியும், வழி நடத்தியும் வந்துள்ளனர். மா. சி. கூடம் இங்கே தான் தனது மார்க்சிய ஆய்வைப் பிரதானப்படுத்தி, மார்க்சியத்தின் அடிப்படை-இயக்க இயலே ஆகும், இயக்க இயல் பொருள் முதல் வாதம் என்பது ஓர் இடைநிலைக் கோட்பாடாகும் என்று உறுதியாக வலியுறுத்தி வந்துள்ளது. இயக்க இயல் பொருள் முதல் வாதம் என்று ஓர் எதிர்நிலைக் கோட்பாடாகும் என்றும், அதுவே கம்யூனிச அமைப்பிற்கும் பொருந்தும் என்பது சரியாகாது என்று உறுதிப்படுத்தியது. இப்படிப்பட்டதோர் புரட்சிகர மார்க்சியக் கோட்பாட்டை வலியுறுத்தி இன்று வரை கடுமையாக செயல்பட்டுவரும் மா. சி. கூடம் சில சமயங்களில் கடுமையாகவும் தாக்கப்பட்டது இருப்பினும் தோழர் உலகியானின் பொறுமையும், நமது சித்தாந்தத் தெளிவுமே எங்களை நிலை நிறுத்தியது. காஞ்சிபுரத்தில் இரண்டு இடங்களில் கிளை அமைப்புகளை உருவாக்கி மேலும் சிறப்பாக அனைத்து கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிய தோழர்களின் ஆதரவோடும் ஒத்துழைப்போடும் மா.சி. கூடம் வளர்ந்து வருகிறது.

அடுத்த செயற்பாடாக, தேசிய, சர்வ தேசிய ரீதியாக நமது கம்யூனிச அமைப்புக்கள் உருவாக்கம், செயற்பாடு மற்றும் அவற்றின் பலம் எவ்வாறு உள்ளது என்பதை ஆய்வு செய்து, அதன் முடிவாக அனைத்துக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களையும் கலந்து முடிவெடுத்து ஓர் மார்க்சிய நடைமுறையை செயல்பாட்டுக்கு கொண்டுவர முயற்சி செய்து, 1992-ஆம் ஆண்டு விமர்சன - சுயவிமர்சன நூலை வெளியிட்டோம். இந்நூலின் சாராம்சத்தை மிகச் சுருக்கமாகத் தருகிறோம்.

தேசிய, சர்வ தேசிய ரீதியாக இன்று இருந்து வருகின்ற மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்ட, எந்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சியோ, சோசலிஸ்ட் கட்சியோ, வேறு பெயர் கொண்ட எந்த ஓர் அமைப்பானாலும் சரி, மார்க்சியத்தைப் பொறுத்தமட்டில் அவர்களின் விமர்சன-சுயவிமர்சனப்பார்வை என்பது அவர்கள் கட்டுண்டிருக்கிற-கட்டிய அமைப்புகளின் நீரோட்டத்தில் இருந்து கொண்டே செய்யப்படுகின்றது. இந்நிலை கட்டிய அமைப்பின் கட்டுண்டிருக்கிற மேலாதிக்கநிலையையே உறுதி செய்கின்ற அகவயப்பட்ட-புறவயப்பட்ட சிந்தனைப் போக்கையே நிலைப்படுத்துவதாக அமையும். இது அகல்விரிவான மார்க்சியப் பார்வையை விஞ்ஞானப் பூர்வமாக உட்கிரகித்தற்கு சாலப் பொருத்தமுடையதாக அமையாது என்பதைத் தெளிவாக்கி உள்ளோம்.

இதையடுத்து, மா. சி. கூடம் தனது ஆய்வை ஆழப்படுத்தி மேலே செல்லும்போது, பாட்டாளிவர்க்கத்திற்குத் தேவையான அடிப்படைக்குணாம்சங்கள் என்ன, அவ்வர்க்கம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய கடமைகள் என்ன, பாட்டாளி வர்க்க இயக்கங்கள் வலுப்பெற அது தனது வர்க்க குணாம்சத்தை முழுமையாகப் பெற்றுத் தனது எதிரி வர்க்கத்தை, முதலாளித்துவ வர்க்கத்தை எவ்வாறு அடியோடு வீழ்த்துவது, அதற்கான அடிப்படை ஆயுதம், போராட்டமுறை, கையாள வேண்டிய கருத்துக்கள் குறித்த மார்க்சியப் பார்வையை ஆராய்ந்து மார்க்ஸ் வாழ்ந்த காலத்திலேயே அவரே பாட்டாளி வர்க்கத்திற்கு நேரிடையாக அளித்த கருத்துக்களைத்தொகுத்து 1993-இல் நூல் வடிவாகக் கொண்டு வந்துள்ளோம். இந்த நூலில் மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் அவரால் போதிக்கப்பட்ட பாட்டாளி வர்க்க விடுதலைக்கான அடிப்படைக் கோட்பாடுகள் பிறகு ஏன் கைவிடப்பட்டன என்பதைத்தெளிவு படுத்தி உள்ளோம்.

(113-ஆம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்-ஒரு மதிப்பீடு

குமரிமைந்தன்

அண்மையில் வாழ்வு நிறைவினை எய்திய பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழக உணர்வுடைய நெஞ்சங்களில் எவ்வளவு இடம் பிடித்திருந்தார்கள் என்பதற்கு அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பெருந்திரளும் ஆங்காங்கே தோழர்கள் ஒட்டிய இரங்கல் சுவரொட்டிகளும் கூட்டங்களும் சான்று கூறின. ஆனால் இவ்வளவு பெருந்திரளான ஆர்வலர்களை ஈர்த்து வைத்திருந்த பாவலரேறு அவர்களால் தன் வாழ்நாளில் தமிழார்வம் மிக்குடையவர்களைத் தவிர்த்த பிறரிடையில் ஓர் அறிமுகம் என்ற அளவில் கூடப் பரவலாக அறியப் படாமல் போனது ஒரு பெரும் கேள்வியாக நிற்கிறது.

மக்களிடையில் இயக்கங்கள் முகிழ்த்தெழுவதற்கு அவற்றைத் தொடங்குவோரின் தனித்த பொருளியல், வாழ்வியல் நோக்கங்கள் காரணமாயிருப்பதில்லை. அவர்களால் உயர்ந்தவையாய் புரிந்து கொள்ளப்படும் நோக்கங்களிலிருந்தே அவை தோற்றம் பெறுகின்றன.

அந்த வகையில் பாவலரேறுவின் பொது வாழ்வின் தொடக்கம் தமிழ் மொழித் தூய்மை குறித்ததாகும். அதனாலேயே அவர் பாவாணரைத் தன் ஆசானாக ஏற்றுக் கொண்டார்.

தமிழ் மொழியின் உரிமை இந்தி ஆட்சி மொழிச் சட்டத்தால் அச்சத்துக்குள்ளான போது தன் எதிர்கால வாழ்வைப் பற்றிய சிந்தனையையே உதறி எறிந்து விட்டு மொழிப் போராட்டத்தினுள் நுழைந்தார்.

சமற்கிருத மொழிக்கலப்பு மட்டுமல்ல ஆங்கிலம் உட்பட அனைத்து மொழிக் கலப்புகளிலுமிருந்து தமிழை மீட்கும் போர்ப்படையாகத் 'தென்மொழி'யை வளர்த்தார். அந்தத் தொடக்க காலத்தில் 'தென்மொழி' மூலம் தமிழகத்திலுள்ள பல்துறை அறிஞர்களின் ஆற்றல் வெளிப்பட்டது. அவர்களின் படைப்புகள் தனித்தமிழின் பன்முனை ஆற்றலைத் தமிழார்வலர்களிடம் விளங்க வைத்தன. தனித்தமிழின் மீது அவை பெரும் தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தின. 'தென்மொழி' மூலம் வெளிப்பட்ட பாவாணரின் சொல்லாய்வு உத்திகள் பலரிடம் புதிய சொல்லாக்கத் திறனைப் படைத்தன. அந்தக் காலத்தில் 'தென்மொழி' வெளிப்படுத்திய அந்த ஆற்றல் அளப்பரியது.

தமிழ் மொழி மீட்சி என்ற நோக்கத்தினடியாகப் பிறந்ததுவே தமிழக விடுதலை என்ற பாவலரேறு அவர்களின் குறிக்கோள் ஆகும். அப்போது அவருடனிருந்த எண்ணற்ற இளைஞர்களின் கனவாகவும் அது உருப்பெற்றிருந்தது. ஆனால் மக்கள் விடுதலை என்பது எவ்வளவு கடுமையான பணி, அதற்கு எத்தகைய பின்பலம் உருவாக்கப்பட வேண்டும், மக்கள் மனத்தில் ஆர்வத்தை எழுப்புவதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்ற சிந்தனையை விட கட்டுப்படுத்த முடியா தன் ஆர்வத்தையே வலிமையாக்கி 1972இல் மதுரையில் தமிழக விடுதலை மாநாடு நடத்தித் தளைப்பட்டார். மாநாட்டின் விளைவாக அவருடனிருந்த இளைஞர்களில் பலர் அகன்றனர்.

பாவலரேறுவின் அணியில் முற்றிலும் தனித்தமிழ் ஆர்வம், தமிழக விடுதலை வேட்கை ஆகியவற்றை மட்டுமே உள்ளுணர்வாகக் கொண்டோர் மட்டும் திரளவில்லை.



படிப்பகம்

கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களுக்கு அன்று இருந்த இரண்டாம் தர நிலையாலும் தங்களுக்கு வேலைவாய்ப்பற்றிருப்பதாலும் வெறுப்புற்றிருந்த தமிழ் இலக்கியம்-முதுகலை பயின்ற இளைஞர்கள் எண்ணற்றோர் இணைந்தனர். இந்த நிலையில் கல்லூரித் தமிழாசிரியர்கள் பிறதுறை ஆசிரியர்களைப் போலவே முதல்வராவதற்குச் சமத் தகுதியுள்ளவர்களாக்கப்பட்டனர். ம. கோ. இரா. ஆட்சிக் காலத்தில் பல புதிய பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டன. தமிழ் வளர்ச்சி, தமிழாய்வு என்ற பெயர்களில் நிறுவனங்களும் உருவாயின. இவற்றால் ஏற்பட்ட எண்ணற்ற பணியிடங்களில் வேலையற்றிருந்த தமிழ் இலக்கிய முதுகலைப் படிப்பாளிகளுக்கு வேலை கிடைத்தது. இயல்பாகவே இவர்கள் இயக்கத்திலிருந்து விலகி விட்டனர். தனித் தமிழ் இயக்கம் மொழியைப் பொறுத்தவரை ஆட்சியாளர்களைக் குறை கூறும் ஓர் அரசியல் இயக்கத்தின் தன்மையைப் பெற்றிருந்ததால் சிலர் தனித்தமிழ் இயக்கத்தோடு தமக்கு உடன்பாடில்லை என்று காட்டுவதற்காகத் தனித் தமிழுக்கு எதிரான நிலையைக் கூட எடுத்தனர். இது பாவலரேறு அவர்கள் மனத்தைப் புண்படுத்தியது. எனவே ''பணம் படைத்தவர் நலனையே நாடுவதாக என் கடந்த கால நடவடிக்கைகள் அமைந்து விட்டன. இனி ஏழை மக்களின் நலன் பற்றிச் சிந்திக்கப் போகிறேன்'' என்று ஒரு கட்டத்தில் கூறினார். இந்தக் கட்டத்துக்குப்பின் அவர்கள் பொதுமை என்ற நோக்கத்தை முன் வைத்தார். பொதுமைக் கோட்பாடுகளைக் ''கரைத்துக் குடித்தவர்கள்'' கூட திசை தெரியாது மயங்கிச் சோர்ந்து நிற்கும் இன்றைய நிலையில் பாவலரேறு அவர்களால் இந்தத் திசையிலும் எந்தத் தடத்தையும் பதிக்க முடியவில்லை.

இன்னொரு பக்கம் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி மீது பாவலரேறு வைத்திருந்த அளவிலாப் பற்று தம்மை பின்தொடர்ந்தோரை மனம் வருந்த வைத்தது.

பெரியார், அண்ணாத்துரை, கருணாநிதி ஆகிய தலைவர்கள் அனைவருமே தமிழுக்கும் தமிழகத்துக்கும் அதன் மக்களுக்கும் இரண்டகம் செய்து விட்டனர்; எனவே புது இயக்கம் அமைத்துப் புதுப் பாதை காண்போம் என்று புறப்பட்டவர் அவர். அப்படியாயின் ஏன் மீண்டும் மீண்டும் கருணாநிதியின் பின் நின்று கொள்கிறார் என்ற கேள்விக்கு இறுதி வரையிலும் யாராலும் விடை காண முடியவில்லை.

பெருஞ்சித்திரனாரின் பின் அணிவகுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் இறை மறுப்பாளர்கள். பெருஞ்சித்திரனாரோ அவருக்கே உரித்தான ஒரிறைக் கொள்கை ஒன்றை வைத்திருந்தார். இந்த முரண்பாட்டைக் கூடப் பெரிதாக எண்ணாமல் தமிழ், தமிழகம், தமிழக மக்களின் நலன் என்ற குறிக்கோளில் அவரது வழிகாட்டலை எதிர்நோக்கியிருந்தவர்களுக்கு இந்த முரண்பாடு தாங்கிக் கொள்ளத்தக்கதாயில்லை. அதுவும் கருணாநிதி-ம.கோ.இரா. பிரிவின் போது பலர் மனங்கசந்தனர். இதனால் பலருக்குப் பாவலரேறு அவர்களின் நேர்மை, நாணயம் ஆகியவற்றின் மீதே கூட ஐயுறவு ஏற்பட்டு விட்டது. ஆனால் தன் இறுதிக் காலம் வரை எவரது துணையையும் நாடாது தனித்து நின்றே போராடித் தன் வாழ்நாளையே தேய்த்துக் காட்டி அனைத்து ஐயப்பாடுகளினின்றும் நீங்கிப் பெருமை பெற்று விட்டார்.

மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் தன் உயிர் மூச்சாகக் கருதிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி உருவாக வேண்டுமென்ற தணியாத வேட்கையில் 'தென்மொழி' வாயிலாகப் பாவலரேறு அவர்கள் மேற்கொண்ட அரிய முயற்சியின் பக்க விளைவே அரசு அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால் பாவாணர் இறைவன் தன்னை இப்பணிக்காகவே படைத்துள்ளதாகவும் எனவே அப்பணி முடியாமல் தன்னைச் சாக விடமாட்டான் என்ற தவறான நம்பிக்கையாலும் தன் குடும்பத்தாரின் நெருக்குதல்களை நிறைவேற்ற வேண்டியும் அகரமுதலிப் பணியில் சுணக்கம் காட்டிய போது பாவலரேறு தன் அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசானைக் கடிந்து கொள்ளத் தவறவில்லை. ஆனால் அவரது சொல்லாய்வு நெறிகளிலிருந்து தான் மாறுபடுவதாகத் தெரிவித்த கருத்துகள் அத்துறையில் அவரது ஆழமின்மையையே காட்டின. இருப்

www.padippakam.com

பினும் குறிக்கோளில் அவருக்கிருந்த இறுக்கமான பிடிப்புக்கு அது ஒரு சான்றாக அமைந்தது.

இப்போது 'தென்மொழி' அரசியல், குமுகியல் மட்டுமே கூறும் இதழாகத் தன் முகப்பை சுருக்கிக் கொண்டது. அத்துடன் தேசியம் என்பதன் நிலம் சார்ந்த இயல்பைப் புரிந்து கொள்ளாமல் தமிழ் பேசும் உலக மக்களனைவரையும் ஒரு தேசியமென்று கருதி உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் அமைத்து அதன் கொள்கைகளைப் பரப்பவும் அமைப்புக்கு உதவவும் தமிழ் நிலம் இதழைத் தொடங்கினார். தமிழ் நிலம் என்ற சொல் தமிழகத்தைத்தான் குறிப்பதாகக் கொண்டிருந்தாரா என்பது, தெரியவில்லை.

தேசியம் பற்றிய வரையறையில் தெளிவின்றியிருந்தார் என்பதை ஒரு குறையாகக் கூறமுடியாது; ஏனென்றால் அதற்குரிய வரையறையை இன்னும் மிகப் பெரும்பாலோரால் வகுத்துக் கொள்ள முடியவில்லை.

தமிழகத்தில் தேசியச் சிக்கல் ஆழப்புரையோடிப் போயுள்ளது. தேசிய ஒடுக்குமுறையின் உள்ளடக்கமான பொருளியல் ஒடுக்குமுறை மிக மறைமுகமாகவும் மென்மையாகவும் மயங்க வைக்கும் முழக்கங்களின் பின்னணியிலும் நடைபெறுவதால் அதனை வெளிப்படையாகப் புரிந்து கொண்டு எதிர்ப்புக்கோட்பாடு ஒன்றை வகுக்க எவராலும் இயலவில்லையாயினும் இந்தத் தேசிய ஒடுக்குமுறைச் சூழலை இங்குள்ள மக்கள் தன்னுணர்வின்றியே புரிந்து கொண்டுள்ளனர். எனவே பழையவர்கள் விலகினாலும் மீண்டும்மீண்டும் புதியவர்கள் 'தென்மொழி'யை மொய்த்தார்கள்.

இப்படிப்பட்ட குழப்பமான நிலையில் பொதுமை இயக்கத்தினர், அதிலும் மூன்றாம் அணி என அறியப்படும் மா.இ.லெ. குழுவினர் தங்களுக்கு இளைஞர்களைப் பிடிப்பதற்குத் திராவிடர் கழகத்துடன் 'தென்மொழி' இயக்கத்தையும் ஒரு மூலவளமாகக் கொண்டனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட தமிழுணர்வும், தமிழக விடுதலை வேட்கையும், தமிழகக் குமுக மாற்ற நாட்டமும் கொண்ட இளைஞர்கள் மா.இ.லெ. இயக்கங்களின் தலைவர்களின் வழிகாட்டலால் எந்தவித மக்கள் பின்னணியும் பாதுகாப்பும் பெறாத நிலையில் நடுத்தெருவில் கொண்டு விடப்பட்டு அவர்களில் கணிசமான தொகையினர் காவல்துறையினரால் நாய்களைப் போல் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களைப்போல் பல மடங்கு எண்ணிக்கையினர் செயலிழந்து போயினர். எனவே இந்த நிகழ்ச்சியை எம்போன்றோரால் தவறானவழிகாட்டல்என்று ஒதுக்கித் தள்ள முடியவில்லை. திட்டமிட்ட அழிம்பு வேலை என்றே ஐயுற வேண்டியுள்ளது. அது மட்டுமல்ல இந்த அழிம்பு வேலைக்கு இரையான இளைஞர்களில் கிட்டத்தட்ட அனைவருமே பிற்படுத்தப்பட்டோரும் தாழ்த்தப் பட்டோருமே என்பது இதிலுள்ள கொடிய உண்மை.

இந்நிகழ்ச்சிக்குப் பின் தமிழகத் தேசியப் போராட்டத்தை ஏற்றுகொண்ட பின்னும் மக்களைத் தங்கள் பால் ஈர்க்காதது மட்டுமல்ல அயற்படவும் வைக்கும் பழைய ஆசான்கள் வகுத்துத் தந்த கோட்பாடுகளையும் செயல்-திட்டங்களையும் நடைமுறைகளையுமே பின்பற்றியதால் தமிழரசன் போன்ற விறுமிக்க போராளிகளும் முன்னவர்களின் துயர முடிவையே எய்தினர்.

இன்று மார்க்சிய இலெனினியக் குழுக்களிலிருந்து தமிழகத் தேசிய, சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்புக் குரல்கள் எழுவதற்கு, தங்கள் போலி மார்க்சியத் தலைவர்களை உதறிவிட்டு வெளிவந்த முன்னாள் 'தென்மொழி'க் குழுவினர் தான் காரணம். இருப்பினும் கோட்பாட்டளவில் தமிழகத் தேசியப் போராட்டத்துக்கும் தமிழகத்தில் நிலவும் சாதிய ஒடுக்குமுறை ஒழிப்புக்கும் இடையிலுள்ள இயங்கியல் உறவைப் புரிந்து கொள்ளாமல் இரண்டையுமே வெற்று முழக்கங்களாகவே இவர்கள் இன்று வரை வைத்துள்ளனர்.

இவ்வாறு பாவலரேறு அவர்களை நாடிச் சென்ற உள்ளங்கள் எண்ணிலடங்கா. அவர்களைச் சிதறாமல் வைத்துத் தமிழகத் தேசியத்துக்கேற்ற ஒரு செயற்திட்டத்தை வகுத்துச் செயலாற்ற முடிந்திருக்குமாயின் அவரது குறிக்கோள்கள் இதற்குள் நிறைவேறியிருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

என்று கூற முடியாது; ஏனென்றால் இந்தக் குறிக்கோளை அடைய நாம் எதிர்கொள்ள வேண்டிய தடைகள் மிகக் கடுமையும் கொடுமையும் வாய்ந்தவை; போராட்டமும் நீண்ட நெடியதாயிருக்கும். ஆனால் அந்தப் பாதையில் குறிப்பிட்ட அளவு முன்னேறியிருக்க முடியும்.

ஆனால் காலம் அவ்வாறு அமையவில்லை. பாவலரேறு அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள அலையெனத் திரண்டிருந்த உள்ளங்கள் தங்கள் கனவுகளும், குறிக்கோள்களும் திசையறியாமல், நடுக்கடலில் நிற்பதைக் கண்டு கலங்கியவையே. அக்கனவுகளுக்கு வேறெந்த பற்றுக்கோடும் இல்லாத நிலையில் அக்கனவுகளுக்கும் குறிக்கோள்களுக்கும் ஒரே அடையாளமாக விளங்கிய ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் திருவுருவை இறுதியாகக் காண்பதன் மூலம் தங்கள் கனவுகளையும் குறிக்கோள்களையும் மீண்டும் வலிமையேற்ற வந்து மொய்த்தவையே.

தமிழகத் தேசிய ஒடுக்குமுறை ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் 1800 ஆண்டுகள் பழமையானது. அத்தேசிய உணர்ச்சியையும் எழுச்சியையும் வெளிவிசைகளும் உள்விசைகளும் திசை திருப்பி மக்களை ஒருவரோடொருவர் மோதவிட்டுச் சிதைத்து வைத்திருக்கின்றன. அதே விசைகளும் மேலும் மேலும் புதிதான விசைகளும் அதே வகையான குழப்பங்களைப் புகுத்தி வருகின்றன. தேசியத்தின் மீது உண்மையான பரிவும் பற்றும் உள்ள சிலரும் தம் அறியாமையாலும் திசைமாறிய உணர்ச்சிக் கொந்தளிப்புகளாலும் கூடத் தங்களை அறியாமலே, தங்களுக்கு இயல்பான தெளிவையும் மீறி இக்குழப்பமூட்டும் பணிகளைச் செய்து வருகின்றனர்.

ஆனால் தமிழகம் என்றுமே தோற்றதில்லை. கடந்த 1800 ஆண்டுகளாக அது தன் அடையாளத்தையும் தேசிய ஒர்மையையும் கட்டிக் காத்து வந்துள்ளது. ஆனால் இன்று போல் அது தன் தேசியக் குறிக்கோளை ஐயந்திரிபின்றி வெளிப்படையாக அடையாளங் கண்டதில்லை. எனவே அத்தேசியக் குறிக்கோளை, அதற்கு உரிய

'தமிழகத் தேசிய ஒடுக்குமுறை ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் 1800 ஆண்டுகள் பழமையானது.... .ஆனால் தமிழகம் என்றுமே தோற்றதில்லை. கடந்த 1800 ஆண்டுகளாக அது தன் அடையாளத்தையும் தேசிய ஒர்மையையும் கட்டிக் காத்து வந்துள்ளது.'

கோட்பாட்டை வகுத்தும் அதனடிப்படையில் செயல்திட்டம் ஒன்றை வரையறுத்தும் அவற்றினடிப்படையில் இயக்கமொன்றைக் கட்டியும் எய்தும் நாள் தொலைவிலில்லை.

அவ்வாறு தமிழகம் தன் தேசியக் குறிக்கோளை நோக்கி நடைபோடும் போதும் அதை எய்திய பின்னரும் அத்தேசியக் குறிக்கோளுக்காகப் பாடுபட்ட நேர்மையான தலைவர்களில் காலவரிசையில் முதலாவதாக ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனாரே நிற்பார்.

தமிழகத் தேசியம் என்ற ஒன்றுக்காகப் பாடுபடுவதாகத் திராவிட இயக்கத்தை இத்தமிழக மக்கள் நம்பினார்கள். ஆனால் அவ்வியக்கம் தங்கள் தன்னலத்திற்காகப் பொய் பேசி இம்மக்களை ஏமாற்றிவிட்டது என்று இன்று அனைவருக்கும் புரிகிறது. அவ்வியக்கம் வீசியெறிந்துவிட்ட தமிழகத் தேசியக் குறிக்கோளைப் பொன்னே போல் போற்றி எண்ணற்ற இளைய தலைமுறையினரின் உள்ளங்களின் மீது அழுத்தமாக அமர்த்தி வைத்துவிட்ட பாவலரேறு அவர்களின் மிகப்பெரும் பணி காலத்தால் அழியாதது. அதற்காக அவர் தன் உயிரையே தேய்த்துக் கொண்டார். அத்தகைய அரிய அந்தத் தமிழகத் தேசியத்தை அதன் திசையறிந்து, இலக்கு நோக்கி எடுத்துச் செல்வோம். ●



படிப்பகம்

www.padippakam.com

# கொங்கு வேளாளர்கள் குடியேறியவர்களா?

முனைவர் கா. அரங்கசாமி

*முன்னுரை:* கொங்கு நாட்டு வரலாறு ஆய்வு நோக்குடன் முழுமையாக எழுதப் பெறவில்லை என்பது உண்மையே. "கொங்கு வேளாளர் மண்ணின் மக்களா?" என்பதும் சிலர் உள்ளத்தில் வினா வாகவே உள்ளது. ஆனால், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள், கண்டெடுக்கப்பட்ட புதிய கல்வெட்டுச் சான்றுகள், பதிவு செய்யப் பெற்ற பழம் பாடல்கள், மானுடவியல் நாட்டுப்புறவியல் கூறுகள், மரபியல்-சடங்கியல் அடிப்படைகள் நமக்குப் பல புதிய உண்மைகளை உணர்த்துகின்றன. இவ்வாறு கிடைத்துள்ள புதிய சான்றுகளின் அடிப்படையில் கொங்கு வேளாளர்கள் வரலாற்றுக்காலம் முதல் இம் மண்ணின் மக்களாக உள்ளனர் என்னும் கருத்து வலிமை பெறுவதை இக்கட்டுரை சுருக்கமாக கூறுகிறது.

## கொங்கு-பெயரும் பரப்பும்:

கொங்கு என்பதற்குப் பூந்தாது-மணம்-தேன்—பொன்—ஊர்—இனக்குழு—எனப் பல் வகைப்பட்ட பொருள் விளக்கங்களைக் கூறுவர். சங்க இலக்கியம் மற்றும் மானுடவியல் அடிப்படையில் பார்க்கும்போது ''கொங்கர்'' என்னும் சொல்லடியாகப் பிறந்த இனவழிச் சொல்லே ''கொங்கு'' என்பதை அறியலாம். (மேலும் விளக்கம் வேண்டின் ஆசிரியரின் பூந்துறை நாட்டுக்காட உட்பட வேளாளர் வரலாறு ப : 2, 3 பார்க்க)

இன்றைய கோவை, பெரியார், தீரன் சின்னமலை, திண்டுக்கல், சேலம், தருமபுரி, நீலமலை மாவட்டங்களுடன், மங்களூர், மைசூர், கோலார்ப்பகுதிகளும் கொங்கின் பரப்பில் அடங்கியிருந்தன. பழங்காலத்தில் கங்க நாடு, கொங்கின் ஒரு பகுதியே. அவ்வாறே நன்னன் நாடு, பூழி நாடு, கோசர் நாடு, கௌன்கானம் நாடு, சீதநாடு, எருமைநாடு போன்ற பகுதிகளும் கொங்கில் இணைந்திருந்தன. இவ்வாறு பல நாடுகளைக் கொண்டிருந்த காரணத்தாலேயே கொங்கு, கீழ்கொங்கு, மீ கொங்கு (மேல்கொங்கு) தென்கொங்கு, வட கொங்கு என்று அரசியல் ஆட்சிக்காகப் பிரிந்திருந்தது. இவ்வாறு சோழ பாண்டிய நாடுகள் பிரிக்கப்படவில்லை என்பதையும் இங்கு எண்ணிப் பார்த்திடல் வேண்டும். மூவேந்தரும், இரட்டரும், கங்கரும், வடவரும் கொங்கு நாட்டிற்காகத் தொடர்ந்து போரிட்டனர். காரணம், தென் இந்தியாவின் வணிகமையம் மட்டுமல்லாது ''மான்படுகாடு, தேன்படுவரை, மீன்படுசுனை, பொன்படுகுட்டம்'' என்னும் இயற்கைச் செல்வங்கள், அரிய மணிகள், தாதுக்கள் நிறைந்தது கொங்கு. எனவே வணிகவளமும், கான்வளமும், நிலவளமும், வேளாண் வளமும் ஒருங்கமைந்தமையால் இம் மண்ணின் ஆதிக்கத்துக்காகப் பலரும் தொடர்ந்து போரிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

## சங்ககாலம்-கொங்கு வேளாளர் பெயர்கள் :

அதியன் - ஓரி - ஆய்-குமணன்-கட்டி-நன்னன் - பழையன் - விச்சிக்கோ-ஈந்தூர்கிழான்-பூந்துறை-அத்தி-கொடுமுடி-மழவன் - கொண்கானங்கிழான், கோசர் போன்ற வேளிர்கள் ஆங்காங்கே சிறுசிறு தன்னுரிமைமிக்க-மக்களின் நேரடிக் குடியாட்சி கொண்ட-இசைக்குழு ஆட்சியை நடத்தி வந்தனர். மேற்காட்டிய வேளிர் தம் வழிவந்தவர்களே கொங்கு வேளாளர்கள் என்பதைத் தொடர்ந்து வரும் சான்றுகள் மெய்ப்பிக்கும். (எ.கா—காட்டி மரபினர் தாரமங்கலத்தில் விசயநகர ஆட்சியிலும் சிறந்து விளங்கினர்) மற்றும் ஆனை மலையில் உள்ள நன்னன் ஊர், பூந்துறை நாட்டுப் பூந்துறை, ஈங்கூர், கொடுமுடி போன்ற இனக் குழுத் தலைவர்களின் பெயர்களைக் கொண்டமைந்த ஊர்களும், பூவாணிய நாட்டு (வடகரை) அந்தியூரும், காங்கய நாட்டுப் பழையன் கோட்டையும், அதியனின் அதியமான் கோட்டையும் (அதமன் கோட்டை) இவர்களின் ஈராயிரம் ஆண்டின் வரலாற்றுப் புகழைச் சுமந்து கொண்டுள்ளன. கொங்கு வேளாளரின் கூட்டப் பெயர்களில் 24 பெயர்கள் சங்கச் சான்றோர் பெயர்கள் என்பதைப் புலவர் குழந்தையவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார் (கொங்குநாடு பக்: 74, 75).

## கொங்கு வேளாளர்கள் குடியேறியவர்கள் என்பவர்கள் கூறும் செய்திகள் :

1. கொங்கு வேளாளர் தோற்றம்-மரபாளன் பற்றிய புராணக்கதை மற்றும் அகத்தியர் வேளாளரை அழைத்து வந்த புராணக் கதை.

2. சோழன் சேரனுக்குத் தன் மகளை மணம் முடித்தபோது சீதனமாக 8000 வேளாளர்களைத் தந்ததாகக் கூறும் கதை.

3. கி.பி. 885இல் ஆதொண்டைச் சக்கரவர்த்தியை எதிர்த்து 4800 வேளாளக் குடும்பங்கள் சோழ நாட்டிலிருந்து கொங்கில் குடியேறியதாகக் கி.பி. 1803 இல் எழுதப்பட்ட கதை.

4. முனைவர். செ. இராசு அவர்கள் (கொங்கு-மார்ச்சு-1973) கொங்கு வேளாளர்கள் குடியேறிகள் என்பதற்குக் கீழ்க்காணும் காரணங்களைக் காட்டுவார்.

1. வேட்டுவர் படைத் தலைவனுக்குக் கொங்குராயன் என்ற பட்டம்.

2. கொங்கு தேச ராசாக்கள், சோழன் பூர்வபட்டயம் இரண்டும் (மிகப் பிற்காலத்த கதைகள்) கொங்கு வேளாளர்களைக் குடியேறிகளாகக் காட்டும்.

3. வேளாளர் மங்கள வாழ்த்தில் (இது தம் மிகப் பிற்பட்ட காலத்தில் அதாவது ராயர் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டது) கங்காகுலம் என்று குறிப்பிடுவது.

5. தொண்டைநாடு 24 கோட்டமாகப் பிரிக்கப்பட்டது போலக் கொங்கும் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

மேற்காட்டிய சான்றுகள் யாவும்வரலாற்று ஆய்வுப் பார்வையில் பிழைபட்டவை என்பதைப் பின்வரும் காரணிகளால் அறியலாம்.

1. பாளையப்பட்டு வம்சாவளியில் வேட்டுவப்பட்டக்காரர் தங்களைக் காளகத்தியில் இருந்து வந்தவர்கள் என்றும் கண்ணப்ப நாயனார் வம்சம் என்றும் கூறுவதாலும் கல்வெட்டுகளில் பலவிடங்களில் வடுக வேட்டுவர் என்றே குறிப்பதாலும் அவர்கள் மட்டுமே இம் மண்ணுக்குரியவர்கள் அல்லர் என்பதை அறியலாம் (அவர்களில் சில பிரிவினர் இம்மண்ணின் மைந்தர்களாக இருக்கலாம்).

2. கொங்குராயன் என்னும் பட்டம் ''ராயர்'' ஆட்சி ஏற்பட்ட பின்னர் விசயநகர மன்னர்களால் தரப்பட்ட பட்டம்.

3. கொங்குதேச ராசாக்கள் கதையும், சோழன் பூர்வபட்டயமும் முரண்பாடுகளையும் புராணப்பார்வையும் கொண்ட கற்பனைக் களஞ்சியங்கள்; வரலாற்றுக்குரியவையல்ல.

4. கங்காகுலம் என்றால் நீரால்-உழவால் வாழ்வோர் என்றே பொருள்படும். கங்



படிப்பகம்

www.padippakam.com

க்கைக் கரையில் இருந்து வந்தவர் என்ற பொருளை என்றும் தராது.

5. கொங்கு நாடு என்றும் 24 நாடுகளாக இருந்ததில்லை. கல்வெட்டுக்களில் 32, 35, 42 நாடுகளாகவும், ''கொங்கு 56 தேசம்'' எனவும் குறிக்கப்படுவதால் ''கொங்கு 24'' என்பது ஒரு உபசார வழக்காக அமைந்து விட்டது என்பதை உணரலாம்.

6. கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கொடுமணல் (பதிற்றுப்பத்துக் குறிக்கும் அனைத்துலக வணிக நகரம்) அகழ்வாய்வில் கிடைத்துள்ள பெயர்கள் பல கொங்கு வேளாளர் கூட்டப் பெயர்கள்; எனவே கொங்கின் அறப் பழமையும் கொங்கு வேளாளரின் முது பழமையும் உணரப்படும்.

7. சென்னிமலைக்கு மேற்கே 11-வது கி மீட்டரில் நொய்யல் (காஞ்சி) ஆற்று வெள்ளத்தில் புதையுண்ட கொடுமலை நகர்ப்பகுதியில், நூலாடைகள், தானியங்கள், சுட்ட செங்கற்கள், தளங்கள், எஃகு தயாரிக்கும் ஆலை, தங்க நாணயங்கள், நகைகள், மணிகள், வண்ணக் கற்கள், (வடநாட்டுக்கற்கள்) இரும்பு ஆயுதங்கள், குதிரையின் அங்கவடி போன்ற எண்ணற்ற நாகரிகப் பொருட்கள் கிடைத்துள்ளன. வேளாண்மையே நாகரிகத்தின் செவிலித்தாய் என்பதை உலகம் அறியும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே கொடுமணல் வேளாண்மை சார்ந்த வணிக நாகரிக மையமாகத் திகழ்ந்து உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

8. கொங்கு வேளாளரில் காடகூட்டம் பல்கிப் பெருகி 17 பிரிவுகளாகப் பிரிந்த கூட்டம். இன்றும் ''காடர்'' என்னும் பூர்வ குடிகள் கொங்கு நாட்டு மலைகளில் வாழ்கின்றனர். மலைக்கவுண்டர் என்னும் மலைவாழ் மக்களும் பூர்வகுடிகளாக இங்கு வாழ்கின்றனர்.

7. கொங்கில் கோசன் (கோவன்) இருளன் போன்றவை பழங்குடி மக்களைக் குறிக்கும். கல்வெட்டில் ''வேளாளன் புல்லகளில் (பில்லகூட்டம்) கோவன் இருள(ட)னான இராசராச நாராயணக் காமுண்டன் (652/1922) குறிக்கப் படுகின்றான். இங்கு கோவன், இருளன் வெள்ளாளரின் பெயர்கள் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது.

8. மேற்காட்டிய கல்வெட்டுச் சான்றினைப் போல ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களில் வேளாளர்கள் ஆறு அல்லது ஐந்து அடுக்குப் பெயர் கொண்டிருந்தமை அறியப்படுகிறது. (வேளாளன்-இனப்பெயர்; புல்லன்-கூட்டப்பெயர்; கோவன்-தந்தை பெயர்; இருளன்-மகன்பெயர் (தனது பெயர்) இராசராச நாராயணன்-பதவிதந்த மன்னன் பெயர்; காமுண்டன்-அதிகாரப் பட்டப் பெயர்) இந்தியாவில் சிறப்பாகத் தமிழ் நாட்டிலேயே இவ்வாறு ஐந்து அல்லது ஆறு அடுக்குப்பெயர் கொண்ட இனம் வேறு எங்கும் இல்லை என்பதை அறியலாம்.

9. பேரூர் மடத்துச் செப்பேடு கொங்கு வேளாளரைச் ''சிறுகுடி வெள்ளாளர்'' என்கின்றது. ''சிறுகுடி'' குறிஞ்சிநிலத்து ஊர். எனவே குறிஞ்சியில் வாழ்ந்து மருதத்துக்கு வந்து வேளாண்மை செய்து வேளாளர் ஆயினர் என்பது உணரப்படும்.

10. ''படைத்தலை'' என்பது போலச் ''செந்தலை'' என்பதும் தொழில் அல்லது படையணி அடிப்படையில் வந்திருக்க வேண்டும். செந்தலையில் இருந்து வந்தவர்கள் என்பது பொருந்தாது.

11. இன்று கொங்கு வேளாளரில் 31 பிரிவுகள் உள்ளன. மூவாயிரம் ஆண்டுகளாகப் பல்வேறு அரசர்கள், பேரரசர்கள், வேளிர்கள் ஆட்சியில் பல்வேறு துறைகளில் தலைமையேற்று விளங்கிய வீரர்கள்-சான்றோர்களின் மரபில் வந்தமையால் இத்தனை பிரிவுகள் ஏற்பட்டன.

12. பாலை (பால) வேளாளர்கள்-பாலைக் காட்டு வேளாளர்கள் என்பதும் நாட்டுக் கவுண்டர்கள்-நாட்டுக்குரியவர்கள் என்பதும் உணரப்படும்.

13. அகநானூறு (86) கூறும் திருமணச் சடங்குகளை இன்றுவரை காத்துப் போற்றி



படிப்பகம்

www.padippakam.com

விருபவர் கொங்கு வேளாளர் (கட்டுக் களுத்தியர் (மக்கள்பெற்றவர்) நால்வர் சீர் தண்ணீர் கொண்டு வந்து நெல்லும் மலரும் தூவி மணமக்களை வாழ்த்துவது) தொண்டை நாடு, சோழநாடு போன்ற பிறவிடங்களில் இருந்து வந்து குடியேறி இருப்பின் அந்நாட்டு வேளாண் மக்களின் சடங்குகள் ஒன்றையாவது மேற்கொண்டும், காத்தும் பயன்படுத்தாமல் இருப்பார்களா? என்பதை ஆய்ந்து நோக்க வேண்டும்.

14. இவ்வாறு சமூகவியல்-சடங்கியல் அடிப்படையில் பிறநாட்டு வேளாளர்தம் சடங்குகளை ஒப்பாய்வு செய்ததில் கொங்கு வேளாளர்கள் தனித்த மாறுபட்ட சடங்குகள்-சீர்கள் கொண்டவர்கள் என்பதை ஆய்வு முடிவுகள் உறுதி செய்கின்றன.

பிறநாட்டு (தொண்டை நாடு,சோழநாடு, பாண்டிய நாடு) வேளாளரின் திருமணச் சடங்குகளில் கீழ்க்கண்டவை, கொங்கில் இல்லை என்பதை நாம் அறிதல் வேண்டும்.

1. முகூர்த்தப் பட்டோலை, 2. நாள்கால் 3. நான்செங்கல், 4. அரசமரத்துக் கிளையோடு பூவைச் சுற்றிக் கட்டல், 5. பஞ்சாங்கப் புரோகிதர், 6. ஓமம், 7. குலவையிடல், 8. அம்மி மிதித்து அருந்ததி காட்டல் 9. பட்டினப்பிரவேசம், 10. ஏழா நீர் கழிய எண்ணெய்ச் சடங்கு, 11. அவ்வையார் நோன்பு, 12. அத்தாளச் சாப்பாடு, 13. பூப்பந்து எறிதல், 14. தேங்காய் உருட்டல், 15. நலுங்கு, 16. ஒலுசை, 17. பலகாரப் பந்தி, 18. அம்மிக் குழவியைத் தாலாட்டல்.

கொங்கு வேளாளரின் 105 சடங்குகளில் மேற்காட்டியவை ஏதும் இல்லை என்பதை அறியும் போது (பூ.நா.கொ.வே. வரலாறு பக். 52, 92, 93) கொங்கு வேளாளரின் தனித்தன்மை புலப்படும்.

15. மற்றும், பிற நாட்டு வேளாளர்கட்குக் கூட்டப் பெயர்கள் இல்லை என்பதையும், சீர்க்காரிகள், அருமைக்காரர் என்பவர்கள் இல்லை என்பதையும் நோக்குதல் வேண்டும்.

## 16. பூந்துறைப் புராணம் கூறும் புதுமைச் செய்தி

புராணக் கருத்துக்களை முற்றிலும் வரலாற்று ஆதாரமாகக் கொள்ள இயலாது, அப்படிக்கொண்டால், மற்ற புராணம், பட்டயங்களுக்கு மாறுபட்டுப் பூந்துறை புராணம் (150 ஆண்டுகட்கு முன்னர் எழுத்துருப் பெற்றது) சேரமான் வரலாற்றுச் சருக்கத்தில், கொங்கு வேளாளர்கள் வறுமை காரணமாகக் கொங்கிலிருந்து தொண்டை நாடு சென்றதாகக் கூறுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் மன்னன் அழைக்க மீண்டும் கொங்குநாடு வந்ததாகக் கூறுவதையும் நாம் உடன்பட்டாக வேண்டும். ஆங்காங்கே, வறுமை, போர், அரசியல் சிக்கல், வணிகம், மேய்ச்சல் நிலம் காரணமாகச் சிற்சில குடியேற்றங்கள், புலம் பெயர்தல், குடிவருதல் போன்றவை நிகழ்ந்திருக்கலாம். எனவே நாட்டின் மக்கள் அனைவருமே-ஒரினமே குடியேறிகள் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் ஏதும் இல்லை என்பதை நாம் தெளிவாகக் காணலாம்.

*முடிவுரை:*

மேற்காட்டிய வரலாற்றுச் சான்றுகள், சமூகவியல், சடங்கியல், மரபியல் சான்றுகள் அடிப்படையில் கொங்கு வேளாளர்கள், தொண்டைநாட்டுச் சோழநாட்டுப் பாண்டிய நாட்டு வேளாளர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட, தனித்த வரலாறு கொண்டவர்கள், தனிச்சிறப்பு மிக்க சீர்கள், மரபுகள், சடங்குகள் கொண்டவர்கள் என்பதை நாம் அறியலாம். மூவாயிரம் ஆண்டுகளாகக் கொங்கு நாடு குடியாட்சியின் மாட்சியுடன் உலக வணிக மையமாகத் திகழ்ந்த பெருமையும்கொண்டது. வேளாண் நாகரிகமே நகர வணிக நாகரிகத்துக்கு அடித்தளம். அந்த அடித்தளமாகக் கொங்கு நாட்டில் அமைந்தவர்கள் கொங்கு வேளாளர்களே என்பதையும் அவர்கள் இம் மண்ணின் பழங்குடிகளே என்பதையும் நாம் அறியலாம்.

குறிப்பு : கட்டுரை ஆசிரியர், கோபி கலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவர். கல்வெட்டியலில் முனைவர் பட்டம் பெற்றவர் 'சித்தாந்தநன்மணி' என்ற விருது பெற்றவர்.



படிப்பகம்

www.padippakam.com

# புதுக்கவிதைகளில் சமுதாய மதிப்பீடுகள்

-கு. செலீன்மேரி

குறிப்பு: இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் காலமான- கொல்லப்பட்ட, கு. செலீன்மேரி அவர்களின் எம்.ஃபில் ஆய் விலிருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. 'பாரதி கண்ணம்மா' என்ற புனைபெயரில் இவர் கவிதை எழுதினார். மார்க்சியத்தை ஏற்றுக்கொண்ட இவர் சிறந்த சொற்பொழிவாள ராகவும் திகழ்ந்தார். திறனாய்விலும் இவர் தேர்ந்தவர் என்பதை இவரது ஆய்வு நமக்கு மெய்ப்பிக்கிறது. தமிழின் ஆக்கத்தில் அக்கறை உடைய ஒரு பதிப்பாளர் இவரது ஆய்வேட்டை வெளி யிடுவதன் மூலம், இவரை தமிழ் மக்களின் நெஞ்சில் நிறுத்தலாம். நிறுத்த வேண்டும்.

## அடிப்படைக் கொள்கைகள்

''ஒரே சமயத்தில் சமுதாயக் கண்ணோட் டமும், புத்திலக்கிய நோக்கும் கொண்டவொரு கவிதை இயக்கம் எங்களுடையது'' என்கிற வானம்பாடிகள், மாதந்தோறும் இலக்கிய ஆய்வுகள் நடத்தி சில அடிப்படைகளைத் தங் களின் இயக்க செம்மைக்கு உள்ளாக்கிக் கொண்டனர். உலகச் சூழலின் மாற்றங் களுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், தமிழ்நாட்டின் பண்பாடு, அரசியற் பொருளாதாரச் சிக்கல்கள் பற்றி இவ்வியக்கம் சரிவரத் தெரிந்து கொள்ள வேண் டும் என்றும், அதுவும் யுகத்தின் மீது சுவடுகள் பதிக்க விரும்பும் வானம்பாடிகள் இவற்றைத் தம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் பிறமொழி இலக்கிய அறிமுகம் நம்மை வளர்க் கும் என்கிற சிந்தனையும், தன்னைத்தான் சுயவிமர்சனம் செய்து கொள்ளாமல் வளர இயலாது என்பனவும் போன்ற அடிப்படை களின் மேல் வானம்பாடி இதழின் கட்டுமானங் கள் நடந்தன.

வானம்பாடிக் கவிஞர்கள் சம கால சமூக ஏற்றத்தாழ்வுகள், சீரழிவுகளைக் கண்டு, கோபம் கொண்டு அவற்றைப் பழித்தார்கள், சமுதாய சீரழிவான அமைப்பை மாற்ற விரும் பினார்கள். சுரண்டல் சமுதாயத்தைப் பாது காக்கிற தத்துவங்கள், கடவுள்கள், சாதி சமயங்கள் முதலியவற்றைக் கண்டித்தார்கள், விமர்சித்தார்கள். காந்தி, புத்தன், ஏசு போன்றோரைத் தம் கவிதைகளில் ஏற்றிக் காட்டி சிந்தனையை வளர்த்தார்கள்.

நீண்ட கவிதைகளை எழுதிக் கொண் டிருந்த வானம்பாடிகள் பின்னர், சிறுசிறு சிந்தனைகளையும், புதிர்களையும், புது விளக்கம் சொல்லும் சாமர்த்தியமான பிர யோகிப்பையும் கவிதையாக்கியுள்ளனர்.

சமுதாயப் பார்வையோடும், புதுமை யோடும், இன்னும் பற்பல நோக்குகளோடும் கவிதைகளை எழுதினர்.

1. ''புதுக்கவிதைக்கு பரவலான களம் ஏற்படுத்தியது.



படிப்பகம்

www.padippakam.com

2. புதுக்கவிதையின் பாடுபொருளை விரிவாக்கியதும், சமூகச் சார்பு தந்ததும்.

3. தமிழ் மண்ணிற்கேயுரிய, சித்தாந்த மரபு சார்ந்த மகிழ்நோக்கை (Optimism) இடதுசாரி கருத்துக்களுக்கேற்ப மாற்றித் தந்தது.

4. தமிழ் மரபு சார்ந்த ஜனநாயகத் தன்மை, கிராமியத்தன்மை, லோகாயதத் தன்மை, தமிழ் தேசிய எழுச்சி இவற்றிற்குச் சார்பாகக் கவிதையில் நின்றது.''

(வி. அரசு-வானம்பாடிகள்)

ஆகியவற்றைக் கூறலாம்.

இவர்களின் இத்தகைய கவிதைத் தன்மைக்காகவே இவர்களை ஒரு தனி இயக்கமாக ஏற்கமுடியும் என்கிற கருத்தும் நிலவி வலுப்பெற்றது.

வானம்பாடித் தன்மைகளின் ஒருபுறம் இவ்வாறெனில் இதன் மறுபுறம் கவலை தரக் கூடிய விதத்தில் பாதிக்கப்பட்டது.

வானம்பாடிகள் தங்களை, மானுடம் பேசுபவர்களாகக் கூறிக் கொண்டனர். வானம்பாடிகளை இயக்கமென்றது மிகைப்படுத்தப் பட்ட அடைமொழியாகும். இயக்கம் என்னு மளவிற்கு இக்குழுவினர் முழுமை பெறவில்லையென்றே கொள்ளலாம். வானம்பாடி தொடங்கப்பெற்ற மூன்றாவது ஆண்டிலேயே (1974) முரண்பாடு கொள்ள ஆரம்பித்தது. ஆனால், அரசியல் கட்சிகள் எதனுடனும் தொடர்பற்றதாகவும் தம்மைக் கட்சி சார்பற்ற தன்மையுடையதாகவும் காட்டிக்கொள்ள வானம்பாடி முற்பட்டது. ஆனால், தீவிரவாதக் குழுக்களுடனும், இயக்கங்களுடனும் தொடர்பு கொண்டவர்களும் வானம்பாடிகளில் இருந்தனர். இத்தகைய முரண்பாடுகளால் வானம்பாடி சரிவுக்குள்ளாகத் தொடங்கியது.

### 1.2.2.3.6. முரண்பாடுகள்

வானம்பாடி பல உள்முரண்பாட்டுத் தன்மை காரணமாகப் பாதிப்புக்குள்ளானது. பாரதிதாசன் வழிவந்த பிராமண எதிர்ப்பியக்கம் சார்ந்த தமிழ்ப்பண்பாட்டை முதன்மைப்படுத்தும் தமிழாசிரியர்கள் குழு ஒரு போக்கும், கவிதையில் மார்க்சியப் பார்வையை வலியுறுத்தும் இடதுசாரி சிந்தனையாளர்கள் குழு மற்றொரு போக்குமாக இருவித மனப்பான்மை கொண்டிருந்ததால் ஆரம்பமுதலே முரண்பாடுகள் இருந்து வந்துள்ளன.

பாரதிதாசனின் பரம்பரையான மரபுவழித் தமிழாசிரியர்கள், பழைய மரபு வடிவம் சலித்துப் போய் புதுக்கவிதைக்கு வந்தவர்கள். இவர்கள் பொதுவாக வலது சாரிக் குணம் கொண்டவர்கள் திராவிட மரபு சார்ந்த சாதி எதிர்ப்பு, தேய்ந்த நாத்திகம், தமிழ்ப் பற்று, பட்டிமன்ற, கவியரங்கப் பாணி, சொல்லலங்கார நேர்த்திகள் இவற்றையுடையோர்.

இடதுசாரிச் சார்புடையவர்களோ, கவிஞர்கள் என்பதைவிட முதன்மையாக சிந்தனையாளர்கள். இவர்களும், அதுவரையிருந்த பொதுவுடைமைசார் கவிதைகளின் போதாமையை உணர்ந்தே இவ்வியக்கத்தில் பங்கு கொண்டனர். இவ்விரு மரபிற்கு இடையிலான தத்துவப் போராட்டம்தான் 1975-ல் வானம்பாடிகளை விரிசலுக்குள்ளாகியது.

#### பாதிப்புக் காரணங்கள்:

வானம்பாடிகளால் விளைந்த எதிர்மறைத் தன்மைகளும், பாதிப்புக்களும் வானம்பாடி கண்ட முன்னேற்றங்களைவிட அதிகம். இவர்களின் குறைபாட்டிற்கும் இருபெருங் காரணங்கள் இருந்தன.

1. கவிதை நோக்கில் தெளிவின்மை
2. தத்துவ அடிப்படையின்மை

#### கவிதை நோக்கில் தெளிவின்மை:

கவிதைப் பாரம்பரியத்தின் பிற்போக்குத் தனங்களான வெறும் சொல் நேர்த்தி, சொல் ஜாலம், சுவைபடச் சொல்லல், நயம்பட உரைத்தல் என்கிற பெயரில் வெற்று உத்திச் சேர்க்கைகள், சொல்லலங்கார வார்த்தைகள், மேலும் கவிதைகளில் காணக்கிடக்கும் சர்வ கொள்கைச் சமரசம், கலாதரிசனமின்மை,



படிப்பகம்

www.padippakam.com

ஆகியவற்றை எவ்விதக் குற்றவுணர்வுமின்றி ஏற்றுக் கொண்டார்கள்.

தன்னம்பிக்கை, மகிழ் நோக்குகளையும் இவர்கள் சொல்லடுக்குகளாய் வெளிப்படுத்தக் கூடிய நிலையை,யதார்த்தங்களைத் தவிர்த்து தருகிற போக்கைக் கொண்டிருந்தனர்.

இன்ப நிறைவு தரும் கனவுப் பாணியைக் கவிதையில் கொண்டுவந்தது வானம்பாடிகளின் மிக மோசமான கொடை என்ற குற்றச் சாட்டுக்கும் வானம்பாடி ஆளானது. நா. காம ராசன், மீரா, மேத்தா, தமிழன்பன், சிற்பி முதலியோர் கனவு நிலைக் கவிதைகளை எழுதியுள்ளனர்.

## தத்துவச் சார்பின்மை:

கலை இலக்கியம் தன்னளவிலேயே விடுதலை உண்டாக்குவது, சமுதாய மாற்றத்தைச் சாதிப்பது என்ற மயக்க உணர்வை இவர்களுக்கு ஏற்படுத்தி கோஷங்களில் சரணடையச் செய்வதென்கிற நிலை, இவர்களின் தத்துவச் சார்பின்மையைக் காட்டுகிறது. நா. காமராசன் போன்றோரது கவிதைகள் இத்தகைய தன்மையினைப் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

''மனிதாபிமானம், சமுதாயப் பார்வை, தன்னம்பிக்கை, எதிர்காலக் கனவுகள் கொண்டு சிறகடித்த வானம்பாடி செய்திருப்பது சிறிதளவு சாதனையே''

(வல்லிக்கண்ணன்-புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்...)

என்னும் அதிருப்தியினை வல்லிக்கண்ணன் வெளிப்படுத்துகிறார். வானம்பாடியின் வரவு புதுக்கவிதைக்கு பொது மக்கள் செல்வாக்கை அளித்தபோதும், அதுவே பின் சீரழிவுப் பாதைக்கும் இட்டுச் சென்றிருக்கிறது என்பதும் மறுக்க முடியாததாகும்.

வானம்பாடியோடு, கசடதபற, தீபம், கணையாழி, சதங்கை, பிரக்ஞை, நீலக்குயில், மீட்சி போன்ற இதழ்கள் பெரிதும் புதுக் கவிதை வளர்ச்சியில் ஈடுபட்டன.

மூன்று பரம்பரைகள் என அழைக்கப்படும் மணிக்கொடி, எழுத்து, வானம்பாடி இதழ்களின் காலம், புதுக்கவிதையின் வளர்ச்சி நிலையினைக் காட்டுவதாக உள்ளது.

இலங்கையில் அமைதியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர்கள், அங்கு ஏற்பட்ட அரசியற் கலவரங்களால் தங்களின் இயல்பான வாழ்க்கை முறையிலிருந்து மாற வேண்டியதாயிற்று. வசதியாக இருந்தபோது இருந்த வாழ்க்கை மதிப்பீடு இப்போது அவர்களுக்கு இல்லை. ஏழ்மையைப் பழகிக் கொண்டார்கள். தனிக் குடும்ப வாழ்க்கையிலிருந்து கூட்டுக் குடும்ப வாழ்க்கைக்குத் தள்ளப்பட்ட இவர்கள், ஆடை ஆபரணங்கள், உணவுமுறை, பழக்க வழக்கங்கள் பற்றிய மதிப்பீடுகளை மாற்றிக் கொண்டார்கள்.

போராட்டத்திலிருந்த அவர்களது வாழ்க்கை பற்றிய மதிப்பீட்டு மாற்றத்தை ஒரு புதுக்கவிதை, சிறுவன் ஒருவனின் குரலாய்க் காட்டுகிறது.

அம்மா
எனக்கொரு
பட்டுச்சட்டை
வேண்டுமென வருந்துவதேன்.
............
ஒரு யந்திர பொம்மையை
அளிப்பதற்காக
பிரியப்படாதே
............
எனது பிறப்புக்கு
மலர்க்கொத்து எதற்கு?
............
இசைக்கருவியும்
வேண்டாம் அம்மா
.............
நேசமிகுந்த முத்தமும்
தந்தையின் துப்பாக்கியும்
தருவாயா?

(கே. உதயபராசு-தாய்நிலம் ப.1)

இலங்கையின் கலவரச் சூழலில் வாழும் ஒரு சிறுவனுக்குக்கூட அவனது வாழ்க்கை பற்றிய மதிப்பீடு மாறியிருக்கிறது. பட்டுச் சட்டையோ, யந்திர பொம்மையோ, மலர்க் கொத்தோ, இசைக் கருவியோ அவன் பிறந்த நாள் பரிசாக விரும்பவில்லை. மாறாக, அவனது புறச்சூழல் அவனுக்குத் துப்பாக்



படிப்பகம்

www.padippakam.com

கியைக் கேட்கும் அவசியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதேபோல,

பள்ளி நாட்களில்
துடிப்பும் சிரிப்பும் இறந்து
மனம் இறுகி
மண்டை ஓட்டுச் சிரிப்பை
உதிர்த்துக் கொள்கிறோம்
(கே. உதயாபராசு, தாய்நிலம் ப-1)

என்பதும், புறச்சூழலின் பாதிப்பால் எழுந்த மாற்றத்தினைக் குறிக்கிறது. சிக்கல் மட்டும் கூறுவதோடு இக்கவிதை நின்றுவிடுவதில்லை. அதனால், மனிதமனத்தின் மாறுபட்ட பாதிப்பையும் சுட்டி நிற்கிறது. கவிதை எழுதும் மனஉந்துதல், புறச்சூழலுடன் ஒன்றிணைந்து வெளிப்படும் போதுதான், சமுதாய மதிப்பீட்டை மாற்றும் சக்தி பெறும்.

நிலங்களைத் துண்டுதுண்டாக்கி, சொந்தமாக வீட்டுமனையை எவ்வளவு விலை கொடுத்தாவது வாங்கிக் கொள்ளப் போட்டியிடுவது நமது மனப்பான்மை. ஆனால், ஜப்பானியர், நிமிடத்திற்குப் பலமுறை அதிரும் அந்த பூகம்ப பூமியின் இயல்பு, மண், மரம் கொண்டு வீடுகட்ட இயைந்ததல்ல என்பதால் காகிதத்தில் வீடு செய்து ஆபத்துக் காலங்களில் எடுத்து மடித்துக்கொண்டு இடப்பெயர்ச்சி செய்யத்தக்கவிதத்தில் வீடுகளை அமைத்துக் கொள்கிறார்கள். நிலம் பற்றிச் சொந்தங் கொண்டாடுவதில், நமது மதிப்பீடுகளினின்று இவர்கள் வேறுபடுகிறார்கள். அதேபோல அரசியற் திருத்தங்களால், ருஷ்யர்களது நிலம் பற்றிய மதிப்பீடும், நம்மிடமிருந்து வேறுபட்டது.

போபால் தொழிற்சாலை விபத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற கவிதை, மெத்தையைப் பற்றிக் கனவு காணக் கூட முடியாத ஏழைகளைக்கூடமெத்தை ஐஸோஸையனெட் மென்று விட்டதாகக் கூறி, தொழிற்சாலை மீது அதிருப்தியை வெளிப்படுத்துகிறது.

இயந்திரங்களே
அனுதாபத் தீர்மானம்
போதும் அளவுக்கு
அவசரவாழ்க்கை
-(செல்வபாரதி)

எனக் கூறும் கவிதை-யந்திரமயமாதலினால் ஏற்படும் விபரீதப் போக்கினைக் காட்டுகிறது. யந்திரங்களின் நுழைவால், மனித நிலையே மறைந்துபோய் மனிதன் யந்திரகதியில் இயங்கும் தன்மையைக் காட்டுகிறது. ●

# பேய்முனை

சின்ன வயசில்
பேயை நினைத்து
பயந்தபடி
கதை சொல்லும் அம்மாவிடமிருந்து
கற்றுக்கொண்டேன்
பேயைப் பார்த்து பயப்பட.
பின்னொரு நாளில் மயானத்தில்
ஒரு தாய் பேய்
சேய் பேய்க்கு
மனிதனைப் பற்றி
கதைகளை சொன்னது
பயந்தபடி.

பேய் ஒரு படிமம்
பயத்தின் அழகிய படிமம்
எப்போதும் பேயும் மனிதனும்
ஒருவர் பற்றிய
இன்னொருவர் பயத்தில்
எதிர் எதிர் முனைகளாய்
ஓடிக்கொண்டேயிருந்தாலும்
மறுபடியும்
தொடங்கிய மூலையில்
இருவரும் சந்திக்கிறபோது
பார்த்த வேகத்தில்
பேயும் மனிதனும்
உயிர் மூர்ச்சை ஆகிறார்கள் !
பேயை சந்திக்கிற
மறு முனையில்
அதனுடன் கைகுலுக்கி
விட்டாவது
மரணமடையலாம் !

-கி. சங்கரன்-



படிப்பகம்

www.padippakam.com

# கம்யூனிஸ்டுகளின் மீள் வருகை: ஒரு கண்ணோட்டம்

பால் ஹக்கனோஸ் (Paul Hackenos)

ஹங்கேரியில் பதவியேற்றிருக்கும் ஹங்கேரியின் சோஷலிஸ்ட் கட்சி (Hungarian Socialist Party) அதி தீவிர வலதுசாரிகளை விட வலது சாரித் தன்மையுள்ள ஒரு பொருளாதாரத் திட்டத்தை முன் வைத்துள்ளது.

செர்பியா, ரஷ்யா, பைலோரஷ்யா, போன்ற இடங்களில் மார்க்சிய மரபு பிற்போக்கான தேசியவாதத்துடன் எழுந்திருக்கிறது.

ருமேனியாவில் ஸியாவெஸ்டுவின் தேசிய கம்யூனிஸ மாதிரி தொடர்கிறது.

1960-களிலிருந்தே தாராளவாத சிந்தனையுள்ளவர்களைச் செயல்பட அனுமதித்த ஹங்கேரி, போலந்தில் அந்நிலை தொடர்ந்து நிலவுகிறது. போலந்தில் கருக்கலைப்பு ஆதரவு இயக்கம் (ஸொலிடாரிட்டா) சாலிடாரிட்டி தொழிலாளர் இயக்கம் கலைஞர்களின் சுயாதீனமான செயல்பாடு போன்றவை ஒரு பன்முகத் தன்மையுள்ள அமைப்பு உருவாவதற்கான அடிப்படையைக் கொண்டிருக்கின்றன.

ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகள் எப்போதுமே மேலாண்மையுள்ள கட்சிகளாக இருந்ததில்லை. மூன்று வகையாக இருந்தனர்.

1. அர்ப்பண உணர்வுமிக்க சோசலிஸ்டுகள். (ஸ்டாலினிஸ்டுகள் உள்ளிட்டு)
2. தேசிய கவர்ச்சி வெகுஜன அரசியலையும் கம்யூனிஸ மரபையும் இணைத்த பகுதி.
3. சந்தர்ப்பவாதிகள் (சித்தாந்தமற்றவர்கள்)

இப்போது இவர்கள் இவ்வகையில் கட்சிக்குள் நிலவுகிறார்கள்.

1. பழைய கம்யூனிஸ்டுகள்.
2. தொழில் ரீதியான ஆனால் சமரசம் செய்து கொண்ட தொழில் நுட்பக்காரர்கள்.
3. தேசிய சோசலிஸ்ட்டுகள்.
4. இடதுசாரி இலட்சியவாதிகள்.

கிழக்கு ஜெர்மனியில் பழைய கம்யூனிஸ்ட்டுக் கட்சி அதிகாரத்திற்கு வருவதற்கான வாய்ப்பே இல்லை. மாறாக Party For Democratic Socialism மார்க்சையும், ரோஸா லக்ஷம் பர்க்கையும் தங்களுக்காக மீட்டுக் கொள்ளப்போராடுகிறார்கள். இந்தக் கட்சிகள் யாவுமே தங்களின் பழைய நிலைபாடுகளை மறுதலிக்கின்றன.

1. சர்வாதிகார கட்சி.
2. ஒரு கட்சி ஆட்சி.
3. தணிக்கை முறை
4. அரசால் நடத்தப்பட்ட தொழிற் சங்கங்கள்.
5. போலீஸ் காட்டுமிராண்டித்தனம்.

சாராம்சத்தில் அரசியல் பன்முகத்தன்மையும் சட்டத்தின் ஆட்சியும் பற்றிப் பேசுகிறார்கள்.

இக்கட்சிகள் எவையுமே தங்கள் கட்சிகளை முறைப்படி கலைத்துவிட்டு புதிய கருத்தியலோடு புதிய அரசியல் சக்திகளை சேர்த்துக் கொண்டு புதிய அரசியலை முன்வைக்கவில்லை. புதிய தாராளவாத, சமூக சனநாயகவாத, சூழலியல்வாத, பெண்நிலைவாத கருத்துள்ளவர்களை இணைத்துக்கொள்ளவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் சோஸலிஷம், சமூக ஜனநாயகம், சமூக சந்தைப் பொருளாதாரம் என்று பேசுகிறார்கள்.

ஹங்கேரியின் புதிய பிரதமர் Gyulahorn சொல்கிறார்

''எங்களுக்கு தத்துவத்துக்கு நேரமில்லை''.

வெறும் சொற்களில் மட்டுமே-ஒரு முழு இரவுக்குள் பெரும்பாலான கம்யூனிஸ்ட்டு கட்சிகள் தம்மை சமூக ஜனநாயகக் கட்சிகளாக மாற்றிக் கொண்டு விட்டன. சந்தர்ப்பவாதம்தான் நோக்கம். ஆனால் அவர்களது அடிப்படைகள் நிஜம்; பேச்சுக்கள் நிஜமானவை. சந்தைப் பொருளாதாரம் தோற்றுவித்திருக்கும் தீமைகள்இவை;வேலையின்மை,பென்சன்அபகரிப்பு, குழந்தைப்பராமரிப்பு இழிநிலை, தொழிலாளர்க்குச் சலுகையின்மை போன்றன.

ஆனால் இனப்பிரச்சினைகளை அவர்கள் எந்தவித திட்டமும் அற்று தேசிய வலதுசாரி அணுகுமுறையுடன் பேசுகிறார்கள்.

ஐரோப்பாவில் இருந்துவரும் 'மொட்டை'த் தலையர்களும் (Skin Heads) இம்மாதிரியான தேசியவெறி அரசியலையே முன் வைக்கிறார்கள்.

இவர்களிடமிருந்து கறாராக மாறுபடுவதற்கான திட்டம், கருத்தியல் சமூக வர்க்கக் கூட்டு பற்றி எந்தச் சிந்தனையும் பழைய கம்யூனிஸ்ட்களிடம் இல்லை.-

சில பிரக்ஞையுள்ள கம்யூனிஸ்ட்டுகள் புதிய மாதிரிகளைச் செயல்படுத்தப் போராடுகிறார்கள். ஆயினும் பல்கலாச்சாரத்தன்மை, சமப் பாலுறவு உரிமை, அசமத்துவ ஜனநாயகம், மனித உரிமை, சார்சமூகம் போன்ற கடுந்தாக்கங்கள் அவர்களுக்கு முற்றிலும் அந்நியமாக இருந்தன.

சமூக ஜனநாயக தாராளவாத மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளாமலே சொற்களில் மட்டுமே சமூக ஜனநாயகக் கட்சிகள் என்று பொறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பத்திரிக்கைச் சுதந்திரம், தன்னார்வச் சமூகக் குழுக்கள், சுதந்திரச் செயல்பாடு போன்றவற்றுக்கான களத்தை உருவாக்க முயற்சிக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக இக்கட்சிகள் எல்லாம் மேலாதிக்க அடுக்குத் தன்மை வாய்ந்ததாகவும் ஆண்கள் ஆதிக்கக் கட்சிகளாகவும் இருக்கின்றன.

ஸ்டாலினிஸ்ட் ஆட்சிகளில் நம் தவறுகளை பொருளாதாரச் சீர்குலைவு, சூழல் அழிப்பு, மாற்றுக்கருத்து அழிப்பு போன்றவற்றைத் தனிப்பட்ட முறையில் நமது செயல்பாடுகளை விமர்சித்துக்கொள்ள இத்தலைவர்கள் தயாராய் இல்லை. மிக முக்கியமாக கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து படுகேவலமான இரகசியப் போலீசின் நடவடிக்கைகளை பகிரங்கமாக விமர்சனத்துக்கு உட்படுத்தத் தயாராயில்லை.

1956-ஹங்கேரிய எழுச்சியை ஒடுக்கிய போலீஸ் மற்றும் Paramilitary Force பற்றின நடவடிக்கைகளை அதன் அங்கமாயிருந்த இப்போதைய தலைவர் ஒப்புக்கொள்ளத் தயாராய் இல்லை.

கம்யூனிஸ்ட்டுகளின் மீள் வருகைக்குக் காரணம் இதுதான்.

வீழ்ந்துபட்ட அமைப்பிலிருந்து அடுத்த கட்ட அமைப்புக்குச் செல்வதற்கான சமூகப் பொருளாதார நடைமுறைப் போக்கில் ஏற்பட்டிருக்கும் அராஜகம், மக்களின் கோபம், எதிர்ப்புணர்வு, நம்பிக்கையின்மை, மையமழிவு, கசப்புணர்ச்சி, தோல்வி மனப்பான்மை போன்ற பண்புகள்தான். தனியார் மயமாக்கல், தேசிய மயமாக்கல் நீக்கல், சுதந்திர வர்த்தக நிறுவனங்கள் போன்றவை ஒருசிலரை பெரும் பணக்காரர்கள் ஆக்கியிருக்கின்றன. பெரும்பாலானோரை வறுமையில் தள்ளி இருக்கிறது. கம்யூனிஸ்ட்டுகள் ஏதுமற்றோரின் உரிமைகளை இச்சூழலில் பேசுகிறார்கள்.

வேலையற்றோர் மற்றும் ஏழைகள் மட்டும் தான் கம்யூனிஸ்ட்டுக்கு வாக்களித்தார்கள் என்றில்லை. சராசரி மக்களும் வாக்களித்தார்கள். 5 ஆண்டுகாலப் பொருளாதாரச்



படிப்பகம்

www.padippakam.com

சீரழிவு இதன் காரணம். கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் தனி நபர் வாழ்விற்குப் பொறுப்பேற்ற முடிவுகள் எடுத்த, சமூகப் பாதுகாப்பு கொடுத்த ஸ்திரத் தன்மைக்குச் சான்றாக விளங்கி வந்தது சாட்சியமாயிருந்தது.

சமூகம் பாதுகாப்பு என்பது மேற்கு ஐரோப்பிய மக்களதும் மற்றும் சோசலிசத்தின் பல்வேறு போக்குகளிடையிலும் ஒரு அடிப்படை வேட்கை அவசியம். மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பியநாடுகள் என அனைத்து நாடுகளிலும் சமூகப் பாதுகாப்பிற்கான மக்களின் எதிர்நோக்கு, ஆனால் பாதுகாப்பின்மை இம் முழு மக்களையும் ஜனநாயகம் பற்றிய அவநம்பிக்கைக்குக் கொண்டு சென்றிருக்கிறது.

சமூக மற்றும் தனிநபர் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி போன்றவற்றை உத்தரவாதப்படுத்தும் ஒரு ஆதிக்கத் தன்மையுள்ள சமூக அமைப்பை விழையும் போக்கு ஐரோப்பா முழுக்க உள்ளது. இதற்காக இவர்கள் தமது ஜனநாயக சுதந்திரங்களைக் கூட தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

உஜ்லாவ்ஹாவல் போன்றவர்கள் இப்படிச் சொன்னார்கள். ''சந்தைப் பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஜனநாயகத்தை இணைக்கும் போது வேலையின்மை, வறுமை, துயரம் போன்றவற்றைத் தவிர்க்க இயலாது.''

கம்யூனிஸ்ட்டுகள் இப்படிச் சொன்னார்கள். பொருளாதாரம், அரசியல் போன்றவற்றைச் சமூகப் பாதுகாப்பு தனிநபர் பாதுகாப்பு கருதித் திட்டமிடும்போது ஜனநாயகத்தை முற்றிலும் பாதுகாக்க இயலாது.

இந்த இரு நோக்குகளுமே மனிதனைக் கீழாக நோக்கும் கருத்தியல் அணுகுமுறை. மனிதனுக்குப் பாதுகாப்பும் வேண்டும். சுதந்திரமும் வேண்டும். இதை இருவருமே சிந்திக்கத் தவறுவதுதான் இன்றைய ஐரோப்பிய நிலைமை. பெரும்பாலான இடதுசாரிகள் கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களை நம்பிக்கையுடன் நோக்குகிறார்கள்.

மக்கள் தெளிவாகப் பல விசயங்களை நிராகரித்திருக்கிறார்கள்.

1. ஒற்றைக்கட்சி ஆட்சி

2. சர்வாதிகாரப் போலீஸ் அடக்குமுறை

3. சமத்துவமற்ற பொருளாதார அரசியல் கலாச்சாரக் கூட்டமைப்பு

இதைப்போலவே விமர்சனமற்று மேற்கின் தீமைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை.

1. சந்தைப் பொருளாதாரம்

2. நுகர்வுக் கலாச்சாரம்

3. சொத்துக்குவிப்பு

தொடர்ந்து இந்த உத்தரவாதமுள்ள சமூகத்தை இவர்கள் எதிர் நோக்குகிறார்கள்.

1. வேலை, இருப்பிடம், உணவு

2. அரசியல் சுதந்திரம்

எதிர்காலச் சமூகம் இவையனைத்தையும் கணக்கில் கொண்டே உருவாக முடியும். இதை உருவாக்க ஸ்தூலமான சமூக வர்க்க கூட்டு தேவை. அத்தகைய சமூக ஜனநாயக/தொழிலாளி வர்க்க / சூழலியல் / பெண்நிலை வாதக் கூட்டு போலந்தில் நிலவுகிறது.

அத்தகையதொரு கட்சி Union of Labour in Poland Cup). இதில் சாலிடாரிட்டி இயக்கத்தவர், பழைய கம்யூனிஸ்ட்டுக் கட்சி உறுப்பினர்கள், பெண்நிலை வாதிகள், புகழ் வாய்ந்த அறிவு ஜீவிகள், மனித உரிமை வாதிகள் பங்கு பெறுகிறார்கள்.

1993-தேர்தலில் இந்தக்கட்சி 7 சதவீதம் வாக்குகள் பெற்றது. இதுதான் ஆளும் ''சோசலிஸ்டு'' கூட்டமைப்பின் தனியார் மயமாக்கல் கொள்கையை விமர்சித்தது. கத்தோலிக்க திருச்சபையின் மௌடீகத்தையும் விமர்சித்தது. கம்யூனிஸத்துக்கும் பிந்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அந்த இடிபாடுகளில் இருந்து ஒரு இடதுசாரி மாற்று உரு



படிப்பகம்

www.padippakam.com

வர்க முடியும் அதற்கு இரண்டு அடிப்படைகள் வேண்டும்.

1. இடதுசாரி மாற்றை உருவாக்குவதற்கான அரசியல் கலாச்சாரம் (Political Culture) அங்கு உருவாக வேண்டும்.

2 முதலாளித்துவம் வரலாற்றின் இறுதி எனக்கொண்டு மக்கள் ஜனநாயக சோசலிசக் கனவின் மூலம் அதைத் தூக்கியெறிய வேண்டும்.

அதற்கு சீர்திருத்தப்பட்ட சோசலிஸ்ட்டுக் கட்சிகளும் தம்மை புதிய அரசியல் கலாச்சாரக் கூட்டமைப்பாகத் திரட்டிக்கொள்ள வேண்டும்.

இக்கட்டுரை New Statesman And Srisetyல் நவம்பர் 4, 1994ஆம் ஆண்டு வெளியான கட்டுரையின் நெகிழ்வான மொழியாக்கம்.

தமிழில்...
யமுனா இராசேந்திரன்
இலண்டன்

---

## விக்ரமாதித்யன் கவிதைகள்

● காற்று
வந்து தொட்டுச் சென்றது
கவிதை
எழுத ஞாபகப்படுத்தி

● காற்றின் காதல்
மனுஷனுக்கில்லை

● கலைஞன் மனங்கொண்ட
காற்று

● இஷ்டத்துக்கு
வீசும் காற்று
இவன் போல
இவன் எழுத்து போல

● காத்தோடு காத்தாக
கலந்து போகாது
விக்ரமாதித்யன் கவிதைகள்

காணாமல் போய்க் கொண்டிருக்கிறது
கமுகு தெங்கு மிளகு
காணாமல் போய்க் கொண்டிருக்கிறது
காடு மலை அருவி ஆறு
காணாமல் போய்க்கொண்டிருக்கிறது
கவிதை இலக்கியம்
காணாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள்
காவ்ய நாயகர்கள்
(அஜயன் பாலாவுக்கு)

* * *

மாதுளம்பழம்
சிவந்தது எப்படி
முருங்கைக்காய்க்கு
ருசி வந்த தெவ்விதம்
முல்லைப்பூவின்
மணம்
பொன்னாங்கண்ணி
இலை
அம்மை எடுத்துவைத்த பழையது
அதில்தான் என் ஆயுசு



படிப்பகம்

www.padippakam.com

# கேடு செய்யும் வணிகமுறை வேளாண்மை

நம்மாழ்வார்

*இன்று இயற்கை வேளாண்மை சாத்தியம் தான் என்று உலக அளவில் புரிதல் ஏற்பட்டுள்ளது. 'பில்மொலிகன்' என்ற தத்துவ ஞானி, இவர் ஆஸ்திரேலியாவில் வாழ்கிறார். 'பெர்மாகச்ல்சர்' பற்றிப் பேசுகிறார். பெர்மனன்ட் அக்ரிகல்சர் என்பதன் சுருக்கம் இது. இவர், நான் அக்ரிகல்சர் பற்றிப் பேசவில்லை. கல்சர் பற்றிப் பேசுகிறேன் என்கிறார். உணவு உற்பத்தி என்பதே மனிதனின் வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும். வியாபாரமாக இருக்க முடியாது என்கிறார். ஆஸ்திரேலிய மலைவாழ் மக்கள் இதுபற்றி என்ன சொல்கிறார்கள் என்றும் தெரிவிக்கிறார். மலைவாழ்மக்கள் உழுவதில்லை. ஆனால் அவர்களும் உணவு உற்பத்தி செய்கிறார் கள், உண்கிறார்கள். நிலத்தை உழுபவர்கள், தாயின் மார்பை அறுத்து இரத்தத்தைகுடிப்பவர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் தாயின் மார்பிலிருந்து பால் குடிக்கிறோம் என்கிறார்கள். தவறான குறுக்கீடு செய்யும் போது இயற்கையை நாம் என்ன செய் கிறோம் என்பதை அவர்கள் நமக்கு உணர்த்துகிறார்கள்.*

கோழிக்கு என்னென்ன தேவை என்று கருதி விஞ்ஞானிகள் அவற்றை தீவனத்தில் சேர்க்கிறார்கள். தவிடு, புண்ணாக்கு, துவரை, உமி, மக்காச்சோளம், கொஞ்சம் உப்பு, கருவாட்டுத் தூள் ஆகியவற்றை குறிப்பிட்ட விகிதத்தில் சேர்த்து கலக்கிறார்கள். கோழிகளுக்கு இந்தப் பொருட்கள் இத்தனை சதவீதம் தேவை என்பதை எதைவைத்துக் கண்டுபிடித்தீர்கள் என்று 'மொலிகன்' கேட்கிறார். கோழி நமக்கு இறைச்சிதர வேண்டும். முட்டை தரவேண்டும் என்று கணக்கிடுகிறீர்கள். அவர் கேட்கிறார் நாட்டுக்கோழியின் இறக்கையில் பல்வேறு வகை வண்ணங்கள் இருந்தனவே, எதைப் போட்டதனால் அந்த வண்ணங்கள் தோன்றின என்று கேட்கிறார். இதைக் கணக்கெடுத்தீர்களா? கணக்கெடுக்க இயலுமா என்று கேட்கிறார். கோழியின் வண்ணங்கள் தானே அதன் குஞ்சுகளை பருந்துகளிடமிருந்து காப்பாற்றின என்கிறார். இயற்கையோடு இயற்கையாக இணைந்து நின்று காகத்திடமிருந்து இந்தக் குஞ்சுகளை வண்ணங்கள் தானே காப்பாற்றின நீங்கள்! உற்பத்தி செய்யும் வெண்மை நிறக் குஞ்சுகளுக்கு எங்கே பாதுகாப்பு? சூழலுக்குப் பொருத்தமில்லாமல் அந்தக் குஞ்சுகள் நிற்கின்றன. நீங்கள் தரும் தீவனத்தில் வண்ணங்கள் இல்லை என்கிறார்.

ஒரு விஞ்ஞானி தன் வழியில் ஒரு கோழி முட்டையை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் அதற்காக ஒரு காட்டை அழித்திருக்க வேண்டும். அழித்த இடத்தில் ஒரு சுரங்கம் தோண்ட வேண்டும். தோண்டிய குப்பை



படிப்பகம்

www.padippakam.com

இறைச்சிக் கோழிக்கான குஞ்சுகளை வாங்கி எட்டு வாரங்கள் வளர்த்து விடுவார். இந்தப் பருவத்தில் குஞ்சுகளுக்கு என்ன நோய் வரும் என்ன தீனியிட வேண்டும் முதலிய எல்லா நுட்பங்களும் அவருக்குத் தெரியும். இதன் காரணமாக அவருக்கு இத்தொழிலில் நிறைய லாபம் கிடைக்கும்.

இத்தகைய பண்ணை வேலையில் குஞ்சு பொரிக்கிற நுட்பத்தில் மட்டும் ஒரு வருக்கு தேர்ச்சி போதும். குஞ்சு பொரிக்கும் இயந்திரத்தை அவர் வைத்திருப் பார். முட்டைகளை மட்டும் அவர் வாங்கி இயந்திரத்தில் இருபத்தியாறு நாட்கள் வைத் திருந்து குஞ்சாக்கி அனுப்பிடுவார். குஞ்சு களை எப்படி அட்டைப்பெட்டிகளில் வைத் தனுப்புவது என்பது அவருக்குத் தெரியும். எந்தச் சமயத்தில் குஞ்சுகளுக்கு ஊசி போடுவது என்பதும் அவருக்குத் தெரியும்.

நவீன கோழிப்பண்ணையில் 3000 கோழி களை வைத்து வளர்த்தால் மட்டுமே லாப முண்டு. காரணம் இங்கு கால்நடை மருத்து வம் ஒருவரைப் பணிக்கமர்த்தவேண்டும். பண்ணைக்குள் ஒலிநாடாகருவி ஒன்று எந் நேரமும் பாடிக்கொண்டே இருக்கவேண்டும். கோழிகளின் கவனம் ஒரே இரைச்சலில் தான் குவிந்திருக்கவேண்டும் (வேறுபல இரைச்சல் கள் கேட்டால் முட்டையிடுவதில் காலதாமதம் ஏற்பட்டு விடும் என்பதால் தான் இந்த ஒலி நாடாக் கருவி). தீவனங்களை என்ன விலை கொடுத்தேனும் வாங்கிப் போட்டுக் கொண் டிருக்கவேண்டும். இவ்வகைக் கோழிப் பண்ணைகளிலிருந்து வரும் வீச்சம் தாங்க முடி யாது. நாமக்கல் வட்டாரத்தில் பஸ்ஸில் செல்லும் பொழுது நாம் மூக்கைப் பிடித்துக் கொள்கிறோம். ஆனால் அந்த வட்டாரத் தில் உள்ளவர்க்கு இந்த வீச்சம் பழக்கமானது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று அவ்வையார் கூறியிருக்கிறார். அளவுக்கதிக மான இந்த வீச்சம் சுற்றுச்சூழலைக் கெடுக் கிறது.

அண்மையில் நெதர்லாந்திலிருந்து வரும் சூழலியல் பற்றிய பத்திரிக்கையில் ஒரு செய்தி படித்தேன். ஐரோப்பாவில் கால்நடைகளுக் கான தீவனம் தயாரிக்கும் ஒரு பெரிய நிறு வனம் இருக்கிறது. அதில் தயாரித்த தீவனத்தை ஹாலந்தில் பன்றிகளுக்குத் தந் தார்கள். பன்றிகளின் வயிற்றில் தீவனம் முழுமையாய் செரிமானம் ஆவதில்லை. பன்றி களின் எச்சத்திலிருந்து கிளம்பும் நாற்றம் பிரான்சு வரை பரவுகிறது. பெரிய அளவில் இப்படி செய்யும் போது சீர்கேடுகளும் பெரிய அளவில் நடக்கின்றன. அந்த நிறுவனம் இனி மேல் செரிமானமாகக்கூடிய நிலையில் தீவனம் தயாரிப்போம் என்கிறது.

இதே போலப் பண்ணைகளில் வைத்து முயல் வளர்க்கிறார்கள். முயலின் முடியைக் கூட வெட்டி விற்கிறார்கள். இப்படி செய்தால் தான் லாபம். பண்ணைகளில் முயல்களை அல மாரிகளில் வைத்து வளர்க்கிறார்கள். தரையில் இறங்க விடுவதில்லை. நிறைய ஆட்களை வைத்து தீனி போடுகிறார்கள். இப்படி எல் லாம் செய்தால்தான் லாபம் கிடைக்கும். இவ் வகைப் பெரும் தொழில்களில் நிறையப் பேருக்கு வேலை வாய்ப்பில்லை. பம்பாயில் அண்மையில் அமைக்கப்பட்டுள்ள 1000 ஏக்கர் பண்ணை ஒன்றில் திராட்சை பயிரிட்டுள்ளார் கள். ரசாயண உரமோ பூச்சி கொல்லிகளோ இல்லாமல் பயிரிடுகிறார்கள். இப்படி விளையும் திராட்சை முழுதும் அந்த பிரஞ்சு நிறுவனம் எடுத்துச் செல்கிறது. முதலீடு போட்டதும் ஆலோசனை வழங்குவதும் அந்த நிறுவனம் தான். இத்தகைய பேரளவிலான தொழில் களில் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப் பில்லை.

இனி இறால் பண்ணைகள் பற்றிக் காண் போம். மீன்கள் நல்ல தண்ணீரிலும், உப்பு நீரிலும் வளரும். நிறைய இறால் தேவை என்பதற்காக தற்பொழுது தஞ்சை, நாகை மாவட்டங்களின் கடலோரத்திலுள்ள நிலங்கள் வாங்கியுள்ளனர். கடல் நீரை குழாய்களின் மூலம் மீன் குளங்களில் விடுகிறார்கள். வெறும் உப்புநீரில் இறால் வேகமாக வளர்வதில்லை. ஆழ்குழாய் கிணற்றிலிருந்து நல்ல நீரை எடுத்து 25% மீன் குளங்களில் விடுகிறார்கள். நிலத்தடி நீரை நிறைய உறிஞ்சி விடும்போது கடல்நீர் நிலத்திற்குள் வருகிறது. இதனால் கடற்கரையில் வாழும் மக்களுக்கு குடிநீர் கிடைப்பதில்லை. நாலரை மாதத்தில் இறால் விளைச்சலை எடுக்கிறார்கள். அதன் பிறகு



படிப்பகம்

www.padippakam.com

குளத்தை மீண்டும் தயார் செய்ய வேண்டும். பழைய மீன்களின் குஞ்சுகள் அந்தக் குளத்தில் இருக்க கூடாது இருந்தால் அவை அடுத்த தலைமுறைக்கு நோய் பரப்பும். ஆகவே இருக்கும் மீன் குஞ்சுகளைக் கொல்ல நஞ்சைத் தூவுகிறார்கள். இந்தத் தண்ணீரை கடலுக்குள் வடிக்கிறார்கள். நீர் செல்லும் பாதைகளில் உள்ள மக்களுக்கு நோய் நொடிகள் ஏற்படுகின்றன. தவிர கடலுள் செல்லும் நஞ்சு ஆமை, நண்டு முதலியவற்றுக்கும் கேடு செய்கிறது. கடல்வாழ் உயிரினங்களை பிடித்து உண்ணும் உள்நாட்டு மக்களுக்கு நோய் வருகிறது. இறால் பண்ணைகள் இவ்வளவு ஆபத்தை விளைக்கின்றன. ஆனால் ஒரு வருடத்தில் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள் முதலாளிகள். நாளடைவில் கடலோரத்தில் மனித வாழ்க்கையில்லை.

இத்தகைய பிரச்சினைகள் நமக்கு மட்டும் நேர்ந்ததல்ல. இவை உலக அளவிலான பிரச்சினை. காரணம் கடல் உலகம் முழுவதையும் இணைக்கிறது. அண்டார்டிக்காவில் 18 நாடுகள் சேர்ந்து ஒரு ஆய்வுக்கூடம் அமைத்திருக்கிறார்கள். அங்கிருக்கும் நீரை எடுத்து ஆய்வு செய்து எந்த ஆற்றிலிருந்து எந்த நஞ்சு சேர்ந்திருக்கிறது என்று கண்டறிகிறார்கள். முக்கியமாக ஆர்சனிக், ஈயம், பாதரசம், குரோமியம் முதலிய நஞ்சுகள் அதிகமாக கடல்நீரில் வந்து சேர்கின்றன. இவ்வகை நஞ்சுகள் மலட்டுத் தன்மையை உண்டு பண்ணும் கடல் சிங்கம் (சீல் வால்ரஸ்) என்ற விலங்கை ஆய்வு செய்து இதைக் கண்டார்கள். குழந்தைகள் போல இந்த விலங்கு விளையாடும். இவற்றின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் மிகக் குறைந்துவிட்டது. பெங்குவின் பறவைகளுக்கும் இது நேர்ந்துள்ளது. ஆலைகளின் கழிவுகளில் தான் இவ்வகை நஞ்சு கடலில் கலக்கிறது.

அண்மைக் காலத்தில் உலக அளவில் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. இந்தியாவிலும் இந்த உணர்வு முளை விடத் தொடங்கியிருக்கிறது. முக்கியமாக நாம் கவனத்திலிருத்த வேண்டியது சுற்றுச் சூழல் என்ற பிரச்சினை விவசாயிகள் பிரச்சினை. உலக அளவில் இது மக்களின் பிரச்சினை.

வேளாண்மைக்கு ரசாயன உரம் தேவை என்றால், அதற்காக தொழிற்சாலைகள் கட்டுகிறார்கள். தொழிற்சாலைகளுக்கு நிறைய நீர் தேவை என்பதால் ஆற்றோரங்களில் கட்டுகிறார்கள். ஆற்றின் நல்ல நீரை தொழிற்சாலைகள் எடுத்துக்கொண்டு, கழிவுகள் ஆற்றில் கலக்கப்படுகிறது. நவநாகரீகமான துணிக்காக சாயப் பட்டறைகளை ஆற்றோரங்களில் அமைக்கிறார்கள். ஆற்றில் கழிவுகளை விடுகிறார்கள். ஆறுகள் மேடு தட்டி நாளடைவில் ஆறுகளே இல்லாமல் ஆகலாம். அல்லது மழை வெள்ளம் வரும் போது ஆற்றில் சேர்ந்துள்ள கழிவுகளை நல்ல நிலத்துக்கு அவை கொண்டு சேர்க்கின்றன. நிலம் நஞ்சாகிறது. இவ்வளவு தீங்குகளுக்கும் காரணம் நவநாகரீகமான வாழ்க்கை முறை. இயற்கையோடு இயைந்த வாழ்வு முறையை நாம் கைவிடும் பொழுது ஒட்டுமொத்தமாக இந்த புவிக் கோளமே அழிந்து விடும் ஆபத்து இப்போது உருவாகிறது.

குறிப்பாக காற்றில் நாம் கலக்கும் புகை பற்றி நாம் எச்சரிக்கையோடிருக்க வேண்டும். காற்றில் புகை அதிக அளவில் சேரும் போது அண்டவெளியில் வெப்பம் அதிகரிக்கிறது. பூமியிலிருந்து 10/12 மைல் உயரத்தில் கரிவளையம் ஏற்படுகிறது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர் கரிவளையம் தண்ணீர் போலச் செயல்படுகிறது. அதாவது சூரிய ஒளியை உள்ளே விடும். ஒளி தரையைத் தொடும் போது வெப்பம் ஏற்படுகிறது. அந்த வெப்பத்தை தண்ணீர் வெளியே விடாது. கரிவளையமும் சூரிய ஒளியை உள்ளே விடும். ஆனால் வெப்பத்தை வெளியே செல்ல விடாது. ஆகவே பூமியைச் சுற்றி வெப்பம் அதிகரிக்கும். இதனால் துருவங்களிலுள்ள பனிப்பாளங்கள் உருகுகின்றன. விளைவாக கடல் மட்டம் உயர்கிறது. 25செ.மீ அளவு கடல் மட்டம் உயர்ந்தால் உலகில் 1/3 பகுதி மக்கள் அழிவார்கள். காரணம் பழங்காலத்தில் கடல் ஓரத்தில்தான் நகர நாகரீகங்கள் உருவாயின. தவிர கடல் ஓரங்களில் குழாய் கிணறு தோண்டினால் உப்பு நீர் தான் கிடைக்கிறது அங்கு வாழும் மக்களுக்கு அரசு எவ்வளவு செலவு செய்தாலும் குடிநீர் தர முடியாது. உலக அளவில் அரசுகள் கூடிப் பேசுகின்றன. செயல் வேகமில்லை.

நமக்கு நிலைத்திருக்கக் கூடிய வாழ்க்கை தேவை. மக்களிதை புரிந்து கொள்ள வேண்டும் மக்கள் தான் அரசுகளை நிர்பந்திக்க வேண்டும். தொழில் முதலாளிகளின் லாபம் குறைந்து விடாமல் பார்த்துக் கொள்வது தான் அரசின் வேலை. ஆகவே மக்களின் பொறுப்பு தானிங்கு முக்கியம். ●



படிப்பகம்

www.padippakam.com

# சிதைந்த லட்சிய பூமியை நோக்கி....

டாக்டர் ஜீவானந்தம்

*குறிப்பு : சோவியத் யூனியன் தகர்ந்த அண்மைக் காலத்தில் சோவியத் யூனியனுக்குச் சென்று திரும்பிய டாக்டர் ஜீவானந்தம் அவர்கள், அங்கு எடுத்த ஒளிப்படங்களோடு தன் உணர்வுகளோடு கூடிய வாசகங்களை எழுதி, தொகுத்திருக்கிறார். இந்தத் தொகுப்பு ஒரு சிறு நூலாக வெளிவரலாம். அவர் எழுதியவற்றில் ஒரு பாதி யளவு வாசகங்கள் மட்டும் இங்கு தரப்படுகின்றன. அவரைப் போலவே, நமக்குள்ளும் சோகம் படர்கிறது*

டில்லியிலிருந்து - மாஸ்கோ - தாஷ்கண்ட் வழியாக சென்றடைய ஏழுமணி நேர விமானப் பயணம். பெரிய விமானம். மலிவான கட்டணம்-விமானம் புறப்பட்டு எழும்புவதும்-இறங்குவதும் தெரியாத அளவு அற்புதமான நுணுக்கம். ஆனால்...அவ்வளவு சிறப்பாக இல்லாத விமான உள் சேவை. தூய்மைக் குறைவு. சோவியத் சிதைவு இவற்றை இன்னும் மோசமாக்கி விட்டது. மாஸ்கோ அடைய வேண்டிய நேரம் 9.30. ஆனால் 7 மணிக்கே விமானம் தரை காணத் துவங்கியது. இந்தியா-மாஸ்கோ நேர வித்தியாசம் 2½ மணி நேரம் குறைத்துக்கொள்ள வேண்டும். மேகத்திரள் கிழித்து கீழே மெதுவாக...சிறு சிறு குட்டான சில வீடுகள். ஏதோ மேகத்தின் நடுவே முளைத்தது போல்-ஆம் தரையை பனி மூடி உள்ளது. இன்னும் கீழே மரங்கள்...வயல்கள்... சாலைகள். மரங்கள் இலைகளை எல்லாம் உதிர்த்து...பசுமை இழந்து பனியில் கருகிய கூம்பு வடிவக் குச்சிகளாய் சோவியத்தை நேசித்து...அதன் சிதைவில் நொந்த ஒருவனுக்கு இந்தத் தோற்றம் சில கற்பனைகளைத் தருகிறது. தன் வளமான, பசுமைகளை உதிர்த்து, வரண்டு எதிர்காலம் கேள்விக் குறியாய் நிற்கும் ருஷ்ய நாட்டின் உருவகமாகவே தெரிகிறது. அந்த வசந்தம், பசுமை மீண்டும் வருமா ? ஏக்கம் பெரு மூச்சுடன்.●

இரண்டு படுக்கை அறைகள் ஒரு வரவேற்புக் கூடம் சமையலறை-மின் அடுப்பு தண்ணீர், வெந்நீர், வீட்டை வெப்பமாக்கும் குழாய்கள், ஃபோன்-லிஃப்ட்-பொதுபாதுகாப்பு கீழேயே அரசு கடைக்கூடம். எல்லாம் சோவியத் தந்தது. அழகிய வசதி மிக்க வீடு வாடகைக்கு விட்டு விட்டு 300 டாலர் 300X3190 ரூபிள் வீட்டுக்கார அம்மா 300 கிலோமீட்டர் தொலைவில் கிராமத்தில் விவசாயம் செய்து கொண்டு. இப்படித்தான் பலர். வீட்டுக்கார அம்மா ரிட்டயர்ட் என்ஜினியர். கணவர்-அணு ஆய்வு விஞ்ஞானி. புற்று நோய் பரிசாகப் பெற்று நாட்களை எண்ணிக்கொண்டு. ஒரே மகன் வேலையின்றி, நிறைய படித்த, நிறைய தெரிந்த அவர், ருஷ்யாவை பற்றி நாம் தெரிந்து கொண்டதை, தெரிந்து கொள்ள ஆர்வம் கொள்வதை கண்டு வியக்கும் அம்மா. இந்திய கிராமப்புறப் பெண் போல் நெருக்கமான அன்புடன் கிராமத்திலிருந்து நமக்காக முயல்கறி சுமந்து வருகிறார்.●

24 மணி நேரமும் குடிநீர், சுடுநீர், மின்சாரம், களைப்பு குடியிருப்புக்களின் இடையே ஓர் சிறு காடு. நிறைய மரங்கள். ஓர் சிட்டி நடுவில்-சாலை மருங்கில்-மரங்கள் இத்தனை மெல்லிய அழகியல் உணர்வுடன் இருந்தவர்கள் எப்படி மரத்துப் போனார்கள் ?



படிப்பகம்

www.padippakam.com

மனிதகுலம் தனக்கென ஓர் உன்னத ஆசையாக வேண்டி விரும்பி காத்துக் கொண்டிருந்த வரம். எனக்கென ஒரு வீடு.

சோவியத் அரசு தன் மக்களுக்கு இந்த வரத்தை அருளிய அளவு உலக சரித்திரத்தில் இனி ஒரு அரசு அருளியதில்லை. இவ்வரத்தை மாஸ்கோ எங்கு 15-20 மாடிக்கட்டிடங்கள் ஒரு கட்டிடத்தில் 400-500 வீடுகள். இரும்புக் கதவு-ரகசிய சாவி. இரவும் பகலும் பாதுகாப்பு-ஏன் இவை? 70% மக்கள் குடியிருக்க வீடு பெற்றுள்ளனர். வருடத்தில் எட்டு மாதம் கடும் குளிர் நடுக்கும் நாட்டில் ஓர் வீட்டின் தேவை ஒப்பற்றது. டால்ஸ்டாய்-ஒரு காலைப் பொழுதில் ஓர் புகைவண்டி நிலைய பெஞ்சில் உறைந்து இறந்து கிடந்தாராம். வீடு ரொம்ப முக்கியம்.

அமெரிக்க மோகம் தணியத் துவங்கியுள்ளது. "Our Honey moon with Europe is Coming to an end." என்கிறார்கள். Liftல் எழுதிய "Us Army Welcome" மங்கி விட்டது. ஆனால் ஜீன்சும், டெனிமும் தேசிய ஆடை அங்கீகாரம் பெற்றுள்ளது. ரூபிளை விட டாலரையே மதிக்கின்றனர். டாலரைச் சேர்ப்பதில், பார்ப்பதில் ஓர் வேகம். ஒரு டாலருக்கு 3190 ரூபிள்கள். ஆனால் ஒரு டாலருக்கு 31:25 இந்திய ரூபாய்களே. சோவியத் சிதைவுக்கு US காரணமல்ல என்கிறார்கள். கார்பியும் காரணமல்ல என்கிறார்கள். குருசேவ் விதைத்தது-பிரஷ்னேவ் மீசையில்லாத ஸ்டாலினாய் நசுக்கினார். அவரது நீண்டகால தேவையற்ற ஆட்சி ஓர் தேக்கக் காலம் என்கின்றனர். 19 ஆண்டுகால ஆசைகள்-சுதந்திர வேட்கை-சிறுசிறு போராட்டங்கள் அடக்குமுறைகள்-இவற்றின் உச்சகட்ட பிரதிநிதி கார்பசேவ். 5000 மைல்களுக்கு அப்பாலிலிருந்து US செய்தது என்பது எங்கள் தேவையை உணராத Statement.

ருஷ்யர்கள் தங்கள் ரூபிள்களை டாலர்களாக்கிச் சேமிக்கிறார்கள். எந்த இடத்திலும் டாலர் மாற்றி ரூபிள் வாங்கலாம். டாலருக்கு மதிப்பு அதிகம். ஒரு டாலருக்கு ஒரு சமயம் 3926 ரூபிள். இதைக் கேலியாக ஒரு பேராசிரியர் தனது அறையின் பலகையில் ஒட்டி வைத்திருந்தார். இன்று ஒரு ரூபிள் என்பது நமது ஒரு ரூபாய்க்கு சமம். டாலருக்கு மதிப்பு போலவே ஆபத்தும் உள்ளது. நிறைய டாலர் எடுத்து வெளியில் செல்வது பாதுகாப்பானதல்ல. அடித்துப் பிடுங்கிக் கொண்டு போக வாய்ப்புகள் உண்டு. எலக்ட்ரானிக் விளம்பரப் பலகையில் டாலர், யென், மார்க் இவற்றின் மதிப்பு அவ்வப்போது வெளிச்சமிடப்படுகிறது. டாலரைக் காட்டினால் போலீஸ்காரனும் அடங்கி விடுகிறான். ●

அக்டோபர் புரட்சி நாளன்று செஞ்சதுக்கத்தில் மாபெரும் அணிவகுப்புக் கண்ட செஞ்சதுக்கம், மகத்தான உலகத் தலைவர்கள் கையசைத்த மேடை, திரள் திரளாகக் கூடிக் களித்த மக்கள் 'வானத்தைச் சிவப்பாக்கிய செங்கொடிகள்' கிரம்ளின் நாடாளுமன்ற உச்சியில் ஒளிர்ந்தசெங்கொடி இன்று இல்லை. மனித குலத்தின் மகத்தான புரட்சி நாளன்று விடுமுறை கூட இல்லை. நான் இன்று வேலை செய்வேன் என்று வீம்புக்கு அலுவலகம் வந்த யெல்சின். நம் நகரங்களில் காணும் கம்யூனிஸ்டுகளின் தொகையை விடவும் குறைவாக கம்யூனிஸ்ட்டுகளின் ஊர்வலம். யாரும் அதை சீரியஸ்ஸாக எடுத்துக் கொள்ளவில்லை. கவனமெல்லாம் புதிதாய் பாதை ஓரங்களில் முளைத்துள்ள கன்ஸ்யூமர் பொருட்களில் லயித்துள்ளன. சின்ன லெனின் படம் ஸ்டாலின் படம் எல்லாம் 35-40 வயது கடந்தவர்களின் ஊர்வலமே. கம்யூனிஸ்ட்டுகள் அங்கும்... இங்கும்... எங்கும் உரக்க...சலிப்பின்றி நிறையப் பேசுகிறார்கள். ஒரு தகவல்-பேச்சில் கின்னஸ் ரெக்கார்டு. பொலிட்பீரோவில் 4 நாட்கள் பிரெஸ்னேவ் தொடர்ந்து பேசியதாம். ●

லெனின் சமாதி-அத்தனை சின்ன மனிதரால் எப்படி இப்படி பெரிய மாற்றத்தை உருவாக்க முடிந்தது. பழைய ராணுவ மரியாதை இல்லை. இன்னும் இயல்பாக வைக்கப்படும் மலர்ச் செண்டுகள் உண்டு. உஷ்...அமைதியாக என்னும் ராணுவ வீரர்கள் தொப்பியை கழற்றி மேற்கத்திய மரியாதை தொடர்கிறது. ''கற்றறிந்த ஞானி கடவுளையே நேராவான். ஏழு நாள் முன்னே இறை மகுடம் தான் புனைந்தான். வாழியவன் எங்கள் வருத்தமெல்லாம் போக்கிவிட்டான். சோற்றுக்குப் பஞ்சமில்லை போரில்லை துன்பமில்லை. போற்றற்குரியன் புது மன்னன் காணீரோ. (பாரதி)



படிப்பகம்

www.padippakam.com

லெனின் சிலைகள் இன்னமும் மதிக்கப் படுகின்றன லெனின் உடல் புதைக்கப் படுவதை ஓர் பெரிய விஷயமாக பலர் நினைக்கவில்லை. புதைத்தாலும் தவறில்லை-கால மாற்றங்களில் புதிய ருஷ்யாவின் உன்னத சிற்பியான தந்தையான அவர் அலைக்கழிக்கபடுவதை விட புதைக்கப்படுவது தவறில்லை, என்கின்றனர். ஆனால் லெனின் ருஷ்யர்களால் பெரிதும் மதிக்கப்படும் தலைவரே. 1917 ருஷ்யப் புரட்சியல்ல ஒரு யுகப் புரட்சி. லெனின்-டிராட்ஸ்கி யாவரும் யூதர்களே எனும் புதிய கோண ஆய்வுகள்-விமர்சனங்கள்-விவாதங்களை-மீறி லெனின் துருவ நட்சத்திரமாய் அடுத்த புதிய ருஷ்யாவின் பிறப்பிற்கும் வழிகாட்டுவார். ●

கோவில்களில் கும்பாபிசேகம் நடைபெறுகின்றன. சர்ச்களில் கூட்டம். மார்பில் புரளும் சிலுவைகள் ''தடுத்தாயல்லவா-உன்னை பழி வாங்க சர்ச்சிற்குப் போகிறோம்பார்''— என்ற உணர்வுதான் தெரிகிறது. இயல்பான பக்தி தெரியவில்லை. பாவம்...கடவுளின் தேவையைக் கூட அவர்கள் மறந்து விட்டார்கள். தெருவோரக் கடைகளில் பக்திப் புத்தகங்கள் மாதா-ஏசு-சிலுவை-மெழுகுவர்த்தி மத உணர்வுகளை ஒடுக்கியது சோவியத் உடையக் காரணமா என்ற கேள்விக்கு எதிர் மறையான பதிலே பெரும்பாலும். கன்ஸ்யூமர் கூட்ஸின் தேவை அளவுக்கு கடவுளின் தேவையை அவர்கள் மதிக்கவில்லை. உணரவில்லை. எங்கோ ஓரிரு ஹரேகிருஷ்ண வெள்ளை கிருஷ்ண பக்தர்கள், ஒரு இந்திய மாதாஜி யோகா சொல்லித் வருவதாக ஒரு போஸ்டர். கோவில் புதுப்பிக்க மெட்ரோவில் யாசகம் கேட்பான் ஓர் சிறுவன். ●

## யெல்சின்

ஆடிக்காற்றில் கோபுரத்தில் ஒட்டிக் கொண்ட துரும்பு. பொதுவாக எங்கும் இவரை மதிப்பவரைச் சந்திக்கவில்லை. 'குடிகாரன்' என்ற பட்டப் பெயரிட்டு அழைப்பவர்கள் ஏராளம். புரட்சி நாளன்று வேலைக்குப் போய் அதை பத்திரிக்கைச் செய்தியாகத் தந்த புண்ணியவான். செஞ்சதுக்கத்தில் ருஷ்யக் கொடியைக் கூட பறக்கவிட மறந்தவர். 18 மணி நேரம் தொடர்ந்து தூங்கும் ஓர் உலகத் தலைவர். தகுதி வாய்ந்த மாற்றுத் தலைவர் இல்லை என்பதால் மக்கள் பொறுத்துக் கொண்டுள்ளார்கள். தேர்தல் என்றால் தேறுவது கடினம். கார்பசேவிற்கு துரோகம் செய்தவர் என்கின்றனர். பழைய கம்யூனிஸ்ட் கட்சியின் கரை புரண்டோடிய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு நெருப்பில் குளிர்காய்ந்த சந்தர்ப்ப வாதி. ''இந்த குடிகாரன் வந்தபின் இந்திய உறவு பாதிக்கப்பட்டு விட்டதே'' என வருந்தும் இந்தியாவின் நல்ல ருஷ்ய நண்பர்களைக் காண முடிந்தது ●

கல்வி-முதன்மை கவனம் பெற்ற துறை சோவியத் கால கல்விச் சாலைகள், வியக்கத்தக்க வசதிகளுடன் பெரிதாகப் பரந்துள்ளன. ஒரு 5 நட்சத்திர ஹோட்டல் போல கல்விக் கூடங்கள் அலங்கரிக்கப்பட்டு-நவீன வசதிகளுடன் எல்லாம் இலவசமாகத் தந்துவந்த அமைப்பு. சந்தை வாழ்க்கைக்கு தாலிகட்டிய பின் கல்வியை விற்றால் நிறையப்பணம் சேர்க்கலாம்.

புதிய ருஷ்யாவில் லாபகரமாக நடக்கும் பயிற்சி மொழி ருஷ்யனிலிருந்து மெல்ல ஆங்கிலத்துக்கு மாறிவிட்டால், கொள்ளை லாபக் கூடாரமாகி வரும் மூன்றாம் உலக நாடுகளின் கல்விச்சூழல் இளைஞர்களுக்கு ருஷ்யா Cheap ஆக இருக்கும் 12 லட்சம் கொடுத்து வசதியில்லாத கூரைக்கொட்டகை மருத்துவக் கல்லூரியில் படித்துவரும் மாணவனுக்கு வருடம் 2000 டாலர் ரொம்ப சீப்தான். யெல்சின் படிப்பை விற்க நம் இந்திய வியாபாரிகளிடம் பாடம் கேட்டால் நிறைய குவிக்கலாம்.

தங்கம் மஞ்சள் பிசாசு, பாட்டாளியாட்சியின் அரண்மனைகளை மக்களின் கலாச்சார மையமாக்கினார். பிரபுகளுக்கே உரியதாயிருந்த மகத்தான ஓவியங்களை சிற்பங்களை மக்கள் தினம் நடக்கும் மெட்ரோக்களில் நிரப்பினர். மெட்ரோ ஒவ்வொன்றும் ஓர் அருங்காட்சியகம். முன்பு 5 கோபெக் இருந்த டிக்கட் இன்று 250 ரூபிள். ஒரு நாள் முழுவதும் எத்தனை முறை வேண்டுமானாலும் சுற்றலாம்.

(கவிஞர் மாயகாவ்ஸ்கி எழுத்தாளர் செக்காவ் பெயரில் எல்லாம் மெட்ரோ ஸ்டேஷன் பெரிய சிலைகள்)



படிப்பகம்

## REVOLUTION METRO

புதிய ருஷ்யாவின் பிறப்பிற்கு உழைத்து உயிர் தந்த முகமற்ற ஆயிரக்கணக்கான எளிய மக்களின் பிரதி பிம்பங்கள். கூர்ந்த பார்வையுடன் எதிர் முகாமைக் கண்காணித்த அவன் எண்பது ஆண்டுகளில் சிலையாக இருந்து விட்டான். ஒவ்வொரு வளைவிலும் பெரிய இரு வேறு சிலைகள். இப்படி 10 வளைவுகள் ஒரு புறம்-என 4 தளங்கள் ஒன்று போலவே 4 சிலைகள். இரும்பில் வார்த்த உயிர்ச்சிலைகள். இன்று ஓர் சரித்திரப் பதிவு மட்டுமே. செஞ்சதுக்கம் மெட்ரோ என்ற பெயர் கூட மாற்றப்பட்டு விட்டது. தனது விடுதலைக்கும்-வாழ்வுக்கும் மேன்மைக்கும் தன்னைத் தந்த பெயர் தெரியாதவர்களுக்கு உலகின் எந்த நாடும் இனமும் இத்தனை மரியாதையும் அங்கீகாரமும் தந்திருக்க முடியாது. ஆனால் எல்லாம் ஒரு நாள் மறக்கத் தக்கதே. மாற்றத்திற்கு உட்படாதது ஒன்றே அது மாற்றம் மட்டுமே. எல்லாம் மாறும்... மறக்கப்படும். சரித்திரச் சக்கரம் சுழன்று கொண்டே முன்னோக்கியே எப்போதும். இந்த கிராட்டி பாக்டரியினுள் இருந்து கொண்டு தான் தங்கள் இறுதிப்போரை வெற்றிகரமாக நடத்தி முடித்து ஜெர்மனியர்களை விரட்டினார்கள் வீரமிகு வோல்கா கிராட் மக்கள். பின்னணியில் அமைதியாக ஓடுகிறது வோல்கா நதி. அருகில் புதிய நினைவுச் சின்னம். எந்த நாடும் தனது மக்களின் சாதாரண மக்களின் தியாகத்தை இத்தனை உன்னதமாக மதித்திருக்க முடியாது- உச்சியில் வட்ட வடிவமான பனோராமா-இறுதிநாள் போர்க்களத்தினுள்ளே நாம் நிற்பது போன்ற உணர்வூட்டுகிறது. இத்தனை தியாகத்தையும் சுயநலக்காரர்கள் பொருளற்றதாக கேலிப்பொருளாக மாற்றி விட்டது விதியோ?

ஸ்டாலின் கிராட் காத்த ஒவ்வொரு வீரனின் பெயரும் விட்டு விடாமல் இங்கே செம்பு தாளையில் பதிக்கப்பட்டு பொன் சுடரில் ஒளிர்கின்றன. இத்தனை பெரிய தியாகம் எப்படி மறைக்கப்பட்டது? இத்தனை மகத்தான நினைவுச் சின்னங்களை உருவாக்கியவர்கள் எப்படி போலிகளாய்ப் போனார்கள்? ஒவ்வொரு சாதாரணப் போர் வீரனையும் மறக்காது பதித்தவர்கள்-பின் மக்களை எப்படி மறந்தார்கள். இந்த அணையாத் தியாகச் சுடரை ஏற்றியவர்கள் எப்படி இதில் குளிர் காய்ந்தார்கள்?

இத்தனை மா...பெரும் நினைவுச் சின்னங்களின் பின்னணியிலும் எப்படி இத்தனை மா...பெரும் மறதி...இடறல்...சறுக்கல்...தலைகுப்புற விழல் நடந்தது?

லெனின் இன்றும் சரியே, Power Corrupts, Absolute Power Corrupts Absolutely இது கம்யூனிஸ்ட்டுகளுக்கும் சேர்த்தி தான்.

மகனை இழந்த தாய், கற்படிகளில் நடந்து அருகில் சென்று கண்களை உயர்த்தினால் தாயின் சோகம் கண்ணீர் சுரக்கும் ஆழமான சோகம் வடிந்த கண்ணீர் தான் குளமா? ஒவ்வொரு படியிலும் ஒரு மலர் இன்றும் உண்டு. இத்தனை தியாகமும் எப்படி வீணாகும்-மறந்து போகும்? மறதிதான் சாசுவதமோ? உலகின் உயரமான சிலையின் அடியில் அண்ணாந்து பார்த்தால் மலைப்பு ஓர் காங்கிரீட் மாயம். ஓங்கி வானில் விமானம் உரசி விடாதிருக்க உச்சியில் சிவப்பு விளக்கு இன்னும் எரிகிறது.

*

---

## சோட்டாணிக்கரை

தேவிபகவதி திருமுன்
ஆடுகின்றன அநேகம் பேய்கள்
அடக்கியொடுக்கும் சமயம் வரும்வரை
ஆடவிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்
அமைதியாய் கீழக்காவில்

அதே தாய்தான்
மேலக்காவில்
உக்ரமாயிருந்து
ஓட்டிப் பத்துகிறாள்
உரிய பொழுதில்

காலம் நேரம் வருமென்று
காத்தருக்கிறேன் நாளும்

*-விக்கிரமாதித்யன்*

(சோட்டாணிக்கரை பகவதி கோயிலுக்கு வழிகாட்டிவிட்ட சென்னை அசோக் நகர் ஜோதிடர் K.V. பெருமாள் ஐயா அவர்கள் அன்புக்கு)

www.padippakam.com

# நக்சலைட் இயக்கம்-25 ஆண்டுக்கால அனுபவம்

-சிவிக் சந்திரன்-

குறிப்பு : 1995 ஜூன் ஜூலை 'பாஷா போஷினி'-மலையாள இதழில் வெளியான கட்டுரைகளில் மூன்று, 'நிகழ்-31'ல் இடம் பெற்றன. மேலும் இரு கட்டுரைகள் இவ்விதழில் தரப்படுகின்றன. தோழர் கே. என். இராமச்சந்திரனின் கட்டுரை மொழி பெயர்ப்பில் நிகழுக்குக் கிடைக்கவில்லை. இக்கட்டுரைகளை மொழியாக்கம் செய்தவர் நண்பர் ந. மனோகரன். தமிழகத்தில் நடைபெற்ற நக்சலைட் இயக்கம் பற்றிய கட்டுரை எதனையும் இதுவரை தோழர்கள் எழுதியதாகத் தெரியவில்லை.

(இககட்டுரை ஆசிரியர் மக்கள் கலாச்சார மன்றத்திலிருந்தவர். சிறந்த கவிஞரும் நாடகாசிரியருமாவார். தற்பொழுது இதழ் மற்றும் பள்ளி ஆசிரியர்)

எழுபதுகளை மீட்சியின் பத்தாண்டுகளாக்குதல், செங்கோட்டை மீது செங்கொடி வசந்தத்தின் இந்த இடிமுழக்கங்களைக் கேட்டு அவர்கள் வந்தார்கள். காங்கிரசிலிருந்து சோசலிச காங்கிரஸ் கட்சிக்கும் அங்கிருந்து கம்யூனிசத்திற்கும் அங்கிருந்து மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சிக்கும்... இப்படி இழந்த தேடுதல்கள் உதவாது கைவிட்ட பழையதலைமுறை ஒன்றுண்டு. இதன் அகத்தளத்திலிருந்து தான் முதல் கிளர்ச்சி உண்டானது. தங்கள் கல்வியும் இளமையும் மீட்சி என்ற கனவிற்காக மொத்தமாய் இழந்தவர்களின் இறுதி முயற்சிதான் நக்சல்பாரி இயக்கம். சி.பி.ஐ(எம்) அரசியலிலிருந்து ஒய்வு பெற்றவர்கள் தான் நக்சலைட்டுகளின் முதல் தலைமுறை. அவர்களைப் பொறுத்தவரை வாழ்க்கை முழுதும் விரும்பியதும் தங்கள் வாழ்நாளில் செய்ய முடிகிற மிகக் கடைசியுமான கலகமாகக் கண்டனர். ஒரு மீட்சியும் அதன் மூலமாக இந்திய அளவிலான ஒரு தலைமையும் உறவும், பகைவரின் குருதியில் கைநனைத்து வர்க்கப் போரின் படிப்பினைகளில் தெளிந்த சகாக்களின் புரட்சி இயக்கமும், அவர்கள் விரும்பியது.

நக்சலைட்டுகளின் ஒவ்வொரு செயல்பாட்டுக்குப் பின்பும் ஒரு தடைபலம் அமுலாக்கப்பட்டது. ஒவ்வொரு செயல்படுதலுக்குப் பின்னும் அத்துடன் தொடர்பு கொண்ட எல்லோரும் சிறைக்கு அனுப்பப்பட்டனர், பௌதீக, ஆன்மீக இழப்புக்கு உள்ளாயினர், இயக்கத்திலிருந்து விலகிப் போகக் கட்டாயப் படுத்தப்பட்டனர். ஆனால் இதெல்லாம் புதிய ஒன்றுக்கு தொடக்கமாகவே அமைந்தது. ஒவ்வொரு தடவையும் தவறுகளிலிருந்து ஏதாவது கற்கவோ திருத்தியமைத்தலோ நடக்கவில்லை. ஆகவே எண்ணிப் பார்க்காத அளவுக்கு ரத்த சாட்சிகள் ...

இந்த ரத்த சாட்சிகள், இளம் அறிவு ஜீவிகளின் படிப்பறையைத் தட்டினர். ''நண்பரே நீங்கள் எந்தப் பக்கம்? இந்தியா மட்டுமல்ல உலக அளவில் இளைஞர்கள் கொதித்துக் கொண்டிருந்தனர். அதிகார அலுவலகங்கள்



படிப்பகம்

www.padippakam.com

மீது குண்டு வீசுதல்-கலகம் நியாயமானது. சீனக் கலாச்சாரப் புரட்சி, ஆப்பிரிக்கக் கரும் புலிகளின் கர்ஜனை, இலத்தின் அமெரிக்காவின் மீட்புப் போர், பிரான்சின் வசந்தகாலக் கலகம், அமெரிக்க மாணவர்களின் வியட்நாம் நட்புறவு இயக்கம்-ஒரு புது இடதுசாரி நுரைத்துக்கொண்டு எழுந்தது. இந்தியாவில், தெலுங்கில் திகம்பர கவிதை இயக்கம், ஸ்ரீகாகுளத்தின் குரலைக் கேட்டு 'புரட்சிப் படையியக்க' மாக மாறியது. கேரளத்தில், சிற்றிதழ்கள், புதுக் கவிதைகள், கதைகள், நாடகங்கள் என முளைவிட்டன. 'ஸ்டிரீற், பிரசக்தி, யெனான்' முதலிய இதழ்கள்; கெ.ஜி. சங்கரப்பிள்ளை, சச்சிதானந்தன் இவர்களின் நாடகங்கள்; எம். சுகுமாரன், யு.பி. ஜயராஜ், பி.கெ. நாணு இவர்களின் கதைகள்; இதன் ஒரு பக்கமாக கெ. வேணு ஆசிரியராக இருந்து நடத்திய 'இங்குலாப்' என்ற மாத இதழ்.

நெருக்கடிக் காலம் தோன்றுவதற்கு முன்பே அதன் சட்டதிட்டங்கள் நக்சலைட்டுகள்மீது அமுல் செய்யப்பட்டிருந்தன. அரை பிரபுத்துவ, அரை காலனிய சூழலில் தாராள மக்களுரிமை தற்காலிகமானதே என்று அறிந்திருந்தனர் நக்சலைட்டுகள். ஆகவே தான் நெருக்கடி கால நிலைமைகள் அவர்களுக்கு அவ்வளவு முக்கியமானதாகப் படவில்லை இந்நேரத்தில் கலாச்சாரப் புரட்சியில் ஈடுபட்டிருந்த அறிவுஜீவிகள் பின்வாங்கிப் போயினர். முன்பே தீர்மானித்து வைத்திருந்த ஏதோ சில செயல் திட்டங்களைத்தான் நெருக்கடி காலத்திலும் நடத்தினர் நக்சலைட்டுகள். அத்துடன் தொடர்பு கொண்டிருந்த யாவரும் சிறையிலடைக்கப்பட்டனர். வரிசையிலிருந்து வெளியேறிய அறிவுஜீவிகள் மீண்டும் உணர்ந்து இயக்கத்திற்குள் திரும்புமுன் நெருக்கடிகால நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு விட்டன. பின்னர் சி.பி.ஐ. (எம்.எல்)யுடன் சேர்ந்து கலாச்சாரப்பணிகள் செய்யும் ஆலோசனை வந்தது, நெருக்கடி கால கட்டத்தின் போது பின் வாங்கிப் போன பிரிவு 'சமஸ்யா'-வின் தலைமையிலும் கூடி கலாச்சாரப் பணிகளில் ஈடுபட்டன.

மக்கள் கலாச்சார மன்றத்திற்கு அலுவல் ரீதியான உருக்கொடுப்பு அறிவிக்கப்பட்ட 'அந்திக்காடு கன்வென்ஷனுக்கு' முன்பே ஆக்டிவிஸம், அரங்கு, கவிதை போன்ற துறைகளில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. கலாச்சாரம் என்றால் கலையும் இலக்கியமுமல்ல, அரசியல் தவிர உள்ள வாழ்வின் அனைத்துப் பக்கங்களையும் அந்தச் சொல்லாட்சி தாங்கி வருமளவுக்கு விகாசம் ஏற்பட வேண்டும் என்ற கருத்தை ஆக்டிவிஸ்ட்டுகள் முன் வைத்தனர். அதற்கு முன்பே சமூக சேவைகளில் ஈடுபட்டிருந்த இந்த ஆக்டிவிஸ்ட்டுகள் இதற்குப்பின் மிகச் சக்தியுடன் வெளிப்பட்டனர். காவி வேட்டியும், தோள் பையும் நீட்டி வளர்த்த தாடியும் மீசையும், தலைமுடியும், எரிகின்ற கண்களும், காரமான வார்த்தைகளையும் பேசக் கூடிய இவர்கள்தான் மலையாளிகளுக்கிடையே ஒரு புது இளமையை உணர்த்தினர் முதன்முதலாக மலையாளிகள் ஆச்சர்யத்தோடு விழி விரித்தது இந்த நக்சலைட்டுகளைக் கண்டுதான். மக்களால் இவர்கள் நேசிக்கப்பட்டனர். சுவரெழுத்தை அறிமுகம் செய்தனர். 'மைக்' இல்லாமல் பொதுக்கூட்டம் நடத்தலாம் என்றானது. சுவரெழுத்துக்கள் அரசியல விவாதங்களாயின. வீதிகள் எல்லாம் திறந்த பாடசாலைகளாயின.

படயணி, அம்ம, ஸ்பார்டாக்ஸ், நாடுகத்திக, வீதி நாடகங்கள்-அரங்கிற்கே ஒரு புதுமொழி உருவானது இக்காலத்தில் தான். கவிதைகளால், கவியரங்குகளால் கடம்மனிட்ட, பாலச்சந்திரன் சுள்ளிக்காடு, சச்சிதானந்தன், வினயச்சந்திரன், சிவிக்சந்திரன் போன்றோரும் பிறரும் மலையாளக் கவிதையை, உள்ளடக்கத்தாலும் உருவத்தாலும் நவீனப்படுத்த முயன்றனர். 'அந்திக்காடு கன்வென்ஷனு'க்கு பின்னரே 'மக்கள் கலாச்சார மன்றம்' சமூகத்தின் நடுப்பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டது. கோழிக்கோடு மருத்துவக் கல்லூரியில் ஊழல் நடத்திய மருத்துவர்களில் ஒருவரை, கலாச்சார மன்றத்தைச் சேர்ந்தவர்கள் 'வீதி விசாரணை' செய்ததோடு புரட்சியும் அழிப்பியல்பு மற்ற கலாச்சாரப் பணிக்கும் அமைப்பியல்பும் உபத்திரவற்றதுமான கலாச்சாரப் பணிக்கும் இடையே ஒரு நேர்கோடு வரையப்பட்டது. நடக்கிற எந்த அநீதியும் அன்று மாலைக்கு முன் விசாரித்து நியாயமளிக்கப்பட வேண்டும். அப்படி நடக்க



படிப்பகம்

www.padippakam.com

வில்லை என்றால் எரிந்தடங்குவதுதான் அத் தெருவின் விதி—இப்படிப்பட்ட வரிகள்தான் அந்நாட்களில் இதயத்துடிப்பை வேகமூட்டி வந்தன.

நக்சலைட்டு இயக்கத்தில் இரு தலைமுறைகள் இருந்தன. சேவை மனம் கொண்ட முதல்பிரிவு அவர்களின் வாழ்வில் நடக்கவிருந்த இறுதிப் புரட்சிக்குத் தயார் செய்து கொண்டிருந்தனர். இன்னொரு பிரிவோ அரசியலோடு தங்கள் முதலிரவைக் கொண்டாடும் இளம் தலைமுறையினர். இருவருக்குமிடையே பொதுவானதாக அராஜக வாதத்தின் இருத்தலியலின் அறிவார்த்தமான பின்னணிகள் இருந்தன. அரசியல்வாதிகள் என்று பொதுவாக இனப்படுத்துகிற முதல் பிரிவினர் பழைய 'செங்காவலர்களாக' இருந்தனர். இரண்டாவது பிரிவினர் அரசியலோடு சம்பந்தப்படாதவர்களும் இருவரும் இணைந்து கொண்டது ஓர் அதிசயம்தான். இந்த இணைப்போடு தொடர்பு கொண்ட ஒரு (நகைச்) சுவையான சம்பவமும் உண்டு.

இடம்-அந்திக்காடு கன்வென்சன்.

கொடுங்கல்லூர்-அந்திக்காடு பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் இப்படி அறிமுகம் செய்து கொண்டனர்.

'ஆமாம் எவ்வளவு பொருத்தமாகத் தோழர் மஜீம்தார் 'அனிகிலேஷன்' (Annihilation) கொண்டு வந்தார்' தலைசேரி-கோழிக்கோடு பகுதிகளைச் சேர்ந்ததோழர்கள் அந்தப் பேச்சை இப்படி நிறைவு செய்தனர்.

'ஆமாம், 'அனிகிலேசனிலிருந்துதானே எல்லாமே தொடங்குகிறது.' இருபிரிவுகளும் அவர்கள் ஒரே விஷயத்தைப் பேசுவதாக நினைத்துக்கொண்டு இரண்டு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர்.

இதே மாதிரிப் பேச்சை ரொம்ப நாள் நீட்டிப்பது சாத்தியமற்றதாக இருந்தது. ஒரு புகலிடம் தேடி 30,35 மைல்கள் இரவில், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஒளிந்து, பதுங்கி, வெறும் காலோடு நடந்தவர்கள் நக்சலைட்டுகள். 'வீதிவிசாரணை'யின் பின் கேரளத்தின் எந்த வீட்டுக்கும் எந்த நேரத்திலும் முன்னறிவிப்பும் அழைப்புமின்றி செல்லலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் அதே நேரத்தில் தான் மக்கள் கலாச்சார மன்றத்தின் அழிவும் ஆரம்பமானது. உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஒய்.பி. சந்திரசூட் முதல் கேரள முதலமைச்சர் சி. அச்சுதமேனன் வரை வீதி விசாரணையை, நியாயம் என்றதை நினைவிற் கொள்ள வேண்டும். ஆனாலும் அந்த அலையை ஒரு இயக்கமாகவும், அரசியலாகவும் பயன்படுத்தவோ மலையாளி மனங்களில் ஒரு பண்பாடாகத் தொடரச் செய்யவோ நக்சலைட்டுகள் தவறினர். அடுத்த ஆண்டு 'அத்தோளி' கன்வென்ஷனில் மகேஷ்தேவி போன்ற எழுத்தாளி தலைமைதாங்கியும் வங்காளி, தெலுங்கு, தமிழ், மராத்தி, இந்தி, பஞ்சாபி புரட்சியாளர்கள் கலந்து கொண்ட பின்னும் மன்றத்திற்கு முன்நகாஇயல்வில்லை. 'அத்தோளி' கன்வென்ஷன் முடிவில் மூன்று கருத்து நிலைபாடுகள் ஏற்பட்டன. அரசியல் பணியே கலாச்சாரப்பணி. கட்சித்தலைமையே அதை நடத்திச் செல்ல வேண்டும் என்று சிலர் அரசியலை ஏற்கும் போது கூடவே கலாச்சாரப் பணியும் தனதாகிய சுயத்தன்மையோடு தன் மொழியும் இலக்கணமும் படைக்கவேண்டும் என்று சிலர். தன் கருத்து என்ன என்பதையே அறியாத, இருபிரிவிலும் சிக்கித் தன் சிந்தனையும் மொழியும் கலங்கிப் போன சிலர். இப்படி ஒரு நிலைமையில் அறிவு எங்கள் இயக்கத்தைக் கலைத்துவிடுவது என்ற முடிவுக்கு அழைத்துச் சென்றது. கலாச்சார மன்றம் கேரளச் சமூகத்தில் உருவாக்கின உணர்வுகளை சுயமானதாகவும் இயல்பானதாகவும் மலரவிடுவது-அப்படி ஒன்று நிகழ இயக்கமும் அதன் இருப்பும் தடையாக அமையலாம். ஆகவே 90களில் நடக்கவிருக்கிற எதிர்வினைகளின் கலாச்சார அரசியலுக்கு விதையாகவும் உரமாகவும் 'பையனூரில்' நடந்த கூட்டத்தில் மக்கள் கலாச்சார மன்றம் கலைக்கப்பட்டது. புல்பள்ளி திருநெல்லிக் காடுகளில் முழங்கிய வசந்தத்தின் இடியோசை இவ்வாறு ஏழிமலையின் மர அடுக்குகளில் பச்சையமாய் உறைந்தது. புதிய சமூக இயக்கங்கள் என்று எளிமையாய்க் கூறிவிடுகிற 'நவ கேரளீய உணர்வு' களுக்கான



படிப்பகம்

www.padippakam.com

உப்பும் காரமுமாக இருப்பது பழைய கலாச்சார மன்றத் தொண்டர்களில் சிலர்தான்.

மக்கள் கலாச்சார மன்ற அனுபவங்களை இப்படித் தொகுக்கலாமென்று தோன்றுகிறது.

1. கலாச்சார மன்றத்தின் முக்கியமான சில முடிவுகளும், கலக வாக்கியங்களும் இன்றும் பேசப்படுகின்றன. ஆனால் இந்தியச் சூழலில், நமதாகிய கலாச்சார எதிர்ப்பின் வரலாற்றுத் தொடர்ச்சியாகத் தோற்றுவிக்கப்படவில்லை. இதற்கு முன் நடந்த கலக காலத்திய போராட்ட முறைகள் கூட சீனக் கலாச்சாரப் புரட்சியிலிருந்து இறக்குமதி செய்ததாகவே கணிக்கப்பட்டன. நெருக்கடி காலத்திற்கு சற்று முன்பாக குஜராத், பீகார் மாணவர்களிடமிருந்து தோன்றிய சுயம்புவான போராட்ட வழிகளை அப்படியே கலாச்சார மன்றமும் பின்பற்றியது.

2. கலை இலக்கியத்தை, பொதுவாய் கலாச்சாரத்தை கம்யூனிஸ்ட் கட்சி ஆள முயல்வது தவறான அறிதலின் அடிப்படையில் தான் இயல்பால் மிக வேறுபட்ட அணுகுமுறைகளோடும், பார்வைகளோடும் தான் நாங்கள் பொதுவாழ்வில் ஈடுபட்டோம் என்றாலும் அப்படி ஒரு சோதனைக்கு நக்சலைட்டின் அரசியல் இயக்கம் முன் வரவில்லை.

3. அரசியல் தலைமையைக் கடந்து இச்சோதனையை முன்நகர்த்தத் தேவையான சாகச மனமோ, பொறுமையோ, படைப்பியல்பையோ வெளியிட மன்றப் பணியாளர்களால் இயலவில்லை.

4. அரசியலோடும் அரசியல் கட்சிகளோடும் மாறுபட்ட ஒரு பார்வையை எங்கள் அனுபவம் கொண்டிருந்தது அரசியலின் ஒரு தலைப்பட்சமான ஆதிபத்தியம் புழங்குகிற சமூகம் நம்முடையது. அடி முதல் நுனிவரை அரசியல் படுத்தப்பட்ட சுயத்துவ உணர்வும் தன்னம்பிக்கையும் உடைய கலாச்சார சேவையாளர்களின் புதியஒரு ஆக்டிவியம் இந்த ஆதிபத்தியத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. கவியும் அரசியல் வாதியுமாக இருக்க முடிகிற ஆக்டிவிஸ்ட்டுகள் அரசியலும் கவிதையையும் வேறுபாடுகளின்றி காணமுடிகிற, வெளியிட முடிகிற ஆக்டிவிஸத்தின் புதியதொரு தலைமுறை இனி உருக்கொள்ள வேண்டும்.

5. இதுவரை அரசியல் கட்சியின், அரசின் ஒரு துறைமட்டும்தான் கலாச்சாரம். ஆனால் அரசியலை கலாச்சாரத்தின் ஒரு துறையாக வளர்த்துக்கொண்டு வர வேண்டும். எந்தச் சமூக மாற்றமும் வெகு பக்கத்தில் வந்திருக்கிற லட்சியம் அரசியல் தான் எனினும் மிக இறுதியான லட்சியம் பண்பாடு/கலாச்சாரம் தான். எல்லாப் புரட்சிகளும், புதுசமூக அமைப்புகளும் மதிப்பீடுகளை உருவாக்குவதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. அரசியலை மையத்தை வை என்பதற்கு பதிலாக கலாச்சாரத்தை மையத்தில் வை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டிய தேவை உண்டு.

6. கலாச்சாரப் பணிகள் அரசியல் மயமாவது பற்றி நாம் நிறையப் பேசுகிறோம். 'மூலதனத்தின்' வெளிச்சத்தில் பைபிளும் ராமாயணமும் குரானும் வாசிப்போம் என்று தானே உபதேசிக்கிறோம். ராமாயணம், பைபிள், குரான் வெளிச்சத்தில் 'மூலதனம்' வாசிக்க நாம் ஏன் உபதேசிப்பதில்லை. கலாச்சாரப்பணிகள் அரசியல் மயமாகும் போதே அரசியல்பணி படைப்பியல்பு கொண்டதாக மாற்றப்பட வேண்டும். அரசியலுக்கு மதிப்பீடுகளைத் திருப்பி அளிக்கிற கடமையை கலாச்சாரப் பணியாளர்கள் ஏற்க வேண்டும்.

7. புது கலாச்சார அரசியலை/அரசியல் பண்பாட்டை முன்னிட்டு அரசியல் தொழில் மயமாவதிலிருந்து தடுக்கப்பட வேண்டும் அரசியல் ஒரு ஓய்வுக்காலப் பணியாகவும் அரசியல் வாதிகள் மதிப்பிற்குரிய குலமாவதும் இன்றுதானே? இவ்வாறு அரசியல் அரசியல் வாதிகளுக்கே பட்டயமாக்கப் பட்டிருக்கிறது. வாழ்வைப் புறக்கணித்தவரோ, சிறைக்கும் தூக்குமேடைக்கும் நகர்பவரோ இன்று தேவையில்லை. மக்களின் அன்றாடச் செயல்பாடுகளை அரசியல் படுத்துகிற, தனிமனிதன் சார்ந்ததும் அரசியலே என்ற புதிய அறிதலும் பொது வாழ்வில் உருவாகி வர வேண்டும். எந்த நிலைமைகளிலிருந்தும் ஒவ்வொருவரும் பங்கேற்பது மாதிரி அரசியல் சேவை குறித்த சித்தாந்தமும், நடைமுறைச் சாத்தியமும் ஏற்பட வேண்டும்.



படிப்பகம்

8. இன்று பொதுச் சேவையின் மையம் அரசமைப்பாக இருக்கிறது. நிறுவனம் சார்ந்த அரசியல் வாதிகளும் நிறுவனம் சாராத அரசியல் வாதிகளும் ஒரே மாதிரியாக அரசில்தான் நாட்டம் கொள்கின்றனர். அரசில் நுழைவதும் அதன் வழியாக சமூக மாறுதல் நிகழ்த்துவதும்தான் எல்லோருக்கும் லட்சியம். அரசமைப்பு அதிகாரங்களை உடையது என்றும் அது மக்களுக்குப் பொருத்தமற்றதாகும் போது அந்த அரசின் அதிகாரங்களை வீரியமற்றதாக்குவதே சமூகச் சேவை என்று நாமறிய வேண்டும். ஒரு அரசை கவிழ்ப்பதை விடக் கடினமானது ஒரு மக்களினம் ஆளப்பட ஒத்துழைக்காமலிருப்பது.

9. அரசு என்ற இடத்தில் சமூகத்தை நிறுத்த வேண்டும். நாம் எந்த சமூகத்தை குறிக்கோளாக கொண்டிருக்கிறோமோ அதற்கு ஏற்றது மாதிரி சமூக அமைப்புக்களை கீழிருந்து உயர்த்தி வர வேண்டும்.

10. மக்கள் கலாச்சார மன்றம் பேசியவை தான் பின்னர் 80களின் பிற்பகுதியில் விரிவு கண்டது. 'அமைதிப்பள்ளத்தாக்கு' காடுகளைக் காப்பதற்காக ஆரம்பித்த பசுமை இயக்கம், கலாச்சார மன்ற விஷயங்களோடு விவாதங்களை வளர்த்தபோது 90களில் நடைபெற வேண்டிய நவீன சமூக இயக்கங்கள் பற்றிய பட்டியல் உருவானது.

ஏழிமலையில் கலாச்சார மன்றம் அழியவில்லை. அது இன்னும் மண்ணின் ஆழமான பக்கங்கள் நோக்கி வேர் செலுத்தியது. அதன் முதலும் முடிவுமான பணியாளன் என்பதில் எனக்குக் கொஞ்சமும் வெட்கமோ, இரக்கமோ கிடையாது. அப்படியொரு காலகட்டம் வழியாக, அனுபவங்கள் வழியாக கடந்து செல்ல வாய்ப்பளித்ததற்கு வரலாற்றுடன் எனக்கு நன்றியுண்டு.

தீவிரவாதத்திற்கும் வரலாற்றுத் தேவை உண்டு. அதன் வரவுக்கும் சில செய்திகள் உண்டு. தேங்கிப் போன சமூக வரலாற்றிற்கு ஒரு உந்துதல் அளிக்க தீவிர வாதத்தால் முடியும். பகத்சிங்கும், சந்திரபோசும் இல்லை என்றால் 'வெள்ளையனே வெளியேறு' என்ற வாக்கியமோ, தெலுங்கானா, கல்கத்தா நிகழ்வுகள் இல்லை என்றால், 'பூதான் இயக்கமோ' நக்சல் பாரியும் ஸ்ரீகாகுளமோ இல்லை என்றால் ஒரு முழுக்கலகமோ நடந்திருக்காது' ஒரு பொற்காலத்திற்காக காலத்தையும் சமூகத்தையும் பக்குவப்படுத்தல் என்பது தான் தீவிர வாதம் தாங்கி வரும் செய்தி-தன்னளவில் அது தோல்வி அடையும் எனினும் மக்கள் கலாச்சார மன்றங்களின் பசுமையான நாட்களை நினைத்து பெருமைப்படுகிறோம் நாங்கள். அதை ஒரு அமைப்பாக மாற்றி இருந்தால் 90களை அழைத்துச்செல்லத் தேவையான நாட்டு வெளிச்சமானது இனங்காணப் படாமல் போயிருக்கும். ஆகவே அதன் அழிதலில் எங்களுக்கு வருத்தமேதுமில்லை.

***'கலாச்சாரப் பணிகள் அரசியல் மயமாகும் போதே, அரசியல் பணி படைப்பியல்பு கொண்டதாக மாற்றப்பட வேண்டும். அரசியலுக்கு மதிப்பீடுகளை திருப்பியளிக்கிற கடமையை கலாச்சாரப் பணியாளர்கள் ஏற்க வேண்டும்.'***

● ● ●

www.padippakam.com

# தொடரும் நம்பிக்கை

சச்சிதானந்தன்

தனக்குள் சுமக்கிற பிணத்துக்கு மரணாந்தர அறுவை செய்வது என்பது வேதனையைத் தருவதாகும். தனது ரத்தம் சிந்தாமல் அந்த அறுவையை நடத்த முடியாது. ஏறக்குறைய பத்தாண்டு காலம் (1972-82) மார்க்சீய லெனினிய இயக்கத்தோடு விமர்சன இயல்புடன் பழகியும் அதன் கலாச்சார இயக்கங்களில் செயல்பட்டும் சொந்த வாழ்வை, கவிதையை, இயக்கம் ஆள அனுமதித்தவன் என்ற நிலையில் அதுபற்றிச் செய்கிற எந்த விமர்சனமும் சுயவிமர்சனமாகவே இருக்கும். கூடவே கடந்த பத்தாண்டுகளாக நான் மேற்கொண்ட சிந்தனை, வாசிப்பு, அனுபவங்கள். இவை உலகளாவிய மார்க்சிய லெனினிய செயல்பாடுகள், அதன் முக்கிய போக்குகள் பற்றி விமர்சிக்க என்னைத் தூண்டின. ஆகவே அவ்வாறான ஒரு விமர்சனத்தை இணைத்துக் கொள்ளாமல் 70களில் கேரளத்தில் நிகழ்ந்த 'நவீன ஜனாதிபத்திய புரட்சி' இயக்கம் பற்றி இன்றும் விமர்சிக்க இயலாது.

இந்த இயக்கத்திற்கான கேரளச் சூழல் எப்படிப் பட்டது? கேரளம் உட்பட இந்திய மார்க்சீய இயக்கம் ஒருங்கிணைந்த சமுகப் புரட்சித் திட்டத்தைக்கைவிட்டு, தெலுங்கானாவுக்கு பிற்பட்ட ஆண்டுகளில் மெதுமெதுவாக பாராளுமன்ற ஆசைகளை வளர்த்து, பாராளுமன்றம் மூலமாகவே புரட்சியைக்கொண்டு வரலாம் என பகற்கனவு கண்டு அதனால் மக்கள் போராட்டங்களில் கவனமிழந்து அதிகார எண்ணமும் ஊழலும் சூழ்ந்திருந்த நிலை; இந்தியாவின் மற்ற மாநிலங்களில் குறிப்பாக வங்காளத்திலும் ஆந்திராவிலும் பரவியிருந்த புரட்சி இயக்கங்களின் புதிய அணுகுமுறைகளோடும் சமர்ப்பண மனோபாவத்தோடும் ஏற்பட்ட கவர்ச்சி; இந்தியாவும் சீனாவும் ஒன்றுதான் என்றும் மாவோயிய படிப்பினையின் செயல்பாடுகளைப்பின்தொடர்வதுதான் இந்தியச் சூழலுக்கு ஏற்றது என்ற பார்வை; மார்க்சீய மற்றும் இதர இடதுசாரிக் கட்சிகளின் வீழ்ச்சி; இக்கட்சிகள் பேணிவந்த பிளவுபட்ட பார்வைகள், வெறும் சம்பிரதாயமாகிப்போன முற்போக்கு இலக்கியத்தோடும் அதன் குறுகிய பார்வைகளோடும் புதிய இலக்கியவாதிகளுக்கும் அவர்களின் வாசகர்களுக்கும் ஏற்பட்ட நிறைவின்மை; 'புதிய இலக்கியத்திலிருந்து வெளிப்பட்ட மதிப்பீடுகளின் மீதான விமர்சனமும் கலைகுறித்த சிந்தனைகளும்; இருத்தலியல்-சிறப்பாக சார்த்தரின் சிந்தனைகளில் மூழ்கிய ஒருகுழு கம்யூனிசம் குறித்து நிகழ்த்திய விமர்சனங்களும், மாவோயியத்திடம் காட்டிய சாய்வும்; '68'ல் பிரான்சில் நடந்த மாணவ-தொழிலாளர் புரட்சி ஏற்படுத்திய நம்பிக்கையும்; இலத்தீன்-அமெரிக்கப்புரட்சி இயக்கங்களும் சிந்தனைகளும் அதுபோலவே ஆப்பிரிக்க, அமெரிக்க நீக்ரோ எதிர்ப்பிலக்கியம் கிளப்பிய தூண்டுதல்களும்; 'தலித் சிறுத்தைகள்' மாதிரியான தீவிரவாத சமூக இயக்கங்கள் தந்த உத்வேகம்; 'பேப்பர்பாக்' மூலமாக வெளிப்பட்ட வெளிநாட்டுப் புரட்சி இலக்கியங்களின் பிரச்சாரம்; ஆதிவாசிகள், விவசாயிகள், கைவினைஞர்கள் போன்ற ஒருங்கிணைக்கப்படாத, சுரண்டலுக்கு உட்பட்ட வர்க்கத்தின் மீது கருணை; விமர்சன ரீதியான கேள்விகளோடு பழைய கம்யூனிசக் கட்சி காட்டிய பாராமுகம், சமூகநீதி குறித்து நேர்மையான வேதனை.

இந்தச் சூழ்நிலைகள் எல்லாம் இங்கு ஒன்றாகக் கூறப்பட்டாலும் இதில் ஏதாவது



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றோ அல்லது சில சேர்ந்த ஒருகலவையோ தான் செயற்பட்டிருக்கும். என்னைப்போல நடுத்தரக் குடும்பத்திலிருந்து வந்த, ஆரம்பத் தொட்டே புதிய படைப்பு வழிமுறைகளோடு பழகி உறவு கொண்டவர்களை ஆட் கொண்டவை கலைரீதியான கூறுகள்தான். அன்றைய மார்க்சிஸ்டுகள் பேசி வந்த மேலோட்டமான, பழைய முற்போக்கு இலக்கியத்தோடு ஏற்பட்ட வெறுப்பு, அதற்கு பதில் என்று தோன்றிய பிரெக்ட், நெருடா போன்ற இடதுசாரி கவிஞர்களோடும், 'பிகாசோ, லெஷர்' போன்ற இடதுசாரி ஓவியர்களோடும், 'ப்யுனவல்' கொதார்த்,'ஐஸன்டீன்'போன்ற திரைத்துறை மேதைகளோடு ஏற்பட்ட கவர்ச்சி, சார்த்தர், குவேரா, தெப்ரே, பாலோப்ரயர் போன்ற நவீன புரட்சித் தத்துவ வாதிகளின் ஆளுமை, அன்றைய அரசியலில் ஏற்பட்ட வெறுப்பு, தீவிரவாதிகளின், தீவிர இயல்புடன்-வீரம் சாகசம், நேர்மை போன்ற மதிப்பீடுகளோடு ஏற்பட்ட நாட்டம், தீவிர வாதிகள் புதிய படைப்பு முயற்சிகளுக்குத் தந்த ஆதரவும் தலைமையும், இவை பலதையும் கைமாறக் கிடைத்த நண்பர்களின் ஆளுமை எனப்பல.

பெரும்பாலான எழுத்தாளர்களும் இலக்கியப் பார்வையிலிருந்துஇயக்கங்களைப் புரிந்து கொண்டு இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் சமூகக் கோட்பாடுகளை மதிப்பிடுகின்றனர். நானும் விதிவிலக்கல்ல. கலை ரீதியான காரணங்களுக்காக இயக்கத்தால் கவரப்பட்ட பின்னர் தான் நான் அதன் அரசியல் பக்கங்களைப் புரிந்து கொள்ளத் தொடங்கினேன். ஆனால் வெறும் செயல்படுதலால் மட்டும் அந்தக் கனமான தத்துவங்களை ஆராய்ந்தறிய அன்று இயலவில்லை. உண்மையில் எல்லோரையும் போலத்தான் நானும் இயக்கத்திலிருந்து விலகியதற்குப் பிற்பட்ட சிக்கலான இடைவேளையில் தான் மார்க்சியக் கோட்பாடுகளை, அதன் நவீன விகாசங்களைக் கவனத்தோடு பின்தொடர முற்பட்டேன். மாணவனாக இருந்த-மாணவர் இயக்கங்களோடு தொடர்பு கொண்டிருந்த காலத்தில் நான் மார்க்சியத்தின் அடிப்படை நூற்களை வாசித்திருந்தேன். ஆனால் ஐரோப்பிய 'புதிய இடது'களின் சிந்தனைப் போக்குகளை கவனிக்கத் தொடங்கியது 'இப்படிப்பட்ட' இதழ்கள் ஆரம்பித்த மேற்சொன்ன இடைவேளையில் தான். இயக்கத்தில் செயல்பட்டு வந்த நாட்களில் நான் அதிகமாக மாவோவின் முக்கிய நூல்களையும் பின் குவேரா, தெப்ரே இவர்களின் படைப்புக்களையும் வாசித்தேன். படைப்பிலக்கியங்கள் நிறைய வாசிக்கவும் மொழிபெயர்க்கவும் செய்தேன். ஆனால் இந்த காலகட்டத்தில் கூட 'சாருமஜூம்தார்' ஒரு சிந்தனையாளர் என்ற நிலையில் நிராசைப் படுத்துபவராகவே இருந்தார். ஒரு தடவை ஒரு பத்திரிகை ஆசிரியர் 'ஹோச்சிமின் பற்றியும் வர்கீஸ் பற்றியும் கவிதை எழுதும் நீங்கள் ஏன் 'சாருமஜூம்தார்' பற்றி ஒரு கவிதை எழுத கூடாது?' என்று கேட்டிருந்தார். அதற்கு 'என்னை ஆழமாய்த் தீண்டாதஆளுமைகளைப் பற்றி கவிதை எழுத என்னால் ஆகாது' என்று நான் பதில் எழுதியதாய் நினைவு.

மார்க்சிய-லெனினிய கட்சியின் 'அழித் தொழித்தல்' சித்தாந்தம் பற்றியும், சீனப் புரட்சியின் ஈயடித்த காப்பிகளை செயற்படுத்தும் குரங்குத்தனங்கள் பற்றியும் இந்த இயக்க காலத்தில் என்னிடம் நிறையக் கேள்விகள் இருந்தன. முன்பு சொன்னதுபோல தீவிர வாதிகளின் அரசியல் கோட்பாடுகளல்ல அவர்களின் சில மதிப்பீடுகளும், கலைரீதியான புதிய அணுகுமுறைகளும் தான் என்னைப் போன்ற பல நடுத்தரவர்க்க எழுத்தாளர்களையும் அது போன்ற எண்ணம் கொண்ட பிறரையும் அவர்களிடம் கொண்டு சென்றது. அரசியல் ரீதியாக என்னுடைய கருத்து வேறுபாடுகளை அப்போது நான் எழுதிவந்த 'ப்ரேரணா, கலாகௌமுதி' போன்ற இதழ்களில் நடத்தின வாக்குவாதங்களில் தெளிவாகக் காணலாம்.

மக்களைப் பயமுறுத்தி விலகி ஓடச் செய்கிற தீவிரவாதம் மட்டுமாகிப் போன இவ்வியக்கத்திற்கு சார்புடைய பார்வையாளர்கள் என்ற நிலையிலாவது மக்களின் ஒத்துழைப்பைத் தேடித் தந்தது 'மக்கள் கலாச்சாரமன்றங்கள்' தான். கேரளக் குடியிருப்புகளிலும் வீதியோரங்களிலும் அது நடத்திய கவியரங்குகளும், வீதி நாடகங்களும் 'நாடுகத்திக, அம்மா, ஸ்பார்டாக்ஸ் என்கிற அதன் தலைமையில் நடந்த நாடகங்கள், வீதியோரங்களில்



படிப்பகம்

www.padippakam.com

பொதுக்கூட்டங்களும் போராட்ட ஊர்வலங் களும், அதன் தலைமையிலும் அதன் தூண்டு தலிலும் வெளியான சிற்றிதழ்கள், அது தந்த உந்துதலில் நடந்த மொழிபெயர்ப்புகள், வெளி யீடுகள், மறுப்புக் கூட்டங்கள், மருத்துவர் களின் சுரண்டுதல் முதற்கொண்டு அது முன் வைத்த ஊழல் எதிர்ப்புப் பணிகள், 'அநீதி களுக்கெதிராக கலகம் செய்தல் என்ற அதன் எளிமையும் சக்தியானதுமான போர்க்குரல், ஒருசாரி இளைஞர்களில் அது ஏற்படுத்திய தார்மீக வீரம், கவிதை, நாடகம், ஓவியம் என கலைத்துறைகளில் அது உயர்த்திய கலகமும் நவீன இயல்பும் கொண்ட கற்பனை இதனால் எல்லாம் ஏற்பட்ட பொலிவும், நீதி உணர்வும் கேரளத்தின் சமூக-அரசியல் வர லாற்றில் மறுமலர்ச்சி இயக்கத்திற்கும் கெ.பி.சி.சி. காலகட்டத்திற்கும் பின்பு ஒரு புதிய யுகத்தின் உணர்வைப் படைத்தது.

ஆனாலும் இந்த 'ரத்த வசந்தம்' ஏழெட்டு ஆண்டுகளில் முடிவடைந்தது. கலாச்சார மன் றங்கள் நொறுங்கிவிழக்காரணம் ஏதோ சில நபர்கள் தான் என்று நான் கருதுவதில்லை. பல்வேறான சூழ்நிலைகளின் சந்திப்பால் அது நிகழ்ந்தது. தோழமை இயக்கங்களின் சுதந் திரமான வளர்ச்சியின் மீது பயங்கொள்ளல் என்பது கம்யூனிஸ்ட் கட்சியின் இயல்பாக இருக்கிறது. கலைஞர்களையும், அறிவு ஜீவி களையும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பயன்படுத்திக் கொண்டாலும் அவர்களின் சுதந்திர இயல்பின் மீது கட்சிகள் பயங்கொள் கின்றன. தங்களது சட்ட திட்டங்களில் அவர் களுக்கு விலங்கிட்டு நிறுத்தல் முடியாத காரி யம் என்று கட்சிகளுக்குத் தெரியும் தான். டி. ஒய்.எப்.ஐ சக்தியடைந்து சுதந்திரமாக வளர ஆரம்பித்தபோது மார்க்சியக் கட்சி அதற்கு கால்விலங்கு பூட்டியது. சாஸ்திர சாகித்ய பரிஷத்தோடு, பெண்ணிய இயக்கத்தோடு, கலை இலக்கியத்துறைகளோடு அது கொள் ளும் எச்சரிக்கையும் நமக்கு பழக்கப்பட்டது தானே? மார்க்சிய-லெனினிய கட்சிகளுக்கு இப்படி ஒரு பயத்தை கலாச்சார மன்றங்களும் ஏற்படுத்தின. கட்சியோடு கலாச்சார மன்றங் கள் அவ்வளவு நெருக்கமான உறவைக் கொண் டிருக்க வில்லை; ஒரு புதிய விசாலமான இடதுசாரிப் பண்பாட்டு இயக்கத்தைத்தான் அது கற்பனை செய்திருந்தது; கட்சியிலிருந்து ஆணைகள் வரும் வரை சி.பி.ஐ, சி.பி.ஐ(எம்) கட்சிகளோடு தொடர்புகொண்ட பலரும் கலாச்சார மன்றத்திற்கு ஒத்துழைப்பு தந்திருந் தனர்.

இப்படியாக கட்சியும் மன்றமும் விலகிக் கொண்டிருந்த வேளையிலேயே கட்சிக்குள் நிலவிய கருத்து வேற்றுமைகள் வலுப்பட்டு அது மன்றம் வழியாக வெளிப்பட்டது. இந்தச் சண்டைகளும் வழியடைப்புக்களும் நிறையத் தற்கொலைகளுக்கும், அதற்குத் துல்லியமான ரத்தசாக்ஷியாதலுக்கும்காரணமானது. நிலமை யிலிருந்து மேலெழும்பி வாழ இரண்டே வழிகள்தான் இருந்தன- அனுசரணையுள்ள முட்டாளாக இருத்தல் அல்லது போராட்டங் களுக்கு மற்றொரு வழியைக் கண்டுபிடித்தல். முரண்பாடுகளையும் போராட்டங்களையும் கவிதை வழியாய் சித்தரிக்க முடிந்ததால் மட்டும் என்னைப் போன்ற சிலருக்கு நிலை நிற்க முடிந்தது. கவிதையில் கட்சியால் கீழடக்க முடியாததன் அழகியல் சார்ந்த ஓரிடத்தை தக்க வைத்துக்கொண்டு அந்த இடத்தில் காதலையும் மரணத்தையும் ஆன் மீகத்தையும் கடந்துவர அனுமதித்து, கம்யூ னிச ஏகாதிபத்தியம் உட்பட, ஏகாதிபத்திய விமர்சனங்களை அதன் வழியாக வளர்த்துக் கொண்டு-

இயக்கத்தின் வீழ்ச்சிக்கு இன்னும் நிறை யக் காரணங்கள் இருக்கின்றன. இந்தியாவின் எல்லாப்பகுதிகளிலும் ஒரே மாதிரியான சித் தாந்தத்தை நடைமுறைப்படுத்த முடிய வில்லை. உதாரணமாக, சமூகச் சீர்திருத்த இயக்கங்கள், தேசிய இயக்கம், முதற்காலக் கம்யூனிச இயக்கம் இவை வழியாக நிறையவே மாற்றங்கள் நடந்து 'வாக்குப்பெட்டி வழி யாக'வே கம்யூனிஸ்ட் கட்சியை அதிகாரத் திற்கு விட்டு ஜனாதிபத்திய சக்தியை உறுதிப் படுத்தி, நிலச்சீர்திருத்தம் மூலமாக பிரபுத்துவ ஆட்சியை ஒழித்து, 'தரகு முதலாளியம் உட் பட ஒருவித பெரு முதலாளியம் வளர்ந்து வரும் தறுவாயும் வாழ்வின் அன்றாட அவசியத் தேவைகள் ஒருவாறு நிறைவேறிக் கொண்டு மிருந்தது. கேரளத்தின் அரை-நிலவுடமை, அரை-காலனியச் சூழல்கள் பற்றி 'சாருமஜும் தார்' தந்த முடிவுகளும், அழித்தொழிப்புத் தந்திரங்களும் மாவோயிய புரட்சி வழிகளும்

www.padippakam.com

கேரளச் சூழலுக்கு கொஞ்சமும் பொருத்தமான தாக இருக்கவில்லை. யதார்த்தமற்றதும் யந்திரத்தனமானதுமான சித்தாந்தத்தை அதிக யதார்த்தமற்றும் யந்தரத்தனத்தோடும் பின்பற்றி நடைமுறைப்படுத்த முயன்றது தீவிரவாத இயக்கம்; உண்மையில் நிலவிய சூழலானது இயக்கத்தின் ஆன்மசக்தியான கொள்கைகளுக்கு எதிரிடையாக இருந்து மோதிக்கொண்டன. ஆதிவாசிகள் சுரண்டப்பட்டுக்கொண்டிருந்த வடநாட்டின் பழமைச் சூழலில் மட்டும் தான் அந்த சித்தாந்தம் ஓரளவாவது வெற்றி கண்டது. ஆனால் கேரளத்தின் பொதுவான சூழலிலிருந்து அது எவ்வளவோ தொலைவிலிருந்தது.

நெருக்கடிகால நிலமைகளை கட்சி எதிர்கொண்ட விதம் என்னைப் போன்றவர்களை ஆழமானதொரு மறுசிந்தனைக்குத் தள்ளியது. இந்திய அரசமைப்பு ஒரு பாசிசம் என முன்பே எழுதி வைத்துக்கொண்ட கட்சிக்கு இந்தநிலைமையின் போது புதிதாக எதையும் கண்டு சொல்ல இயலாமல் போனது. கட்சி தன்னையே மக்கள் சமூகமாக கற்பனை செய்திருந்தது மட்டுமின்றி என்றுமே அரசின் கொடுமைகளுக்கு ஆளாகியிருந்த கட்சிக்கு நெருக்கடி காலம் எந்தவொரு முக்கியத்தையும் அளிக்கவில்லை. அந்த நிலை அதற்கு இயல்பானதாக இருந்தது. மக்களின் நிலையும் தம்முடையது போலத்தான் என்றே அது நினைத்தது. ஆனால் மக்களின் நிலை அதல்ல. சாதாரணப் போராட்டங்களும் ஊர்வலங்களும் கூட மறுக்கப்பட்ட நெருக்கடி காலத்தை பாசிசவரவுக்கான கட்டியங்கூறலாகவே கண்டனர் மக்கள். மக்களாட்சிதன் சுதந்திரங்களைக் காக்க வேண்டிய தேவையை உணர்த்தியும், மக்களாட்சி-எதேச்சதிகாரம் இவை தம்மிலான வேறுபாடுகளைத் தெளிவாக எடுத்துக்காட்டிய நெருக்கடி காலம், மார்க்சிய-லெனினிஸ்டுகளுக்கு ஒன்று மற்றதாகவும் பொருட்படுத்தக் கூடியதாகவும் இல்லாமலிருந்தது என்னைப் போல அநேகரைக் கலங்கச் செய்தது. அந்த நிலையில் கட்சியிலிருந்து விலகிப் போவது கோழைத்தனமும் வஞ்சனையும் ஆகுமென நினைத்து நாங்கள் யாரும் அப்படிச் செய்யவில்லை.

ஆனால் அதன் போக்கும் நோக்கும் தவறானது என நாங்கள் தெளிவாக அறிந்திருந்தோம். கட்சியைப் பொருட்படுத்தமால் நான் சிறிய அளவிலாவது எதிர்ப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தேன். அன்று நான் எழுதிய எல்லாக் கவிதைகளிலும் அந்த மறுப்பு உண்டு. அது மட்டுமல்ல அன்றே சிறு சிறு குழுக்களுக்கு தலைமைதாங்கவும், இரகசியக் கூட்டங்களில் பங்குபெறவும் செய்தேன். கேரளமாக இருந்ததால் மட்டும் தான் சிறைக்குப் போகாமல் இதெல்லாம் செய்ய முடிந்தது. சில சென்சார்களும் நிரந்தரமான கண்காணிப்பும் என்மேல் இருந்தது என்றும் அன்றைய அரசுடன் மோதி நரக வேதனைகளை அனுபவித்து இறந்தவர்களை நினைக்கும்போது இதெல்லாம் சொல்லக்கூட வெட்கம் மேலிடுகிறது. ஆனாலும் அன்று மக்களாட்சியும் எதேச்சதிகாரமும் தம்மில் சில வேறுபாடுகளைக் கைக்கொள்ளவேண்டியதன் தேவை எங்களில் பலருக்கும் புரிந்தது. குருடர்களாயிருந்த சகாக்களை விட ஆனந்தும், ஒ.வி. விஜயனும் தான் நட்புக்கு ஏற்றவர்களாக இருந்தனர். சாருமஜும்தாரை விட ஜயப்பிரகாஷ் நாராயணன்தான் எனக்கு பெருமைக்குரியவராகப்பட்டார்.

இவ்வேளையிலேயே இயக்கத்தின் அழிவும் ஆரம்பித்திருந்தது. குழுச்சண்டைகள் வன்மையாயின. ஒரு குழுவைச் சேர்ந்தவன் இன்னொரு குழுவைச் சேர்ந்தவனிடம் விரல் நீட்டி 'உன்னை வெளியேற்றுவேன்' என்று பயமுறுத்துவது முதல் கொலைப்படுத்தல் வரையான ரகசிய ஆலோசனை வரைக் கொண்டு சென்றது இக்குழுச் சண்டைகள். விசாரித்தலுக்கு மனித பண்பு நஷ்டமடைந்தது. தனிநபர் விரோதமும், தத்துவச் சிக்கல்களையும் முன்னிட்டு கட்சிக்குள்ளேயே சகாக்களை விசாரணை செய்தனர். இதோடு கூட இயக்கத்தில் முன் தலைமுறையின் அனுபவமோ, அறிவோ, நீதியுணர்வோ அற்ற முரடர்களான ஒரு இரண்டாம் தலைமுறை அவர்களில் பலரும் சமூக விரோதிகளாக மட்டுமே இருந்து வந்தனர். சிதிலமடைதலும் வீழ்ச்சியும் நிகழ்ந்து கொண்டிருந்த இதே கட்டத்தில்தான் கலாச்சார மன்றத்திலும் கருத்து குழப்பமும் செயல்படுதலில் சோம்பேறித்தனமும் நிலவியது. அது அன்றே அழிந்து போனதும் நல்லது தான். தொடர்ந்திருந்தது என்றால் அது தன் தொடக்ககால தத்துவங்களை



படிப்பகம்

யும் பார்வைகளையும் இழந்து வெறும் ஒரு பாசிச கலாச்சார இயக்கமாக மாறி இருக்கும்.

மன்றம் இவ்வாறாக அழிந்தது என்றா லும் அது எழுப்பிய கேள்விகள் நின்றன. பின்பு மகளிர் விடுதலை இயக்கமாகவும், சுற் றுச்சூழல் இயக்கமாகவும், நுகர்வோர் இயக்க மாகவும், குடியுரிமைச் சங்கமாகவும் புலன் விசாரணைகளில் இறங்குகிற பத்திரிகை களாகவும் வெளிப்பட்டன. மன்றத்தில் செயல் பட்டிருந்த பலரும் இவ் இயக்கங்களிலும் முழு தாகப் பங்கு கொண்டனர். மன்றத்துடன் தொடர்பு கொண்ட முந்திய தலைமுறையினர், அவர்களின் பார்வை இன்று எவ்வளவுதான் மாறிப் போயிருந்தாலும் அவர்களால் அநீதிக் கும், ஊழலுக்கும் கூட்டு சேர முடியாது என்று தான் நம்புகிறேன். அந்த அளவுக்கு ஆழமான ஒரு மதிப்பீட்டுணர்வை அன்றைய செயல்பாடுகள் அவர்களுக்கு ஊட்டியிருந்தன. 1968ல் பிரஞ்சு அறிவுஜீவிகள் ஏற்படுத்தியது மாதிரி ஒரு நிலைத்த சுவாதீனமாக அது மாறிவிட்டது.

மார்க்சிய-லெனினிய இயக்கம், கலாச்சார மன்றம் இவற்றின் அழிவு புதிய சிந்தனை களுக்கும் தேடல்களுக்கும் வழியமைத்திருக் கிறது. அன்றைய தோல்விகளை இன்று உலகளாவிய ரீதியில் மார்க்சியம் எதிர்கொள் ளும் நெருக்கடிகளுடன் பொருத்திக் காண வேண்டும். மார்க்சியம் இரண்டாம் பிளவு பட்டிருப்பதாக நினைக்கிறேன் நான். ஒரு பக்கம் நடைமுறையியல்பு கொண்ட தத்துவ மாகத் தோன்றி மார்க்ஸ், லெனின், ஸ்டா லின். மாவோ இவர்களிடம் வளர்ந்த ஒரு முக்கிய ஒழுங்கு இன்று உலகிலிருந்தே மறைந்து விட்டது. (சீனாவில் இன்றிருப்பதை மார்க்சியம் என்று சொல்ல அதீதமான கற் பனை வேண்டும். கியுபா பல்வேறான நெருக் கடிகளில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.) அதன் முக்கிய இயல்பு நடைமுறைப் படுத்தல், பயன் படச் செய்தல் என்பதாக இருந்தது. ஆனால் அது இன்று இழந்திருப்பதும் அந்த இயல்பைத் தான். 'ரோசாலக்ஸம்பர்க்' தான் லெனினை விடச் சரி. 'க்ராம்ஷி' தான் ஸ்டாலினை விட பெருமைக்குரியவர். எந்த ஏகாதிபத்தியத்திற் கும் மனிதனின் சுதந்திர நாட்டத்தின் முன் ஈடுகொடுத்து நிலைத்து நிற்க முடியாது. ஆயுத பலத்தால் ஏற்படுத்துகிற மாறுதல்களை நிலைக்கச் செய்யும் முயற்சியில் அரசமைப்பு தானாகவே ஆயுதபலத்திற்கு கீழடங்குகிறது. லட்சியம் மார்க்கத்தை எளிமைப்படுத்துவ தில்லை, மாறாக மார்க்கம் சில வேளை லட்சி யத்தையே விழுங்கும் முதலாளியம் நெருக் கடியை எதிர்கொள்கிறது என்கிற பொய்யான நம்பிக்கையைப் பேணி, இந்தியக் கம்யூனிஸ்டு கள் உட்பட்ட பல கட்சிகள் அறுபது ஆண்டு களைப் பாழாக்கிவிட்டன. (இது ஒரு 'பெரிய' மார்க்சிய தலைவரே கூறக்கேட்டது) இவ்வாறு கடந்த பத்தாண்டு அனுபவங்கள் நிரூபிக் கின்றன.

மார்க்சியத்தின் இன்னொரு கிளையோ வெறும் சித்தாந்த, கல்வியியல் உலகில் மட்டு மாய் வாழ்கிறது. அல்தூசரு அடோனாவும் ஹெபர் மார்க்ஸ், ஹெர்கெய்மரும் பவுலன் சாஸிம், வால்டர் பெஞ்ஜமினும் பிறரும் உள் ளிட்ட இந்தக் கிளைதான் உண்மையில் மார்க் சியத்தின் முக்கிய கிளை மௌனம் காட்டிய துறைகளில் மிகச் சுதந்திரமான தேடுதல்களை மேற்கொண்டன. தோற்றுப்போன ஒரு நடை முறை மார்க்சியமும் பல்கலைக் கழகங்களில் மட்டுமே ஒடுங்கிப் போய்விட்ட ஒரு அக்கடா மிக் மார்க்சியம் என்று இரண்டாக உலக மார்க்சியம் இன்று பிரிந்து கிடக்கிறது என்பது தான் உண்மை. கூடவே புதிய சவால்களை எதிர்கொள்ளும் இயல்புகளை மார்க்சியம் இன் னமும் தேடிக்கொள்ளவில்லை. மதங்களின் மறு அமைவு, சுற்றுச்சூழல் பிரச்சினைகள், யுத்தமும் தீவிரவாதமும் கிளப்புகிற வன்முறை வெறி நுகர்வோர் வெறி, புதிய தொழில் நுட் பக் கல்வியும் நிர்வாக முறைகளும் மற்றும் தொழில்துறையிலும் தொழில்சார் உறவுகளி லும் ஏற்படுத்தியிருக்கிற மாறுதல்கள், மின்ன ணுத்தொடர்பு சாதனங்கள், ஏற்படுத்தியுள்ள தகவல் பரிமாற்ற மாறுதல்கள், சம்பிரதாய மான பொருளில் வர்க்கங்களற்ற பிரிவும் அவற்றின் நடப்பியல்புகொண்ட தத்துவங் களும், பால், இனம், குலம், சாதி, நாடு சமு கப்போக்கு இவற்றை நிர்ணயிப்பதில் செலுத்துகிற பெருத்த ஆதிக்கம், உள்நாட்டு முதலாளியம் இவைபற்றி எல்லாம் தெளிவு படுத்திக்கொள்ள பழைய மார்க்சியத்தின் இறுகிப்போன சட்ட திட்டங்களால் இயலாமல்

www.padippakam.com

போயிருக்கின்றது என்பது மட்டுமல்ல பல வேளைகளிலும் இந்த நிகழ்வுகளை சரியாய் கற்க ஒரு தடையாகவும் மாறியிருக்கிறது. ஒரு நூற்றாண்டின் பின் நடைமுறைத் தத்துவமான மார்க்சியத்தில் இன்று எஞ்சியிருப்பது அதன் 'உட்டோப்பியா'க்கள் மட்டும்தான் என்று கூறுவது முரண்படுவதாகத் தோன்றும். சமத்துவம் பற்றிய அதன் கனவும் அதன் (பூத)அற உணர்வும் வாக்கு தத்தம் செய்யப்பட்ட பூமியைப் பற்றிய அதன் கற்பனையும் மனிதர்களுக்கு இன்னும் ஊக்க மளித்துக்கொண்டே இருக்கும்.

ஒரு தத்துவம் அழிவதால் மனித இனம் முடிந்து போவதில்லை. அது இன்னும் தவறுகள் செய்யும், அதை திருத்தும், அநீதிக் கெதிராய் போராடும், உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும். இப்படியாக சுதந்திரத்தையும் மேலான மனித வாழ்வையும் நோக்கி முன்னேறிக் கொண்டே இருக்கும். இயக்கங்கள் தோன்றும் போதும் மறையும் போதும் தத்துவங்கள் உருக்கொள்ளும் போதும் அழியும் போதும் மனிதனின் ஆன்மா அதன் கனவிடங்களுக்கு தன் பயணத்தை தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. நாம் நம் நம்பிக்கைகளை ஏதாவது கிழடு தட்டிப்போன தத்துவங்களோடு மட்டும் இணைத்துக் காட்டாமல் இருப்போம். மார்க்சியத்தை மனித முன்னேற்றத்தின் வாய்ப்புகளில் ஒன்றாக மட்டும் காண்போம். புதிய நூற்றாண்டுகளை புதிய பார்வைகளால் எதிர்கொள்வோம். 'ஸ்பார்ட்டாக்ஸ்' தொடங்கி 'பூமல்யா' வரையுள்ளவர்களின் வம்சம் நிலைக்காது என்றும் புதிய பிரச்சினைகளோடு போரிடுகிற மிக உயர்ந்த தத்துவங்கள் உருவாகி வருமென நம்புவோம்.

● ● ●

# ஊர்வலம்

உதிர்ந்துபோன
ரோஜாக்களுக்குப்பின்
நான் சென்றதுண்டு.

இளம் புரியாத
சோகத்தை,
வாழ்வின் முடிவை
நினைவு படுத்தும்
இம்மலர்கள் தான் நம் இறுதி தோழர்கள்

அழுகையும், துக்கமும்
பிரியும், நிராதரவும்
கப்பி சிதறிக் கிடக்கும், இம்
மென்மையான மலர்கள்,
உலகின்
தத்துவங்களையெல்லாம்
பரிகசிக்கத்தான் செய்கின்றன.

இறப்பின் வழித்தடங்கள்
மலர்களாக இருந்தாலும்,
வாழ்வு
பெரும்பாலும் முட்களாகத்தான்
இருந்து விடுகிறது.

என்றேனும் ஒருநாள்,
நானும், உதிர்ந்து போன
இந்த
ரோஜாக்களுக்கு முன்
செல்ல நேரிடும்
எல்லாவற்றையும் இழந்து,
ஊர்வலத்தின் நாயகனாய்.

ம. எஸ்தர்



படிப்பகம்

www.padippakam.com

# பெரியார்-எனது புரிதல்

பேராசிரியர் எம்.கே. சுப்பிரமணியன்
(ஈரோடு)

திருவாரூரில் 1930களில் நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் மிக்க செல்வாக்குடன் இருந்தன. நீதிக்கட்சி திராவிடர் கழகமாக மாறிய பிறகு 1940களில் கழகம் உச்சத்தில் இருந்தது. 40களில் திருவாரூரில் 7-ம் வகுப்பு, 8-ம் வகுப்பு நான் படித்த காலத்தில்தான் பெரியார் ஈ.வெ.ரா. பற்றி தெரிந்து கொண்கிறேன். பள்ளி இறுதியாண்டு வருவதற்குள் உணர்வு பூர்வமாகப் பெரியாரை ஏற்றுக் கொள்கிறேன்.

திராவிடப்பற்றையும் சுயமரியாதை உணர்வையும் துவக்கத்தில் தூண்டியவர், ''மூனா காணா'' என்று அன்றெல்லாம் செல்லமாக அழைக்கப்பெற்ற மு. கருணாநிதி தான். கருணாநிதி பேச்சால் பள்ளிமாணவர் அனைவரும் கவரப்பட்டனர். நானுந்தான்! முரசொலி ஆரம்பித்தார். கையளவுதான்! பேச்சுபோலவே அவர் எழுத்தும் வேகம்தான். அழகும் கம்பீரமும் நிறைந்த எழுத்தோட்டம். உணர்வு மட்டும் என்னை இயக்கிய அந்த வயதில் கருணாநிதியின் சொற்சித்திரத்தில்—''கவிதையல்ல'' என்ற கையகக் கருப்பேட்டில் கண்ட பெரியார் என மனத்தில் ஆழப்பதிந்தார்.

சிறுவர்களாகிய எங்களுக்கு உடற்பயிற்சி ஊர்ப்பூங்காவிலே தந்தவர் இந்து அறக் கட்டளை போர்டில் வேலைபார்த்து வந்தவர். ஓவியர் ஒருவரும் உடற்பயிற்சிக்கு வருவார். எனக்குப் பெரியார் ஓவியம் ஒன்று வரைந்து தந்தார். கண்ணாடி போட்டு வீட்டில் மாட்டினேன். முதன்முதலில் எங்கள்கூட்டுக் குடும்ப வீட்டில் நுழைந்த பெரியார்படம் அந்த ஓவியப் படம்தான்!

அன்றைய கருணாநிதி பெரியாரைத் திருவாரூருக்கு அழைத்து ஜசத்தான ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினார். மூர்த்தி ரேடியோ சர்விஸ் என்ற ஒன்று. அதில் தினமும் காலையிலும் மாலையிலும் பெரியார் வருகை குறித்த கருணாநிதியின் விளம்பரப் பேச்சு கணீரென்று இருக்கும். அவர் குரல் கேட்க, காத்திருப்போம்—ஆவலோடு! தினமும்! கருஞ்சட்டைவீரர்கள் ஆயிரக்கணக்கில் அணிவகுத்து வர, அலங்கரிக்கப்பட்ட காரிலே பெரியாரும் அன்றைய இளந்தாடி நெடுஞ்செழியனும் பவனிவர, ஊர்வலத்தில் ''குதிரையின் குளம்படி சத்தம் கேட்க'' (இது மு.க. வின் வர்ணனை!) நடிகவேள் குதிரைமீது அமர்ந்து, ஊர்வலத்திற்குத் தலைமைதாங்கி, அதனைச் செம்மை படுத்திக்கொண்டு வர, கருப்புநிற இராணுவ உடையில் கருணாநிதி கழக முழக்கங்களிட்டு வர.........அந்த கண் கொள்ளா காட்சி என் நெஞ்சில் நிறைந்தது. ''திராவிடநாடு திராவிடருக்கே'' என்ற முழக்கம் வானதிரும். ''அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை'' என்ற முழக்கம் நெஞ்சை நிமிரச்செய்யும்.

வழிநெடுக காங்கிரசார் கதர்க்கொடியை வீடுகளிலும் கடைகளிலும் செருகி வைத்தார்கள். ஊர்வலம் வரவர பலர் அப்பொழுதே தயாரிக்கப்பட்ட புதிய காங்கிரசு கொடிகளைத் தங்கள் கடைகளில் அவசர அவசரமாக மாட்டினார்கள். திருவாரூர் தெற்கு வீதியில் துவங்கிய ஊர்வலம் விஜயபுரத்தைச் சென்றடைய 3,4 மணி நேரம் பிடித்தது.

நெடுஞ்செழியன் பேசுகிறார்:-ரஷ்ய நாட்டுத்தலைவர் ஸ்டாலின் அமெரிக்காவிற்கு



படிப்பகம்

www.padippakam.com

சென்றால், ஸ்டாலினை வரவேற்க அமெரிக்க கொடியையே பறக்க விடுவார்கள். அத்தகைய நாகரிகப் பண்போடு நமது காங்கிரஸ் தோழர்கள் புதுமூவர்ணக் கொடிகளைக் கடைகளில் கட்டியும், கொடிக்கம்பங்களிலே ஏற்றியும்—அதுவும் ஊர்வலம் வரவர, கிடைத்த வாய்ப்பை நழுவவிடக் கூடாதே என்று காங்கிரஸ் கொடிகளைப் புதிதாகத் தைத்து கடைகளில் மாட்டியும்—திராவிடர் கழகத்தை, பெரியார் அவர்களை வரவேற்று இருக்கிறார்கள் என்றால், நாம் காங்கிரஸ் தோழர்களுக்கு மகிழ்ச்சிப் பெருக்கோடு நன்றி செலுத்துவோம். எழுந்த கைதட்டல் வானைப் பிளந்தது.

பெரியார் பேச்சிலே என் மனதில் நின்றது இதுதான். ''ஒண்ணேகால் ரூபாய்க்குக் கத்தரிக்கோல் வாங்கினால் நூற்றுக்கணக்கான பூணூல்களைப் பார்ப்பனர்களே அறுத்து எறியலாமே!'' என்று கூறி ''சாதி ஒழிப்பிற்கு வழி வகுக்கலாமே,'' என்று பேசியது என் மனத்தில் ஆழமாகப் பதிந்தது.

பார்ப்பன ஆதிக்கம் தஞ்சை மாவட்டத்தில் கொடிகட்டி பறந்தகாலம் அது. ஆனாலும் காரண, காரியங்களை அலசிப்பார்க்கும் முழு பக்குவம் இல்லாத வயது எனக்கு. பெரியாரை அந்த கூட்டத்தில்தான் முதன்முதலில் பார்த்தேன். 1945,46 ஆக இருக்கலாம். எனக்கு வயது 13,14 ஆக இருக்கலாம். பெரியாரின் தாடி, சிவந்தமேனி, கருப்புடை. குரல்வளம், ஊர்வலத்தில் சிங்கம் போன்ற தோற்றத்துடன் இருமருங்கிலும் பார்த்து மக்களைக் கண்களால் ஊடுருவியமை......இவற்றை என் கண்களால் பருகினேன். பெரியார் மீது இனம் தெரியாத பற்றும் மயக்கமும் ஏற்பட்டன. இதுவே முதல் சந்திப்பு. கைகுலுக்கி அல்ல, உரையாடி அல்ல; தொலைவில் இருந்து பார்த்து, சொற்பொழிவினைக் கேட்டு ஏற்பட்ட முதல் சந்திப்பு.

பார்ப்பனிய ஆதிக்கம் ஒழிய வேண்டும், சாதி ஒழிய வேண்டும், கடவுள் இல்லை என்ற கருத்துக்களே பெரியார் பேச்சின்மூலம் என் மனத்தில் ஆழப்பதிந்தன. பெரியாரின் சிவந்த மேனிச் செழிப்பினாலும், உருவ கம்பீரத்தாலும், நறுக்குத்தெறிக்கும் அவர் பேச்சினாலும் எனக்கு ஏற்பட்ட பாதிப்பு இதுவே!

## *ஜனா-மனோ திருமணத்தில்*

மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் நான்கண்ட பெரியாரை இன்னும் சற்று நெருங்கிப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது 1950களில், டார்பிடோ ஏ பி. ஜனார்த்தனம்• மனோரஞ்சிதம் ஆகியோரின் கலப்புத் திருமணம் பெரியார் தலைமையில், திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு முன்னிலையில், நூற்றுக்கணக்கானதொண்டர்கள் குழுமியிருக்க நடைபெற்றது. பெரியார் கருஞ்சட்டையினரைப் பார்த்து, நீங்கள் ஊருக்குத் திரும்புகையில் வழிச்செலவுக்கு மாத்திரம் பணம் வைத்துக் கொண்டு மீதி அனைத்தையும் ஜனா-மனோ தம்பதிகளுக்கு மொய்யாக வைத்து விடுங்கள் என்றார். திருமணப் பரிசாகக் கிடைத்த தொகை நான்காயிரம் தேறலாம்.

ஜனார்த்தனம் தந்தை, ஆரம்பபள்ளி ஆசிரியர் கருஞ்சட்டையினர் எவருக்குமே அவரைத் தெரியாது. ஜனாவின் தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தொண்டர்கள் எழும்பி எழும்பி தலையை அண்ணாந்து தூக்கித்தூக்கி பார்த்தார்கள். அய்யாவின் அருகிலே அவர் அமர்ந்திருந்தார். சின்னஞ்சிறிய மெலிந்த உடற்கட்டு; குள்ள உயரம், பார்த்தார் பெரியார். அவரை நாற்காலி பலகைமீது ஏறி நிற்கச் செய்தார். இங்கிதம் தெரியாமல் பெரியார் நடந்துகொண்டு விட்டாரோ என்ற எரிச்சல் கொஞ்சம்; இந்த ஆள் இப்படித்தான் திடீரென நடந்து கொள்ளும் என்ற நினைப்பில் கொஞ்சம் சிரிப்பு எனக்கு. இங்கிதம், நளினம், நாசுக்கு இவையெலாம் பெரியாரின் தீவிரத்திற்கும் வேகத்திற்கும் ஒவ்வாதவை. போலித்தனம் அவரிடமில்லை. எல்லாரும் ஜனாவின் தந்தையைப் பார்க்க வேண்டும் என்பதே பெரியாருக்கு அந்த நேரத்தில் இருந்த ஒற்றைக் குறிக்கோள்—ரஷ்யகாரர்போல! இவ்வாறு நான் விமர்சனப் படுத்திக் கொண்டேன். அவர் ஓர் மாபெரும் சக்தியல்லவா!

## *சிதம்பரத்தில் உணவு பரிமாறுதல்*

என் ஒன்றுவிட்ட சகோதரிக்குக் கலப்புத் திருமண ஏற்பாடு செய்தேன். பல்கலைக்



⊙ திரும்

படிப்பகம்

www.padippakam.com

கழகத்தில் ஒன்றாகப்பயின்ற என் நண்பருக்கே என் சகோதரியைத் திருமணம் செய்து வைத்தேன். சிதம்பரத்தில் பெரியார் தலைமையில் நடந்தது. மதியம் விருந்தில் அய்யாவுக்கு மணியம்மையார் பரிமாறினார்கள். அம்மாவிடமிருந்து அய்யாவுக்குப் பரிமாறும் வேலையை நான் வாங்கிக் கொண்டேன். கத்தரிக்காய் சாம்பார், காய்களைச் சாம்பாரிலிருந்து கரண்டியில் எடுத்தெடுத்துப் போட்டேன். மற்றும் பொரியல், கூட்டு அனைத்துமே, சோறும் பரிமாறிக்கொண்டே இருந்தேன். அய்யா அவர்களுக்கு குழம்பில் இருந்த மென்மையான கத்தரிப்பிஞ்சுகள் ரொம்பவும் பிடித்துவிட்டன. போடப்போட சாப்பிட்டார்கள். ஆங்கிலத்தில் தாங்ஸ், தாங்ஸ் என்று சொல்லிக்கொண்டே! மணியம்மையார் ஓடி வந்தார்கள். ''வேண்டாம்னே அவர் சொல்ல மாட்டாரே! இனிமேல் போட வேண்டாம்,'' என்றார்கள்.

நான் சிரித்தபடி சொன்னேன். ''தாங்ஸ், தாங்ஸ் என்கிறாங்க, போதும், போதும் என்று சொல்லலாமே!''என்றேன். அம்மாவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. இந்த நிகழ்ச்சி எனக்குப் பெரியாரிடத்தில் நல்ல நெருக்கத்தை ஏற்படுத்தியது. நன்றி, நன்றி என்று கூறிக்கொண்டே சாப்பிடும் பண்பாட்டினை அவர் எப்படி கற்றாரோ! கவலைப்படாமல், சுவைத்து சுவைத்து உண்பதில் பெரியாருக்கு இருந்த ஆவல் எனக்குப் புரிந்தது.

காந்தியடிகளுக்கு நேர்மாறானவர்தான். உண்ணாவிரதத்தைச் சண்டித்தனம் என்று பெரியார் காரசாரமாகத் தாக்குவதை நினைத்துப்பார்த்தேன். கொள்கை என்பது மனிதனுடைய சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு—பழக்க வழக்கங்களுக்கு—இயல்புகளுக்கு — அனுபவங்களுக்கு — அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. வெறும் ஆராய்ச்சி, அறிவு, சிந்தனையை மட்டும்பொருத்ததன்று. கொள்கை என்ற கருத்து என் மனதில் மின்னலெனப் பட்டுத் தெறித்தது.

## பொதுவாழ்க்கையில் நாணயம்

குடந்தையில் 1950 களின் பிற்பகுதியில் நான் பொருளாதார விரிவுரையாளராகஇருந்த போது. பக்கத்து ஊர்களிலே நடைபெறும் பெரியார் கூட்டங்களுக்கெல்லாம் பெரியார் மோட்டார் வண்டியிலேயே சில தடவைகள் போய்வந்திருக்கிறேன். கூட்டத்திற்குப் பிறகு களைத்து இருப்பார்கள். தலைகுனிந்தபடியே மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க இருப்பார்கள். ஏதோ சிந்தித்த வண்ணம் இருப்பார்கள். நான் அவரை உன்னிப்பாகக் கவனித்த வண்ணம் இருப்பேன். ஓர் புரியாத புதிர்போல அவர் இருப்பதாக எனக்குப்பட்டது.

அவரோடு பேசுகின்ற வாய்ப்புகள் அதிகமாகக் கிடைத்தது நான் ஈரோட்டிற்குப் பேராசிரியராக 1959-ல் வந்தபிறகுதான். கொள்கையை விட பொதுவாழ்க்கையில் நாணயத்தை ஒருபடி மேலாகவே வைக்கிறார் பெரியார் என்பது எனது திருமணத் தொடர்பான ஓர் நிகழ்ச்சியில் உணர்ந்தேன்.

என் திருமணத்திற்குத் தலைமை தாங்க குன்றக்குடி அடிகளாருக்குத் தந்தை பெரியார் ஓர் பரிந்துரைக் கடிதம் தந்தார். அடிகளார் ஒப்புக்கொண்டார். ஆனால் வரவில்லை. விடுதலை ஆசிரியர் வீரமணி எனது திருமணத்தைச் சேலத்தில் நடத்தி வைத்தார். அய்யா அவர்களுக்கு இந்த உண்மை தெரிய வேண்டாம் என்றிருந்தேன். ஆனால் கழகத் தோழர்கள் கூறிவிட்டனர். திருமணம் முடிந்து ஈரோட்டிற்கு நான்வந்து தந்தைபெரியாரைப் பார்த்தபோது, தானாகவே சற்று கோபமாகப் பேசினார்கள். ''பொது வாழ்க்கையில் நாணயமே போய்விட்டது. திருமணம் என்பது எவ்வளவு முக்கியமான நிகழ்ச்சி! எவ்வளவு பேர் வந்திருப்பார்கள்! முக்கியமானவர்கள் எல்லாம் வந்திருப்பார்கள்! கொஞ்சம் செல்வாக்கு வந்தால் போதும். நம்மவர்களுக்கு நாணயம் குறைந்து போகிறது,'' என்று பொரிந்து தள்ளினார்கள். வீரமணி திருமணத்தைப் பிரமாதமாக நடத்திவிட்டார்கள் என்றுகூறிச் சமாளித்தேன். கொள்கையை விட நாணயத்திற்கு முதன்மை தரும் பெரியாரைத் தெரிந்துகொண்டேன். பெரியாரும், காந்தியடிகளும் ஒரே மாதிரிதான்.

## வேட்டு வைக்கும் பார்ப்பான்

ஈரோட்டில் பெரியார் மன்றத்தில்தான் அய்யா அவர்களோடு பேசிக்கொண்டிருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பு எனக்கு அதிகமிருந்தது. பிராட்லாவின் ''நாத்திக விளக்கம்'' எனும் கட்டுரையை நான் மொழிபெயர்த்திருந்தேன். அதனைப் பொறுமையுடன் முழுதும் படித்துவிட்டு, ரொம்பவும் ''அகடமிக்''காக இருக்கிறது என்று கூறி, மக்கள் புரிந்து கொள்கிற மாதிரி எளிமையாக இருக்க வேண்டும் என்றார் பெரியார். 40,50 பக்கமுள்ள கட்டுரை. மொழிபெயர்ப்பும் கரடுமுரடே. உயிர்ப்பும் துடிப்பும் அதில் இல்லை. ஆனால் பெரியார் சளைக்காமல் அதனைப் படித்து முடித்து கருத்து சொன்னது எனக்கு வியப்பாக இருந்தது.

ஈரோட்டில் கூட்டம். பெரியார் வந்து விட்டார். இரு நாட்களுக்கு முன் இந்துவில் The Dynamic Brahmin என்ற புத்தகத்திற்கு, சர். சி.பி. ராமசாமி அய்யர் எழுதியிருந்த விமர்சனப் பகுதியை வெட்டி எடுத்து வந்து, கூட்டத்தில் பேச உதவுமே என்று அய்யாவிடம் தந்தேன். மொழிபெயர்க்கச் சொன்னார். The Dynamic Brahmin என்ற தலைப்பைத் ''தீவிர பார்ப்பான்'' என்று மொழி பெயர்த்திருந்தேன். பெரியாருக்கும் திருப்தி இல்லை.

அகராதியை எடுத்துக்கொடுத்து 'டைனமிக்' என்ற சொல்லுக்குரிய பொருளைப் பார்க்கச் சொன்னார். அதற்கு தரப்பட்டுள்ள அர்த்தங்களை ஒன்றன்பின் ஒன்றாகப் படித்துக் கொண்டே வந்தேன். 'டைனமைட்' என்ற சொல்வந்தவுடன், அவ்வளவு நேரம் தலையைக் குனிந்தவாறே அசைத்துக் கொண்டு, ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த பெரியார், திடீரென ''வேட்டு வைக்கும் பார்ப்பான்'' என்று கணீரெனக் கூறித் தலையை நிமிர்த்து புன்முறுவலுடன் என்னைப்பார்த்த பார்வை இருக்கிறதே! அம்மம்ம! எத்தனை அர்த்தங்கள் தொனித்தன!

விரைவில் செய்திகளை உள்வாங்கிக் கொள்வதிலும், பிரச்சினைகளைக் கடிதிற் புரிந்து கொள்வதிலும் மிகக் கூரிய அறிவு படைத்தவராகப் பெரியார் இருக்கிறார். மெத்த படித்தவர்களுக்குக் கூட விரைவில் இவற்றை கிரகிக்கும் ஆற்றல் இருப்பதில்லை. பொதுவாகவே பொதுவாழ்வில் பணி புரியும் பெருந்தலைவர்களுக்கு இத்தகைய கூர்ந்த மதியும் கிரகிக்கும் ஆற்றலும் உண்டு. ஆனால் பெரியாரிடம் இவ்வாற்றல் நிரம்பவே இருந்தது.

ஹிக்கின் பாதம்ஸில் அப்புத்தகத்தை வாங்கிவர பணம் கொடுத்து என்னையும் புலவர் இமயவரம்பனையும் அய்யா அனுப்பினார். இங்கு கிடைக்காது என்றேன் முயற்சி பண்ணிபாருங்கள், கிடைத்தாலும் கிடைக்கும் என்றார். திரும்பிவந்து கிடைக்கவில்லை என்று கூறி பணத்தைத் திருப்பி தந்து விட்டோம். இவ்வளவும் ஈரோட்டில் பொதுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர்! ஆனால் புத்தகம் பற்றிய செய்தி சென்னையில் வீரமணிக்குத் தெரிவிக்கப்பட்டது. பெரியார் சென்னை சென்றதும் அந்நூலினை பெரியாரிடம் வீரமணி தந்தார். 80 வயது கண்ட கிழவருக்குப் புத்தகத்தைக் காண ஏற்பட்ட துடிப்பு இன்றைய இளைஞர்க்குத் தேவை.

## மரணபயம்

கோவையில் சர்.ஆர்.கே. சண்முகம் நோய் வாய்பட்டு படுத்த படுக்கையாகக் கிடந்தார். அவரைப் பார்த்து ஆறுதல் கூறிவிட்டு ஈரோடு வந்த பெரியாரை மன்றத்திற்குச் சென்று பார்த்தேன். யாரிடம் சொல்வது என்றிருந்த பெரியார், என்னைப் பார்த்தவுடனேயே சர் ஆர்.கே.எஸ். நிலைபற்றி தன் மனதில் பட்டதை அப்பட்டமாகச் சொன்னார்கள்.

''படுத்த படுக்கையா கிடக்கிறாரு. பிழைக்க மாட்டார் போலத்தான் இருக்கு. பார்க்க கஷ்டமா இருந்தது'' என்றார்கள். கொஞ்சநேரம் இடைவெளிக்குப் பிறகு உணர்ச்சி பொங்க கூறினார்கள்: ''என் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடுறாரு. அவருக்கு சாகவே விருப்பமில்லை.'' பெரியார் கொஞ்சநேரம் பேசாது குனிந்த படியே தலையை ஆட்டிக் கொண்டே இருந்தார்கள்.

தொடர்ந்து, ''அவர் எல்லாம் அனுபவிச்சிட்டாரு, எல்லா பதவிகளிலும் இருந்து விட்டாரு. (அவர் வகித்த பதவிகளையெல்லாம் பெரியார் ஞாபகப்படுத்தி, ஒவ்வொன்றாக விரல் விட்டுக் கொண்டே சொன்னார்கள்.)



படிப்பகம்

www.padippakam.com

எல்லா வசதிகளையும் அவர் பார்த்திருக்கிறாரு எல்லா வசதிகளுமே அவருக்கிருக்கு வயதும் ஆகிவிட்டது. ஆனா பாருங்களேன், சாக விரும்பலை'' என்று கூறிய பெரியார் கொஞ்சம் தணிந்த குரலிலே, ''அவர் சாகப் பயப்படுறாரு'', என்று கூறி முடித்தார்கள். சர். ஆர்.கே.எஸ்.ஸிற்கு மரண பயம் இருந்தது தான் பெரியாருக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

பெரியாருக்கு எப்போதுமே உடலைப் பற்றியோ, அடுத்து என்ன நேரப் போகிறது என்பது பற்றியோ கவலையே கிடையாது. வதங்கிப் போய் நாற்றமெடுக்கும் பிஸ்கட்டை நடுநிசியில் தின்று விட்டு, வயிற்று வலி பொறுக்க முடியாமல், வண்டி போகின்ற வழியில் தஞ்சை அரசு மருந்துவமனையில் சேர்ந்து உடலைப் பேணிக்கொண்டு தன் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்த தலைவரல்லவா பெரியார்! அவருக்கு உடலாவது, குடும்பமாவது, மரணபயமாவது! ஒன்றும் கிடையாது. இவர் ஓர் உண்மையான சந்நியாசி. பற்றோ பந்தமோ பாசமோ அற்ற முழுத் துறவி பகுத்தறிவு, இதயத்தின் ஈரப்பசையை உறிஞ்சி எடுத்துவிட்டு, வறண்ட இதயத்தையே பெரியாரிடம் விட்டு வைத்ததோ!

## குடிப்பழக்கம்

குறிப்பிட்ட ஓர் பெரிய தலைவருக்கு நெருங்கிய உறவு மருமகன் முறை. எம்.ஏ. படித்தவர். பெரியாருடன் பலர் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த பட்டதாரியைப் பற்றி பேச்சு வளர்ந்தது. பட்டதாரி எனக்குத் தெரிந்தவர். அவர் மது அருந்துவார் என்பது பெரியாரிடம் சொல்லப்பட்டது. எம்.ஏ. படித்தவன் குடிப்பானா? குடிப்பானா? என்று தலையை ஆட்டிக்கொண்டு கேட்டார். ''படிச்சவங்க பலபேர் குடிக்கிறாங்க'' என்று வேறு நான் அவசரப்பட்டு குண்டைத் தூக்கிப்போட்டு விட்டேன். தந்தையின் முகத்தில் சோகரேகை நிழலாடியது. பத்து விரல்களையும் சாய்ந்த கோபுரம்போல ஒன்றை ஒன்று எதிரெதிராகத் தொட்டுக்கொண்டு, தலை கவிழ்ந்து சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார் பெரியார். கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட அவர் மனைவியார் மற்றும் சகோதரியார் நினைவும், காந்தியார் ஈரோட்டுப் பெண்மணிகளைப் பற்றி கூறியது பற்றிய நினைவும், தான் தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்த நினைவும் பெரியாருக்கு வந்திருக்கும். மது அருந்துவதைக் கேட்டால் எவ்வளவு கலவரம் அடைகிறார்!

படித்தவர்கள் குடிக்கிறார்கள் என்பதை தம்பத்தயாராக இல்லாத வெகுளித்தனம் ஓர் பெரும் வழிகாட்டித் தலைவருக்கு இருப்பது அதிசயம் தான்! மிகப் பழைய தலைமுறை அவர்! கல்வி பற்றிய அவரது உயரிய சிந்தனைமீது விழுந்த அடி இது! பெரிய தலைவர் என்பதால் அவர் நினைத்தது, நினைத்துக் கொண்டிருப்பதெல்லாம் நடந்துவிடுமாஎன்ன! காந்தியை உள்வாங்கிக் கொண்டவர் பெரியார். வெறும் வேடதாரியல்ல.

காந்தி சிலையை உடைக்கப் போகிறேன் என்பார், ஆனால் உடைக்கமாட்டார். கழகத் தோழர்களுக்கு 'உடைக்கும் போராட்டம்' நடக்கவில்லையே என்ற எரிச்சல். கடவுள் சிலையையெல்லாம் உடைப்பார், ஆனால் காந்தி சிலையை உடைக்கமாட்டார் என்பது அவரை ஆழ்ந்து பரிசீலிப்பவர்களுக்குத் தெரியும். சிலை உடைப்பு காலப்போக்கில் எங்கு போய் நிற்கும் என்பதும் அய்யா அவர்களுக்கு தெரியும்.

## தாட்சண்யம்

சுதந்திராகட்சி தோன்றிய காலம், சர்.பி.டி. ராஜனுக்கு இதில் ஈடுபாடு, நமக்கோ எரிச்சல். ஈரோட்டில் அந்த கால கட்டத்தில் (எல்லாம் 60களில் தான்.) அய்யாவைப் பார்த்து கேட்டேன், சர். பி.டி. ஆரைத் தாங்கள் கடிந்து ஏன் எழுதவில்லை என்று! விரல்கள் குவிந்தன சாய்ந்த கோபுரம் போல, தலை குனிந்து, ஆட்டிக்கொண்டே இருந்தார். கொஞ்சம் அதிக நேரம் எடுத்துக் கொண்டு சொன்ன பதில் இரண்டே சொற்கள்தாம்! ''எல்லாம் தாட்சண்யம் தான்.'' சிலவற்றில் தாட்சண்யம் காட்டுவதில்லை, சிலவற்றில் தாட்சண்யப்படுகிறார். இது எனக்குப் புரியாத புதிர்.

கட்சிக்காரர்கள் கொஞ்சம் திகிலோடு இருந்தார்கள். அய்யாவைவிட்டு வெளியே



படிப்பகம்

www.padippakam.com

வந்ததும் இமயவரம்பன், 'இப்படி எல்லாம் கேட்டால் அவருக்குக் கோபம் வந்துவிடப் போவுது. சாக்கிரதை' என்றார். 'பத்து ஆண்டுகளுக்கு முன் இப்படி கேட்க மாட்டேன். அவ்வளவு பயம்! ஆனால் இன்று பெரியார் கிழட்டுச் சிங்கம். நானோ சுண்டெலி. சிங்கத்தின் மீது புரண்டு விளையாடுவேன். சிங்கத்திற்கு எரிச்சல் வந்தால் வாலைச் சுழற்றித் தான் அடிக்கமுடியும். சுண்டெலி அதற்குள் தப்பி ஓடிவிடும்' என்றேன். எல்லோரும் சிரித்தனர்.

பெரியாரிடம் உரையாடும்போது எல்லா வித கேள்விகளையும் கேட்டு விடைபெறாத காரணத்தினால், பல செய்திகள்—அவரைப் பற்றிய செய்திகளே—நன்கு தெரியாமல் போய்விட்டது சாமி சிதம்பானார் எழுதிய ''தமிழர் தலைவர்'' என்ற பெரியார் வாழ்க்கை வரலாற்றில் பல இடைவெளிகளும், சூன்யங்களும் இருக்கின்றன. பல நிகழ்வுகள் பற்றிய சரியான செய்திகள் இல்லை. காரணம் பெரியார் வாழ்ந்த காலத்தில் அவருடனிருந்தவர்கள் ஆராய்ச்சி நோக்கோடு வினா எழுப்பி விடைபெறாமல் சோம்பி இருந்து விட்டார்கள்.

பெரியாருடன் சேர்ந்து தொண்டு புரிந்தவர்கள், தொடர்பு கொண்டவர்கள், அவருக்கு அடுத்த வரிசைக் காரர்கள், அடிமட்டத் தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தனர். அவரைப் புரிந்து கொண்டவர்கள் மிகக் குறைவுதான். பெரிய தலைவரின் தோற்றத்தில், பேச்சில் மயங்கி, அதிசயித்து, ஈர்க்கப்பட்டு பின்பற்றுபவர்களே பெரும்பாலோர். விமர்சிக்கிறவர்கள் மிகக் குறைவு. அப்படி விமரிசித்தாலும் வெண்சாமர விமர்சனங்கள் தாம்! பெர்னார்டுஷா, ஜே.எஸ். மில், பெர்ட்ரண்டுரசல், காந்தியார், வினோபா, இவர்கள் போலவே பெரியாரும் ஓர் நூதன மனிதர். உலகத்தோடு ஒட்ட ஒழுகாமல் உலகத்தை மீறி நடப்பவர்கள். ஆங்கிலத்தில் 'எக்சென்ட்ரிக்' என்பர். இத்தகைய எக்சென்ட்ரிக்குகளை எந்த சமூகம் எந்த அளவுக்குப் பொறுத்துக் கொள்கிறதோ அந்த அளவிற்கு அந்த சமூகம் முன்னேறும். இது மில் என்பார் கணிப்பு. எனவேதான், பெரியாரை நெருங்கிப் பார்த்துப்பழகி உரையாடிய எனக்கு அவருடைய சில இயல்புகளும் கருத்துக்களும் போக்குகளும் கொஞ்சம் எரிச்சலும் கொஞ்சம் சிரிப்பும் ஊட்டின.

நானும் காலஞ்சென்ற எனது இனிய நண்பர் பேராசிரியர் சி. வெள்ளையனும் பெரியாரைப் பற்றி உரையாடும் போதெல்லாம் அவரைக் கிழி,கிழியென்று கிழித்து—அவரை அக்குவேறு, ஆணிவேறாக்கி எரிச்சலையெல்லாம் கொட்டி பின்னர் அவருடைய 'எக்சென்ட்ரிசிட்டி'யையெல்லாம் பற்றி பேசிச் சிரித்து, இறுதியில் அவரைப் பரிவோடு பரிகசித்து, எவ்வளவு பெரிய மனிதர் அவர் என்று முடித்து அதிசயித்துப் போவோம்.

## நீண்ட ஆயுள்

மக்கள் தொகையியல் நிபுணர் டாக்டர் எஸ். சந்திரசேகர் எனது பேராசிரியர். சென்னை காந்திநகர் சென்று அவரைச் சந்தித்தேன். 'ஹைதராபாத்தில் இருக்கும் என் சகோதரி சீதாதேவி அய்யாவைப் பார்த்தாயா? போய் பார்த்துவா என்கிறார். ஏற்பாடு செய்யுங்கள் என்றார் பேராசிரியர். மீரான்சாகிபு தெருவில் இருந்த பெரியாரிடம் வந்து சொன்னேன். சந்திரசேகரின் குடும்பம் ராய வேலூரில் வசித்தது; அவருடைய அய்யா அந்த காலத்தில் 'ஸாம்பக்' தயாரித்து விற்றது; நல்ல சுயமரியாதை குடும்பமாக வாழ்ந்தது போன்ற பழைய சங்கதிகளையெலாம் நினைவுபடுத்திக் கூறினார் அய்யா.

அடுத்தநாள் டாக்டர் சந்திரசேகரை அழைத்துவந்தேன். மணியம்மாவைப் பார்த்தவுடன், 'மணியம்மை என்பது நீதானா! சீதாவும் நீயும் பாவாடை தாவணி உடுத்திக் கொண்டு, விளையாடிக்கொண்டிருப்பீர்களே! யாரோ என்றல்லவா நினைத்தேன்', என்று திரும்பத்திரும்பச் சொல்லவே, அம்மாவிற்கு வெட்கம் தாங்கவில்லை. பெரியாரைப் பார்த்து குருசாமி பற்றி கேட்டார். ''அவர் இப்போது இல்லை; என்னைவிட்டு விலகிட்டாரு,'' என்று பெரியார் சோகத்துடன் கூறி, தலையைக் குனித்து ஆட்டியபடியே கைவிரல்களைச் சாய்ந்த கோபுரமாக ஆக்கிக் கொண்டார்.



படிப்பகம்

www.padippakam.com

உணவுப்பழக்கத்திற்கும் நெடுநாள் வாழ்வதற்கும் உள்ள தொடர்பு குறித்து ஓர் பன்னாட்டு ஆய்வினை ஐ.நா. சபை சார்ந்த அமைப்பு ஒன்று மேற்கொண்டுள்ளது என்றும், தான் அந்த ஆய்வுக்குழுவில் இருப்பதாகக் கூறி, பெரியாரின் நீண்ட ஆயுளுக்கான காரணத்தைக் கேட்டார். அவருடைய ஆங்கிலத்தை வீரமணி மொழிபெயர்த்தார்.

சிறிதுநேரம் அமைதி. பத்துவிரல்களும் சாய்ந்த கோபுரமாயின. குனிந்த தலை, சிந்தனை ஓட்டம், பெரியார் சொன்னார்: "சின்ன வயசிலே சாக்கடையில் கிடக்கும் நெல்லிக்காயை எடுத்து சாப்பிடுவேன். அது ஒன்றும் என்னைப் பண்ணல. விஸ்வேஸரய்யா நூறு ஆண்டு இருந்தாரு. காலையிலே வாக்கிங் போறது குளிக்கிறது. இன்னும் பல செய்வார்கள். நீண்ட ஆயுளுக்காக, எனக்கு எதுவும் கிடையாது. நான் நீண்ட நாள் வாழ்வதற்குன்னு எதையும் பின்பற்றல. எங்க எது கிடைக்குதோ அதத்தான் சாப்பிடுவேன். கண்டதைச் சாப்பிடுவேன்," என்று கூறி நிறுத்தினார் பெரியார். நீண்டநாள் தான் வாழ்ந்திருப்பதற்குத் தக்க காரணங்களே இல்லாத மாதிரி பேசிய பெரியார் சற்று நேரத்தில் ஆராய்ச்சித் தன்மையில் பேசினார்.

"என் பெற்றோர்கள் நீண்ட நாள் வாழ்ந்தார்கள். எங்க குடும்பத்திலே எல்லாம் 90, 100 வயதே வாழ்ந்திருக்கிறார்கள். அது காரணமாயிருக்கலாம். டாக்டர்கள் எனக்கு ஆரோக்கியமான சீரணசக்தி மண்டலமும் இருதயமும் இருப்பதாகக் கூறுவார்கள். அதுவும் காரணமாக இருக்கலாம்." என்றார் பெரியார்.

இந்தியாவில் சாதி ஒழிய, ஒரே சாதியில் திருமணம் செய்வதைத் தடைசெய்து சட்டம் வரவேண்டும் என்று சந்திரசேகர் குறிப்பிட்டார், பின்னர் விடை பெற்று கொண்டு வெளியே வந்தபோது, சந்திரசேகர், "இவ்வளவு மகத்தான தலைவரை விட்டுப்பிரிய அண்ணாதுரைக்கும், குருசாமிக்கும் எப்படித் தான் மனம் வந்ததோ!" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

இவர்களெல்லாம் பெரியாரைவிட்டு விலகியது சுயநலம் காரணமாக இருக்கலாம். ஆனால், பெரியாரின் ஆளுமையில் என்ன குறை இருந்ததோ, இவர்களையெல்லாம் அவ்வப்பொழுது இழப்பதற்கு! அனைவரையும் அணைத்துச்செல்லும் இயல்பு பெரியாருக்கு இல்லைதான். வந்த மாட்டைக் கட்டவும் மாட்டார்; போனமாட்டைப்பற்றி கவலையும் படமாட்டார் என்று பல தோழர்கள் பெரியாரைப் பற்றிச் சொல்வதுண்டு. அவருடைய நிறையாகக் கருதித்தான் சொல்கிறார்கள். இருந்தாலும் அதுவே ஓர் குறைதானே!

## பெரியார் பற்றிய புரிதல்

ராமசாமி நாய்க்கர் ஓர் சராசரி அல்லது சராசரிக்கு மேற்பட்ட மனிதராக இருக்கலாம். அவரை நான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஆனால் பெரியாரிடம் நிறைய எதிர்பார்த்தேன்; எதிர்பார்த்த அளவுக்கு அவர் ஏதும் தரவில்லை. தனக்குப் பின் தன் நூல்களே, கருத்துக்களே, கொள்கைகளே வழி காட்டும் என்று அவர் கூறி வந்தது எனக்குச் சரியென்று படவில்லை இரண்டாவது வரிசைக் காரர்களையெல்லாம் வரவழைத்து, எதிர்காலத்தில் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என விவாதிக்காதது பெரியாரின் குறை. நிர்வாக அமைப்பைச் செம்மைப்படுத்தி, நெடுநாட்கள் இலட்சியப் பணி புரிகிற வகையில் ஏற்பாடு செய்யாமல் விட்டது பெரியாரின் பெருங்குறையே. குறிப்பாக, அமைப்பிற்குப் பெரும் சொத்தை விட்டுச் சென்றவர் நிதிநிர்வாகமும் கழக நிர்வாகமும் எப்படி நடைபெற வேண்டும் என்பதைச் சிந்திக்காமல், "இருந்தது இருந்தபடியே" விட்டுச் சென்றது பெரியார் தலைமையின் குறையே. இதற்கெல்லாம் அவர் முதுமையும் தள்ளாமையும் பெருங்காரணம் என்றே கருதுகிறேன்.

கடைசி 10 ஆண்டுகளில் அவருக்கு முதுமையின் பாதிப்பு நிறையவே இருந்தது. ஞாபக மறதியும் இருந்தது. சிந்தனைக்களைப்பும் இருந்தது. தன்னைச் சுற்றிலும் சிறந்த அறிவாளிகளை ஈர்த்துக் கொள்ளாமல் பெரியார் நடத்திய பொதுத்தொண்டு, அவருடைய இறுதிக்காலத்தில், எதிர்கால ஏற்பாடுகளைத் தீர்மானிக்கக்கூடியவாய்ப்பின்றி மங்கிவிட்டது.

அவர்மீதே குற்றம் சுமத்த முடியாது. அவர் யாருக்காகப் பாடுபட்டாரோ அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

தும் குறையுண்டு. கிடைத்த அறிவாளி களையெல்லாம் அவர் அலட்சியப்படுத்தி இருக்கலாம். எனினும் முதுகெலும்புள்ள அறிவாளிகளைத் திராவிட-தமிழ்ச் சமுதாயம் அவருக்குத் தரவில்லை. படித்த மேதைகளுக்குத் தங்கள் வளர்ச்சியே குறிக்கோள். எதுவரையில் பயன்படுவாரோ அதுவரையில் பெரியாரைப் பயன்படுத்திக்கொண்டு நாசுக்காக விலகிவிடுவார்கள். இதைத் தடுத்து நிறுத்தும் கடமையைப் பெரியார் நினைத்துப் பார்க்கவில்லை. 'போற மாட்டைப்பற்றி கவலைப்படாதவர்' பெரியார் என்பதையே அவருக்குச் சிறப்பாக்கிப் பேசி வந்தது தவறுதான். வந்த மாட்டைக் கட்டியிருந்தால் மாடு போகாதே!

நிறைய கைதட்டு விழுந்தால் பேச்சாளரைத் தடியினால் தரையில் தட்டி பெரியார் கட்டுப்படுத்துவார். தேவர் ஹாலில் சிந்தனையாளர் கழக மாநாடு. களை கட்டவில்லை மாநாடு. இரவு 7மணி. உங்கள் பேச்சில்தான் களை கட்டவேண்டும் என்றார் ஆனைமுத்து. பேசினேன். உணர்ச்சிப் பிரவாகம். இடி இடிப்பது போல விட்டுவிட்டு, தொடர்ந்து கைதட்டல்கள். பெரியார் பக்க வாட்டில் என்னை ஏறிட்டுப் பார்த்தார். என் பேச்சை அடுத்து அவர்தான் பேசவேண்டும். இவ்வுணர்ச்சி வெள்ளத்தைக் கட்டுப்படுத்த அப்பொழுது வந்த நீடாமங்கலம் ஆறுமுகத்தைப் (தஞ்சை மாவட்டத் தலைவர்) பேச வைத்தார். கட்சியை உணர்ச்சி வெள்ளத்தில் தத்தளிக்கவிட்டுவிட மாட்டார் பெரியார். கொள்கை பரப்புதல் என்பது அறிவு பூர்வமாக நிகழவேண்டும் என்பது அவர் ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடு. பெரியார் திணிக்கும் கட்டுப்பாடு என்பதனைக் கீழ்த்தரமாகப் பொறாமை என்று வருணிப்பது இரண்டாம் வரிசைக்காரர்களின் கைவரிசை!

பெரியாரின் கட்டுப்படுத்தும் போக்கு சர்வாதிகாரப் போக்காகக்கூட இருக்கலாம். கட்சியை நடத்துவதில்கூட தன்னிச்சையாக செயல்படுவார். நான் 3,4 தடவைகள் தி.க. மத்திய நிர்வாகக் குழுவில்கலந்து கொண்டிருக்கிறேன், வெறும் பார்வையாளனாக! கமிட்டி கூட்டம் சர்வாதிகாரத் தன்மையில் செயல்படுவதுபோலத் தோன்றும். உறுப்பினர்கள் தாராளமாக, சுதந்திரமாகவே பேசுவார்கள். காரசாரமாகவும் பேசுவார்கள். பெரியார் பொறுமையாகவே எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருப்பார். சர்வாதிகாரத்தில் ஜனநாயகம் பிதுக்கிக் கொண்டு இருப்பது போலத் தோன்றும்.

உணர்வு பொங்கி வழியும் பாமர ஜனத்திரளை சமுதாய புரட்சி இயக்கத்தின் கரடு முரடான பாதையில் வழி நடத்துவதற்கு ஜனநாயக முறையிடம் பலம் இல்லை. கட்டுப்படுத்தும் சர்வாதிகார நெறியே சாலச் சிறந்தது என்று பெரியார் கருதினார். முன்பெல்லாம் போராட்டம் நடத்த முதல் சர்வாதிகாரி, இரண்டாவது சர்வாதிகாரி என்றே நியமிப்பார். அவருடைய சமூகப்புரட்சி இயக்கப் பார்வையில் சர்வாதிகாரப் போக்கு அமைவதைப் பொதுமையான ஆட்சியமைப்பில்—மனிதவாழ்வு நடத்தையில்—மனித உறவில்—ஏற்றிப்பார்த்து பெரியாரை சர்வாதிகாரி எனல் தவறு. அவர் உண்மையான ஜனநாயகப் பண்பைப் பெற்றவர்.

பெரியார், காந்தியடிகள் போன்றவர்கள் இமயமலை போல. தொலைவில் இருந்து மலையின் உயர்ச்சியை-கம்பீரத்தை ரசிக்கலாம் அருகில் போனால் முண்டும் முடிச்சும், முட்புதரும், கல்லும் மண்ணும்தான்! மனிதனுக்கு இருக்கும் பலவீனங்களைத் தலைமையின் குறைபாடுகளாக ஏற்றிப் பார்ப்பது ஒருவகை அறியாமையே.

இத்தகைய தலைவர் பற்றியும் சுயமரியாதை இயக்கம் பற்றியும் பலகட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதினேன். விடுதலை, உண்மை, சிந்தனையாளன் இதழ்களிலும், மாடர்ன் ரேஷனலிஸ்டு, பெரியார் ஈரா எனும் ஆங்கில இதழ்களிலும் எழுதினேன். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில், சமூகவியல் துறையில், பழனிவேல்ராசன் தலைமையில் நடந்த கருத்தரங்கில் ஆங்கிலத்தில் இரண்டு ஆய்வுத்தான்களும்; சென்னைப் பல்கலைக் கழகத்தில் சுயமரியாதைத் தத்துவம், பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், பெரியாரும் மார்க்சிசமும்எனும் மூன்று தலைப்புகளில் ஆங்கிலத்தில் அறக்கட்டளைச் சொற்



படிப்பகம்

ப சழிவுகளும்; அதே பல்கலைக் கழகத்தில் அண்ணாமலையத்திலும், அரசியல் துறையிலும் முறையே திராவிட இயக்கத்தைத் திரும்ப உருவாக்கல், திராவிட இயக்கத்தின் அடித்தளம் நாத்திகம் என்ற தலைப்புகளில் ஆங்கிலத்தில் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளும் வழங்கினேன். ஆங்கிலத்தில் ''பெரியாரும் சுயமரியாதைத் தத்துவமும்'' என்ற நூலும், ''திராவிட இயக்கத்தில் கலைஞர் கருணாநிதியின் பங்கு'' என்ற மிகச் சிறு நூலும் சொந்தமாகவே வெளியிட்டேன்.

இரண்டு ஆண்டுகள் Freeman என்ற பெயரிலும் Sein Fein என்ற பெயரிலும் ஆங்கில மாத இதழ் நடத்தினேன். எல்லாவிதக் கருத்துக்களையும் வரவேற்று அச்சில் ஏற்றினேன். பெரியாரியத்தைப் பற்றியும், இந்திய-தமிழக அரசியல் பற்றியும் என்னுடைய ஆங்கில எழுத்துக்கள் அவ்விதழ்களில் நிறைய உண்டு. ஓராண்டும் 11 மாதங்களும் இதழ்களை நடத்தி நிறுத்தினேன். என் களைப் பால் நிற்கவில்லை; நிதி இழப்பால் நின்றது. இன்னும், 1953-54லேயே மார்க்சிய திராவிட மன்றம் என்ற பெயரிட்டு முரசொலிமாறனுடன் சேர்ந்து ஓர் சின்னகட்டுரை ஆங்கிலத்தில் வெளியிட்டோம். இதன்மூலம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவ ஆதரவாளர்களையும் பச்சையப்பன் கல்லூரி மாணவ ஆதரவாளர்களையும் இணைக்க முயன்றோம். பலிக்கவில்லை.

## *மார்க்சியமும் பெரியாரியமும்*

பார்ப்பனீய ஆதிக்கம் இன்றும் அரசியல், நிர்வாகம், ஆட்சி, சமூகம், மதம், கலை, இலக்கியம், பண்பாடு ஆகிய சர்வ துறைகளிலும் நிலைத்து நிற்கிறது. திராவிடர்கள், இந்திய பழங்குடியினர், ஆதிவாசிகள் ஆகியோர் உருவாக்கியிருந்தவற்றையெல்லாம் பார்ப்பனீயம் உள்வாங்கித் தன்வயப்படுத்திக் கொண்டு, அவற்றையே தன்னாதிக்கக் கருவிகளாக்கிக் கொண்டுவிட்டது. வர்ணாஸ்ரமும் சாதி அமைப்பும் சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் புராண இதிகாசங்களும் பார்ப்பனிய ஆதிக்கத்தளங்கள், இவற்றை ஒழித்திடாமல் பரிபூரண சமத்துவ சமுதாயத்தை உண்டாக்க முடியாது. எனவேதான் பெரியாரியம் இன்றும் தேவைப்படுகிறது.

பெரியாரிஸ்டுகளிடத்திலும் மார்க்சிஸ்டுகளிடத்திலும் காணும் குறைகளை-இயக்க, கட்சி செயல்பாடுகளில், உத்திகளில் உள்ள குறைகளை-பெரியாரியத்தின் மீதோ, மார்க்சியத்தின் மீதோ ஏற்றிச் சொல்ல முடியாது. பெரியாரிய கொள்கைப் பரிணாமவளர்ச்சியைப் பரிசீலித்தால், பெரியாரியமும் மார்க்சியமும் எவ்வாறு, எங்கே இணைகின்றன என்பதும், உலகம் தழுவிய மார்க்சியத்தில் பெரியாரியம் எங்கே இடம் பெறுகிறது என்பதும் விளங்கும். அந்தந்தசமூகச்சூழலுக்கு ஏற்றவாறு மார்க்சியம் செயல்பட வேண்டும்-செயல்படும் நோக்குடையது எனில், இந்திய-தமிழகச் சூழலுக்கு ஏற்றதாகப் பெரியாரியத்தை ஏற்றுக்கொள்ள மார்க்சியம் தயங்காது. மார்க்சிய வீச்சுக்குள் பெரியாரியம் செயல்படும். பெரியாரிய வீச்சினை மார்க்சியம் உள்வாங்கிக் கொள்ளும்; தன்வயப்படுத்திக்கொள்ளும். மார்க்சியமும் பெரியாரியமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதன்று.

பொருளாதார ஏற்றதாழ்வுகளே தனி நிலைப்பாடு கொண்டு இருக்கின்ற மேற்கத்திய சமூகங்களில்-அச்சமூகங்களின் உட்கூறுகளும், உறுப்புக்களும், கட்டுமானங்களும், இன்னும் அவற்றின் சாயல்களும், மற்றும் மனிதஉணர்வுகளும் போக்குகளும் இயல்புகளும்பொருண்மை அடிப்படை கொண்டவைகளாக இருக்கின்றன. அவையெலாம் பொருளிய நிலையையேசார்ந்திருக்கின்றன. அச்சமூகங்களிலே ஏற்படும் ஏற்ற இறக்கங்கள்; மாறுபாடுகள்; கட்டுமானச் சிதைவுகள், சீரமைப்புகள்; உறுப்புமாற்றங்கள் இன்னபிறவெலாம் பொருளாதாரரீதியான வளர்ச்சிப்போக்குகளை அனுசரித்தே நிகழ்கின்றன. இவ்வாறு சமூகம் அடுத்தடுத்துப் பரிமாணித்து வரும்பொழுது, மார்க்சியமும் வரலாற்று ரீதியாக பரிணாமிக்கிறது.

பெரியாரியம் உருவான கதையும் பரிணாம வளர்ச்சிக் கதைதான். ஆனால் இது வேறு மாதிரியாக வந்தது. என்றாலும், சமூகவியலில் இவ்விரு பரிமாணங்களும் ஒரே மாதிரியானவையே. ஒன்றுக்கொன்று தழுவிநிற்க

www.padippakam.com

கூடியவையே. மார்க்சிய பரிமாணம் உலக நாடுகள் அனைத்தையும் தழுவி நிற்கிறது. பெரியாரிய பரிமாணம் இந்தியாவிற்கு மட்டுமே பொருந்துவது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், நிலையான பரிபூரண சமத்துவம் என்பது சமூக சமத்துவமும் பொருளாதார சமத்துவமும்இணைந்த ஒன்றாகும். சமூக சமத்துவத்திற்கு பார்ப்பனியம் ஒழியவேண்டும் அதாவது சாதி, மதம் கடவுள், சாத்திரம். புராண-இதிகாசங்கள், சடங்கு, சம்பிரதாயம் ஆகியவற்றின் ஆதிக்கம் ஒழியவேண்டும். இதுபெரியாரியம், முதலாளிய ஏகாதிபத்தியமும் வர்க்கங்களும் ஒழிவது பொருளாதார சமத்துவம். இது மார்க்சியம், பகுத்தறிவும் நாத்திகமும் இவை இரண்டிற்கும் அடிப்படை எனவே, இவை இரண்டும் முரண்பட்ட தத்துவங்களல்ல.

இவை இரண்டில் எது முதலில் நிகழவேண்டும் என்று குழப்ப வேண்டியதில்லை. இன்றையச்சூழலில் சமுதாயப் புரட்சியும் வர்க்கப்புரட்சியும் மாறிமாறி நிகழத்தான் வேண்டும். பகுத்தறிவையும் நாத்திகத்தையும் சாதிஒழிப்பையும் பார்ப்பனிய ஒழிப்பையும் கொஞ்சம் தூக்கிப் பிடிக்க மார்க்சியம் முன் வந்தால்பெரியாரியத்திற்குக் கொஞ்சம் சுமை குறையும். நாத்திகத்தைப் பரப்புவதிலும் பார்ப்பனிய ஆதிக்க எதிர்பார்ப்பிலும் அளவுமீறிய, அதிகப்பிரசங்கத்தனமான ஆவேசத்தைக் குறைத்துக் கொண்டு பெரியாரியம் முதலிய-ஏகாதிபத்திய சுரண்டல் கொடுமைகளை எதிர்ப்பதைக் கொஞ்சம் தூக்கிப்பிடித்தால் மார்க்சியத்திற்கு கொஞ்சம் சுமை குறையும்.பெரியாரும் சிங்காரவேலரும் இணைந்து செயல்பட்ட காலமே இலட்சிய நிறைவேற்றலுக்கு ஏற்றகாலம். அதுமாதிரியான ஒர்காலம் மீண்டும் தோன்ற வேண்டும். தோன்றுமா?

● ● ●

# உழைப்பின் பயன்

இதுவரை காலமுள்ளள உற்பத்தி முறைகள் உடனடித் தேவைக்குப் பயன்படக் கூடிய உழைப்பாகவே இருந்தது. அந்த முறையே மீண்டும் மீண்டும் மெதுவாக தொடர்ந்தது; உற்பத்திப் பயனைத் திரட்டி வைத்திருத்தலில் கவனம் செலுத்தப் படவில்லை, ஒருபுறம் நிலம் சமூகச் சொத்தாக இருந்தது. மறுபுறம் நில உற்பத்தி பாதிக்கப்படும்போது உபரியாக காடுகள் சார்ந்த நிலம் இருந்தது.

இம்மேலதிக நிலம் பயன்படுத்தப்பட்ட பின்னர் சமூக நிலச் சொத்துடைமை குறைந்தது. எல்லா வகையான உயர்ந்த உற்பத்தி வடிவங்கள் மேம்பட மக்கள் தொகையினர் பல்வேறு வகுப்பாகப் பிரிக்கப்பட்டனர். இவ்வாறு ஆளும் வர்க்கத்திற்கும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கங்களிடையேயும் முரண்பாடு ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட நன்மையெனின் ஆளும் வர்க்கத்தின் நலன் உற்பத்திப் பெருக்கத்திற்கு உந்து சக்தியானது; ஒடுக்கப்பட்டவரின் அடிப்படைத் தேவைக்கு மேலாக உற்பத்தி நிலவியது.

மேற்கு ஐரோப்பாவின் இன்றைய முதலாளித்துவ உற்பத்தி முறை வரை இது தொடர்ந்தது. உற்பத்தியிலும் விநியோகத்திலும் ஆதிக்கம் செலுத்திய தனி முதலாளிகள் தம் செயலின் உடனடிப் பயனையே கவனித்தனர். பண்ட உற்பத்தியிலும் விநியோகத்திலும் ஏற்படக்கூடிய லாபத்தையே நோக்கமாகக் கொண்டனர்......

ஸ்பானிஷ் பெருந்தோட்ட உற்பத்தியாளர் கியூபாவின் மலைகளிலுள்ள காடுகளை எரித்து மழையினால் கீழ் நிலத்தில் படர்ந்த சாம்பலை காப்பித் தோட்டங்களுக்கு உரமாகப் பயன்படுத்தினர். மலைகளில் பாறைகளே மிஞ்சின. இப்போக்கு 10 வருடங்களுக்கு ஒருதடவை நிகழும் தனியார் உற்பத்திச் சக்கர வீழ்ச்சியால் பாதிபபடைந்தது. ஜெர்மனியும் இதிலிருந்து தப்பிவிடவில்லை. இதனால் சொத்தற்ற தொழிலாளர்பாதிக்கப்பட்டனர். உழைக்காதவர் கைகளில் சொத்துகள் குவிந்தன... (இதன்மேல் பிரதி தொடரவில்லை).

**(ஏங்கெல்ஸின் 'இயற்கையின் இயக்கம்' என்ற நூலின் ஒரு பகுதி -அன்னாரின் 100வது மணந்த நாள் நினைவாக.)**



படிப்பகம்

www.padippakam.com

# தான் தனியாகினும் தலைக்கொரு தோழனாய்

சிவகங்கை எஸ். இராமகிருஷ்ணன்

**முன்னுரை :**

தமிழகப் பொதுவுடமை இயக்கத்தில் எனது பங்கு மிகமிகக் குறைவானது. தமிழகப் புரட்சியாளர்களோடும் இதர இடது சாரிகளோடும் எனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு எனக்கு விரிவான இயக்க அனுபவமும் கிடையாது. தத்துவார்த்த விஷயங்கள் குறித்து சிறப்பாக எதுவும் கூறும் அளவுக்கு நான் கற்றுத்தேர்ந்தவனும் அல்ல. நான் அடிப்படையில் ஒரு Indiivdualist. எந்த அமைப்பிலும் தன்னையிழந்து கட்டுப்பாட்டுடன் நீடித்துப் பணியாற்றக்கூடிய பக்குவம் உடையவனும் அல்லன். இருந்தும் தமிழகத்தின் நன்முத்துக்களைக் கொண்ட இந்த இயக்கத்தைப் பற்றி விமர்சிப்பதற்கும், யோசனை கூறுவதற்கும் எனக்கு ஒரே ஒரு தகுதிதான் உண்டு. அது இந்த இயக்கத்தின் அனைத்துப் பிரிவுகள், தலைவர்கள், ஊழியர்கள் பாலும் நான் தொடர்ந்துகொண்டு வரும் மரியாதையும், விருப்பு, வெறுப்பின்றி இந்த எல்லாப் பிரிவுகளின் தத்துவார்த்த, அரசியல் நிலைபாடுகளையும் பரிசீலிக்கும் மனப்பாங்கும், பொதுமைக் கோட்பாட்டின் பால் எனக்குள்ள உறுதியான பற்றுமே அந்தத் தகுதியாகும்.

இந்த ஒரு இன்றியமையாத முக்கியமான தகுதி காரணமாகவே எனக்கு இந்தியப் பெருநிலத்தின் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகள் குழுக்களின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இந்த அங்கீகாரம் இந்த அனைத்துப் பிரிவுகள் இடையேயும் பரஸ்பர மரியாதையும், நம்பிக்கையும் உருவாகவும், தொடர்ந்து செயல் ஒற்றுமை ஏற்படவும் இறுதியாக ஒன்றுபட்ட அசைக்க முடியாத புதிய சித்தாந்த வலிமையோடு கூடிய இந்தியப் பொதுவுடைமை அமைப்பு உருவாகவும் ஒரு கிரியா ஊக்கியாகப் பணியாற்றும்.

எனது மனநிலை இவ்வரலாற்றுப் பணியை ஆற்றுவதற்கான அடிப்படைத் தகுதியை அளித்திருப்பதன் காரணமாகவே வரலாறு இப்படி எனக்கு அளித்துள்ளது. எனது வாழ்நாளில் இப்பணி முற்றுப் பெறுமானால் இந்தியப் பொதுவுடைமை இயக்கம், இந்தியத்



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் குணாம்சங்களுடன் உலகப் பொதுமை இயக்கத்திற்கே வழி காட்டியாகத் திகழ முடியும் என்ற உறுதியான நம்பிக்கை எனக் குண்டு.

எல்லோரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற்கு அளிக்கும்-ஆம்
இந்தியா உலகிற்கு அளிக்கும்-ஆம்
இந்தியா உலகிற்கு அளிக்கும்.

தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான ஆண்டாகிய 1965-ஆம் ஆண்டில் தான், நான் பொதுவாழ்வில் ஈடுபாடு கொள்ள லானேன்,

எனது சிவகங்கை நகரம் தோற்றுவிக்கப் பட்ட 1730-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு மையமாகத் திகழ்ந்து வந்துள்ளது. தஞ்சை மராத்திய அரசின் உதவியுடன் சேதுபதி பூமியின் தேசபக்த உழவர்களும் கைவினைஞர்களும், சசிவர்ணத் தேவர் தலைமையில் ஆற்காட்டுநவாப், கிழக் கித்தியக் கம்பெனி, இராமநாதபுரம் பினாமி அரசன் பவானி சங்கரன் ஆகியோரின் கூட்டுப் படையை முறியடித்து சேதுபதி பூமியை மீட்டு, வெற்றிப் பரிசாக சிவகங்கை அரசு நிறுவப் பட்ட நாளிலிருந்து மூன்று முறை வெள்ளை அரசோடு பொருது இறுதியாக 1801-ஆம் ஆண்டு மருது சகோதரர்களையும், சுதந்திரத் தையும் பறிகொடுத்த பின்னும், ஒரு ஏகாதி பத்திய எதிர்ப்புக் கோட்டையாகவே விளங்கி வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி யில் இந்தியப் பெருநிலம் முழுவதும் ஆங் காங்கே தோன்றிய அனைத்து தீவிரவாத அமைப்புக்களுக்கும் எங்கள் மண் தொண்டர் களைப் பெருமளவில் அளித்தது. முதல் உலகப் போர் வரை அடிக்கடி ஏற்படும் பஞ்சங்களுக்கு இடையிலும் இப்பகுதியின் மக்கள் வெள்ளை யரின் படைகளில் சேர்ந்து பணியாற்றுவதைத் தவிர்த்தே வந்துள்ளனர். ஒப்பந்தக் கூலிக ளாகக் கடல்கடந்து பஞ்சம் பிழைக்கப் போனார்களே தவிர தாய் நாட்டிற்கு எதிராக கூலிப்படையில் சேர்ந்து பணியாற்றவில்லை.

தொடர்ந்து இந்திய விடுதலை இயக்கத் தின் முதலாளித்துவ அமைப்பாகிய இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டபோது இப்பகுதி வழக்கறிஞர்களும், இதரதேச பக்தர் களும் அதில் இயல்பாகவே குறிப்பிடத்தக்க பங் காற்றினர், தொடக்க காலத்திலிருந்தே சிவ கங்கைச் சீமையும் அதன் தலைநகராம் சிவ கங்கை நகரும் நாட்டுப்பற்றோடு, தமிழும் ஆன்மீகமும், சமரச சன்மார்க்கமும் சேர்த்தே வளர்த்தன.

இப்பகுதியில் கிறித்துவமும், இசுலாமும் வளர்ந்து வேரூன்ற மான்யம்பல அளித்த வீர சைவன் வடுகநாதனே நமது நாட்டின் மதச் சார்பின்மைப் பாரம்பரியத்தின் முன்னோடி களில் ஒருவனாகத் திகழ்கின்றான். இந்த மண் கவியோகி சுத்தானந்த பாரதியை இந்த நாட் டிற்கு அளித்ததில் வியப்புண்டோ?

இற்றைக்கு 200 ஆண்டுகட்கு முன்னரே தீண்டாமை ஒழிப்பில் முன்னணியில் நின்ற மருதுபாண்டியர் ஆண்ட இம்மண் சாதி ஒழிப்பு இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் கூட ஒரு வலுவான தளமாக விளங்கியதிலும் வியப்பில்லை.

வெள்ளையனின் பினாமிகளாக அடியாட்க ளாக சிவகங்கையை ஆண்ட ஜமீன்தார்களின் கூட்டுக் கொள்ளையையும் இனாம்களையும் எதிர்த்துப் போர்க் குணம் மிக்க தேசபக்த உழவர்களின் உரிமைப் போராட்டங்கள், பொதுவுடமை இயக்கம், சோஷலிஸ்ட் கட்சி இவற்றால் வழி நடத்தப்பட்டு ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்பு இயக்கங்களாக உருப் பெற்றதும் இக்கால கட்டத்தில்தான்,

இவ்வாறு காங்கிரஸ், நீதிக்கட்சி, திராவி டர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம், பொதுவுடமை இயக்கம் ஆகிய மூன்று இயக்



படிப்பகம்

தங்களும் வலுவாக விளங்கிய 1964-ஆம் ஆண்டில்தான் எனக்கு அரசியலில் ஈடுபாடு ஏற்படுகிறது.

1960-ஆம் ஆண்டிலிருந்தே ஆங்கிலத் தினசரிகள் படிக்கும் வழக்கமும், வானொலிச் செய்திகள் கேட்டல், நூலகம் செல்லுதல், புத்தகங்கள் படிக்கும் வழக்கமும் ஏற்பட்டு இருந்ததாலே சர்வதேசிய, மாநில அரசியல் நிகழ்ச்சிகளைப் பின்பற்ற முடிந்தது. சிறுவயதில் பெற்றோர்களாலும், தமிழாசிரியர்களாலும், ஊட்டப்பட்ட தமிழ், ஆன்மீகச் செல்வங்களும் பின்னர் தமிழில் வெளிவந்த பல வரலாற்று, அரசியல், மூல நூல்கள், மொழி பெயர்ப்புகள், குறிப்பாக சாமிநாத சர்மா போன்றோரின் நூல்களும், பண்டித நேருவின் உலகசரித்திரம், ஜேனிபாமிதத் அவர்களின் இன்றைய இந்தியா போன்ற நூல்களும் என்னைப் பொதுவுடமை அரசியலை நோக்கித் தள்ளிக் கொண்டிருந்தன.

தேவார, திருவாசகம், திருவருட்பா, சங்க இலக்கியங்கள், சித்தர் பாடல்கள், பாரதி, பாரதிதாசன் என்ற பரிணாம வளர்ச்சி 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் என்னை ஈடுபடவைத்தது. அப்போராட்டத்தின் நிறைவில் நான் திராவிட இயக்கத்தின் பால் நகராமல் பொதுவுடமை இயக்கத்தின் பால் நகரத் தொடங்கினேன். பிராமண குடும்பத்தில் பிறந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அதற்கும் முந்தைய 1964-ஆம் ஆண்டில் தான் இந்தியப் பொதுவுடமை இயக்கம் இரண்டாக உடைந்துமார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உதயமாகியிருந்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினைத் திட்டமிட்டு நடத்தியவர்களில் ஒருவரும் அன்றே ஒரு மாவோயிஸ்ட் சிந்தனையாளரும் ஆன அமரர் புலவர் கருணாகரன் அவர்களோடு ஏற்பட்ட தொடர்பே என்னை மார்க்சிஸ்ட் கட்சியை நோக்கித் தள்ளியது எனலாம். ஒரு சரியான வழிகாட்டி கிட்டியதாலே சர்வதேச இந்தியப் பொதுவுடமை இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுக்கான காரணங்களைச் சரியாக அறிந்து பின் எனது தரப்பைத் தெரிவு செய்ய முடிந்தது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒட்டிப் பல மாதங்கள் கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. மார்க்சீய இலக்கியங்கள் (அதாவது மார்க்ஸ்,எங்கெல்ஸ்,லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் நூல்கள்) இந்த இயக்கத்தோடு தொடர்புடைய பலரின் நூல்கள் இந்த இயக்கம் குறித்த விமர்சகர்களின் நூல்கள், இயக்கம் தொடர்பான ஆவணங்கள் இவற்றைக் கற்க உதவியாக இருந்தது.

எனவே மார்க்சிஸ்ட் கட்சியோடு தொடர்பு ஏற்படும் முன்பே அக்கட்சியின் தத்துவார்த்த அரசியல் நிலைபாடுகளையும் அக்கட்சி சர்வ தேசிய அளவில் ஒத்த கருத்து கொண்டிருந்த சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைபாடுகளையும் மறுபக்கம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இவற்றின் நிலைப்பாடுகளையும் அறிந்து அதன் பின்னரே மார்க்சிஸ்ட் கட்சியோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டேன். அவ்வாறு ஏற்படுத்திக் கொண்டபோது ஒரு மாவோயிஸ்டாகவே மார்க்சிஸ்ட் கட்சியை ஒரு மாவோயிஸ்ட் அமைப்பாகவே நம்பித்தொடர்பு கொண்டேன்.

எனது குடும்பத்திலிருந்த காந்தியத் தாக்கமும் (எனது தந்தையார் ஒரு தேச பக்தர், சுதந்திரப் போராட்ட வீரர், காந்தியவாதி) சிறுவயதில் ஏற்பட்ட ஆன்மீக, பக்தி மார்க்கப் பிடிப்பும், சர்வோதய இயக்கத் தொடர்பும் இயல்பாகவே என்னை மாவோயிஸத்தை நோக்கி தள்ளியிருந்தன. சீனப் புரட்சி குறித்த இந்திய காந்தியவாதிகளின் நூல்களும் இந்தப் பிடிப்பை உண்டாக்கியிருத்தல் கூடும். மிகவும் இயல்பாக மாவோயிஸத்தைப் பின்னாளில் ஏற்க முடிந்ததற்கு என் ஆன்மீக வழிகாட்டியும், குருவுமாகிய அமரர் புலவர் தட்சிணாமூர்த்திபிள்ளை, நான் பயின்ற மன்னர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியரும் சிவகங்கை நகரின் ஞானாசிரியனுமாகிய அமரர் நாராயணன் சேர்வை அவர்கள், இன்றும் எம்மிடையே வாழ்ந்து வழிகாட்டும் சர்வோதயச் செம்மல் தியாகி சதாசிவம் அவர்கள் ஆகியோரே காரணமாக அமைந்தனர் என்றால் மிகையாகாது. எனவே ஒரு மாவோயிஸ்ட்டாகவே நான் மார்க்சிஸ்ட் கட்சியில்

www.padippakam.com

1965-ஆம் ஆண்டு சேர்ந்தேன். பள்ளியில் கம்யூனிஸ்ட் மாணவர்குழு தொடங்கப்பட்டது.

இப் பகுதியில் பொதுவுடமை இயக்கம் பிளவுபட்டபோது பிரபலமான விவசாய இயக்கத் தலைவர்களாக இருந்த தோழர்கள் எம். வி. சுந்தரம், எம். ஆதிமூலம், குமாரபட்டி வி.ஆர். அய்யாதுரை, ஆர். ஹெச். நாதன், ஜி. மங்களசாமி, கண்டர மாணிக்கம், கிருஷ்ணன், பெரிய கண்ணனூர் கிருஷ்ணன், வீரக்காளைத் தேவர், மறவமங்கலம் நரசிம்மன், சிவகங்கை எம். சுயம்புலிங்கம், மேலமாகாணம் எஸ் நாராயணன் போன்றவர்கள் எல்லாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலேயே தங்கி விட்டதால் நான் சேர்ந்த சமயம் இம்மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சி மிகவும் பலவீனமான நிலையிலேயே இருந்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அக்கால கட்டத்தில் இப்பகுதியில் போர்க்குணம் மிக்க பல விவசாயிகள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தது, இருந்தும் சிவகங்கை நகரிலும் மாவட்டத்தின் இதர நகரங்களிலும் அக்கட்சியும் பலவீனமாக இருந்தது.

1964-டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற மார்க்சிஸ்ட்கட்சியின் முதல் மாநாட்டை யொட்டி அக்கட்சியின் முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு 1966-கடைசியிலேயே விடுவிக்கப்பட்டதால் அதன் பின்னர்தான் தமிழ் நாட்டில் அக்கட்சியின் நடவடிக்கைகள் வேகம் பெற்றன. 1966-ஆம் ஆண்டு இறுதியில் மதுரையில் நடைபெற்ற அகில இந்திய விவசாய சங்கத்தின் CKC கூட்டத்தை ஒட்டி விவசாயிகள் பேரணி நடைபெற்றபோது அதில் கலந்து கொள்ளச் சென்றபோதே எனக்கு மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்கள் பலரின் தொடர்பு ஏற்பட்டது. சிவகங்கையிலிருந்து 20 மாணவர்கள், சுமார் 50 விவசாயிகளும் அப்பேரணியில் கலந்தோம். அப்பேரணிக்குப் பின் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த மாணவத் தோழர்கள் கட்சிக்கு ஒரு மாணவர் அமைப்பு தமிழகத்தில் உருவாக்கப் பட வேண்டும் என்று தலைவர்களை வலியுறுத்தினார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று நடத்திய அனுபவம் மிக்க பல தோழர்கள் இந்தக் கோரிக்கையை வலுவாக வலியுறுத்தினார்கள்.

தேர்தலில் பங்கேற்பது என்ற கட்சியின் முடிவும், 1967-பொதுத் தேர்தல் நெருங்கியிருந்ததும் இது குறித்த முடிவை ஒத்தி வைக்கும்படி செய்தன. தேர்தலில் பங்கேற்பது என்ற கட்சியின் முடிவே எனக்கு முதல் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் தந்தது. இருந்தும் 1964-ஆம் ஆண்டு ''கல்கத்தா மாநாடு'' தத்துவார்த்த பிரச்சினைகள் குறித்து இறுதி முடிவு எடுக்காமல் மத்தியக் கமிட்டியிடம் விட்டிருந்ததால் காத்திருந்தேன். 1967-தேர்தலில் தமிழ்நாட்டில் மார்க்சிஸ்ட் கட்சி தி.மு.க.வுடன் மட்டும் அல்லது சுதந்திரா கட்சியுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டபோது அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. தேர்தல் பணிகளைப் புறக்கணித்தேன். கட்சிக்கும் எனக்கும் முதல் வேறுபாடு முன்னுக்கு வந்தது.

பொதுத்தேர்தலும் ஒருவாறு முடிந்தது. தி.மு.க. தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வருகிறது. நானும் பள்ளியை விட்டு கல்லூரியில் அடியெடுத்து வைக்கிறேன். இதற்கிடையில் 1967-மே மாதம் இறுதியில் என் போன்ற மாணவத் தோழர்களின் வற்புறுத்தலுக்கிணங்கி கட்சி வைகை அணையில் ஒரு மாநில மாணவர் முகாமிற்கு ஏற்பாடு செய்தது.

ஒரு வார முகாம் சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்டனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், நாகர் கோவில், சென்னை, மதுரை, கோவை, திருச்சி முதலான மையங்களில் மாணவர்கள் கணிசமாக இருந்தனர். தோழர்கள் பி. ராமமூர்த்தி, ஏ. பாலசுப்பிரமணியம், எம்.ஆர். வெங்கட்ராமன், வி.பி. சிந்தன் ஆகியோர் வகுப்புகள் நடத்தியவர்கள். தோழர்கள் (அண்ணாமலை) கணேசன், குருலிங்கம், தமிழரசன், தமிழ்வாணன், பரமேஸ்வரன், நாராயணன், (தீக்கதிர்) ராமசாமி, ஜார்ஜ், கார்த்திகேயன், சாக்ரடீஸ், நெல்லைச் செல்வன், வி.என். சுப்பிரமணியம், சுப்பராமன், சுபாஷ்போஸ், ரகுமணி, ராகவன் முதலான பின்னாளில் இயக்கத்தில் குறிப்பிடத்தக்க பணியாற்றிய தோழர்கள் பலரும் அன்று அந்த முகாமில் கலந்து கொண்டனர்.



படிப்பகம்

இவர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும் பாலானோர் மார்க்சீய இலக்கியங்களிலும், இதர தொடர்புடைய நூல்களிலும் கற்றுத் தேர்ந்தவர்களாக இருந்ததால், இவர்களின் தத்துவார்த்த, அரசியல் மட்டம் மிகவும் உயர் வானதாக இருந்தது. இன்னும் சரியாகச் சொன்னால், கட்சியின் பொறுப்பாளர்கள் பலரை விட இவர்களின் அரசியல் தரம் மேம் பட்டிருந்தது எனலாம்.

எனவே இயல்பாகவே கட்சியில் முடிவு செய்யப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்த தத்துவார்த்தப் பிரச்சினைகளும், இந்தியப் புரட்சியின் பாதை பற்றிய பிரச்சினைகளும் இம்முகாமில் இம்மாணவத் தோழர்களின் கவனத்தை ஈர்த்தன. இவ்விஷயத்தைக் கை யாண்ட தோழர் ஏ. பாலசுப்பிரமணியம் அவர் களும் திறந்த மனதோடு மாணவத் தோழர் களோடு விவாதங்களில் பங்கு கொண்டார்.

இதற்கிடையில் குருச்சேவ் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, சீனத்தில் கலாச்சாரப் புரட்சி யும் தொடங்கியிருந்தது. முழுமையான தகவல் கள் இன்னமும் வந்து சேரவில்லை.

மேற்கு வங்கத்தில் கட்சி அஜாய்முகர்ஜி தலைமையிலான கூட்டணி அரசில் பங்கேற்ற தும் நக்சல்பாரி பகுதியில் விவசாயிகளின் ஆயுதமேந்திய போராட்டம் எழுப்பிய பிரச் சினைகளும் முக்கிய விவாதப் பொருளாக இருந்தன. இருந்தும் அகில இந்திய அளவில் மாவோயிஸ்டுகள் கட்சியை விட்டு இன்னமும் வெளியேறாததாலும் கட்சியின் மத்திய கமிட்டி தத்துவார்த்தப் பிரச்சினைகள் குறித்து இறுதி முடிவு எடுக்காததாலும்,மார்க்சிஸ்ட் கட்சிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே உறவு முறியாததாலும் மாவோயிஸ்ட்தாக்கம் இருந்த மாணவர்கள் குறிப்பாக என் போன்றோர் கட்சியின் மாணவர் அமைப்பை தமிழகம் முழுவ தும் பலப்படுத்த இதர மாணவத் தோழர் களுடன் சேர்ந்து முடிவு செய்தோம். தமிழகத் தின் அனைத்து கல்லூரிகளிலும், சில பள்ளி களிலும் (குறிப்பாக ஐயா. த.ச. ராஜாமணி அவர்களின் வழிகாட்டலில் மதுரை நாடார் உயர்நிலைப்பள்ளி, சிவகங்கைப்பள்ளி) கட்சி யின் மாணவர் அமைப்புகள் தி.மா மு.க. காங் கிரஸ் மாணவர்பிரிவு (தேசிய மாணவர் தமிழ் வளர்ச்சிக்குழு) இவற்றின் பலத்த போட்டி அடக்குமுறை, வெளியேற்றங்கள் இவற்றுக்கு இடையிலும் வேகமாகக் கட்டப்பட்டன.

இதற்கிடையில் மதுரையில் கூடிய கட்சி யின் மத்திய கமிட்டிக் கூட்டம் தத்துவார்த்த பிரச்சினைகளில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையை நிராகரித்தது. கட்சித்திட்டம் முன்னதாக சீனப்பாதையை நிராகரித்தது. பொதுவாக கட்சியின் பாராளுமன்றப்பாதை, மாநில அரசாங்கங்களில் பங்கேற்பது போன்ற முடிவுகளையும் அங்கீகாரம் செய்தது.

கோட்பாட்டளவில் மாவோயிஸம் முற்றாக கைவிடப்பட்டது. தோழர் நாகிரெட்டி அவர் கள் மத்திய கமிட்டிக் கூட்டத்தை விட்டு வெளி யேறினார். நக்சல்பாரி பிரச்சினையும் முன் னுக்கு வந்திருந்தது இந்த மத்திய கமிட்டிக் கூட்டத்தின் போது மதுரை சென்றிருந்த நானும், தோழர் வி என். சுப்பிரமணியம் இதர சில தோழர்களும் தோழர் நாகிரெட்டி அவர்களைச் சந்தித்துப் பேசினோம். தொடர்ந்து சமரசத்திற்காகதோழர்நாகிரெட்டி அவர்களை தோழர் எம் ஆர். வெங்கட்ராமன் சந்தித்தபோது என்னையும் உடன் அழைத்துச் சென்றார். இந்த இரு சந்திப்புக்களும் சம் பந்தப்பட்ட விஷயங்கள் குறித்துஒட்டு மொத்த மான பார்வையைப் பெற எனக்கு உதவியது.

பாராளுமன்றப் பாதையைத் தவிர்ப்பது, மாவோயிஸ்ட் கண்ணோட்டம், விவசாயிகளை ஆயுதப் போராட்டத்திற்குத் தயார் செய்வது போன்ற விசயங்களில் தோழர் நாகிரெட்டி நக்சல்பாரி இயக்கத் தலைவர்களாகிய தோழர் கள் சாருமஜூம்தார்,கனுசன்யால்இதர வங்கத் தோழர்களுடன் உடன்பாடு இருந்த போதும், சீனக்கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய நம்பகத் தன்மை ஆயுதப்போராட்ட இயக்கம், கட்சி இவற்றைக் கட்டியெழுப்புவது தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள், இந்திய அரசு சமூகம், அரசியல் களம் இவை பற்றிய கணிப்பு இவற்றில் எனக்கும் இந்திய மாவோயிஸ்ட் இயக்கத் தலைவர்களுக்கும் அடிப்படையான வேறுபாடுகளிருந்தன.

ஒரு ஆயுதப் போராட்டத்தை நீடித்துப் பல ஆண்டுகள், இந்தியா போன்ற பல வேறு

பாடுகள் நிறைந்த ஒரு பரந்தநாட்டில், செயல் படும் பாராளுமன்ற சனநாயக அமைப்புக்கு நடுவில் வலுவான இருபோட்டி கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு மாற்றாக, உருப்படியான சர்வ தேசிய உதவியில்லாத நிலையில் நடத்து வதற்குத் தேவையான பொறுப்புணர்வும், பொறுமையும், ஞானமும், தோல்விகளிலிருந் தும், படிப்பினைகளிலிருந்தும் கற்றுக்கொள் ளும் மனோபாவமும், நீக்குப் போக்குடன் கூடிய செயல் திட்டமும், சரியான மக்கள் திரள் யுக்திகளுமில்லாத ஒரு அமைப்பு நடத்த முடியாது என்பதை முதலில் தோழர் நாகி ரெட்டி அவர்களிடமும் பின்னர் இதர மாநில, தேசிய மாவோயிஸ்ட் தலைவர்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளேன்.

அடுத்து 1964-ஆம் ஆண்டு குருச்சேவ் பதவியிலிருந்து அகற்றப்பட்டதற்குப் பிறகு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஒற்றுமையை மீண் டும் நிலைநாட்டுவதற்கும், வியத்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கெதி ராக கூட்டு இராணுவ நடவடிக்கையையும் சீன கம்யூனிஸ்ட் கட்சியிடம் பரிந்துரைத்த போது இந்த இரண்டு ஆக்கப்பூர்வமான யோச னைகளையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், மாவோவும் நிராகரித்ததற்கு எந்தவித நியாய மும் கிடையாது என்றும் அவ்வாறு அந்த யோசனைகளை நிராகரிக்க மாவோ கோரி யதை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஏற்காததாலேயே பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி மாவோவால் துவக்கப் பட்டது என்றும், இது உட்கட்சிப் போராட் டத்தைத் தனது நிலைக்கு சாதகமாகத் தீர்க்க மாவோ கையாண்ட உபாயம் அன்றி வேறில்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுத உதவி, தத்துவார்த்த அரசியல், வழி காட்டலின் அடிப்படையில் இந்தியப் புரட் சியைத் திட்டமிடுவது தற்கொலைக்கு ஒப் பாகும் என்றும் தோழர் நாகிரெட்டி இதர தோழர்களிடமும் வலியுறுத்தி வந்தேன்.

எனது கணக்கு பிற்காலத்தில் சரியென நிரூபிக்கப்பட்டது. உருப்படியான ஆயுத உதவியோ, பயிற்சியோ, தத்துவார்த்த அரசி யல் வழி காட்டுதலோ எதையும் செய்யாது இந்தியப் புரட்சி இயக்கத்தை பலவீனப்படுத்தி இறுதியில் அடுத்த தேசத்திற்கு இடையில் அழித்த புண்ணியத்தை மட்டுமே சீனக் கம்யூனிஸ்ட்டு கட்சி கட்டிக் கொண்டது.

அடுத்து ரஷ்யா, சீனம் போன்று இந்தியப் புரட்சி இயக்கம் தலைமறைவு இயக்கமாகக் கட்டப்படுவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன என்றும் பல ஆண்டுகள் வெளிப் படையாகச் சொல்லப்பட்ட ஒன்றுபட்ட சி.பி.ஐ பின்னர் மார்க்சிஸ்ட் கட்சி, இவற்றிலிருந்து சேர்ந்து பகிரங்கமாகப் பணியாற்றிய தோழர் களைக் கொண்டே இயக்கத்தை முதலில் கட்ட வேண்டியுள்ளது, அவசரப்படுவதில் பயனில்லை என்றும் வலியுறுத்தினேன். முதலில் மார்க் சிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறுதல், நிதான மாக அவசரமில்லாமல் அகில இந்திய மாவோ யிஸ்ட் அமைப்பைக் கட்டி அதிக பட்ச தத்து வார்த்த அரசியல் ஒற்றுமையை உருவாக்கு தல், ஒவ்வொரு மாநிலத்தின் தனித்தன்மை, அரசியல், வளர்ச்சிக் கட்டம், உற்பத்தி உறவு கள், கட்சியின் நிலை, இதர கம்யூனிஸ்ட் கட்சிகளின் செல்வாக்கு, வர்க்கப் போராட்டம், குறிப்பாக விவசாயிகள் இயக்கங்கள், தொழி லாளர் இயக்கங்கள் இவற்றின் நிலை, புவி யியல் தன்மை இவற்றைக் கணக்கில் கொண்ட தனித்தனி வேலைத் திட்டம், ஆயுத சேகரிப்பு, ஆயுதப் பயிற்சி, இராணுவம், போலீஸ் இவற் றுடன் தேவையற்ற காலத்திற்கு முந்தைய மோதல்களைத் தவிர்த்தல், அவசரப்பட்டு தளங்கள் உருவாக்குவதைத் தவிர்த்தல், வலு வான வர்க்க அமைப்புகளைக் கட்டுதல், விவ சாயிகள் தவிர, இதர பல சமூகப் பகுதிகளை யும் நேச வர்க்கங்களையும் சேர்ந்த அமைப்புக் களைக் கட்டுதல், சரியான அரசியல் திருப்பங் களுக்காகக் காத்திருந்து தலையீடு செய்தல். இரு போட்டி கம்யூனிஸ்ட் கட்சிகளோடும் கூட்டு இயக்கங்கள் தொடர்பான விவாதங்கள் இந்திய சமூகத்தின் சாதி, மத, மொழி, தேசீய இனப் பிரச்சினைகள் பற்றிய ஒன்றுபட்ட வரையறை, பார்வை-இந்தப் பூர்வாங்கத் தயாரிப்புகளுக்குப் பின்னரே ஆயுதப் போராட் டம், அரசியல் அதிகாரம் இவை குறித்து பகி ரங்க அறைகூவல் விடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

இந்திய அரசு, இந்திய சமூகம், அரசியல் களம், புரட்சிக் கட்டம், இந்திய அரசியல்

கட்சிகள்பற்றிய மதிப்பீடு, இந்தியச் சனநாயகம் பற்றிய மதிப்பீடு இந்த விஷயங்களில், இந்திய-மார்க்சிஸ்ட் கட்சிகளின் மதிப்பீடுகளே சரியானவை என்றும் இவற்றை மறுப்பது செக்டேரியன் தவறுகளுக்கு இட்டுச்சென்று ஆயுதப் போராட்டத்தையும் கட்சி அமைப்பையும் ஒன்று முடக்கும் அல்லது தேவையற்ற பெருத்த சேதத்திற்கு உள்ளாக்கும் என்றும் எச்சரித்து வந்தேன்.

இந்திய அரசு, அரசாங்கம், அரசியல் கட்சிகள் குறிப்பாக இந்திய தேசிய காங்கிரஸ் குறித்த சரியான அணுகுமுறை ஒன்றே நிலத்தை அடிப்படையாக வைத்த ஆயுதப் போராட்டத்தின் திசை வழியையும், கட்டங்களையும் தீர்மானிக்க வல்லது என்றும், தெலிங்கானாப் போராட்டத்திலிருந்து படிப்பினை பெறத் தவறக்கூடாது என்றும் 1968-மேற்கு வங்க நிலப்பறி இயக்கமும் சரியான படிப்பினையைத் தரவேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தேன்.

இந்த அடிப்படை விசயங்களில் தேசிய அளவில் மாவோயிஸ்ட் அமைப்பைச் சரியாக வழிநடத்தும் தலைமை அமையாததை உணர்ந்தே அமைப்பு ரீதியாக எம் எல். கட்சியுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளாமலேயே இருந்துள்ளேன்-இன்று வரை.

1969-ஆம் ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய எனது கணக்கு மேலும் சரியானது என்றுணர்ந்தேன். சமூக ஏகாதிபத்தியம், மூன்றுலகக் கோட்பாடு, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கெதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டு என்ற எதிர்ப்புரட்சி நிலைகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த போது இந்திய மாவோயிஸ்ட் இயக்கத்தின் தத்துவார்த்த சீரழிவும் தொடங்கியது.

1967-ஆம் ஆண்டு மதுரை மத்திய கமிட்டி எடுத்த முடிவுகளுக்குப் பின்னால் நாடு முழுவதுமிருந்த மாவோயிஸ்டுகள் ஆங்காங்கே தனியாகச் செயல்பட்டனர். மாநில அளவில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் தோழர்கள் அப்பு, கலியபெருமாள், ஏ.எம்.கே, பி.வி.எஸ், குசேலர், கோவை ஈஸ்வரன் போன்ற தோழர்கள் தலைமையேற்று புதிய அமைப்பை உருவாக்கத் தொடங்கினர்.

தோழர் எஸ்.என். நாகராசன் அவர்கள் தேசிய இனப் பிரச்சினையில் மாறுபாடு கொண்டதால் புதிய கட்சியில் இணையவில்லை. தோழர் குசேலர் தொழிற்சங்கப் பணிகளைக் கைவிடுமாறு கட்சி கோரியதை ஏற்க மறுத்ததால் வெளியேற்றப்பட்டார். இருந்தும் மாணவர் அரங்கத்தைச் சேர்ந்த தோழர்கள் மார்க்சிஸ்ட் கட்சியின் மாணவர் அமைப்பான தமிழக மாணவர் சங்கத்திலேயே தொடர்ந்து பணியாற்றினார்கள். அப்போது இந்திய மாணவர் சங்கம் தோன்றாததால், தமிழக மாணவர் சங்கம் என்ற பெயரில் செயல்பட்டனர்.

தமிழக மாணவர் சங்கத்தில் ஒரு ஆண்டு இரு பிரிவு மாணவர்களும் இணைந்தே செயல்பட்டு, 1968 ஆம் ஆண்டு மதுரையில் முதல் மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்தினார்கள். அந்த மாநாட்டின் பிரதிநிதிகள் மாநாட்டில் வேறுபாடுகள் தலைதூக்கின. மாவோயிஸ்ட் நிலைபாடுகளுக்காக வாதிட்ட தோழர்களுக்கும், மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவாளர்களுக்கும் கைகலப்பும் நடந்தது. இந்த மாநாடு நடைபெற்ற சமயம் மாவோயிஸ்ட் கருத்துக் கொண்ட மாணவர்களை வழி நடத்துவதற்காக தோழர்கள் எஸ்.என். நாகராஜன், கோவை ஈஸ்வரன் ஆகியோர் அனுப்பப்பட்டனர். அவர்கள் முக்கியமான எம் எல்.சார்பு மாணவர்களை ஒரு பள்ளியில் சந்தித்தனர்.

அக்கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். தோழர் கணேசன் மட்டும் மாநாட்டுப் பேரணிப் பணிகளுக்காகத் தங்கிவிட்டார். தோழர்கள் எஸ்.என். நாகராஜன், கோவை ஈஸ்வரன் இருவரும் எம்.எல். சார்புடைய மாணவர்களை கூட்டறிக்கை விடுத்து தமிழக மாணவர் சங்கத்திலிருந்து வெளியேற யோசனை கூறினார்கள்.

மாணவர்கள் மத்தியில் அமைப்பைக் கட்டுவதா? இல்லையா? என்பதைக் கட்சி முடிவு செய்யாத நிலையில் கட்சியின் ஆதரவாளர்கள் வெளிப்படையாக பத்திரிக்கைச் செய்தி விடுத்துத் தம்மை அடையாளங்காட்டிக் கொள்

வதில் பொருளேதுமில்லை என்றும் தொடர்ந்து தமிழக மாணவர் சங்கத்திற்குள்ளேயே செயல் படுவதில் தவறில்லை என்றும் நான் கூறிய மாற்று யோசனை ஏற்கப்பட்டு எம்.எல். சார்பு மாணவர்கள் அடுத்த ஆண்டு வரை தமிழக மாணவர் சங்கத்திலேயே தொடர்ந்தனர்.

தோழர் கணேசன் உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான் உட்பட கணிச மான பல எம்.எல். சார்பு மாணவர்கள்மாநிலக் குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முக்கிய மான எம்.எல். ஆதரவு மாணவர் தளமாக உருப்பெற்றது. இதற்கிடையில் மார்க்சிஸ்ட் கட்சியில் தத்துவார்த்த மோதல் அதிகரித்தது. ஆந்திர மாநிலக்குழு பிரிந்தது. பர்த்வான பிளீனம் மூலம் 1968-ஆம் ஆண்டு இறுதியில் ஒரு இறுதி முடிவுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கட்சியில் மீதமிருந்த மாவோயிஸ்டுகளும் வெளியேறி 1969-ஆம் ஆண்டு எம்.எல். கட்சி உதயமாகியது.

தோழர் நாகிரெட்டி தலைமையிலான ஆந்திர மாநிலக் குழு மட்டும் சில நியாயமான காரணங்களுக்காக தனித்து இயங்கியது.

தமிழ்நாட்டில் காஞ்சீபுரம் மாநில பிளீனத்தில் தோழர்கள் AMK, குசேலன் கட்சியைவிட்டு வெளியேறியதோடு நமது மாநிலத்தில் கட்சி சார்புடைய மாணவர்களும் வெளியேறி புதுக்கோட்டையில் கூடிய தமிழக மாணவர் மாநிலக்குழு கூட்டத்திலிருந்து வெளி நடப்புச் செய்தனர்.

மாணவர் அமைப்பைக் கட்டுவது இல்லை என்று எம்.எல். தலைமை எடுத்த முடிவினால் மாணவர்கள் மத்தியில் பல பகுதிகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்த எம்.எல். சார்பு மாணவர் தலைவர்கள் நாளடைவில் தமது செல்வாக்கைப் பெருமளவு இழந்தனர். ஒரு சிலரே விவசாயிகள் மத்தியில் ஆயுதப் போராட்டத் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டனர். மற்றவர்கள் செயலிழந்து படிப்பை முடித்து இயக்கத் தொடர்பு இல்லாது போயினர்.

எம்.எல். சார்பு மாணவர்களே தமிழக மாணவர் சங்கத்தின் உயிர்த்துடிப்புள்ள பகுதியாக விளங்கியதால் அவர்கள் வெளியேறியதும், வெளியேறாது தங்கிய தோழர்கள் பலர் மீது மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்ட அவநம்பிக்கையும் கோவை இரண்டாவது மாநாட்டின் போது அபரிதமான வளர்ச்சியை அடைந்திருந்த மாணவர் இயக்கத்தை வெகுவாக செயலிழக்கச் செய்தது.

தமிழகப் புரட்சி இயக்கத்திற்கும் இடதுசாரி இயக்கத்திற்கும் விவசாயிகள் இயக்கத்திற்கும் ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்திருக்கக் கூடிய வாய்ப்பும் கை நழுவியது.

ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மணி, சீனம் போன்றல்லாமல் சுதந்திர இந்தியாவில் பரவலான பள்ளி, கல்லூரிக் கல்வி காரணமாகவும், உதவித்தொகை, தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் இட ஒதுக்கீடு, விடுதி வசதிகள் இவை காரணமாகவும் சமூகத்தின் உழைக்கும் வர்க்கங்களாகிய விவசாயிகள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மத்தியிலிருந்து கணிசமான மாணவர்கள் கல்வி பயின்று வந்த காலம் அது.

குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் தவிர பிற்பட்டோருக்கும் இட ஒதுக்கீடும், உதவித் தொகையும் அமலில் இருந்த தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் ஒப்பீட்டளவில் கல்லூரிகளும் உயர்நிலைப்பள்ளிகளும் அதிக அளவில் இருந்த தமிழ் நாட்டில் இந்த வர்க்கச் சமநிலை தெளிவாகவே அமைந்திருந்தது.

எனவே மார்க்சிஸ்ட் கட்சியோ அல்லது எம்.எல். கட்சியோ கல்லூரிகள், பள்ளிகள் இவற்றில் வலுவான அமைப்பைக் கட்டியிருந்தால் உழைக்கும் வர்க்கங்களின் சகல பிரிவுகளில் இருந்தும் பிரதிநிதிகளைத் தம் அரசியல் பணிகளுக்குப் பெற்றிருக்கமுடியும்.

இன்றைய அளவு கலாச்சார சீரழிவு இல்லாத அந்த நாட்களில் மாணவர்கள் மத்தியில் இலட்சியப் பிடிப்பும், கொள்கைப் பிடிப்பும், செயலூக்கமும் அதிகமாகவே இருந்தது.

தமிழ் உணர்வும் இந்திப் போராட்டத்தின் பின் விளைவும், திராவிட இயக்க உணர்வும், சாதிய உணர்வுகளைக்கூடபெருமளவு குறைத்

www.padippakam.com

திருந்த காலம். புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் விரும்பிப் படித்த காலம். அரசியல் ஆர்வம் தலை தூக்கியிருந்த காலம். எனவே நான் மார்க்சிஸ்ட் கட்சி, எம்.எல் கட்சி இரண்டிலும் மாணவர் இயக்கத்தின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளேன்.

எம்.எல். கட்சி மாணவர் அமைப்பைத் தனியாகக் கட்டுவதில்லை என்று எடுத்த முடிவும் மார்க்சிஸ்ட் கட்சி சரியான தலைமையை அளிக்கத் தவறியதும் இந்த அரிய வாய்ப்பு தவறுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். எம்.எல், கட்சி கிராமப் புறங்களில் பரவலாக விவசாயிகள் மத்தியில் இருந்து படித்த இளைஞர்கள் அரசியல்கருவாக உருவாவதைத் தானே இழந்தது. மார்க்சிஸ்ட் கட்சியோ இலட்சியவாத இளைஞர்களையும், கிராமப்புற நகர்ப்புற உழைப்பாளர்கள் மத்தியிலிருந்து கணிசமான ஆதரவாளர்களையும் வென்றெடுக்கத் தவறியது. இதன் காரணமாகவும் விவசாய இயக்கங்களில் தேக்கம் ஏற்பட்டு நகர்ப்புற நடுத்தரவர்க்க இளைஞர்களையும் வர்க்கரீதியாக வென்றெடுப்பதில் தோற்றுவிட்டதட்ட ஒரு வெள்ளைச் சட்டை இயக்கமாகவே பிற்காலத்தில் வளர்ச்சியடைய வேண்டிய இழிநிலைக்குத் தள்ளப்பட்டது.

தொழிற்சங்க இயக்கத்தில் ஓரளவு ஏற்பட்ட வளர்ச்சியே இக்கட்சியின் வர்க்கத் தன்மையை ஓரளவு காப்பாற்றிக் கொண்டிருக்கிறது எனலாம். எம்.எல். கட்சி செய்த இந்தத் தொடக்க காலத் தவறு அதன் பால் ஈர்க்கப்பட்ட நகர்ப்புற இளைஞர்கள் பலரை கிராமப் புறங்களில் பணியாற்ற வேண்டிய தேவையை ஏற்படுத்தி இயக்கத்தையும் தேவையில்லாமல் குன்றிப் போகச் செய்தது. அவர்கள் எந்த அளவுக்கு ஆயிரக்கணக்கான விவசாயத் தொண்டர்களைத் தயார் செய்திருக்க முடியுமோ அங்கே அவர்களைப் பயன்படுத்தாமல் கிராமப் புறங்களுக்கு அனுப்பி விரயம் செய்தது.

இந்த அமெச்சூர் மனோபாவம் கட்சியின் அனைத்துப் பணிகளிலும் மேலோங்கியிருந்தது. இதற்குத் தலைமையின் பலவீனமே பிரதான காரணம் எனலாம். நான் மேற்கூறிய காரணங்களால் மார்க்சிஸ்ட் கட்சியிலேயே தொடர்ந்து பணியாற்றி மாணவர் அரங்கப் பணிகளோடு எங்கள் பகுதியில் விவசாய சங்க இயக்கங்களையும் தொழிற்சங்கப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தேன். 1969ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தோழர்கள் மூலம் தோழர் சாருமஜூம்தார் தமிழகம் வந்தபோது எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள். பரமக்குடியைச் சேர்ந்த ஒரு தோழர் மூலம் தகவல் கிடைத்தது. நானும் அவரும் சிதம்பரம் சென்றோம்.

தோழர் கணேசன் உட்பட பல தோழர்களிடம் நான் கொண்டிருந்த கருத்துக்களை மீண்டும் எடுத்துக்கூறி மாநிலக்கட்சி செயல்பட்டு சுதந்திரத்திற்காகப் போராடவேண்டும் என்றும் தோழர் சாரு தலைமையைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் மாநிலத்திற்கான செயல் திட்டத்தைக் கட்சியின் மாநிலக்குழு தயாரித்து விவசாயத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், படித்த வேலையற்ற இளைஞர்கள் அமைப்புக்களைக் கட்ட வேண்டும் என்றும் தீண்டாமை விழிப்பு போன்ற சமூகப் பிரச்சினைகளில் தீவிரமாகத் தலையிட வேண்டும் என்றும், மொழிப்பிரச்சினை, தேசிய இனப் பிரச்சினை, இட ஒதுக்கீடு போன்ற விஷயங்களில் தனது பழைய எதிர்மறை நிலையைக் கைவிடவேண்டும் என்று அழித்தொழிப்பு உடன் கைவிடப்பட வேண்டும் என்றும் கட்சியின் மாநிலப் பிரிவு தேவையானால் அகில இந்திய அமைப்பிலிருந்து பிரிந்து சிறிது காலம் தனியாக வெளிப்படையான அமைப்பாகச் செயல்பட்டு அணிகளை மீட்டு கட்சி அமைப்புக்கள் முறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வாதிட்டேன்.

எழுத்துப்பூர்வமாக ஒரு நகல் செயல் திட்டத்தைக் கோரினார்கள். அவ்வாறே எழுதிக் கொடுத்தேன். எனக்கு நம்பிக்கை இல்லாததால் தோழர் சாரு அவர்களைச் சந்திக்கவில்லை. என்னுடன் வந்த தோழர் மட்டும் சென்றார். அவர் கூட்டத்திலிருந்து திரும்பி வந்து கூட்ட விபரம் பற்றிக் கூறியது எவ்வித நம்பிக்கையையும் அளிக்கவில்லை. தோழர் கணேசன் விபத்தில் உயிர்விட்டதோடு



படிப்பகம்

www.padippakam.com

எம்.எல். கட்சியுடனான எனது தொடர்புகள் மிகவும் குறைந்து போயின.

விவசாயிகளின் ஆயுதப் போராட்டப் பாரம் பரியம் படைத்த ஆந்திர மாநிலத்திலேயே மீண்டும் மீண்டும் ஆயுதப் போராட்டம் தலை தூக்கித் தாக்குப் பிடித்தும் நிற்கின்றது. எவ் வளவு செக்டேரியன் தவறுகள் இழைத்தாலும் அனுபவம் வாய்ந்த தலைமை இருப்பதால் மீண்டும் மீண்டும் எழ முடிகிறது.

பீஹார் மாநிலத்தில் கொடூரமான நிலப் பிரபுத்துவச் சுரண்டலும் சாதீய ஒடுக்கு முறை களும் ஒரு விரிவான ஆயுதப் போராட்டத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. மற்ற சில மாநிலங்களில் தேசிய இனப் பிரச்சினையோடு இணைத்து இயக்கங்களைக் கட்ட முடிந் துள்ளது. பொதுவாக இதர மாநிலங்களில் இந்திய மாவோயிஸ்ட் இயக்கம் ஒரு விவசாயி களின் இயக்கமாக உருப்பெற இயலவில்லை என்பதே உண்மை. தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் ஏன் வர்க்கத்தில் கூட அது ஒரு நடுத்தரவர்க்க இயக்கமாகவே சாகாமல் உயிர் பிழைத்து வருகிறது.

தத்துவார்த்த அரசியல் மட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சாரு மஜும்தார் தலைமை யின் தவறான வழி காட்டலிலிருந்து விடுபட் டுள்ள எம்.எல் (விடுதலை) அமைப்பு பாராளு மன்றப் பாதையில் நெடுந்தூரம் போய்விட்டது. இருந்தும் இக்குழுவே இதர போட்டி கம்யூ னிஸ்ட் கட்சிகள் குழுக்கள் பால் ஒரு சரியான அணுகுமுறையைக் கடைபிடித்து வருகிறது.

ஆந்திராவின் மக்கள் யுத்தக் குழுவும் சமீப காலங்களில் தனது செக்டேரியன் தவறுகளைத் திருத்திக்கொண்டு வருகிறது. பீகாரின் மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் சென்டர் மட்டுமே தனது செக்டேரியன் பாதையைக் கைவிடாது சகோதரக் கம்யூனிஸ்ட் இயக்கங்களின் மீது தாக்குதல்களை நடத்தித் தன் சக்தியை விரயமாக்கி வருகிறது.

விளையாட்டுப் போல முப்பதாண்டுகள் உருண்டோடி விட்டன. இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் மாவோயிஸ்ட் இயக்கம் புறப்பட்ட இடத்திலேலே நிற்கிறது. இந்த முப்பதாண்டு களில் மாவோயிஸ்ட் பாதையின் பொருத்தப் பாடு குறைந்து இருந்தாலும் முற்றாக மறைந் தும் விடவில்லை. இந்தியப்பாதை தொடர் பாக வாய்ப்புக்கள் குறைந்திருந்தாலும் ஒரு சமூக அமைப்புக் கண்ணோட்டம் என்ற அளவி லேயே மாவோயிஸத்தின் பொருத்தப்பாடு இந்த முப்பதாண்டுகளில் அதிகரிக்கவே செய் துள்ளது.

மாவோயிஸமே எதிர்கால மார்க்சிய இயக் கத்தின், கம்யூனிச இயக்கத்தின் உயிர்த் துடிப் புள்ள வடிவம் என்ற பேருண்மை முன்னெப் போதையும் விட இப்போது விளங்கித் தெரி கிறது. மானுடத்திற்கான மாவோயிஸத்தின் செய்தியை மானுடத்திற்கு மாவோயிஸம் காட்டுகின்ற வாழ்க்கை அமைப்பு நெறியை மேலும் தெளிவாகஆக்கி சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தை உயிர்ப்பிப்பதற்கு வரலாற்றுப் பணி இந்திய, தமிழக மாவோயிஸ்டுகளுக் காகக் காத்துள்ளது.

இந்திய மாவோயிஸ்ட் இயக்கத்தின் கரு போராட்ட வழியில் பிரதானமாக விளங்கி நிற்கவில்லை. அதன் செய்தியிலேயே விளங்கி நிற்கிறது. அடிப்படையான மேற்கத்திய தொழில் வளர்ச்சி சமுதாயத்திலிருந்து சாராம் சத்தில் மாறுபட்ட ஒரு சமுதாய அமைப்பை அராஜ்யவாதக் கோட்பாட்டின் அலகுகள் நிறைந்திருக்கும் ஒரு சமூக அமைப்பை உரு வாக்குவதில் உறுதியாக இருப்போமானால் சமூக சன நாயகத்தின் போதாமையும் முதலா ளித்துவ சனநாயகத்தின் Limitations-ம் ஆயு தப் போராட்டத்தின் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் அவசியமும் உய்த்துரைக்கப்படும்.

இருந்தும் இவை இரண்டாம் பட்சத் தேவைகளே. யாருக்காக எந்த உழைக்கும் வர்க்கங்களுக்காக இந்தச் சமூக அமைப்பை உருவாக்க நினைக்கிறோமோ அந்தச் சமூக அமைப்பை உருவாக்கவும், கட்டிக் காக்கவும் மன உறுதியை இந்த உழைக்கும் வர்க்கங்கள் பெறுவதற்கும் நம்மால் துணை புரிய முடியு மானால் பாதை பற்றிய பிரச்சினை தானே பின்னுக்குப் போய்விடும். இந்திய மாவோ யிஸ்ட் இயக்கமும், சர்வதேசிய மாவோயிஸ்ட் இயக்கமும் அதாவது கம்யூனிஸ்ட் இயக்கம்



படிப்பகம்

www.padippakam.com

இதர சகோதர மார்க்சிஸ்ட், லெனினிஸ்ட் இயக்கங்களை எதிரிட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது.

மாவோயிசத்தின் மூலமாக அல்லாது மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் சாரம் கம்யூனிச இயக்கம் மீட்டெடுக்கப்பட முடியாது என்பதை உலகெங்கிலும் இந்தியாவிலும் உள்ள சகோதர மார்க்சிய இயக்கங்கள் உணர்ந்து வருகின்றன.

இடையில் இந்த இலட்சியத்திற்கு ஏற்பட்ட விபத்து காலப்போக்கில் களையப்பட்டு மார்க்சியத்தின் பொருளாயதச்சார்பு (Materi-alitsics Orientation) முற்றாகக்கைவிடப்படும் காலம் நெருங்கிவிட்டது. சரியாகச் சொன்னால் ஒவ்வொருமுறை இந்த விலகல் நேர்ந்த போதும் லெனின், ஸ்டாலின், மாவோஹோ போன்றோர் தோன்றி இந்த விலகலைச் சரி செய்துள்ளனர். இருந்தும் செய்தி இன்னும் வெளிப்படையாக சொல்லப்படுவதே இலட்சியத்திற்குத் தெளிவும் பலமும் சேர்க்கும். நமது சரியான அடிப்படை நிலைபாடுகளையும், செயல்பாட்டுச் சுதந்திரத்தையும் விட்டுக் கொடுக்காமல் சிறிய வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து இதர சகோதர இயக்கங்களோடு சரியான செயல் ஒற்றுமைக்கான திட்டத்தோடு நீடித்த விவாதமும் நடத்தத் தயாராக உள்ள மாவோயிஸ்டு அமைப்புக்கள் மட்டும் இந்தியாவிலும்-தமிழ்நாட்டிலும் இந்த இயக்கத்தை புனரமைக்க முடியும்.

இந்த ஆரோக்கியமான கண்ணோட்டம் அனைத்து எம்.எல் கட்சிகள், குழுக்கள், இதர கம்யூனிஸ்ட்கட்சிகள் இவற்றிற்கிடையே வலுப்பெற நான் கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து முயன்று வருகிறேன். கூடிய விரைவில் நல்ல பலனும் கிட்டும் என்பதில் அய்யமில்லை. சர்வதேசிய அளவிலும் இத்தகைய முயற்சிகள் தொடர்கின்றன. மாவோயிஸத்தின் சாரம் புரிந்து கொள்ளப்பட்டு மேலும் தெளிவு படுத்தப்பட்டு இந்தியத் தமிழ்ச் சிந்தனைகளால் வளப்படுத்தப்பட்டு ஒரு இலட்சியமாக மட்டுமல்லாது ஒரு செயல்பாட்டு வழியாகவும் செழுமை பெற்று மனித குலத்தை உய்விக்கப்போவது சர்வ நிச்சயம்.

● ● ●

# உயிர் நஞ்சு...

மேற்குமலைப் பிடரியை
மீறிக் கடந்து
ஆல் அரசு வேம்பு வாகைகளைப்
பேயாட்டம் போடவைத்துக்

—கோடையாய்ச் சிலநாள்...

முன்வாசலில்
மண்கொழித்து விளையாடும்
சின்னஞ்சிறிசுகளின்
படியாத பூங்குழலைச்
சற்றே நீவித்

—தென்றலாய்ச் சிலநாள்...

பனையுசரத்துக்கேறிய
பகலவனுக்கும் நடுக்கம் கொடுத்துப்

—பனிவாடையாய்ச் சிலநாள்...

சாரல் மழையின்
சங்கீத வரவுக்குக்
கூதல் மொழியால்
பல்லாண்டு பாடிக்

—கொண்டல் கீழ்க்காற்றாய்ச் சிலநாள்...

நாலு திக்கிலும் ஆணைச் சக்கரம்
நாட்டிய மேடை எட்டுத்திக்குகள்
வகுத்துக் கொண்ட
அட்டவணைப்படி
எல்லாம் சரிதான்...!
பஞ்சுப் பிசிர் இல்லாமல்
கந்தக நாற்றம் இல்லாமல்
ஆலைப் புகைநெடி இல்லாமல்
ரப்பர்க் கருக்கல் இல்லாமல்
உயிர் வாங்கும்
சாய்க்கடை முடையில்லாமல்
ஒருநாள்
ஒரே ஒரு நாளேனும்
எட்டிப்பார்க்க மாட்டாயா
என்வீட்டுச்
சன்னலை மட்டும்

-பொன்முடி



படிப்பகம்

www.padippakam.com

# வான் பொருள்

''ஒழிஉன் கொத்தல்கள்! உணவா என்புண்?
கழிவுக்குப் பஞ்சமா? கழிவுகள் துய்க்கும்
காலம் சண்டையில் கழிவது விவேகமா?
போட்டியும் பூசலும் போட வேண்டாம்நாம்''

''பீடுசால் பிதிரரின் பிரதி நிதிநான்
எட்டு வசிட்டரும் என்பின் கொண்டுளேன்
சாக்கடை வாசமும் உலக்கைப் பூசையும்
நாய்க்கடி நோவும் மூளைக் காய்ச்சல்
கொசுக்களின் வளர்ப்பும் கொழிக்கும் புலையனே!''

''சிறுவர் சிறுமியர் தின்பண்டங்களைப்
பறித்துச் செல்லும் பகற்கொள்ளையனே!
தாயிலாக் கோழிக் குஞ்சின் கொலைஞனே!
எலி, பெருச்சாளி, கழுதை, நாய் விழுந்தால்
உடன்பிறப் பலால் தொலை உறவெனும் உண்மை
எண்ணாதுண்ணும் இனப்படு துரோகியே!
நரிஅகழ்ந்தெடுத்த நன்காட்டுப் பிணங்களும்
அருந்தும் அற்ப ஆசாரக் கொழுந்தே!

உனைப்போல் இல்லைநான்! உயிர்க்கொலை, கொள்ளை,
இனப்படு துரோகம், இழிஆசாரம்
சிந்தையும் கொள்ளேன்! பெரும்பான்மையும்
கந்தமூலங்களும் புல்பூண்டுகளும்
சாப்பிடும் நான்ஒரு சாக பட்சிணி!
ஆப்பயன் கூட அருந்தாச் சைவன்!
என்பொற் காலத்து இருப்பிடமான
காவும் கானும் காதகர் எரிக்க
வனப் பிரஸ்தத்தின் மகிமைகள் இழந்து
நகரில் ஒண்டினேன். நாகல், கழிவுகள்
நகர வாழ்க்கையின் நிர்ப்பந்தத்தால்
ஏற்றுத் தொலைத்தேன். முன்னைநான் எண்ணி
நோற்று நொந்து சாகவா முடியும்?
சரிசரி என்உயர் சரித்திரம் இருக்கட்டும்
பெரியவன் சிறியவன் பேச்சு நமக்கேன்?

திருமால் நிறம்நீ, திருமால் உருநான்!
விலங்கினம் எனினும் நாம் உடன் பிறப்பே!
இலைஎனில் ஒருகுடிப் பிறப்பே! இன்றேல்
நண்பர்கள் இன்றேல் நான்படு பகையிலா
அன்னியர். இருவரும் அமைதி காப்போம்.
ஒன்றியோ ஒதுங்கியோ வாழ்வோம் நன்றே
நானும் தோட்டி, தோட்டியே நீயும்''
'உர்'' என் றுறுமி உரைத்தது பன்றி.

''இல்லை. எனக்கு நீஇணை இல்லை.
இல்லைநீ என்பகை. எனினும் என்இணை
இல்லைநீ. நீநான் இல்லை. இல்லையே.
வீணனே! தோட்டிநான் இல்லை. அப்படியும்
ஈனத் தோட்டிநீ, வானத் தோட்டிநான்''
''கர்''எனக் கறுவி மறுத்தது காக்கா.

கயிறுகள், சுருக்குக் கம்பிகள், கம்புடன்
பயின்றவர் துரத்த ஓடித் தீர்த்து
மாட்டிக் கொண்டபின் மல்லாக்கச் சைக்கிளின்
பின்புற இருக்கையில் கிடத்தப் பெற்றுப்
போகும் வரைக்கும் கீழும் சுற்றிலும்
அன்றி மேலும் பார்க்கத் தவறும்
பன்றிக்குக் காக்கா பகட்டிய வான்பொருள்
சிறிதும் யாதெனத் தெரியவே இல்லை.
அறிவுறுத் திடுவது ஆகுமா ஒருநாள்?
அறிவுறுத் தலுக்கும் ஆரணம் வேண்டுமா?

அறிவு சிறந்தபின் அப்பாவிப் பன்றியும்
கரைச்சல் காக்காவின் பெருமாள் பகட்டைப்
பகட்டா திருக்குமோ?
பகட்டினாலும் என்?

-நோயல் ஜோசப் இருதயராஜ்

www.padippakam.com

# நேர்காணல்: தோழர் பி. ஆர். குப்புசாமி (கரூர்)

குறிப்பு : தோழர். பூ. அர. குப்புசாமி அவர்கள், தமிழகம் நன்கறிந்த பெரியாரியர். மற்றும் மார்க்சியர் பிளவுபடாத இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் 1950 முதல் 1962 வரையிலும், பிளவுக்குப்பிறகு இ.பொ.க.வில் 1971 வரையிலும் பணியாற்றினார். பிறகு திராவிட இயக்கத்தில் பணியாற்றினார். தமிழக விடுதலை இயக்கங்களோடு இடையறாத தொடர்புடையவர். 1933-ல் பிறந்தவர். காவிரி மீட்பு இயக்கத்தில் முனைப்புடன் தற்போது பாடுபடுகிறார். வழக்குரைஞராக கரூரில் வாழ்கிற இவரது கட்டுரைகள் பல இன்னும் நூல் வடிவில் வெளிவரவில்லை. நேரில் அவரை சந்திக்க இயலாத நிலையில் என் எழுத்து வடிவிலான கேள்விகளுக்கு அவர் தந்த விரிவான பதில்கள் கீழே தரப்படுகின்றன.

## *1. மார்க்சிய கட்சியில் உங்கள் அனுபவங்களைத் தொகுத்துச் சொல்லுங்கள்:*

பெரியார் மணியம்மாவைத் திருமணம் செய்து கொண்டதும், அண்ணா தொடங்கிய அமைப்போடு சேர விருப்பம் வரவில்லை. எனக்கு அடிப்படையில் 'மனித குல விடுதலை' என்ற இலட்சியமே உந்துசக்தியாக இருந்து வந்ததாலும், பெரியார் பொது உடைமைக் கொள்கைச் சிறப்பைத் தொடர்ந்து சொல்லி வந்ததாலும், இயல்பாகப் பொது உடைமைக் கட்சியின் பால் ஈர்க்கப்பட்டேன். பொது உடைமையர்மீது அப்போதிருந்த அடக்குமுறை தியாகங்கள் அவர்களோடு என்னைப் பிணைத்தது. கட்சித் தோழர்கள் ஒளித்து வைத்திருந்த கட்சி வெளியீடுகளைத்தேடிப்பிடித்துப் படித்து வந்தேன். இரண்டறக் கலந்து இயங்கினேன். கட்சியில் 1952 வாக்கில் கட்சி அட்டை தந்தார்கள். குறிப்பாக பி.சி. ஜோசியின் ''காங்கிரசுத்தலைவர்கட்குக் கம்யூனிஸ்ட் பதில்'', ''தலைவர்கள் தவறக் கூடாது'' என்ற இரண்டு புத்தகங்களும், ஸ்டாலின் மற்றும் இலெனின் ஆகியோரது தேசிய இனப் பிரச்சினை பற்றிய கட்டுரைகள் போன்றவைகளும் என்னைக் கட்சியில் பிணைத்து விட்டன. (ஆனால் மதுரை மாநாட்டிலேயே லெனினது தேசிய இனக்கொள்கையை விட்டுவிட்டார்கள் எனப் பின்பு தெரிந்து கொண்டேன்).

1957 தேர்தல் முடிவுவரை கட்சி சொன்னதைப் பரப்புவது, இட்ட வேலையைச் செய்வது என்றிருந்தேன். ஆனால் மனதில் ஒரு நெருடல் தோன்றி வளரத் தொடங்கியது. மதுரை 'எஸ்.ஆர்.கே'-யின் சில பேச்சுகள், தீவிரமான சந்தேகங்களைக் கிளப்பின. தலைவர்கள் தமிழின் சிறப்பைக் குறைத்துக் கூறும் நூல்களைக் கையோடு எடுத்துவந்து, எல்லா இடங்களிலும் அவைகளில் உள்ள கருத்தைக் கூறி வருவதும், தி.க., தி.மு.க.-வுக்கு எதிர்ப் பாட்டுப் பாடுவதையும் கட்சியின் தத்துவமாக ஆக்கிவிட்டனர்.

தமிழ்நாட்டு நன்மை காத்தல் தொடர்பான பேச்சை எடுத்தாலே ''சாவனிசம்'' என்று கூறிவிடுவார்கள். 1970-களில் வளர்ந்த எம்.எல் இயக்க உறுப்பினர்கட்கு மார்க்சிய அடிப்படைகள் போதிக்கப்பட்ட மாதிரி எதுவும் செய்யவில்லை' கட்சி வெளியீடுகள் தான் கிடைத்தன. காங்கிரசோடு கூட்டு என்றால் ''தேசியம், பிரிவினை எதிர்ப்பு'' முழக்கம் தரு



படிப்பகம்

www.padippakam.com

வது, தி மு.க.வோடு சேருவது என்றால் லெனினது தேசிய இனக் கொள்கையை மேற்கோளிட்டு, அவர்களோடு தேர்தல் கூட்டை நியாயப்படுத்துவது. இந்தப் போக்குகளோடு கூட, குறிப்பாக இந்தியச் சமூக அமைப்பை உள்ளது உள்ளபடியே புரிந்து அந்த அசமத்துவத்தன்மையை எடுத்துக்கூறும் பெரியார், டாக்டர். அம்பேத்கர், லோகியா போன்றவர்களின் நூல்களைப் படிப்பது கூடப் பாவம் என்ற உணர்வை ஏற்படுத்திவிட்டனர்.

1960-63ல் சென்னையில் இருந்தபோது தினசரி மாநிலக்குழு அலுவலகம், மாவட்டக் குழு அலுவலகம், தொழிற்சங்க அலுவலகங்கள், ஜனசக்தி அலுவலகம் ஆகியவற்றுக்குச் செல்வது வழக்கம். இந்திய-சோவியத் பண்பாட்டுச் சங்கம், இந்திய-ஆப்பிரிக்க ஒற்றுமைச் சங்கம், இந்தியா-சைனா நட்புறவுக் கழகம் போன்ற அமைப்புகளில் எல்லாம்முழுமூச்சோடு வேலை செய்வதில் ஈடுபட்டேன். மாணவர், கலை, இலக்கியம், இளைஞர் பிரிவுகளில் வேலை. ஆனால் கூடிய மட்டும் இவை செயல்படாமல் இருக்க முயற்சிகளைத் தலைமை மேற்கொண்டது. மாணவர், இளைஞர், கலை, இலக்கியம் என்றாலே ''பார்ப்பன எதிர்ப்பும்'', ''தமிழ் இன உணர்வும்'' வந்துவிடும் எனப்பயந்து ஒதுக்கினார்கள். இம்முயற்சிகளை ஓரம் கட்டினார்கள். பொதுவுடைமைக் கட்சி, தமிழ்பற்று இல்லாத தமிழ் அறியாத ஒன்று எனத் தி.மு.க.-வினர் எங்கும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தனர். எனவே இந்தக் கருத்தை எப்படியாவது உடைக்க வேண்டும் என்று என்போன்ற ஒரு சில இளைஞர்கள் முடிவு செய்து ஜீவாவுடன் இதுபற்றி அடிக்கடி விவாதித்தோம். அவர் தன் இயலாமையைக் கூறுவார். இது நடந்தது 1954- 56 வாக்கில் ஆகும். அதன் விளைவே கலை, இலக்கியப் பெருமன்றத்தின் தோற்றம்.

உண்மையில் க.இ.பெ.மன்றம் 1960-ல் கோவை பிரசிடெண்ட் ஹாலில் வைத்துத் துவங்கப்பட்டது. அதற்கும் முன்னரே புதுக்கோட்டையில் என்னைப்போன்ற தோழர்களுடன் சேர்ந்து ஒரு இலக்கிய மன்றத்தைத் துவங்கி 1957—60 ஏப்ரலுக்குள் சுமார் 13 இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தினேன். மூன்று பாரதி விழாக்கள் பெரிய அளவில் நடத்தினேன். அவைகளில் ஜீவா மூன்று முறையும் ஜெயகாந்தன் ஒரு முறையும், ரகுநாதன் ஒரு முறையும், எஸ்.ஆர்.கே ஒருமுறையும், தமிழ்க் கடல் ராய. சொ. ஒருமுறையும் இன்னும் சிலரும் பங்கு கொண்டனர். அதன் நிகழ்ச்சி ஒன்றின்போதுதான்ஜீவாவை வைத்து, பொதுகை சேதுராமன், ஜெகநாதன் முதலிய பலரோடு கலந்து தமிழ்நாடு அளவில் கலை, இலக்கியப் பெருமன்றம் தொடங்க வேண்டுமெனக் கேட்டுத் தமிழ்நாடு மாநிலக் குழுவுக்கு மடல் எழுதினோம். அதன் பின்னர், சென்னையில் நடந்த இரண்டாவது கிருசிக்(உழவர்) கண்காட்சியில் திருப்பூர் ஸ்பைடர் கம்பெனி கண்காட்சிக் கூடத்தில் மூன்று— நான்கு நாட்கள் புதுகை முடிவை எப்படிச் செயல்படுத்துவது என்பது குறித்து நானும், ஜீவாவும், டி.செல்வராசும் தனித்தனியே வந்து ரகசியமாகக் கூடி விவாதித்து முடிவுகள் எடுத்தோம். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முழுவதும் இருந்த கட்சிகளில் இருந்த தமிழ் ஆர்வம் கொண்ட சுமார் 50 பேரை அழைத்துத் தோழர் தா.பாண்டியன் வீட்டில் கூட்டம் நடத்தி அதில் அமைக்கப்பட்டது தான் கலை, இலக்கியப் பெருமன்றம் ஆகும். சிவகாம சுந்தரி என்ற தமிழ் எம்.ஏ., முடித்தத் தஞ்சை மாணவி கட்சிக்கூட்டங்களிலும் இலக்கியக் கூட்டங்களிலும் 1957-58களில் நன்கு பேசி வந்தார். அது பொறுக்காத தஞ்சையிலிருந்த வயதான தலைவர்கள் அத்தோழருக்குத் தொல்லைகள் கொடுக்கவே அவர்கள் திருச்சிக்குக் குடியேற வேண்டியதாயிற்று. கலை இலக்கியப் பெருமன்ற மாணவர்கள் உற்சாகமாக ஜீவா, எஸ்.ஆர்.கே, சிவகாம சுந்தரி, தா.பாண்டியன், ரகுநாதன் போன்றோரைக் கொண்டு ஏராளமான இலக்கியக்கூட்டங்கள் நடத்தினர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அவர்களை அழைத்து அத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தும் போக்கு வளர்ந்தது. எனவே 1962-63க்குள் கம்யூனிஸ்டுகளுக்குத் தமிழ் ஆர்வம் இல்லையென்ற குற்றச்சாட்டு ஒழிந்தது.

ஜீவாவுக்கு நோய்க்கூறான உடம்பு, அவரின் கட்சிக்குள் இருந்த பி. ஆர்.



படிப்பகம்

www.padippakam.com

குழுவினரால் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்த தொல்லைகளின் விளைவுகளைத் தாங்க முடியாமல் விரைவில் இறந்து போனார். 1962 தேர்தலில் வடசென்னைவண்ணைதொகுதியில் அவர் போட்டியிட்டபோது மாணவர் குழுவின ராகிய நாங்கள் பிராட்வேயில் இருந்த சன சக்தி மற்றும் மாநிலக்குழு அலுவலகம் வழியாக வடக்கே செல்லும்போது அங்கே இருந்த தோழர்கள் எங்களைக் கிண்டல் அடிப்பார்கள்' ஜீவா, பி.ஆர். குழு எப்படியெல்லாம் தமிழ் நாட்டில் உள்ள கட்சி அமைப்புகளைக் கைப் பற்றி வைத்திருக்கிறது ஏற்கனவே எடுத்த முடிவுகளை என்ன ஆயிற்று என்று கவலைப் படாமல் மாநிலக் குழுவைக்கொண்டு புதிய முடிவை டில்லியில் இருந்தவாறே பி.ஆர். எடுக்க வைக்கிறார். அதிலும் தமிழக நிலைகளுக்குப் புறம்பாக ஏன் எதிராகக் கூட எடுக்கிறார்'' என பலமுறை எங் களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார். கட்சியின் தலைமை, மெல்ல மெல்லத் தமிழின விரோதப் போக்குடனும், வறட்டு பொருளா தாரக் கண்ணோட்டத்துடனும் செயல்பட்டு வந்தது சட்டக்கல்லூரிக்கு ஜீவாவை அழைத்துச்சென்றபோது அதன் இயக்குநர் ஏ எஸ்.பி. அய்யர் நேரக் கட்டுப்பாட்டை விதித்தார். ஆனால் பி.ஆர். பேச வந்த பொழுது நெடுநேரம் அவரை வாயாரப் புகழ்ந் தார். பெரும்பாலும் திராவிட இயக்கத்திற்கு விரோதமாக குறிப்பாக (தமிழ்த் தேசிய இன எழுச்சிக்கு) எதிராக கம்யூனிஸ்ட் கட்சி பயன் படுத்தப்பட்டது. எஸ்.ஆர்.கே., பி.ஆர்., உமாநாத்ராவ் போன்றவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்கண்ட இரு போக்கு களையும் வெளிப்படுத்திப் பேசுவர்.

1959-ல் என்று எண்ணுகிறேன். திருச்சி யின் தேவர் ஹாலில் பி ஆர்., இந்தி, இந்தி யாவின் தேசிய மொழியாக ஏன் ஏற்கப்பட வேண்டும் என்று தன் திறமையெல்லாம் காட்டி வாதாடிப் பேசி கட்சி அணிகளை நம்ப வைத்துவிட்டார். பின்னால் அவருடைய ஆட்களைக் கொண்ட தனிக்கட்சி அமைத்த வுடன் அவருக்குத் தன்னுடைய நோக்கங் களை நிறைவேற்றிக் கொள்ள மிகவும் சௌ கரியமாகிப் போயிற்று.

தொடர்ந்து மத்தியக் கமிட்டிக்குத் தமிழ் நாட்டின் சார்பில் எம்.ஆர்.வி. இருந்து வந் தார். இவர்கள் தி.மு.க. குறித்து மத்தியக் கமிட்டியிடம் கொடுத்த கணிப்புகளை நம்பா மல் மத்தியக் கமிட்டி தமிழ்நாட்டுக்கு மோகித் சனை அனுப்பி வைத்தது. அவர் தமிழ்நாட் டில் தான் கண்ட, விசாரித்த செய்திகளைக் கட்டுரையாக ''நியூ ஏஜ்'' மாத இதழில் எழுதினார். அது தமிழ்நாடு தலைமையின் கருத்துக்களுக்கு முற்றிலும் முரண்பட்டதாக இருந்தது. அது ஆங்கிலத்தில் இருந்ததால் அவர்களுக்குச் சௌகரியமாகப் போய்விட்டது 1961-63களில் நீண்ட காலத் தண்டனை பெற்று சிறைக் கொடுமை அனுபவித்து வெளி வந்த தோழர்களில் பெரும்பாலோர் கட்சியின் தலைமை மீது அவநம்பிக்கை கொண்டு, மேலும் கட்சிப் பணியைத் தொடராமல் ஒதுங்கி விட்டனர்.

தமிழ் தேசிய இன உணர்வின் அடை யாளமாக ஜீவா இருப்பதாகக் கொண்டு அவருக்கிழைத்த கொடுமைகள் பற்றி எங்கள் இளைஞர்மாணவர் குழுவில் அப்போதுதினமும் பேசுவோம். வரட்டுப் பொருளாதாரவாதம், வர்க்கப்போராட்டம் என்ற மந்திர உச்சாடனம், பொருளாதார அடிப்படையை மாற்றிவிட்டால் மேல்கட்டுமானம் தானே மாறிவிடும் என்ற பாணியிலான பதில்கள்தான் தலைவர்களிட மிருந்து, கம்யூனிசத்தின்பால் பற்றுக்கொண்டு கட்சி நோக்கி வரும் இளைஞர்கட்கு கிடைக் கும். அண்ணாமலைபல்கலைக்கழகத்திலிருந்து 60-70 மாணவர்கள் பிரதிநிதிகள் மாநில அலு வலகம் வந்து ''மாணவர் கிளை'' அமைக்க அனுமதி வேண்டியபொழுது சிந்தன் அவர் களைக் கிண்டல் செய்து அழவைத்து அனுப்பி விட்டார். அவர்களை நானும், ஏ.எம். கோதண்டராமனும் எதிர்கொண்டோம். அழாக்குறையாக இருந்த அவர்களைத் தேற்றி ஏ.எஸ்.கேயிடம் அழைத்துச் சென் றோம். அவர்களுக்குத் தேறுதல் கூறியதோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மோகன் குமாரமங்கலத்தை மாணவர் கூட்டத் தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்தார்.

''எம்.எல்.'' அமைப்பு உருவாகத் தொடங்கியதும், உளவுத்துறைத் தலைமையில் இருந்த நண்பர் ஒருவர் 'ஏ.எம்.கே.' மற்றும் என் பெயர் உட்பட சுமார் 100 பெயர்களை, இவர்கள் தீவிரவாதிகள் எனப் பட்டியல் போட்டு மாநிலத் தலைமை தங்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பி இருப்பதாகவும், கவனமாகச் செயல்படும்படியும் எச்சரிக்கை அனுப்பினார். கட்சி பிரிந்ததும் 'சி.பி.ஐ'-யில் தொடர்ந்தேன். ஆனால் சி.பி எம். போல் தெளிவான தமிழின நலன்களுக்கு எதிர்ப்பு மற்றும் பார்ப்பனீய ஆதரவு போன்றில்லாமல், இருந்ததால் அதில் தொடர்ந்தேன். இருப்பினும் பாவலர் வரதராஜனுக்கு சி.பி.எம் இடைஞ்சல் செய்ததுபோல், இவர்கள் என் போன்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யத் தொடங்கினர். எனவே பகுத்தறிவு, பார்ப்பனீய எதிர்ப்பு, தமிழ் தேசிய இன நலன், சுரண்டல் எதிர்ப்பு என்பவற்றைப் பேச ஒரு வாய்ப்பாவது இருக்கும் என நானும், எங்கள் வட்டாரத்தில் என்னைச் சேர்ந்தவர்களும் தி.மு.க. உறுப்பினராகினோம்.

கலை, இலக்கியப் பெருமன்றம் ஏற்படுத்த, பி. ஆர். குழு தலைமைக்குத் தெரியாமலேயே வேலை செய்து பி. ஆர். சென்னையில் இல்லாத சமயத்தில் அதை அங்கீகரிக்கும் தீர்மானம் மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டது. அது தோற்றுவிக்கப்பட்ட நாளில் இருந்து அதைக் கலைக்க உமாநாத்ராவ் போன்றவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டே இருந்தார்கள். (இதுபற்றி விரிவான விளக்கம் ஒலி நாடாவில் 6 மணிநேரம் பேசி உள்ளேன். அது எழுதப்படாமலேயே உள்ளது).

## *2. கட்சியை விட்டு நீங்கள் வெளியேறியதற்கான காரணங்கள் என்ன?*

தொடர்ந்து மார்க்சியச் சிந்தனையின் அடிப்படை நூல்களைப் படிக்கப்படிக்கக் கட்சி சரியான கொள்கைவழிச் செல்லவில்லை என்பது தெளிவாயிற்று.

குறிப்பாக தொழிற் சங்கங்களை வெறும் பொருளாதாரப் போராட்டக் கருவியாக மட்டும் பயன்படுத்தியது சரி அல்ல என்ற காரணம்.

தமிழ், தமிழின விரோதப் போக்கு, தீண்டாமை, சாதி அமைப்பு, அதைத் தகர்த்து வர்க்க ஒற்றுமையை நிலைநாட்டும் சிந்தனையோ, நாட்டமோ இல்லை.

வெறும் தி.க., தி.மு.க. விமர்சனம் மட்டுமே தத்துவம்-கொள்கை என்பது போல. கட்சியின் கொள்கைப் பார்வையைக் குறுகி விட்டது இது.

சிங்காரவேலு நினைவை மறைத்து, தந்திரமாகச் செங்கொடி காத்த சிங்காரவேலுவின் பெயரை உச்சரித்து வந்தது.

ஜெயகாந்தன், இசை அமைப்பாளர் எம். பி. சீனிவாசன் கட்சியின் இதர பல தலைவர்கள் மறைமுகமாக ஜீவாவைப்பற்றி விமரிசனமும், அவதூறுகளும் கிளப்பி வந்தது.

மனைவிக்கும்-ஜீவாவுக்கும் முரண்பாடு உண்டாக்கிவிடுவது, தலைமையில் பார்ப்பனர், தமிழரல்லாதோரின் ஆதிக்கம் இப்படிப்பல, மதுரை மாநாட்டில் ஒரு தோழர் ''ஆங்கிலம் தெரிந்த கம்யூனிஸ்டுகள், ஆங்கிலம் தெரியாதவர்களை ஏமாற்றுகிறீர்கள்'' எனச் சத்தம் போட்டாராம். அது போன்ற ஏமாற்று வேலைகள்.

கட்சி தவிர்க்க வேண்டிய தீய அம்சங்கள் எவை, எவை என லெனின் போன்றவர்கள் கூறியிருக்கின்றார்களோ, அத்தனைக்கும் நிலைக்களமாக கட்சி(கள்) ஆகிவிட்ட நிலை.

கட்சித் தலைமை (வலது) ஒரு மாநிலக் குழுவின் உறுப்பினர் வட்டக் குழுக்களின் அலுவலகத்திலேயே, நகர செயலாளரின் மனைவியை வைத்துக் குடும்பம் நடத்துவது ஊர் பூராவும் தெரிந்தாலும் அவ மீது நடவடிக்கை எடுக்கச் சக்தியற்ற நிலையில் இருந்தது.

சீன-இந்திய எல்லைத் தகராறின் போது பி.ஆர். நடந்துகொண்ட முறை, அவர் குடும்பம் வசதியாக வாழ்ந்த போது ஜீவா வறுமையில் உழன்றது. அவர் இறந்தபோது மிகவும் சொற்ப ஏற்பாடு செய்து, பின் அவருக்குக் கட்சி கடந்து இருந்த செல்வாக்கால் நிறைந்து விட்ட மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாமல் போனது ஆகிய எத்தனையோ நிகழ்ச்சிகள். ஜீவாவின் காலுக்குச்செருப்புமில்லை, போன்ற பிரபலமானப் பாடல்களைப் பாடவும் அதைப் பதிவுசெய்ய இசைக்கலைஞர்களும், ஏ.வி.எம். ஸ்டுடியோவும் முன்வந்தும் கூட அதற்குச்



படிப்பகம்

www.padippakam.com

செலவாகக்கூடிய சில ஆயிரம் ரூபாய் கொடுக்க கூட பி.ஆர். குழு மறுத்துவிட்டது.

கட்சி பிரியும் முன் தஞ்சை மாவட்டத்தில் நடந்த பெரிய விவசாயப் போராட்டத்தில் தொடர்ந்து ஜீவாவுக்கு எந்தப் பாத்திரமும் தரவில்லை. சில தினங்கள் பார்த்துவிட்டு அவராகவே பெட்டியை எடுத்துக்கொண்டு தஞ்சை சென்று வலியக் கலந்து கொண்டார். ஏன் ஜீவா மறைவுக்குப்பிறகு அவர் நினைவாக எதுவும் செய்ய மறுத்து விட்டனர். 'பி.எஸ். ஆர்'-க்கு ஒன்றும் செய்யாத நிலையில் இவருக்கு மட்டும் எப்படிச் செய்வது' என்பது பதில்.

ஜனசக்தி நிதிக்கு ஜீவா சிவாஜி கணேசனை அணுகி 'தமிழகத்தில் 5 லட்சம் நிதி திரட்டித்தா'' எனக்கூற அவரும், தமிழகத்தில் உள்ள 5 பெரிய நகரங்களில் நாடகம் நடித்துத்தருகிறேன். ''நீங்கள் வசூல் செய்து கொள்ளுங்கள்'' எனக் கூறினார். ஆனால் மாநிலக்குழு, ''நீங்கள் தனியாகச் சென்று கேட்க அதிகாரம் படைத்தவரா'' எனக் கேட்டு விட்டு, மாநிலக்குழு சார்பில் 'பி.ஆர்' ஆட்கள் சென்று சிவாஜியிடம் கேட்டனர். அவர் ''நான் ஜீவாவுக்குத்தான் ஒத்துக்கொண்டேனே தவிர உங்களுக்காக அல்ல'' எனக்கூறி அனுப்பி விட்டார். பின் அது அப்படியே நின்று விட்டது. இப்படி 1000 உதாரணங்கள் கூறலாம்.

## 3. திராவிட இயக்கத்தோடு உங்கள் தொடர்புகள் குறித்துச் சொல்லுங்கள்!

பொது உடமை கட்சித் தொடர்பு நீங்கிய பின் தி.மு.க.வில் உறுப்பினராக (சில பொறுப்புகளிலும்) இருந்தால் கூடப் பகுத்தறிவுப் பிரச்சாரம், தமிழ் இன உரிமை, சாமான்யர் விடுதலை என்ற கொள்கைகளை முன்னிலைப்படுத்தத்தான் இயங்கிவந்தேன். முடிந்தவரை பெரியாரை மேற்கோள்காட்டி, பொதுஉடைமைத்தத்துவம், மக்கள் விடுதலை, புரட்சிகர வன்செயலின் அவசியம், வெறும் சட்டத்தால் ஒன்றும் செய்ய இயலாது போன்றவற்றைச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் எடுத்துக்கூறி, எழுச்சி உரை நிகழ்த்தி வந்தேன். இந்தத் தேர்தல் முறை ஜனநாயகம் இவற்றில் உண்மையான பொது உடைமை வாதிகள் போல, பெரியாருக்கும் நம்பிக்கை இன்மையால் தேர்தலில் 'டிக்கட்' கொடுக்கக் கழகம் முன்வந்தும் மறுத்து வந்துள்ளேன்.

கரூர் நகரில் 12-13 வருடங்கள் நான் நடத்திய பரபரப்பான பட்டிமன்றங்கள் (மக்களை அதிக முட்டாளாக்கியது காந்தி கொள்கையா, கடவுள் கொள்கையா? பக்தி மார்க்கம் பரப்பக் காமச் சுவையை அதிகம் கையாண்டது சைவமா? வைணவமா? இன்றையத் திருமண வாழ்வின் அடிப்படை காசா? காதலா?) முதலிய நடவடிக்கைகளினால் ஈர்க்கப்பட்ட திரு. கி. வீரமணி அவர்கள் மாநில பகுத்தறிவாளர் கழகத்தின் துணைத்தலைவராக 15 ஆண்டுகட்கு மேல் வைத்திருந்தார். தி.மு.க. மேல்மட்டத்துடன் இருந்த எனது நெருக்கம் ஏற்கனவே கலைஞர் பற்றிய கருத்துக்களை உறுதிப்படுத்தியதுடன், தமிழகத்திற்கு அவர் செய்த சேதாரம் குறித்து அதிர்ச்சி அடைந்து, விமரிசனம் செய்யாமல் இருக்க முடியவில்லை. முடிவு வெளியேற்றம். தி.க., ப.க., உறவு இன்னும் அறுந்துவிடவில்லை.

தி.மு.க. அணிகள் மத்தியில் கம்யூனிசக் கொள்கையை அறிமுகப்படுத்தும் நோக்குடன் கலைஞர் கம்யூனிஸம் பற்றி அவருக்கே உரிய பாணியில் விளக்கியவற்றைத் தொகுத்து முரசொலியில் ஒரு கட்டுரை எழுதினேன். விளைவு வேறுவிதமாக இருந்தது. சாதாரண முரசொலி வாசகர்கள் அது கலைஞரின் பெருமையில் ஒன்றாக மட்டுமே எடுத்துக் கொண்டனர். அதுபோலவே டாக்டர். இராமதாஸ் கூறிவந்த எளிமை, பதவி நாட்டமின்மை போன்றவற்றை (இன்றைய தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மோசமான ஆடம்பர அரசியல் சூழலில், எளிமையை வற்புறுத்தும் நோக்குடன்) குறித்து ஒரு கட்டுரை 'தினப்புரட்சி'யில் எழுதினேன். அதிலும் மேற்கண்ட மாதிரி பக்கவிளைவே ஏற்பட்டது. பொதுவாகப் பெரியாரின் நல்ல அம்சங்கள் பொருத்தமான முறையில் பரப்பப்பட்டால், பொது உடைமை கருத்தை விதைக்க ஏதுவான முறையில்



படிப்பகம்

www.padippakam.com

சாமான்ய மக்கள் மனநிலை மாற்றம் அமையும் என்ற என் எண்ணத்தை (எல்லாவித) தி.க.,ப.க., ஆகியவற்றின் தொடர்பு எனக்கு ஏற்படுத்தியது.

திராவிட இயக்கத் தொடர்பை தேர்தல் அரசியலுக்கோ, அல்லது விளம்பரத்திற்கோ தான் ஏற்றுக் கொள்ளவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் தமிழ் தேசிய இனத்தின்தன்மைகளில் உண்மையான பாதுகாப்பு, உழைக்கும் சாதிகளின் ஒற்றுமை, பகுத்தறிவுப் பிரச்சாரம் போன்றவற்றிற்கு ஏதாவது பணியாற்ற முடியும் என்ற ஒரு எண்ணத்தோடு பணியாற்றினேன். ஆனால் எம்.எல். குழு ஒன்றாக இருந்த காலத்திலும் அது பிளவுகளுக்கு ஆளாகிச் செயலற்ற நிலையிலும் எனக்குச் சரியென்று தோன்றிய செயல்களைச் செய்து வந்தேன். அது தான் ஏழு மாதம் மிசா சிறையில் இருக்கக் காரணமாயிற்று.

பொதுவாக தமிழ் தேசிய இன உணர்வுகள், ஆயிரம் ஆண்டு அன்னிய ஆட்சியில் அழிக்கமுடியாமல் நீறு பூத்த நெருப்பாக இருந்ததைத் தங்கள் வீட்டு அரசியலுக்கு எப்படி இலாவகமாகக் கையாண்டு பதவியையும், பணத்தையும் கைப்பற்றினார்கள் என்பதை கண்கூடாகக் கண்டேன்.

ஆனால் தமிழ் இன உணர்வு 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதும் 1983 ஜூலை சிங்களர் தமிழர்களைக் கொடுமைப் படுத்திய போதும் எப்படி சினந்து சீறியெழுந்து வெளிப்பட்டது என்பது சமீப வரலாறு. ஏன்! ராஜீவ்காந்தி மரணத்திற்குப் பிறகு நாளது வரையில் நடக்கும் மறைமுக நேர்முக தமிழின உணர்வு ஒடுக்கல் செய்தி பரப்பலையும், அடக்கு முறையையும் தாண்டிக்கூட எப்படி கனன்று நிற்கும் நிலைக்கு மாறி வந்திருக்கிறது என்பதையும் பார்க்கலாம். தி.க., தி.மு.க., முதலிய அமைப்புகளின் உறவு எனக்கு ஒரு கள ஆய்வாக அமைந்தது.

### *4. மார்க்சியத்தையும், பெரியாரியத்தையும் எந்த அம்சங்களில் நீங்கள் இணைக்கிறீர்கள்?*

பொதுவாக ஏற்றத்தாழ்வான சமூகம் ஏற்பட்டபிறகு, தாழ்த்தப்பட்டவர்கள் சார்பாகச் சிந்தித்து, செயல்பட்டும் போராடி வெற்றி, தோல்வி கண்டவர்களின் சொல், செயல் இவைகளைப் படித்தறிந்து, அவர்களின் அனுபவத்தை உள்வாங்கி பிறகு மார்க்சீய பாணியில் அச்சிந்தனை—செயல்பாடுகளை உயர்த்தி, மார்க்சியர்களின் இதர நாட்டு புரட்சி யுக்திகளை இந்த நாட்டுச் சூழ்நிலைக்கேற்பக் கையாண்டு சமுதாயப்புரட்சி நடத்துவதே சிறந்தது. இது குறித்து லெனின் அவர்களின் 'Necessity of Militant Materialism' கட்டுரை ஒரு நல்ல வழிகாட்டி. மார்க்சிடமும், பெரியாரிடமும் நூற்றுக்கணக்கான ஒத்த சிந்தனைகளைக் காணலாம். வன்முறைப் புரட்சியின் அவசியம், அரசின் தன்மை, சீர்திருத்தவாத மறுப்பு, சமுதாயப் புரட்சியை வற்புறுத்தல், பழைமையை அழித்தல், இந்த ஜனநாயகத்தின் தன்மை, ஓட்டு, ஊழல், (முதலாளித்துவ) சுதந்திரம், சுதேசியம், தேசாபிமானம், மொழி, கல்வி, கற்பு, பெண்ணுரிமை, திருமண உறவு ஆகியவற்றில் (free love வரைதான் வருகிறார்) மதம், கடவுள், அகிம்சை, ஆணாதிக்கம், கூலி அடிமை, கலை, சமதருமம், இறுதி இலட்சியமான பொது உடைமை, நாட்டுப் பிரிவினை, மனித சமூக விடுதலை, மூளை உழைப்பு, கர உழைப்பு பேதம் ஒழித்தல், கிராம, நகர பேதம் ஒழித்தல், தொழிலாளர் ஜனநாயகம், இலக்கியங்கள், இடைத்தரகர் ஒழிப்பு, சட்ட மறுப்பு, கூட்டுறவு, தேசிய இனம், மூடநம்பிக்கை ஒழிப்பு, நீதித்துறை, கூலி உழைப்பு, காந்தீயம் இப்படி எத்தனையோ பொருள்கள் குறித்த மார்க்சீய ஆசான்களின் கருத்துடன் பெரியார் கருத்து ஒத்துப்போவதைக் காணலாம். (அவர் தன் பாணியில் அவைகளைக் கூறுவார்). அவரை ஒரு மார்க்சியராக வைத்துக் கொண்டு குறை கூறுபவர்கள் தான் அதிகம். அவரை அவராகவே வைத்து, உழைப்பாளர் விடுதலை இயக்கத்திற்கு எப்படி அவர் தொண்டை-கருத்தைப் பயன்படுத்தி மேலே கொண்டு வருவது என்ற சிந்தனையை பழைய தலைவர்கள் மேற்கொள்ளவில்லை. மாறாக அவர் குறித்த அக்ரஹாரத்தின் போக்கையும், பழைய தலைமையின் போக்கையும் பார்த்தால் ஒரு நேர் இணை கோடாய் எப்போதும் பார்க்கலாம். பெரியார் ஒரு Precursor of Indian Communism என்பது என் வரையறை.



படிப்பகம்

www.padippakam.com

ஒருமுறை பெரியார் அவர்களுடன் (1971 என எண்ணுகிறேன்) சுமார் 3-4 மணி நேரம் விவாதிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. அப்போது மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ போன்றோர், பெரியார் அவர்கள் கூறியதுபோலவே கூறியுள்ளவற்றை கூறினேன். ஆவலோடு கேட்டு, ''இப்போது இருந்தால் அவர்களுக்கு என்ன அய்யா வயது இருக்கும்?'' எனக் கேட்டார். ''மதத்தை விமரிசனம் செய்வதுதான் பிற எல்லா விமரிசனங்களுக்கும் தொடக்கம்'' என மார்க்ஸ் கூறியதையும், ''இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேல் இருட்டறையில் தள்ளப்பட்ட சாமான்ய மக்களைப் பகுத்தறிவு வாதிகள் போன்றோரது சாமார்த்தியமான மத எதிர்ப்பு—விமரிசன பிரசாரம் மூலம் மீட்காமல், நேரடியாக வரட்டுத்தனமாக அவர்களிடம் மார்க்சியத்தைக் கொண்டு செல்வது மிக்கெடுதலையை விளைவிக்கும்'' என இலெனின் எச்சரித்ததை நான் கம்யூனிசு இயக்கத்துக்காரர்கட்கு நினைவூட்டி தொடர்ந்து விவாதித்து வந்திருக்கிறேன்.

புத்தமதத்தை வீழ்த்தியபிறகு-பார்ப்பனிய சத்ரிய கூட்டணி மனுதர்மத்தை மேலும் கடுமையாகத் திருத்தி அதை கடுமையாக அமல் படுத்தியதன் விளைவாக உருவானதே நாம் இன்று காணும் சமுதாய அமைப்பாகும். எனவே அப்படி ஏற்பட்ட சமூக அமைப்பின் ஏற்றத்தாழ்வு தன்மைகளைப் படம்பிடித்துக் காட்டும் பெரியாரது கருத்துக்களை அசை போட்டு ஜீரணித்து, பிறகு இந்த இந்திய தனித்தன்மையான ஏற்றத்தாழ்வை ஒழிக்க வழி காண்பதில் மார்க்சிய இயங்கியல் பார்வையும், செயல் திட்டமும் அமைந்தால் இந்திய மக்கள் விடுதலைக்கு ஏதுவாகும் என்பது என் கருத்து.

சமீபத்தில் 10-20 ஆண்டு காலமாக இந்திய பாணி ஏற்றத்தாழ்வின் தனித்தன்மை குறித்து, மார்க்சிய சிந்தனையாளர்கள் நிறைய நூல்கள் எழுதி உள்ளனர். பொதுவாக பெரியாரது சிந்தனைகள் ஒரு விடுதலை தத்துவமே என்பதை உணர்த்தும் (Liberating Idiology). பொதுவாக மார்க்ஸ் கூறிய ''ஒவ்வொன்றையும் சந்தேகப்படு'' என்பதன் அடிப்படையில்பெரியார் சிந்தித்தார். தன்னை ஒரு சீர்திருத்தவாதி என்பதை மறுத்தார். சட்டத்தீர்வில் நம்பிக்கை வைக்கவில்லை. இவை போன்ற பலமான கருத்துக்களை நாட்டுக்கு அறிமுகமான பெரியார் மூலம் எடுத்துச் சென்று, பின் அதற்கு மேலான புரட்சிப் பாதையை வளர்த்து எடுத்துச் செல்ல வேண்டும். இத்தகைய போக்கு சமீபகாலத்தில் வந்து இருப்பதைக் காணலாம். 1959-60முதல் 1970-71 வரை கட்சிக்குள்ளும், வெளியிலும் நான் இவைகளைத் தனியே கத்திக்கொண்டு இருந்தேன். ஆங்காங்கே சிறிதளவு ஆதரவு கிடைக்கும். இப்போது சற்றுப்பரவலாக இந்த சிந்தனை முறை வளர்ந்திருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். வடசென்னையில் ஜீவா இறந்த பின் நடந்த ஒரு இரங்கல் கூட்டத்தில் ஈ.வி.கே. சம்பத் போன்றோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் நான் இந்துப் பத்திரிக்கை இன உணர்வோடு ஜீவா இறந்ததை இறந்தோர் கலத்தில் சிறு செய்தியாக போட்டுவிட்டு, அதே இதழில் ஒரு பார்ப்பன வழக்கறிஞர் இறந்ததை பெரிய செய்தியாகப் போட்டதைக் கண்டித்தும், இவைபோன்ற செய்திகளையும் பேசினேன். தூரத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்த பாலதண்டாயுதம் நாம் இவைகளை எல்லாம் பேச வேண்டும் என நண்பர்களிடம் கூறியிருக்கிறார். சம்பத் பேசும்போது ''இந்தத் தோழரை அவர்கள் கட்சிக்காரர்கள் இன்னும் எத்தனை நாட்களுக்கு கட்சியில் வைத்திருப்பார்களோ'' என்றும் குறிப்பிட்டார்.

## 5. தமிழ் மக்கள் விடுதலைக்கான இயக்கத்தில் உங்கள் பங்களிப்பு (காவிரி உட்பட) என எவற்றைக் கருதுகிறீர்கள்?

11-12 வயது முதல் நாளதுவரை சுமார் 52 ஆண்டுகளாக உள்ளத்தில் இடைவிடாது ஒலித்துக் கொண்டுள்ளஇலட்சியங்களில் ஒன்று தமிழ் மக்களது விடுதலை ஆகும். தனித்தமிழ் இயக்கத்தலைவர்களைப் போற்றல், தமிழ்நாடு விடுதலைக்கு குரல் எழுப்பும் ஏடுகளைத் தேடி வாசித்தல் அப்படி இயக்கங்களோடு ஒன்று பட்டுச் செயல்படல் ஒரு தொடர் கதையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

புரட்சிக் கவிஞர் தன் முதல் மகள் வீட்டிற்கு (எங்கள் தமிழாசிரியர் திரு. கண்ணப்பர் அவரது மருமகன்) வரும்போதெல்லாம் பிற சில மாணவர்களுடன் சென்று அவரைக்கண்டு நீண்ட நேரம் உரையாடுவோம். ந.சி. கந்தையாபிள்ளை, கால்டுவெல், கிரியர்சன் போன்றவர்களின் தமிழ்-தமிழ் வரலாறு பற்றிய நூல்களையும் சேகரித்தல் படித்தல், இப்படி தி.க. ஈடுபட்ட காலத்தில் இத்தகைய அதன் முயற்சிகளில் மாணவர்களைத் திரட்டிக் கலந்து கொள்ளுதல், 1948-வாக்கில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்களைத் திரட்டி பள்ளிப் புறக்கணிப்பு செய்ததால் பள்ளியில் இருந்து வெளியேற்றப்படல், இப்படி...

பெரியார் திருமணத்திற்குப் பிறகு பொதுஉடைமைக் கட்சியில் சுமார் 20 ஆண்டுகள் தமிழினத்தின் உரிமைக்காக உள்ளேயே வாதிட வேண்டி இருந்தது. அங்கே என்னை ஒரு தி.க. என்று குறிப்பிடுவார்கள். 1971-ல் வெளியேறி பிறகு இன்றுவரை பகுத்தறிவு பிரச்சார அனைத்து இயக்கங்கள், தமிழின விடுதலை உணர்வுக் குழுக்கள், தலைவர்கள், இதழாளர்கள், அனைவருடனும் இணக்கத்துடன் என்னால் முடிந்தவரை செயல்பட்டு அவர்கட்கு ஊக்கம் அளித்து வருகிறேன். உண்மையில் ஒவ்வொரு லட்சியத்திலும் மிகவும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆனால் நம் பணி தொடர்கிறது. பெரியார், மற்றும் மார்க்ஸ் கொள்கையை மனதில் ஏற்றிக் கொண்டவர்கள் மட்டுமே கடைசி மூச்சுவரை தோல்விகளில் துவளாமல் தொடர்ந்து பணியாற்றிட முடியும்.

நான் காவிரி தொடர்பாக எடுத்த தொடர்ந்த நடவடிக்கைகள் காரணமாக தமிழக முதலமைச்சர் உண்ணாநோன்பு (அரசியல் காரணங்கட்காக) இருக்க வேண்டிவந்தது. ஆனால் காவிரியை இனிக் காப்பதும் கடினம். மீட்பதும் கடினம். தமிழன விடுதலை உணர்வு எழ காவிரி பிரச்சினை ஒரு கருவியாக அமைய வேண்டும் என்பதும் என் ஒரு முக்கிய நோக்கமாகும். முதல்வர் உண்ணாநோன்பு இருந்ததால்தான் காவிரி பிர்ச்சினை என்ற ஒன்றை தமிழகம் அறிந்தது. அது தொடர்பான விபரங்கள் அதிகம்.

தமிழகத்தில் தெலுங்கு முதலிய அண்டை மொழிகளை ஆட்சி மொழி ஆக்கிய அரசு ஆணையை வெளிப்படுத்தி அதை எதிர்த்து சென்னையில் ஒரு மாநாடு நடக்க உந்து கோலாகச் செயல்பட்டேன். ஆனால் இதழ்கள் அதை இருட்டடிப்பு செய்துவிட்டன.

1988 மே முதல் நாளதுவரை, பெங்களூர்க்கு மருத்துவத்திற்காகத் தொடர்ந்து செல்வதும், அங்குள்ள தமிழர்களின் தொடர்பும், கர்நாடக தென் மாவட்டங்களில் பல தமிழ் சங்கங்களின்தொடர்பும், அங்கு வளர்ந்து வந்தவரும் கன்னட வெறியும், அதைத் தமிழர் மீது திருப்பிவிட்ட தெலுங்கு லேவா தேவிக்காரர்கள் (கோமுட்டிகள்), நிலக்கிழார்கள் (ரெட்டியார்கள்) குஜராத்தி, மார்வாரி முதலாளிகள்; அதன் விளைவாக 1991 டிசம்பரில் இருந்து தமிழர்கள் அங்கு பிணையக் கைதிகளாக இருந்து வருவது போன்ற எனக்குத் தெரிந்த நிலைமை எல்லாம்தமிழகத்தில் நன்கு எடுத்துச் சொல்லப்படவில்லை... கலைஞர் 1971-ல் உச்சநீதிமன்றத்தில் இருந்த காவிரி வழக்கை இந்திராகாந்தியோடு ஒத்துழைத்து திரும்பப்பெறாமல் இருந்திருந்தால் நாம் காவிரியையும் இழந்திருக்க மாட்டோம். கர்நாடகத் தமிழர்களையும் பிணையக்கைதிகள் ஆக்கும் நிலைமை கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சொத்திழப்புக்கும், தொடரும் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்கி இருக்கமாட்டோம். 1991 கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்க்கு முழுநட்ட ஈடு தர உச்சநீதிமன்றத்தில் என் முயற்சியில் பேராணை தாக்கலாகி விரைவில் விசாரணைக்கு வர உள்ளது. செலவை பெங்களூர் தமிழ்ச்சங்கம் ஏற்கிறது. அதன் பாதுகாப்புக் கருதி அதன் பெயரில் அல்லாமல் தெற்கு மாவட்ட தமிழர்களை அதில் மனுதாரர்களாகப் போட்டுள்ளோம். கடந்த இருபது ஆண்டுகளில் கலைஞர் தமிழக நலன்களுக்கு எதிராகவும், தமிழர்களின் ஒற்றுமையை குலைக்கவும் செய்த கெடுதல்களை நீக்க நாம் இன்னும் 20 ஆண்டுகட்குப் பாடுபட வேண்டி இருக்கும். காவிரி துரோகம், மற்றும் தமிழகத் தலைநகரை திருச்சிக்கு (பெரியார் ஆயுள்பூராவும் சொன்னதைப்போல்) மாற்றவும், எம்.ஜீ ஆர். இரண்டு, மூன்று முறை எடுத்த முயற்சியை முறியடித்து, தமிழகக்



படிப்பகம்

www.padippakam.com

கட்சிகள், சாதி, மத சங்கங்களைப் பிளந்து மோதவிட்டு தமிழகத்தில் ஒற்றுமையின்மைக்கு வித்திட்டது, சாதி வாரிக் கணக்கெடுப்பு ஆணையத்தைக் கலைத்தது போன்ற அவரின் தமிழகத்திற்கு மிகக் கெடுதலான செயல்கள் கணக்கில்லாதவை.

தமிழக அரசியல் தலைவர்களை தமிழ் இன உணர்வாளர்கள் நம்பாமல் ஆங்காங்கே சிறுசிறு குழுக்களாக இயங்கி வருகின்றனர். அவை சுமார் 1000 இருக்கலாம். தாழ்த்தப் பட்ட மக்கள் மத்தியில் வெறும் சாதி சங்கம் ஏற்படுத்துவதற்கு அப்பால், ''பல படித்த இளைஞர்கள் அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் விடு தலையை சமுதாய விடுதலையுடனும், தமிழக உரிமைப்போருடனும் இணைத்துச் செயல்படு மாறு சிந்தித்து செயல்பட்டு வருவது ஒரு பெரிய புதிய நல்ல அம்சம். அவைகளுடன் தொடர்பும், முடிந்தளவு உழைப்பும், அவர் கட்குத் தந்து வருகிறேன். சமூகத்தையே விடுதலை செய்யாது, உங்கள் விடுதலையை மட்டும் தனியே அடைய முடியாதுஎன மார்க்ஸ் கூறியதை அவர்கட்கு எடுத்துக்கூறி வரு கிறேன். ''இழப்பதற்கு ஒன்றுமில்லாதவர் களே புரட்சி செய்ய இலாயக்கானவர்கள்'' என மார்க்சியம் போதிப்பதை அவர்கட்கு எடுத்துச் சொல்லி சமூக விடுதலைப் போருக்கு நீங்கள் தலைமை தாங்க தயாராகுமாறு அவர் களைக் கேட்டுக்கொண்டு வருகிறேன்.

பொதுவாக உங்கள் கேள்விகள் அனைத் திற்கும் எனது வெளிவந்துள்ள நூல்களில் குறிப்பாக ''மன்னரும், மனுதருமமும்'', ''மண்ணுக்கேற்ற பொது உடமை'' போன்ற வற்றில் ஓரளவு பதில்கள் உள்ளன. ஆனால் எழுத வேண்டியது நிறைய உள்ளது. எழுதா தது என் குறை தான்.

● ● ●

# நாம் நாமே

காக்கை குருவி
அவை அவற்றின் ஜாதி.
குயிலுக்கு மானிடப் பூர்வோத்ரம் ஏது?
மயில் குயில், குயில் மயில்
ஆவதில்லை, சித்தருக்கல்லாமல்
வாத்துகள், வானம்பாடிகள்
நாம் ஆகக் கூடாது;
நாம் அவை ஆக முடியாது.

தம்மிடை மாறுகொண்டு
கால் மண்ணிலும் கண் வானிலும்
திரிந்து
வலம் இடம் திசைகள் காணாமல்
வளைய வந்து
தினம் பருக்கை புழு மணி
பொட்டைத்
தினவுகளுக்குப் பறவாய்ப் பறந்து
குஞ்சுகள் பறக்கக்
கூடும் பழுதுபடச்
சிறகின்றிக்குரலின்றி உழலும்
மனிதகதி
நெட்டி நெறித்தும்
சிறகு குரல்மேல் விழுந்த
கருநாளின் ஆசைகள்
கால அலகுகளின் கொற்றலுக்கும்
மிஞ்சி வலி மிகுந்து
கால்களை உதைத்துதைத்துக்
கைகளை ஆட்டி விசிப்
பறப்பதாய்ப் பாவிக்கும்
சின்னேரப் பகற்கனவுப்
படபடப்பில்
சலிப்பாய்ச் சலிப்பதன்றிச்
சாபல்லியம் நமக்கில்லை.
புள்ளில்லை பூண்டில்லை
நாம் நாமே.

-நோயல் இருதயராஜ்



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியத் தத்துவங்களின் பயில்நிலையும் பயன்பாடும் சில சிந்தனைகள்

கலாநிதி நா. சுப்பிரமணியம்
(யாழ். பல்கலைக் கழகம்)

*தமிழ்நாடு இலக்கியப் பெருமன்றம் 1996 ஜனவரி 5, 6, 7 திகதிகளில் திருப்பூரில், 'இந்தியப் பண்பாட்டின் மீது உலகமயமாக்கலின் தாக்கம்' என்ற தொனிப்பொருளில் நிகழ்த்திய தத்துவார்த்த முகாமில் 'தத்துவம்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் விரிநிலை. இந்த உரை அரங்கிற்குத் தலைமை வகித்தவர் டாக்டர் கி. முப்பால்மணி அவர்கள்.*

'உலகமயமாக்கல்' என்பது Globalisation என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாக இன்று பெருவழக்கில் பயில்கிறது. பொருளியல் அடியாக உருவான இச்சொற்றொடர் 'மூலதனத்துக்கே உலகம் சொந்தம்' என்ற தொனிப்பொருள் கொண்டது. வளர்ந்த நாடுகள் வளர்முக நிலையில் உள்ள இந்தியா போன்ற நாடுகளைத் தமது மேலாணைக்கு உட்படுத்துவதற்கு வாய்ப்பாக உருவாக்கிய 'தத்துவார்த்தக் கருத்தியல்' இது. இந்தியா போன்ற நாடுகளின் முதலாளித்துவ சக்திகள் மேற்படிகருத்தியலுக்கு ஒப்புதலளித்துத்துணை போகும் நிலையில் உள்ளன. இதனால் வசதி வாய்ப்புக்கள் உள்ள மேல்தட்டு வர்க்கத்தினர் சிலர் பயன் எய்த, மிகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இவ்வகையில் உலகமயமாக்கல் என்பது மேற்படி உழைக்கும் மக்கள் மீதான 'பொருளியற் போர்' ஆகவே கருதத்தக்கது.

உலகமயமாக்கலின் துணைவிளைவுகளிலொன்று நுகர்வோர் கலாசாரம் (Consumerism) இந்திய மண்ணின் சராசரி மனிதனை அவனுடைய இயல்பான வாழ்வியல் தேவைகள், அவற்றின் மூலம் எய்தப்படும் சுயதிருப்தி நிலை, பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றினின்றும் பிரித்தெடுத்து அந்நியப்படுத்தும் ஆற்றல் இந்த நுகர்வோர் கலாசாரத்திற்கு உளது என அஞ்சப்படுகின்றது. இக்கலாசாரத்தைப் பரப்புவதில் பொதுத் தொடர்பு சாதனங்கள்-குறிப்பாகச் 'சின்னத்திரை' எனப்படும் T.V. ஆற்றிவரும் பங்களிப்பு தொடர்பாக இன்றைய சமூக சிந்தனையாளர் பலரும் கருத்தும் கவலையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறானசூழலில் இம்மண்ணில் நிகழக்கூடிய சமூக பண்பாட்டு விளைவுகள் தொடர்பாகச் சிந்திப்பதற்கு இங்கு ஒன்று கூடியுள்ளோம். இவ்வகையில் பண்பாட்டின் அடிநாதமான கூறு எனத்தக்க தத்துவம் சார்ந்ததாக இவ்வுரை அமைகின்றது. இன்றைய சூழலில் இந்தியத் தத்துவமரபு தொடர்பாக நாம் மனங்கொள்ள வேண்டிய சில கருத்துக்களை உங்கள் கவனத்துக்கு முன் வைக்கிறேன்.

## *தத்துவம் என்பது...*

தத்துவம் என்பது உண்மை பற்றிய அறிவாராய்ச்சியாகும். இதனை 'மெய்யியல்',



படிப்பகம்

'மெய்ப்பொருளியல்' ஆகிய பெயர்களால் வழங்கும் மரபு உளது. தத்துவத்தை ஆய்வு நோக்கில் அணுகுபவர்கள் அதனை அளவையியல் (தர்க்கம்), அழகியல், அரசியல், அறவியல், மீ பௌதிகம் (Metaphysics) ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்ட அமைப்பாகக் காண்பர். (விபரத்திற்கு பார்க்க : Dr. Will Durant-The Story of Philosophy).

'அளவையியல்' என்பது உண்மை காண்பதற்கு அடிப்படையான ஆய்வுமுறையியலாகும். 'அழகியல்' என்பது கலையின் தத்துவம். சமூகக் கட்டமைப்பு அதன் அதிகாரமையம் என்பன தொடர்பான சிந்தனை 'அரசியல்' ஆகும் மாந்தரின் நடத்தை தொடர்பான ஆய்வு 'அறவியல்' ஆகிறது. பொருள்கள், மனம் என்பவற்றின் அடிப்படை இயல்பு, செயல்படுதிறன், தொடர்புநிலை முதலியன சார்பான நுட்பமான ஆய்வியல் 'மீபௌதிகம்' என வழங்கப்படுகின்றது. தத்துவம் தொடர்பான ஆய்வுநிலைப் பொதுவிளக்கம் இது.

சமூகப் பயன்பாட்டு நிலையில் நோக்கும் போது தத்துவம் என்பது ஒருவர் தன்னையும் தன் சூழலையும் பற்றி உருவாக்கிக் கொள்ளும் கருத்து நிலைக்கு அடிப்படையான 'பார்வை' (Vision) எனலாம். இந்தப் 'பார்வை'யே அவரது நடத்தை, சமூக அரசியல் செயற்பாடு, கலையுணர்வுசார் வெளிப்பாடு ஆகியவற்றை உருவாக்கி நெறிப்படுத்திநிற்பது. இவ்வகையில் ஒரு முழுநிறைவான தத்துவம் என்பது பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துவதாக அமைய வேண்டும். அவை:

> உயிர்நிலை, உணர்வுநிலை, அநுபவங்கள், நடத்தை, வாழ்வியல், சமூக உறவுநிலை, உலகம் (இயற்கைச்சூழல்), உலகிற்கு அப்பாலான நிலை.

இவை தொடர்பான தெளிவான முடிவுகளை முன்வைப்பதனூடாக வாழ்க்கையை நிறைவும் பயனும் உடையதாக்குவது தத்துவத்தின் தலையாய பணியாகும். இவற்றின் மூலம் அது எதிர்காலத்துக்கான வழியையும் அமைக்கும்.

இவ் வாறான முழு நிறைவான தத்துவங்கள் எழுந்து ர ா ய : ா ன் ப து தனிநிலை ஆய்வுக்குரியது. உலகில் இன்று வரை உருவான தத்துவங்கள் பலவும் தத்தம் நோக்கிற்கேற்ப மேற்படி கூறுகளில் சிலவற்றை மட்டும் மையப்படுத்தி விளக்கம் தந்துள்ளன. விளக்கம் பெறாத கூறுகளை, விளக்கம் பெற்றவற்றினூடாக உய்த்துணரப்பட வேண்டிய நிலையே உளது. இது தத்துவ உலகின் பொதுநிலை. இந்தியத் தத்துவப் பரப்புக்கும் இது பொருந்தும்.

## இந்தியத் தத்துவங்கள்: பொதுநிலை

இந்திய மண்ணில் எழுந்துள்ள தத்துவங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுவன பன்னிரண்டு. அவையாவன :

> ஐவகைத்தரிசனங்கள் : சாங்கியம், யோகம், வைசேடிகம், நையாயிகம், பூர்வ மீமாம்சை.
>
> மூவகை வேதாந்தங்கள்: அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம்.
>
> சைவ சித்தாந்தம், உலகாயதம், சமணம், பௌத்தம்.

இவற்றுள் சாங்கியம் முதல் நையாயிகம் வரையிலான நான்கு தரிசனங்களும் இவ்வுலகம் உயிர் என்பனவற்றின் இருப்பு தொடர்பாக வெவ்வேறு வகையில் விளக்கம் தரும் நோக்கில் அமைந்தவை. பூர்வ மீமாம்சை உலகம், உயிர் என்பவற்றின் இருப்பைக் கூறுவதோடு அமையாமல் வழிபாட்டு நெறியை முதன்மைப் படுத்தி வலியுறுத்தி நிற்கும் தரிசனமாகும். இதுவேத மரபு சார்ந்த கிரியை முறைகள் மீது நம்பிக்கையை வலியுறுத்துவது. விசிட்டாத்வைதம், துவைதம், சைவ சித்தாந்தம் என்பன சமய நம்பிக்கைகளினடியாக உருவான தத்துவங்கள். முதலிரண்டு வைணவ சமயத்தையும், பின்னையதுசைவசமயத்தையும் சார்ந்தவை.இவற்றில் அவ்வச்சமயங்களின் கடவுளர்களின்ஒப்புயர்வற்றநிலைபேசப்படுவதுடன்அவர்களை உணர்வதற்கும் அடைவதற்குமான வழிமுறைகள்எடுத்துரைக்கப்படுகின்றன. சமணம், பௌத்தம் என்பனவும் சமயத்தத்துவங்களாகக் கொள்ளப்படுகின்றன.எனினும் குறிப்பிட்ட கடவுளரை முதன்மைப்படுத்தி அவை உருவாக



படிப்பகம்

www.padippakam.com

வில்லை. அவற்றின் அடிநாதமான உணர்வு நிலை உயிர்கள் மீதுள்ள கருணையாகும். அஹிம்சை, ஜீவகாருண்யம் என்னும் பெயர்களால் இந்த உணர்வுநிலை சுட்டப்படும். இவற்றைப் போதிப்பதனூடாக உலகியல் வாழ்க்கையின் 'துன்ப துயரங்'களிலிருந்து உயிர்களை விடுவிக்க இத்தத்துவங்கள் முயல்கின்றன:

இவை தவிர ஏனைய இரண்டு தத்துவங்களான அத்வைதமும் உலகாயதமும் ஒன்றுக்கொன்று நேரெதிரான தளத்தில் நின்று தத்தம் பார்வைகளை முன்வைப்பன. உலகாயதம் இந்த உலகம் உள்ள பொருள் எனக்கொண்டு அதனை அநுபவித்து வாழ்வதற்கு வழி சொல்வது. அத்வைதம் இந்த உலகம், உயிர்கள் முதலிய அனைத்துமே நிலையான உண்மைகள் அல்ல என்று கூறி, இவையாவற்றுக்கும் அப்பாற்பட்டதான பிரம்மம் என்னும் மேலான பொருளொன்றே உண்மைஎன்கிறது. அதனை உணரும் பேரறிவே வாழ்வின் இலட்சியம் என அது பேசும். உலகாயத நோக்கிலே பிரம்மம், உயிர் என்பன 'கருத்துநிலை'கள் மட்டுமே. அத்வைதத்தின் நோக்கில் உலகம், உயிர் என்பன பொய்த்தோற்றங்களாகும்.

இவ்வாறாக இந்தியத் தத்துவங்கள் பலவும் தத்தம் நோக்கிற்கு ஏற்ப வெவ்வேறு விடயங்களைப் பேசுகின்றன. சில தத்துவங்கள் தம்முன் நேருக்குநேர் முரண்படும் நிலையிலும் உள்ளன. இத்தத்துவங்கள் அனைத்திலும் காணக்கூடிய பொதுப்பண்பு இவை நடைமுறை உலகியல் வாழ்க்கையைப் பற்றியும் சமூக உறவுநிலை பற்றியும் பேச முற்படவில்லை என்பதாகும். இவை பற்றிப் பேச வாய்ப்புடைய ஒரே தத்துவமான உலகாயதம் கூட வாழ்வியல், சமூக உறவியல் என்பன தொடர்பாக எத்தகு கருத்துக்களைக் கொண்டிருந்தது என அறிவதற்கு அத்தத்துவம் பற்றிக் கிடைக்கும் சான்றுகள் போதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'கருணை'யுணர்வின் தளத்தில் முகிழ்ந்த சமணம், பௌத்தம் என்பன அறம், ஒழுக்கம் என்ற வகைகளில் விரிவாகப் பல விடயங்களைப் பேசியுள்ளன என்பதையும் அவை வாழ்வியலோடும் சமூக உறவியலுடனும் தொடர்புடையன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆயினும் அவ்விரு தத்துவங்களும் உலகியல் வாழ்க்கையைத் துறப்பதையே-துறவு நோக்கையே-தொனிப் பொருளாகக் கொண்டவை என்பது எம் கவனத்துக்கு உரியது.

இவ்வாறு இந்தியத் தத்துவப் பரப்பின் பொதுநிலை பற்றி நாம் அபிப்பிராயம் தெரிவிக்க முற்படும் போது வரலாறு சார்ந்த ஒரு உண்மையையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. ஏறத்தாழ 4500 ஆண்டுக் கால நீண்ட வரலாறுடைய இந்தியத் தத்துவ மரபு. இன்று அதன் தொல் நிலையில் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதேஅவ்வுண்மை. பேணப்பட்டனவாகக் கிடைத்துள்ள தரவுகளைக் கொண்டே நாம் பேசுகிறோம். இவ்வாறு பேணப்பட்டவற்றிலும் கூட காலகதியில் 'இடைச் செருகல்கள்' 'மறைப்புக்கள்' நிகழ்ந்துள்ளன. பொருள் கொள்ளும் நிலையிலும் முரண்பாடுகள் மலிந்துள்ளன. இவற்றால் குறிப்பிட்ட ஒரு தத்துவம் அது உருவான காலகட்டத்தில் கொண்டிருந்த இயல்பு எது என்பதை இனங்காண்பது சிக்கலாகவே உளது. குறிப்பாக பௌத்தம் கௌதமபுத்தரது சிந்தனை வெளிப்பாடாக உருவான நிலைக்கும், ஏறத்தாழ 500 ஆண்டுகளின் பின்னர் நாகார்ச்சுனர் முதலியவர்களது விளக்கங்களினூடாக அது எய்திய தோற்றத்துக்கும் மிக்க வேறுபாடுள்ளது. கடவுளைப்பற்றி வெளிப்படையாகப் பேசாத வரலாற்று மனிதரான கௌதம புத்தரைக் கடவுளாகவே ஆக்கி, அவர் பல பிறவிகள் எடுத்தார் என 'ஜாதகக்கதை'கள் புனையும் நிலை ஏற்பட்டது. அதேபோல உலகம், உயிர் என்பவற்றைப் பற்றிச் சுதந்திரமாகத் தர்க்கரீதியாகச் சிந்திக்க முற்பட்ட சாங்கியம் முதலிய தரிசனங்களை வேத மரபு சார்ந்தனவாக-வைதீகம் என்ற பெயர் சூட்டி-இனங்காணும் வரலாற்றுப் பார்வையும் நிகழ்ந்துள்ளது. உலகாயதம் என்ற தத்துவம் தொடர்பாக முழு நிலையில் நாம் அறியக்கூடிய பண்டைய மூல நூல்கள் எதுவும் இன்று கிடைக்கவில்லை. ஏனைய தத்துவப்பிரிவினர் தத்தம் தேவைகளுக்கு ஏற்ப எடுத்தாண்டுள்ள-பரபக்கநிலையிலான-தரவுகளில் இருந்தே அத்தத்துவம் பற்றியும் அதன் தொல்நிலை எனத்தக்க சார்வாகம், சுபாவவாதம் என்பன பற்றியும் அறிகிறோம். மேலும் இந்தியத் தத்துவப் பரப்பில் ஆதிக்கம் செலுத்தி வந்



படிப்பகம்

www.padippakam.com

துள்ள வைதீக மரபானது தத்துவத்தைச் சமய உணர்வின் பின்னால் இட்டுச் சென்று விட்டது என்பது முக்கிய விமர்சனமாகும். இதன் விளைவாக இந்தியத் தத்துவம் என்பது 'உண்மை காண்டற்கான ஆய்வு முறைமை' என்ற நிலையை இழந்து, 'முன்னரே நிறுவப் பட்டவற்றை மீண்டும் மீண்டும் வெவ்வேறு வகை விளக்கங்களினூடாக நிலை நிறுத்தும் ஒரு புலமை முயற்சி' என்ற நிலையை எய்தி விட்டது என விமர்சிப்போரும் உளர்.

எனவே இந்தியத் தத்துவங்களின் இயல்பு சமூகப் பயன்பாட்டு நிலை என்பவை தொடர்பாக நாம் நோக்கும் போது, அவை இன்றைய நிலையில் தரும் தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடாமல் அவை உருவான சூழல், வரலாற்றுப் போக்கில் அவை எய்தியமாற்றங்கள், அவற்றுக்கான காரணிகள் என்பவற்றினூடாக அவற்றை நோக்கி மதிப்பிடுவதே பொருத்தமானதாகும் இன்றைய சூழலில் வேண்டப் படுவதும் அதுவே.

## சூழல், தோற்றம், உருவாக்கம்

இந்திய மண்ணில் தத்துவங்கள் தோன்றி வளர்ந்த சூழலை நாம் தெரிந்து கொள்வதற்கு முதற்கண் நாம் கௌதமபுத்தர் (கிமு. 563-483) காலத்துக்கு முற்பட்ட இந்திய சமூக-பண்பாட்டு வரலாற்றை நோக்க வேண்டும். மேற்படி காலப்பகுதியில் வட இந்திய மண்ணிலே பல்வேறு இனக்குழு சமுதாயங்கள் நில வின. அவை தத்தமக்குரிய நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் என்பவற்றைப் பேணி நின்றன. இனக்குழு நிலையிலிருந்து நிலவுடைமை நிலை நோக்கிய ஒரு வரலாற்று மாற்றமும் அன்று உருவாகத் தொடங்கியிருந்தது. இது ஏறத்தாழ கி.மு. 8-6ம் நூற்றாண்டுகளின் பொதுவான சூழ்நிலை.

மேற்படி காலப் பகுதிக்கு ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் மத்தியாசியாவினின்று புலம் பெயர்ந்து வடமேற்கு இந்திய மண்ணில் அடிபதித்த ஆரிய இனத்தினரின் 'வேதகலாசாரம்' படிப்படியாக ஏனைய வட இந்தியப் பகுதிகளிலும் பரவத் தொடங்கி யிருந்தது. பாரம்பரிய இந்திய இனக்குழுச் சமுதாயங்களின் நம்பிக்கைகள் பழக்கவழக்கங் கள் சடங்கு சம்பிரதாயங்கள் என்பனவும், மேற்படி ஆரியரின் வேதமரபுசார் நம்பிக்கை கள் பழக்க வழக்கங்கள் சடங்கு சம்பிரதாயங் கள் என்பனவும் முட்டி மோதி ஒன்றையொன்று 'விழுங்க' முயன்று கொண்டிருந்தன.

வேதகலாசாரத்தின் முக்கிய வழிபாட்டு நெறியாக இருந்தது வேள்விமுறை. இயற்கைக் கூறுகளையும் அவற்றின் பல்வகைப் பண்பு களையும் தெய்வங்களாகக் கருதி, அவற்றுக்கு மாந்தர் தமது பயத்துடன் கலந்த பணிவையும் அன்பையும் தெரிவிப்பதற்காகவும் தமது வாழ் வின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நோக்கிலும் தீ வளர்த்து அதில் நெய், தானியம் முதலியவற்றைச் சொரிந்து வழிபட்ட நிலை இது. நாளடை விலே இந்த வேள்வி முறையானது பேராசை, ஆதிக்க உணர்வு என்பவற்றின் வெளிப்பாடாக பெருவளர்ச்சி பெற்றது. பெருந்தொகையான பொருட்கள் தீயிற் சொரியப்படலாயின; ஆடு கள், மாடுகள், குதிரைகள், மனிதர்களுங்கூடத் தீயிற் பலியிடப்பட்டன. நிலவுடைமைச் சூழ லில் ஆட்சியதிகாரத்தை உறுதி செய்து கொள் வதற்கும் பேரரசராக எழுச்சிபெறுவதற்குமான உணர்வெழுச்சிகளின் அடையாளமாக (Symbol) இவ்வேள்வி முறை பரிணாமம் எய்தியது. இருக்கு முதலிய நால்வகை வேதசங்கிதை களும் அவற்றின் உரை விளக்கங்கள் போல மைந்த பிரமாணங்களும் தந்து நிற்கும் காட்சி இது. பாரம்பரிய இனக்குழு சமுதாயங்களின் பண்பாட்டு மரபுகளுள் மேற்படி வேதமரபின் வேள்விக் கலாசாரம் படிப்படியாகச் செல் வாக்குச் செலுத்தத் தொடங்கியது.

அதே வேளை பல்வேறு இனக்குழு சமூகங் களின் உழைக்கும் வர்க்கத்தினர்க்கும் அதனை சுரண்டி வாழும்' வர்க்கத்தினருக்குமிடை யிலான வேறுபாடுகள் மிகத் தெளிவாகத் தெரியத் தொடங்கின. மண்ணுக்காகவும், நீருக் காகவும் இனக்குழுச் சமூகங்கள் போரிட்டன. 'ரோஹிணி' என்ற நதியின் நீருக்காக கௌதம புத்தரின் உறவுத் தொடர்புடைய இரு இனக் குழுவினர் போரிட்டு நின்ற காட்சியை அவரது வரலாறு உணர்த்தும். அதிகார ஆசை காரண மாகத் தந்தையையே மகன் கொலை செய்த



படிப்பகம்

www.padippakam.com

வரலாறும் உளது. (உ-ம் பிம்பிசாரன்-அஜாத சத்ரு)

இவ்வாறான சூழலில் வாழ்க்கையின் நிலையாமை தொடர்பான அச்சம்-மூப்பு, பிணி, மரணம் என்பன தொடர்பான மன விசாரம் மிகுதியாக எழுந்தது. உலகின் இருப்பு, வாழ்க்கையின் நோக்கு, வழிபாட்டு முறைகளின் பலாபலன், இவை யாவற்றுக்கும் அப்பாலான நிலை, மரணத்துக்கும் பின்னைய வாழ்வு முதலியன தொடர்பான வினாக்கள் உருவாயின. இவற்றில் ஒரு வகையின உலகியல் துன்ப துயரங்கள், வாழ்வில் நிறைவுபெறாமனநிலை, மரண பயம் என்பவற்றினடியாக உருவானவை இன்னொரு வகையின இயல்பாகவே எழும் அறிவார்வம் சார்ந்தவை.

இவ்வாறான வினாக்கள் பலவற்றுக்கும் விடை காணும் முயற்சிகள் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டன. இவை பல்வகைத் தத்துவப்பார்வைகளாக வெளிப்பட்டன. அறிவியல் நோக்கிலே-தர்க்க ரீதியாக உலகை புரிந்து கொள்ளும் முயற்சிகளாக-வெளிப்பட்டவை ஒருவகைப் பார்வைகள். இவையே சாங்கியம், யோகம், நையாயிகம், வைசேடிகம் ஆகிய தரிசனங்கள். உடல், உயிர், உலகம் என்பவற்றின் இருப்பு தொடர்பாகவும், இவற்றின் இறுதி நிலை தொடர்பாகவும் பேசுவதே இவற்றின் பொதுவான முதன்மைக் குறிக்கோள். வாழ்வியல் பற்றிப் பேச இவை முற்படவில்லை. பூர்வமீமாம்சை என்ற தரிசனம் ஒரு வகையில் தன்னைத் தர்க்கரீதியான ஆய்வுப் பார்வையாகக் காட்டிக்கொண்டது. இன்னொரு வகையில அது வேதமரபின் வழிபாட்டு முறைகளில் ஐயத்துக்கிடமற்ற நம்பிக்கையை முன் வைத்தது. இதுவும் சமூக வாழ்வியலின் மீது கவனம் செலுத்த முற்படவில்லை.

இன்னொரு வகைப் பார்வைகள் சமூக வாழ்க்கையை அதற்குப் புறம்பாக நின்று விமர்சிக்கும் தளத்தில் உருவானவையாகும். இவ்வகைப் பார்வைகள் வாழ்க்கையைத் துன்பமயமான ஒன்றாகவே கண்டன. இத்துன்பத்தை தவிர்ப்பதற்கு அன்பு வழியைக் காட்டின. அஹிம்சை, ஜீவகாருண்யம் ஆகியவற்றுக்கு முதன்மை கொடுத்தன. அறம், ஒழுக்கம் என்பன பற்றி விரிவாகப் பேசின. ஆனால் 'வாழ்க்கையின் குறிக்கோள் அதனை அநுபவிப்பது அல்ல அதனைத் துறப்பதே' என்பதை வலியுறுத்தின. இவ்வாறான பார்வைகளின் ஊடாக உருவானவையே சமணமும் பௌத்தமும். இவை தமது இயல்பிலேயே வேதமரபுசார் வேள்விக் கலாசாரத்தை மறுதலித்தவை. உயிர்களைப் பலியிட்டும் பெரும் பொருட்களைச் செலவிட்டும் நிகழ்த்தும் வேள்வி முறைக்கு நேரெதிரான அறைகூவலாகவே இவற்றின் அஹிம்சையும், ஜீவகாருண்யமும் அமைந்தன. பௌத்தம் இந்த எதிர்ப்பைத் தெளிவாகவே வெளிக்காட்டியது. கௌதமபுத்தர் தமது காலத்தில் கண்முன் நிலவிய வேள்விக் கொடுமைகள், அதிகார வெறி சார்ந்த போராட்டங்கள், கொலைகள் முதலியவற்றிற்குத் தீர்வு காணும் நோக்கிலேயே 'துறவு' என்ற எண்ணக்கருவை முன் வைத்தார். அவர் துன்பத்துக்குக் காரணம் 'பற்று' எனக் கண்டார். பற்றை விட்டால் துன்பத்தினின்று விடுபடலாம் என்பது அவர் கண்ட விடை. இந்த நோக்குநிலை அவரை, 'இயல்பான சமூக வாழ்க்கையினின்று விலகி நிற்க வழிகாட்டும் ஒருவராகவே' எமக்கு அறிமுகம் செய்கிறது. அவர் பற்றி வழங்கும் கதையும்-மனைவியையும் மகனையும் துறந்து சென்றவர் என்ற செய்தியும்-இதனை அரண் செய்வதாகவே உளது.

சமணமும் பௌத்தமும் உருவான காலத்தில் ஆசீவகம் நியதி வாதம், அகருமவாதம், அந்நியோந்நியவாதம், அனேகாந்த வாதம் முதலிய சில சிந்தனைகளும் எழுந்தன. இவை பொது வகையில் சமணம், பௌத்தம் என்பன போல வேதமரபுக்கு எதிரான தளத்தில் உருவானவையே எனத் தெரிகின்றன. இவற்றின் சமூகப் பார்வை-வாழ்வியல் நோக்கு-என்பன தொடர்பாக நாம் தெரிந்து கொள்வதற்குப் போதுமான தரவுகள் எமக்குக் கிடைக்கவில்லை.

மேற்குறித்தவாறான சிந்தனைகள் உருவாகிக் கொண்டிருந்த காலப்பகுதிகளில் வாழ்க்கையை அதன் உள்ளிருந்தே தரிசித்தும், மரபுகள் நம்பிக்கைகள் என்பவற்றை ஓரளவு அனுசரித்தும், அதே வேளை மனித நேயத்



படிப்பகம்

www.padippakam.com

துக்கும் பண்பாட்டுணர்வுகளுக்கும் முரணான வற்றைத் திட்டவட்டமாகக் கண்டித்தும் சில கருத்தோட்டங்கள் உருவாயின. இவை மேலே நாம் நோக்கிய பல்வேறு வினாக்களுக்கும் பொது அடிப்படையிலே விடை காண முற்பட்டன. இவ்வாறு உருவான சிந்தனைத் தெறிப்புக்களை நமக்கு உணர்த்தி நிற்பது உபநிடதம் என்ற இலக்கியப் பரப்பு. வேதம் என்ற இலக்கியத் தொகுதியின் இறுதிப் பகுதியாக அமைந்த உபநிடதங்களிற்பல சமணம், பௌத்தம், ஆசீவகம் முதலியவற்றுக்கு முற்பட்டன; சில, இவற்றுக்குச் சமகாலத்திலும் பின்னரும் எழுந்தவை.

உபநிடதங்களில் பேசப்பட்டுள்ள முக்கிய விடயம் பிரம்மம் ஆகும். உலகம், உடல், உயிர், உணர்வுநிலை ஆகிய அனைத்துக்கும் உள் நின்று இயக்குவதும் அவற்றுக்கு அப்பாலும் நிலைத்திருப்பதுமான ஒரு பொருளாக இப் பிரம்மம் பேசப்பட்டுள்ளது. இந்தப் பிரம்மத்தை உணர்வதன் மூலம் ஒருவர் தம்மையே பிரம்மமாகத் தரிசித்து மன நிறைவு பெறலாம் என்பது உபநிடதங்கள் தரும் செய்தி. 'இந்த மன நிறைவுக்கு சாதாரண உலகியல் சார்ந்த அறிவைவிட மேலான அறிவு (பரஞானம்) தேவை. அதை எய்தச் சில பயிற்சிகள் தேவை. இவையே உபநிடதங்களின் தெள்பொருள்.

இவ்வாறு பேசப்படும் பிரம்மம் என்ற கருத்து நிலையானது. உலகம், உடல், உயிர், உணர்வுநிலை முதலியவற்றை மறுக்கும் நோக்கில் உருவான ஒன்றல்ல; மாறாக, இவை அனைத்தையும் உரியவாறு தெரிந்து தெளிந்து கொள்வதற்கு. இவற்றுக்கு அப்பாலான ஒரு நிலையைத் தளமாகக் கொள்ளும் நோக்கில் உருவானதாகும். குறிப்பாகச் சொன்னால் 'அனைத்தும் பிரம்மமே' என்பதன் மூலம் ஒரு சமநிலை நோக்கு உருவாகிறது. இது அனைத்தையும் நேசிக்கும் மனப்பக்குவத்தைத் தருகிறது. இதனால் பேராசை, பொறாமை, சுரண்டல், தாழ்வுச்சிக்கல், சுயநலம் முதலிய வற்றுக்கான அடிப்படையே இல்லாது போய் விடுகிறது. மாறாக பொது நலநோக்கு, சமூகநிலை, தியாகம் முதலியவற்றுக்கான தூண்டல் ஏற்படுகிறது.

''எல்லா உயிர்களையும் ஆத்மாவிலும்
ஆத்மாவை எல்லா உயிர்களிலும்
காணும் சமநிலை நோக்கு அமைதல்
வேண்டும்''

''இந்த உலகைத் தியாகவுணர்வுடன்
அனுபவிக்க வேண்டும், பிறர் பொரு
ளில் ஆசை கொள்ளலாகாது''

என்பனவாக ஈஸ்வாஸ்ய உபநிடதம் (6,1) முன்வைத்துள்ள கருத்துக்களில் இவற்றைத் தெளிவாக அவதானிக்கலாம். இவற்றோடு,

''உண்மை பேசுக
அறத்தைக் கடைப்பிடிக்க
சந்ததியாகிய நூலை அறுந்து விடாமற்
பேணுக
தாயைத் தெய்வமாகப் போற்றுக
தந்தையைத் தெய்வமாகப் போற்றுக
விருந்தினரைத் தெய்வமாகப்போற்றுக''.
(தைத்திரிய உபநிடதம்: 1:11:1,2)

''உண்மையே வெல்லும்; பொய்
வெல்லாது''
(முண்டக உபநிடதம்: 1;1:7)

முதலியனவாக உபநிடதங்களிலே முன் வைக்கப்பட்டுள்ள போதனைகளும் எண்ணங்களும் உலகியலைத் தழுவிநின்று அதனை அறச்சார்புடன் அனுபவித்து அமையும் வாழ்வியலுக்கான வழிகாட்டு நெறிகளாக உள்ளமை நமது கவனத்துக்கு உரியது.

உபநிடதங்களிலே புலப்பட்டு நின்ற மற்றொரு முக்கிய உணர்வோட்டம் வேள்வி முறைக்கு எதிரான கண்டனம் ஆகும். பிரம்மத்தை உணர்தலே மனநிறைவுக்கான வழி என்று பேசுவதன் மூலம் உலகியல் சார்ந்த- பேராசைகளைக் காரணமாகக் கொண்ட வேள்விக்-கிரியை முறைகள் ஓரளவு புறக்கணிக்கப் பட்டுவிடுகின்றன. மேற்படிஉணர்வுக்கான 'பரஞானம்' என்ற மேலான அறிவு நிலையை எய்துவதற்கு தியானம், வைராக்யம் முதலான வழிமுறைகளைச் சுட்டுவதன் மூலம் மன அடக்கத்துக்கான திசைவழி காட்டப்படுகின்றது. முண்டகம் என்ற உபநிடதத்திலே வேள்வி முறை நேரடியாகவே கண்டிக்கப் படுகின்றது (1:12:7). வேள்வி முறையை நம்புவோர் மூடர் என அது சுட்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் போது உபநிடதங்கள், அவை எழுந்த காலத்தின் சமூகப் பிரச்சினைகளுக்கும் குறிப்பாக பேராசை, சுரண்டல், அதிகாரம் சார்ந்த உணர்வோட்டங்களுக்கும் அவை தொடர்பான செயல்முறைகளுக்கும் எதிரான உணர்வுத் தளத்தில் நின்று செயற்பட்டமை தெளிவாகிறது. இவ்வகையில் இவற்றுக்கும் சமணம், பௌத்தம்ஆகியவற்றுக்கும் இடையிலே காணப்படும் பொதுமையையும் வேறுபாட்டையும் நாம் இங்கு கவனத்திற்கொள்வது அவசியம்.

மூன்றும் சமகால சமூக முரண்பாடுகளாலான துன்பங்களை நீக்க வேண்டும் என்ற வகையில் தூய உணர்வுத் தளத்தில் உருவானவையே. ஆயின் உபநிடதங்கள் வாழ்க்கைக்குள் நின்று அதனைச் சிந்தித்தன. மற்ற இரண்டும் வாழ்க்கையின் வெளியே நின்று சிந்தித்தவை. குறிப்பாக கௌதமபுத்தர் 'பற்று' என்பதை நீங்கினால் துன்பம் நீங்கும் என்றார். உபநிடதங்கள் மேலான ஒரு பிரம்மம் என்ற பொருளை உணர்வதன் மூலம் துன்பம் நீங்கும் என்றன. இவை கூறும் பிரம்மம் என்ற உயர் பொருளை கௌதம புத்தர் ஒப்புக்கொள்ளவில்லை. பிரம்மம் என்ற கருத்துநிலை அறியாமை சார்ந்தது என்பது அவரது திடமான முடிவு. உபநிடதங்கள் முன்வைத்த இப்பிரம்மதத்துவம் வேத மரபின் கடவுள் சார் நம்பிக்கைகள், பல்வேறு இனக்குழுச் சமுதாயங்களின் கடவுள் சார் உணர்வோட்டங்கள் நம்பிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கி, அவற்றுக்கு மேலான பொதுவான தளத்தை நோக்கி மக்கள் மனதை ஈர்ப்பதாக அமைந்தது. இது ஒரு வகையில் மனித உளவியலைப் புரிந்து கொண்டு செயல்படும் உத்தி எனவும் கருதலாம். ஏனெனில் ஒன்றைக் கைவிடும் பொழுது அதைவிட வலுவான பிறிதொன்றைப் பற்றிக்கொள்ள முயல்வது பொதுவான உளப்பாங்கு ஆகும். கௌதமபுத்தர் கூறும் பற்று நீக்கம் (துறவு) என்பது பிறிதொன்றைப் பற்றிக்கொள்ளும் வழியாக அமையாமல் அதுவே சென்றடையும் முடிவாகவும் அமைந்தது. சமணத்துக்கும் இது பொருந்தும்.

சமுதாயத்தின் முரண்பாடுகளை நீக்குவதற்கு அதனை முற்றுமுழுதாக மாற்றியமைக்க வேண்டும். இது இன்று நாம் பொதுவுடைமைத் தத்துவத்தினூடாகப் பெற்ற தெளிவு, இவ்வாறான சிந்தனை உருவாக வாய்ப்பு இல்லாதிருந்த அன்றைய சூழலில் சமுதாய முரண்பாடுகளை உணர முற்பட்ட வகையிலும் அவற்றுக்கு எப்படியாவது தீர்வு காண வேண்டும் எனச் சிந்தித்த வகையிலும் உபநிடதங்கள், சமணம், பௌத்தம் என்பவற்றின் பணிகள் முற்போக்கானவை தான்; ஆனால் முழுமையானவையல்ல.

> கௌதமபுத்தர் துன்ப நீக்க வழியாக ஒரு சங்கம் அமைத்தார். துன்புற்ற அனைவரையும் அதில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். இவ்வாறு பலரும் (கடன்பட்டோர், போர்வீரர் உட்பட) அதில் சரணடைந்தபோது சமூகத்தின் அரசியல் பொருளியல் நிலைகள் சீர்குலைந்தன. அதிகாரவர்க்கம் வெகுண்டெழுந்தது. ஈற்றில் கௌதமபுத்தர் தமது சங்கத்தில் கடன்பட்டோரும் போர்வீரரும் சேர முடியாது என அறிக்கை வெளியிட்டார்.

என ஒரு கதை உண்டு. இது கௌதமபுத்தர் சிந்தனைகளின் (போதாமைக்கு) முழுமையின்மைக்கு தக்க சான்றாகும்.

உபநிடதங்கள் பிரம்மம் என்ற உயர் நிலைபற்றியும் உண்மை, தியாகம் என்பன பற்றியும் பேசியுள்ள போதும் அவற்றைப் பேசியவர்களிற் குறிப்பிடத்தக்க சிலர் அன்றைய சமுதாயத்தின் அதிகார வர்க்கத்தினால் அளிக்கப்பட்ட வாய்ப்பு வசதிகள் என்பவற்றின் தளத்தில் நின்றவர்கள் என்பதை நாம் இங்கு சுட்டிக் காட்டுவது அவசியம். குறிப்பாக முக்கிய உபநிடதங்களிலொன்றான பிருகதாரண்யகத்தின் முதன்மைச் சிந்தனையாளரான யாக்ஞவல்கியர் இத்தகைய ஒருவரே. இத்தகையவர்களுக்கு பிரம்மம் பற்றிய சிந்தனையானது புலமைத் திறனைக்காட்டிப் பொருளீட்டவும் சமூக மதிப்பை வளர்த்துக் கொள்ளவும் ஒரு கருவியாகப் பயன்பட்டது என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். அவ்வகையில் இவர்கள் சுரண்டலுக்குத் துணை போனவர்களேயாவர்.



படிப்பகம்

www.padippakam.com

ஏறத்தாழ கி.மு. 6—5ஆம் நூற்றாண்டுகள் வரையிலான இந்தியத் தத்துவ சூழல் இதுவே. மேற்படி காலப்பகுதியில் உலகாயதம் அல்லது அதன் மூலநிலைகள் எனக் கருதப்படும் சார்வாகம், சுபாவவாதம் என்பன சார்ந்த சிந்தனைகள் தெளிவாக உருவாகிவிட்டனவா என்பதை இன்றைய நிலையில் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. வேத சங்கிதைகளிலே அதன் வேள்வி முறைக்கு மாறானவர்கள் பற்றி அமைந்துள்ள குறிப்புக்கள் (இருக்கு வேதம்: 1:151:9) அவர்களைத் தெய்வ நம்பிக்கை சாராதவர்களாகக் காட்டின. உபநிடதங்களில் முற்பட்டவற்றுள் ஒன்றான சாந்தோக்கியத்தில் அதன் முக்கிய சிந்தனையாளருள் ஒருவரான உத்தாலகர், பௌதிகப் பொருள்களிலிருந்து உடற்கூறுகளான எலும்பு, இரத்தம் முதலியனவும் பிராணன் (உயிர்), மனம், வாக்கு என்பனவும் உருவாகித் தொழிற்படும் முறைமையினை விளக்கியுள்ளார் (6:5:18). இவ்வகையில் இவர் இந்திய 'உலகாயத சிந்தனையின் தந்தை' எனவும் இந்திய மண்ணின் 'முதல் அறிவியலாள'ராகவும் கணிக்கப்படுகிறார். கௌதமபுத்தர் காலத்தினராக அறியப்படும் அஜிதகேசகம்பளர் என்பார் சிந்தனைகளில் உலகாயதச் சார்வுகாணப்படுவதை தீகநிகாயம் என்ற பௌத்த நூல் மூலம் அறிய முடிகிறது.

மேலே நாம் நோக்கிய கி.மு. 6—5ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்கு 1200 ஆண்டுகளின் பின்னரே இந்திய தத்துவ உருவாக்கத்தின் இன்னொரு முக்கிய கட்டத்தை நாம் வரலாற்றிற் சந்திக்கிறோம்... அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் என்பனவும் இவற்றோடு தொடர்புடைய வேறுபல தத்துவப் பிரிவுகளும் கி.பி. 8ஆம் நூற்றாண்டை அடுத்தே தோற்றம் கொள்கின்றன. ஆயினும் இவற்றுட்பல தமக்கான சிந்தனை மூலங்களை வேத இலக்கியப்பரப்பிலிருந்து-குறிப்பாக உபநிடதங்களிலிருந்து-பெற்றுக் கொண்டவை என்ற வகையில் மரபுத் தொடர்ச்சியுடையனவாகத் திகழ்வன.

இவற்றுள் 'அத்வைதம்' என்பது உபநிடதங்களிற் பேசப்பட்ட பிரம்மம் என்ற உயர் பொருளின் உண்மையை வாதிட்டு நிறுவும் முயற்சியாகும்.

> ''பிரம்மம் என்ற ஒன்று மட்டுமே நிலையான உண்மை. அதுவே முழுமை. அதைத் தவிர வேறுஎதுவும் உண்மையில்லை. உலகம், உடல், உயிர் என நாம் கருதுவன எல்லாம் வெறும் தோற்றம் மட்டுமே''

என்பது அத்வைதத்தின் தெளிபொருள். இவ்வாறு பேசுவதன் மூலம் அத்வைதம் என்பது உலகச்சூழல், அதன் இயக்கம், வாழ்வியல் ஆகிய அனைத்தையும் மறுக்கும் சிந்தனையாக வடிவம் கொண்டது. உபநிடதங்களின் பிரம்ம சிந்தனையிற் புலப்பட்டுநின்ற 'அனைத்தையும் நேசிக்கும்' உணர்வுநிலை இதிலே கவனத்தைப் பெறத்தவறியது. இதனால் மரபு சார் நம்பிக்கையை நியாயப்படுத்தும் ஒரு 'தர்க்கவாத'மாகவே அத்வைதம் வடிவு கொண்டது. இவ்வாறு அத்வைதத்திற்கு வடிவுதந்தவர் என்ற வகையில் முக்கியமானவர் சங்கரர் (கி.பி.788-820). இவர் ஆதிசங்கரர் எனவும் வழங்கப்படுகிறார்.

அத்வைதத்தின் மேற்படி 'பிரம்மம் ஒன்றே உண்மை' என்ற கருத்தியலை வைணவ சமய நம்பிக்கைகளின் தளத்தில் நின்று விமர்சித்து உருவானவையே விசிட்டாத்வைதம், துவைதம் ஆகிய தத்துவங்கள்.

> பிரம்மமும் உண்மை; உலகம், உயிர் என்பனவும் உண்மை. பிரம்மமே உலகாகவும்உயிர்களாகவும்தன்னைப் படைத்துக் கொள்கிறது. பிரம்மத்துக்கு உலகம், உயிர் என்பன விசேடணங்கள்.

இதுவே விசிட்டாத்வைதத்தின் தெளிபொருள். இவ்வாறு சிந்தித்தவர் இராமாநுசர் (கி பி 1017-1137). இவர் பிரம்மத்தைத் தம் சமய நம்பிக்கையின் படி மகாவிஷ்ணுவாகக் கண்டார். இவ்வாறு பிரம்மத்தை மகாவிஷ்ணுவாகக் கண்ட மற்றொருவரான மத்துவாசாரியார் (கி.பி. 1199-1278) பிரம்மம், உலகு, உயிர் என்பன ஒன்றினின்று ஒன்று திட்டவட்டமாகவே வேறுபட்டவை என்று கருதினார். இக்கருத்தே துவைதம் ஆயிற்று.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் என்பன உருவாகி வந்த வரலாற்றுச் சூழலில், சைவம் என்ற சமயப்பிரிவு தன்னைத் தத்துவ நிலைப்படுத்திக் கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளின் விளைபொருளாக உருவான முக்கிய தத்துவமே சைவசித்தாந்தம். இது பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள்களும் உண்மை எனக் கொள்வது.

இத்தத்துவங்களில் முக்கியமாகப் பேசப்படும் விடயம் பிரம்மம் அல்லது பதி (இறைவன்) ஆகும். அதனை உணர்வது அல்லது அடைவது என்பதே இத்தத்துவங்களின் குறிக்கோள். இக்குறிக்கோளுக்கு ஏற்ற வகையிலே எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையே இவை விரிவாகப் பேசியுள்ளன. ஞானம், தியானம், பக்தி, கிரியைமுறைகள் என்பனவாக இவை கூறும் செயல்முறைகள்-வழிமுறைகள்-அமைகின்றன. இவை பற்றிப் பேசுகின்ற கட்டங்களில் இவற்றோடு நமது உலகியல் வாழ்க்கை என்பது எந்த அளவு தொடர்புபடுகின்றதோ அந்த அளவு மட்டுமே இவை உலகியல் வாழ்க்கை பற்றிப் பேசுகின்றன. குறிப்பாகக் கூறுவதானால் நமது இந்த உலகியல் சார் வாழ்வானது மேற்குறித்த பிரம்மம் அல்லது பதியை உணர்வதற்கான அல்லது அடைவதற்கான ஒரு 'பயில் களம்' மட்டுமே என்பதே இத்தத்துவங்களின் பொதுவான கருத்து நிலையாகும்.

மேற்குறித்த விடயங்களைப் பேசுவதில் இவற்றுள் நிலவிய முரண்பாடுகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்ட வரலாறாகவே கி.பி. 19ஆம் நூற்றாண்டிறுதி வரையிலான இந்தியத் தத்துவ வரலாற்றின் பொதுவான செல்நெறி அமைந்தது. இன்று வரை கூட இந்நிலை தொடர்கின்றது.

## வரலாற்றில் நிகழ்ந்தது என்ன?

இந்தியத் தத்துவங்களின் வரலாறானது அதன் தொடக்கநிலையிலே அதாவது கி.மு. 6-5ஆம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியிலே, 'சமூகத்தின் உலகியல் சார் துன்ப-துயரங்களுக்கு விடை நாடும் இயல்பான சமூக அக்கறை', 'அறிவுசார் தேடல் ஊக்கம்' ஆகியவற்றினூடாக ஊற்றெடுத்தது. நாளடைவில் அது 'மரபுசார் நம்பிக்கைகள்', 'தர்க்கவாதத் திறன்' ஆகியவற்றின் புகலிடமாக-பயில் களமாக-மாற்றம் எய்தியது; 'சமூக அக்கறை' யினின்று பெருமளவு விலகிவிட்டது உபநிடதங்களின் சிந்தனைகள், சமண-பௌத்த சிந்தனைகள் என்பவற்றுக்கும் அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலியனவாக அமைந்த தத்துவங்களுக்கும் இடையில் உள்ள முக்கிய வேறுபாடு இதுதான். இந்தியத் தத்துவங்களின் வரலாறு தரும் காட்சியும் இதுதான். இதற்கான காரணிகள் யாவை?

உபநிடதங்கள் சமணம், பௌத்தம் என்பன எழுந்த காலப்பகுதியில் சமூகம் பண்டைய இனக்குழு நிலையிலிருந்து நிலவுடைமை நிலையை நோக்கி மாறுதலடைந்து கொண்டிருந்தது. இனக்குழுச் சமுதாயங்களில் இயல்பாகவே நிலவியிருக்கக்கூடிய கூட்டுணர்வு, அன்பு என்பன அன்றைய சிந்தனைகளுக்கு ஊற்றுக் கண்களாக அமைந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. ஆனால் அத்வைதம் முதலியன உருவான காலப்பகுதியிலே சமுதாயமானது நிலவுடைமை அமைப்பில் முதிர்நிலை எய்தியிருந்தது. முடியரசுகள் உருவாகி அவை நாளடைவில் பேரரசு என்ற 'சக்கராதிபத்திய'க் கூட்டமைப்புகளுக்கு உட்பட்ட நிலையையே கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட வரலாறு காட்டுகின்றது. குறிப்பாக வட இந்தியாவின் கங்கைச் சமவெளியை மையமாகக் கொண்டு நந்தர், மௌரியர், சுங்கர், குப்தர் முதலியவர்களின் பேரரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக உருவாகின. தக்காணத்தில் சாதவாகனப் பேரரசு எழுச்சி பெற்றது. தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மூவேந்தர்கள், பல்லவர் என்போரின் ஆதிக்கம் உருவாகியது; பாண்டியர், பல்லவர் என்போருக்கிடையில் அதிகாரப் போட்டி நிலவியது. கௌதமபுத்தர் காலம் முதல் சங்கரர் காலம் வரை நிலவிய பொதுவான வரலாற்றுப் போக்கு இதுதான்.

இவ்வாறான நிலவுடைமை எழுச்சிச் சூழல் பேரரசுச் சூழல் ஆனது. சமுதாயத்தின் கட்டமைப்பு, பொருளியல் உறவுகள், அதிகாரத்தை வலியுறுத்தும் வழிமுறைகள் முதலியன தொடர்





படிப்பகம்

www.padippakam.com

பான ஆழமான சிந்தனைகளை வேண்டி நின்றது. அதிகாரத்தின் உயர்நிலையில் இருந்தோரும், அறிவுசார் வாய்ப்புக்களைப் பெற்றிருந்தோரும் இது தொடர்பாக இணைந்து சிந்தித்தனர். வேதகாலம் முதல் இந்திய மண்ணிலே கருக்கொள்ளத் தொடங்கியிருந்த வர்ணம், ஆசிரமம் என்பன தொடர்பான சிந்தனைகள் இக்காலப்பகுதியில் திட்டவட்டமான 'சமூக-ஒழுக்க' கட்டமைப்புச் சிந்தனைகளாக வடிவம் கொண்டன. தர்மசூத்திரங்கள், தர்மசாஸ்திரங்கள் (மநுதர்மசாஸ்திரம், பராசரதர்மசாஸ்திரம் முதலியன) உருவாயின. இவை சமுதாயத்தைப் பிறப்பு அடிப்படையில் வகைப்படுத்தின. இவற்றுக்கு ஏற்ப தொழில்முறைப் பொருளியல் உறவுமுறை, வாழ்வியல் நெறிமுறை, சமூக வடோட்டம் என்பவற்றைக் கற்பித்தன. இவ்வாறு அமைந்த முறைமைகளின் தொகுதிகளையே நாம் 'வர்ணாசிரமதர்ம முறை' எனப்பேசுகிறோம்.

> இம்முறைமை சமுதாயத்தின் மிகப் பெரும் தொகையினரான உழைக்கும் மக்களை-உடல் உழைப்பாளர்களை-மிகவும் கீழ்ப்படியில் வைத்தது. சுரண்டி வாழும் அதிகாரவர்க்கத்தினரையும் அறிவு சார் சிந்தனையாளர்களையும் உயர்படியில் நிறுவியது.

இவ்வாறான அமைப்பு பேரரசுகளின் கூட்டமைப்புக்கு ஒரு பாதுகாப்புத் தளமாக அமைந்தது. இந்திய மண்ணில் உருவான இந்த முறைமையை இம்மண்ணில் காலந்தோறும் படையெடுத்து வெற்றி பெற்றோர் பலரும் பேணிக் கொண்டனர். இம்முறைமைக்குள் தங்களுக்கு அங்கீகாரமும் தேடிக்கொண்டனர். தொடக்கத்தில் கங்கைச் சமவெளியில் உருவான இந்த முறைமை காலகதியில் தென்னகம் உட்பட அனைத்திந்திய மண்ணிற்கும் பொதுவான சமூக முறைமையாகப் பரவி நிலைபெற்றது.

இவ்வாறு நிலைபெற்றுவிட்ட முறைமை சார்ந்த சமுதாயக் கட்டமைப்பின் உயர் படிகளில் நின்று கொண்டு தத்துவம் பேச முற்பட்டவர்களின் குரல்களாகவே அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலியன நமக்கு அறிமுகமாகின்றன. இவ்வாறான தத்துவங்களைப் பேசியவர்களிற் சிலர் (குறிப்பாகஇராமாநுசர், சைவசித்தாந்த சிந்தனையாளருள் ஒருவரான உமாபதிசிவாசாரியார், சைவத்தின் மற்றொரு தத்துவப் பிரிவான 'வீரசைவ'த்தின் முக்கிய சிந்தனையாளரான பஸவண்ணா முதலிய சிலர்) வர்ண பாகுபாடு என்ற வரையறையை மீறி நின்று செயற்பட்டவர்கள் என்பதும் இத்தொடர்பில் நமது கவனத்துக்கு உரியது.

சங்கரர் அத்வைதம் பேசமுற்பட்ட காலச் சூழலில் இந்திய சிந்தனைமரபில்-குறிப்பாகச் சமயம் சார்ந்த உணர்வோட்டங்களில்-ஏற்பட்டிருந்த வளர்ச்சி, மாற்றம் என்பன தொடர்பாகவும் இங்கு சுருக்கமாக நோக்க வேண்டியது அவசியம்.

கௌதமபுத்தர் காலம்வரையிலான இந்தியச்சிந்தனை வரலாற்றில் சமயம் என்பது வேதமரபுசார்ந்தோர் மத்தியிலும் பல்வேறு இனக்குழுச்சமுதாயங்களிலும் நம்பிக்கைகள், சடங்குகள் என்ற அளவிலேயே நிலவி வந்தது. நம்பிக்கைகளுக்கு தர்க்க ரீதியான விளக்கம் நாடும் உணர்வோட்டங்களும் ஓரளவு வெளிப்படத் தொடங்கியிருந்தன. ஆனால் சமயம் என்பது ஒரு வாழ்வியல் எனத்தக்க வகையிலான வளர்ச்சியை அன்று பெற்றிருக்கவில்லை என்பதே வரலாற்றுச் சான்றுகளால் உய்த்துணரப்படுவது.

ஆனால் பின்னாளில் சமயங்கள் பலவும் சமூகவாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து, 'சமயவாழ்வு' என்ற நிலை உருவாகியது. வேத மரபுசார் நம்பிக்கைகள் சடங்குகள் என்பனவும் பல்வேறு இனக்குழுக்கள் சார்ந்த நம்பிக்கைகள் சடங்குகள் என்பனவும் முட்டி மோதியதன் விளைவாக சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் முதலியனவாக சில சமயப்பிரிவுகள் தனிநிலை எழுச்சிபெற்று மக்கள் மத்தியில் செல்வாக்கை நாடி நின்றன. இவற்றின் வழிபாட்டு முறைமைகளை விளக்கும் வகையில் ஆகமங்கள், சாத்திரங்கள் என்ற வகையிலான நூல்கள் உருவாயின. (இந்த ஆகமங்களுக்கான மூலக்கருத்துக்கள் இனக்குழுப் பாரம்பரியத்திலேயே தோற்றம் கொண்டிருக்க



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் என்பது ஊகம்). சமயக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு 'புராண இதிகாச' கதைமரபுகள் உருவாயின. சமூக மாந்தரைச் சமய உணர்வுடன் தொடர்புபடுத்தும் வகையில் கோயில் என்ற நிறுவனம் தோற்றம் பெற்றது. இந்நிறுவனங்களை மையப்படுத்தி சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் சமூகமாந்தர் மத்தியில் பக்தி இயக்கங்களை மேற்கொண்டன.

சைவம், வைணவம் முதலிய சமயங்களில் நிகழ்ந்துவந்த இந்த வளர்ச்சி, மாற்றம் என்பன சமணம், பௌத்தம் என்பவற்றையும் குறிப்பிடத்தக்க அளவு பாதித்தது. அன்பையும் அறத்தையும் அடிநாதமாகக் கொண்டு துறவுநிலை பேசிநின்ற அவை, புராண மரபுச் சிந்தனைகளால் பாதிப்புற்றன. குறிப்பாக பௌத்தத்தில் இப்பாதிப்புத் தெளிவாகத் தெரிந்தது. வரலாற்று மனிதரான கௌதம புத்தர் பல அவதாரங்கள் (பிறவிகள்) எடுக்கும் புராண கதாபாத்திரம் ஆனார்; வழிபாட்டுக்குரிய தெய்வம் ஆகக் கருத்துநிலையில் மாற்றம் எய்தினார். கௌதமபுத்தரின் சிந்தனைகளில் முக்கியமான ஒன்றாகத் திகழ்ந்த 'அழிவுடைமை' (உலகப்பொருட்கள் அனைத்தும் கணந்தோறும் அழிந்து மாற்றமுறுகின்றன என்ற கருத்து) பின்னாளில் நாகார்ச்சுனர் முதலியவர்களின் சிந்தனையில் 'சூனியவாதம்' ஆக வளர்ச்சி எய்தியிருந்தது.

இவ்வாறான வரலாற்றுப் போக்கிலே ஒரு பக்கத்தில் வேதமரபின் வேள்விசார்ந்த கிரியை முறையானது மக்கள் மத்தியில் நம்பிக்கையுடன் தொடர்ந்து பேணப்பட்டு நின்றது. பூர்வ மீமாம்சகர் இதனை வலியுறுத்திப் பேணி நின்றனர். இன்னொரு புறத்திலே பிரம்மம், கடவுள், வழிபாட்டு முறைமைமுதலிய அனைத்தையும் மறுக்கும் உலகாயத சிந்தனையும் வலுவுடன் திகழ்ந்தது. சாங்கியம், யோகம் முதலிய தரிசனங்கள் அறிஞர் மத்தியில் பேணப்பட்டு வந்தன.

இவ்வாறான சூழலில்தான் சங்கரர், உபநிடதம் கூறும் பிரம்மம் என்ற உண்மைப் பொருளின் உயர்வைப் பேசுவதனூடாக வேதமரபுக்கு வலுவூட்ட முயன்றார். பௌத்தரின் சூனியவாதம், உலகாயதரின் இறைமறுப்புவாதம் என்பவற்றை நிராகரிப்பதும் கிரியை முறைகளுக்குரிய முதன்மையைக் கண்டித்து ஞானம் என்ற பேரறிவின் பெருமையை நிலைநிறுத்துவதன் மூலம் பூர்வமீமாம்சகரைத் தோற்கடிப்பதும் இவரது முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்ந்தன என்பது இவரது தர்க்க செயற்பாடுகளிற் புலப்படுகின்றது. ஆனால் வேதமரபுடன் தொடர்புடைய சமயப்பிரிவுகளைச் அவர் நிராகரிக்க முற்படவில்லை. 'அச்சமயப் பிரிவுகளைச் செப்பமுற மீள அமைத்தவராகவும் அறியப்படும் அவர் அச்சமயங்களின் கடவுளர் மீது தோத்திரங்கள் பாடிய பக்தரும் கூட' என்பது இத்தொடரில் நமது கவனத்துக்குரியது. ஆனால் அக்கடவுளரை உபநிடதங்கள் கூறும் பிரம்மத்தின் பகுதியாகவே அவர் கண்டார் என்பது அவரது தர்க்க வாதங்களிற்புலனாகின்றது. இது ஒரு வகையில் வேதமரபின் மேலாணைக்குள் மேற்படி சமயங்களை உட்படுத்தும் உத்தியாக-ஒரு 'இராஜதந்திர' அணுகுமுறையாகவும் அமைந்ததெனலாம்.

பிரம்மம் என்ற முழுமைபற்றிப் பேசவந்த நிலையில் உலகம், உயிர் என்பன உண்மையில் உள்ள பொருள்கள் அல்ல என அவர் வாதித்துள்ள முறைமைவலிந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாகவே பொதுவாகப் புலனாகின்றது. உலகம், உயிர் என்பன உண்மையில் உள்ள பொருள்கள் எனக்கொண்டால் அவற்றுக்கு மூலம் சுட்டவேண்டிய அவசியம் எழும். முழுமைப் பொருளான பிரம்மம் குறைபாடுடையனவான உலகம், உயிர் என்பவற்றுக்கு மூலமாக அமைந்திருப்பது சாத்தியமில்லை. பிரம்மம் அல்லாத வேறொரு மூலப் பொருளிலிருந்து அவை தோன்றின எனக்கொள்வதானால் பிரம்மம் தவிர வேறு மூலப் பொருள்களும் உள்ளன என ஒப்புக்கொள்ள நேரும். இவ்வாறான சிக்கல்களிலிருந்து விடுபட வசதியாக அவர் மேற்கொண்ட உத்திமுறையாகவே, 'உலகம், உயிர் என்பன உண்மையில் உள்ள பொருள்கள் அல்ல' என்ற அவரது வாதம் அமைந்தமை தெரிகிறது. இவ்வாறு வாதிப்பதற்கு அவர் வேதமரபைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறார். பிரம்மம் தவிர வேறு மூலப் பொருள்களும் உள்ளன எனக் கொள்வது வேதமரபுக்கு மாறானது



படிப்பகம்

www.padippakam.com

என அவர் கூறமுற்படுகிறார். இவ்வகையில் அவர் உலகம், உயிர் என்பவற்றின் இருப்பை ஒப்புக்கொள்ளும் சாங்கியம் முதலிய தரிசனங் களையும் மறுக்கிறார். அத்வைதம் என்ற தத் துவம் உலகம் சூழல், அதன் இயக்கம், வாழ் வியல் ஆகிய அனைத்தையும் மறுக்கும் சிந் தனையாக வடிவம் கொண்ட வரலாற்றுச் சூழல் இதுதான்.

வைணவம், சைவம் ஆகிய சமயத் தளங் களில் நின்று விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலிய தத்துவங்களைப் பேச வந்தவர்களின் நிலை சங்கரரின் நிலை யினின்று பெரிதும் வேறுப்பட்டது. சங்கரரைப் போல பிரம்மம் என்ற முழுமைபற்றி வாதிட்டு நிறுவவேண்டிய சூழல்சார் கடப்பாடு அவர் களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பணியை ஏற்கனவே சங்கரர் வெற்றிகரமாகச் சாதித்திருந்தார். சங்கரரைப் போல வேத மரபை இவர்கள் சார்ந்திருந்தாலும் ஆக மங்கள், புராண இதிகாசக்கதைகள் என்ப வற்றிலேயே இவர்கள் மிகுதியான பற்றுறுதி கொண்டிருந்தனர். அவ்வகையில் இவர்கள் கோயில் என்ற திறுவனத்தை மையப்படுத்தி யமைந்த வாழ்வியலைப் பேணி நின்றவர்கள். தத்தம் இறைநம்பிக்கையையும் அதுசார்ந்த வாழ்வியலுமே உண்மை எனப் பேசுவது இவர் களின் நோக்கும் வழிமுறையுமாயிற்று. இந்த அடிப்படைகளில் அமைந்த இவர்களின் சிந் தனைகள் அத்வைதம் சுட்டும் 'பிரம்மம் என்ற ஒரு பொருள் மட்டுமே உண்மை' என்ற கருத்து நிலையை விமர்சிப்பனவாக அமைந் தன. சமயங்களின் உணர்வுநிலைக்கு இறை, உயிர் ஆகிய இரண்டையும் வேறுபடுத்திப் பேசவேண்டியது அவசியம். இத்தொடர்பில் உயிர்வாழ்வதற்குக் களமாக உள்ள புறவுலகு பற்றியும் தெளிவுப்படுத்திக் காட்ட வேண்டி யது அவசியம். விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலிய தத்துவங்கள் அமைப் புற்ற வரலாறு இதுதான்.

இத்தத்துவங்களுள் விசிட்டாத்வைதம் உயிர்களையும் உலகையும் பிரம்மத்தின் விசேடணங்களாக 'சரீர சரீரி' உறவுசுட்டி விளக்கம் தந்ததன் மூலம் உபநிடதங்களில் உள்ளுறைந்திருந்த 'அனைத்தையும் நேசித் தல்' என்ற உணர்வோட்டத்தை ஓரளவாவது பேணிக் கொண்டது என்பதை இங்கு சுட்டுவது அவசியம். 'சக்தி விசிட்டாத்வைதம்' எனப் பெயர் பூண்ட 'வீரசைவ' தத்துவத்திலும் இப் பண்பை அவதானிக்கலாம்.

பொதுவாக சமயஉணர்வை முதன்மைப் படுத்தி, அது தொடர்பாகப்பேசுவதே 'அறிவு' 'பேரறிவு' என்பனவாகச் சிந்தித்து நின்ற இவ்வரலாற்றுச் சூழலிலே உலகியல் தொடர் பான பல கூறுகள் உரிய கவனத்தைப் பெறத் தவறின. மருத்துவம், வானியல், பொருளி யல், கட்டிடக் கலைநுட்பம் முதலியனவாக அக்காலப் பகுதியில் வளர்ந்திருந்த சிந்தனை கள் தத்துவம் என்ற மைய நீரோட்டத்துள் இணைத்துக் கொள்ளப்பட வில்லை. இதனால் அவை தொடர்பான பல அரிய தகவல்கள் பேணப்படாது அழிந்தன. பேணப்பட்டவை கூட சமயசார்பான புராணத் தன்மை வாய்ந்த புனைவுகளின் போர்வைக்குள்ளே தஞ்சம்புக நேர்ந்தது. சான்றாக ஒரு செய்தியைச் சுட்டலாம்.

> கிரகணம் என்ற வானியல் நிகழ் வானது சூரியன் சந்திரன் என்ப வற்றின் மீது முறையே சந்திரன் பூமி என்பவற்றின் நிழல் படிவதால் நிகழ் வது. இதனை பண்டைய இந்திய வானியலாளர்களான வராஹமிகிரர் (கி.பி. 6-ஆம் நூ-ஆ) பிரம்மகுப்தர் (கி.பி. 7-8-ஆம் நூ-ஆ) ஆகியோர் அறிந்திருந்தனர். ஆனால் அவர் கள் அதனை 'ராகு-கேது' என்போர் தொடர்பான புராணக் கதைகளுடன் தொடர்புபடுத்திப் பேசவேண்டிய நிர் பந்தம் அன்று நிலவியது. வராஹி மிகிரர் உண்மையில் காலூன்றி நின் றார். பிரம்மகுப்தர் புராணப்புனைவில் தஞ்சமடைந்துவிடுகிறார்.

மேற்கண்டவாறு இந்தியத் தத்துவப் பரப்பின் மையநீரோட்டமானது தொடக்கத் தில் கொண்டிருந்த 'சமூக அக்கறை'யிலிருந்து பெருமளவு விலகி, 'தர்க்கவாதத்திறன்', சமய நம்பிக்கைகள் என்பவற்றில் புகலடைந்து கொண்டிருந்த காலப்பகுதியில் மேற்படி 'சமூக அக்கறை' உணர்வு முற்று முழுதாக இம் மண்ணில் வற்றிவிடவில்லை என்பதை நாம்





படிப்பகம்

www.padippakam.com

இங்கு கவனத்திற் கொள்வது அவசியம். அது வெவ்வேறு தளங்களில் தன்னை வெளிக்காட்டி வந்துள்ளது. அவ்வகையில் இன்றுவரை அது உயிர்ப்புடன் திகழ்கிறது. அத்தளங்கள்: அறம், பக்தி, ஆன்மநேயம்.

## அறம், பக்தி, ஆன்மநேயம்

அறம் என்பது உண்மையின் தளத்தில் பொதுநலனைச் சார்ந்து நிற்றல். இந்நிலை நின்று பேணிக்கொள்ளும் நடத்தை நெறியே ஒழுக்கம் ஆகும். பக்தி என்பது தன்னின் மேம் பட்ட ஒன்றில் கொண்டுள்ள பற்றுறுதி காரண மாக ஒருவர் தன்னை அதில் ஒப்படைத்து நிற்கும் நிலை. ஆன்மநேயம் என்பது எல்லா உயிர்களையும் நேசிக்கும் மனப்பக்குவமாகும். இதனை அறத்தின் ஒரு பரிமாணமாகவும் கொள்ளலாம். இந்தியப் பண்பாட்டு மரபைப் பண்டைநாள் முதல் இன்றுவரை தாங்கி நிற்கும் தூண்கள் இவை.

இவற்றுள் அறமும் ஆன்மநேயமும் உப நிடதங்களிலும் சமண-பௌத்த தத்துவங் களிலும் உள்ளுறைந்திருந்தமை முன்னரே நோக்கப்பட்டது. பக்தி என்பது உபநிடதங் களுக்கு முன்பே வேதமரபில் கருவாக இருந்து பின்னாளில் சமய உணர்வோட்டத்தில் முக்கிய கூறாக உருவாகி நிலைபெற்றது.

உபநிடதங்களிலும் சமணம், பௌத்தம் என்பவற்றிலும் புலப்பட்டு நின்ற அறமும் ஆன்மநேயமும் எய்திய அடுத்த கட்டவளர்ச்சிப் பரிமாணத்தை நமக்குக் காட்டி நிற்கும் நூல் திருக்குறள். கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே எழுந்து விட்ட இந்நூல் தனக்கு முற் பட்ட அனைத்திந்திய விழுமியங்களையும் திறனாய்வு செய்து பேணிப் பதிவு செய்து கொண்ட ஒரு 'வாழ்வியல்' ஆக்கமாகும். தனி மனிதர், குடும்பம், சமூகம், நாடு என்ற பல் வேறு தளங்களில் ஒருவர் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதை அறிவு பூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் எடுத்து உரைத்துள்ள இந்நூலுக்கு நிகராக இந்திய மண்ணில் எந்த ஆக்கமும் உருவாகவில்லை. இது எந்தச் சமயப் பிரிவையும் சார்ந்ததல்ல; பல சமய உணர்வுகளையும் உட்கொண்டு, அவற்றைக் கடந்து ஒட்டு மொத்த மாநுடத்தைச் சார்ந் தது. இந்நூலில் அது எழுந்த காலப்பகுதியின் ஆணாதிக்க உணர்வோட்டம், முடியரசுச் சூழல், விவசாய சமூகச்சூழல் என்பவற்றின் தாக்கம் உளது என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் அடிப்படையில் இது மக்கட் சார் புடையது பாதிக்கப்படும் மக்களுக்காக இரங்குவது ஆதிக்கவர்க்கங்களின் கொடுமை களுக்கு எதிராகக் குரல் கொடுப்பது (செங் கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை அதிகாரங்கள்), சமூக முரண்பாடு களுக்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகாட்ட ஆர்வம் கொண்டது.

நல்லவன் சீரழிவதற்கும் தீயவன் பெரு வாழ்வு எய்துவதற்கும் எது அல்லது யார் காரணம் என்பது வள்ளுவருக்கு எழுந்த முக் கிய வினா. இதற்கான விடை காணும் பொறுப்பை எதிர்காலத் தலைமுறையிடம் அவர் நம்பிக்கையுடன் ஒப்படைக்கிறார்.

''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும்''

என்ற குறளின் (169) தெளிபொருள் இது. வறுமைக்கு இந்த உலகில் இடமிருக்கத்தான் வேண்டுமெனில்-பிச்சை எடுத்துத்தான் வாழ வேண்டுமென்பது நியதியானால்-இந்த உலகைப் படைத்தவன் அல்லது ஆள்பவன் அழிந்து போகட்டும் எனச் சாபமிடுகிறார் வள்ளுவர்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

என்ற குறளில் (1062) புலப்படும் வள்ளுவரின் இச்சீற்றம் இந்திய மனித நேய உணர்வெழுச் சியின் சிகரம் ஆகும்.

இவ்வாறான குறளின் உருவாக்கத்துக்கு அதற்கு முற்பட்ட அனைத்துப் பண்பாட்டுக் கூறுகளும் பங்களிப்புச் செய்துள்ளன. இந்திய மண்ணின் வாழ்வியல் தத்துவத்தை உரியவாறு தெரிந்து தெளிந்து கொள்ள விழைபவர்கள் முதலில் கற்கவேண்டிய முக்கியஆக்கம் இது.



படிப்பகம்

www.padippakam.com

பக்தி என்ற உணர்வைச் சமய நம்பிக்கையுடன் தொடர்பு படுத்தி, வழிபாட்டு நோக்கை மட்டும் மையப்படுத்திப் பார்க்கும் மரபே நம் மத்தியில் நிலவுகிறது. சமய நம்பிக்கை என்பது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது எனக் கருதுவோர் பக்தி சார்ந்த ஆக்கங்களை முழுமையாகப் புறக்கணித்து விடுவதையும் காண்கிறோம். ஆனால் பக்திக்கு இன்னொரு முகமும் உளது. அது சமூக முகம். குறிப்பிட்ட சமய நம்பிக்கை சார்ந்த சமுதாயங்களில் அச் சமய நம்பிக்கையில் அதிகாரவர்க்கத்தின் கரங்கள் படியும் போது அதனை எதிர்த்து அடிமட்ட மக்கள் உட்பட அனைத்து சமூகத்தினரையும் திரட்டி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குப் பக்தி கருவியாகப் பயன்பட்டு வந்தமைக்கும் வரலாற்றில் சான்றுகள் உள. அவ்வகையில் சாதி, வர்க்கம் என்பவற்றைக் கடந்து 'இறைவனின் முன் யாவரும் சமம்' என்ற சமநிலை நோக்கு-தொண்டர்குலம் என்ற நோக்கு உருவாகப் பக்தியுணர்வு பயன்பட்டு வந்துளது. தமிழகத்தில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் உருவாகி பின்னர் வடநாட்டிலும் பரவிய பக்திப் பெருவெள்ள வரலாற்றில் இவ்வாறான சமநிலை நோக்குப் பேணப்பட்டு வந்தமைக்குப் பல சான்றுகள் உள. இது தத்துவத்திலும் தாக்கம் விளைவித்துள்ளது.

குறிப்பாகச் சொல்வதானால் விசிட்டாத்வைத தத்துவத்தில் உலகம், உயிர் அனைத்தையும் பிரம்மம் என்ற முழுமைப் பொருளின் உடலாக இராமாநுசர் காண்பதற்கு அவரது பக்திச் சார்பும் ஒரு முக்கிய அடிப்படை எனலாம். வைணவ பக்திப் பாசுரப் பரப்பான திவ்வியப்பிரபந்தத்தில் ஊறித் திளைத்த இராமாநுசர் சாதிபேதங்களைக் கடந்த சம நோக்கினைப் பேணி நின்றவர்; எல்லோரும் இன்புற்றிருக்க முடியுமானால் அதற்காகத் தனக்கு எவ்வகைத் துன்பம் வந்தாலும் ஏற்கத் தயார் என்ற மனநிலையைப் புலப்படுத்தியவர் இது அவரது வரலாறு தரும் செய்தி (சான்று: குருபரம்பராப்ரபாவம்). அவரது இத்தகு மனநிலை பக்தியால் விளைந்தது. அதனால் பிரம்மத்தின் உடலாக உலகம், உயிர்கள் என்பவற்றை அவரால் காண முடிந்தது. இந்த அணுகுமுறையால் உபநிடதங்களின் 'அனைத்தையும் நேசித்தல்' என்ற பண்பை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பின்நாளில் வைணவ மரபிலே சமூக உள்ளடக்கம் கொண்ட பிரிவான 'தென்கலை' என்பது உருவாக இராமாநுசரின் இந்த நிலைப்பாடும் வித்தாக அமைந்தது என்பது நமது கவனத்துக்கு உரியது.

வீரசைவ முதன்மைச் சிந்தனையாளரான பஸவண்ணர் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கடந்த-அவற்றை எதிர்க்கும் — வீறார்ந்த சிந்தனையையும் செயல்முறைகளையும் முன் வைத்தவர் என்பது வரலாறு. அவருக்கான கருத்து நிலை மூலங்கள் சைவ பக்தி இயக்கத்தின் நாயன்மார் சிந்தனைகளிலும் செயல்களிலும் அமைந்திருந்தன என்ற வரலாற்றுண்மையும் இங்கு நமது கவனத்துக்குரியது.

பின்நாளில் இந்திய தேசிய விடுதலைப் போராட்டச் சூழலில் தெய்வ பக்தியானது தேசபக்தியாக, அனைவரையும் ஒருங்கே இணைக்கும் உணர்வோட்டமாக உருப் பெற்றமையையும் நாம் தரிசித்துள்ளோம்.

ஆன்ம நேயத்திற்கு இரு முகங்கள் உள. ஒன்று அனைத்து உயிர்களையும் நேசித்தல்; மற்றது அந்நேசிப்புக்கு எதிரான மடமைகள், வேஷங்கள், சிறுமைகள் முதலியவற்றைக் கண்டு சீறி எழுதல். உபநிடதங்களிலும் சமண-பௌத்த சிந்தனைகளிலும் 'அனைத்துயிர் நேசிப்பு', அஹிம்சை, ஜீவகாருண்யம் என்பனவாக வெளிப்பட்டது இதன் முதல் முகம். இதன் செயல் வடிவமாகவே கௌதம புத்தரின் 'சங்கம்' என்ற அமைப்பு உருவாயிற்று. துன்புற்ற அனைவரையும் சங்கத்தில் சரணடைய அழைத்தார் அவர் (இச் செயல் முறை நிறைவானதாக அமையவில்லை என்பதை முன்னரே நோக்கியுள்ளோம்). தமிழின் பௌத்தப் பேரிலக்கியங்களிலொன்றான மணிமேகலை 'அமுதசுரபி' என்ற பாத்திரமேந்திப் 'பசிப்பிணி' தீர்க்கமுயன்ற மணிமேகலை என்ற துறவியை எமக்கு அறிமுகம் செய்கிறது.

தமிழ்மண்ணில் உருவான சித்தர் பாரம்பரியம் மேற்படி ஆன்மநேய உணர்வோட்டங்களின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் ஆக அமைந்ததெனலாம். திருமூலரை மூலவராகக்



படிப்பகம்

கொள்ளும் இச்சித்தர் மரபிலே புறநிலையான சடங்காசாரங்களை விட அகநிலையான ஈடுபாடே உயர்வானது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. 'அன்பே சிவம்' என்றும், ஆலயங்களுக்கு அள்ளி வழங்குவதை விட மானுடத்தின் பசிப்பிணி தீர்த்தலே தலையாய அறம் என்றும் பேசியவர் திருமூலர். இதே மரபில் சிவவாக்கியர் புறநிலை வழிபாட்டை மறுத்து அகநிலை உணர்வை வலியுறுத்துகிறார். இவ்வாறான உணர்வோட்டத்தின் மற்றொரு பரிமாணமாகவே வட இந்திய மண்ணிலே குரு நானக் (1469-1539) என்பாரின் சிந்தனைகள் உருவாயின. அவை சீக்கியம் என்ற சமயமாக வடிவு கொண்டன. தமிழ் மண்ணிலே வள்ளலார், பாரதி என்போரின் உணர்வோட்டங்களும் மேற்படி சித்தர் மரபின் தொடர்ச்சியேயாம். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என வள்ளலாரும் 'வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' எனப் பாரதியும் புலப்படுத்தி நின்ற உணர்வுகள் உபநிடதங்களிற் கால்கொண்டு சித்தர் மரபூடாகப் பேணப்பட்டு வளர்ந்து வந்த ஆன்மநேயத்தின் தொடர்ச்சிகளேயாம்.

## நிறைவை நோக்கி...

தத்துவம் என்பது உண்மை பற்றிய அறிவாராய்ச்சி; வாழ்க்கையை நிறைவும் பயனும் உடையதாக்கி எதிர்காலத்துக்கு வழி நடத்தும் கடப்பாடு அதற்கு உளது. இந்த அடிப்படையிலே இந்தியத் தத்துவப் பரப்பு இங்கே நோக்கப்பட்டது. இதில் தெளிந்து கொண்டவைப்பற்றி பின்வருமாறு சுட்டலாம்.

அ) இந்தியத் தத்துவம் தன் தொடக்க காலத்தில்— கி. பி. 6-5 ஆம் நூற்றாண்டுகள் வரையான காலப்பகுதியில்—அறிவார்வம், சமூக அக்கறை என்பன கொண்டு திகழ்ந்தது.

ஆ) பின்நாளில் தத்துவ மைய நீரோட்டம் தர்க்கவாதத்திறன், சமய நம்பிக்கை என்பவற்றில் புகலடைந்தது.

இ) தொடக்கத்தில் புலப்பட்டு நின்ற சமூக அக்கறை சார்ந்த கூறுகள் அறம், பக்தி, ஆன்மநேயம் என்பன வாகத் தனித்தனித் தளநிலைகளில் வளர்ச்சி எய்தின.

இவ்வாறான தத்துவ வரலாற்றுச் செல்நெறியை நெறிப்படுத்துவதில் சமூகக் கட்டமைப்பின் உயர் மட்டத்தில இருந்தோர் குறிப்பிடத்தக்க முதன்மை வகித்து வந்துள்ளனர். அதேவேளை சமுதாயக் கட்டமைப்பின் அடிமட்டத்தினரின் பங்களிப்பும் குறைத்து மதிப்பிடுவதற்கு உரியதல்ல. குறிப்பாகப் பக்தி நெறி, அதனை மையப்படுத்திய மக்களியக்க எழுச்சி, அதில் புலப்பட்டு நின்ற சமநோக்கு என்பன அடிநிலை மாந்தரின் உணர்வுநிலைகளையும் தழுவியமைந்தவை என்பதை இங்கு நினைவிற்கொள்வது அவசியம்.

சமூக பயன்பாட்டு நோக்கு என்ற அடிப்படையில் இந்தியத் தத்துவப்பரப்பு முழுவதையும்-மைய நீரோட்டம், துணைநிலைத் தளங்கள் ஆகிய அனைத்தையும்- தொகுத்து நோக்கும்போது தெளிவாகப் புலனாகும் கூறுகள் இரண்டு-அவை:

அ) சமூகப் பிரச்சினைகளை இந்தியத் தத்துவம் உணர்ந்திருக்கிறது. அவற்றுக்குத் தீர்வுகாண விரும்பியிருக்கிறது. மாந்தரது உள நிலையில் மாற்றம் நிகழ்வதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம் என்பது அதன் முடிந்த முடிவு. அஹிம்சை, அறம், அன்பு உண்மை, பக்தி, தியாகம் முதலியனவாக அதன் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன.

ஆ) ஆனால் அத்தீர்வுகள் நிலைபெற்று நின்று பயன் தருவதற்கு ஏற்ற வகையில் சமூகத்தளம் அமைந்ததா என்பதை அவை சிந்திக்க முற்படவில்லை. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் சமூகப் பிரச்சினைகள் அனைத்துக்குமான காரணிகள் சமூகக் கட்டமைப்பின் அடித்தளமான பொருளியல், உற்பத்திஉறவுமுறை என்பவற்றில் உள்ளுறைந்திருப்பவை என்பதை மேற்படி இந்தியத் தத்துப் பரப்பு சிந்திக்க முற்படவில்லை.

இவற்றை மேலும் விளக்கமாகக் கூறுவதானால் சமூக மாந்தரின் துன்ப-துயரங்கள் நீங்க வேண்டும் எனக் கௌதமபுத்தரும் விரும்

www.padippakam.com

பினார். வள்ளுவரும் விரும்பினார். திருமூலரும், இராமானுசரும், பஸவண்ணரும் விரும்பினர். வள்ளுவருக்கு வறுமைக்குக் காரணமானவர்கள் மீது கடும் சீற்றமேஏற்பட்டுள்ளது என்பதை மேலே நோக்கியுள்ளோம். ஆனால் சமுதாயத்தைச் சுரண்டலுக்கு எதிரான வகையில் மாற்றியமைப்பதன் மூலமே நிலையான தீர்வுக்கு வழிகள் அமைக்கலாம் என்பதை இவர்கள் உணர்ந்திருக்கவில்லை. அது அவர்கள் குறையல்ல. அவர்களின் வரலாற்றுக் கட்டங்களில் அத்தகு சமுதாயவரலாற்றுணர்வு உருப் பெற்றிருக்கவில்லை.

இந்திய மண்ணில் மட்டுமல்ல, ஏனைய-அனைத்துலக-நாடுகளின் நிலையும் இது தான். சமுதாயத்தைச் சுரண்டலுக்கு எதிரான வகையில் மாற்றியமைப்பதன் மூலமே அதன் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண முடியும் என்ற கருத்து உருவாக்கப்பட்டு முன் மொழியப்பட்டதே கி.பி.19-ம் நூற்றாண்டில் தான். இதனை முன்மொழிந்த வகையிலேயே அனைத்துலக தத்துவ வரலாற்றில் மார்க்சியம் என்ற பொதுவுடைமைத் தத்துவம் மாபெரும் திருப்புமுனையாக அமைந்தது என்பதை நாம் இத்தொடர்பிற் கவனத்திற் கொள்வது அவசியம்.

ஜெர்மனியரான கார்ல் மார்க்சும், பிரித்தானியரான பிரடெரிக் ஏங்கல்சும் தம் ஆழ்ந்த ஆய்வுப் புலமையூடாக உருவாக்கி வழங்கிய அத்தத்துவம் சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் தத்துவம் ஆகியவற்றில் ஓர் அறிவியல்பூர்வமான பார்வையையும் விளக்கத்தையும் முன்வைத்தது. உலகாயதத்தின் அடிப்படையில் இயக்கவியல் அணுகுமுறையில் கட்டியமைக்கப்பட்ட அத்தத்துவம் மனித சமூகம் இற்றைவரை உருவாக்கிப் பேணி நின்ற சிந்தனைகள் அனைத்திலும் சிகரமாக அதிகபட்ச நம்பகமானதாகத் திகழ்வது. இந்திய மண்ணிலே உபநிடத ஞானியரும் களதமபுத்தரும் வள்ளுவரும் உணர்வுநிலையிற் புலப்படுத்தி நின்ற மனித நேயத்தை-சமூக அக்கறையை-அறிவியல் முறைமையிற் செயல் வடிவாக்க வகை செய்யும் தத்துவம் இது. அவ்வகையில் இந்தியத் தத்துவ மரபை உரியவாறு உணர்ந்தோரால் உன் வாங்கிக் கொள்ளப்படத்தக்க உயர்தகுதிப்பாடு இதற்கு உண்டு. ஆனால் அவ்வாறு நிகழவில்லை. இம்மண்ணில் அறிமுகமாகி எழுபதாண்டுகட்கு மேலாகியும் இன்னும் இது உரிய வரவேற்பைப் பெறவில்லை. ஏன்?

முதன்மைக் காரணம், இது ஒரு இறை மறுப்புத் தத்துவம் என்பதாகும். பல நூற்று ஆண்டுகளாக இறை நம்பிக்கையில் ஊறித் திளைத்து அதன் அடிப்படையில் 'கலை-பண்பாட்டு'ப் பாரம்பரியங்களைப் பேணி வந்துள்ள மக்கள் சமூகத்துக்கு மார்க்சியமென்றால் இறை நம்பிக்கைக்கு எதிரானது என்ற கருத்துப் படிமமே உள்ளுறைந்திருக்கிறது. அதனடிப் படையில் நமது மண்ணின் கலை-பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கு எதிரான தளத்திலேயே மார்க்சியம் நிற்பதாக அவர்கள் நினைக்கின்றனர். இதனால் மார்க்சியத்தின் செழுமையான கூறுகள் பல இம்மக்களுக்கு உரியவாறு அறிமுகமாகவில்லை. மார்க்சியத்தின் அரசியல், பொருளியல், தொழிற்சங்கச் செயற்பாடுகள் முதலியன தொடர்பாக விரிவாகச் சிந்தித்துச் செயற்பட்டு வந்துள்ள இந்தியாவின் மார்க்சிய அறிஞர் பலர், அதன் சமூக பண்பாட்டுக் கூறுகளை இந்திய மண்ணின் பாரம்பரியமான சமூக-பண்பாட்டுக் கூறுகளுடன் அருகேவைத்து ஒப்பு நோக்கி, மக்கள் மத்தியில் எடுத்துரைக்க முற்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு எடுத்துரைக்க முற்பட்ட முயற்சிகள் கூட உரியவாறு பொதுமக்கள் மத்தியில் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் சென்று சேரவில்லை.

இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் மார்க்சியத்தின் 'அறம்' பற்றி இம்மண்ணில் தெளிவான கருத்துக்கள் முன் வைக்கப்படவில்லை. மார்க்சியத்தில் 'அறம்' என ஒரு கூறு உளதா எனப் பலரும் வியப்புடன் வினா எழுப்பும் நிலையும் இங்கு உளது என்பதைச் சுட்டிக் காட்ட விழைகிறேன். மார்க்சியத்தின் அடிப்படையே அறம் தான். சமூக முரண்பாடுகளுக்கான காரணிகளான சுரண்டல் மனப் பாங்கு, உடைமையுணர்வு முதலியவற்றைக் களைந்தெறிய வேண்டும் என்ற வகையில் கார்ல் மார்க்சுக்கு எழுந்த அறச்சீற்றமே



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சியம் என்ற சமூக அறிவியல் தத்துவத்தின் வேராகும். இந்த அடிப்படையில் மார்க்சியத்தில் விரவியிருக்கக்கூடிய அறக்கருத்துக்கள் இன்னும் நம் மத்தியில் திரட்டித் தொகுத்துரைக்கப்படவில்லை என்பதை நாம் மனதில் இருத்த வேண்டும். (இத் தொடர்பில் தமிழர் மத்தியிலான பலவீனமான ஒரு அம்சத்தையும் இங்கு சுட்டுவது பொருந்தும். அதாவது மார்க்சியத்தின்முக்கிய மூலப்படைப்பாக்கமான டாஸ்காபிடல்-மூலதனம்-இன்னும் தமிழில் முழு நிலையில் அறிமுகமாகவில்லை. நாம் மார்க்சியத்தை முழு நிலையில் தெரிந்து தெளிந்து கொள்ள இன்னும் எத்தனை தூரம் கடக்க வேண்டியுள்ளது என்பதை இது உணர்த்தும்).

மார்க்சியத்தின் அறம் சார் கூறுகள், இந்திய மண்ணில் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்துள்ள அறம். பக்தி, ஆன்மநேயம் முதலிய பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தும் அருகருகே வைத்து ஒப்பு நோக்கப்படுவதன் மூலமே இந்திய மண்ணுக்கான பொருத்தமான தத்துவத்தளம் ஒன்றை உருவாக்க முடியும். அதை விடுத்து இந்த மண்ணின் பாரம்பரியச் சிந்தனை வளத்தைப் புரிந்து கொள்ளாமல் மார்க்சியத்தை அப்படியே இங்கு இறக்குமதி செய்வதாலோ அன்றேல் இந்த மண்ணின் சிந்தனைகளுக்குள்ளே எல்லாம் அடங்கியுள்ளன எனக் கண்ணை மூடிக் கொண்டுவிடுவதாலோ சமுதாயத்துக்கு நன்மை புரிய முடியாது இத்தொடர்பிலே, லெனின் அவர்கள் இளைஞர் கழகங்களின் பணிகள் தொடர்பான உரையொன்றிலே சுட்டியுள்ள கருத்தைப் பொருத்தம் கருதி எடுத்துக் காட்ட விழைகிறேன்.

> ''மனித குலத்தின் வளர்ச்சி அனைத்தினதும் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட கலாசாரத்தைப் பற்றிய துல்லியமான அறிவைக்கொண்டும் இத்தக் கலாசாரத்தை மாற்றியமைப்பதன் மூலமும்தான் நாம் பாட்டாளி வர்க்க கலாசாரத்தைத் தோற்றுவிக்க முடியும் என்பதைத் தெளிவாக உணர்த்தால் ஒழிய இப்பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண இயலாது. பாட்டாளி வர்க்க கலாசாரம் மாயமாய் வெற்று வெளியினின்று தயாரிக்கப்படக் கூடியதல்ல. கம்யூனிசக் கலாசார நிபுணர்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்வோர் கண்டுபிடித்துக் கொடுத்து விடக் கூடியதுமல்ல. அவ்வாறு பெறலாம் என்பது அபத்தப் பேச்சு. முதலாளித்துவ சமுதாயம், அதிகார வர்க்க சமுதாய' ஆகியவற்றின் ஆதிக்கத்தில் மனித குலம் சேமித்து வந்திருக்கும் அறிவுக் கருவூலத்தின் தர்க்கரீதியானவளர்ச்சியாகவே பாட்டாளி வர்க்கக் கலாசாரம் இருக்க முடியும்..........''
>
> (லெனின் நூல் திரட்டு-4: பக்: 216)

புதிய பொருத்தமான கலாசாரத்தைக் கட்டியமைக்க முயலும்போது பாரம்பரிய கலாசாரம் பற்றிய தெளிவு எந்த அளவுக்கு அவசியமானது—தவிர்க்கவியலாதது-என்பதை லெனின் அவர்களது மேற்படி கூற்றுஉணர்த்தி நிற்கிறது என்பது தெளிவு.

மார்க்சியத்தைப்பற்றிய தெளிவுடன் இந்தியச் சமுதாயத்தை கட்டியமைக்க முற்படும்போது அதற்கான கருத்தியல்களை வழங்கும் ஆற்றல் இந்தியத் தத்துவ மரபில் நிறையவே உளது என்பது தெரியவரும். உபநிடதங்கள், குறள் என்பவற்றில் எண்ணக் கருக்களாக அமைந்தவை மட்டுமின்றி மைய நீரோட்ட தத்துவங்களான அத்வைதம் விசிட்டாத்வைதம் முதலியவை கூட இவ்வகையில் பயன்பட வல்லன. குறிப்பாக அத்வைதத்தை, அதன் உலகம் உயிர் என்பவற்றை மறுக்கும் பகுதிக்கு முதன்மை தராமல் அதனை அனைத்தையும் பிரம்மமாகவே காணும் கருத்தியலாகக் கொள்ளும்போது சமநிலை நோக்காக அது புலனாகும். அவ்வகையில் மார்க்சியம் காண விழையும் சமத்துவத்துடன் நெருங்கி வரும் தத்துவமாக அது அமைந்துவிடும். இவ்வகையிலே அத்வைதத்துக்கும் அதன் மூலாதாரங்களான உபநிடத சிந்தனைகளுக்கும் உள்ள பயன்பாட்டு வளம்தொடர்பாக ஒருவரலாற்றுக் குறிப்பை இங்கு சுட்ட விழைகிறேன்.

கி.பி. 18,19-ம் நூற்றாண்டுகளில் இந்திய தேசியத்தைக் கட்டி எழுப்புவதற்கான



படிப்பகம்

www.padippakam.com

தொடக்க நிலைப் பணிகளை மேற்கொண்டவர்களான ராஜாராம் மோகன்ராய், சுவாமி விவேகானந்தர் முதலியவர்களுக்கு இந்திய மண்ணின் பல்வேறு மொழி, இன, பண்பாட்டுக் கூறுகளையும் ஒருங்கிணைத்துச் சிந்திப்பதற்கு பயன்பட்டது அத்வைத தத்துவமாகும். ராஜாராம்மோகன்ராய் அவர்கள் தனிப்பட்ட தெய்வ வழிபாடுகளுக்கு அப்பால் பிரம்மம் என்ற முழுமையை நோக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வலியுறுத்தியவர். அதன் அடிப்படையில் அனைத்துலக சமயம் (Universal Religion) பற்றியும் சிந்தித்தவர். இவ்வாறான எண்ணங்களின் இயக்கநிலைச் செயற்பாடாக அமைந்ததே அவர் நிறுவிய பிரமம சமாஜம். விவேகானந்தர் அவர்கள் அத்வைதத்தைச் செயன்முறை வேதாந்தமாகக் கண்டவர். அதில் சங்கரர் புலப்படுத்தி நின்ற 'வர்க்க அவமதிப்புக்' கூறுகளை மறுத்து அதனை அனைத்து மக்களின் ஆற்றலையும் தூண்டி வளர்க்கும் கருவியாகப் பயன்படுத்தியவர் அவர். 1893-ல் அமெரிக்காவில் சிக்காகோவில் நடைபெற்ற அனைத்து மதப் பேரவையிலே இந்தியச் சிந்தனைச் சாறாக அத்வைத வேதாந்த தத்துவத்தையே அவர் முழங்கினார். இவரின் செயல்திறனால் உருவாகி, இராமகிருஷ்ணமிஷன் என்ற பெயரில் அனைத்துலகிலும் சமூக சேவை புரிந்து நிற்கும் நிறுவனம் அத்வைத வேதாந்தத்தளத்தில் உருப்பெற்றதாகும். இந்த நூற்றாண்டிலே, தேசபிதா எனப்படும் காந்தியடிகள் இந்திய மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்கு உபநிடதங்கள், ஸ்ரீமத் பகவத்கீதை என்பன அடிப்படைகளாக அமைந்தன என்பதும் இத்தொடர்பிற் சுட்டத் தக்கது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மார்க்சியத்தோடு சைவசித்தாந்தத்தை அருகில் வைத்து நோக்க முயன்றுள்ளமையும் நமது கவனத்துக்கு உரியது.

எனவே இன்று மார்க்சியத்தின் பொதுவுடைமைச் சிந்தனையுடன் மிக நெருங்கிச் செயல்வடிவம் பெறக்கூடியனவாகவுள்ள இந்திய தத்துவ மூலங்களைத் தெரிந்து, தெளிந்து கொள்வதும் அதற்கேற்ப அவற்றை வளர்த்தெடுப்பதும் சாத்தியமான செயற்பாடுகளேயாம். இந்திய மண்ணில் இன்று முனைப்புற்று வரும் இந்த அடிப்படைவாதத்துக்கு இந்தியத் தத்துவப் பரப்பு அடிமைப்பட்டு விழாமல் பேணிக் கொள்வதற்காகவும் இவ்வாறு சிந்தித்துச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

இன்று நாம் உலக மயமாக்கல் சூழலில், நுகர்வோர் கலாசாரத்தால் அந்நியப்பட்டுக் கொண்டிருக்கும் சமூக மாந்தரின் மத்தியில் மேற்படி தத்துவங்கள் பற்றிப் பேசுகிறோம். ஏன்? அவர்களை மீட்டெடுத்து, சமுதாய நலனை நோக்கி அவர்களது செயல்முறைகளைத் திசை திருப்பவேண்டும் என்பதற்காகத்தான். அதற்கேற்ற தத்துவத் தளங்களை உரியவாறு கண்டறிந்து காட்ட வேண்டிய கடப்பாடு எமக்கு உளது.

இச்சூழலில் மேற்படி சமூக மாந்தரை மேலும் அந்நியமாக்கும் வகையிலும் பல சிந்தனைகள் முளைவிட்டு வருகின்றன என்ற உண்மையையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். உண்மை, நன்மை, அறம், உள்ளதம் முதலிய விழுமியங்களை மறுப்பதும், கடந்த கால வரலாற்றினின்று மனிதனைத் தனிமைப்படுத்துவதுமான எண்ணங்கள் நம் முன் வைக்கப்பட்டுள்ளன. இவை முன் வைக்கப்படுவதன் உள்நோக்கம் என்ன? இவை மனிதரை மேலும் அந்நியப்படுத்தி விடும் நச்சுத் தன்மை வாய்ந்தன என்ற உண்மையை இவர்கள் உணர்ந்து கொண்டுதான் இவ்வாறு செயற்படுகிறார்களா? அல்லது அறியாமையாலா? எம்மால் விமர்சிக்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகள் இவை என்பதை மட்டும் இங்கு முன் வைக்கிறேன்.

> மார்க்சியத்தின் அறம்சார் கூறுகள், இந்திய மண்ணில் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்துள்ள அறம், பக்தி, ஆன்மநேயம் முதலிய பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தும் அருகருகே வைத்து ஒப்பு நோக்கப்படுவதன் மூலமே இந்திய மண்ணுக்கான பொருத்தமான தத்துவத்தளம் ஒன்றை உருவாக்க முடியும்.
>
> (மேற்படி கட்டுரையிலிருந்து)



படிப்பகம்

www.padippakam.com

# உள்நாட்டுத் தொழில் முதலீட்டை முடமாக்கும் பன்னாட்டு நிறுவனங்கள்

பேராசிரியர் சாமிஸ்கி

ஹைதராபாத் பல்கலைக் கழகத்தில், பெரும் திரளாகக் கூடிய மாணவர் கூட்டத்தில் 'பன்னாட்டுச் சந்தை பொருளாதாரம்' பற்றி மொழியியல் அறிஞர் சாம்ஸ்கி உரையாற்றினார். இந்தியா தன் மக்களின் உழைப்பையும் உள்நாட்டு தொழில் நுட்பத் திறனையும்தான் நம்பி இருக்கவேண்டும்; மாறாக அது பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தன் சந்தையை திறந்து விட்டதன் மூலம், அந்நிறுவனங்கள் இந்திய தொழில் நுணுக்கம் மற்றும் இயற்கைச் செல்வங்களை தமக்குச் சாதகமாக பயன்படுத்தி அழிக்கிற சூழ்நிலைதான் உருவாகியுள்ளது என எச்சரித்தார்.

உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களை அழிப்பதோடு மட்டுமல்லாமல் தங்களது வியாபாரத்திற்கான நிரந்தர சந்தைக்குரிய சூழலை அவர்கள் ஏற்படுத்திக் கொள்வார்கள். ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்தில் வங்காளத்தில் நடந்தவைபற்றி ஆடம்ஸ்மித் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திற்கு முன்பு இந்தியா மிகவும் செழிப்பு மிக்க நாடாக இருந்தது. இப்போது அது ஏழை நாடாக மாறிவருகிறது. பொருளாதார அற்புதம் என வர்ணிக்கப்படும் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்முறைகளின் விளைவாக ஒருபுறம் கோடீஸ்வரர்கள் 10 முதல் 20 மடங்கு பெருகுகின்றனர். அதேசமயம், உள்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பின்மை தொடர்ந்து அதிகரிக்கிறது. 1994ல் மெக்ஸிகோவில் பொருளாதாரப் பேரழிவு நடந்தபோது, சுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றிய நாடுகள் 50 மில்லியன் டாலர்கள் மெக்சிக்கோவுக்கு தருவதாக உதவிக்கரம் நீட்டின. அதில் சரிபாதியை யு.எஸ்.ஸின் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டன. அத்துடன் மெக்ஸிகோவில் பல தொழிற்சாலைகளை உரிமையாக்கிக் கொண்டன.

இன்று பரபரப்பாக நாளிதழ்களில் அலசப்படும் ஹவாலா மோசடி செய்திகளும், அதிகரித்துவரும் லஞ்ச ஊழல்களும் தற்போதைய உலகச்சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு கூறுதான் என்பதில் சந்தேகமில்லை.

யு.எஸ் அதிபர் கிளின்டனுக்கும் நாடாளுமன்றத்திற்கும் நடப்பு வரவு செலவு திட்டத்தை சரிசெய்வதுபற்றிய கருத்து வேறுபாடு அதிகரித்து வருவதும், மக்களின் நலன்களுக்காக ஒதுக்கப்படும் நிதிகளைக் குறைப்பதன் மூலமாகத்தான் சரி செய்யப்பட வேண்டுமே தவிர பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்கக்கூடாது என நாடாளுமன்றம் வற்புறுத்தி வருவதும் நோக்கத்தக்கதாகும்.

யு.எஸ்ஸில் வெளிவரும் ஃபார்ச்சூன் (Forture) இதழ் செய்த கணக்கீட்டின்படி யு.எஸ்ஸில் முன்னிலையில் உள்ள 500 பன்





படிப்பகம்

www.padippakam.com

ன்னாட்டு நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளில் 54 விழுக்காடு வளர்ச்சியை எட்டியுள்ளன என்று அறிய வருகிறது. இந்நிறுவனங்கள் ஆயிரம் கோடிகள் என்ற அளவில் விளம்பரம் செய்வது ஏன் என்பதை 40 சதவீத குடியரசுக் கட்சியினரால்கூட புரிந்து கொள்ள இயல வில்லை.

தொழில்துறை வளர்ச்சி பெற்ற சமூகங் களில் கூட்டு நிறுவனங்களின் வளர்ச்சி மக்க ளாட்சி முறைக்கு எதிராகச் செயல்படுகிறது என்று அண்மையில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு சமூகவியல் வல்லுனர் குறிப் பிட்டுள்ளார்.

இந்தியா தனது உள்நாட்டுத் தொழில் திறனை வளர்ப்பதன் மூலமும் ஜனநாயகத்தை வளர்ப்பதன் மூலமும் சிறப்பான முன்னேற்றம் காணமுடியும். இந்திய வேளாண்மை விஞ் ஞானிகள், உள்நாட்டு பாரம்பரிய விவசாய தொழில் நுணுக்கங்களைப் பயன்படுத்த ஊக்க மளிப்பது மிக அவசியம். இதை விடுத்து பன் னாட்டு வல்லுனர்களை அழைப்பதானது. இந்திய வேளாண்மையைச் சீரழிப்பதன்வாய்ப் பாகவே அமையும்.

உலகவர்த்தக நிறுவனம் மற்றும் அறிவு சார் சொத்துரிமை விதிமுறைகளும் சேர்ந்து தனியாரின் பாதுகாப்பு உரிமைகளையே பலப் படுத்துகின்றன. இச்குழ்நிலைஇந்திய மருந்து உற்பத்தித் தொழிலைப் பாதிப்பதற்கும், மருந்துகளின் விலை கூடுவதற்கும் இடம் தரு கிறது. அறிவுசார் சொத்துரிமைகளைப் பாது காக்கும் நோக்கில் இந்திய நாடாளுமன்றத் தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருப்பதாகக் கூட நான் கேள்விப்படுகிறேன் என்கிறார் சாம்ஸ்கி.

'இந்து'
18-1-96.
தமிழில்: எஸ்.ஆர். சுந்தராமன்
(சத்தி)

● ● ●

# பசிக்கடவுள்

பழமலையப்பனுக்கு
பத்து குடம் நீர் எடுத்து
கட்டைச்சந்தனமும்
தான் அரைத்து பணியிடுக்கில்
சோற்றுத் தலைச்சுமையாய்
சன்னதிகள் வலம் செய்தே
நாளும் பட்டை ரெண்டு
மாதமோ எழுபத்தைந்து
பெற்று மட்டும்,
தாயுடன் தங்கையை, அவள்
தாய்வீடு கொண்டுவந்த இருசிசுவை
எத்தனை நாளைக்கு
குறைவயிறாய் துயிலவைப்பான்
இப்போ மூவருமாய் முடிவெடுத்து
பஜ்ஜியும் வடை வகையும்
சாலையோர ஜாம்ஜாம் வியாபாரம்
பழமலைக்கு சினம் எனினும்
பசிக்கடவுள் பலவான் நிதர்சனமாய்.

—எஸ்லாரிசி



படிப்பகம்

www.padippakam.com

# கடவுளோடு நடந்த சம்பாஷணையிலிருந்து சில வரிகள்

ஒப்புக்கொள்கிறேன் கடவுளே
உம்மை வணங்குவோர் கோடி.
நீ ஒப்புக்கொள்விரா அய்யா,
உமது பக்தர்களின் கையில்
'நாய்பெற்ற தெங்கம்பழம்' தானே நீர்?

இன்று என் கவிதைகள்
உம்மைப் போட்டு உடைக்கின்றன.
நீர்தான் ஒரு வலியில்லா மரணமில்லா
அதிர்ஷ்டப் பிறவியாயிற்றே.
சும்மா திறந்து சிரியுமய்யா சிரியும்.
உம்மை எரித்துக் குவிக்கின்றன என்கவிதைகள்
அப்போதும் உமது சாம்பலை எடுத்துப் பூசிக்
கொள்ளும்

பக்தனில்லை நான். எனினும்
அதிரவைக்கிறதையா உமது சாம்பல்
திரும்பத் திரும்ப
நடமாடும் கழிபோல
'நான்', 'நான்' என வந்து
'அவதரி'க்காதீரும் இனி.
கவிதையின் அடித்தல் கோடானது
சிலுவையின் குறுங்கட்டையாகி உம்மை
அறையும்.

இரும்,
வேண்டாங்கல்ல.
எதற்கும்
எவருக்கும்
எக்கணமும் இடைஞ்சலில்லாது
சிவனே என்று(?)
இருக்கும் வகை தெரிந்து
இருந்தால் உம்மை யார் தடுக்கா?

எடுப்பார் கைப்பிள்ளையாய்
எத்தர்களோட ஆயுதமாய்
மடையர்களின் சாம்பிராணியாய்
ஒரு பிண்டமாக நீர்
எப்படி இருக்கப் போச்சி?
அப்பேர்ப்பட்டவனுகளோட
கைகளையெல்லாம் சுட்டெரிக்கிற
நெருப்பாக இருக்கத் தெரியவேணாம்?

இருந்தால் நெருப்பு
அணைந்தால் சாம்பல்
அதுவல்லவா வாழ்க்கை.

-தேவதேவன்

www.padippakam.com

(24-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மா.சி. கூடம் தனது மார்க்சியத்தின் அடிப்படையான பிரச்னைகளை ஆய்வு செய்வதில் ஆர்வம் காட்டி, விவசாயப்பிரச்னையில் தலையிட்டு தனது மார்க்சியத் தெளிவை வெளிப்படுத்த முயற்சி செய்தது. இதன் விளைவாக மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் முதலாளித்துவம் முழுமை அடைந்த ஒரு சில நாடுகளைத் தவிர மற்ற சர்வதேச நாடுகள் அனைத்தும் விவசாய நாடுகளாக இருந்த காரணத்தால் அவர் விவசாயப் பிரச்சனையை பிரதானமாக ஆய்வு செய்து, ஓர் தெளிவான, மார்க்சியப் பார்வையை அளித்துச் சென்றுள்ளார். அந்த அடிப்படையான மார்க்சியப் பார்வையை, விவசாயப்பிரச்னை குறித்த நூலாக 1994-ஆம் ஆண்டு ''விவசாய பாட்டாளியும்-வர்க்க விடுதலையும்'' எனும் மார்க்சிய ஆய்வு நூலாக வெளிக்கொண்டு வந்துள்ளோம். விவசாயத் தொழிலாளர்களுக்கும்-சிறு விவசாயிகளுக்கும் மார்க்ஸ் காட்டிய வர்க்கப் பார்வை என்ன என்பதை இந்நூலில் காட்டி உள்ளோம்.

இதனை அடுத்து, மா.சி.கூடம் வரலாற்று வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, பொருளாதார வளர்ச்சியையும் கணக்கில் கொண்டு, தேசிய சர்வதேசிய ரீதியாக இன்று முதலாளித்துவம் எந்த அளவிற்கு வளர்ந்து எந்த நிலைக்குத் தயாராக உள்ளது என்பதையும், அதன் செயல்பாடுகள் என்ன என்பதையும், அது சர்வதேசத்தையும் எவ்வாறு தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முயற்சி செய்கிறது என்பதற்கும், மார்க்ஸ் அளித்த விளக்கத்தையும், அவர் காட்டிய மார்க்சியப்பார்வை என்ன என்பதையும் முழுமையாக வெளிக்கொண்டு வந்து ஒரு பொருளாதார நூலாக 1995-இல் வெளியிட்டுள்ளோம். இந்நூலின் பெயர் 'முதலாளித்துவ ஏகபோகமும் (காட்டங்கல்) - பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், கம்யூனிசமும்'.

இதுவரை மா.சி.கூடம் ஏன், எதற்காக, எந்த நோக்கத்திற்காகத் தோன்றியது கடந்த 6 ஆண்டுகளாக அதன் முறையான செயல்பாடுகள் என்ன என்பதை சுருக்கமாகத் தந்துள்ளோம்.

மா, சி. கூடம் கடந்த ஆறு ஆண்டு கால ஆய்வின் விளைவாக மார்க்சிய—லெனினியம் என்ற சொல்லுக்கு முக்கியத்துவம் இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளது. மார்க்ஸ் அவர்கள் வரலாற்று வளர்ச்சியை முறையாக கணக்கில் கொண்டு, இந்த உலகில் சகல துன்ப துயரங்களுக்கும் மூல காரணம் பொருளாதாரத்தை மையமாக வைத்த ஆதிக்க சக்திகளே என்பதை ஆய்வு செய்து உலகுக்கு காட்டினார். அந்த சக்திகளை எப்படி, எந்த தத்துவத்தின் அடித்தளத்தில் நின்று எதிர்த்து செயல்படவேண்டும் என்ற நடைமுறைக் கோட்பாடுகளையும் மிகத்தெளிவாகக் காட்டியுள்ளார். இவ்வுலகில் அரசியல், பொருளாதாரம், இலக்கியம், விஞ்ஞானம், வாழ்வியல், இயற்கை போன்ற சகல துறைகளும் ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தாது, முழுமையான, குறையான வளர்ச்சியை அடைவது தான் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். சமூகத்தில் நடக்கும் அனைத்துக் கொடுமைகளுக்கும் மூல காரணமாக உள்ள தனிச்சொத்துரிமையை மையமாகக் கொண்ட முதலாளித்துவ ஆதிக்க சக்திகளை வேரோடு அழித்து, அந்த இடத்தில் பாட்டாளி வர்க்கம் தனது அரசு ஆதிக்கத்தை நிலைநாட்டி தனிச் சொத்துக்களை பொதுச் சொத்தாக்கி தம்மை ஒரு ஆளும் வர்க்கமாக ஆக்கிக் கொள்ள உருவாக்கப்பட்டதே மார்க்சியத்தின் செயல்பாட்டுக் கோட்பாடாகும். இந்த மார்க்சியக் கோட்பாடு இரண்டு கட்ட செயல்பாடாக மார்க்ஸ் அவர்களால் காட்டப்பட்டது. முதல் கட்டம் பாட்டாளி வர்க்கம் தன்னை ஒரு ஆளும் வர்க்கமாக பலம் பெறச் செய்து முதலாளித்துவ வர்க்கத்தை வேரோடு சாய்த்து அதன் தனிச் சொத்துடமையை அரசின் பொதுச்சொ துடமையாக்கி தனது அரசு ஆதிக்கத்தை நிலை பெறச் செய்வது ஆகும். அதற்காக புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வதேச ஸ்தாபனம் தேவை என்பதையும், அவ்வர்க்கம் தன்னை ஒரு பலம் பொருந்திய சக்தியாக திரட்டிக் கொள்ள வேண்டும் என்றும் மார்க்ஸ் கண்டறிந்தார். இதுபற்றி கம்யூனிஸ்ட் அறிக்கை என்னும் நூலில் மிகத் தெளிவாக மார்க்ஸ் முன் வைத்தார்.

இரண்டாவது கட்டமாக பாட்டாளி வர்க்கம் தனது அரசு ஆதிக்கத்தை நிலை



படிப்பகம்

www.padippakam.com

நாட்டிய பிறகு தனிச் சொத்துடைமையை ஒழித்து, அந்த இடத்தில் பொதுச் சொத்துரிமையை உருவாக்கிய பிறகு, அது படிப்படியாக தன் வர்க்கத் தன்மையை இழந்து, அரசுச் சொத்துரிமையை சமுதாயச் சொத்தாக மாற்றி, தன் ஆதிக்கத்தையே முறையாக மறையச் செய்து ஒரு முழுமையான, சுதந்திர மான புதிய சமுதாயத்தை வந்தடைவதே ஆகும்.

மார்க்ஸ் சுட்டிக் காட்டாத எந்தக் கருத்தும், நடைமுறைச் செயல்பாடும், தத்துவக் கோட்பாடும் இதுவரை மற்றெந்தத் தத்துவ ஞானிகளாலும் கையாளப்படவில்லை என்பது மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் முடிவான கருத்தாகும். எனவே, மார்க்ஸ் விட்டுச் சென்ற—செய்யத் தவறிய, செயல்பாடுகள் எதையும் பின்னால் வந்த கம்யூனிஸ்ட் அமைப்புகளோ, கம்யூனிஸ்ட் தோழர்களோ செய்யவில்லை என்றும், அதற்கு அப்படிப்பட்டநிலை தேவை இல்லை என்றும் உறுதியான கருத்தோடு வந்துள்ளோம்.

மார்க்சுக்குப் பிறகு(முதலாவது அகிலத்திற்குப் பிறகு), நடைமுறைக்கு வந்த இன்று வரை உள்ள 2,3,4, அகிலங்களும். அதன் கருத்தமைவும், வழிமுறையும் மார்க்சியத்தை விட்டு நழுவி, திரிபு நிலைக்கும், சந்தர்ப்ப வாதப் போக்கிற்கும் சென்று, முன்னர் வந்த தோழர்களிடம் அகவயப்பட்ட சிந்தனைப் போக்காகவே அமைந்துவிட்டது. (இதன் முழுமையானவிளக்கத்தை விமர்சனம்-சுயவிமர்சனம் எனும் நூலில் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளோம்.)

அடுத்து, விவசாயத் துறையையும், விவசாய வர்க்க குணாம்சங்களையும், அவர்களைப் பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களுக்கு உற்ற துணையாக நிற்குமாறு செய்யும் முறையில் மாற்ற மார்க்ஸ் காட்டிய அந்த மார்க்சியப் பாதையையும், கோட்பாடுகளையும் விட்டுவிலகி, மார்க்சியத்தின் வளர்ச்சிக்கு எதிரான செயல்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வந்த காரணங்கள் இன்றுவரை உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் மற்றும் சோசலிஸ நாடுகளின் பின்னடைவுக்கு முக்கிய காரணம் என்று மா.சி. கூடம் முடிவெடுத்துள்ளது. (இதனைத் தெளிவாக, விவசாய-பாட்டாளியும் வர்க்க விடுதலையும் எனும் நூலில் காணலாம்.)

மேற்காட்டிய விளக்கங்கள் யாவும் மார்க்சியம் எந்தக் கோட்பாட்டையும், செயல்பாட்டையும் அரைகுறையாக வைக்கவில்லை என்பதையும் அது பாட்டாளிவர்க்க முழுமையான விடுதலைக்கும் உலகில் ஆதிக்கம் இல்லாத ஓர் புரட்சிகர புதிய சமுதாய அமைப்பை உருவாக்கக் கூடிய ஓர் முழுமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க தத்துவமாகும். எனவே தோழர் லெனின் தன்னை எந்த நிலையிலும் மார்க்சியத்திற்கு இணையாக லெனினியம் என்று இணைக்கவும் இல்லை, முடிவு எடுக்கவும் இல்லை என்பதைத் தோழமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தோழர் லெனின் மறைவுக்குப் பின்னர் அவர்பால் கொண்ட அகவயப்பட்ட சிந்தனையின் காரணமாக, அவருக்குப் பின்னால் வந்த தோழர்களால் உருவாக்கப் பெற்றதுதான் லெனினியம் தோழர் லெனினிக்குப பின்வந்த 2,3,4, அகிலங்களும் மார்க்சியத்தை விட்டு விலகிச் சென்றன. லெனினின் இந்த சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்புகளுக்கும், சோசலிச நாடுகளுக்கும், பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களுக்கும் எப்படி ஓர் மார்க்சியம் அல்லாத தவறான பாதையைக் காட்டிவிட்டது என்பதை வலியுறுத்தவே இந்த நீண்ட விளக்கத்தை மா.சி.கூடம் அளிக்கிறது.

எனவே, லெனினியம் என்பது மார்க்சியம் தவிர்த்த முறையான வளர்ச்சிப் போக்கினை உள்வாங்காத நடைமுறைக் கோட்பாடாக அமைந்த காரணத்தால், தமிழகம் இந்தியா மட்டுமல்லாமல் சர்வதேச முழுமைக்கும் பின்னடைவுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

3. சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மார்க்சியம் தகர்ந்ததற்குக் காரணங்கள் என்ன?

மார்க்ஸ் வாழ்ந்த காலத்திற்குப் பிறகு-முதல் அகிலத்திற்குப் பிறகு, நடைமுறைக்கு



படிப்பகம்

தலைமைக்கு வந்த 2,3,4 அகிலங்களின் தலைமைப் போக்கும், அவைகள் மேற்கொண்ட தத்துவக் கோட்பாடுகளும், நடைமுறைச் செயல்பாடுகளும், பாட்டாளி, விவசாய வர்க்கத்திற்கு காட்டிய தவறான முடிவுகளும், பாதைகளுமே கூடுதல் காரணங்களாகவும், சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும்கூட முதல் கட்டப் பணிகளை முடித்த பாட்டாளி வர்க்கம் மார்க்சியத்தின் இரண்டாவது கட்டப் பணியைச் செய்யத் தெரியாமல் மார்க்சியம் தவிர்த்த நடைமுறை செயற்பாடுகளைத் தொடர்ந்ததன் விளைவுதான், இன்றைய நிலையில் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சிக்கும், பின்னடைவுகளுக்கும் முக்கிய காரணம் ஆகும்.

இருப்பினும், மார்க்சிய ஆய்வை முன்னெடுத்ததில் முக்கிய பங்கு லெனின் அவர்களுக்கு மட்டுமே சேரும். மார்க்சியத்தின் முதல்கட்டப் பணியாகிய, பாட்டாளி வர்க்கத்தை ஒரு பலம் மிக்க வர்க்கமாக மாற்றியதும், அதை ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபனமாக வளர்த்ததும், அந்த சக்தி வாய்ந்த பாட்டாளி வர்க்கத்தை போர்க்குணம் மிக்க நடைமுறைக்கு கொண்டு சென்று பிற்போக்கு சக்தியை முறியடித்து, தனது எதிரான பிற்போக்கு ஆதிக்க சக்திகளை வேரோடு சாய்த்து அந்த இடத்தில் தனது பாட்டாளி வர்க்க சக்தியை ஆளும் வர்க்கமாக மாற்றியதும் வரை தோழர் லெனின் செய்த மார்க்சியப் பணியை இந்த உலகம் மறுக்க முடியாது. இது இயக்க இயல் பொருள் முதல் வாத சித்தாந்த அடித்தளத்தில் நின்று ஆற்றிய முதற்கட்டபணி. இது மார்க்சியத்தின் இடைநிலைக் கோட்பாடு மட்டுமே ஆகும்.

ஆனால். அடுத்த இரண்டாவது கட்ட மார்க்சிய இயக்க இயல் பாதையை செய்யத் தவறிய காரணத்தால் கோடிக்கணக்கான உயிர் தியாகங்களைச் செய்த பாட்டாளி வர்க்க அரசு ஆதிக்கம் அழிந்து மீண்டும் இன்று பிற்போக்கு சக்திகளின் கைக்குத் தள்ளப்பட்டுவிட்டது என்பதையும் நாம் மறக்கக் கூடாது. இந்நிலை இயக்க இயல் சித்தாந்தத்தின் நீரோட்டத்தில் நின்று ஆற்றக்கூடிய இரண்டாம் கட்டப் பணியாகும்.

4. இயக்க இயல் அடிப்படையில் மார்க்சியத்தை ஆற்றல்மிக்க பார்வையாக நீங்கள் உருவாக்குவதற்கான அவசியம் என்ன? எப்படி உருவாக்குகிறீர்கள்?

மார்க்சியம் என்பது இயக்க இயலை அடிப்படையாகக் கொண்டது என்று மார்க்ஸ் தெளிவுபடுத்தி உள்ளார். இயக்க இயல் என்பது அனைத்துத் துறைகளிலும் எந்தவித ஆதிபத்திய போக்குமின்றி ஒன்றை அமுக்தி ஒன்று வளரும் நிலையற்றது என்றும் சுதந்திரமான வளர்ச்சிப் போக்கினை உடையது என்றும் தெளிவுப்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட ஆதிக்கமற்ற வளர்ச்சிப் போக்கினை அடித்தளமாகக்கொண்ட இயக்க இயல்கோட்பாட்டைத் தனது அடிப்படையாகக் கொண்டபாட்டாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்டுகள்தங்களது லட்சியத்தின் முழுமையைச் சென்றடைய, மார்க்சியம் காட்டிய இரண்டு கட்டப் பணிகளை முறையாகச் செய்ய வேண்டும். முன் குறிப்பிட்ட இரண்டு கட்டங்கள் வழியிலான வரலாற்று வளர்ச்சியை மையமாகக் கொண்டு செயல்படும் இயக்க இயல் தன்மையை, அதன் பூரணத்துவத்தை, அதன் நுட்பத்தை முறையாக உணராமல் பாட்டாளி வர்க்கம் எப்படித் தன்னுடைய லட்சியத்தை சென்றடைய முடியும் என்று மா.சி. கூடம் சுட்டிக் காட்டுகிறது.

பாட்டாளி வர்க்கத்தால் ஏற்படுத்தப்பட்ட அரசு ஆதிக்கத்தை முறையாக, சீரான செயல்பாட்டின் மூலம் மங்கி மறையச் செய்வதே இந்த மகத்தான இயக்க இயல் கோட்பாட்டின் தன்மையாகும். தன் வர்க்கத்தால், தன் வர்க்க அரசால் பொதுச் சொத்தாக்கப்பட்ட பொதுச் சொத்துடைமைச் செயற்பாட்டையும்கூட ஒரு வர்க்கமற்ற, ஆதிக்கமற்ற, சொத்துரிமையற்ற புதிய சமுதாயத்தைச் செய்வதே மார்க்சியம் காட்டும் அந்த இயக்க இயல் கோட்பாடாகும். இதுவே முழுமையான மார்க்சியக் கோட்பாடாகும். அப்படிப்பட்ட முழுமையான இயக்க

www.padippakam.com

இயல் கோட்பாட்டை பாட்டாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும் முறையான வளர்ச்சிப் போக்காக உணராமல் உள் வாங்கிச் செரிக்காமல் நடைமுறையில் செயல்பட்டால் இதுவரை நாம் செய்த தியாகங்களும், வரலாற்று நிகழ்ச்சிகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, தனது லட்சியத்தி லிருந்து பாட்டாளி வர்க்கம் விலகி மீண்டும் பிற்போக்கு சக்திகளின் ஆதிக்கத்திற்குத் தள்ளப்பட்டுவிடும் என்பது வரலாறு நமக்குக் காட்டும் பாடமாகும். எனவே, பாட்டாளி வர்க்கமும், கம்யூனிஸ்ட் அமைப்புகளும் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடாகிய இயக்கஇயல் நீரோட்டத்தில் இருந்து கொண்டே இயக்கஇயல் பொருள் முதல்வாத நிலையில் தனது பாட்டாளி வர்க்கச் செயல் பாட்டில் முறையாகச் செயல்படவேண்டும் என்பதே மா.சி.கூடத்தின் தோழமைப் பூர்வமான முடிவாகும். மேற்காட்டிய மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் முடிவுகள், கருத்துகள் யாவும் மா.சி. கூடத்தின் சொந்த, இட்டுக்கட்டிக் கையாண்ட, சொந்த விருப்பத்திற்கு ஏற்ற கருத்தல்ல என்பதை யும், மார்க்ஸ் அவர்கள் நமக்குக் காட்டியுள்ள கருத்துகளும், முடிவுகளும், வழிகாட்டலுமே தவிர வேறில்லை என்பதும் தோழமைப் பூர்வ மான செய்தியாகும்.

5. உழவர் பிரச்சனையில் மா. சி. கூடத்தின் பார்வை என்ன?

முதலாளியத்துவ வர்க்கத்தின் சொத்து டைமையை பறிமுதல் செய்து, அரசின் சொத்துடைமையாக்க வேண்டும் என்பது மார்க்சியம் சுாட்டும் கடுமையான முடிவாகும். மற்றும் நிலப்பிரப்புக்களின் பண்ணைச் சொத்துடைமைகளையும் தீவிரமாகப் பறிமுதல் செய்து அவற்றை அரசின் சொத்து டைமையாக ஆக்குவதிலும் மார்க்சியம் சரியான தெளிவான பாதையை காட்டுகிறது. ஆனால் சிறு விவசாயிகளின், உழவர்களின் பிரச்னையில் தனது ஆய்வைச் செலுத்தும் போது மார்க்ஸ் தனது முடிவை இவ்வாறு விளக்குகிறார் சிறுவிவசாயிகளின் சொத்துடை மையை நிலப்பிரப்புக்களின் சொத்துக்களை பறிமுதல் செய்வதுபோல் செய்யக் கூடாது; செய்வதும் முறையல்ல; மார்க்சிய வளர்ச்சிப் பாதை அல்ல என்பதைத் தெளிவான முடிவாகக் காட்டுகிறார். அந்த சிறு விவசாயி களின் சொத்துக்களை விலை கொடுத்து வாங்கி அதை அரசின் பொதுச் சொத்தாக்க வேண்டும் என்றும், அந்த சிறு விவசாயி களை நாளடைவில் ஒரு பாட்டாளி வர்க்க மாக மாற்ற சரியான மார்க்சியப்பாதை இதுதான் என்றும் நமக்குத் தெளிவுபடக் கூறியுள்ளார். அப்படிச் செய்தால்தான் நமது பாட்டாளி வர்க்க அணிக்கும், அரசுக்கும் இந்த விவசாய வர்க்கம் தோள் கொடுத்து துணை நிற்கும், நமது லட்சியத்தை அடையசுலபமாக இருக்கும் என்றும் மார்க்ஸியம் நமக்கு விளக்குகிறது.

மேற்காட்டிய இந்த மார்க்சியப் பார்வையை விவசாய வர்க்கத்தினிடம் இது வரையிலும் எந்த கம்யூனிஸ்ட்கட்சி அமைப்புக் களும் சோசலிச அரசுகளும் முழுமையாக எடுத் துச்செல்லவில்லை என்பதும் மா. சி. கூடம் தெளிவாக்குகிறது இந்த சரியான மார்க்சியப் பாதையை மார்க்சுக்குப் பின்னால் வந்த 2,3,4 அகிலங்களும், பாட்டாளி வர்க்கத் தலைமை களும், கம்யூனிஸ்ட்களும் கைவிட்டு, திரிபுவாத சந்தர்ப்பவாதப்போக்கில் செயல்பட்ட காரணங் களால் இன்று சர்வதேச முழுமைக்கும் பாட் டாளிவர்க்கப் புரட்சி பின்னுக்குத் தள்ளப் பட்டுள்ளது என்பது மா.சி. கூடத்தின் பகிரங்க விமர்சனமாகும்.

6. 'காட்'டின் செயல்பாடு மார்க்சியத் திற்கு வழங்கியுள்ள வாய்ப்பு' என்பதை எவ் வாறு விளக்குகிறீர்கள்?

காட் போன்ற திட்டங்கள் செயல்பாடுகள் எல்லாம் சர்வதேச தன்மையை அடிப்படை யாகக் கொண்டு செயல்படும் சர்வதேச ஸ்தாபனமாகும். மார்க்ஸ் வாழ்ந்த காலத் திலே இந்த முதலாளித்துவம் முறையான கட்டம் கட்டமான வளர்ச்சியைப்பெற்று சர்வ தேசத் தன்மைக்குத் தன்னை இட்டுச் சென்று அடையும்என்றும் அதன்மூலம்தனது பொருளா தார ஆதிபத்தியத்தை சர்வதேசம் முழுதும் கொண்டுவரும் என்றும் மார்க்ஸ் நமக்குத் தெளிவாகக் காட்டிச் சென்றுள்ளார். அவர் காட்டிய பாதையை ஆய்வு செய்து பார்க்கும் போதுதான் இந்த காட் போன்ற செயற் பாடுகளை நாம் சுலபமாக உணர வாய்ப்புக்கள் ஏற்படும் என்று மா.சி கூடம் கருதுகிறது.

காட் திட்டங்களின் மூலம் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தை மிகக் கடுமையாக,



படிப்பகம்

www.padippakam.com

கொடுமையாகச் சுரண்டிப் பிழிவதுடன் நிற்காமல் சர்வதேசத் தன்மைக்கும் ஒரு சவாலான எதிர்நிலையை உருவாக்க இன்றைய முதலாளித்துவ ஏகபோகம் செய்து வருகிறது. இப்படிப்பட்ட இந்த காட் திட்டத்தின் மூலமாக, நம்முடைய பாட்டாளி வர்க்கத்திற்கும் சில வளர்ச்சியைக் காட்டியுள்ளது. அதாவது, பாட்டாளிவர்க்கம் தனது விடுதலை நோக்கி செயல்பட சர்வதேசத்தொழிலாளர்களையும் ஒன்று சேர்த்து பலமிக்க சர்வதேச ஸ்தாபனமாக மாற்ற ஏதுவான சூழ்நிலையை இந்த முதலாளித்துவ ஏகபோகம் காட்டியுள்ளது. தோழர் மார்க்ஸ் காட்டிய அந்த உலகத்தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள் என்ற மகத்தான உண்மைநோக்கி இன்று நம்முடையபாட்டாளி வர்க்கம் வளர்ச்சிப் போக்கில் தள்ளப்பட்டு உள்ளது.

காட் என்பது இன்றைய சர்வதேசம் முழுதும் 100-க்கு 90 சதத்திற்கு மேலே உள்ள விவசாய சிறு துண்டு துண்டான உற்பத்தி முறைகளை ஒட்டு மொத்தத்தில் கடந்த காலத்திய நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையைத் தகர்த்து, அந்த இடத்தில் முதலாளித்துவ ஏகபோகத்தின் பெருவித உற்பத்தியைக் கொண்டு வருவதே ஆகும்.

மா.சி.கூடம் வெளியிட்ட புத்தகங்களிலும், சுட்டிக்காட்டப்பட்ட மார்க்சிய முடிவுகள் எல்லாமே மார்க்ஸ் காட்டிய பாதையை விளக்குவதே அன்றி வேறு சொந்த முடிவுகளும், கருத்துக்களும் அல்ல என்பதைத் தோழமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மா.சி. கூடம் வெளியிட்ட 5 நூல்கள் விவரம்:

1. மார்க்சிய வீச்சில் ஒரு புரட்சி — 1990
2. விமர்சனம்-சுயவிமர்சனம் — 1992
3. கூலி உழைப்பு முறையை ஒழிப்போம் — 1993
4. விவசாய-பாட்டாளியும் வர்க்க விடுதலையும் — 1994
5. முதலாளித்துவஏகபோகமும்(காட்-டங்கல்) பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் கம்யூனிசமும்-1995

ஆகிய ஐந்து நூல்களும்-தோழர் உலகியான் அவர்களால் முழுமையாக மார்க்சிய ஆய்வு செய்து, பின் ஆய்வுக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வெளிவந்த நூல்களாகும்.

தொடர்புக்கு:
கேள்விகள்:ஞானி S.K.G. ஏகாம்பரம்
பொதுச்செயலாளர்,
மார்க்சிய சிந்தனைக்கூடம்,
சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73

# சித்தலிங்கய்யா எதிர்கொள்ளும் சிக்கல்

டி. ஆர். நாகராஜ்

கர்நாடகத்தின் மிகப் பிரபலமான தலித் கவிஞன்-போராளி டாக்டர். சித்தலிங்கய்யா இன்று மிகக் கடுமையான சிக்கலை எதிர் நோக்கி இருக்கிறார். கடந்த இருபது ஆண்டுகளில் தலித் இயக்கத்தை அவர் உருவாக்கினார்; அந்த இயக்கம் அவரை உருவாக்கியது. அவரது 1970-1980-களின் கனல் கக்கும் கவிதைகள் ஒரு தலைமுறைகளின் உணர்ச்சிகளையும், விவேகத்தையும் உருவாக்கியிருக்கின்றன. அவரது கவிதையில் உள்ள அரசியல் கோபம் தலித்இயக்கத்தின் அகவுணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது. அவர் கடந்த காலத் தீவிரத்துடன் இவற்றை இன்று ஆதரிக்காமல் இருப்பது அவரை ஒரு சிக்கலில் தள்ளியிருக்கிறது. பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த கன்ஷிராமின் அரசியல் ஆவேசம் இன்று தலித் மக்களிடையே உத்வேகம் பெறுகிறது. இவரைப் பொறுத்தவரை இந்தப் போக்கு ஒரு முரண் நிலை. ப. ச. க-வில் சேரும்படி நூற்றுக் கணக்கான தலித் போராளிகள் சித்தலிங்கய்யாவை வற்புறுத்தியபோது, 'முடியாது' என்று சொல்லி விட்டார். ஒரு சமூகப் போராட்டத்தை உருவாக்குவதைவிட கலாச்சாரத்தை உறுதிப்படுத்தும் அரசியலை உருவாக்குவதில் அவர் அதிக அக்கறை கொண்டிருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், இந்தக் கவிஞன்-



படிப்பகம்

www.padippakam.com

போராளியின் ஆளுமையில் ஒருவகையான கலாச்சார அரசியல் கருக் கொண்டிருக்கிறது.

பெங்களூர் மாநகரில் ஸ்ரீராமபுரம் பெயர் போன சேரிகளில் ஒன்று. சித்தலிங்கய்யா இந்தச் சேரியைச் சார்ந்தவர். மகடி தாலூகாவில் ஒரு கிராமத்தில் அவரது பெற்றோர்கள் வசித்தனர். சித்தலிங்கய்யா இளம் வயதில் அங்கு இருந்தார். அவர் எழுதிய சுயசரிதம் இன்னும் அச்சாகி வெளிவரவில்லை. அவரது தந்தை அந்த கிராமத்தில் மாட்டுக்குப் பதிலாக நிலத்தை உழுதிருக்கிறார். இந்தமாதிரிக் காட்சிகள் அந்தப் புத்தகத்தில் ஏராளமாக இருக்கின்றன. அவரது முதல் கவிதைத் தொகுப்பில் கிராமம், நகரம் என்ற வேறுபடுத்தல் இல்லை,

இக்கவிதைகள் தீண்டாதாரின் எழுச்சிக் குரலாக அமைந்தன. இந்தக் கவிதைகளில் பெரும்பாலானவற்றை ஸ்ரீ ரா ம பு ர த் தி ன் மயானத்தில், அச்சுறுத்தும் தனிமையில் உட்கார்ந்து கொண்டு எழுதியதாக பின்னர் அவர் தெரிவித்திருக்கிறார்.

வேறுவிதமாகச் சொன்னால், சித்தலிங்கய்யாவின் கவிதையும், அன்றைய தலித் இயக்கமும் ஒன்றை மற்றொன்று உருவாக்கின. அந்த நாட்கள் கர்நாடகத்தில் அம்பேத்காரின் அரசியல் கொள்கை உதயமான நாட்கள் இந்த அரசியல் கொள்கை இந்துமதம், அதன் சின்னங்கள் ஆகியவற்றின் கலாச்சாரத்தை நிராகரிப்பதைப் பெரிதும் வலியுறுத்தியது.

'அவர்கள் இன்னும் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்' என்ற கவிதை சித்தலிங்கய்யாவின் மிகச் சிறந்த கவிதை இது ஒரு காப்பியத் துணுக்கு. கன்னடமொழியில் மிகச் சிறந்த அரசியல் கவிதைகளில் இதுவும் ஒன்று என்று கருதப்படுகிறது. இக்கவிதை அரசு இயந்திரத்தின் மிருகத்தனத்தையும், மக்களை சித்திரவதை செய்யும் பொழுது உபயோகிக்கும் வன்முறைத் தந்திரங்களையும்பற்றிக் குறிப்பிடுகிறது. இந்தக் கவிதையின் நாயகன் தலித் சமூகத்தின் மனச்சாட்சியாக இருக்கிறான். தேசத் தலைவர்கள் தன்னை சித்திரவதை செய்ததை அவனே ஒரு இக்கட்டான கட்டத்தில் விவரிக்கிறான்.

''அவர்கள் என் தலையைச் சுற்றி
நெருங்கினார்கள்
அதை தங்கவாளினால் சிரைத்தனர்
இரத்தம் கொட்டிக் கொண்டிருந்த என்
நெற்றியில்
திரிசூல சின்னத்தை இட்டனர்
என்னைத் தூக்கிலிடப் போவதுபோல
ஒரு வெள்ளைக் கயிற்றை எடுத்தனர்
என் மார்பைச் சுற்றி இறுக்கினர்
அதைப் 'பூணூல்' என்றனர்
என் மார்பிலிருந்து உரோமத்தை
நீக்கிவிட்டு
வெள்ளிக் குத்துவாளால்
துவாரம் செய்தனர்
என்னைச் சுற்றிச் சுற்றி வந்தனர்
இரத்தம் கொட்டும் துவாரத்தில் ஒரு
நாற்றை நட்டனர்.''
நான் கொழுத்து வளர்ந்த
கனமான செம்மறிக்கடா
ஆனால் என் கால்கள் கனமாக இல்லை
நெற்றியில் கண்களோடு
நிர்வாணமாக இரவில் அங்குமிங்கும்
அலைகிறேன்
என்னைத் தெரியவில்லையா?
என் பகைவனே!''

இந்த நீண்ட வர்ணனைக் கவிதை சித்தலிங்கய்யாவின் படைப்பு வாழ்வில் பல வகைகளில் ஒரு திருப்பு முனையாகும். எழுத்தாளனும்-போராளியுமான அவரது பயணத்தில் அடுத்த கட்டம் துவங்கியது. இது அவருக்கு தலித்துகளை அரசியல் மற்றும் சமுதாயக் கோபாவேசத்தோடு மட்டுமல்லாமல் இதர வகைகளிலும் இனங்காட்ட முக்கிய வாய்ப்பை அளித்தது.

மேற்கண்ட பின்னணியில் சித்தலிங்கய்யாவின் 'அவதாரங்கள்' கட்டுரைத் தொகுப்பு 1981-இல் வெளியிடப்பட்டது. தலித் கடவுளர்களுடன் அவர் நடத்திய உரையாடலில் ஒரு முக்கிய கட்டத்தை இது சுட்டுகிறது. இது நகைச்சுவையும், கற்பனையும் கலந்த சுவை மிக்கநூல். இவ்வுத்தி மாண்டு போகும் மனிதர்களுக்கும், இவர்களை ஆட்கொண்டிருக்கும் மரணமிலாக் கடவுளர்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் களைகிறது. இந்த நகைச்சுவை கலந்த உரையாடல்தொனி கடவுளர்களையும் மனிதர்களையும் நிஜமாக்குகிறது.





படிப்பகம்

www.padippakam.com

இத்தெய்வங்களில் பெரும்பாலானவை பெண் தெய்வங்கள். இவை குடிப்பதற்கு 'பிராந்தி' கேட்கின்றன. காரணம் இவை பல நாட்களாகப் பட்டினி கிடந்தவை. இன்னொரு தலித் பெண் தெய்வம் தர்மஸ்தலத்தில் உள்ள தமது சகோதரன் மஞ்சுநாதனுக்கு கோபத்தோடு கடிதம் எழுதுகிறாள். தன்னை இவ்வளவு காலமும் ஏன் கவனிக்கவில்லை என்று திட்டுகிறாள். தர்மஸ்தலம் கர்நாடகத்தில் உயர்சாதியினர் நடத்தும் பிரபலமான புனித யாத்திரைத்தலம். இன்னொரு பெண் தெய்வம் தனக்குக்கோயில் கட்ட வேண்டாம் என்கிறாள். காரணம் தன் ஏழை பக்தர்களுக்கு குடிசைகூட இல்லை. சித்திலிங்கய்யா தலித் பெண் தெய்வங்களின் துன்பங்களையும், துயரங்களையும் வர்ணிப்பதன் மூலம் தலித் மக்களின் அவலத்தைச் சொல்வதோடு, இந்த நூற்றாண்டில் அடித்தள மக்களின் கலாச்சாரத்திற்கான போராட்டம் தோல்வி அடைந்திருப்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

படைப்பாளியும், போராளியுமான சித்தலிங்கய்யாவின் சிக்கல் என்பது இதுதான். தலித்துகளின் கலாச்சார உலகம் பற்றிய அவரது ஆழ்ந்த அறிவும், கற்பனையும் தலித் இயக்கத்தில்அவரது சகாக்கள் கடைப்பிடிக்கும் அரசியலிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. பெண் தெய்வங்களுடன் அவர் நடத்தும் நகைச்சுவையான உரையாடல்கள், தலித் கலாச்சாரத்தை உறுதிப்படுத்தும் அரசியலில் அவர் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்துகிறது. தலித்துகளின் அடையாளத்தை பிராமணீய சமூக அமைப்பிலிருந்து வரையறை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

ப. ச. க. அரசியல் தலித் அதிகாரத்தின் தோற்றத்தைக் குறிக்கிறது. இந்த அரசியலில் தலித் கலாச்சாரத்திற்கு அழுத்தம் தரும் போக்கு இல்லை. சித்தலிங்கய்யா போன்ற கவிஞர்கள் இத்தகைய பிளவில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். இன்றைய அரசியல் சூழலில் தலித் மக்களின் அரசியல் குறுக்கீட்டை சித்தலிங்கய்யாவின் கலாச்சார அழுத்தம் குறைக்கிறது. வளமான கலாச்சார உலகம் என்பதனுள் தலித் மக்களின் பங்கை இன்று இந்து சாதி சமூகம் மறுக்கும் போக்கு அதிகரித்துள்ளது தலித் மக்கள்சக்தி உயர் சாதி இந்துக்களிடம்அச்சத்தையும், கோபத்தையும்தோற்றுவித்திருக்கிறது. சித்தலிங்கய்யா இந்து சாதி சமூகத்திற்கும், தலித் இயக்கத்திற்கும் தீவிரமாக வேறுவகையில் பதிலளிக்க தற்போது முற்பட்டு இருக்கிறார். தமது கவிதை பற்றி அவர் சமீபத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில், 'இதுநாள் வரை அரசியல் இயக்கத்தில் கவிதைகள் வழியே நான் எழுப்பிய முழக்கம் சலிப்புத் தருகிறது. எனக்குள் இருக்கிற கவிஞனுக்கு பல சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. வாழும் உரிமை மனிதனுக்கு மட்டுமே என்று வரம்பு கட்டப்படவில்லை. ஒரு சிறுசெடி, ஒரு சிறுநதி, காற்று, வண்ணத்துப் பூச்சி, பறவை யாவும் வாழ உரிமையுண்டு. புரோகிதர்கள் மட்டுமல்ல ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும், தாங்கள் உயிர் வாழப் போராடிக் கொண்டிருக்கின்றனர்' என்கிறார்.

இது நம்பிக்கையின் ஒரு புது அறிக்கை என்பது வெளிப்படை. இதை கோபமுற்றிருக்கும் தலித் இயக்கம் ஓரளவுக்குத்தான் புரிந்து கொள்ள முடியும். ஆனால் உண்மையான பிரச்னை கவிஞரிடமே இருக்கிறது. அவர் தனது தார்மீகத்தை இறுதி வரை கொண்டு சென்று தலித் இயக்கம் பற்றி ஒரு புது வரையறையை வகுக்கமுடியாதா? இதற்கு கற்பனை மற்றும் அரசியல் ஆகிய இரண்டு தளங்களிலும் அவர் பெரும் பாய்ச்சலை நிகழ்த்த வேண்டியிருக்கும். தற்போதைக்கு சித்தலிங்கய்யாவின் பயணம் பாதி வழியில் நிற்கிறது. ஒரு எழுத்தாளன் ஒரு புதுப்பிறவி எடுப்பதற்கான நம்பிக்கையும், வேதனையும் இதிலடங்கியுள்ளன. இந்த புதுப்பிறப்பு இந்து சாதிசமுதாயத்தை மற்றும் தலித்துகள், அவர்களின் படைப்பு முறைகள்பற்றியபுரிதல்களை மாற்றிக்கொள்ள நிர்ப்பந்திருக்கும்.

குறிப்பு: இக்கட்டுரை இந்தியா இன்டர் நேஷனல் சென்டர் குவார்ட்டர்லி (காலாண்டு குளிர்பருவம் 1994) இதழிலிருந்து நன்றியுடன் சுருக்கமாகத் தொகுத்து தரப்படுகிறது.

தொகுத்தவர்:- தமிழில்:- டி. சி. இராமசாமி,



படிப்பகம்

www.padippakam.com

# நவீனத்துவம் ஒரு முன்னுரை

முனைவர் முப்பால் மணி

†880இல் இங்கு இப்படி ஒரு கருத்து இருந்தது! ''ஜடபதார்த்தத்தைப் பற்றி நாம் அறியக்கூடியதெல்லாம் கூடி நமது இந்திரிய ஞானத்தின் வழியாகத் தோன்றும் உற்பன்னங்களென்றும், இவ்விந்திரிய ஞானத்தில் உண்டாகும் உற்பன்னங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டும் தோற்றுவதால் இவ்வுற்பன்னங்கள் யாவும் ஜடபதார்த்தத்தில் அடங்கியிருக்க வேண்டும் என பூகித்து அறிகிறோம்'' (ஆஸ்திகமத சித்தாந்தம்-137). புலன் உணர்ச்சிகளின் தொகுப்பைக் கொண்டு, புறநிலைப் பொருள்களை பூகிப்பது என்று இப்படியாக நேர்க்காட்சிவாதம் அன்றைக்குப் புதியதாகப் புழக்கத்திற்கு வந்தது. பொருள்கள் மேல் ஒளிபட்டு, கண்ணில் பிரதிபிம்பிப்பதால் அவை தெரிகின்றன என்ற விஞ்ஞானக் கருத்தும் கூடவே அப்போது பரவி வந்தது. ஆன்மாவிலிருந்து ஒளி புறப்பட்டு விழிவழியே வெளியே வந்து பொருள்கள் மேல் படுவதால் அவை தெரிகின்றன என்ற ஆன்மிகக்கருத்து இதனால் வலுஇழக்கத் தொடங்கிருந்தது. அதேசமயத்தில் புலன் உணர்வுகளுக்கு மேலான முதன்மை தரும் நேர்க்காட்சி அனுபவவாதம் அந்த இடத்தில் இங்குப் பரவிக் கொண்டும் இருந்தது. இந்தப்பின்னணியில் 1894இல் ''பொருள்களில் வியாபிக்கும் ஒளி கண்ணுள் பிரதிபலித்ததால் அப்பொருள் தோற்றங்கள் எமக்கு விடயமாகும் என்பிரேல் ஒளி பிரதிபலிக்கும் முகத்தால் அங்ஙனம் பிரதிபலிக்கும் ஒளி கண்ணுக்கு விடயமாகும் எனக் கொள்ளத்தக்கதன்றி, பிரதிபலியாத பொருளும் விடயமாகும் எனக் கொள்ளுமாறு எங்ஙனம்? இனி அதுவும் பிரதிபலிக்கும் எனக் கொண்டாலும், மேலே காட்டியபடி பொருள்தோற்றம் கண்ணுக்குள் அன்றிப் புறத்து நிகழ்தல் கூடாது; இது பிரத்தியட்ச விரோதமன்றே'' (யாழ்ப்பாணம், இந்து சாதனம்-இதழ்) என்று மேற்கூறிய விவாதத்தின் ஊடே இப்படி ஒரு கருத்து திரண்டது! அதாவது பொருளில்பட்டு ஒளிதானே கண்ணில் விழுகிறது! பொருள் அல்லவே! அப்படிப் பொருள் கண்ணில் விழுந்தாலும், பொருளின் தோற்றம் கண்ணில்தானே! புறத்தே அல்ல! என அந்தக் கருத்து நிலைப்பட்டு தொடர்ந்தது!

ஆகப் புறத்தே பொருள்கள் இருந்தாலும், புலன்காட்சிகள், உணர்வுகள் மட்டுமே நம்மால் அறியப்படும்படியாக உள்ளன என்பது இங்கு அன்றிலிருந்து வழக்கிற்கு வந்தது.

இப்போது இன்னொன்றைச் சுட்டிக் காட்டி மேலே தொடர்வோம்!

'பிரத்தியட்சம்; யதார்த்தம், சந்தேகம், விபரீதம் என மூவகைப்படும். அவற்றில் கயிற்றைக் கயிறு என்பது யதார்த்தம், கயிறோ அரவோ என்பது சந்தேகம், அரவு என்பது விபரீதம்'' (துவிதாத்துவிதவாதம்-21). இப்படி மத்திய காலத்தன்மையான பரிசீலனை இங்கு மக்களிடையே ஜனரஞ்சகமாக இருக்கும்போது நேர்க்காட்சி அனுபவ வழியான புலன்காட்சி இங்கு ஆட்சியில் இருந்து கொண்டிருந்தது இது உலகாயதம் அன்று! அதே நேரத்தில் அப்போதிருந்த உலகாயதம் உலகப் பொருளிலிருந்து மனிதருக்கு அறிவு ஏற்படுகிறது எனப் பேசினாலும், எப்படி ஏற்படுகிறது என விவரிக்க அதனால் இயலவில்லை. பொருளிலிருந்து மனிதருக்கு அறிவு ஏற்படுகிறது என அனுமானித்தே சொல்வதாகக் கூறினர். அதாவது இன்றைக்கு அவர்கள் கூறும் பிரதிபலிப்புக் கொள்கை, அன்று அவர்களிடையே கைவரப் பெற்றிருக்கவில்லை! அதே சமயம் புலன் அனுபவ வாதத்தையும் அனுசரிக்கவில்லை. (தத்துவவாதம்-1891)!

1865இல், புராதன பொதுவுடமை சமூகம், வேட்டை வாழ்வு ஆடு மாடு மேய்க்கும் வாழ்வு. பிறகு தனிச்சொத்து-சுவத்துவம் ஆகியன நடப்புக்கு வந்து அரசு போர்கள், ஏற் பட்ட விதம், பயிர்த்தொழில் குடிகள் நிலைப்பட்ட விதம் என்ற வழியில் தனிச்சொத்தின் பொருளாதாரம் விளக்கப்பட்டது (தத்துவ போதினி, டிசம்பர் இதழ்). பாதகன் பணத்திற்காக ஏதும் செய்வான் பணத்திற்காக கிழப்பிணம் துடிக்கிறது என்றபடியாக மூலதனமும்



படிப்பகம்

திரண்டது (மகோன்மணியம்-1891). இந்தப் புறச்செய்கையாலும், அகத்துடிப்பாலும் நேர்க் காட்சி மற்றும் அனுபவவாதங்கள் வளம் பெற்றன.

இவைகளில் புறப்பொருளும், புலன் உணர்வும் பிளவுபட்டுப் பிரிந்து போனதை நினைவுகூர்ந்தும் தனிச்சொத்து பற்றிய பேராசை வாழ்வுணர்வு உள்ளோட்டமாகத் திகழ்வதை முன்னிட்டுக்கொண்டும் மேலும் தொடர்வோம்!

இந்நிலையில் 'தன்னை' மையமாகக் கொண்டு சிந்தித்து, செயல்படும் தனிமனித தன்னயநோக்கம் பெரிதாகிக்கொண்டே வந்தது. சுவார்த்தம் எனத் திலகர் இதனை அழைத்தார். 1907இல் இம்மாதிரியான ஓர் அறிவுரை ஆட்சிக்கட்டிலில் இருந்த கிறித்து வத்துறையிலிருந்து வந்தது: ''மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று கவனிக்கவேண்டாம். உமதுவேலையை மாத்திரம் பாரும். ஏனெனில் இதற்காக மாத் திரம் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்'' (செந்தமிழ்-1907 ஜுன் இதழ்). இந்தமாதிரியாக உலகைப்பயன்வழியில் நோக்குவதையும், தன் வாழ்வை மட்டும் முதன்மைப் படுத்திய வேட்கையையும் கொண்ட தேர்வு சுதந்திரமும், தனி மனிதமும் அகவயப் பிளவை இங்கே முன்னிறுதித்யது. இதுவும் கிறித்தவத் ‧ றையிலிருந்தே 1908 ஆம் ஆண்டில் பேசப்பட்டது; ஆன்மா கடவுளின் பிரதிபிம்பமாகவும் இருக்கிறது, அதனுடன் நமது ஆன்மாவில் பசாசம் (பாப அழுக்கு) குடிகொண்டு காலால் உதைக்கின்றது'' (செந்தமிழ் கீலக, புரட்டாசி இதழ்) அப்படியான அகவயமான இரட்டை நிலைக்குப் பூர்விக பைபிளில் ஆதாரம் இல்லை. இந்திய உலகாயதத்திலும், புறவயபிரம்மம் பேசும் இந்திய வேதாந்தத்திலும் ஆதாரம் இல்லை. இப்படியாக இங்குப் பிளவுபட்ட ஆன்ம சரிதம் தொடங்கி, உன்னோடு குடியிரு என ஆலோசனைகூறி உன்னை நீயே அறிந்து கொள் என அகவயத்தேடலுக்குக் கிறித்தவத் துறை கட்டியம் கூறியது (மேலது).

தனிமனிதன் சுயாதீனமானவன், அவன் செயலுக்கு அவனே உத்திரவாதி, ஜவாப்தாரி, அவன் அகவயம் சுதந்தரமானது என்ற கருதுகோள்களோடு இந்தத்தேடல் தொடங்கியது.

இந்நிலையில் ''தன்னோடு'' தொடர்பற்ற சமூக மரபுகள், பாரம்பரியம், வரலாறு பயனற்றுப் போயின. முறைப்படுத்தப்பட்ட எதுவும் விலங்கும், சிறையும் ஆயின. புறநிலை உலகு உறவு தன்மீது பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதே சுதந்திரத்திற்கு முரண் ஆனது. இதனால் சகலமும்தான் அல்லாததும், தனக்குப் பகைமலிந்த எதிரானவை ஆயின.

முன்னே சொன்னோமே, இனக்குழு ஆடு, மாடு மேய்ப்பு, உழவு, மூலதனவாழ்வு என்ற சமூக வரலாறு, அது உலகாயதத்தால் 1935 இல் பொருளாயத விளக்க உரைகளுக்குட்பட்டு வரலாற்றுப் பொருள் முதல்வாதமாக இங்கும் விளக்கம் பெற்றது. இதனோடு கூடவே புறப்பொருள், உணர்வு இவைகளின் உறவில் செயலின் உறுதி. பரஸ்பர பாதிப்பு, பிரதிபலிப்பு நிலை ஆகியவற்றைக்கொண்டு எதார்த்தவாதம் மேலேழுந்தது. இது பிரத்தியட்சத்திற்குச் சமமாக அகவயக்காட்சி கொள்ளுவது தான் எதார்த்தம் என்ற அனுபவவாதம் அல்லாதது. பிரத்தியட்சத்தின் மரபு, பாரம்பரியம், வரலாறு, வாழ்வியல் தேவை ஆகியவற்றைக்கண்டு, அதன்மேல்கொள்ளப்படும் திட்டமும், செயலுமாகத் திகழும் பிரதிபலிப்பு அடிப்படையாக அந்த எதார்த்தவாதம் அமைந்தது. இதனால் பிரத்தியட்சம், எதார்த்தம், சந்தேகம், விபரீதம் என்று கயிறு, அரவு சான்றுகள் கொண்டு சென்ற நூற்றாண்டில் மரபுவழியில் பேசிய சங்கர அகவய அத்வைத வழியில் வந்தவர்களும் 1970களில் பிரத்தியட்சம், குறியீடு எனப்புதிய பேச்சு பேசத் தொடங்கினர். பிரத்தியட்ச, எதார்த்த வாதங்களை மறுத்துக்குறியீட்டை கிறித்தவப் படிப்பாளிகளும் கூட ஓங்கிப் பேசினர்! இப்போது பொருளுக்குச் சமமாக ஏற்படும் நேர்க் காட்சிவாதத்தின் அனுபவவாதத்தை மறுக்கின்றனர்; பிரத்தியட்சத்திற்குச் சமமாகக் கொள்ளும் இந்த அகவயக்காட்சி அனுபவ வாதத்தைச் சைவத்துறையினர்தான் உயர்த்திப் பேசினர்; இதுசார்ந்ததன் வண்ணமாதலின் பாற்பட்டதும் ஆகும் (முவ; இலக்கியத் திறன்; அ. ச. ஞ; இலக்கியக்கலை). இப்படி மறுக்கும்போதே உலகாயத எதார்த்தவாதத்தையும் மறுப்பதாக அகவய அத்வைதிகளும் கிறித்தவப்படிப்பாளிகளும் அகவயக் குறியீடு

www.padippakam.com

க்ளை எதார்த்தம் எனவும், பிரத்தியட்சம் புறநிலை-என்பதைக் குறியீட்டின் வடிவம் எனவும் விளக்கம் தருகின்றனர். இப்படித்தருவதன் மூலம் எதார்த்தவாதம் என்ற ஒன்று இல்லை எனக் கூறி சுதந்தரம் தந்து தனிப்பட்டதை எல்லாமாகதாக்கி, அனைத்தையும் நிகழ்காலத்தில் உட்படுத்திக்கொண்டுள்ளனர். இது இன்றைய நவீனத்துவவாதம். இப்படியாக அகவயப்பிளவு மேலும் ஆழமாகி, தன்னோடேயேதான் குடியிருக்கும் பிரயத்தனம் கருத்தியலாகி உள்ளது; குறியீடுகள் மூலம் அதனை அதுவே அறிய ஏற்பாடு செய்துகொள்ளுகிறது. இதோடுமட்டும் நிற்கவில்லை? அமைப்புமையவாதத்தினுடைய வலதுகை உறவிலும் திளைக்கிறது! வாழ்க!

● ● ●

# தற்கால இலக்கியம்

## வாசக பார்வை

க. பூர்ணசந்திரன்

குறிப்பு:- அண்மையில் வெளிவந்த நண்பர் வேத சகாயகுமார் அவர்களின் கட்டுரைத் தொகுப்பு பற்றி இங்கே இரண்டு திறனாய்வுகள் வெளியிடப் படுகின்றன.

வேதசகாய குமாரின் தற்கால இலக்கியப் பார்வைகள் இருவகையான அதிர்ச்சிகளை அளிக்கின்றன. (1) அவரது மதிப்பீடுகள் தரும் அதிர்ச்சிகள் (2) அந்த மதிப்பீடுகளுக்கு வர அவர் பயன்படுத்தும் அளவு கோல்கள் தரும் அதிர்ச்சிகள். அவரது புத்தகத்தில் எட்டு கட்டுரைகள் உள்ளன. 'படைப்பாளியும் வாழ்க்கையும்' என்னும் கடைசிக் கட்டுரை தவிர ஏனையவை நேராகவே இன்றைய தமிழ்ப் படைப்புகள் சிறுகதைகள், நாவல்கள் பற்றிய கருத்துகளை முன் வைப்பவை.

கடைசிக்கட்டுரை, பாரதியாரைப்பற்றியது பாரதியை சமீபகாலங்களில் ஹிந்துமகாசபை அல்லது விசுவ ஹிந்துபரிஷத்தைச் சேர்ந்த ஓர் ஆளைப் பார்ப்பது போன்ற பார்வை வளர்ந்திருக்கிறது. பாரதி இந்துமதச் சார்பாகவோ பார்ப்பனியம் சார்பாகவோ நின்ற ஒரு 'இந்துத்துவ' வாதி அல்ல என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை நேர்மையான கல்வியாளர்களுக்கு இருக்கிறது. அதனைச் செய்வதோடு, ஒடுக்கப்பட்ட மக்கள் மீது பாரதி கொண்டிருந்த அக்கறையினையும் காட்டுகின்றது. அவ்வகையில் இது ஒரு நல்ல கட்டுரை.

பிறகட்டுரைகளில், வேத சகாயகுமார், திரும்பத்திரும்ப ஒரே மாதிரியான வாக்கியங்களில், மாறாமல் ஒரு சில மதிப்பீடுகளை முன் வைக்கின்றார். (ஒரே மதிப்பீட்டை அவர் சொல்லட்டும்: அதற்காக அதே வாக்கியத்தையுமா பல்வேறு கட்டுரைகளில் பயன்படுத்த வேண்டும்? இதற்கு அவர், இவை பல்வேறு இடங்களில் வாசிக்கப்பட்டவைஎன சமாதானம் கூறலாம். அப்போதும் இது குற்றந்தான்; மேலும் புத்தகமாகத் தொகுக்கும்போது செம்மையாக்கம் -editing- செய்வதில் கொஞ்சங்கூட அக்கறை காட்டவில்லை என்பதையும் காட்டுகிறது).

1. சுவையான வாழ்க்கைத்துணுக்குகளை எழுத்தில் வடிப்பது என்ற கீழான நிலைக்குக் கு.ப.ரா.வின் யதார்த்தமரபு தாழ்வடைந்தது. (ப.12)

2. அவரது பின் வந்தோர் (followers) எம். வி. வெங்கட்ராம், கரிச்சான் குஞ்சு (ப.12)

3. கு.ப.ரா.வின் யதார்த்தம் சுவையான வாழ்க்கைத் துணுக்குகளைப் பரபரப்புடன் எழுத்தில் வடித்தெடுக்கும் நிலைக்குத்தேய்ந்து இன்று நொறுங்கிக் கொண்டிருந்தது (ப.16)

4. வெட்டி எடுத்த வாழ்க்கைத்தோற்றத்தைப் பரபரப்பான மொழியில் உருவாக்கி ஜெயகாந்தன் ஒரு புதிய கோணலைத்தோற்றுவித்துக் கொண்டிருந்தார் (ப.16, ப.17) (ப.27)

5. வாசகக் கவர்ச்சியைக் குறியாகக் கொண்டு சுவையூட்டப்பட்ட வாழ்க்கைத்துணுக்குகளைக் கதையாக்கிக் கொண்டிருந்த ஜானகிராமன் (ப.16—17) (ப.27)



படிப்பகம்

www.padippakam.com

6. உயிர்த்துடிப்பான படைப்புகளையே படைத்துக் கொண்டிருந்த சுந்தரராமசாமி (ப.17) (ப.27)

7. அசோகமித்திரன் கணக்கற்ற பிள்ளையார் சிலைகளைச் சற்றும் பிசிறில்லாமம் வடித்தெடுக்கும் ஜப்பானிய இயந்திரம் (ப.35)

8. ரகுநாதனோ புதுமைப்பித்தனைப் பிரதி செய்ய முயன்று தனிக் குணமற்ற பிரதிகளை உற்பத்தி செய்தவர். (ப.54)

9. அக உலகக் கலைஞனான மௌனியே மனித மதிப்பீடுகளின் சரிவில் பெரும் துக்கம் கொண்டவர்தான். (ப.68)

10. தமிழ்ப் படைப்புலகில் கி. ராஜநாராயணன் தலைமையிலான சுற்றுலா வழிகாட்டி பணியிலிருந்து...(ப. 77)

இந்த மதிப்பீடுகளை நான் இங்குச் சுட்டிக் காட்டுவதன் காரணம், இவற்றுடன் நான் ஒரு பகுதியேனும் உடன்படவில்லை என்பது தான். தரமதிப்பீடுகள், சரியான, பிறர் ஏற்றுக் கொள்ளக்கூடிய தர்க்கம் வாய்ந்த அளவுகோல்களைக் கொண்டிருந்தாலுமேகூட, பெருமளவு குறையுடையவை தான். ஓரளவு உயர் எழுத்துக்களையும், மதிக்க வேண்டிய படைப்புகளையும் சுட்டிக் காட்டும் அளவில் தரமதிப்பீடுகள் பயன்படுமே அன்றி, க.நா சு. செய்தது போல இது நெம்பர் 1, இது நெம்பர் 2 எனக் காட்டுவதற்கோ, வேதசகாய குமார் போன்று குறை காண்பதற்கோ அதுபயன்படாது. மேற்கண்ட பத்துஎழுத்தாளர்களில் சுந்தரராமசாமி, மௌனி தவிர பிற எண்மரும் குறை காணப் படுவோர். ஆனால் அவர்களது எல்லாபடைப்புகளும் மோசமானவையும் அல்ல; தமிழ் இலக்கிய உலகிற்கு இவர்கள் அனைவரும் கணிசமான பங்களிப்புத் தந்தவர்கள். எனவே இப்படி ஏதோ ஒரு வாக்கியத்தை ஆங்காங்கு தூக்கிப் போட்டு இவர்களைத் தரக் குறைவாகப் பேசுவது விமர்சனமாகாது. விமர்சனத்தில் முடிவுகள் முக்கியமற்றவை. அதன் அடிப்படையில் இயங்கும் தர்க்கப் போக்கே, சிந்தனையே, அழகியல் கோட்பாடே முதன்மையானது. இங்கோ, தர்க்கமில்லை, சிந்தனை கோட்பாடுகள் இல்லை. வெறும் முன் முடிவுகள் (Prejudices) மட்டுமே இருக்கின்றன. இப் புத்தகத்தில் வேதசகாய குமாரின் மதிப்பீடுகளை இரண்டு மூன்று வாக்கியங்களில் சுருக்கி விடலாம். புதுமைப்பித்தன்-மௌனி-சுந்தரராமசாமி மட்டுமே உன்னதக் கலைஞர்கள். வண்ணதாசன், நாஞ்சில் நாடன், அம்பை, ஜெயமோகன் போன்றோர் அவர்கள் வழி நடப்பவர்கள்; வழிதவறியவர் கோணங்கி: பிறர் அனைவரும் மோசமானவர்கள்: சமீபத்தில் வெளிப்பட்ட இமையம் சரியானவழியில் வந்துவிட்டார்.

சரி—இம்மாதிரி மதிப்பீடுகளுக்கு வர வேதசகாயகுமார் என்ன அளவு கோல்களைக் கையாள்கிறார்?

1. படைப்பு = வாழ்வு (முன்னுரை)

2. படைப்புடனான நேர்மையான உறவில் தான் வாசகநிலை பொருளுடையதாகிறது (Vi)

3. வாழ்க்கை (படைப்பில்) ஒரு படைப்பாளியால் ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கை(Vi)

4. (தன்னிலிருந்து வெளிப்படுத்த எதையாவது) கொண்டிராத படைப்பு கண் மொழிக்குச் சுமை, (Vii)

5. இவற்றிற்கு விடைதருவதின் மூலம்... பணியாற்றுகிறான் தேர்ந்த வாசகன் (VII)

6. தமிழில் இலக்கிய வாசிப்பு படைப்பிற்குப் புறம்பான காரணங்களால் தான்... தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

7. இலக்கியமும் வாழ்வும் வெவ்வேறல்ல (ப.3)

8. வாழ்க்கை இலக்கியமன்று, வாழ்க்கை முடிவடைகின்ற இடத்தில் இலக்கியம் ஆரம்பமாகிறது—(இது கு. ப. ரா.வின் சிந்தனைக் குழப்பம்)-(ப.5)

வேதசகாய குமாரின் ஆதார வார்த்தைகள் அனுபவம், அதனை நேர்மையாகப் பதிவு செய்தல் (எழுத்தில்) என்பவை. இவற்றைத் தான் நாம் முதலில் ஆராய வேண்டும் அனுபவம் என்பது என்ன? நடத்தை உளவியலாளர்



படிப்பகம்

www.padippakam.com

முதற்கொண்டு தத்துவஞானிகள் பலர்பல்வேறு விதமாக விளக்கம் சொல்கின்ற வார்த்தை இது உதாரணமாக, நிகழ்வுவாதிகள் (Phenomenologists) 'வாழ்ந்து பெற்ற அனுபவம்' (Lived experiene) என்பார்கள், அதுமாதிரியா? அனுபவம் என்பதை எவ்விதம் நிர்ணயிப்பது? எப்படி பதிவு செய்வது? இது. அனுபவம் என்ற உயிர்த்துடிப்பான ஒன்றையும் எழுத்து என்ற உயிரற்ற பொருள் ஒன்றையும் காட்டும் இருமைக் கோட்பாடு. இது சித்து - அசித்து (சடம்) எனக்காலங்காலமாகப் பேசப்பட்டு வரும் இருமைநிலைதான். சரி, சித்தினை அசித்தால் - அனுபவத்தை எழுத்தால் இணைப்பது எவ்வாறு? உயிர்ப்பை (breath) உயிர்ப்பற்ற எழுத்து (நூல்-Fabric-text) டன் இணைக்கும் போது உயிர்ப்பற்றுப் போகாதா? நேர்மையாக எதிர் கொள்வது, பதிவு செய்வது எவ்வாறு? இதனைச்சிக்கலற்ற எளிமையான ஒருசெயலாக வேதசகாயகுமார் போன்றோர் காண்கின்றனர். பிரச்சினையே என்னவென்றால், இது எளிமையான, சிக்கலற்ற செயலன்று என்பதுதான். நினைத்ததை எழுத்தில் பதிவு செய்துவிட முடியுமா? எழுத்து அதனைத் தடுப்பதில்லையா? வாசகன் 'நேர்மையாக' எழுத்துடன் உறவு கொண்டு விட முடியுமா? அவனது ஆழ்மன முன் முடிவுகள்- பிறந்த கணத்திலிருந்தே ஏற்பட்டவை- அதனைத் தடுக்கவில்லையா? கோட்பாடுகள் என்பவையே, இவை எளிமையாகத் தீர்மானிக்கப்படுபவை அல்ல என்பதிலிருந்துதான் உருவாகின்றன. ஆனால் வேதசகாய குமாரோ 'புத்தம்புது விமர்சனக் கோட்பாடுகள் மீது எனக்கு அக்கறை இல்லை' என்கிறார். இது எப்படிச்சாத்தியமாயிற்று? கோட்பாடு இல்லை அதன் மீது அக்கறையில்லை என்பதே ஓர் அரசியல் அல்லவா? அரசியல் வாசிப்பற்ற (வே.ச. குமாரின் வார்த்தையில் 'படைப்பிற்கும் எழுத்துக்குப் புறம்பான') ஏதேனும் ஒன்றை அவர் காட்ட முடியுமா?

படைப்பும் வாழ்வும் ஒன்றெனக் கூறிவிட்டு அதற்கு முரணான கருத்துகளையே முன் வைக்கிறார் வே. ச. குமார் 'படைப்பாளியால் ஒழுங்குபடுத்தப்பட்ட' வாழ்க்கை எப்படி உண்மையான வாழ்க்கை ஆகும்? பின் அதில் நேர்மை எங்கிருந்து வருகிறது? (தேர்வுகள் வெவ்வேறாகின்றன என்பதைத்தவிர?) கு. ப. ரா. வும் பு.பி.யும் கோட்பாட்டளவில் முரண்படுவதாக எனக்குத்தோன்றவில்லை, படைப்பு வேறு வாழ்க்கை வேறு என கு.ப.ரா. சொல்வதும், 'கதையில் கல் உயிர் பெற்று மனிதத் தன்மை அடைந்து விடும்... மூட்டைப்பூச்சிகள் அபிவாதமே சொல்லும்' என்றெல்லாம் பு.பி. சொல்வதும் ஒன்றே தான்.

படைப்பு=வாழ்வு என்பதைச் சற்றேனும் ஒப்புக்கொள்ள முடியாது. படைப்பு நிலையில், சற்றே தீவிரத்தன்மையில் எழுத்தாளன் மாறுபடுகிறான் என்றுதான் சொல்ல முடியும். அப்போது மட்டும் தான் பிறசமயங்களில் வெகு சாதாரண உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்படும் சாதாராண மனிதனுக்கும் கலைஞனுக்கும் வேறுபாடில்லை. படைப்பு=வாழ்வு என்று சமப்படுத்துவதாலேயே பல தவறுகள் உருவாகின்றன. 'இலக்கிய ஊழல்கள்' 'விமர்சன ஊழல்'களில் சேற்றை வாரி இறைத்துக் கொண்ட ஞாபகம்எனக்கு வருகிறது 'உன்னதமான இலக்கியத்தை இரசிக்கின்ற ஒருவர் கீழான திரைப்படத்தைத் தேடிச்சென்று பார்த்தார்' என்பது போன்ற கூற்றுகள் நினைவுக்கு வருகின்றன. படைப்பு=வாழ்வு என்பதற்கு உதாரணமாக, வே. ச. குமார் போற்றும் சுந்தராரமசாமியையே கூட எடுக்க முடியாது. காரணம், சு.ரா. தமது யதார்த்தத் தொடர்பு கொண்ட, தமது தொழிலான, துணிக்கடை அதன் நிர்வாகச் சிக்கல்கள்- அதில் ஏற்பட்ட மனநோவுகள் போன்றவற்றை ஒரு போதும் தம் எழுத்தில் பதிவு செய்ததேயில்லை. அவர் பதிவு செய்தவை வேறுவிதமானவை.

இது ஒரு புறமிருக்க, வாழ்க்கை, அனுபவம் உன்னதம் என்றெல்லாம் அதீத (transcen-dental) அடிப்படைகளை (categories) கொண்டு எப்படி இலக்கியப் படைப்பின் தரம்-தரமின்மைகளை நிர்ணயிப்பது? இவற்றை விட்டு படைப்பின் - fabric-இன் இழையாக இயங்கும் மொழி சார்ந்த அளவு கோல்களுக்கு வராமல விமர்சனம் செய்வது சாத்தியமற்றது.

தன்னிலிருந்து வெளிப்பட எதையாவது கொண்டிராத படைப்புகள்- என ஏதாவது உண்டா? இவற்றை நீக்குவதுதான் விமரிசகப்பணி என்றால், காலத்தில் எது மிஞ்சும்? சிலப்பதிகாரம் ஒரு சமணப்பிரதி - அது சைவ



படிப்பகம்

னான எனக்கு எதையும் வெளிப்படுத்தவில்லை ஆகவே அதை அழித்துவிடு; சங்க இலக்கியம் சோத்துப்பாட்டு ,ளின் தொகுதி; நவீன உலகில் வாழும் எனக்கு அது தேவையில்லை; அதற்கு விடை கொடுத்து விடு—இப்படி வாசகன் இயங்க ஆரம்பித்தால் (ப.vii) இறுதியில் எந்த மொழியிலும் இலக்கியம் என என்ன மிஞ்சும்? இது தான் வேத சகாயகுமார் பார்வையின் கோளாறு.

வேத சகாயகுமாரின் நல்லெண்ணம் பாராட்டுக்குரியது. ஆனால் 'அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்' மறத்திற்கும் அன்பே-நல்லெண்ணமே காரணமாகிவிடுகிறது இந்தப் புரிதல் அவருக்கு இருக்கின்றதா இந்த நூலில் என்பதுதான் பிரச்சினை. பிரச்சினை இல்லை என்றால் எதுவுமேபிரச்சினை இல்லை வாழ்க்கை, எழுத்து, பதிவு செய்வது தூய வாசிப்பிற்கு உட்படுத்துவது—எதிலுமே பிரச்சினையில்லை. .பிரச்சினை என்றாலோ, எல்லாமே பிரச்சினை தான். வாழ்க்கை என்பது என்ன? படைப்பு என்றால் என்ன? வாழ்க்கையைப் படைப்பில் பிரதிபலிக்கவோ கொண்டு வரவோ பதிவுசெய்யவோ முடியுமா? இவை யாவுமே பிரச்சினைகள் தான். வேதசாய குமார் மேலோட்டமாகச் சில கருத்துகளைப் பிடித்துக் கொள்கிறார்; பிரச்சினைகளுக்குள் காலடி எடுத்துவைக்கப் பிடிவாதமாக மறுக்கிறார் அல்லது பயப்படுகிறார் (கோட்பாடுகள்!) கடைசியாக எஞ்சுவது க.நா.சு. பாணியிலே செயல்படும் அவரது பரிந்துரைகள் தான்.

இலக்கியத் துறையிலும் பரிந்துரைகள் தேவையாகத்தானே இருக்கின்றன? இருக்கட்டும் வேதசகாய குமாரின் நேர்முகப் (Poritive) பரிந்துரைகளை மட்டும் ஏற்றுக் கொள்வோம்.

● ● ●

## ஜே. மஞ்சுளாதேவி

புத்தகம் பூராவையும் படித்து முடித்தபின் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் கூறவருவதை ஒரு வரியில் சொல்ல வேண்டும் என்று யாராவது என்னைக் கேட்டால், நான் இப்படித் தான் சொல்லுவேன்: 'கதை சொல்லி என்பவன், ஒரு படைப்பாளியாக இருக்கக்கூடாது, இலக்கிய வாதியாக இருக்கக்கூடாது, எழுத்தாளனாக இருக்கக்கூடாது. அவன் ஒரு கலைஞனாகத்தான் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றார் குமார்.

'இந்த நூலில் குமார் செய்துள்ளதைப் பின்வருமாறுதான் நான் புரிந்து கொள்கிறேன். 'சில வார்த்தைகளின் மீது அளவு கடந்த நம்பிக்கையை வைக்கிறார், புனிதத்தைப் போர்த்தி விடுகின்றார். அந்த வார்த்தைகளை உச்சரித்தாலே போதும், வாசகனுகுத் தான் சொல்ல வந்த கருத்தைச் சொல்லி விட்டதாக நிறைவு கொள்கின்றார் குமார். கலைஞன் என்ற சொல்லும், மரபு என்ற சொல்லும் இவ்விதமாய் இவரிடம் அடிக்கடி பயன்பாடடைகின்றன. இவ்விதமான வார்த்தைகள் எல்லாம் புனிதமானவை என்ற கருத்தை உண்டாக்கியபின், இவைகளை அடுக்கி, அடுக்கி ஓர் உயர்ந்த நாற்காலியை முதலில் தயாரித்து முடிக்கின்றார். அடுத்ததாய் இதில் உட்கார நீ தகுதியானவனல்ல, என்று ஒவ்வொரு வரையாய்த் தள்ளிவிட்டபின், சுந்தர ராமசாமியை அதில் உட்கார வைக்கிறார். சொல்லப்போனால் ஒரு பெரிய அரசவையை உருவாக்குகின்றார். பேரரசர் நாற்காலியை எந்தவிதச் சந்தேகமுமின்றி சுந்தர ராமசாமிக்குத் தந்து விடுகின்றார். பேரரசர்க்குக் கட்டுப்பட்டு நிற்கும் குட்டிக் குட்டி சிற்றரசர்களாக ஜெயமோகன், வண்ணதாசன் போன்றவர்களைச் சுற்றிலும் உட்கார வைக்கின்றார். அரண்மனைச் சுவற்றில் மாட்டப்படும் முன்னாள் அரசனின் மதிப்புமிக்க நீர் ஓவியமாகப் புதுமைப்பித்தனுக்கும் இட ஒதுக்கீடு செய்துவிடுகின்றார்.

www.padippakam.com

கட்டுரைகள் அனைத்தும் என் வாசக அனுபவங்களே என்று நூலாசிரியர் சொல்வதைப் பார்த்ததும் ஏதோ ஒன்றிலிருந்து, இவர் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காகத்தான் இப்படி நழுவுகிறார் என்று யாராவது நினைத்தால் அவர் ஏமாந்து போவார். ஏனென்றால், 'வாசகன் என்பவனுக்கும் இவர் தனியே ஓர் உயர்ந்த நாற்காலியைத் தயாரித்துள்ளார். இதை புதுமைப்பித்தனுடைய 'வாழையடி வாழையாகப் பிறந்த ஒரு வாசகனின்' நீட்சியாகவே கொள்ளலாம்.

வாசகன் நேர்மையும் அனுதாபமும் கொண்ட வாசிப்பை நிகழ்த்த வேண்டும் என்கின்றார். அனுதாபம் என்பதற்குப் 'பரிதாபம்' என்ற அர்த்தத்திற்கு அடுத்த நிலையில் உள்ள அர்த்தத்தை ஏற்றினாலும் கூட நேர்மை, அனுதாபம் என்ற இரண்டும் ஒரு கோட்டுக்குள் வந்துவிடும் விசயமாக எனக்குத் தோன்றவில்லை. மேலும் ஏன் இவர், மௌனி, விமலாதித்தமாமல்லன், பெருமாள் முருகன்-இவர்கள் மீதெல்லாம் ஏன் அனுதாபமான வாசிப்பைக் காட்டவில்லை?

இலக்கிய வாசிப்பு குழுவின் கூட்டுச் செயல்பாடாக இருக்க முடியாது என்கின்றார். வாசிப்பு என்பது மனம்சார்ந்த விசயம்தான். சில வாசிப்புகளில், சில சூழல்களில் அர்த்தமும் கனமும் கூடக்கூடும். உதாரணமாக நிகழ் 31-ல் வந்த ஒரு கட்டுரையில் காணப்பெறும் ஒரு விசயம்-டாக்டர் எம்.கங்காதரனின் கட்டுரை. அறிவுக்கதீதமான ஒரு வித நம்பிக்கை இல்லாமல் எந்தக் காலத்தையும் நடத்த முடியாது என்பதைச் சொல்ல வருமிடத்தில், ஒரு தோழரின் இறப்பைச் சுட்டுகின்றார். கலவரத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட குண்டுகள் எதிர்பாராத விதமாக வெடித்து அதனால் கிசான் தொம்மன் என்ற தோழர் இறந்து விடுகின்றார் அப்போது - பிணக் குழியின் தலைமாட்டில் நின்று மாவோவின் ஒரு கட்டுரையை ஒன்று கூடி வாசிப்பது என்று முடிவெடுக்கின்றனர்.

''குன்றின் அமைதியில் மாவோவின் கட்டுரையும் உறுதிமொழியும் எதிரொலித்தன. அந்தக் கட்டுரை எனக்கு ரொம்பப் பழக்கமானது. மனப்பாடமும் கூட. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் எந்தச் சுயநலமுமின்றி தன்னைச் சமர்ப்பித்துக் கொண்ட அந்த விவசாயத்தோழரின் கடைசி நிமிடங்களில் வாசித்தபோது அன்று வரை அறியாத ஆழமான பொருள் அக்கட்டுரைக்கு உண்டென்று தெரிந்தது'' என்று அனுபவத்தைக் குறிப்பிடுகின்றார். ஆனால் குமார் இது போன்றவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அறிவுத்தளத்தில் இயங்கும் தனிமனிதனின் ஒற்றைத்தட வாசிப்பையே வாசிப்பு என்கின்றார். தான் பெற்ற தமிழ் இலக்கிய நூல்களின் இப்படியான வாசிப்பு அனுபவங்களைக் கட்டுரை வடிவில் முன் வைக்கின்றார். சங்கப்பாடல்களில் பெரும் பகுதியும் 'சோத்துப் பாட்டு' என்று இவர் குறிப்பிடுவது போல, அவரின் பெரும்பாலான கட்டுரைகள்-கருத்தரங்கக் கட்டுரைகள். எட்டுக் கட்டுரைகளை முன் வைக்கின்றார். குறத்திமுடுக்கு, சதுரங்கக் குதிரை, கோவேறுகழுதைகள் என்ற நாவல்களைப் பற்றியும், சுந்தர ராமசாமி, வண்ணதாசன் படைப்பாளிகள் பற்றியும், சிறுகதை உலகம், தலித் இலக்கியம், படைப்பாளியும் வாழ்க்கையும் என்ற மூன்று பொதுக் கட்டுரைகளையும் தருகின்றார்.

''எல்லோரும் இதனை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற பிடிவாதம் எனக்கில்லை. மறுக்கவும் செய்யலாம். ஆனால் என் எழுத்தை நீங்கள் பொருட்படுத்த வேண்டும் என்று மட்டுமே கேட்டுக் கொள்கின்றேன்'' என்கின்றார். தேவசகாய குமாரின்? இந்தக் கூற்றிற்கும்,

'எவ்வளவு பலவீனமாய்
என் குரல் ஒலித்தாலும்
கவனி...

நாம் பேசியாக வேண்டும்' என்ற கூற்றிற்கும் உள்ள வேறுபாட்டை அல்லது ஒற்றுமையை நாம் உணர முயற்சி செய்ய வேண்டும். 'நான் பேசுவதை நீ மறுக்கவும் செய்யலாம்' என்பதற்கும், 'நான் பேசுவது உன்னை உயர்த்தத்தான்' என்பதற்கும் உள்ள வேற்றுமையை நம்மால் உணர முடியுமானால் குமாரையும் நம்மால் உணர முடியும்.

குறத்தி முடுக்கு மற்றும் கோவேறு கழுதைகள் குறித்தான இருகட்டுரைகளும் நேர்மையான விமர்சனமாகத் தோன்றுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இமையத்தின் நாவல் நாயகியை தமிழ் நாவல் மரபின் முதல் 'காவியநாயகி' யாக்கு கிறார்-அவளுக்குள்ளிருச்கும் தாய்மையைச் சுட்டுகின்றார். 'தலித் இலக்கிய நாவல் என் பதற்கும் மேலான உயரத்தை இந்நாவலுக்குத் தருகின்றார். ஆனால் சுந்தர ராமசாமியைச் சில உன்னதமான இடங்களில் தாண்டிவிடு வதை இங்கு சொல்வதில்லை. ஆனாலும் குமாரது திறங்காட்டியாக (Indicator) சுந்தர ராமசாமியேஇருக்கிறார். சதுரங்கக்குதிரையை விமர்சிக்குமிடத்தில் ''சுந்தரராமசாமியின் ஜே. ஜே.யின் பாதிப்பை சற்றும்கொண்டிராததமிழ்ப் படைப்புலக மனிதன் நாராயணன் என்கின் றார்''-நாராயணன் நாராயணனாக இருக்கும் போது கூட இவரால், ஜே. ஜே யின்நினைவை உதற முடியவில்லை. மேலும் 'முப்பது வய தாகியும் துணையைப் பெற்றிராத முன்பின் தெரியாத அப்பெண்ணின் மன உளைச்சலை நாராயணனும் உணர்ந்து கொள்கிறான்' என் றவர் உடனே ''இங்கு சுந்தர ராமசாமியையும் இவரையும் இணையாகக் காண வேண்டும்'' என்கின்றார். பரவாயில்லப்பா நீயும் எப் படியோ அவருக்கிணையாக வந்து விட்டாய்' என்று சொல்லும் பாணிதான் தெரிகிறது. மொத்தமாக குமார் என்ன நினைக்கிறார் என்றால் சு. ரா வுக்குப் பின் வந்த படைப் பாளிகள் அனைவரும் சு. ராவுக்குக் கடன் பட்டிருக்க வேண்டும். சு. ராவின் முன் கை கட்டி நிற்க வேண்டும்.

வண்ணதாசன் பற்றிய கட்டுரையில் சு. ரா.வோடு ஒப்பிடும் பாக்கியத்தைக் கூட வண்ணதாசனுக்குத் தருவதில்லை. வண்ண தாசனின் உழைப்பு அத்தனையையும் 'அன்பு' என்ற லேகியமாக உருட்டி வைத்து விடுகின் றார். 'கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து துட்பமாகப் பாதுகாக்கப்படும் ஆன்மா' என்ப தோடு முடித்துக்கொண்டு மண்ணில் புரள விடும்படி பரிந்துரை செய்கின்றார்.

மாறிவரும் சிறுகதை உலகம்-கட்டுரையி லும் மற்றும் சு. ரா பற்றிய கட்டுரையிலும் அப்பட்டமாகச் சு. ரா விற்கு சார் பெடுக்கின் றார். இன்றைய நிலையில் பார்க்கும்போது சு. ரா வின் கூடாரத்தைச் சேர்த்தவர் என்று கருதப்படும் ஜெய மோகனே கூட சு. ரா வைத் தாண்டும் வேலையை வெகு சீக்கிரமாய்ச் செய்து விட்டார். சு. ரா வின் பல்லக்குத் தூக்கிகளுக்கு ஜெயமோகனின் பல்லக்கு எந்த விதத்திலும் சளைத்ததல்ல. லங்காதகனத்தில் அனாயாசமாக சு. ராவைத் தாண்டி எங்கோ சென்று விடுகின்றார் ஜெயமோகன். எனவே சு. ரா வையே அளவுகோலாகத் தூக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. பாரதிக்குப் பிறகுபுதுமைப்பித்தன், புதுமைப் பித்தனுக்குப் பிறகு சு. ரா என்று சொல்லும் குமார் தம் மையே திருப்பிக் கேட்கவும்கூடும் 4. பிக்குப் பிறகு சு. ராவைத் தவிர யார் என்று?சு. ரா ஓர் அறிவாளி என்பதில் யாருக்குமே மறுப் பிருக்க முடியாது. ஆனால் இப்படி இடம் பிடித்துத் தரும் செயல் தேவையா என்று தோன்றுகிறது. 'காலத்தை வென்றெடுத் தவர்'-என்ற பிம்பத்தை ஒருவர் மீது சுமத்துவ தெல்லாம் கல்வெட்டுகளுக்குச் சரி. இலக்கியத் திற்கும் விமர்சனத்திற்கும் எப்படிப் பொருந் தும்? சு. ராவைத் தாண்டி யாரும் வந்து விடக் கூடாது என்று குமார் பிரார்த்தனை செய்கி றாரெனக் கொள்ளலாமோ என்ற அளவு சார் பெடுக்கின்றார்.

சு. ரா அல்லாத மற்ற நல்ல படைப்புக் களை 'எடுத்துக்காட்டுச் செய்யுள்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை' என்ற ஒற்றை விமர்சனத்திற்குள் அடக்கிவிடுகின் றார். அதையும் தாண்டி வருபவர்களை 'சு. ராவுக்கு இணையாக வைக்கலாம்' என்ற விமர்சனத்திற்குள் கட்டிப் போடுகின்றார்.

புதுமைப் பித்தனின் வாரிசாகத் தன்னைக் கருதிக் கொள்ளும் ஜெயகாந்தனை குமாரால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. சமயம் வந்த போதெல்லாம் தாக்குகிறார். 'தன் நம்பிக்கைகளுக்குச் செயலாக்கம் தர வாழ்வி லிருந்து கணக்காக வெட்டி எடுத்துத் தயாரிக் கப்பட்ட ஜெயகாந்தனின் தயாரிப்பு எழுத்து' கொச்சை மார்க்சியம் என்று ஒதுக்கித் தள்ளு கின்றார். தி. ஜாவை சுவையான வாழ்க்கைத் துணுக்குக்காரராக்கி விட்டார்.

கல்கியையும், லா ச. ரா வையும் ஒரே தளத்தில் தள்ளிவிட இவர் எடுக்கும் சூத்திரம் என்னவென்றால் இவர்களிருவரும் சு. ரா அல்ல அல்லது சு. ராவின் உபாசகர் அல்ல. இப்படியே எல்லோரையும் தள்ளி விடுகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

அவரவர் அளவில் தங்களுக்கென்று ஒரு மொழியை அடையாளமிட்டவர்கள் என்ற குறைந்த பட்ச அனுதாபம் கூட குமார் காட்டு வதில்லை.

'பல்லக்குத் தூக்கிகள் கதையை எடுத்துக் கொள்வோம் படைப்பு சித்தரிக்கும் நிகழ்ச்சியி லும் அதற்குப் பயன்படுத்தும் மொழியிலும் ஒரு வித அபத்தத்தையே உணர்கிறோம். ஆனால் வாழ்க்கை எதார்த்தத்தை படைப்பிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது தானே' என்று சு. ராவுக்குத் தரும் தனிப்பட்ட கருணையை ஏன் இன்னும் சிலருக்கும் பொருத்தக் கூடாது என்று ஏன் கேக்கக் கூடாது.

சு. ரா. காலத்துப் படைப்பாளிகளைத் தூக்கி எரிகின்றார் அதற்கு அவரளவிலான நியாயங்களைத் தர்க்க ரீதியாக முன் வைக் கின்றார். 'நியாயப்படி கொலை செய்வது' என்பது போன்ற அணுகுமுறைதான் இவரு டையது. ஆனால் அந்த அணுகுமுறையில் புத்திசாலித்தனம் மிளிர்கின்றது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதிலும் இறக்குமதி செய்யப்பட்ட தொழில் நுட்பம் என்று திரும்பத் திரும்பச் சொல்கின்றார். கண் மூடித்தனமான நவீனத்துவத்திற்கு இந்நூலில் தரும் எதிர்குரலை நாம் கவனித்தாக வேண்டும். கல்வித்துறை சார்ந்தவர்களிட மிருந்து அபூர்வமாய் புறப்படும் புத்திசாலித் தனம் இது. தரவுகளின் அடிப்படையிலான புத்திசாலித்தனமான வாதத்தைப் பார்க்கும் போது, ஏன் இவர் இப்படி சு.ரா. என்ற ஒற் றைக் குப்பிக்குள் அடைபடுகின்றார் என்ற ஆதங்கம் பொங்கிப் பெருகுகிறது. ஒரு வேளை சு. ரா தான் தனக்குக் கவசம் என்று கருது கிறார் குமார்' என்ற முடிவுக்கு வந்து விட லாம்.

---

*சிறுகதை*

# விடுதலை

## சூத்ரதாரி

(176ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாரின் அறையில் சுவர் முழுக்க தேசத் தலைவர்கள் பலருடன் பல்வேறு சந்தர்ப்பங் களில் சிவமணி நாடார் எடுத்துக் கொண்ட கருப்பு வெள்ளை புகைப்படங்களை பார்க்க முடியும். தரையில் போட்டிருக்கிற படுக்கையில் காலை மடக்கி காங்கிரஸ் தலைவர் பாணியில் திண்டில் சாய்ந்து கொண்டுதான் பேசுவார்.

அன்றைக்கும் கதர் தொப்பியை தலையில் போட்டுக் கொண்டு, திண்டில் சாய்ந்து கொண்டு தன் அனுபவங்களை கொட்டிக் கொண்டிருந்தார். 'தேசிய விடுதலை வீரர்' தியாகி சிவமணி நாடாரை ஏதோ ஒரு பத்திரி கைக்காக இரண்டு இளைஞர்கள் சுதந்திரதின மலருக்காக பேட்டி கண்டு கொண்டிருந்தனர். ஒருவர் குறிப்பெருத்துக் கொண்டிருக்க இன் னொருவர் அவ்வப்போது சிவமணி நாடாரைப் புகைபடம் எடுத்துக் கொண்டிருந்தார்.

கேள்வி காந்தியைப் பற்றி திரும்பியிருந் தது. உணர்ச்சி வசப்பட்டு நெகிழ்ந்து, காந்தியை தான் முதன் முதலாக தரிசித்த அனு பவத்தை விவரித்துக் கொண்டிருந்த போது தான் அந்த இளம் நிருபர் ஒரு கேள்வியைக் கேட்டார்.

''காந்தியால நிஜமாகவே நம்ம நாடு பிரயோஜனப்பட்டிருக்கா சார்? என்னைக் கேட்டா... காந்தியை இன்னும் கொஞ்ச முன்னாலேயே சுட்டுக் கொன்னிருந்தா... நமக்கு விடுதலை இன்னும் சீக்கிரமாவே கெடைச்சிருக்கும்னுதான் சொல்லுவேன்...''

ஆக்ரோசமாய் படுக்கையிலிருந்து தாவி னார் சிவமணி நாடார், தன் இரையின் மீது பாய்ந்து பரவுகிற சிறுத்தையாய் அந்த நிரு பரை கீழேதள்ளி அவன் மு த்தில் அறைந்தார் அந்த கைகளில் எப்படித்தான் அப்படியொரு

(145-ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

# நாவல்கள் மதிப்புரை

## சாய்வு நாற்காலி

முஸ்தபா கண்ணுவின் சாய்வு நாற்காலி வாழ்க்கையை அற்புதமாக இந்த நாவலில் சித்தரிக்கிறார் மீரான் அவர்கள். மீரானிடம் கதை சொல்லும் வளம் குறையவில்லை என்பதை மெய்ப்பிக்கிறது இந்த நாவல்.

முஸ்தபா கண்ணுவை உள்ளடக்கிய மூன்று தலைமுறைகளின் கதைகளை அனாயசமாகச் சொல்லுகிறார் ஆசிரியர். மார்த்தாண்டவர்மன், பவுரன் பிள்ளையின் வீரத்தைப் பாராட்டி வெள்ளித் தாம்பாளம், வீரவாள் முதலிய விருதுகளோடு தோட்டம், துரவு மற்றும் அரண்மனை மாதிரி பெரிய வீடு ஆகியவற்றைப் பரிசாகத் தந்தார்.

மூன்றாம் தலைமுறைக் காரனாகிய முஸ்தபா கண்ணு சாய்வு நாற்காலியை விட்டு இறங்க மாட்டான். தெருவில் இறங்குவானா? கடைத் தெருவுக்குப் போவானா? உழைப்பானா? மாட்டான். இவன் இருக்குமிடத்திற்கு எல்லா வசதிகளும் எப்படி வந்துசேரும்? இரவில் வெள்ளித் தாம்பாளம், வீரவாள், சன்னல்கள், சந்தன அலமாரி, இறுதியாக சாய்வு நாற்காலி ஆகிய எல்லாப் பொருட்களும் இஸ்மாயில் மூலம் வெளியே செல்லுகின்றன.

விற்பனையாகின்றன. இனிவிற்பதற்கு எதுவுமில்லை. இவன் காமவெறியன். எத்தனை பெண்களை இவன் அனுபவித்தான். எத்தனை பெண்களை இவன் அனுபவித்துக் கொன்றான். இறுதியாக சானராவை அபகரிக்கச் சென்று அவமானப்பட்டு கடற்கரை மணலில் புதையுண்டு கிடக்கிறான்.

இந்தக் கதையை ஏன் இவ்வளவு விரிவாக மீரான் சொல்லுகிறார்? பழம் பெருமையில் புதையுண்டு கிடக்கும் நம்மவர் கதையைத் தான் மீரான் சொல்லுகிறாரா? சொல்ல வேண்டிய கதையும்தான்.

முஸ்தபா கண்ணுவிடம் பிரம்படிபட்டுப் பட்டு காசநோயால் சாகக்கிடக்கிறாள் அவன் மனைவி மரியம்பீபீ. பிரம்படிக்கஞ்சாமல் இவனுக்கெதிரில் நின்று கேள்வி கேட்கிறாள். தன்னைப் படைத்த அல்லாவை நொந்து கொள்கிறாள். காரித்துப்பிவிட்டு இவனை விட்டு விலகிச் சென்றான உழைப்பாளியாகிய இவன் மகன் சாகுல் அமீது. இவனைப் போலவே இருபது ஆண்டு படுக்கையில் தூங்கி வழிகிறவள் இவன் தங்கை ஆசியா. இறுதியில் அவள் எழுந்து நின்று தன் பங்கைக் கேட்கிறாள் வழக்கு மன்றம் செல்கிறாள். தன்னிடமிருந்து சென்ற சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறான், இவன் தோட்டத்தில் வேலை செய்தவன். பறையன் என்று அவனை ஏசிய பொழுது இஸ்மாயில் சொல்லுகிறான். இவனிடமிருந்து நீங்கள் அபகரித்த நிலத்தைத் தான் அவன் எடுத்துக்கொண்டிருக்கிறான். இவை நம் காலத்து பெண்ணியம் மற்றும் தலித்தியத்தின் குரல்கள்.

மீரான் நாவலில் அவுலியாக்கள், பாவாக்கள் மற்றும் தங்கள் செய்யும் அற்புதங்கள் இந்த நாவலிலும் இடம் பெறுகின்றன. இயற்கை வருணணைகளுக்கும் குறைவில்லை. பெண் ஒரு போகப் பொருள். எதார்த்த வாதக் கதையைத் தகர்த்ததன் மூலம் புராணக் கூறுகளை மீண்டும் கதையாக்கத்திற்குள் கொண்டு வந்திருக்கின்றனர் நம் இளைஞர்கள். இவற்றின் மூலம் வாசகர்களை மீரான் நன்றாகவே வசியப்படுத்துகிறார், தென்பத்தின் என்பது இவர் படைத்திருக்கிற கற்பனை பிரதேசம் பவுரன் பிள்ளையின் தலைமுறைக் கதையும் வரலாறு தான் என்று நம்மை நம்ப வைத்து விடுகிறார் மீரான். கதைக் கலை சொல்லும் மந்திர வாதியாக நம்மை வெற்றி கொள்கிறார் மீரான்.

வெளியீடு : ஜலீலா வெளியீட்டு அகம்
21, மேல ரத வீதி,
திருநெல்வேலி நகரம்.



படிப்பகம்

www.padippakam.com

## நீ ஒரு பெண்

—செ. கணேசலிங்கன்

''பெண்ணினத்திடையே அடிமை நிலையை விட்டு சமத்துவ நிலையைக் காண விழிப்புணர்வு ஏற்படுத்துவதே என் முக்கிய நோக்கமாகும். 'நீ ஒரு பெண்' என இனங் காணும் போது 'நீ ஒரு அடிமை' என ஆணாதிக்கம் மதிப்பிடாதபடியான விழிப்புணர்வைப் பெற வேண்டும். உடை, முடியை ஏன் ஆண் போல அமைக்கக் கூடாது என்ற வினாவையும் இந்நாவல் மூலம் எழுப்ப முயன்றுள்ளேன். இந்நாவலை எழுதிய பின்னர் பெண்ணுடல் கலாச்சார ரீதியில் மற்றவருக்காகத் தயாரிக்கப்படுகிறது என்ற கருத்தை அழுத்திக் கூறும் மீனாட்சி சுபன் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் படித்தேன். அக்கட்டுரையும் என் நாவல் கூற்றை உறுதிப்படுத்துகிறது''

—முன்னுரையிலிருந்து

வெளியீடு : குமரன் வெளியீடு,
வடபழனி, சென்னை-26.

பக்கம் : 192 விலை : ரூ. 35-00

## வாடாமல்லி

''ஒரு கோட்டுக்கு வெளியே'' ''ஊருக்குள் ஒரு புரட்சி'' ஆகிய நாவல்கள் மூலம் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகமானவர் சு. சமுத்திரம் அவர்கள். சமூக நீதியின் ஆற்றல் மிக்க குரல் இவருடையது. இவரை தலித் எழுத்தாளர் என நம் இலக்கியத் திறனாய்வாளர்கள் அங்கீகரிக்க ஏன் தயங்குகிறார்கள் என்பது புரியவில்லை.

இவர் அண்மையில் எழுதி வெளிவந்திருக்கும் நாவல் ''வாடாமல்லி''. இந்த நாவல் வெளியான ஆனந்த விகடன் பிரதியையும், நூலாக வெளியிட்டு உள்ள வானதி பதிப்பகப் பிரதியையும் அருகருகே வைத்துப் பார்க்கிற பொழுது, விகடன் பிரதியில் கலைத்தன்மை கூடுதலாய் இருப்பதை நாம் உணர முடியும். நல்ல பதிப்பாளர் கையில் சமுத்திரம், கலைஞராக வெளிப்பட முடியும்.

ஒடுக்கப்பட்ட மனிதர்களின் வாழ்வை தமிழ் நாவல்கள் இப்பொழுது அதிகம்சித்தரிக்கின்றன. விளிம்பு நிலையில், ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட அலிகளின் வாழ்வை இந்த நாவல் சொல்லுகிறது. கல்லூரியில் படிக்கும் சுயம்பு தான் பெண்ணாக மாறி வருவதை உணர்ந்து திகைக்கிறான். தனக்குள் கலவரப்படுகிறான். கல்லூரியிலிருந்தும் தன் குடும்பத்திலிருந்தும் வெளியேற்றப்படுகிறான். சென்னையில் தன் இனத்தாரோடு தன்னை இனம் கண்டு இணைகிறான். டெல்லிக்குச் செல்கிறான். அலிகள் அருவருக்கத்தக்கவர்கள் என்றும், கஞ்சா கடத்துபவர்கள் என்றும் காவல் துறை இவர்களைக் கடுமையாகத் தண்டிக்கிறது. சுயம்பு காவல்துறைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்துகிறான். நாங்களும் மனிதர்கள்தான் என்பதை சமூகத்திற்கு உணர்த்தும் முறையில் போராடுகிறான்.

இந்த நாவலில் நாம் கவனிக்கத்தக்க முக்கிய அம்சங்கள் இரண்டு. சில உறுப்பு வேறுபாடுகள் காரணமாக இவர்களை சமூகம் ஒதுக்கி வைக்கிறது. இவர்கள் மிகுந்த நேசம் உடையவர்கள். சில கலைத்திறன்களில் தேர்ந்தவர்கள். இவர்களுக்கெனத் தனித் தெய்வமும், சடங்கு முறைகளுமுண்டு. இந்தியா முழுவதும் பல லட்சம் எண்ணிக்கையிலுள்ள இவர்கள் திருவிழாவின் போது கூடுகின்றனர். எந்த ஒரு இந்திய சமூகத்தைப் போலவும் இவர்கள் தம்மை ஒரு சமூகமாக உருவாக்கிக் கொண்டுள்ளனர். இவர்களின் சமூக வரலாறு மகாபாரதக் காலத்தையும் கடந்து முன் செல்கின்றது. இந்த வரலாற்றுப் பின்னணியில் வைத்து இவர்களைச் சித்தரிக்கிறார் சமுத்திரம். நாங்களும் உங்களைப் போல மனிதர்கள் தான் என்பதை இவர்கள் இந்த நாவலின் மூலம் நமக்கு மெய்ப்பிக்கின்றனர்.

ஆழ்ந்து கற்கும் வாசகர் இந்த நாவலுக்கு இன்னொரு தளத்தையும் காண முடியும். அலிகள் மட்டுமா ஊனப்பட்டவர்கள்? காலங் காலமாகச் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி, வாழ்வின் பன்முகப் பரிமாணங்களை இழந்து, ஒற்றைப் பரிமாண மனிதர்களாய், ஊமையராய், செவிடராய், குருடராய் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் பெண்களும், தலித் மக்களும்



படிப்பகம்

www.padippakam.com

மட்டுமல்லாமல், கோடிக் கணக்கான உழைக்கும் மக்களும், ஏன் நாமும்கூட ஊனப்பட்டவர்கள் தான். நாவலைத் தொடர்ந்து படிக்கும்போது சுயம்பு நமக்குள் வந்து விடுகிறான், சுயம்புவுக்குள் நம்மைக் காண்கிறோம். இந்த உணர்வை எழுப்புவதன் மூலம் இந்த நாவல் நமக்குள் வெற்றி பெறுகிறது.

வெளியீடு : வானதி பதிப்பகம்
சென்னை—17.

விலை : ரூ. 50-00

## நாலாவான்

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அவ்வையார் இப்படிக் கூறுகிறார்.

நூலெனிலோ கோல்சாயும்
நுந்தமரேல், வெஞ்சமராம்
கோல்எனிலோ ஆங்கே குடிசாயும்
நாலாவான்
மந்திரியுமாவான்,
வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு.

சூத்திரன் அமைச்சனாக இருந்து செய்யும் அரசுதான் நல்ல அரசு என்கிறார் அவ்வையார். பார்ப்பனன் அமைச்சனாயிருந்தால் கொடுங்கோல் பெருகும். சத்திரியன் என்றால் போர்கள் பெருகும். வைசியன் என்றால் குடிமக்கள் அழிவார்கள். அவ்வையார் நம் காலத்துக்கு நெருக்கமாகவே இருக்கிறார்.

அவ்வையாரின் கருத்தை அடிப்படையாக வைத்து வரலாற்றில் புனைகதை செய்கிறார் ம. நா. இராமசாமி. நமக்குத் தேவையான கதை.

கதையின் தலைவன் இசக்கி அதாவது இசைக்கு ஆடும் பெருமான் பாண்டிய நாட்டில் தன் தோழர்களோடு மக்களைத் தட்டி எழுப்பும் நோக்கத்தோடு நாடகம் நடத்துகிறான். இவனுக்கு வேதங்கள் முதலியவற்றைக் கற்பித்தவன் ஒரு பார்ப்பன இளைஞன். பார்ப்பனர்களை, சத்திரியர் வென்ற பழங்காலத்து வரலாறு இவர்களின் நாடகக் கருப் பொருள். பரசுராமன் சத்திரியர்களைத் தேடித் தேடிக் கொல்கிறான். சத்திரியனாகிய னாகிய இராமனிடம் அவன் தோற்றுப் போகிறான்.

பார்ப்பனர்களை அழிக்கும் சக்தி பெறுவதற்காக விசுவாமித்திரன் யாகம்செய்கிறார். பார்ப்பனனாகிய இராவணன் அந்த யாகத்தை அழிக்கச் சுரன் முதலியவர்களை ஏவுகிறான். அவர்களைத் தடுக்கும் முறையில் ராமனைத் தன் உதவிக்கு அழைத்துச் செல்கிறான் விசுவாமித்திரன்.

இப்படி நாடகங்கள் நிகழ்த்துவதோடு, பாண்டிய நாட்டிலிருந்து துரத்தப்பட்ட இசக்கி சோழ நாட்டில் தமிழ்ப்பள்ளி நடத்துகிறான். இளைஞர்களுக்கு சிலம்பம் கற்பிக்கிறான். தீண்டத்தகாதவர்களைக் கோவிலுக்குள் அழைத்துச் செல்கிறான். பெண்களைக் கச்சு, அணியச் சொல்கிறான். ஊருக்குள் செருப்போடு ஊர்வலம் அழைத்து செல்கிறான். ஊர்பெரியவர்களும் மன்னரும் இவனை ஒடுக்க நினைக்கிறார்கள். அரசனின் காவலிலிருந்து தப்பிச் செல்கிறான். அவ்வையார் அவனை ஐவேல் அசதிக்கு அறிமுகம் செய்கிறார். இந்தச் சூத்திரன் அரசனாகிறான்.

நாவல் புனைகதையாக மட்டுமே எஞ்சுகிறது. வரலாற்றுப் பதிவு ஆழமாக இல்லை. நம்காலத்துக்கு நெருக்கமான கதை என்ற முறையில் பாராட்டலாம்.

வெளியீடு : நர்மதா பதிப்பகம்

விலை : ரூ. 60-00

## நூற்றாண்டுப் புழுதியும் சூறைக் காற்றும்

நண்பர் தஞ்சைபிரகாஷ், ஒரு நேர்ப் பேச்சின்போது பொதுவாக நமது இலக்கியங்களில் இந்திய ஆத்மா இல்லை என்கிற கருத்தை முன் வைத்தார். இக்கருத்திலிருந்து முரண்படும்படியான, சில விதிவிலக்கான படைப்புகளையும் படைப்பாளிகளையும்கூட அவர் சொன்னார். நிச்சயம் அவரையும், அவரது படைப்புகளில் சிலதையும் இதே பட்டியலில்



படிப்பகம்

www.padippakam.com

நாம் சேர்க்க முடியும். குறிப்பாக அவரது 'கள்ளம்' நாவல். அது இந்திய ஆத்ம வெளிப்பாடு மட்டும் அல்ல. தொடரும் பல தளைகளையும், இந்திய மரபு—பண்பாடு உள்ளிட்ட விஷயங்களையும் கேள்விக்குள்ளாக்குவது. உடைத்து எழுவது.

வெளிவந்து ஓராண்டுக்கு மேல் ஆகியும் இந்த நாவல் பேசப்படாமல் போனதற்குக் காரணங்கள் நிறைய. முதலாவது காரணம் நாவலின் தளமும் சொல்லப்பட்ட முறையும். இதன் தீவிரத்தை நம்மவர்களின் வாசகத் தன்மையால் முழுமையாய் உள்வாங்கவோ, அதன் போக்கில் புரியவோ கூடவில்லை. புரிய முடிந்தவர்களும் ஏற்கத் தயாராக இல்லை. அப்படி ஏற்றுக்கொண்டாலும்கூட அதை வெளியில் சொல்லவோ எழுதவோ தயங்கியிருக்கிறார்கள்-சில பிரபல இலக்கிய கர்த்தாக்களும் பத்திரிகையாசிரியர்களுமானவர்கள். பாலியல் விஷயங்களை அப்பட்டமாக விவரிக்கிறது என்பதால் அப்படி நேர்ந்துவிட்டது.

வெறும் சம்பவங்களினால் கதையை நகர்த்தும் பாணியிலிருந்து மீறியது இது. தமிழின் எல்லைகளை முடிந்த அளவில் கடந்து, புதிய சாத்தியங்களைத் தொடுவது. சாதாரண வாசகனுக்கு இது ஒரு சவாலாகவே இருக்கும், எளிமையானதாக, மேலோட்டமான வாசிப்பிலேயே புரிந்துவிடக் கூடியதாக இல்லாததால்.

தஞ்சையில் வாழ்ந்த மனிதர் ஒருவரின் கதையையே நாவலாக்குகிறார் தஞ்சைப்ரகாஷ். இந்தியக் கலைகளில் பிரசித்தி பெற்றதும், சில நூற்றாண்டுப் பாரம்பரியம் உள்ளதுமான ஓவியக் கலை தஞ்சாவூர் ஆர்ட். மராட்டிய, தெலுங்கு, தமிழ் கலவை இது. இன்றும் வெளிநாடுகளில் இந்தக் கலை வரவேற்கப்படுகிறது. இப்படியான ஓவியங்களை வரைந்து, புகழும் பணமும் பரிசுகளும் பெற்றுவருகிறவர் மீனாக்ஷிராஜு. அவரது மகன் பரந்தாம ராஜுதான் 'கள்ளத்தின்' நாயகன். அப்பாவின் ஓவிய முறைகளில் உடன்பாடற்றவன் அவன். காரணம் தஞ்சாவூர்கலை, தோன்றிய காலம் தொட்டு ஒரே விதமான படைப்புகளையே கொண்டிருக்கிறது; நடராஜர், க்ருஷ்ணன் என உயர்ஜாதிக் கடவுள்களே அதில் தீட்டப்படுகின்றனர். அதில் புதுமை இல்லை. காலததின் பதிவு இல்லை. தவிர மீனாக்ஷிராஜு தமது முன்னோர்களின் ஓவியங்களையே நகல் எடுத்து வரைகிறவர். அவரையும் அவரது கலையையும் பரந்தாம ராஜு பழிக்கிறான்.

பி. ஏ. படிப்பும் ஓவியக் கல்லூரியில் மூன்றாண்டு அனுபவமும் (பூர்த்தி பெறாதது) உள்ள அவன் மது, போதைப் பொருட்களை உட்கொள்கிறான். வேலை எதுவும் செய்யாமல் சுற்றுகிறான். அவனது தத்துவ அறிவும், அவனது தர்க்கங்களும் நாவலில் விரிவாக சொல்லப்படுகின்றன. அவனால் இந்த உலகத்தோடு, குடும்ப அமைப்புகளோடு ஒத்துப் போக முடிவதில்லை. யாரிலும் யாவற்றிலும் வேஷம் இருக்கிறது. ஆணிலும், பெண்ணிலும், மீனாக்ஷிராஜுவின் ஓவியத்திலும். அவனைக் காதலிக்கிற லலிதாவிலும் வேஷங்கள் தான்.

யாராலும் புரிந்துகொள்ளப்படாத நிலையில், புறவிளைவுகள் ஏதுமற்ற வாழ்வை அவன் வாழ்ந்து கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக அவன் அங்கிருந்து வெளியேற வேண்டிய வருகிறது. ஒரே நாள் பழக்கமும் உறவும் கொண்ட அரண்மனை வேலைக்காரப் பெண்ணான ஜம்னாவுடன். எதிர்காலம் குறித்த திட்டம் ஏதும் அப்போது அவர்களுக்கு இல்லை, சேரிப் பகுதியின் பூக்காரத் தெருவில் குடியேறுகின்றனர். ஜம்னா பூக்கட்டி சம்பாதிக்கிறாள். பரந்தாமராஜு ஏதேச்சையாக அங்கிருக்கும் காளி கோவிலில் அசுரன் படத்தை தஞ்சாவூர் கலையின் கண்ணாடி வெட்டு ஓவியமாகச் செய்து தர முன்வருகிறான், தனக்கு ஒரு வேலையாகுமே என்று கருதி. இதன் விளைவுகளும் எதிர்பாராத அளவில் நடந்துவிடுகின்றன. அசுரன் ஓவியம் மக்களிடையேயும் பத்திரிகைகளிலும் பெயர் பெற்றும் வெளிநாட்டு பத்திரிகைகளும் கலைச்சேவை என்று பாராட்டுகின்றன.

பூக் கட்டும் சேரிப் பெண்களை வேலைக்கு வைத்துக் கொண்டு பரந்தாமராஜு தொடர்ந்து அழைப்பு வந்த இடங்களிலெல்



படிப்பகம்

www.padippakam.com

லாம் சூரனையும், மாடனையும், வால் முனியையும் படைக்கிறான். இது தஞ்சாவூர் கலையில் அதுவரையில் இல்லாத விஷயம். நாவலின் மையம் இதுவே. உயர்ஜாதியினரின் பிடியிலிருந்து கலையை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொண்டு செல்வது. வெறும் கலையை இப்படி மாற்றம் செய்வதன் மூலம் சமூக மாற்றம் நிகழுமா என்கிற கேள்வியும் எழும். இது ஒரு துவக்கமே அன்றி முடிவல்ல. சமஸ்கிருத மொழியும், பரதநாட்டியக் கலையும், ஆலயப்ரவேசங்களும் பொதுமைப்படுவதில் ஏற்படும் விளைவுகள் இதிலும் இருக்கும்.

உயர் ஜாதியினருக்கே உரியது என காலகாலமாய் சில விஷயங்கள் இருந்து வருவதும் ஒடுக்கு முறையில் அடங்கும். இவ்வித சமூகச் சதியமைப்புகளை உடைப்பதும் புரட்சிதான். உயர்ஜாதி மனிதர்களை, ஆதிக்க முறைகளை எதிர்ப்பது மட்டுமல்ல தலித்தியம். அவ்வித மனோபாவங்களே இல்லாமல் செய்வதுதான். இந்தக் கோணத்தில் அணுகுவோமானால் இந்த நாவலில் தலித்தியம் இயங்குவதை உணர முடியும்.

சேரிப் பெண்களின் அவல நிலையும் இதில் சொல்லப்படுகிறது. குடும்பங்களில் அவர்கள் உழைப்பால் சுரண்டப்படுவது, விலைக்கு விற்கப்படுவது முதற்கொண்டு, பெண் குடும்பத்திலும், குடும்பம் சமூகத்திலும், சமூகம் அதன் பாரம்பரியத் தொடர்ச்சியிலும் சிக்குண்டிருக்கிற கண்ணி மிக வலுவானது. இந்த தளைகளிலிருந்து யாரும் தப்ப முடிவதில்லை. நூற்றாண்டுப் புழுதிகளில் படிந்து கிடக்கின்றனர் மனிதர்கள். அவர்களின் வேஷங்களும் இதிலிருந்தே உருவாகின்றன.

மனித அடிப்படை உணர்வுகளான பசி மற்றும் காம உணர்வுகளைப் பயன்படுத்தி தன்னையும், தனக்குக் கீழே வேலை செய்ய வருகிற பெண்களையும் பரந்தாமராஜு மேல் நிலைக்குக் கொண்டு வருவது இந்த நாவலின் குறிப்பிடத் தக்க நுட்பங்களில் ஒன்று. தலித்தியம், பெண்ணியம் முதலியன பெரும்பாலும் பிரச்சாரமும் கூச்சலுமாகவே இருக்கிற சூழலில் கள்ளம் இவற்றை அமைதியுடன் அழுத்தமாக முன்வைக்கிறது.

இந்த நாவல் ஒரு குறிப்பிட்ட இனத்தையோ, வட்டாரத்தையோ, கலைப் பணியையோ பற்றிய நாவல் அல்ல. 'நூற்றாண்டுப் புழுதி' தான் அதன் ஆதார ஸ்ருதி. எந்த ஜாதியினராயினும், எந்த மதத்தினராயினும், எந்த நாட்டினராயினும்கூட ஒவ்வொருவரும் தத்தமது தளைகளில் சிக்கியே இருக்கின்றனர். அது மனித குலம் முழுமைக்கும் பொதுவானது. மனிதர்களால் மனிதர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. ஒழுக்கம், மரபு, பண்பாடு, பாரம்பரியம், மதம், தத்துவம் என யாவிலும் இருக்கிற பொய்மையை—அவற்றின் சுயமற்ற தன்மையை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார் தஞ்சை ப்ரகாஷ். அவர் எந்த கொள்கையையும், எந்த இஸத்தினையும் சார்ந்து இதைச் செய்யவில்லை. தன்னை, தன் இருப்பின் தன்மையை உணர்ந்ததின் வெளிப்பாடு இது. காலகட்டம் குறிப்பிடப்படாத இந்த நாவல் எல்லாக் காலத்திற்கு மானதுதான். எந்த சூழலுக்கும் பொருந்திப் போவதுதான். மரபிலிருந்து முற்றிலும் விலகாமலும், மரபை முழுதுமாய் ஏற்காமலும் நவீனத்துவம் கொண்டிருப்பது இந்த நாவல். குறிப்பிடத்தக்க தமிழ் நாவலாக இதைச் சொல்ல முடியும்.

நூற்றாண்டுப் புழுதிகளைத் தன் சூறைக் காற்றுப் போன்ற கருத்துகளாலும் செயல்பாடுகளாலும் எழுப்பி ஆகாசத்தில் சுழற்றிக் காட்டுகிறான் பரந்தாமராஜு. இத்தனை புழுதியா என வியக்கிறோம். புழுதி ஆகாசத்திலிருந்து கீழிறங்கி நம் மீது படிகிறது; படிந்து கொண்டே இருக்கிறது.

—இரண்டாம் சித்தார்த்தன்

வெளியீடு : சவுத் ஏசியன் புக்ஸ்
சென்னை—2.



படிப்பகம்

www.padippakam.com

## வெயில் மழை

படைப்பாளி தன்படைப்பிற்கான புதிய பிரதேசங்களைத் தேடி அப்பிரதேச மக்களின் தொழில் சார்ந்த வாழ்க்கையை படைப்பிக்கும் முயற்சிகள் பலசமயம் அப்பிரதேசம் பற்றிய அறிமுக எல்லையில் தேங்கிவிடும் ஆபத்துண்டு. பிறர்வழிபெற்ற அறிவை, அனுபவத்தை தன்வயப்படுத்திக் கொள்ளும் பக்குவம் அற்ற தன்மை, அல்லது பக்குவப்படுத்தலுக்கான கால அவகாசத்தை மறுத்தலித்து ஓர் அவசர கதியில் படைப்பை வெளிக்கொண்டுவரும் போக்கு படைப்பின் எல்லைக்கு விரியாததற்கான காரணங்களாகச் சொல்லலாம்.

குறிப்பிட்ட பிரதேசமக்கள் மேற்கொள்ளும் தொழில் அந்த மக்களை எந்த வகையில் பாதித்துக் கொண்டிருக்கிறது, பிரதேசத்திற்கு வெளிச்சூழல் அவர்களை என்னவாக மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதான விளக்கங்கள் ஒரு படைப்பை வாசகன் பூரணமாக அணுக வசதிகளை ஏற்படுத்தித்தரும் சி. ஆர். இரவீந்திரனின் ''வெயில் மழை'' நாவலில் இருவேறு சூழலில் நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுகின்றன. சிமெண்ட் தொழிற்சாலையும் அதைச் சார்ந்த மலையாள மொழிபேசும் பெரும்பாலான மக்கள், கல்லுடைக்கும் தொழில் சார்ந்த தெலுங்குமொழி பேசும் இந்த இருவேறு சூழலையும் இணைக்கும் பாலமாக சண்முகம் என்ற கதாபாத்திரத்தை நாவலைப்படிக்கும் வாசகன் எதிர்பார்ப்பதற்கான நியாயத்தை தவிர்க்க முடியாது. அதே போல் சிமெண்ட் ஆலையில் வேலை பார்க்கும் சண்முகத்தின் நடுத்தரக் குடும்பச் சூழலை இலட்சியமாகக் கொண்டு படிப்பில் கவனம் செலுத்தும் பவானியின் மகன் முருகேசனையும் வாசகர் எதிர்பார்ப்பதில் தவறில்லை. ஆனால் இரு பாத்திரங்களுமே வாசக எதிர்பார்ப்பைபொய்யாக்குவதோடு பாத்திரங்களே முடமாக்கப்படுகின்றன. சிமெண்ட் ஆலை பற்றிய விவரங்களை வாசகனுக்கு விரிவாகத் தருவதற்கும் அப்பால் இப்பாத்திரங்கள் வளர்ச்சி பெறவில்லை.

உழைக்கும் தெலுங்கின மக்கள் சமூகத்தில் பிறந்து கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டு சுரங்கக் கல்வியில் (மைனிஸ்) தேர்வு பெற்று ஒரு மேற்பார்வையாளனாக சிமெண்ட் ஆலையில் வேலை பார்க்கும் சண்முகத்தின் இலட்சியம் சொந்தவீடு, பிள்ளைகளின் நல்ல கல்வி என்பதோடு தன்னுடைய சமூகத்தில் பிறந்து, படிப்பார்வம் கொண்டிருக்கும் முருகேசனுக்கு உதவுதல், நிரந்தரத் தொழில் பெறஉதவுதல், பவானியின் குடிசை எரிந்த போது பணமாக அவர்களுக்கு உதவுதல் என்பதோடு முடிந்து விடுகிறது.

நாவலில் மிகச்சிறு அளவே காட்டப்படும் சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்கள் வாசகனின் பார்வையில் மறைக்கப்பட்டு கல்லுடைக்கும் தொழிலாளர்களான தெலுங்கின மக்கள் வாழ்க்கை முன்னிறுத்தப்படுகிறது.

தொழில் சட்டத்தின் பார்வைபடாத உதிரித் தொழிலாளர்கள் வரிசையில் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு தொழில் பாதுகாப்பு முற்றும் இல்லாத நிலையில், முதலாளிகள் மேற்பார்வையாளர்கள் போன்றவர்களால் மிகை உழைப்பிற்கு வற்புறுத்தப்படுவதும் பொருளாதார ரீதியில் சுரண்டப்படுவதும் தவிர்க்க முடியாத நியதியாக இருக்கிறது.

உயர் உடைமைகளுக்கு எந்தப் பாதுகாப்பும் அற்ற அவர்களில் பெண்கள், பணத்தாலும் பசப்பு வார்த்தைகளாலும் பால் உறவிற்கு வற்புறுத்தப்படுவதும் இந்தச் சூழலில் சந்திக்க நேர்கிற விபத்தாக அமைந்து விடுகிறது. கல்லுடைத்தல், கட்டிடத்தொழில் போன்ற பாதுகாப்பற்ற தொழில்களில் பெண்கள் சந்திக்க நேர்கிற கூடுதல் சுரண்டல் முறை என்றும் இதைச் சொல்ல வேண்டும். நாவலில் பவானி சந்திக்கும வாழ்க்கை இதனின்றும் வேறானதல்ல.

கல்லுடைக்கும் தொழிலாளிகள் சார்ந்திருக்கும் தொழில் அவர்களின் வாழ்க்கைக்கு எதிர்நிலையில் இயங்குவதை விரிவாகப் பேச வேண்டிய நாவல் பவானியின் குடும்ப எல்லைக்குள் அமுங்கி விடுவது படைப்பாக்க முயற்சியில் சரிவையே சந்திக்க நேர்கிறது. துரையாடு ஏற்பட்டு விட்ட கள்ள உறவால்



படிப்பகம்

www.padippakam.com

பாதிப்புக்குள்ளான பவானியின் குடும்ப உறவு, தங்கராசால் கைவிடப்பட்டு, குழந்தையப் பனாலும் துரத்தப்பட்ட பின்னால் வெளியூரில் ஒரு ரோடு மேஸ்திரி தொடர்பு பவானிக்கு கிடைப்பதும் அதன் மூலம் மீனாட்சியின் திருமணத்தை நடத்தி அவளை ஒரு குடும்ப வாழ்க்கைக்குத் தகுதிப்படுத்துவதும் மகன் வடவேலை வளர்த்து ஆளாக்கி விடுவதும் ஆன பவானியின் ஆளுமைகூட நாவலில் படைப்பாகவில்லை.

—அறிவன்.

வெளியீடு : தாகம், பாண்டிபஜார்,

விலை : ரூ. 38-00

## பூர்வீகபூமி

ஆசிரியர் : சூரியகாந்தன்

காவிரிப் பிரச்சனை காரணமாகத் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் கர்நாடகத்தில் திடீரென வேகம் பெறுகின்றன. இதனால் உழைத்ததனத்தையும் விட்டுவிட்டு ஓடிவரும் சூழல் உருவாகின்றது. உழைத்தவனும், உயர்ந்தவனும் எல்லாம் ஒன்றாகி விடுகிறார்கள். தமிழகம் நோக்கி வருகிறார்கள். இது நாவலின் கடைசித் திருப்பம். பூமி யாருடையது? நமக்கு பூமி சொந்தமா? நாம் பூமிக்கு சொந்தமா? இப்படி வினாக்கள் பொங்கி வருகின்றன. ஒருவேளை பூர்வீக பூமியை விட்டுப் போனதால் எங்கும் வேர் ஊன்ற முடியவில்லையோ? என்றெல்லாம் ஆசிரியர் நம்மை அலைபாய வைக்கிறார். கடந்த 91-ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற நடந்த கசக்கும் நிதர்சனங்களை சூடும் சுடரும் குறையாமல் நம் கண் முன்னால் கனல் போல் விரிய வைத்திருக்கிறார். இதுவரை யாரும் தொட்டு எழுதாத பிரச்சனையை உள்வாங்கிக்கொண்டு அதை இந்தக் கலைப் படைப்பாக்கி ஆழமாகச் சிந்தனையைத் தொட்டிருக்கிறார்.

—சிற்பி (முன்னுரையிலிருந்து)

வெளியீடு : மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை—625001.

விலை : ரூ. 27-00

# சிறுகதைத் தொகுப்புகள் மதிப்புரை

## ஒரு மழை நாளில்

ஒருகவிஞராக மட்டுமல்லாமல், அவ்வப்போது சில பத்திரிகைகளில் சிறுகதை ஆசிரியராகவும் காணக்கிடைத்த கவிஞர் தமிழன்பனின் முதல் சிறுகதைத் தொகுதி இது. சில கவிஞர்கள் கதை எழுத வரும்போது அது கதையாகவும் இல்லாமல் கவிதையாகவும் இல்லாமல் ஒரு அசட்டு முகத்தோடு நின்று கொண்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அந்த தயக்கத்துடனே கதைகளை வாசிக்க ஆரம்பித்த உடனேயே அந்தத் தயக்கம் விலகி விடுகிறது. இந்தத் தொகுப்பைப் பொறுத்த வரையில், இரண்டு விஷயங்களை முக்கியமாக குறிப்பிடுதல் வேண்டும். ஒன்று எல்லாக் கதைகளிலும் விரவிக்கிடக்கும் மனிதநேயம். அடுத்தது, எல்லாக் கதைகளையும் வாசித்த பின் வாசகனின் மனதில் சென்னிமலை என்ற ஊரைப் பற்றிய ஒரு சில பதிவுகளையாவது பதிய வைத்திருக்கும் திறன். சில சிறு பத்திரிகைகளிலும் சில ஜனரஞ்சகப் பத்திரிகைகளிலும் இந்தக் கதைகள் வெளிவந்திருந்தாலும் இரண்டு தரப்பு வாசகர்களையும் திருப்தியடைய வைப்பவையாகவே இருக்கின்றன. தங்களுக்குள்ளே பல குறைகள் இருந்தாலும், மனித நேயத்தை வெளிப்படுத்துவதில் தமிழன்பனின் முக்கியப் பாத்திரங்கள் தயக்கம் காட்டுவதே இல்லை. பரமசிவமும், வெற்றிலைக்கார சாயபுவும், அப்புவும், சுகுமாரும், கமலாவும் இதற்குச் சாட்சிகளாக வலம் வருகிறார்கள். போலியான வர்ணனைகளோ, வீண் வசனங்களோ இல்லாமல் இயல்பானதொரு நடை, எல்லாக்கதைகளையுமே படிக்க தூண்டுகிறது. 'அன்புள்ள அந்த யாரோ ஒருவர்...' மனதைக் கவருகிறது. ஒரு திரைக்கதையின் லாவகத்தோடு எழுதப்பட்டிருக்கிறது. 'இன்று கதை எழுத முடியவில்லை' எல்லா எழுத்தாளர்களின் பொதுவான ஒரு நாளை விவரிக்கிறதென்று சொல்லலாம். ஒவ்வொரு கதைக்குள்ளும் விரவிக்கிடக்கின்றன



படிப்பகம்

www.padippakam.com

பல செய்திகள், மற்றும், ஒரு மழை நாளில், ஊர் முழுதும் உறவிருந்தும் போன்றவையையும் குறிப்பிடலாம். இந்தத் தொகுப்புக்காக, சென்னிமலை, தமிழன்பனுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

வெளியீடு : தமிழ்ப்புத்தகாலயம்

பக்கம் : 160 விலை : ரூ. 30-00

## சுப்ர பாரதி மணியனின் நாதம்-வழித்துணைகள்

—சு. வேணுகோபால்

சுப்ர பாரதி மணியனின்யின் 'நாதம்', 'வழித்துணை' என்கிறஇருசிறுகதை தொகுப்பு கதைகள் கடந்த ஐந்தாண்டுகளில் வெளிவந்தவை. முந்தைய மூன்று சிறுகதை தொகுப்புக்களின் சுவடைவிட அழுத்தம் என்றே சொல்லலாம்.

மணியனின் கலைப் பயணச் சரிவுகள் தத்தளிப்பற்று அமைதி கொண்டவை, வெற்றிகள் என்ற விதமாய் இரு தொகுதிகளும் எனக்களித்த அலையாடல்கள். முதல்பரிசு பெற்ற கதைகள் மற்ற கதைகளிலிருந்து பின் தங்கி இருக்கின்றன. தனக்கு வந்து சேர்ந்த செய்தியை உடனே எழுதித் தீர்த்து விடுவது என்ற தொனி ''வதை'', ''சுடுகாட்டுப் பூங்கா'' 'எல்லோருக்குமான நேசம்' கதைகளில் நிகழ்ந்திருக்கிறது. படைப்பு மனம் ஒரு விடயத்தை அனுபவத்தை தேர்ந்து கொள்கிறபோது அதே விதமான அனுபவம் படைப்பாக்கத்தில் ஏற்கனவே பதிவு பெற்றிருக்கும் பட்சத்தில்—அந்த நடுகையின் சாதனையை முறியடிக்கிற விதமாய் அமைந்து விடுகிறபோது தான் படைப்பின் சத்து கெட்டியாக மனதிற்குத் தென்படுகிறது. நேற்றைய படைப்பிற்குச் சம அந்தஸ்தில் இன்றைய படைப்பு இருப்பதாய் பிறந்தாலும் முந்தைய படைப்பிற்கே வீரியம் மிக்கதாய் கனம் பெறும்.

முன்தலைமுறையினர் தொடாதவற்றைத் தொடுகிற புள்ளிகள் சுவராஸ்யம்தருகின்றன. தொட்டதைத் தொட்டு மண்ணைக் கவ்விய கதை 'வதை'. 'எதிர்ப் பதியம்' கதையில் கர்நாடக நதி நீர்ப் பிரச்சினையில் அகதியாய் வருபவன் தமிழ்நாட்டிலும் அகதியாய் பார்க்கப்படுகின்ற அவலத்தைச் சொல்கிறது. இந்த சம்பவம் மணியனுக்கு நெருக்கமாகவே தெரிந்திருக்கலாம் தான். பொய்யான விசயம் படைப்பாளியின் ஆளுமையில் ஜீவத்துடிப்போடு நிஜத்தன்மை பெற்று விடுகிறது. நிஜமான அனுபவம் படைப்பாளியின் பலகீனத்தால் பிசையப்பட்டு செயற்கைத் தன்மை கொண்டு விடுகின்றது. விசயம் 'இது' என்பது செய்தி. விசயம் பொய்யா-நிஜமா என்பதைவிட படைப்பாளி நம்பும்விதம் படைத்திருக்கிறானா என்பதில் தான் கலையின் ஆற்றல் இருக்கிறது. 'எதிர்ப்பதியம்' செய்தியாக நின்றுவிட்ட பொழுது அதே காவிரித் தகராறு பிரச்சினை பற்றி சொல்லும் 'முற்றுகை' தலைசிறந்த கதையாக மாறுவதை இங்கு இணையாக வைக்கலாம். ஒரு சமூகத்தின் கனவு, ஆசை, அவலம்...முழுவீச்சே சின்னச்சாமி என்ற பாத்திரத்திற்குள் லாவகமாக மெருகேறியிருக்கிறதைச் சொல்ல வேண்டும்.

மனதில் தோன்றும் ஒரு யோசனையை சட்டென்று கதையாக ஆக்கிப் பார்த்தால் என்ன என்று நமக்குத் தோன்றும். 'கூண்டும் வெளியும்', 'வாழ்வின் சிர்வு'. 'நாதம்' இப்படிப்பட்ட கதைகளோ என்று எண்ணும் விதமாய் இருக்கின்றன. இந்த மூளை தயாரிப்பு அவ்வளவு தூரம் மனதைக் கவ்வவில்லை. 'நாதம்' நடை பலகீனமாக இருக்கிறது.

பூச்சரத்தைத் தொடுக்கிறபோது நூல் தெரியாமல் மாலையாக்குகிற லாவகம் நழுவி நூல் தெரிவது சங்கடமளிக்கிறது. மேலும் பிரச்சினைகளின் உக்ரம் அல்லது வாழ்வின் சிக்கல் நம்மை உலுக்கும் விதமாக வந்து படியவில்லை. அதளபாதாளத்திற்குள் இறங்கி எதிரொலிகளை எழுப்பாமல் நின்றுவிட்டன. நாதம்போல் கதை சொல்லும் முறையில் பலகீனமான கதை 'கண்ணாமூச்சுகளும் முகமூடிகளும்'. காலங்காலமாய் அல்லது தலைமுறை தலைமுறையாய் தொடரும் தப்பித்தலை டவுசர் காலத்திலிருந்து வேஷ்டி காலம் வரை நகர்த்துவது சிறுகதைக்குரிய பிம்பமே இல்லாமல் ஆகிவிடுகிறது. ஒரு விசயத்தை விளக்க முற்படும்போது படைப்பு சிதலமாகி விடுகிறது.

'ஸ்தலங்கள்' 'கிணற்றலை' 'சுழல்'



படிப்பகம்

www.padippakam.com

'வழித்துணைகள்', 'விருட்சங்களும் அவனும்' 'குவியல்' 'தருணம்' போன்ற கதைகளில் நாம் வாழ்ந்த வாழ்கிற வாழ்க்கையை சப்த மில்லாமல் மடித்து வைக்கிறார். எவ்வித ஜிகுனாக்களுமில்லாமல் இடிபாடுகள் விரி கின்றன.

இக்கதைகள், கனவுகள் சிதைய இவ் வட்டத்துக்குள் தள்ளிக்கொண்டிருக்கும் நிர்ப் பந்தத்தின் மீது விமர்சனம் செய்யாமல் பொரு ளாதாரத்தால் சிக்கி நசுங்கும் அடித்தட்டு மக்களின் லௌகீய தளத்தைப் பதிவு செய் திருக்கிற மான்சீகமான கதைகள்.

'முற்றுகை' 'பிணவண்டி', 'தீயாய்ப் பறவைகள்', 'நதிக்கரைகளும் காங்கிரீட் வனங்களும்', 'நிலை' பொதுவாழ்வின் விளிப் பினூடே வாசகன் அதிர்ந்து கொள்ளும் வித மாகப் படைப்பாளி தனக்குள் தேடிய ஊற்றுக் கண்களைக் காண முடிகிறது. அதலபாதாளத் திலிறங்கி வாசகனுக்குள் எதிரொலிகளை கிளப்பவல்ல கதைகளுக்கான ஆரம்பங்கள் இக்கதைகள். 'பூரண கலவி முடிஞ்சு குளிச் சிட்டு வந்து முத்தமிடுகிற பெண்ணோட உடம்பு வாசம் தான் இனி வாழ்க்கையில் உன்னதம்னு தோனும். 'வழித்துணை'யில் விழுந்த வரி நிலை என்ற கதையில் எழுதாமல் எழுதப்பட்டு இருப்பதையும் உணரமுடிகிறது. புதுமைப்பித்தனின் ''ஒரு நாள் கழிந்த''தை நினைவூட்டினாலும் ''நிலை'' பித்தன் தொடாத புள்ளியைத் தொடுகிறது. வாலிபத் தின் அல்லாட்டம் 'உன்னைக் கொல்லனும் போல இருக்கியா' என்று தோணிக்காரனை நகரத்து வாலிபன் சொல்கிறபோது (நதிக் கரைகளும் கான்கிரீட் வனங்களும்) இந்த இயற்கையை தின்று தீர்க்கிற நகரத்தின் கோரைப்பற்களும் அந்த வரிகளில் தெரி கின்றன.

மணியனின் முன்னுரையின் (வழித்துணை கள்) கனவுகள் இக்கதைகளில் பளிச்சிடு கின்றன.

விமர்சிக்கவும்
நேசங்கொள்ளவுமான
தொகுப்புக்கள் இவை.

## வாய்க்காலும் வரப்புகளும்

மூன்று நாவல்கள், மூன்று சிறுகதைத் தொகுப்புகளுக்குப் பிறகு இப்போது பூமணி யின் இரண்டு நாவல்கள் வெளிவந்திருக் கின்றன. முந்தைய நாவல்களினின்றும் மாறு பட்ட கருவைக்கொண்ட நாவல்கள் இவை. வாய்க்கால், வரப்புகள் என்ற இவ்விரண்டுமே காதல் சார்ந்த கதைகள்.

அமைப்பிலும் பக்க அளவிலும் குறு நாவல் எனச் சொல்லத் தக்கதாய் உள்ளது வாய்க்கால். வரப்புகள் கதை இன்னும் விரிவு கொண்டது.

காதல் என்கிற வகையில் கோபால்-லட்சுமி காதலும் (வாய்க்கால்),ரங்கராஜனின் ஒருதலைக் காதலும் (வரப்புகள்) தீவிர மானவை. உணர்ச்சி மயமானவை இரண் டுமே திருமணத்தில் முடியாமல் போகின்றன. வாய்க்காலின் சிறு வயது நட்பாகட்டும், வரப்புகளில் முதிர்ந்த வயதினரது நட்பாகட் டும்—மிக அன்னியோன்னியத்துடன் இருக் கின்றன.

கதை நிகழும் இடங்களை அதன் சூழலு டன் பதிய வைத்துக்கொள்வதில் பூமணிக்கு இருக்கிற அதே கவனம் பாத்திரங்களை வார்ப் பதிலும் இருக்கிறது. அங்கங்கே தலை காட்டி போகிற வெள்ளையம்மா மதினி, வையாபுரி யின் பேச்சில் தெரியவருகிற ஜின்னா சாயபு ஹெட்மாஸ்டர் முதற்கொண்டு, விளையாட்டு ஆசிரியரா்க இருந்தாலும் தமிழில் மிகுந்த பற்றுதலும இந்தி எதிர்ப்பில் ஆர்வமும் காட்டுகிறவர் பாண்டியன் (வரப்புகள்). எப் போதும் அவரிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிற, மற்றவரை நோகடிக் காத கேலிப் பேச்சுகள் அலாதியானவை. வெகு சிறப்பாகச் சொல்லத் தக்க குணாதி சயம் அவருடையது. இளம் வயதின் சுறுசுறுப் பும், அதே சமயம் முதிர்ச்சியான அறிவும், மொழிப் பற்றும், வெளியில் அதிகம் தெரியாத படிக்கு ஒவ்வொருவரிடத்தும் அவர் செலுத்து கிற அன்பும் வியக்க வைப்பன.

தன்னைச் சதா ஜாடைப் பேச்சால்



படிப்பகம்

www.padippakam.com

வேதனைப்படுத்துகிற கோபாலின் அம்மாவுக்கும்கூட அவர்கள் ஊரை விட்டுப்போகும் படியான தலைக்குனிவு ஏற்படுகையில் உதவுகிற லட்சுமி, யாரிடம் எந்த உதவிக்கும் போகக்கூடாது என இருக்கிறாரோ அந்த மனிதரிடம் போய் ரங்கராஜனுக்கு மாற்றல் வாங்கித் தரும்படி கேட்கிற தமிழய்யா, காளைக்கு தார் குத்திய இடங்களில் ஒத்தடம் கொடுக்கிற வெள்ளையம்மா மதினி என இந்த இரண்டு நாவல்களிலுமே அபூர்வமான மனசுகளைப் பார்க்க முடிகிறது.

இந்த மனிதர்கள் எளிமையானவர்கள். பூச்சுகள் அற்றவர்கள். தத்தமது குணங்களுடனேயே இயங்குபவர்கள். எதிர் நிலையில் இருக்கிறவர்களானாலும் அவர்களை நாம் வெறுக்க முடியாமல் போவதற்குக் காரணம் அவர்களது இந்த இயல்பே.

இரண்டு நாவல்களின் சிற்சில பாத்திரங்களையும் நிகழ்வுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒரே மாதிரியான அமைப்புடன் இருப்பது தெரிய வரும். முடிவிலும் கூட அப்படியே. வாய்க்காலில் கோபாலும், வரப்புகளில் ரங்கராஜனும் ஊரிலிருந்து புறப்பட்டுப் போகிற காட்சிகளுடன் கதைகள் முடிவடைகின்றன. திருமணம் நோக்கிய நிகழ்வாகக் காதலைச் சொல்வதும், வாசகனில் அழுந்தப் பதிவதற்காக சோகத்தில் கதையை முடிப்பதும் பழைய பாணியே. ஆனாலும் அவைகளையும் மீறிச் செயல்படுகிற விதத்தில்தான் இந்த நாவல்கள் இருக்கின்றன. அசலான மனிதர்களையும், இயல்பான வாழ்க்கையையும் எழுத்தில் காட்டும் பூமணியின் உலகத்தில் உலவுவது எப்போதும் போலவே சுகானுபவம்தான்.

—இரண்டாம்சித்தார்த்தன்

வெளியீடு : பூஞ்சோலைப் பதிப்பகம்
11, பாண்டிபஜார், தி. நகர்
சென்னை—17.

விலை : வாய்க்கால் — ரூ. 20-00
வரப்புகள் — ரூ. 35-00

## மதுரைக் காண்டம்

ஹெச். எஸ். சிவப்பிரகாஷும் தன் தாய் வழியில் தமிழர்; மதுரைக்காரர். தனக்குள் இளமை முதல் ஊறிய சிலப்பதிகாரக் கதை அவருக்குள் இப்பொழுது நாடகமாக கன்னடத்தில் பொங்கி வழிகிறது. தமிழ்ப் படுத்தியிருக்கிறார் பாவண்ணன்.

சிவப்பிரகாசின் நாடகத்தில் வஞ்சிக் காண்டமில்லை. பாண்டியன் நஷ்டஈடு தருகிறேன் என்று சொல்லி விட்டு அரங்கிலிருந்து வெளியேறுகிறான். கண்ணகி தற்கொலை செய்து கொள்ளவில்லை. தனக்குப் புதிதாகக் கிடைத்திருக்கிற தம்பிக்காக கண்ணன் உயிர் வாழலாம். இப்படித் தன் கதைக்குத் திறந்த முடிவைத் தந்திருக்கிறார் சிவப்பிரகாஷ். கலைத் தன்மையில் சில புதிய கூறுகளை நாம் கற்றுக்கொண்டுள்ளோம்.

இளங்கோவின் காவியத்தில் இன்னும் சில மாற்றங்களைச் செய்திருக்கிறார் ஆசிரியர். இடையர் குலத்திற்குப் பதிலாகக் கல்லுடைப்பவர்கள். இவர்களும் மாதரி குலத்தவரைப் போலவே அன்பில் செழித்தவர்கள். மதுரை நகரில் கோவலனைச் சந்திக்கிறான் கௌசிகன். இளங்கோவின் கௌசிகனைவிட இவன் நமக்கு நெருக்கமாகிறான். மூலக்கதையில் இப்படிச் சில மாற்றங்கள். கவிதைகளும், பாடல்களும் சில சேர்ந்திருக்கின்றன.

சிவப்பிரகாசத்தின் நூல் கர்நாடகம் எழுப்பும் புதிய உணர்வுகள் என்ன? காவிரியை நமக்கு மறுக்கும் கன்னடர் கண்ணகியை எவ்வாறு உள்வாங்கிக்கொள்கின்றனர்? வள்ளுவருக்கு முக்காடிட்டு வைத்திருக்கும் கொடுமை என்று தீரும்? நம்மைத் தமிழர்கள் என அவர்கள் என்று ஏற்றுக்கொள்வார்கள்?

வெளியீடு : காவ்யா

விலை : 12-00

## புன்னகை புரியும் இளவரசி

இந்தியக் கதைகள் என்பதால் இந்திய அளவிலான பிரச்சனையை உள்ளடக்கிய கதைகளை முக்கியமாகக் குறிப்பிடுவது அவசியமாகிறது. வங்காள மொழிக் கதையான ஆதாப், இந்து—முஸ்லீம் கலவரத்தின் விளைவைக் காட்டுவது. 'ஏழாவது மாடியில் இருந்து கொண்டு தலைவர்கள் முடிவெடுக்



படிப்பகம்

கின்றனர், நம்மைப் போன்றவர்கள் நாசமாகிறோம்' என்கிற ஒரு பாத்திரத்தின் குரல் ஒட்டு மொத்தமான பொதுமக்களின் மனக் குமுறலே.

வராதவன் என்ற டோக்ரி மொழிக் கதை அடுத்தது. ஜம்முவிலிருந்து அகதியாக சியால் கோட்டுக்கு வந்த காமா பண்டிதன் ஜம்முவுக்குப் போக ஆசைப்பட்டு, முயற்சிகள் தோற்று, நிராசையுடன் சாகிறான் பாகிஸ்தான் இந்துஸ்தான் பிரிவினையின் விளைவு இது. இறந்துபோன காமாவின் ஆன்மா, கல்லறையிலிருந்து வெளிப்பட்டு ஜம்முவில் இறந்துபோன அவனது மனைவி பாத்திமாவின் ஆன்மாவைச் சந்திக்கிறது. இனி சியால்கோட்டுக்குத் திரும்பப்போவதில்லை என சொல்லிக்கொண்டிருக்கும்போது மரணத்தின் தூதுவனான முல்க் —உள்—மவுத்தால் இழுத்துச் செல்லப்படுகிறது காமாவின் ஆன்மா. தீர்ப்பு நாள் வரை மரித்தோர் கல்லறையில் இருந்தாக வேண்டும். இது இஸ்லாம் மத வழக்கம். அரசியலின் வெளிவிளைவுகளையும் மத சம்பிரதாயத்தின் உள் விவகாரத்தையும் விமர்சிக்கிற சிறந்த கதை இது.

இந்தக் கதைகளை நாம் அணுகும்போது வெறுமனே வாசிப்பு நிறைவுடன் நின்றுவிட இயலாது. கடந்து செல்வதே இதன் வாசிப்பைப் பூர்த்தியாக்கும். தனி மனிதனோ குடும்பமோ, சமூகம் சார்ந்தே இயங்க வேண்டியதாகிறது. சமூகத்தின் இயக்கமும் மதம் மற்றும் அரசியல் நிகழ்வுகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றன; பாதிக்கப்படுகின்றன. இதில் எவற்றையும் பிரித்துத் தனியே காண்பது முடியாத காரியம். இவை யாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கண்ணிகள். இதன் சிக்கலை ஒரு கண்ணியை நீக்குவதன் மூலமோ மாற்றுவதன் மூலமோ சரிப்படுத்திவிட முடியுமா என்பது நம் முன் நிற்கும் ஆகப் பெரிய சவாலான கேள்வி.

கரடி, புன்னகை புரியும் இளவரசி இரண்டும் பெண்ணிய, உருவகக் கதைகள். சில தலித்தியக் கதைகளும் உண்டு. தமிழ் இலக்கியத்தில் இன்று பேசப்படுகிற தலித்தியம், பெண்ணியம் போன்றவற்றில் நிகழ்ந்துகொண்டிருக்கும் முரண் கொண்ட கருத்துகள், படைப்பு என்ற பெயரில் உரத்தெழும் பிரச்சாரங்கள் முதலியவற்றோடு இவற்றைப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

பாரம்பரியமாகத் 'தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற நமது சாதீயம், குடும்பம் முதலான அமைப்புகளையும் கேள்விக்குள்ளாக்கி அலசுவதன் மூலம்தான் இவற்றிற்கான விடை மற்றும் வழிகளை அடைகிறோம். நமது அடையாளங்கள் எனச் சொல்லிக்கொள்கிற நமது பண்பாடு, மரபு, கலாச்சாரம், மதங்கள் யாவுமே நமக்கு சுமையாகவும் இருக்கின்றன. இவற்றை மொத்தமாக விலக்கிவிட்டு ஒரு முழுமையான அமைப்பை அரசியல் ரீதியிலோ சமூக ரீதியிலோ நிறுவுவது சாத்தியமா? முன்னுரையில் சா. தேவதாஸ் சொல்கிறபடி ஒவ்வொரு மாநிலத்தவருக்கும் இயற்கை வளம், நிதி ஆதாரங்களில் சம நீதி கிடைத்துவிட்டால் பிரிவினைப் பிரச்சனை முழுதும் ஒழிந்துவிடுமா?' என்பவற்றையும் சிந்திக்க வேண்டியதாகிறது.

இவற்றிற்கான பதில்களும் தர்க்கங்களும் வெவ்வேறு வகைப்பட்டதாக இருப்பினும், அவற்றுக்கு இடமளிப்பது இந்தத் தொகுப்பு.

—இரண்டாம் சித்தார்த்தன்

நூல் : புன்னகை புரியும் இளவரசி
(இந்தியச் சிறுகதைகள்)

தொகுப்பும்
மொழி பெயர்ப்பும் : சா. தேவதாஸ்
வெளியீடு : மருதம், பெரியகாப்பாங்குளம்
(அஞ்சல்)
நெய்வேலி—607802.
பக்கம் : 192 விலை : ரூ. 45-00

## தெலுங்கானா சொல்லும் கதைகள்

வரலாறு என்பது மன்னர்களின், மந்திரிகளின் வரலாறாக எப்போதும் இருக்க முடியாது. அது மக்களின் வரலாறுதான். அதிலும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்றும் சொல்லலாம். சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக எப்போதும் மக்கள் போராடியிருக்கிறார்கள்; போராடுகிறார்கள். மக்களின் போராட்டங்களை சிதறடிக்க, வெற்றி கொள்ள சாதி முதல் ராணுவம் வரை பல்வேறு ஆயுதங்களை அரசமைப்பும் அதிகார

மும் பயன்படுத்தி வந்தன. பிளவுபட்ட மக்கள் ஒரு பொது நோக்கிற்காக எழுச்சி கொண்டு பதிலடி தந்த வீரவரலாறு தெலுங்கானாவின் சரிதம்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அங்கமான கொரில்லா யுத்தம் மூலம் கிராமத்தின் ஏழை எளிய தாழ்ந்த மக்கள் வழி நடத்தப்பட்டனர். அக்காலகட்டத்தின் வேதனை தோய்ந்த பதிவு களை, காயம் படிந்த நினைவுகளை இலக்கிய மும் பதிவு செய்தது. எனினும் இதில் இலக் கியத்தின் அழகியல்/கலாபூர்வ வரம்புகளும் மீறப்பட்டன. அதற்குக் காரணம் அதில் அம் மக்கள் படைப்பாளிகளுக்கு பயிற்சி இல்லை என்று தெரிவிக்கிறது இத்தொகுப்பின் முன்னுரை. வாசிரெட்டி நவீன் அவர்களின் முன்னுரை இத்தொகுப்பின் கதைகளைக் காட்டிலும் கூடுதல் செய்திகளைக் கூறுகிறது.

ஒரு காலகட்டத்தின் நிகழ்வை கதை களாக்குவது பரவலான மக்களை சென்ற டையவே. பல்வேறு மொழிகளில் அவற்றை மொழி பெயர்ப்பதும் அதற்காகவே. தமிழாக் கம் செய்த சாந்தாதத் தெளிவாகவே காரிய மாற்றியுள்ளார்.

கதைகளைப் பொறுத்தவரை கோழி விருந்து கேட்கும் துரைகளின் சுரண்டலும், போராட்டத் தீ பரவுவதை சகிக்காத படேல் பட்வாரிகளின் வயிற்றெரிச்சலும், கொதித்த அடுப்பில் நீராவிபோல காணாமல் போகிற அதிசயத்தைக் கூறும் கதைகளே இவை. சங்கம் அமைத்தலும், சிறுவயதிலிலேயே போராட்டத்தில் ஈடுபடுதலும், வரி கொடா இயக்கமும், குமரய்யாவின் மரணமும், மக் களுக்கெதிரானவர்களை எச்சரிக்கிற நோட்டீ சும், கொரில்லா யுத்தமும், ரேணிகுண்டா போராட்டமும் ராமிரெட்டியின் ஆயுதக்கிடங் கும், கணவனை போராட்டத்திற்கு அனுப்ப குழந்தையை தாரை வார்த்து தந்த ஒரு தாயின் தியாகமும், தெலுங்கானா கதைகளின் அடிநாதங்கள். இது சுருதிகலைந்த சங்கீதம் தான். எனினும் வாழ்வா சாவா என்ற யுத்தத்தின் கோஷம் மெல்லிசையாக ஒலிக்க வேண்டிய நிர்ப்பந்தமில்லை. இக்கதைகளின் கலாபூர்வமான குறைபாடுகள் கடந்து, பாசாங்கற்று இதில் படிந்துகிடக்கிற அவல வாழ்வின் குரல் மேலெழுந்து, தலைநிமிர்ந்து வாழத் துடிக்கிற துணிவை நிச்சயம் வரவேற்க வேண்டும்.

ஆயினும் ‘சித்தாந்தமற்ற நடைமுறை குருட்டுத்தனமானது’ என்ற லெனினின் வாக் கும் நினைவு கூரத்தக்கது. போராட்டம் என்பது சித்தாந்தமாக முடியாது. அது ஒரு வழிமுறை மட்டுமே. தெலுங்கானாவின் தோல்வியும், நக்ஸலைட் இயக்கங்களின் சிதை வும் இதையே நிரூபணம் செய்கின்றன. இடது சாரி இயக்கங்கள் தர்க்கரீதியாக தங்களை முன்னெடுத்துச் செல்ல தெலுங்கானா வரலாறு ஒரு பாடமாக இருப்பதுபோலவே, அதன் துணைப்பாடமாக இக்கதைகளும் இருந்து உதவக்கூடும். தெலுங்கானா போராட்டம் ஓர் எதிர்வினை சித்தாந்த ரீதி யாக பலப்படுத்தப்பட்ட ஒரு நடைமுறை அதில் இல்லை. அடிக்கு பதிலடி என்ற நியா யம் மட்டுமே பிரதானம். பதிலடியாய் அதிகார வர்க்கம் திருப்பித் தாக்குகையில் என்ன செய் வது என்று சிந்தனையை வழி நடத்திச் செல் வதே சித்தாந்த அறிவு.

தெலுங்கானா நிகழ்வு ஒரு காயம், வடு, ஆறாத ஒரு ரணம். அதனால்தான் சூரியனும் சிவந்த காயமாக நிலவும் சீழ் ஒழுகும் புண் ணாகத் தோன்றுகிறது. அழகியல் செத்துப் போன ஒரு யுத்தகளத்தின் சூறாவளிச் சேதங் கள், அதன் மிச்சங்களே தெலுங்கானா கதைகள்.

—செந்தூரம் கே. ஜெகதீஷ்

தமிழாக்கம் : சாந்தா தத்

வெளியீடு : தாமரைச் செல்வி பதிப்பகம்
சென்னை—78.

விலை : ரூ. 45-00

## முகம் தேடும் மனிதன்

குமார் மூர்த்தியின் எழுத்துலகப் பொதுந் தன்மையாக இழப்பின் துயரம் என்று குறிக்க லாம். சொந்த மண்ணில் நடக்கிற போர் எல்லாவற்றையும் கலைத்துவிடுகிறது. உயிரின் பயம் எங்கெங்கோ தாவிப்பறந்தோட வைத்து விடுகிறது. உயிர் மட்டும் இன்னொரு மண்

www.padippakam.com

ணில் ஒட்டியிருக்க, மனம் முழுக்கக் கண்ணால் பார்க்க முடியாத சொந்த மண்ணில் ஒட்டிக் கிடக்கிறது. அந்த மண்ணில் கழித்த இளமை மீண்டும் மீண்டும் மனசிலெழுந்து ஏக்கங் கொள்ள வைக்கிறது. ஆனால் திரும்பவும் போக முடியாத இடமாகிவிட்ட பிறந்த மண் பேரிழப்பாகத் தைக்கிறது. இந்த இழப்பின் துயரத்தில் இருந்து விடுதலை. இல்லை இப் பள்ளத்தை நிரப்பிக் கொள்ள எழுத்தைப் பயன்படுத்துகிறார் குமாரமூர்த்தி.

பிறந்த மண்ணின் ஞாபகங்களே கதைப் பொருளாகி விட்ட பின்பு மரணங்களும் குண்டு வெடிப்பும் அநேகமாக எல்லாக் கதை களிலும் திரும்பத் திரும்ப வருகின்றன. மரணத்தை நேருக்கு நேர் பார்த்த ஒரு மனம் உள்ளூர உணரும் சரிவுகளும் சோர்வும் கணிச மானவை. இத்தனைக்குப் பிறகும் குமார் மூர்த்தியால் எழுத முடிகிறது எனில் வாழ் வின் அடைக்கலமாக எழுத்து மாறிவிட்ட சரித் திர நிர்ப்பந்தம்தான் காரணம்.

தொகுப்பின் மிகச் சிறந்த கதை 'மஞ்சள் குருவி'. கனடா நாட்டில் ஏதோ ஒரு பூங்கா வில் செத்துக் கிடக்கிற ஒரு குருவியின் வழி யாக ஊரில் பார்த்த மஞ்சள் குருவியின் ஞாப கம் பொங்குகிறது. அதன் வழியே ஊர் ஞாப கம் பொங்கி எழுகிறது. இரண்டு குருவிகளுக் கும் நடுவே தாண்டி வந்து நிற்கிறது காலம். காலத்தின் ஓட்டத்தையும் வாழ்வின் இருப் பையும் இணைப்பதும் பிரிப்பதும் மரணம். 'கல்வீடு' கட்ட நினைக்கிற பரமேஸ்வரனை படிக்கும் போதே தாயகத்தைக் கட்ட எண் ணும் ஓர் இனத்தையும் நம்மால் இணைத்துப் பார்த்துக் கொள்ள முடிகிறது. அது சிதை யும்போது, கனவுகளின் சிதைவையும் பொருத் தியே உணர முடிகிறது. இந்த இணைத்துப் பார்த்தலுக்குக் கதையின் பிம்பம் தாராள மாக இடம் தருகிறது. இளமையில் வைத்து ஆட விரும்பிய 'சின்னத் துப்பாக்கி'க்கு மிக அதிர்ச்சியான முறையில் பலியாகிறான் ஓர் இளைஞன். பலி மனிதர்களின் சவக்குழியை அவர்களை வைததே தோண்ட வைக்கிற கொடுமை மனசை உறைய வைக்கிறது. 'ஹனிபாவும் இரண்டு எருதுகளும்' கதையில் ஒரு மழை நாளில் தென்னை மரமொன்று கூரைமேல் விழுகிறது. வீட்டுக்குள்ளேயே இருந்திருப்பின் மரணம்தான் நேர்ந்திருக்கும். அப்படி நேரா வண்ணம் தன் அழைப்பு மூலம் காப்பாற்றுகிறது எருது. பிறிதொரு கட்டத்தில் அதே எருதின் மரண ஓலத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் அந்த வீட்டு ஜனங்கள் ஊரைவிட்டு வெளியேறுகிறார்கள். நிர்ப்பந்தம் அப்படி அந்த மனநெருக்கடி எவ் வளவு வேதனையானது. 'உடைபடும் சுவர்' நன்றாக வந்திருக்கக்கூடிய கதை. ஒரு புறம் பெர்லின் சுவர் இடிப்பு, மறுபுறத்தில் கண வனுக்கும் மனைவிக்கும் இடையே சூழலால் உருவாகிவிட்ட தடுப்பு சுவரின் தகர்ப்பு. பெர்லின் சுவரோடு இணையாமல் போயிருந் தால், அது மிகச் சாதாரண கதை யாகியிருக் கும் அபாயம் உண்டு. சாமர்த்தியமாக அதை இணைத்துப் போகும் குமார்மூர்த்தி கதை முடிந்த பின்னும் ஒரு பக்கம் நீட்டியிருப்பது சற்றே கவனக் குறைவான விஷயமென்றே தோன்றுகிறது.

புலம் பெயர்ந்தோர் எழுத்துகளில் காணக் கிடைக்கும் பொதுவான அம்சங்களைத் தன் விசேஷ கவனத்தால் கூரிய பிம்பங்களாக்கிக் காட்டுவதன் மூலம் குமார்மூர்த்தி கவனிக்கப் பட வேண்டிய படைப்பாளியாகிறார். இத் தொகுப்பு அதற்குச் சான்று.

—பாஸ்கரன்

வெளியீடு : கமலம் விற்பனை

உரிமை : திலீப்குமார்

25, 3-வது டிரஸ்டு கிராஸ்தெரு,
மந்தைவெளிப்பாக்கம்,
சென்னை—28.

விலை : ரூ. 20-00

**களவு**

''ஆராரோ'' நாவல் எழுதும் பொழுது விழித்துக் கொண்ட படைப்பாளி, அதன் பிறகும் தன்னை விடாப்பிடியாக துரத்து கிறான் என்று முன்னுரையில் சொல்கிறார் சுந்தரபாண்டியன். அந்த ஆறுமுகம் இப் பொழுது விடலைப் பருவத்தனாகியிருக்



படிப்பகம்

கிறான். பெண்களை இளைஞர்கள் வேட்டையாடுகின்றனர். கிராமத்துச் சூழல் பெண்ணும் ஆணை அபகரித்துக் கொள்ளத் தன்னை முதலில் அவனிடம் இழந்தாக வேண்டும். ஆண் அடுத்த பெண் தேடிச் செல்கிறான் அல்லது பெண்ணைக் காரில் கடத்திச் செல்கிறார்கள். ட்ரான்சிஸ்டரில் சோகப்பாடல் கேட்டுக்கொண்டிருக்கிறாள் பெண். இப்படிச் சில பெண்களின் கதைகளை இந்தத் தொகுப்பில் வைத்திருக்கிறார் ஆசிரியர். எல்லாக் கதைகளின் ஊடும் ஆறுமுகம் இருக்கிறான். திருமணம் செய்து பத்து ஆண்டுகள் கழித்தே குழந்தை பெற்றுக்கொள்கிறாள். இங்கும் பெண்ணுக்கு வேதனை. களவு செய்த திருடனைக் கண்டுபிடிக்கும் முயற்சி வேண்டாம் என்கிறார் அப்பா.

நம்முன்னோர் எவ்வளவு நல்லவர். நாட்டார் வழக்காற்றியலும் செக்ஸும் இணைவதை நம்மால் பிரிக்க முடியுமா? ஆறுமுகத்தின் கதை மேலும் தொடரட்டும்.

**பத்துக்கதைகள்**
**வெளியீடு : காவ்யா**
**பக்கம் : 181 விலை : ரூ. 30-00**

## பொய் திரை

வாசகனை, பிரமிக்க வைக்கிறவன் எழுத்தாளன் அல்ல...அவன் ஒரு மோடி மஸ்தான்... இவனைப் போல் அல்லாது, படிக்கிறவர் கண்ணாடியில் முகம் பார்ப்பது போல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறவனே எழுத்தாளன்... இது இன்றைய இலக்கியச் சூழலில் முற்போக்கு எழுத்தாளர்களால் மட்டுமே முடியும் என்பதை தோழர் க. சு. வேலாயுதன் நிருபித்திருக்கிறார்.

—சு. சமுத்திரம் (முன்னுரையிலிருந்து)

**ஆசிரியர் : கா. சு. வேலாயுதன்**
**வெளியீடு : குமரிப் பதிப்பகம்**
நாகப்பட்டினம்—611001.
**விலை : ரூ. 25-00**

## கூனலும் நிமிரும்

'மனசுக்குள் வியர்வை' என்ற கதையின் தலைப்பே ஒரு தேர்ந்த எழுத்தாளனின் வருகையைக் கட்டியம் கூறுவதாகத் தோன்றுகிறது. ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பெண்படும் அவலங்களைத் தீர்க்க ஆண்தான் துணைபுரிய வேண்டும் என்ற அவல நிலையில் பெண்கள் இருப்பதை இக்கதையில் காட்டுகிறார். சிவசங்கரின் கதைகள் பல்வேறு களங்களில் நாம் காணத் தவறிய சாதாரண மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை தொட்டு எழுதப்பட்டவையாக உள்ளன. சிவசங்கரின் கதைகள் தரமான கதைகளாகவும், சுவையான கதைகளாகவும் திகழ்கின்றன. தமிழ் இலக்கிய உலகுக்கு புதுவரவான இச்சிறுகதை நூலை உளமாரப் பாராட்டி நீங்களும் நல்வரவு கூறுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

—மு. கு. ஜகந்நாதராஜா
(முன்னுரையிலிருந்து)

**ஆசிரியர் : க. சிவசங்கர்**
**வெளியீடு : பூவழகி பதிப்பகம்**
சென்னை-14.
**விலை : ரூ. 20-00**

## விமோசனம் நாளை

ஈழப்பின்புலத்தைக் கொண்டு பல நாவல்கள் வந்துவிட்டன. அதன் போராட்டம், ராணுவக் கொடுமை, சித்திரவதை முகாங்கள், போராளிகள் எழுச்சி, தினசரி வாழ்வின் சிதைவு, இடப்பெயர்ச்சி எனச் சகலமும் உடனுக்குடன் படைப்புகளாகிக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. பெரிதும் ஒன்றிலிருந்து மற்றொன்றை வித்தியாசப்படுத்திச் சொல்ல இயலாத அளவு ஒரே அமைப்பைக் கொண்டவையாகி விட்டன. செ. யோகநாதனின் 'இரவல் தாய்நாடு' வெளி வந்த சமயத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி எல்லையை அதற்கப்புறம் எந்தப் படைப்பும் தாண்டவில்லை. அநேகமாகப் பலவும் அதன் வரம்புக்குள்ளேயே அமைந்துவிட்டன. முல்லை அமுதனின் நாவலும் இதற்கு விதிவிலக்கல்ல. நாவல் அமைப்புக்கான சிக்கலோ, மோதலோ இதில் இல்லை



படிப்பகம்

www.padippakam.com

ஓர் எளிய கதையை எளிமையான முறையில் சொல்லி இருக்கிறார். பலவீனமான மொழி அமைப்பு மிகவும் சோர்வூட்டுகிறது.

—பாஸ்கரன்

ஆசிரியர் : முல்லை அமுதன்

வெளியீடு : கனவு, பாண்டியன்நகர்
திருப்பூர்—641602.

## கவிதைத் தொகுப்புகள் மதிப்புரை

கடைசி மழைத்துளி

இன்று தமிழ்க் கவிதை, தமிழன் கவிதை எவை பற்றிச் சொன்னால் தமிழ்க் கவிதையாக இருக்கும்? பெண் உரிமை, சாதி ஒழிப்பு, தமிழ் ஈழவிடுதலை என்று பேசுவதோடு தமிழ் நிலத்தின் இயற்கை நாசம் குறித்தும் சொல்ல வேண்டும். கவிஞர் அறிவு மதி இவை பற்றி இந்தத் தொகுப்பில் கவிதை செய்திருக்கிறார். தமிழையும் கவிதையையும் தனக்குள் விதைத்துக்கொண்டவர் அறிவுமதி. ஐக்கூ என்றாலும் இவை குறுங் கவிதைகள்.

பறையன் சுடுகாடு
படையாட்சி சுடுகாடு
தலை முழுக ஒரே ஆறு.

ஊருக்கு ஊர் வட்டிக்கடை
பொது இடங்களில் தண்ணீர்த்தொட்டி
காறித் துப்புகிறான் கணைக்கால்
இரும்பொறை.

நெருப்புதான் பெண்
அம்மாவுக்கு அடிபயிற்றி
மாமியாருக்கு அடுப்படியில்

இவ்வாறு அழுத்தந்திருத்தமாக சொற் சிற்பங்களாக கவிதை தருகிறார் அறிவு மதி.

கடைசி மரம் வெட்டப்படுகிறது பார்த்துக் கொள். கடைசி மழைத்துளி என்கிறார் ஒரு கவிதையில். மரங்கள் வெட்டப்படுவதற்கும் வன்முறை பெருகுவதற்கும் இடையில் நுட்பம் கண்டு இணைக்கிறார். வண்ணத்துப் பூச்சிகள் விற்பனைக்கு வந்த நிலையில் மகரந் தங்களுக்காக பூக்கள் அழும் என்கிறார். இயற்கை அழிய வாழ்வு சுருங்கும் இந்நிலையில் கடல் ஆழம் குறையும், வானம் அகலம் குறையும் என்கிறார்.

இப்படி தொலைவுகளை, தொலைதூரங்களை நமக்குள் கொண்டுவருகிறார். நமக்குள் இணைக்கிறார். கவித்துவம் செறிந்த கவிதைகள் இவை. தொகுப்பின் தொடக்கத்தில் கண்ணதாசன், இறுதியில் காசி ஆனந்தன். இவர்களும் இளமைக் காலத்தில் இயற்கையோடு இவர்கள் கொண்டிருந்த நேசத்தை இன்றைய நிலையில் சோகத்தோடு சொல்லுகிறார்கள். இயற்கை அழிந்த பிறகு எந்தத் தமிழ் நிலத்தை நாம் மீட்கப் போகிறோம்.

பசுவையா 107 கவிதைகள்

என் கவிதையொன்று
கவ்வும் காலத்தின் வாயிலிருந்து
தப்பித்துவிடும்

என்று பசுவையா நம்பிக்கையோடு பேசுகிறார்.

அந்தக்கவிதை பள்ளிச் சிறைக்குள் அடைபட மறுத்து ஊரை விட்டோடும் சிறுவனுக்கும், மணம்முடிந்த தருணங்களில் கண்கள் நிறையும் பெண்களுக்கும், மனைவியை முதுமை காலத்தில் இழந்தவனுக்கும் புரியும் என்கிறார். இப்படிப்பட்ட எளிய மனிதருக்கானது தன்னுடைய சிறந்த காலத்தை வென்று நிற்கும் ஒரு கவிதை என்று விளக்குகிறார்.

பெரும் காட்சிகளை காணத் தூண்டுவது, விடுதலை உணர்வை வற்புறுத்துவது, அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்துவது, போலித் தனங்களைத் தோலுரிப்பது போன்ற கவிதைகள் தொகுக்கப்பட்டிருந்தாலும் அவைகள் எல்லாம் காலத்தை வென்று நிற்பன



படிப்பகம்

www.padippakam.com

ஆகாதோ கவிஞருக்கு என்ற கேள்வியை கேட்கத் தூண்டுகிறது.

தன்னுடைய கவிதைகள் வாழையடி வாழையாகப் பிறந்து வரும் தமிழ் வாசக னுக்கு ஆனதல்ல, மாறாக இனி என்றோ பிறந்து வரும் வர இருக்கின்ற 'யாரோ ஒரு வனுக்காக, என்ற எச்சரிக்கை கவிதையைப் படிக்கின்ற வாசகனை மிரட்டிவைக்கிறது. பசுவையாவைப் படிக்கின்ற வாசகன் தன் அறிவின்மேல் ஐயம் கொண்டிருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

வாசகனின் புரிதலுக்குள் வந்துவிட்ட வுடன் அங்கேயே தன்பயணத்தை முடித்துக் கொள்கின்ற அவலம் பல கவிதைகளுக்கு நேர்ந்திருப்பினும், வாசகனின் மனதில் பயணத்தைத் தொடரும் கவிதைகளாகவும் பல படைக்கப்பட்டிருக்கின்றன.

பெருங்காப்பியங்களில் பேசப்படும் தரி சனங்களை தனிக் கவிதைகளாக அந்தந்தக் காலங்களில் தொகுத்தளிப்பதும் ஒரு வகைத் தேவையே. அந்தத் தேவையை பசுவையாவின் கவிதைகள் நிறைவு செய்கின்றன.

கவிதைகள் பற்றிப் பேசும் கவிதைகள், சாவு பற்றிய மனநிலையை வெளிப்படுத்தும் கவிதைகள் என தொகுக்கப்படும் கவிதை களால் வாசகரோடு எதைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார் கவிஞர்?

வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம்
நாகர்கோவில்.

விலை : ரூ. 60-00

உயிர்த்திரு - ஆர் கே கவிதைகள்

கடவுளைவிட நுட்பமான அது
கவிதைக் கண்
அந்தப் பார்வைக்காக ஏங்கும்
இரு கண்ணீர்க் கண்கள் இங்கே

என்று தொடங்கி இயற்கை அழகிலும், குழல் இசையிலும், நடன அசைவிலும், இலைகளின் தோற்றத்திலும் மூழ்குகிறார் ஆர்.கே. கவி தையை, கடவுளை, கலையை வியப்பதுபோல தன் இருப்பின் அழகையும் வியக்கிறார். ஜே.கே.யுடன் விவாதத்தில் இறங்குகிறார். கிருஷ்ணன் ராமன் அவதாரங்களில் மனம் தோய்ந்து பாடுகிறார். நிழற்படத்தில் காணும் தன் தந்தையின் உருவத்தைப்பார்த்து அவரின் இறுதிச் சடங்கை நினைவுகூறுகிறார். தன் வீட்டில் முன்போல் குழந்தைகள் வந்து விளையாட முடியாத சூழலுக்கு வருந்துகிறார் டி.எஸ். எலியட்டின் கோட்பாடுகளை கடுமை யாக விமர்சனம் செய்கிறார்.

தன்னுடைய நியாயங்களை நிறுவுவதற் காக நிறையச் சொற்களைக் கொட்டித் தன் கவிதையை தானே நீர்த்துப் போகவும் செய் கிறார். எழுதிய வரிகளையே திரும்ப வேறு வேறு கவிதைகளில் எழுதிச் செல்கிறார்.

கண்களில் அள்ளி இறைக்கப்பட்ட மண் ணாகச் சொற்களை நிறைப்பதால் படிக்கின்ற வாசகனின் மனம் கவிதையில் நனையுமா?

வில்லியம் பிளேக், பிரௌனிங், ஷெல்லி, கீட்ஸ் போன்ற பலரின் உத்திகளைப் பயன் படுத்தி தமிழில் கவிதை வடிக்க முயன் றுள்ளதைப் பாராட்டலாம்.

வெளியீடு : ஆர். கே.
44A, வைத்தி தெரு,
சேலம்—636002.

விலை : ரூ. 40-00

ஒருகணமேனும்

—உதயசங்கர்

வாழ்வின் நம்பிக்கை, நம்பிக்கையின்மை கள், இயற்கையோடு மனசொன்றும் நிலை; ஆனால், ஒன்றிப்போக முடியாதபடி அன்பும் நேசமும் தொலைத்த வாழ்க்கை அதுவும் நகர வாழ்க்கை. அதன் காரணமாக வாழ்க்கை யோடு, சகமனிதனோடு நடத்தும் போராட் டம் இவரின் பெரும்பாலான கவிதைகளில் இடம் பெறுகின்றன. வெற்றி, தோல்வி பற்றி பல கவிதைகளில் பேசினாலும், தான் சாமான் யன் என்பதை உணர்ந்து சமரசத்திற்கு முயற் சிக்கிறார். வாழ்க்கை பந்தயம் இல்லை. சகமனிதனும் போட்டியாளன் இல்லை. இந்த தெளிவு வந்தால் பகிர்ந்து கொள்ளுதலும், நேசமும் சாத்தியப்படும் என்கிறார். வாழ் வின் தாளகதியில் இணையத்தடுமாறும் வண் ணத்துப் பூச்சிபோல வாழ்ந்து கொண்டிருப்ப தாகக் கூறும் கவிஞர், பின்னர் வரும் கவிதை யில் வாழ்வின் இன்பமுணர்ந்த வண்ணத்துப் பூச்சியாகப் பறக்கிறார்.

—மதுசூதனன்

வெளியீடு : ஸ்வேதா பதிப்பகம்
கோவில்பட்டி.



படிப்பகம்

www.padippakam.com

## சூத்ரதாரியின்சிறுகதை

(128-ம் பக்கத் தொடர்ச்சி)

பலம் வந்ததோ... அவனது குரல் வளையை பிடித்து நெரித்தார். முகமெங்கும் சினத்தின் உக்கிரத்தில் பொங்கிய வியர்வையில் ஆவேசத்தின் கொதிப்பு மினுமினுத்தது. எதிர்பாராத திடீர் தாக்குதலில் நிலை குலைந்து கிடந்த அந்த இளைஞன் சுதாரிக்கிற சந்தர்ப்பத்தை மறுத்தவராய் சிவமணி நாடார் மூர்க்கத்தனமான தாக்குதலின் உச்சத்திலிருந்தார். புகைப் படக்காரன் நாடாரின் தோளில் கைகளை இறுக்கி பின்னால் இழுக்க முயற்சிக்க, நாடார் உடலை முறுக்கி உதறியதில் அவன் சுவரில் மோதி விழுந்தான், உச்ச வேகத்தில் இருவரையும் மாற்றி மாற்றி புடைத்தெடுத்தார்.

அலறல் சத்தம் கேட்டு பக்கத்து விட்டுக் காரர்கள் வந்து, நாடாரை பிடித்து நிறுத்தியதும்தான் இளைஞர்கள் இருவரும் தரையிலிருந்து எழுந்திருக்கவே முடிந்தது. முகமெல்லாம் கிழிந்து ரத்தம் வடிய, கிழிந்தவுடைகளுடன் பயந்து ஓடினார்கள். யாரோ கொடுத்த தண்ணீரைக்கூட வாங்கிக் குடிக்க திராணியற்றவர்களாய் ஓடினார்கள்.

''ஓடுங்கடா...சவத்து ஜென்மங்களா... காந்தியப் பத்தி பேச வந்துட்டானுங்க...அந்தாளில்லையின்னா இவனுக எல்லாம் பொறக்கறப்பவே வெள்ளக்காரன் ஒடைதட்டிப் போட்டிருப்பான்டா...திரும்பிப் பாக்காம ஓடுங்கடா... ராஸ்கோலுங்க!'' மூச்சு வாங்கக் கத்தியபடி திண்ணையில் உட்கார்ந்தவர் சொம்புத் தண்ணீரை மார் முழுக்க இறைத்தபடி தாவித் தாவிக் குதித்தார்.

சுதந்திர தின மலரில் சிவமணி நாடாரைப் பற்றி பிரமாதமான படங்களுடன் விரிவான கட்டுரை வந்திருந்தது. அடிவாங்கின பயமும் மரியாதையும் கட்டுரையை படிக்கும்போது நாட்டாருக்கு பிரத்யேகமாகத்தெரியஅட்டகாசமாய் சிரித்துக் கொண்டார்.

''தாத்தா...மளிகைக் கடைக்காரன் சாமான் தரமாட்டேனுட்டா...ஏன்னு கேட்டா போய் நீ உங்க நாடாரையே வரச்சொல்லுன்னு சொல்றான்''-கிருத்திகா அலுப்பாய் சொல்லிக் கொண்டே பிளாஸ்டிக் கூடையை திண்ணையில் வைத்தாள்.

சிவமணி நாடாருக்கு மளிகை சாமான் வாங்குவது, தண்ணீர் பிடித்து வைப்பது, லாண்டரியில் துணி போட்டு வாங்கி வைப்பது எல்லாம் கிருத்திகாவின் வேலைதான்.

சிவமணி நாடார் புரியாதவராய் தலையைத் தடவிக்கொண்டார். வழக்கமாக முதல் வாரத்தில் மளிகை சாமான் கொடுத்தனுப்புவது தானே, கணக்கு வைத்துக் கொண்டு தேவையானதைக் கொடுத்தனுப்பிவிடுவான். வாடகை வசூலானதும் பணத்தைக் கொண்டு கணக்கை செட்டிலாக்கி விடுவார். தேவையில்லாமல் மளிகைக் கடைக்கு போவதெல்லாம் கிடையாது. எல்லாம் கிருத்திகாவேதான். நாடார் கண்டு கொள்வதில்லை என்பதற்காக எடையிலே விலையிலோ ஏமாற்றம் செய்வதுமில்லை. எது கேட்டாலும் கேள்வியில்லாமல் அனுப்பி வைப்பவன் இது மாதிரி சொல்லியனுப்பியது அவருக்கு புதிதாயிருந்தது.

''சரி வா... போலாம்...என்னன்னு கேட்கலாம்...'' பச்சைக்கரை துண்டையெடுத்து தோளில் போட்டுக் கொண்டு கிளம்பினார். கூடையையெடுத்துக் கொண்டு கிருத்திகா கூடவே நடந்தாள்.

கடையில் கொஞ்சம் கூட்டமாயிருந்தது. கடைக்காரன் ஏதோ லிஸ்டில் விலை போட்டு கூட்டிக் கொண்டிருந்தான்.

''நாடார் வந்துட்டாரு'' பொட்டலம் கட்டிக் கொண்டிருந்த பையன் சொன்னதும் தலையை நிமிர்த்தினான் கடைக்காரன். முகத்தில் சிரிப்பில்லை. திரும்பவும் கூட்டலைத் தொடர்ந்தான்.

''என்ன சண்முகம்...என்னைய வரச் சொன்னியாமே...'' சகஜமாகவே கேட்டார் நாடார்.

''ஆமா நாடாரே...வரத்தான் சொன்னேன். பணம் குடுத்து ரெண்டு மாசமாச்சு... அறுநூறு ரூபா பக்கம் பாக்கியிருக்கு...இன்னமும் சாமான் வேணுமின்னு ஆள அனுப்பிச்சா என்ன அர்த்தம்னு கேக்கலாமுன்னுதான் வரச் சொன்னேன்'' சண்முகத்தின் குரலில் கோபம் தெறித்தது.

கடையிலிருந்த கூட்டம் நாடாரை வேடிக்கை பார்ப்பது அவருக்கு சங்கடமாயிருந்



படிப்பகம்

www.padippakam.com

கிருத்திகாவுக்கு நாடாரின் நடவடிக்கை எப்போதுமில்லாத பயத்தை தந்தது. பத்து மணி வரைக்கும் அவரது திண்ணையிலேயே உட்கார்த்து கொண்டு பேச்சு கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''இந்த நாடு உருப்படாது கிருத்தி... அதான்...வாய்க்கு வந்தபடியெல்லாம் பேச றவன்தான் இங்க நல்லாயிருக்கான். மண் ணையும் மனுசனையும் மதிக்கத் தெரியாதவன் தான் இங்க மகான்... இதெல்லாம் நமக்கு ஒத்து வராது...அதான் எல்லாத்தையும், தலை முழுகிட்டேன்...இவனுக சாவகாசமே நமக்கு வேண்டாம்...''

மானம் சிறிதென்றெண்ணி
வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர்க் குலங்கள்தன்னில்-கிளியே
இருக்க நிலமையுண்டோ...''

கண்ணில் வழியும் நீருடன் ஒங்கி பாடிக்கொண் டிருந்தார்.

காலையின் வெப்பமற்ற வெளிச்சம் இதமாயிருந்தது. வாசலைக் கூட்டித் தண்ணீர் தெளித்துவிட்டு நாடாரின் அறைக் கதவை தள்ளித் திறந்தாள் கிருத்திகா...பூவின் மணம் குப்பென்று நாசியைத் தாக்கியது... சூரிய வெளிச்சம் படுக்கையில் பரவ...தலையிலணிந்த கதர் தொப்பியுடன் சிவமணிநாடார் மூவர்ணக் கொடியை நெஞ்சு நிறைய போர்த்திக் கொண்டு படுக்கையில் கிடந்தார். நேர் மேலே சுவரில் மாட்டியிருந்த அவரது புகைப் படத்தில் பூமாலை அசைந்து கொண்டிருந்தது.

குறிப்பு: குமரன் பிறந்த ஊரில் உண்மையாக வாழ்ந்து இறந்த ஒரு மனிதனின் கதை என்கிறார் இதன் ஆசிரியர்.

---

## கவிதை நூல்கள் மதிப்புரை

(144-ம் பக்கத் தொடர்ச்சி)

### நானும் சாத்தானும் நண்பர்கள்

*- வளன் -*

கிறித்துவ மரபுக்குள் இருந்து வரும் எதிர்ப்புக்குரல் இவருடையது. கிறித்துவ மரபுப்படி பெண்ணும், சாத்தானும் பாவம் செய்தவர்கள்; பாவத்தின், தீமையின் குறியீடு கள், அவர்களுக்கு இரட்சண்யம் கிடையாது. ஆனால், கவிஞர் சாத்தானைத் தன் நண்பன் எனக்கூறுகிறார். பெண்ணுக்குக் கிடைக்கும் விடுதலைதான் உனக்கான உண்மையான விடுதலை என்கிறார் பெண்ணோடு உடன் பட்டுப் பேசுகிறார். அறிவு அவசியமானதே, அவளைப் பாவி என்று சொல்வது பாவம் என் கிறார். இருளின் பின்னணியில்தான் ஒளி என்று கவிஞர் கூறுவது சாத்தான் இல்லாமல் கடவுள் இல்லை என்பதை உறுதிப்படுத்து கிறது. உண்மையில் சாத்தானுக்கு மனித யதார்த்தத்தில் ஒரு முக்கிய பங்கிருக்கிறது. இது இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியாது. மொத்தத் தொகுப்பில் இரண்டு/மூன்று நீண்ட கவிதைகள் மட்டுமே குறிப்பிட்டுச்சொல்லும்படி அமைந்துள்ளன. சூரியக்காமுகன், காற்றுச் சண்டாளி, பார்பர்ஷாப் கண்ணாடிகள் என்பது போன்ற ஒரு சில வார்த்தைப் படிமங்கள் கவிதையின் அர்த்தத்தை ஆழப்படுத்துகின் றன.

—மதுசூதனன்

வெளியீடு: அனிதா பிரசுரம், உறையூர், திருச்சி.

### சிபிச்செல்வன் கவிதைகள்

இயற்கை சிபிச் செல்வனுக்கு எல்லாமாக இருக்கிறது. வெறும் இயற்கையாக நின்று போய் விடுவதில்லை. சங்கப் பாடல்களைப் போலத் (அவற்றின் தாக்கம் நிறைய இருக் கிறது.) தோற்றத்திற்கு மட்டுமே இயற்கை. அதைக் காட்சிப்படுத்தும் நோக்கிலும் அடுக்கிச்



படிப்பகம்

சொல்லும் பாங்கிலும் குமிழியிட்டுப் பெருகும் ஓர் உள்ளத்தின் உணர்ச்சிகள் பிரிக்கவியலாமல் கலந்து கிடக்கின்றன. மஞ்சள் மூக்கழகு மைனாவும் குன்றிமணிக்கருப்பும் மட்டுமல்ல; உணவு இழுத்தலையும் மல வண்டுகளும் இங்கு எந்த பிரயாசையுமற்றுப் பதிவாகின்றன. இயற்கை எல்லா புறங்களிலும் சிதைக்கப்படும் சூழலில் இந்தக் கவிதைகளில் இயங்கும் இயற்கையின் வீர்யம் கலைகளின் மீது பெரும்நம்பிக்கையைக் கொடுக்கின்றது.

பெருமாள் முருகன் (முன்னுரையிலிருந்து)
நூல் : சாம்பல்காடு

வெளியீடு : தொடர்புக்கு.
சிபிச் செல்வன்
பெரிய கொல்லபட்டி
மல்ல சமுத்திரம்-637 503

ஆறு மாசத்தில் நான்
டேபிள் கிளினிங்கில் நன்றாகத்தேறிவிட்டேன்!
தண்ணி வைக்கும் வளந்த பயல் சுந்தரம்
ஓயாமல் என்னைப்பிடரியில் அடிக்கிறான்.
எச்சி இலையும் பிளேட்டுமுள்ள
வாளியில் வீச்சம் ஜாஸ்தி
கொசுக்கடி அதிகம் கனக்கிற தென்று
கீழே வைத்தால், மேனேஜர்
வந்தென்னை முதுகில் அடிக்கிறார்.
நீ அடுத்த மாதம் முதலாளியிடம்
சம்பளம் வாங்க வரும்போது
என் கையைப் பிடித்துத் தெருவில்
ரெண்டடியாவது நடக்க வேண்டும்.
எதிர் கடையில் அக்கா கைக்கு வளையல்
பார்த்து வைத்திருக்கிறேன்
நீ வரும் போது வாங்கிப் போக வேண்டும்.
ரொம்ப நாளைக்கப்புறம் நேத்து ராத்திரி
ஆத்தா சொபபனத்தில் வந்தது.
நீ என்னை ஊரிலிருந்து கூட்டி
வந்த போது கட்டியிருந்த அதே
பச்சைப் புடவையில் ஆத்தா
மெலிஞ்சு போய் வந்தது.
என் சம்பளத்தில் ஐயா நீ ஆத்தா
இருமலுக்கு மருந்து வாங்கித்தர வேண்டும்.
சாம்பார் சோறும், இட்லியும் சாப்பிடும்
நேரமெல்லாம் நீங்கள் வீட்டில் வெங்காயம்
கடிச்சு வரகுக் கஞ்சி குடிப்பதை
நினைத்து குமட்டி வருகிறது.
நான் வரும் போது மாடாக் குழியில்
நாலு கோலிக் குண்டும் ரெவாரத்தில்
கிட்டிப் புள்ளையும் வைத்து விட்டு வந்தேன்.
இனிமேல் அதெல்லாம் எனக்கெதற்கு ஐயா
சித்தப்பா மகன் முனியசாமிக்கு நான்
கொடுத்ததாய் சொல்லிக் கொடுத்து விடு.
ஆத்தா என்னை நினைத்து அழுக வேண்டா
மென்று சொல்.
நானும் அழுவதை நிறுத்தி மாசம்
ஒண்ணாகிறது'

— அல்லி முத்து

நூல் : வியர்வை ரோஜாக்கள்!
வெளியீடு: சேவ், 19, காட்டுவளவு முதல்வீதி
திருப்பூர்-641 604

# தோண்டிப் பார்க்கிறேன்

திடீரென அழைத்துக் காட்டிடுவாய்-
தோட்டத்துப் பப்பாளி இலை நரம்பு
ஆச்சரியத்தை

நெல்லி இலைகளின் பணிவை,
பூவின் மடல் கோர்த்த அமைதி ஒழுங்கை,
''சூரியனைப் பாரடா; நடைதான் தீர்வு
உடலுக்கு

என்பது உன் வழக்கம்.
நிறைய செடிகளை நட்டுள்ளாய்,
நம் வீட்டுத் திண்ணையில்
பூ உதிர்க்கும் போகன் வில்லா உட்பட,
நீ காட்டிய வழியும், நட்ட செடியும்
சரியாய் இருக்கையில், அப்பா!
நான் மட்டும் ஏன் முளைக்கவில்லை சரியாய்

நூல் : போய்ச் சேராக் கடிதம்
கவிஞர்: சந்திய மோகன்
வெளியீடு: லாவண்யா பதிப்பகம்
நெய்வேலி-3

www.padippakam.com

# புதிய ஏதேன்

இவர்கள்
பிலாத்துக்களைப் போல்
தொட்டிச் செடிகள் அல்ல;
யோவானைப் போல்
காட்டு மூலிகைகள்!
இவர்கள்
சபிக்கப்பட்ட
அத்தி மரங்கள் அல்ல;
கானா ஊர்
கல்யாண ஜாடிகள்!

இனி இவர்கள்
தீர்க்கதரிசிகளைத்
தேடப் போவதில்லை;
நியாயத் தீர்ப்புக்காக
கோடரியாக
நிற்கிறார்கள்!

தேவனே
அப்பங்கள் போல்
அதிகாரங்கள்
பிட்கப் படுவது
எப்பொழுது?

ஒற்றை தாலந்தைப் போல்,
ஒன்று மில்லாமல்,
தலித்துக்களைப்
புதைத்தவர்களுக்கு
எதிராக....
ஓ...!
த
தலித்
த

உங்கள் சிலுவைகளை
உயர்த்துங்கள்;
பூமியை உழுது,
புதிய ஏதேன்
சிருஷ்டிக்க வேண்டும்!

கவிஞர்-மோகனப்பிரியன்

நூல் ; மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்,
வெளியீடு: தலித் ஆய்வுமையம்-மதுரை-10

○ ● ○

# கிழிந்ததன் நகலாய்

கடிதம்கண்டேன்,
கிழிந்துபோன வாழ்க்கையின் நகலாய்.

எண்ணெய்ப்பிசுக்கேறிய காகிதத் துண்டில்
பழைய பற்றுவரவேட்டில் கிழித்தெடுத்த
தாயிருக்க வேண்டும்
பாதி பேனையாலும், பாதி பென்சிலாலும்
எழுதப்பட்டிருந்த
நலம் விசாரிக்கும் வரிகள்

என் கைகளில் நடுங்கின.

பிசுக்கில் பதிந்திருந்த பெருவிரல் ரேகையை
உருப்பெருக்கிப் பார்ப்பதென
எழுதப்படாத துயரங்களை வரைபடம்
போடுகிறது மனம்.

பிரச்சினைகளின் பூதாகாரத்துள்
கீச்சிடலுமின்றி சிறுபூச்சிகளாய் நசித்துக்
கிடக்கும்
துயரங்கள் உங்களுக்குள்ளும்தான்;
எங்களுக்குள்ளும்தான்

நாலுதிக்குக்கொரு உடைவாகிப்போயின நம்
உறவுகள்

ஆயினும் அதிசயம்தான்
நாமும் உயிர்கொண்டு ஊர்கின்றோம்
காலொடிந்த நண்டினைப் போல்.
கரைதான் தென்படவில்லை.
தென்படுவதாய் தெளியும் பொழுதெல்லாம்
திசைமுகத்தில் பீச்சியடிக்கும்
கனவாய்மைபோலும் கறை.

கறைபடிந்த துயரத்தின் நடுவே
நாளும் நாளும் காணாமல் போகிறோம்;
இல்லையா?

இருகரையும் துயரெறிகை
உங்களைப் போலவேதான் எங்களதும்.
எங்களைப் போலவேதான் உங்களதும்
திரையெறியும் துயரம் இருகரையிலும்தான்.

○ திகழ்



படிப்பகம்

அன்றோர் காலை
நாவெண்டாமுனையில் மீன்வாங்க
நின்றிருந்தோம்
அக்கரையின் வான்பரப்பில் இரைச்சலோடு
எழுந்து பறந்தன
இயந்திரப் பறவைகள்; குண்டு பீச்சிகள்

கொட்டடிப் பக்கமாய்
கொழுந்துவிட்டெரியுதென்றார்
பக்கத்தில் நின்றிருந்த முதியவர்
திசைமுகம் புகைமண்டலமாய்த் தெரிந்தது
எமக்கு
குருதிபடிந்த காலையாயிருந்திருக்கும்
உங்களுக்கு

பதறியவாறே வீட்டிற்கு வந்து
''குரலை'' முறுக்கினேன்
சற்றுமுந்திய செய்திகளின்மடி கொட்டடியிலும்
கச்சேரியடியிலும்
குண்டு வீச்சென்றார்
சேத விபரம் தெரிந்தபின்னால் தான்
சிறிது மூச்சுவிட்டேன்

இப்பாலிருந்து
மண்டைதீவின் பீரங்கிகள் முழங்கும்
போதெல்லாம்
எங்கள் நெஞ்சு பதறும்
குண்டுவீச்சின் போதெல்லாம்
எங்கள் வீட்டின் நிலைக்கதவுகள், சன்னல்கள்
மட்டுமல்ல
கூடவே எமது உணர்வுகளும் அதிர்வுறும்

உற்றதுயர் சொல்லியழ
உரத்துப் பேச
ஒரு மனுவில்லாத தனிக்காட்டில்
சிறகொடுக்கி குரலொடுக்கி
சீவியத்தைச் சிறைப்படுத்தி
பாடாய்ப்படுத்துகிற பாழும் மனத்தோடு
போராடி
கிழிந்துபோன வாழ்வின்
இக்கரை நகலாய் நாங்கள்

எங்களதைப்போலவேதான் உங்களதும்
உங்களதைப்போலவேதான் எங்களதும்
யுத்தமுனைகளால் கிழிக்கப்பட்டு

குருதிப் பிசக்கேறிப்போன வாழ்வின்
பக்கங்களில்
எழுதப்படுமா ஒரு நற்செய்தி?
தெளிவற்றதாயிருக்கும் உங்கள் கடிதத்தின்
வாசகங்கள்
மீண்டும் ஒருமுறை குரல்வழியாய்
நடுங்குகின்றன.
எல்லாமே தெளிவற்றிருக்கிறது
ஆயினும்
ஒரு தீக்குச்சி உரசலின்
சிறு நம்பிக்கைத் துளியில் தெரியவரும்
நற்செய்திக்காய்
காத்திருத்தல் மட்டும் தொடரும்.
காத்திருப்போம்
எல்லாத் துயரங்களின் நடுவிலேயும்
தீக்குச்சியிலும் ஈரம்படிந்துவிடாதவாறு
காப்போம்

## வேற்றாகி நின்ற வெளி

வெளியாரின் வருகையோடு
வேர் கொண்ட வாழ்வையும் பிடுங்கிக்கொண்டு
மக்களெல்லாம் வெளியேறிய ஓரிரவிற்குப்பின்
விடியப்பார்த்தால்
வாழ்வெனும் வெள்ளம் வற்றிக்கிடந்ததிடலாய்
கிராமம்

முற்றத்துச்சூரியன்
முற்றத்து நிலா,
முற்றத்துக்காற்றென
வீட்டு முற்றங்களுக்கே உரித்தான
வாழ்வனுபவங்கள் விடைபெற்றுக் கொண்டன.

வேலிகளை வெளியார் வெட்டிப்
போட்டார்கள்.
வாசல் கதவுகளை உடைத்துப் போட்டார்கள்.
உள்ளதையெல்லாம் கொள்ளையடித்தார்கள்.
வீடுகள் திறந்தபடியே கிடந்தன.

திறந்த வாசல்களூடே நுழைந்த காற்று
கதவுகளை சாத்தியும், திறந்தும், தள்ளியும்
உள்ளோடியோடி எதையெதையோ முயன்று
உறவின்மை கண்டபின் தோற்றோடி
வேற்றாகி நின்ற வெளியிடைத் தோய்கிறது.

www.padippakam.com

வெளிகொண்ட காற்று
வெளிகொண்ட நிலா
வெளியை வெறிக்கின்ற சூரியன்.

வெளியிடை வெறித்த பார்வையோடு
நிற்கிறேன்

ஏதோ மோப்பம் பிடிக்குமாப்போல்
மெல்லெனவந்த காற்று
விலகிச் செல்கிறது ஒரு வேற்றானைப் போல.

விழிகளைப் பெயர்க்கிறேன்
வேற்றாம்பார்வை என்னில் தொற்றியதோ?
விலகல்
மெல்ல விலகல்; மேலும் விலகல்
விட்டு நீங்கும் கப்பற்துறை வரையும்
விலகி வந்தாயிற்று கடைசியாய்.

காற்று மோப்பம் பிடித்தது சரிதான்

இதோ கப்பல் நகர்கிறது
கனத்துக் கிடக்கும் இதயச் சுமையையும்
தாங்கியவாறே.

விலகிச் செல்லும் துறைமுகம்
வழியனுப்பவும் வராதிருந்த முதியவரின்
சோகத்தை
அப்பிக் கிடந்ததென

தூரத்தே
புகார் முட்டமெனத் தெரியும் பனைகளுக்கு
அப்பால்
வேற்றாகி விண்ணாகி நின்ற வெளியுள்
குமைகிறது காற்று.

# இயற்கையால் எழுதியது

சொல்லித்தானாக வேண்டும்
தேடுப்பாரின்றி தனித்துப் போய்விட்ட
எம் தீவுகளைப்பற்றி.

சஞ்சீவி மலையை அனுமன் காவிச்
செல்கையில்
கடலிடைச்சிந்திய துன்பங்களாம்
இத்தீவுகளைக் கவனியாமலேக
கரைசேராத் திட்டுகளாய் தனித்திருந்
தமுதனவாம்,

கைவிடப்பட்ட துண்டங்களை கரைசேர்க்க
யாருமில்லை

சஞ்சீவிமலையினின்றும் தூரித்ததீவுகளானோம்
நாம்.

சஞ்சீவி மலையின் துண்டங்கள் நம் தீவுகள்
என்றால்

விண்ணெழுத்து ராவணனைப் பொருதிய
ஜடாயுவின்

துண்டாடப்பட்ட இறக்கைகளாய் நாம்

வெட்டுண்டோம்; வீழ்ந்தோம்
கடல்வெளித் தனித்தலைகிற மிதவைகளாய்
எக்கரையுமற்று எற்றுப்படுகின்றோம்.

ஆயினும்
வீழுமுன் விண்ணெழுந்து பொருதிய ஞாபகம்
வெட்டுண்ட இறக்கைகளுக்கு
இல்லையெனலாமோ ?

சஞ்சீவி மூலிக்காற்றே வா
வெட்டுண்ட இறக்கைகளுக்கு உணர்வின்
தைலமிடு

எழுந்து பறந்தாக வேண்டும்
எம் முந்தைப் புலம் நோக்கி
வெட்டுண்டு வீழுமுன் வீடிருந்த
உச்சிப்புலம் அது

இறந்தாரை எழுப்பும் சஞ்சீவி கொணர
அனுமனும் இங்கில்லை.

இராமர் அணையும் கடலுள் அமிழ்ந்தாச்சு
எம்முயிர்த்துவமே சஞ்சீவியாக
எழுந்து பறந்தாகத்தான் வேண்டும்.

சு. வில்வரத்தினம்.

நன்றி : 'சரிநிகர்'



படிப்பகம்

நேர்காணல் :-

# அறிஞர் மா. இலெ. தங்கப்பா அவர்கள்

குறிப்பு :

தமிழ்ச்சான்றோரர் என்ற பெயருக்குப் பெரிதும் தகுதி வாய்ந்த திரு. இலெனின் தங்கப்பா அவர்களை நேர்முகம் கண்டவர் நண்பர். திரு. க. பஞ்சாங்கன் அவர்கள். பஞ்சு எனக்கெழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்: ''தங்கப்பா அவர்கள் அற்புதமான மனிதர். எங்கே அவர் தப்பாக எடுத்துக் கொள்வாரோ என்ற அச்சத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு, அவரது முழு ஆளுமையையும் வெளிக்கொணர பலவிதமான கேள்விகளைக் கேட்டுப் பதில்களைப் பெற்றேன்.'' தங்கப்பா அவர்களை பாவேந்தர் பாரதிதாசனுடன் தொடர்புபடுத்தி தமிழகம் நன்கு அறியும். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை நயம் தோன்ற எழுத வல்லவர். குழந்தைப் பாடல்கள் இசைப்பாடல்கள் எனத் தொடங்கி தமிழில் கவிதைத் தொகுப்புக்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார். சங்க இலக்கியம், பாரதிதாசன் கவிதைகள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் தந்துள்ளார். வாழ்க்கை அன்போடும் இயற்கை உறவோடும் கூடியதாக ஒளிபெற வேண்டும் என்ற நோக்கோடு உரைநடை நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார். 1970 முதல் இதுவரை வெளிவந்துள்ள அவரது நூல்கள் எண்ணிக்கையில் 22. பஞ்சு அவர்களின் வினாவிடை தொகுப்பில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி அளவு இங்கு இடம் பெறுகிறது. வினாக்களை வடிவமைப்பதில் தனக்கு ஒத்துழைப்புத் தந்தவர்கள் என திரு. வே. கருணாநிதி, முனைவர் திரு. கேசவ பழனிவேல் ஆகியவர்களை நன்றியோடு குறிப்பிடுகிறார்.

○ ○ ○

1. ○ மனித வாழ்க்கையைப் பற்றி அக்கறையோடு சிந்திக்கும் சிலருள் நீங்களும் ஒருவர் என்ற முறையில், இன்றையத் தமிழ்ச் சமூகத்தில் நடப்பவை உங்களுக்குள் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்துகின்றன?

□ மிகுந்த வருத்தத்தையே ஏற்படுத்துகின்றன. இன்று தமிழ்க் குமுகாயத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பது ஒரு பெருஞ் சீர்குலைவு. இந்த இனம் எப்படித் தலை தூக்கப் போகின்றதோ என்ற நம்பிக்கையின்மை நெஞ்சை வாட்டுகின்றது. படித்தவர்களின் வீழ்ச்சியே எனக்கு மிகவும் பெரிதாகத் தோன்றுகின்றது. அவர்களின் தன்னலமும் மக்களைப் பற்றிய அக்கறையின்மையும் என்னுள் மிகுந்த அருவருப்பை ஏற்படுத்துகின்றன. மக்கள் தொடர்புக் கருவிகளும் அப்படியே. மக்களுக்கு அறிவு ஊட்டி வழிநடத்துவதை விட்டுவிட்டு, வாணிகமே குறியாய் மக்களின் கீழ்த்தர உணர்வுகளைத் தூண்டி, மக்கள் விரும்புகிறார்கள் என்று அவர்கள் மேலேயே பழி போட்டுப் பயனற்ற கழிசடைக் கவர்ச்சிச் செய்திகளை முன் வைத்துப் பிழைப்பு நடத்தும் தரங்கெட்ட செய்தி இதழ்கள் வெறுப்பு ஊட்டுகின்றன. இளைஞர்மீது தொலைக்காட்சி செலுத்தும் மேலாண்மை மிகப்பெரிய சீரழிவின் அறிகுறி. திரைப்படம், தொலைக்காட்சி, எவ்வளவு நல்ல கருவிகள்!

www.padippakam.com

மக்கட்குக் கல்வியூட்டவும் பயன் உள்ள பொழுது போக்கை வழங்கவும் எவ்வளவு அழகாக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்! இதைச் செய்யாமல் எந்தவகையிலும் சேராத மட்டமான திரைப்படங்களை எடுத்துத் தள்ளும் திரைப்படக்காரரையும் கவர்ச்சி விளம்பரங்களைக் காட்டி மக்களை மூளைச் சலவை செய்து காசடிக்கும் பன்னாட்டுக் கொள்ளை வாணிகர்களையும் எண்ணினால் உள்ளம் எரிகிறது. ஆட்சி நடத்தும் கொள்ளையர்களை எண்ணினால் தட்டிக் கேட்காமல், எழுச்சியற்று ஊமைகளாக வாழும் தமிழர்களின் அவல நிலையையும், ஈழத் தமிழரின் அல்லலையும் அழிவையும் கண்கூடாகக் கண்டும் அவர்கட்காக ஒருமித்த குரல்கூடக் கொடுக்கமுடியாத இவ்வினத்தின் கையாலாகாத் தனத்தையும் நினைத்தால் நம்மைப் பற்றிய நம்பிக்கை மிகமிகக் குறைந்து விடுகின்றது.

2. ○ ஏறத்தாழ 30 ஆண்டுகள் தமிழை முதன்மைப்படுத்திப் பேசிய திராவிடக் கட்சிகள் நாட்டை ஆண்டும், தமிழ் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழி ஆகாததற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? தனிப்பட்ட சில அரசியல் தலைவர்களைக் கூறலாமா? அல்லது சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுக் கூறுகளில் காரணங்களைத் தேடலாமா? விவரமாகச் சொல்லுங்கள்.

□ அரசியல் கட்சிகளின் தரங்கெட்ட தன்மையே முதல் காரணம் என்பேன். தனிப்பட்ட அரசியல் தலைவர்களின் மட்டமான போக்கும் இதில் அடங்கும். தமிழைச்சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள் பின்பு தமிழுக்கு முதன்மை கொடுப்பதில் போதிய அக்கறை காட்டவேயில்லை. வெறும் ஆரவாரம் மேல் ஓங்கியதே தவிர உண்மையான செயல் நடைபெறவே இல்லை.

குமுகாயப் பொருளாதாரப் பண்பாட்டுக் கூறுகளில் காரணம் தேடினால் இம்மூன்று நிலைகளிலும் தமிழர் தங்களை இழந்து அடிமைப்பட்டுப் போயிருப்பதைக் கூறலாம். பிற மாநிலங்களில் இருப்பதுபோல் மக்கள் விழிப்புத் தமிழகத்தில் இல்லை. இனித்தமிழர் நலன்கட்கு எதிராக மூன்று வகை கும்பல்கள் தமிழகத்தில் செயல்பட்டு வந்ததும், வருவதும் மற்றொரு காரணம்.

ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக வைத்து மக்களை ஏமாற்றிப் போலிப் பகட்டு மழலைப் பள்ளிகள் நடத்திக் கொள்ளை ஊதியம் அடைபவர்கள் ஒருபக்கம். பார்ப்பனரும் பார்ப்பனச் செய்தித்தாள்களும் காட்டி வந்த, தூண்டிவிட்ட எதிர்ப்பு ஒரு பக்கம். ஆங்கிலத்தின் வாயிலாக உள்ளே நுழைந்து பெரும் பெரும் அரசுப் பதவியில் இருந்து கொண்டு தாங்கள் தமிழ் கற்றுக் கொள்ளாமலே பதவியில் நிலைப்பதற்காகவும், தங்களவர்கள் மேலும் ஊடுருவிப் பிழைப்பதற்காகவும், ஆங்கிலம் அகன்று விடாமல் அதனை இழுத்துப் பிடித்துக் கொண்டு தமிழுக்கு எதிர்ப்புக் காட்டிவரும் வேற்று மொழிக்காரர் ஒரு பக்கம். மூன்று கும்பல்களும் ஆங்கிலத்தின் தேவையைப் பொய்யாக உயர்த்திக் கூறிக் கொண்டும் தமிழ் பற்றி வேண்டாத ஐயங்களையும் குழப்பங்களையும் மக்களிடத்தில் ஏற்படுத்தி அவர்களை மேலும் மழுங்கடித்துக்கொண்டும் இருக்கின்றன.

இப்பொழுது சில ஆண்டுகளாகத்தான் பார்ப்பனச் செய்தித் தாள்கள் தமிழைப் பயிற்று மொழியாக்குவது பற்றிப் பேசத் தொடங்கியுள்ளன. முன்பு இவற்றின் எதிர்ப்புத்தான் ஆட்சியாளர்களை அஞ்ச வைத்தது. திரு. கருணாநிதியால் தமிழைப் பயிற்று மொழியாக்க முடியாமற் போனமைக்குக் காரணம் இவர்கள் மாணவர்களை அதற்கெதிராகத் தூண்டி விட்டதுதான். 1930-40 களில் தாய்மொழி வழிக்கல்வி பற்றிப் பேசிக் கொண்டிருந்த இராசாசியே, திரு. கருணாநிதி ஆணை கொண்டுவந்த பொழுது அதை எதிர்த்தது எவ்வளவு பெரிய முரண்பாடு!

இப்பொழுது திராவிட இயக்கங்களைக் குறை கூறித் தமிழுக்காக ஓநாய் அழுகை அழும் இந்த பார்ப்பன அறிவாளிகள் அப்பொழுது எங்கே போயினர்? அன்று எதிர்க்காதிருந்தால் இதற்குள் தமிழ் பாடமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் ஆகியிருக்குமே.

இன்றைக்கும் ஆட்சியிலிருப்பவர்கள் முனைந்தால் மிக எளிதில் செய்ய முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

செய்யாதபொழுது மக்கள் அவர்களைச் செய்ய வைக்க வேண்டும். இரண்டில் ஒன்றாவது நடக்குமா என்பது ஐயமே.

3. ● திராவிட இயக்கம் உண்மையில் தமிழர்களுக்கான இயக்கம் அன்று, தெலுங்கர் நலனுக்கான இயக்கமே அது என்ற ஒரு கருத்து இப்பொழுது முன் வைக்கப்படுகின்றது. அதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

□ அப்படி ஒரு திட்டமிடப்பட்ட நோக்கம் திராவிடர் இயக்கத்துக்குள் முதலிலிருந்தேஇருப்பதாக நான் நினைக்கவில்லை. தமிழர் நலனுக்கான அடிப்படைக் கொள்கைகளைக் கட்சியினர் கைவிட்ட பின் தெலுங்குப் பின்னணியினர் தந்திரமாக அதைப் பயன் படுத்திக்கொண்டிருக்கலாம். தமிழ் உரிய இடம் பெறுவதைப் பொறுக்காத மேல்தட்டுக் காரர்கள் தமிழரைப் பிளவுபடுத்துவதற்காகத் தமிழ் நாட்டுத் தெலுங்குக்காரர்களைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர். ஏற்கெனவே தமிழராய் மாறிவிட்ட தெலுங்கு பின்புலத்தினர் இன்று மீண்டும் தங்கள் தெலுங்குத் தன்மையை வற்புறுத்தத்தொடங்கியிருப்பது மிக பழமையானது. திராவிடக் கட்சிகளுக்கு இதில் பங்கிருந்தால் அதுமிகவும் கடியத்தக்கது.

4. ● இன்றைய உலகச் சூழலில் கலப்பில்லாத தூய மொழி என்பதோ தூய பண்பாடு என்பதோ சாத்தியமா?

□ கலப்பில்லாத தூய மொழியோ, தூய பண்பாடோ நடைமுறையில் இயலும் என நான் எண்ணவில்லை. ஆயினும் தமிழைப் பொறுத்தவரை தூயமொழிக்கும் பண்பாட்டுக்கும் உரிய இடம் உண்டு. அவை ஒன்றும் இயற்கைக்கு மாறானவை அல்ல.

தனித் தமிழ் இயக்கத்தைப் பொறுத்த வரை தனித்தமிழ் ஒரு மொழிக் கொள்கை அன்று. இன, பண்பாட்டு விழிப்பியக்கம் என்றே நான் கொள்கின்றேன். இன, மொழி விழிப்புச் சிறிதும் அற்ற தமிழர் நடுவில் இது தேவையாகின்றது. ஆங்கிலம் கலந்த இன்றைய நடை எவ்வளவு அருவருக்கத் தக்கதாக இருக்கிறது!

தமிழ் மக்கள் இயல்பான மொழிப்பற்றில்லாதவர்களாக இருப்பதும், தமிழ் அறிவாளிகள் படித்தவர்கள் ஆங்கில வழிக் கல்வியிலேயே பழகித் தாய்மொழி நலம் பண்பாட்டு நலம்பற்றி அக்கறையோடும் பொறுப்போடும் எண்ணிப்பாராதவர்களாக இருப்பதுமே தனித் தமிழை வற்புறுத்துவதற்கான மனவியற் பின்புலம் என்று நினைக்கின்றேன். மொழி பற்றிய விழிப்புணர்வு பிழை அன்று. தமிழ் அதன் தூய நிலையிலும் அழகியது; வளம் மிக்கது; செழுமையானது. இந்த அழகிலும் செழுமையிலும் திளைத்தல் எனக்கு மகிழ்வு தருகின்றது. எல்லாரும் தனித் தமிழையே பயன்படுத்த வேண்டும் என்று ஒரு கட்டாயமும் இல்லை. மற்றும் தமிழின் அடிப்படை அழகிலும் செழுமையிலும் கால் ஊன்றி நின்று, பின்பு மொழிக்குப் புதிய வலிவோ கூர்மையோ தரும்இன்றியமையாத வேற்றுச் சொற்களைத் தமிழ் மரபுக்கேற்ப மறுவடிவாக்கி ஏற்றுக் கொள்வதில் எப்பிழையும் இல்லை. தனித் தமிழியக்கம் இதற்குத் தடையாகவும் இல்லை. சாதி, சடங்குபோன்ற வட சொற்கள் தனித்தமிழ் இயக்கத்தினரால் வழங்கப்படுகின்றன. அதிகாரம், நாகரிகம், சித்திரம் போன்ற சொற்கள் ஐயத்துக்குரியன வாக இருந்தாலும் தமிழ்ச் சொற்களாகக் கருதப்படுகின்றன. வேண்டாத சொற்களையெல்லாம் கண்டபடி தமிழிற் கலப்பதும் அதுதான் மொழிவளர்ச்சி என்பதுமே தனித் தமிழியக்கத்தினரால் கடியப்படுகின்றன.

5. ○ தனித்தமிழ் இயக்கத்தில் எண்ணத்தாலும் செயலாலும் தொடர்ந்து பணியாற்றி வருகிறீர்கள், அதனால் கேட்கிறேன்; தனித் தமிழியக்கம் வடமொழிக் கலைப்பை நீக்குவதில் பெற்ற வெற்றியை ஆங்கில மொழிக் கலப்பை நீக்குவதில் பெறவில்லையே, ஏன்?

□ வடசொற் கலப்பின் பின்புலம் வேறு. ஆங்கிலக் கலப்பின் பின்புலம் வேறு. மொழிகளிடையே தொடர்பு ஏற்படுகையில் இயல்பாக ஏற்படும் சொற்கலப்பு ஒருபுறம் இருக்க, அதற்கும் மேலாக, வடமொழியின் மேலாண்மையைத் தமிழ்மீது செலுத்துவதற்கென்றே



படிப்பகம்

www.padippakam.com

திட்டமிட்ட வடமொழிக் கலப்பு நேர்ந்தது. அது ஒட்டு மொத்தமாக மொழியில் ஏற்பட்ட ஊடுருவல். கலப்பு நேர்ந்தபின், வடசொல் கலந்த நடை, கலவாத நடை என்று இணையாக இரண்டு நடைகள் இல்லை. தனித்தமிழியக்கமும், திராவிட இயக்கத்தின் செயற்பாடுகளால் தோன்றிய தமிழ்ப்பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கமும் தமிழுக்கு வேண்டாத வடசொற்களைச் சுட்டிக்காட்டியதும், அவை வேண்டாதவை என்பதை பலர் உணரத் தொடங்கினர். தனித்தமிழை முழுக்கக் கடைப்பிடிக்காதவர்கள்கூட வேண்டாத வடசொற்களை நீக்கி நல்லதமிழில் எழுதினர். பேசினர்.

மற்றும் வடமொழி பேச்சு வழக்கு மொழி அன்று. தமிழோடு இணையாக அது பேசப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. நிகழ்ந்த கலப்பெல்லாம் பழைய கலப்புத்தானேயன்றி அன்றாடம், அவ்வப்பொழுது நிகழும் கலப்பு அன்று.

ஆங்கிலக் கலப்பின் நிலைவேறு. அது தமிழை முழுமையாகத் தாக்கவில்லை. சான்றோர் மொழிக்குள்ளும், செவ்வை இலக்கிய மொழிக்குள்ளும் நுழையவில்லை. தமிழின் ஓரங்களிலும், விளிம்புகளிலுமே அக்கலப்பு ஏற்பட்டது.

தமிழ் மீது உண்மை ஆர்வம் கொண்டிருந்த தமிழ்ச் சான்றோரும், புலவரும் வடமொழிவாணரின் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுத் தேவமொழி என அழைக்கப்பட்ட வடமொழியிலிருந்து சொற்களைத் தமிழிற் கலப்பது பெருமை எனக் கொண்டிருந்தனர். அவர்களே பின்பு உண்மை உணரத் தொடங்கியதும் தாங்களாகவே திருந்திக் கலப்பை விட்டொழித்தனர். எல்லாரும் என்று கூற முடியாவிட்டாலும், மரபுசார்ந்த தமிழ்க் கல்வியாளர் இதில் முன்னின்றனர்.

இன்று ஆங்கிலக் கலப்பைச் செய்து கொண்டிருப்பவர்கள் மரபு சார்ந்த தமிழ்க் கல்வியாளர் அல்லர். சான்றோரும் அல்லர். ஆங்கிலம் கலந்து பேசுபவர்கள், எழுதுபவர்கள் எவ்வகையான தெளிவும் உடையவர்கள் என்று கூறுவதற்கில்லை. ஆட்சியில் அதிகாரத்தில் ஆங்கிலம் இருந்தமையாலும், கல்வி நிலையங்களில் மாணவர் நடுவில் வழங்கியமையாலும் பேச்சில் கலந்த ஆங்கிலச் சொற்கள் நாளடைவில் விளிம்போர எழுத்திலும் கலக்கலாயின. இவ்விளிம்போரக் கலப்புக்குக் காரணமாக நிற்பவர்கள் தமிழ்க்கல்வி அற்ற நிலையில் ஆங்கிலக் கலப்பில் பெருமை கொண்ட வெற்றுக் குடுக்கைகளும், தமிழை வேண்டுமென்றே கொச்சைப் படுத்துவதில் நிறைவு காணும் பார்ப்பன எழுத்தாளரும் செய்தித்தாள்களுமே. பேச்சு மொழி இலக்கிய வாணரும் இதில் சேர்ந்து கொள்கின்றனர். வடசொற் கலப்பில் ஈடுபட்டவர்கள் தாங்களே உணர்ந்து தங்களைத் திருத்திக் கொண்டனர். ஆங்கிலச் சொல் கலப்பவர்கள் அரைவேக்காடுகளும், அடாவடிக்காரரும், எள்ளல் தன்மை படைத்தவர்களுமாக (Cynics) இருப்பதால் இவர்கள் அத்தனை விரைவிலும் எளிதிலும் திருந்துவர் என்று எதிர்ப்பார்ப்பதற்கில்லை.

எழுத்து மொழியிற் புகுந்த வடசொற் கலப்பைத் தனித்தமிழ் வாணரால் நீக்க முடிந்தது. ஆனால் ஆங்கிலம் பேச்சு மொழியிலேயே முதன்மையாகப் புகுந்திருப்பதால் எவ்வளவு முயன்றும் அதனை அகற்றல் எளிதாகத் தெரியவில்லை. ஆங்கிலத்தைக் கலந்து பேசுபவர்களே தங்கள் பிழை உணர்ந்து திருந்துவது ஒன்றுதான் வழி.

6. ○ உங்கள் கவிதையாக்கத்தில் கருத்துக்களின் குவியல் காணப்படுகிற அளவுக்குப் படைப்பிற்குக் கருவூலமாக விளங்கும் தனி மனித அனுபவம் தென்படவில்லையே, என்ன காரணம்?

□ தனிமாந்தனின் பட்டுணர்வுகள் மட்டுமே பாட்டுக்குக் கருவூலமாகும் என்று நான் எண்ணவில்லை. வேறு வகையிலும் சிறந்த பாடல்கள் எழ முடியும். ஆனால் அவ்வகையிலும்கூட நான் எண்ணியிருப்பவைகளை நானே இன்னும் தொடவில்லை.

என் சொந்தப் பட்டுணர்வுகளில் காதல் உணர்வைப் பாடல்களாக்கியிருக்கின்றேன். அப்பாடல்கள் நூலாக வரவில்லை. மற்றைய பட்டுணர்வுகளைப் பார்த்தால் அவை வாழ்க்



படிப்பகம்

www.padippakam.com

கையில் அடிபட்டும், உணர்ச்சிகளில் அலைக் கழிக்கப்பட்டும், உறவுகளில் முட்டி மோதியும் பெறப்பட்டவையாக இராமல், வாழ்க்கை பற்றிய புரிந்து கொள்ளுதலுக்குத் துணைபுரி வனவாகவே இருந்தன என்று கூறலாம். இலக்கியச் சுவை உண்டாக்குமளவுக்கு ஏற்ற இறக்கங்கள், உணர்ச்சி மோதல்கள் என்று பளிச்சிடும் வண்ண வேறுபாடு கொண்ட வையாக அவை இல்லை.

ஆறு, பாறைகளின் நடுவிலும், பள்ளங் களிலும் எழுந்தும் விழுந்தும் சுழன்றும் சுழித் தும் நுங்கி நுரைத்துக் கொந்தளித்துப் பாயும்பொழுது பார்க்க அழகாக இருக்கும். பரந்த மணல் வெளிமீது ஓசையின்றிப் பாய்ந் தால் யார் கவனத்தை ஈர்க்கும்?

படிப்பவர் உள்ளத்தில் பரிவுணர்ச்சியை மட்டுமே எழுப்பிச் செல்வதைவிட, வாழ்க்கை பற்றிய விழிப்புணர்வையும், இயற்கை ஈடு பாட்டையும் ஏற்படுத்துவதிலேயே என் கவனம் சென்றது. 'தான்' என்னும் சிறுமை கடந்து வாழ்க்கையின் வியப்பில் படிப்பவரை ஈடுபடுத்த விரும்பிய நான் இம்முயற்சியில் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளேன் என் பதைப் படிப்பவரே கூறவேண்டும்.

7. ○ கிறித்துவப் பின்னணியில் வளர்ந்த இளமைக்கால அடையாளங்கள் கூட உங்கள் படைப்பில் வெளிப்படவில்லையே. மதத் திற்கு எதிரான எண்ண ஓட்டங்கள் உங்க ளுக்கு எந்த வயதில் தோன்றின? அதற்கான காரணங்கள் யாவை?

□ மிக மிக எளியவனாகவும், ஒன்றும் தெரியாதவனாகவும் இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் ஏதேனும் சார்பு உடையவனாக இருப்பது என்னைச் சிறுமைப் படுத்துவதாக உணர்கிறேன். அச் சிறுமைகளினின்று நான் விடுபட்டு நிற்கின் றேன். அவற்றின் சாயல்கள் இயல்பாகவே என்னுள் காணப்படுதல் இல்லை.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே எனக்குள் இறை நம்பிக்கை இருந்ததில்லை. இத்தனைக்கும் இறை நம்பிக்கையும், பற்றும் நிறைந்த கிறித்தவச் சூழலில்தான் நான் வளர்ந்தேன். என் அன்னையார் மிகுந்த இறை நம்பிக்கை உடையவர். இன்றும்கூட எங்கள் குடும்பத்தில் - உறவினர்களில் - பலர் ஆழ்ந்த கிறித்தவ சமயப் பற்றினராகவும், சமயப்பணி மேற்கொண்டவராகவும் உள்ள னர். என் தந்தையார் ஒருவரே விதிவிலக்கு. அவரிடத்திலும் இரண்டு தன்மைகள் இருந் தன. அவர் விவிலிய நூல் ஆராய்ச்சியாளர்; அதேபொழுது பெரியாரியத்தில் ஈடுபாடு கொண்ட பகுத்தறிவு வாணர். வாழ்க்கையை விளங்கிக் கொள்ளும் நிலையில் இறை யுண்மை பற்றிய தேடல் உடையவராகவும், மத அமைப்புக்கள் கருத்துக்களைப் பொறுத்த வரை கடுமையான மத மறுப்பாளராகவும் இருந்தார். இப்பொழுது நானும் அப்படித் தான் இருக்கின்றேன். ஆயினும் தொடக்கத் தில் நான் முழு நாத்திகனாகவே இருந்தேன். தெனமொழி ஆசிரியரின் தொடர்புக்குப் பின்னரே, இப்புவியின் தோற்றத்துக்குப் பகுத்தறிவு கூறும் விளக்கத்தின் போதா மையை உணர்ந்து என் தேடலை வேறு பக்கம் திருப்பினேன்.

இன்றும் என்னுள் சமய மரபு சார்ந்த நம்பிக்கை சிறிதும் இல்லை. முழுமையான மதமறுப்பு, மரபு சார்ந்த இறைப்பற்றின்மை, இறை வழிபடாமை ஆகியவற்றால் கடுமை யான நாத்திகனாகவே இருக்கின்றேன்.

ஆயினும், புவிப் படைப்பின் புரிய வொண்ணாப் பெரும்புதிர்கள், அறிவுக் கெட்டா, வியத்தகும் அறிவியல் உண்மைகள், வாழ்வின் நுண்மைகள், ஐம்புலன் கடந்த உணர்வுகள் போன்றவை பகுத்தறிவின் அளவுகோலுக்கு அடங்குவன அல்ல. மாந்த மூளையின் சிறுபிள்ளைத்தனமான கண்டு பிடிப்புகட்கும் அவற்றின் மறுப்புக்கும் அப் பால், கால எல்லை அளவைகட்கு அகப்படாமல், சிறிதும் ஒழுங்கு பிறழாமல் இயங்கிவரும் இயற்கைப் பேரியக்கத்தின் முன் ஒன்றுமற்று நிற்கும் மாந்தனின் சிறுமையை நன்கு உணர் வதால், அச்சிறுமையின் எல்லைக்குள் நின்று எந்த முடிவுக்கும் வராமல், இயற்கையின் வியப்பில் திளைத்து மூழ்கி, இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும் துகளிலும் தூய் மையை (புனிதத்தை) இறைமையாக உணர்ந்து, வாழ்தல் ஒன்றே வழிபாடாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றேன் எனலாம்.



படிப்பகம்

மதத்துக்கு எதிரான எண்ண ஓட்டங்கள் என்னுள் தோன்றியமைக்குக் காரணம், அமைப்புக்குட்பட்ட மதமோ, அது கூறும் இறை வழிபாடோ மாந்தன் மாந்தனாக வாழத் துணைபுரியவில்லை என நான் உணர்ந்திருப்பதுதான். மதம் என்ற ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், அதன் சாரம்—அருட்பெருஞ் சான்றோர்களின் வாழ்வியல் தெளிவு—மாந்தன் தன் சிறுமைகள், கீழ்மைகள் யாவும் அகன்று முழுநிறை மாந்தனாக வாழ்தல் வேண்டும் என்பதுதான். மத நம்பிக்கையும் இறை வழிபாடும் தவறாமல் கடைப்பிடிக்கும் மிகப்பலர்—ஏன் வழிகாட்டும் மதத்தலைவர்கள் என்பவர்கள் கூட, மிகச் சிறிய மாந்தராகவே இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் செய்யும் வழிபாடும், அவர்களின் நம்பிக்கையும் கடைசிவரை அவர்களின் உள்ளச் சிறுமையை அகற்றத் துணை புரிவதில்லை. எனவே மாந்தன் நல்லியல்புகள் வாய்க்கப் பெற்றவனாக, உள்ளச் செழுமை உடையவனாக—அன்பும், அழகும், அருளும் உடையவனாக-மாந்தப்பண்பு கனிந்தவனாக வாழத் துணைபுரியாததும், மாந்தனின் கோணல்கட்கும் அச்சங்கட்கும் தெளிவின்மைக்கும் உட்பட்டதுமான மதம் மதமாகாது, கடவுள் கடவுளாகாது. அவற்றைத் தூக்கி எறிவதில் எந்தப் பிழையும் இல்லை என்று உறுதியாகக் கூறுவேன்.

8 ○ ஏற்றத் தாழ்வான ஒரு பொருளாதாரச் சமூக அமைப்பில் நீங்கள் கூறுவது போல அன்பு என்பது எல்லார்க்கும் பொதுவாகவும் அனைத்திற்கும் தீர்வாகவும் விளங்கிட முடியுமா? முடியு மெனில் அதற்கான வழிமுறைகள் யாவை?

''நாம் மட்டும் வாழ்ந்தால் போதாது; மற்றவர்களும் வாழவேண்டும். நம் சொந்த நன்மைக்காக மற்றவர்கட்குத் தீங்கு செய்தல் கூடாது. நம்மைவிட வாய்ப்புக் குறைந்தவர்கள் வாய்ப்புக்களைப் பெற நாம் உதவுதல் வேண்டும்.

''சுரண்டல் மிக்க மக்களமைப்பை மாற்றி அமைக்க அன்பு ஒன்றுதான் வழி. அன்பு ஒன்றுதான் மற்றவர்களைச் சுரண்டாமல் இருக்கும்.

''மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளும் மாந்தனை மாந்தன் அடக்கி ஒடுக்குதலும் பிழை; இவை அன்பில்லாமையால் ஏற்பட்டவை. அன்புடனிருந்தால் பிறரைத் தாழ்த்தமாட்டோம். பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டோம்.

''உள்ளத்தில் கொஞ்சங்கூட அன்பற்றவர்கள், தன்னலத்தால் தாங்கள் மட்டுமே மேலோங்க நினைப்பவர்கள்-இவர்களே மக்களைச் சுரண்டி முதலாளிகள் ஆயினர். இவர்களே சாதி மதவேறுபாடுகளை உண்டாக்கினர்; அன்பற்ற இவர்களே அரசியலில் கொள்ளையடித்து அரண்மனை வாழ்க்கை வாழ்கின்றனர். இந்தத் தீமைகளெல்லாம் நீங்க வேண்டுமென்றால், அன்பற்ற, தன்னலம் மிக்க இந்த வாழ்க்கை முறையை அடியோடு மாற்றி அன்பே வாழ்க்கை முறையாகக் கொள்ளவேண்டும்.''

இத்தகைய எண்ணங்கள் இளமையிலிருந்தே கல்வியில் இடம் பெறவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் பிறர் மேல் அன்பு செலுத்த, பிறர் நலத்தில் அக்கறை கொள்ள பிறருடன் இணக்கமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

''எவ்வளவு நல்ல முறைகளாயிருந்தாலும், சட்டங்களாக இருந்தாலும் அவற்றை நடைமுறைப் படுத்துபவர் சரியில்லை என்றால் அவையும் சரியில்லாமல் போய்விடும். எனவே மாந்தர்கள் சரியாக இருப்பதுதான் முதன்மையானது.

''மற்றும், அன்பு வெறும் இணக்கமும் நல்லுறவும் இனிமையானதும் மட்டும் அன்று. இணக்கமும் நல்லுறவும் சிதையாமல் காப்பாற்ற வேண்டியதும் அன்பின் வேலைதான். அன்பு நன்மையை நிலைநாட்டுவதென்றால், அந்த நன்மையை அழிக்கவரும் தீமையை எதிர்த்து ஒழிப்பதும் அன்புதானே. பசித்தவரின் பசியை நீக்குவது அன்பு என்றால் பசித்தவர்க்கு உணவு கிடைக்கப் போராடுவதும் அன்புதான்.

''சுருக்கமாகச் சொன்னால், வாழ்க்கையைச் சிதைவுகளிலிருந்து காப்பாற்றி அதன் வறட்சியைப் போக்கி, ஒழுங்கின்மையை

அகற்றி அதனைச் செப்பமும், செழுமையும் ஒழுங்கும் உடையதாகச் செய்யும் முயற்சி எல்லாம் அன்பின்பால் பட்டவையே''

இந்தக் கல்வியை ஏன் நாம் இளைஞர்க்குக் கற்றுக் கொடுத்தல் கூடாது? ஆனால் இதில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும். எப்படி என்றால் அன்பு ஒரு கோட்பாடு அன்று, வாழ்க்கை முறை என்பதைப் புரித்து கொள்ள வேண்டும். அன்பு பின்பற்றப்படும் ஒரு கொள்கையோ, செயலோ அன்று. அது உள்ளத்தின் உள்ளார்ந்த தகுதி வாழ்க்கையின் உயிர்ப்பு இயக்கம். அதைக் கொள்கையாகக் கொண்டால் அது குறுகிப் போய்விடும். தனக்குத் தானே முரண்படும்.

கொள்கை என்று வரும் பொழுது சில சட்ட திட்டங்கட்கு உட்பட்டுச் சில வாய்பாடுகட்கு உட்பட்டு அது செயல்படுத்தப்படும். அன்பு எத்தகைய சட்டதிட்டங்கட்கும், வாய்பாடு கட்கும் உட்பட்டதன்று. அன்பு, மாந்தன் தன்னை நல்லவனாக மாற்றிக் கொள்வது தான். அது ஒரு புதுப் பிறவி; புதிய வாழ்க்கை முறை. சிக்கல்கள் மிகுந்தும் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டதுமான இன்றைய வாழ்க்கை முறையிலிருந்து அன்பு முற்றும் மாறியிருப்பதால் சிக்கல்கள் நீங்க அன்பு ஒன்று தான் தீர்வு.

9. ○ உங்களைவிட உயர்ந்த சாதி வரிசையில் இருக்கும் ஒரு பெண்ணோடு வாழநேர்ந்த அனுபவங்களில் குறிப்பிட்டுக் கூறத்தக்க நிகழ்ச்சிகள் உண்டா?

□ அன்பு எல்லா வேறுபாடுகளையும் அகற்றி, எல்லா மேடு பள்ளங்களையும் சமன் செய்து விடுகின்றது. அதனால் எங்கள் வாழ்க்கையில்,உணர்வளவில் கடுகளவு கூட உயர்வு தாழ்வு உறுத்தல்கள் ஏற்பட்டதில்லை. என் மனைவி பள்ளி நாட்களிலிருந்து தமிழுணர்வு வாய்க்கப் பெற்றிருந்தது போலவே சாதி வேறுபாடு பாராட்டாத நல்லியல்பும் வாய்க்கப் பெற்றிருந்தமையால் சிக்கல் எழ வாய்ப்பே இல்லை.எங்களோடு பழகிய மற்றவரைப் பொறுத்தும் இருவரின் அணுகு முறையும் ஒன்றாகவே இருந்தன.

நான் இளமையில் புலால் உண்பவனாக இருந்தும், அதில் இயல்பாகவே விருப்பம் செல்லாமையால், கல்லூரியில் படிக்கும் காலத்திலிருந்தே மரக்கறி உண்பவனாக மாறியிருந்தேன். நடுவில் சூழ்நிலையின் கட்டாயத்தால் சிறிது நெகிழ்ச்சி நேர்ந்த பொழுதும், பின்பு, முற்றும் புலாலை ஒதுக்கு வதில் எனக்கு எந்தச் சிக்கலும் ஏற்பட்டதில்லை. மரக்கறி உணவு எனக்கு மிக மிக இயல்பாயிற்று. புலால் உண்பவர்கள் வீட்டில் நாங்கள் பலமுறை உண்ண (மரக்கறி தான்) நேர்ந்த பொழுதும் என் மனைவிக்கு எதையும் பொறுத்துக் கொள்ளும் தன்மை இருந்ததால் அதுவும் சிக்கலாக இல்லை. புலால் உண்பவர் நடுவிலிருந்து உண்ண நேர்ந்த பொழுது தான் சிறிது அருவருப்பு அடைந்திருக்கின்றார். அதை வெளிப்படுத்தியதும் இல்லை.

ஒன்று கூறலாம். நான் மண்ணின் அழுக்குகட்குப் பழகியவன். உழைப்பவர் நடுவில் வாழ்ந்தவன். ஒரு நாள் அணிந்த உள்சட்டை (பனியன்) அதிகம் அழுக்கடையாவிட்டால் மறுநாளும் அதை அணியத் தொடங்குவேன். ''வேண்டாம், வெயர்வை பட்டிருக்கும். வேறு அணியுங்கள்" என்பார் என் மனைவி. அவர் கையில் எடுத்த துண்டு ஒரு முறை பயன் படுத்தியதும் மீண்டும் துவைக்கப் போய்விடும். சிறிது நேரம் போட்டுக் கழற்றிய சட்டையைத் துவைத்த சட்டைகளோடு மாட்டிவைக்கப் போவேன். அதை வாங்கித் தனியாக மாட்டிவைப்பார் என் மனைவி. கழுவிவைத்த ஏனங்களைப் பயன்படுத்தப் போகுமுன் கடைசியாக நல்ல நீரில் கழுவினால் தான் மனைவிக்கு நிறைவு. மண்ணோடு, மக்களோடு வாழ்ந்தவர்கள் அதிகம் எச்சில் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. உண்ணும் பொழுது தன் தட்டிலிருந்து எதையாவது எடுத்துப் பக்கத்தில் இருப்பவர்களுக்குக் கொடுப்பது, அல்லது தட்டில் வைப்பது என் மனைவிக்கு மிகவும் பிடிக்காத செயல். எங்காவது மறந்துபோய் நான் எச்சில் துப்பி விட்டால், அல்லது வேண்டாத இடத்தில் வாய் கொப்புளித்துவிட்டால் என் மனைவியின் கண்கள் அம்பாக வந்து என்னைத் தாக்கும். சுருக்கமாகச் சொன்னால் எல்லாவற்றிலும் புறந்தூய்மை மிகவும் கடுபிடியாகக் கடைப்பிடிக்கப்படும். நல்ல பழக்கம்தான்.

www.padippakam.com

ஆனால் அதில் கொஞ்சம் சடங்குத் தன்மை கலந்துவிடுவதை இடையிடையே நான் சுட்டிக் காட்டுவேன். இவை தவிர வேறு பெரிய வேறுபாடுகள் எங்களிடையே இருந்த தில்லை.

10. ○ உங்களின் பல கவிதைகள், படைப் பவனை உயர் நிலையில் நிறுத்திக் கொண்டு, வாசகனைக் கீழே அமர்ந்து கேட்கிற ஒருவ னாகப் பாவித்துக் கொண்டு எழுதப்பட்டவை களாக இருக்கின்றன. இதற்கு என்ன கார ணம்? (பாரதிதாசனின் செல்வாக்கா? ஆம் எனில் தன் படைப்பின் அமைப்பாக்கத்துக் குள்ளேயே மற்றொரு படைப்பாளியின் செல் வாக்கை ஊடாட விடுவது படைப்பாளியின் தனித்தன்மையை அழித்து விடாதா?)

□ இது பாரதிதாசனின் செல்வாக்கு அன்று. என் இயல்பு; அல்லது நான் சொல் லும் முறை. படிப்பவனோடு ஒரே நிலையில் நின்று உணர்வுகளைப் பகிர்ந்து கொள்பவ னாகத் தான் படைப்பாளன் இருக்கவேண் டும் என்பதில்லை. ஆசிரியன் அல்லது வழி காட்டியாகவும் படைப்பாளன் இருக்கலாம். இது படைப்பாளன் தன்னை மேல் நிலைப் படுத்திக் கொள்வதாகாது. சொந்த வாழ்வில் மாந்தர், உறவினர் எல்லார்க்கும் எளியனாக இருக்கின்றேன். அறிவு திறமைகளையும் நான் உயர்வாகக் கருதுவதில்லை. எனக்குள் எந்த மேட்டிமைப் போக்கும் இல்லை. ஆனால் தேடித் தேடி வளைந்து மாந்தர் வாழ்க்கை செப்பமாக அமைய வேண்டுமானால் எப்படி இருக்க வேண்டும் என்று நான் கண்டிருக்கின் றேன். இது என் மூளைக் கண்டு பிடிப்பன்று. புதிய செய்தியும் அன்று. ஒவ்வொருவரும் வாழ்க்கையைப் பற்றி ஆழ்ந்து எண்ணினால் விளங்கக் கூடிய செய்தியே. நான் உண்மை யின் முழு வீச்சையும் உணராதவனாக இருக் கலாம். உண்மை தேடும் பாதையில் பாதித் தொலைவு கூடக் கடக்காதிருக்கலாம். ஆனால் எது பாதை என்று தெரிந்து அதில் நான் நடந்து கொண்டிருக்கிறேன். பெரும் பாலோர் பாதை தெரியாமல் தட்டுத் தடுமாறி உழல்வதையும், சிலர் தவறான பாதைகளைத் தெரிந்தெடுத்திருப்பதையும் காண்கின்றேன். ''அன்பர்களே, அவை சரியான பாதைகள் அல்ல. இதோ இதுதான் பாதை" என்று அழைக்கின்றேன். எனக்குத் தெரிந்ததை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். இது மேலிருந்து கீழே பார்த்துச் சொல்வது போலத் தோன்றக் கூடும். உண்மையில் மேல் கீழ் என்று ஒன்றுமில்லை. ஆனால் சரி, தவறு உண்டு. சரியானதையும் தவறானதையும் ஒரு நாளும் சமன் செய்து கொள்ள முடியாது.

மூளையினால் மட்டுமே இயங்கப்படும் அறிவு நிலை வேறு. அக விழிப்பு நிலை வேறு. இரண்டும் வேறு வேறு அளவை நிலைகள். அறிவு நிலையிலிருந்து கொண்டு அக விழிப்பு நிலையை ஒரு நாளும் தொடமுடியாது. இரண்டும் எதிர் எதிர்த்திசையின. அறிவு நிலை என்பது சேர்த்துக் கொண்டே செல் வது. அகவிழிப்பு நிலை கழற்றி எறிந்து கொண்டே செல்வது. அகவிழிப்பு மூளைச் செயல் கடந்ததாகையால், மூளைச் செய லுக்கு உட்பட்டு நிற்பவர்கட்கு அது கற்பனை யாகவே தோன்றும்.

11. ○ உங்களின் வாழ்க்கை பற்றிய பார்வை மனிதன் குறைகளற்ற பூரண நிலையை அடைய முடியும், அப்படியொரு முழுமை நிலை இருக்கிறது என்பது போலவே அமைந்துள்ளது. ஆனால் நவீனத்துவச் சிந்தனையாளர்கள் ''தவறுகளின் வரலாறு தான் மனித வாழ்க்கை'' என்பது போல விளக்குகின்றார்கள். இது பற்றி உங்கள் விளக்கம் யாது?

□ தவறுகளின் வரலாறு மட்டுமே மாந்த வாழ்க்கை ஆகாது. முழுமையின் வரலாறும் அதில் அடங்கும். தவறு என்று ஒன்றை ஒப்புக் கொள்ளும் பொழுது தவறற்ற நிலை ஒன்று இருப்பதையும் ஏற்றுக் கொள்கிறோம், இல்லையா? எல்லாம் அரை குறையாகவே காணப்பட்டால் அதை இயல்பு நிலை என்று கொள்ள முடியுமா? எங்கும் இடிந்த கட்டிடங் கள், உடைந்த பண்டங்கள், கால் முறிந்த கட்டில்கள் கிடப்பதைப் பார்த்து இப்படியே தான் அவை உலகில் உண்டாயின என்ற முடிவுக்கு வரமுடியுமா? முழுமையான வடிவங் கள் சிதைந்துதான் அவை அந்த நிலைக்கு வந்திருக்க முடியும். முயன்றால் மீண்டும் அவற்றை முழுமைப் படுத்த முடியுமே!



படிப்பகம்

தோன்றிய ஒன்று மலர்ச்சி பெறுவது இயற்கைச் சட்டம். மலர்ச்சியே முழுமை. மலருக்கு முழு மலர்ச்சி எப்படியோ, மாந்த னுக்கு அப்படி முழுமை. பலர் இதனை அடைய விரும்பமால் இருக்கலாம். அடைய இயலாமல் இருக்கலாம். இதைக் கொண்டு முழுமை நிலையே இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

முழுதும் தவறுகளின் வரலாறாகவே வாழ்க்கை இருந்திருந்தால் என்றைக்கோ மாந்த இனம் பூண்டற்றுப் போயிருக்கும். தடுத்து நிறுத்துவோர் இருப்பதால் தான் அழியாமல் காப்பாற்றப்படுகின்றது.

ஆன்றவிந்தடங்கிய சான்றோரர், முழுமை பெற்ற அல்லது முழுமையின் பாதையைத் தெரிந்து கொண்ட மீநிலை மாந்தர் அவ்வப் பொழுது தோன்றித் தங்கள் ஆற்றலை எதிர்ப்புறமாகச் செலுத்தி நிலைமையைச் சமன் செய்து கொண்டு வந்திருப்பதால் தானே உலகம் இன்னும் வாழ்கிறது.

'உண்டாலம்ம இவ்வுலகம்' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலும், 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என் வரும் திருக்குறளும் இதைத்தானே கூறுகின் றன.

நேர் என்ற ஒன்றைக் கொண்டுதானே கோணல் என்பது தீர்மானிக்கப்படுகின்றது. நேர் இல்லாமல் கோணல் இல்லை. முழுமை யில்லாமல் அரைகுறை இல்லை.

நீங்கள் கூறும் புதுமைச் சிந்தனையாளர் கள் - மேலை நாட்டுப் பல்வேறு மெய்யறி வாளர்கள் - எல்லோருமே முனைச் செய லுக்கு உட்பட்டவர்கள். 'தான்' என்பதில் தொடங்கி, மாந்தனின் தன் முனைப்புக்கு முதன்மை கொடுப்பவர்கள். தன் முனைப்பு, புடவி இயக்கத்தின் இயற்கை ஒழுங்கிற்கு முரணானது. 'தான்' என்பதில் தொடங்கும் மாந்தன் உலகில் அரும்பெருஞ் செயல்களை நிகழ்த்திக் காட்டலாம். அடைதல் (Achievement) என்னும் வகையில் மீமிசை நிலைகளை எய்தலாம். ஆனால் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுதல் மட்டும் இயலாது. புரிந்து கொள்ள வேண்டுமானால் 'தான்' என்பது அடங்க வேண்டும். அதன் முனைப்புகள், ஆரவாரங்கள் ஒடுங்க வேண்டும். கோணல் மாணல்கள் நிமிர வேண்டும். அப்பொழுது புடவி ஒழுங்கில் மாந்தன் தன்னை இணைத் துக் கொள்கிறான். முழுமைக்கு உரியவனா கின்றான்.

தன் முனைப்புக்கு உட்பட்ட எண்ணம் அல்லது மெய்யறிவுக் கோட்பாடு, எதையும் முன்சென்று அடைதலுக்குரிய ஓர் உயர் இலக்காகவே பார்க்கும். மாந்தனுக்கு அது குறிக்கோளே....அவன் குறையுடையவனாத லால் அதை ஒருநாளும் அடையமாட்டான் எனக்கொள்ளும். ஆனால் முழுமை அடையப் படும் ஒரு நிலை அன்று. முன்னோக்கிய இயக்கத்தின் முடிவு அன்று. உண்மையான முழுமை தன்னை - தன் சிறுமையை - இழப் பதே. அனைத்தளாவிய முழுமையில் தன்னைக் கரைத்துக்கொள்வதே (Perfection is nothing but becoming part of the Absolute). தன் வண்ணம் இழந்து முழுமை யின் வண்ணம் ஆவதே. இது மதஞ்சார்ந்த கருத்தன்று. அறிவியல் பார்வை.

12. ○ ஓவியம், மொழிபெயர்ப்பு, கவிதை, கட்டுரை, நல்லாசிரியப் பணி, சுற்றுச்சூழல் ஈடுபாடு என்று பல திறமை மிக்கவர் நீங்கள். ஆனால் அந்த அளவுக்கு உங்களை வெளிப் படுத்திக் கொள்ளவில்லையே. இதற்குக் காரணம் என்ன?

□ திறமைகளை வெளிப்படுத்தி, அரிய செயல் செய்து உலகம் வியக்கும் உயர்நிலை அடைதல் என்பது வேறு. வாழ்க்கையைப் புரிந்து கொண்டு வாழ்தல் என்பது வேறு. இரண்டும் எதிர் எதிர்த் திசையின.

எல்லாக் கலைகளையும் நான் அன்பின் வெளிப்பாடாகவே கொள்கின்றேன். அன்பின் நிறப் பிரிகை என்றும் கொள்ளலாம். அன்பின் மலர்ச்சியாக இல்லாத கலை - கலை ஞனின் தன்முனைப்பு அல்லது புகழ் வேட்கை யின் விளைவாக உருவாக்கப்படும் கலை உண்மைக் கலை ஆகாது என்பது என் எண்ணம். உண்மைக் கலைஞன் உள்ளத் தில் அன்புடையவனாகவே இருப்பான். அன்பே அழகு. அது கலை அழகாக வெளிப் படலாம்; அல்லது வாழ்க்கை அழகாக நிற்க

www.padippakam.com

லாம். ஆழ்ந்து பார்த்தால் அன்புடையவனாக இருப்பது தான் வாழ்க்கையில் இன்றியமையாததே தவிர கலைஞனாக இருப்பது இன்றியமையாததன்று. அன்புடையவன் கலைப்படைப்பாளி ஆகலாம், ஆகாமலும் இருக்கலாம். இழப்பு ஏதும் இல்லை. கதிரவனின் நிறமற்ற சுடர் ஒளி நிறப்பிரிகையால் வண்ணங்களாக காட்சி தருகின்றது. அப்படிக் காட்சி தந்தே ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

முனைந்து நின்று ஓர் உயர் நிலையை அடைவதற்கு நான் ஏக்கமுற்றதில்லை. அடைதல் என்பது எனக்கு அரிய செயல் அன்று. நீங்கள் சுட்டியுள்ள எந்தத் துறையிலும், அல்லது எல்லாத் துறைகளிலும் மேல் நிலை அடைதல் எனக்கு எளிதாகவே இருந்திருக்கும். ஆயினும் அடைதலில் நிறைவு தேடாமல் வாழ்தலில் அழகுதேடி வாழ்க்கையைச் சமன்பாட்டுடன் வாழ்தலிலேயே என் கவனம் மிகுதியும் சென்றது. இப்பொழுதும் இருக்கும் பழைய சரக்குகள் படைப்பென்று கொஞ்சம் வெளிப்படுகின்றன. விளையாட்டு எண்ணம் வரும்பொழுது அதைச் செய்கின்றேனே தவிரச் செய்தே தீர வேண்டும் என்ற உள் ஏக்கம் எனக்கு இல்லை.

எந்த உயர்நிலையையும் அடையாமல், உலகுக்கு உயர் தொண்டு என்று எதுவும் செய்யாமல், வாழ்தலின் நுட்பம் அறிந்து வாழ்ந்தாலேயே ஒருவன் இப்புடவிப் பேரியக்கத்தின் இசைமையொழுங்கு (harmony) குன்றாமல் நிறைவோடு வாழமுடியும். இதனால், வாழ்தலில் ஏற்பட்ட நாட்டம் என்னை வெளிப்படுத்திக் கொள்வதில் ஏற்பட்டதில்லை.

13. ○ நீங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றைப் பற்றியும் தெளிவு பெற்றுவிட்டது போல் பல நேரங்களில் பேசுகிறீர்கள்; எழுதுகிறீர்கள். விடை தெரியா வினாக்களே இல்லை என்பது போல் உங்கள் அணுகுமுறை அமைகின்றது. இது ஒரு கற்பிதமே என்று எப்பொழுதாவது உணர நேர்ந்து உள்ளதா?

□ நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். எனக்குத் தெரிந்ததாக நான் நினைக்கும் செய்தி ஒன்றே ஒன்றுதான். மற்றபடி எனக்கு விடை தெரியாத வினாக்கள் எத்தனையோ உள்ளன. அவற்றைப் பற்றி நான் பேசுவதே இல்லை.

எனக்குத் தெரிந்ததெல்லாம், உலகியல் என்பது வாழ்க்கையே அன்று என்பது தான். மாந்தன் தான் உள்ளார்ந்த நல்லியல்புகளை முழுமையாக மலர்த்திக் கொள்ளுதலே வாழ்க்கை. இம்மலர்ச்சி தன் முனைப்பு அற்ற நிலையிலேயே ஏற்படுகின்றது. அந்நிலையில்தான் மாந்தன் இப்புடவியோடும் புடவிப் பொருள்களோடும் சரியான உறவு கொள்கிறான். அவ்வுறவு அவனை அன்புடையவனாக ஆக்குகின்றது. அன்பின்றி வாழ்வில் அழகும் செழுமையும் இல்லை.

இந்த ஒன்றுமட்டுமே நான் அறிந்தது. இதைப்பற்றி மட்டுமே பேசுகின்றேன்.

எனக்கு எல்லாம் தெரிந்ததாக நினைத்தால் அது ஒரு கற்பிதமாக இருக்கலாம். அப்படி நான் நினைக்கவில்லையே. எனக்கு விடைதெரியாத வினாக்கள் எத்தனையோ இருக்கின்றன. "தன் முனைப்பு வாழ்க்கையை விட அன்பு வாழ்க்கை செழுமையும் பயனும் உடையதாக இருக்கின்றது. எனவே அன்போடு வாழ்வோம்" என்று கூறுகிறேனே தவிர, ஏன் சிறப்பாக வாழவேண்டும்? வாழ்க்கை பயன் உடையதாக இருந்தே தீர வேண்டுமா? அப்படியானால் முழுமை பற்றிக் கனவிலும் எண்ணிப் பார்க்க முடியாத பல்லாயிரக் கணக்கான மக்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மண்ணில் பிறந்து வாழ்ந்து எவ்வகையான புரிந்து கொள்ளுதலும் இல்லாமல் மடிந்து போகின்றனரே, அவர்கள் வாழ்க்கைக்கு என்ன பொருள்? இவ்வினாக்கட்கு என்னிடம் விடை இல்லை. மாந்தனின் தன்னலமே உலக வாழ்வின் தீமைகட்கெல்லாம் காரணம் என்கின்றேன். ஆனால் தீமை தன்னலத்தின் உள்ளிருந்தே தோன்றியதோ? அல்லது மாந்தர் வாழ்வுக்கு அப்பால் எங்கோ இருந்து தீமைதன்னலத்தை வாயிலாகக் கொண்டு மாந்தர் வாழ்க்கைக்குள் புகுந்ததா என்ற வினாக்கட்கு விடை எனக்குத் தெரியாது.



படிப்பகம்

மாந்தனின் வாழ்க்கை தற்செயலானதா? திட்டமிடப்பட்டதா? நான் அறியேன். மாந்தனுக்கு ஏற்படும் இடுக்கண்கள், துன்பங்கள் ஏன் ஏற்படுகின்றன? அவை உடலுக்கா உள்ளத்துக்கா? அவற்றுக்கு ஏதேனும் பொருள் இருக்குமா? உள்நோக்கம் இருக்குமா? எனக்கு விடை தெரியவில்லையே.

ஊழ்வினை என ஒன்று உண்டா? மறு பிறவி உண்டா? மெய்ப்பொருள் என்பது என்ன? எந்தத் திட்டவட்டமான விடையும் என்னால் கூறமுடியாதே. நம் அறிவு, நம் மூளை மிகவும் சிறியது. இந்த மிகச்சிறிய அறிவைக் கொண்டு நம் அறிவுக்கடங்காத செய்திகளைப் பற்றி எந்த முடிவுக்கும் வர முடியாது என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்.

எனக்குத் தெரியாததைத் தெரிந்ததாக நினைத்தால் அது கற்பிதம் என்று கூறலாம். ஒழுங்காக வாழ்ந்தால் வாழ்க்கை எப்படியிருக்கிறது? ஒழுங்கில்லை என்றால் எப்படியிருக்கிறது? அன்பு என்ன விளைவை ஏற்படுத்துகின்றது? அன்பு இல்லாமை என்ன விளைவை ஏற்படுத்துகின்றது? ஒவ்வொரு நொடியும் கண்முன் காணுகின்ற இச்செய்திகளை யார் மறுக்க முடியும்? எப்படி மறுக்க முடியும்?

எனக்குத் தெரிந்த ஒரே செய்தியைப் பல வேறு வகையாகக் கூறுகிறேன். பலவேறு முனைகளிலிருந்து கூறுகிறேன். பலவேறு சிக்கல்களோடு இணைத்துக் கூறுகிறேன். வலியுறுத்திக் கூறுகிறேன். எனக்குத் தெரியாத செய்திகளைப்பற்றி நான் பேசுவதே இல்லை. இது எனக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பது போன்ற மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. உண்மை அப்படியில்லை.

**14 ● உங்களுக்கு வயது 62 என்று நினைக்கிறேன். இந்த 62 ஆண்டு வாழ்க்கை உங்களுக்கு மனநிறைவு உள்ளதாக அமைந்திருக்கிறதா?**

□ எனக்கு நானே வகுத்துக் கொண்ட எல்லைகளை நான் இன்னும் அடையவில்லை என்றாலும், வாழ்ந்த வரை வாழ்க்கையை நிறைவாக வாழ்ந்திருக்கின்றேன். உலகியல் பிடியில் மாட்டிக்கொண்டு உள்ளம் செத்துப் போகாமல் இருக்கின்றேனே.

ஒருவனது வாழ்க்கை அவனைப் பொறுத்து மலர்ச்சியாகவும், உலகைப் பொறுத்து அந்த மலர்ச்சியே பங்களிப்பாகவும் அமைதல் வேண்டும். என் வாழ்க்கை அப்படி அமைந்திருப்பதாக எண்ணுகின்றேன். உலகம் எதிர்பார்க்கும் வெளிப்படையான பங்களிப்பாக இருந்ததைவிட, மறைமுகமான பங்களிப்பாக அதனைக் கூறலாம். சுவடுகள் அழுந்தப் பதியாதபடி நடந்திருக்கின்றேன். நறுமணத்தைக் காற்றில் அள்ளி இறைத்து எல்லார் கவனத்தையும் ஈர்த்ததில்லை; சிலர் மட்டுமே உணரும் மெல்லிய மணம் கமழ்த்தி நடத்திருக்கின்றேன்.

நெஞ்சறிந்து யாருக்கும் தீங்கு செய்ததில்லை. தவிர்க்க முடியாதபடி இன்றையச் சூரண்டல் அமைப்பின் பிடியில் நான் மாட்டிக் கொண்டிருந்தாலும், அதனால் எனக்கு உரியது அல்லாததை நான் பெற்றிருக்க நேர்ந்தாலும், அதனை ஈடு செய்யும்படி என் பங்களிப்பை ஆக்கிக்கொண்டிருக்கின்றேன்.

உலகிலிருந்து பெறுவதைவிடக் கொடுத்தல் மிகுதியாக இருத்தல் வேண்டும் என்று வாழ்ந்திருக்கின்றேன். என்முன் திறந்திருந்த உலகியல் வாய்ப்புக்களை வேட்கையோடு பற்றிக்கொண்டு பெயரும் புகழும் வளமும் அடைந்திருக்கலாம். அதையே உலகுக்கு என் பங்களிப்பாகவும் காட்டியிருக்கலாம். அப்படிச் செய்யாமல், உலகின் தீமைகட்குப் பங்களிக்காத ஒரு வாழ்க்கை முறையை நான் தேர்ந்து கொண்டேன். ஒழுங்கின்மையோடு மட்டுமே போராடி, ஒழுங்கற்றவர்களோடு உடன்பாடு செய்துகொள்ளாமல், தீமைகட்கு வளைந்து கொடுக்காமல், அதேபொழுது வேறு எந்தவகையிலும் மாந்தரோடு உராய்வுகள் ஏற்படுத்திக்கொள்ளாமல் நல்லுறவுடன் வாழ முடியும் என்று வாழ்ந்து காட்டியிருக்கின்றேன். எழுத்தையும் பேச்சையும் அல்ல, வாழ்தலையே என் முதன்மையான பங்களிப்பாக வழங்கியிருக்கின்றேன். வாழ்க்கை பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதையும், மாந்த உறவுகளைச் செழுமைப்படுத்துவதையும் என் வாழ்க்கையாகவே கொண்டிருக்கிறேன்.

www.padippakam.com

என் பிள்ளைகளை வளர்க்கும் செயலிலும், மாந்தனை மாந்தனிடமிருந்து வேறுபடுத்தும் எந்த மனவியல் தடையும் அற்றவர்களாக, உலகுக்குத் தீமை செய்யாதவர்களாக அவர்களை வளர்த்திருக்கின்றேன். இன்றைய போலியான கல்விமுறைக்கு உட்பட்டே அவர்கள் கற்க நேர்ந்தாலும் இக்கல்விமுறையின் தீமை அவர்களைத் தாக்காதபடி அவர்கட்கு வாழ்வியலை உணர்த்தியிருக்கின்றேன். உலகியலில் மட்டுமன்று, அறிவு நிலையிலும் பந்தய ஓட்டங்கள் எவ்வளவு பிழையானவை என்று அவர்களை உணரச் செய்திருக்கிறேன். ஆயினும் இன்றைய வாழ்க்கையின் பரபரப்பினின்றும், எந்திரச் சுழற்சியினின்றும் முற்றுமாக விடுபடாத நிலையில், என்னிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய எல்லாவற்றையும் அவர்கள் தெரிந்து கொண்டார்கள் என்று கூறுதற்கில்லை.

ஆசிரியர் பணியிலும், கல்வித் திட்டங்கட்கு அப்பாற் சென்று வாழ்க்கை பற்றிய விழிப்புணர்வை மாணவர்க்கு ஊட்டியிருக்கின்றேன். குழந்தைகளிடையே இயற்கை ஈடுபாட்டை வளர்த்திருக்கின்றேன்.

எல்லாவற்றிலும் நிறைவாக நான் கொள்வன இரண்டு செய்திகள். உடைந்த பொருள்களை ஒட்டுவதிலும் கோணலானவற்றை நிமிர்த்துவதிலும் சிக்கல் என்று பிறர் தூக்கி எறிந்துவிட்டுப் போகக் கூடிய இரண்டு முழ நூலையும் கையில் எடுத்து அரை மணி நேரமானாலும் இருந்து சிக்கல்களை அவிழ்த்துச் சரி செய்வதிலும், பாடல் எழுதும் பொழுது பெறும் நிறைவை நான் பெறுவது ஒன்று; என் ஆற்றல்களை எனக்கு அடையாளமாக்கிக் கொள்ளாமல், திறமைகளை என் மேல் ஒட்டிவைத்து என் உருவத்தைப் பெரிதாக்கிக் காட்டாமல், மிக எளியவனாக எல்லாரோடும் பழக முடிவது ஒன்று; வேறெவையும் இல்லாவிட்டாலும் இந்த இரண்டுமே என் வாழ்க்கையைப் பொருளுடையதாகச் செய்யும் என்று நம்புகின்றேன்.

15. ○ உங்களின் இளமைக்காலப் பின்னணி பற்றிக் கொஞ்சம் கூறுங்களேன்.

நான் பிறந்தது தென்காசிக்குப் பத்துப் புதுக்கல் கிழக்கே இருக்கும் குறும்பலாப்பேரி என்ற சிற்றூரில். நான்கு தலை முறைகளாக உழவர் குடும்பம். அதனால் மண்ணோடு எனக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. தந்தையார் சில காலம் உழவராகவும் சில காலம் தமிழாசிரியராகவும் மாறி மாறி இருந்து வந்தார். குடும்பத்தில் வழி வழியான தமிழ்க்கல்வி இருந்தது. அம்மாவின் வழியில் மூன்று தலைமுறைகளாகக் கிறித்தவர்கள். அப்பாவின் தாத்தா கிறித்தவராக மாறிப் பின் மீண்டும் பெண்களின் திருமணத்துக்காக இந்துவாக மாறினாராம். தாத்தா அப்படியும் இப்படியுமாக இருந்தாலும், அப்பாவும் பெரியப்பா சிற்றப்பாக்களும் கிறித்தவராகவே இருந்தனர்.

மிக இளமையிலேயே தந்தையார் எனக்குத் தமிழறிவூட்டினார். என் இரண்டரை அகவையிலேயே அம்மா எனக்கு முதல் வகுப்புப் பாடங்களைக் கற்றுத்தந்ததாகக் கூறுவார்கள்.

தந்தையார் விருதுநகரில் தமிழாசிரியராக இருந்தபொழுது முதல் வகுப்பும் இரண்டாம் வகுப்பும் அங்குப் படித்தேன. தந்தையார் தமிழ்ப்புலவர் (வித்துவான்) இறுதி நிலை முடிக்காமையால் மீண்டும் ஊர் சென்றார். உழவு வேலை செய்து கொண்டே தேர்வுக்குப் படித்தார். மூன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை குறும்பலாப் பேரியிலும் அருகிலிருந்த கீழப்பாவூரிலும் படித்தேன். அக்காலம்தான் மண்ணோடும் மக்களோடும் இயற்கையோடும் ஊறித் திளைத்த காலம்.

காலை மூன்று மணிக்கே எழுந்து கொள்வதும் காற்றடிக்கும் கோடை காலத்தில் புளிய மரத்திற்குப் பழம் பொறுக்கச் செல்வதும், பனம் பழங்கள் பொறுக்கி வந்து கிழங்குக் குழிகள் போடுவதும், மாட்டுக்குத் தழை அறுக்க வயலுக்குச் செல்வதும், ஏரியிலும் வாய்க்காலிலும் வயல் கிணறுகளிலும் குதித்து நீந்துவதும், கிணற்றில் கம்மாலை அடிப்பதும், வயலுக்கு நீர் பாய்ச்சுகையில் வாய்க்காலில் மீன் பிடித்து விளையாடுவதும் இரவில் மொச்சைக்குக் காவல் காக்கச் செல்



படிப்பகம்

www.padippakam.com

வதும், காட்டுக் குச்சலில் கேழ்வரகுக் கொம்மை மேல் ஓலைப்பாய் விரித்து உறங்கு வதும், சுடலை மாடசாமி கோயில் கொடை (திருவிழா) வின் பொழுது இரவெல்லாம் வில்லுப்பாட்டுக் கேட்பதும், பத்திரகாளி அம்மன் கோயிலில் கணியான் 'ஆட்டம், பொய்க்குதிரை ஆட்டம், கும்பக்குடம் (கர காட்டம்) ஆலி ஆட்டம் பார்த்து மகிழ்வதும், அறுவடைக் களத்தில் கதிர் அடிப்பதும், மறு நாள் மாடுகட்டிப் பிணையல் அடிப்பதும், உழுந்து நெற்றெடுப்பதும், எள்ளுக்காய் பிடுங்குவதும், காரணம், (கொள்ளு) வெள் ளைப் பயறு, மிளகாய்வற்றல் காயவைத்து அள்ளுவதும், சோளக்கதிர் சுட்டுக் கசக்கித் தின்பதும், பயிருக்கு நடுவில் கொழு கொழு வென்று வளர்ந்திருக்கும் புல்லறுத்து மாட்டுக் குக் கொண்டு வருவதும், தோட்டத்தில் கத்த ரிக்காய் பறித்து மூட்டையோடு கட்டை வண்டி ஏறிச் சந்தைக்குப் போவதும், மாமரம் கொய்யா மரங்களில் குரங்குகள் போலத் தாவிக் கிடப்பதும், வாழைக் குலைகளை மண்ணில் குழிதோண்டி உள்ளே வைத்து மூடிப் புகை மூட்டம் போட்டு பழுக்க வைப்ப தும்,மழைக்காலத்தில் பகலெல்லாம் வண்ணத் துப் பூச்சிகளை விரட்டித்திரிவதும், இரவில் மரங்களிலும் புதர்களிலும் மின்னும் நூற்றுக் கணக்கான மின்மினிப் பூச்சிகளின் அழகில் நெஞ்சம் பறிகொடுப்பதும், கொசுவை விரட் டப் புகை மூட்டம் போடுவதும், தவளைப் பாட்டில் உள்ளம் மயங்குவதும், நிலா வெளிச் சத்தில் சடுகுடு, கிளித்தட்டு, நொண்டி ஆட்டம் ஆடுவதும், பகலில் பம்பரஞ் சுழற்றுவதும், சில்லுங்குச்சியும் ஆடுவதும், அடடா, சொல் லிக் கொண்டே போகலாம். எத்தனை எத்தனை ஆட்டங்கள்! எத்தனை மகிழ்ச்சிகள்! மக்கள் உறவுதான் எத்தனை இனிதாகவும் நெருக்கமாகவும் இருந்தது! இரவில் நிலா வெளிச்சத்தில் ஒருவர் வீட்டு முற்றத்தில் நானகைந்து வீட்டார் தங்கள் தங்கள் உணவைச் சட்டி பானைகளோடு கொண்டு வந்து பகிர்ந்து உண்பதிலும், பேய்க் கதைகள் ஆவிக்கதைகள் கூறுவதிலும் எத்தனை இரவு கள் நள்ளிரவு வரை கழிந்தன! ஒரு திருமணம் என்றால் மூன்று நாட்களின் முன்பே உறவி னர் கூடி எல்லா வேலைகளையும் பங்கிட்டுக் கொண்டு செய்வதில் எத்தனை கூட்டுறவு! புதிய விளைபொருள்களையும் ஒரு வீட்டுக் கொரு வீடு பரிமாறிக் கொள்வதில் எத்தனை அன்பு! விருந்தினர் வந்தால் எவ்வளவு மகிழ்ச்சி!

தந்தையார் மீண்டும் தமிழாசிரியராகிக் கோபால சமுத்திரம் என்னும் ஊரில் பணி ஏற்ற பொழுது குடும்பத்துடன் அங்குச் சென் றோம். நான் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந் தேன். பொருநையாற்றங்கரையில் உள்ளது அவ்வூர். என் மாலை நேரமெல்லாம் ஆற்றங் கரையிலேயே கழிந்தது. அவ்வூரைச் சுற்றி மாந்தோப்புக்கள், பளிங்குநீர் வாய்க்கால்கள், பசுமை குலுங்கும் வயல்கள், அல்லிக் குளங் கள், பருக்கைக்கல் குன்றுகள், ஐந்து கல் குறுக்கே நடந்து சென்றால் திருநெல்வேலி நகரம். மாலை பள்ளி முடிந்து புறப்பட்டால் முதலாட்டத்துக்குப் போய்விடுவோம். நானும் என் தம்பியும் நண்பன் ஒருவனும் இரவில் தெரிந்தவர் வீட்டில் படுத்திருந்து காலை வீட்டுக்கு வந்துவிடுவோம். மாதம் இரண்டு முறை இது தவறாது.

கீழப்பாவூரிலும், கோபால சமுத்திரத்தி லும் பார்ப்பனர் நடத்திய தனியார் பள்ளிகள். ஓவியம், கைவினை, உடற்பயிற்சி, தமிழ்ப் பாடம் தவிர வேறெல்லாவற்றுக்கும் பார்ப் பனரே ஆசிரியர்கள். 'சூத்திரன்' என்ற சொல் தாராளமாக அவர்கள் நாவில் வழங்கும். சூத்திரர்கள் படித்து மேல் வருவதை வேண்டா விருப்பாய்த் தாங்கிக் கொண்டனர். ஆனா லும் நல்ல ஆசிரியர்கள். அக்கறையோடு பாடம் நடத்தினர்.

கல்லூரியில் நான்காண்டுகளும் பாளை யங் கோட்டைத் தூய யோவான் கல்லூரியில் பயின்றேன். தங்கியது கிறித்தவ மாணவர் விடுதி. காலை, வழிபாடு. ஞாயிற்றுக் கிழமை களில் கோயில் (Church). தாமரை இலைத் தண்ணீராக நான் இருந்தேன். கல்லூரியில் கிறித்தவ மாணவர்க்கு மதக்கல்வி வகுப்பு உண்டு. மற்றவர்கட்கு அறக்கல்வி. தேர்வும் நடத்துவார்கள். ஒரு முறை தேர்வில் கிறித் தவ மக்கள் கிறித்துவையே புரிந்து கொள்ளா மையையும் அவர்கள் வாழ்க்கையின் பொய்மை, போலிமைகளையும் கடுமையாகக் கடிந்து எழுதினேன். மதிப்பிட்ட வெள்ளைக் காரப் பாதிரியார் எனக்கு முதல் மதிப்பெண் கொடுத்திருந்தார்!



படிப்பகம்

www.padippakam.com

ஒன்பதாம் வகுப்பிலிருந்தே ஆங்கில நூல்களைப் படிக்கத் தொடங்கியிருந்தேன். கல்லூரிக் காலத்தில் நிறைய பாட்டுணர்வு கிளர்ந்தெழுந்த காலமும் அதுதான். இளமையிலிருந்தே இரண்டு தன்மைகள் என்னிடம் இருந்தன. நண்பர்களோடு ஆடிப் பாடிச் சிரித்து ஆரவாரம் பண்ணுபவனாகச் சில நேரம். எல்லாரிடமிருந்தும் விலகித் தனிமையில் இருந்து வாழ்க்கையைப்பற்றி எண்ணுபவனாகச் சில நேரம். இயற்கை ஈடுபாடும் அத்தனிமையின் பொழுதுதான் வளர்ந்தது.

**16 ● உங்கள் காதல் வாழ்க்கை எந்த அளவுக்கு உங்கள் வாழ்க்கையை வடிவமைப்பதில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதைக் கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்களேன்.**

☐ ஒருவன் தன்னை நடுவாகக்கொண்டு வாழ்க்கையைப் பாராமல், இயல்பான உணர்வுகளுடன் வாழ்க்கையை இயல்பாக வாழ விரும்பினால், சாதி மதம் போன்று மாந்தரை வேறு பிரிக்கும் சார்புகளும் அவற்றால் கிடைக்கும் மனவியல் உலகியல் பாதுகாப்பும் இல்லாமல், வாழ்க்கை பற்றிய அச்சம் இல்லாமல் எல்லோரோடும் எல்லாவற்றோடும் இயல்பான உறவுடன் வாழமுடியும்என்ற என் எண்ணத்தை நடைமுறைப்படுத்தி வாழ்வதற்கு நூற்றுக்கு நூறு என் வாழ்க்கைத் துணைவியின் துணை மிக இயல்பாக எனக்கு வாய்த்தது. நான் எடுத்துக்கூறி வழிப்படுத்த வேண்டிய தேவையில்லாமலேயே மேற்கண்ட என் எண்ணத்திலும்போக்கிலும் என் மனைவி இயல்பாக ஒன்றி நின்றார்.

தன் இளமையில் இந்து சமய வழிபாட்டு முறைகளிலும் பூசை, சடங்கு முதலியவற்றிலும் பழகியிருந்தாலும்கூட உள்ளத்திலிருந்து அவற்றை மிக எளிதில் தூக்கி எறிந்தவர் என் மனைவி. எங்கள் ஊருக்குச் சென்று உறவினர்களுடன் பழக நேர்ந்தபொழுதும் அங்கு நிலவிய கிறித்தவச் சூழல்களில் அவர் அயன்மைப்பட்டு ஒதுங்கியிருந்ததில்லை. எங்கள் உறவினர் எல்லோருக்கும் என் மனைவியின் வேறுபாடற்ற பழகுமுறை மிகவும் பிடித்துப்போய் விட்டது. மாந்த உறவுகளில் எனக்கு எந்த வேறுபாடும் இல்லையென்றாலும் கொள்கை அடிப்படையில் நான் பார்ப்பனியத்துக்கு எதிரானவன். பார்ப்பனரின் தமிழ் எதிர்ப்புப் போக்கையும் இனத் தன்னலத் தன்மைகளையும் எழுத்திலும் பேச்சிலும் கடுமையாகச் சாடுபவன். இவையெல்லாம் என் மனைவியின் உள்ளத்தில் கடுகளவு உறுத்தலைக்கூட உண்டாக்கியதில்லை. தான் ஒரு பார்ப்பனப் பெண் என்ற உணர்வு—ஓர்மை—உளவியல் அடிப்படையிலேயே அவர் உள்ளத்திலிருந்து விலகிப் போயிற்று. என் கொள்கை வாழ்க்கைக்கு அவர் சிறிதளவுகூடத் தடையாய் இருந்ததில்லை. தொடக்கக் காலத்தில் தென்மொழி வேலைகட்காக என் மனைவியைப் பலமுறை தனியாக விட்டுச்சென்ற பொழுதும், எழுத்து வேலைகளில் மூழ்கியிருந்த பொழுதும் வியக்கத்தக்க ஒத்துழைப்பைப் பெற்றேன். குடும்ப வாழ்க்கை எனக்குக் கடுகளவும் சுமையாக இராதபடி அவர் பார்த்துக்கொண்டார். உலகியல் சுமை முழுமையும் தன் பொறுப்பில் ஏற்று என் உணர்வுக்கும்,வினைப்பாடுகட்கும் மிக விடுதலையான சூழலை உருவாக்கிக் கொடுத்தவர் அவர். பள்ளிப் பணிகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டுக் குழந்தைகளையும் அக்கறையுடன் வளர்த்து இல்லறக் கடமைகளையும் நிறைவேற்றிப் புறக் கவலையும் பொறுப்பும் இல்லாமல் நான் படைப்பிலும் தமிழ்ப்பணியிலும் ஈடுபட என்னோடும் ஒத்துழைத்த என் மனைவியின் பன்முகத் தன்மை பலரிடம் காணப்படாதது.

பிறருக்கு உதவ நேர்ந்த எல்லா நிலைகளிலும் இருவரும் சேர்ந்தே உதவியிருக்கின்றோம்.

நான் என் ஆற்றல்களை முழுதும் பயன்படுத்திப் படைப்புலகில் சிறந்து விளங்க வேண்டும், புகழுக்கும் பாராட்டுக்கும் உரியவனாய்த் திகழ வேண்டும் என்ற விருப்பம் என் மனைவிக்கு மிகுதியும் இருந்தது. இருந்தும்கூட, நான் இவற்றிலெல்லாம் ஈடுபாடு காட்டாதபொழுது அவர் அதற்காக என்னைக் குறைபட்டுக் கொண்டதில்லை. இடையறா வினைப்பாடுகளிலும், நல்லவை செய்யும் விருப்பத்திலும் குறிக்கோள் நோக்கிய இயக்கத்திலும் நிறைவு விழைந்த, நிறைவுகண்ட என் மனைவியால் வினைப்பாடுகட்கு



படிப்பகம்

www.padippakam.com

முதன்மை கொடாத, செயல்களை எள்ளி நகையாடுகின்ற, குறிக்கோள்களை உதறித் தள்ளுகின்ற என் வாழ்க்கை இயக்கத்தைப் புரிந்து கொள்வது கடினமாயிருந்தாலும், புரிந்து கொள்ளலுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கை என்மீது அவருக்கு இருந்தமையால் இதிலும் சிறிதுகூடச் சிக்கல் எழவில்லை.

நெய் வண்ண ஓவியம் தீட்ட வேண்டுமென்றால் முதலில் திரைத் துணியில் வெள்ளை வண்ணம் பூசிக் காயவிடவேண்டும். பின்பே வண்ணங்களைக் குழைத்து ஓவியம் தீட்டத் தொடங்க வேண்டும். வெள்ளை வண்ணம் பூசாமல் வரையத் தொடங்கினால் வண்ணங்கள் துணியில் தங்காமல் பின்புறமாய்க் கசிந்தோடிவிடும். ஓவியம் உருப் பெறாது. இவ்வாறு என் வாழ்க்கை ஓவியம் மேலெழும்ப அடிப்படை வெள்ளை வண்ணமாய் நின்று துணைபுரிந்தவர் என் மனைவி என்று கூறலாம்.

17 ○ நீங்களும் பிராமண எதிர்ப்புக் கொள்கை உடையவர்தாம். ஆனால் சமூகத்தின் எல்லாத் தீமைகட்கும் பிராமணர்களே காரணம் என்று ஓர் ஒற்றை வாதத்தை இனியும் முன் வைக்க முடியுமா?

□ முடியாது. எல்லாச் சூழல்களையும் தங்களுக்கு உகந்தனவாக ஆக்கிக்கொண்டு, பிறரை முன்வர விடாமல் தங்களையும் தங்கள் சாதியினரையும் முன்னேற்றிக்கொள்வதில் பார்ப்பனர் முனைந்து நிற்கின்றனர். இதே பிழையினை எக்குழுவினர், எச்சாதியினர் செய்தாலும் பிழைதானே. சாதி வேறுபாடு வளர்வதற்குப் பார்ப்பனர் காரணமாக இருந்தாலும், தங்களை உயர்வென்று கருதுகின்ற மற்றச் சாதியசர் சிலர் தம்மினும் கீழ் உள்ளவர்கள் மேல் வருவதைப் பொறுக்க முடியாமல் எதிர்ப்பதும், அவர்களைக் கொடுமைகட்குள்ளாக்குவதும் இன்னும் நடப்பதைக் காண்கின்றோம். இதற்குப் பார்ப்பனரைக் காரணமாகக் கூறமுடியாது. தவிர தமிழ்க் குமுகாயத்தில் இன்று எத்தனையோ தீமைகளைக் காண்கின்றோம். மிகப்பெரிய அரசியல் ஊழல்கள், வணிகச் சுரண்டல்கள், ஒழுக்க மீறல்கள், திட்டமிடப் பட்ட குற்றங்கள் இவ்வாறு பல மட்டங்களில் பல தீமைகளைப் பார்க்கின்றோம். ஆதலின் எல்லாவற்றுக்கும் பார்ப்பனரே காரணம் என்று கூறமுடியாது. ஆனால் பார்ப்பனரல்லாதாரின் எண்ணப் போக்கைப் பல வகைகளில் திரிபடையச் செய்து அவை முன்னேற்றம் நோக்கிச் செல்லாதவாறு திசை திருப்பிக் கவனச் சிதறல்களை ஏற்படச் செய்து, தங்களுக்குள் தாங்களே அடித்துக் கொள்ளவும் வைத்து மிக விரகாண்மையோடு பார்ப்பனியம் செயல்படுகின்றது என்பதை மறுக்க முடியாது. என்றாலும்கூட நாம் இடம் கொடுத்துக் கொண்டிருப்பதால்தானே பார்ப்பனியம் வெற்றி பெறுகிறது. நம்மிடையே போதிய வலிமையும், எழுச்சியும், விழிப்புணர்வும் தேவையான வினையாண்மையும் இருந்தால் பார்ப்பனியத்தை முறியடிக்க முடிந்திருக்குமே. நாம் கதவைத் திறந்து வைப்பதால் தானே திருடன் உள்ளே நுழைகின்றான். நாம் தூங்கிக் கொண்டிருப்பதால் தானே தொடையில் கயிறு திரிக்கப்படுகின்றது. ஏமாறுபவர் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் இருப்பர். நம்மிடம்வலுக்குறைவை வைத்துக்கொண்டு எதிராளியையே குற்றம் சொல்லிக்கொண்டிருப்பதில் பொருளில்லை.

18. ○ தமிழின வரலாற்றில் தென்மொழிக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. அதன் வளர்ச்சியில் உங்கட்குப் பங்குண்டு. சில காலம் உறுப்பாசிரியனாகக் கூட இருந்திருக்கின்றீர்கள். அந்தத் தென்மொழியோடு உங்கள் தொடர்பு அறுவதற்கு என்ன காரணம்? விரிவாகக் கூறுங்களேன்.

□ தென்மொழி ஆசிரியர்க்கும் எனக்கும் பல கருத்தொற்றுமைகள் இருந்தன. தமிழ், தமிழின மறுமலர்ச்சி போன்றவற்றில் இருவர்க்கும் ஒரே தன்மையான ஈடுபாடு இருந்தது. இன்னும் பலவற்றை என்னினும் தெளிவாக அவர் பார்த்தார். அவரால் எனக்குப் பல செய்திகளில் தெளிவு கிட்டியது. அதோடு, அவர் என்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். நானும் அவர்மீது அன்பு உடையவனாக இருந்தேன். ஆனால் எங்கள் இருவர் இயக்கத்திலும் அடிப்படையான வேறுபாடு இருந்தது.

தென்மொழி ஆசிரியர் பல்துறை ஈடுபாடுகளும் ஆற்றல்களும் வாய்க்கப் பெற்றவராக



படிப்பகம்

www.padippakam.com

இருந்தும், தமிழின விடுதலையைத் தம் வாழ் பணியாகக் கொண்டிருந்தார். தம்மை முழு மையாக அந்நோக்கத்துக்கே ஒப்படைத்துக் கொண்டார். ஒரு குறிக்கோளை நோக்கி வினையாண்மையுடன் எந்திரமாய்ச் சுழன் றது அவர் இயக்கம். அது ஒரு நடுப்புள்ளி யைச் சுற்றி சுழன்ற இயக்கம் என்பேன். அமைப்புக்கள் நிறுவனங்களின் வினைப்பாடு களாக உலகில் இதுவரை நடந்திருக்கும் எல்லா இயக்கங்களும் நடுப்புள்ளி சார்ந்த இயக்கங்களே. ஒரு குறித்த நோக்கத்தை நிறைவேற்ற, பயனை விளைவிக்க, அவை பயன்பட்டன; படுகின்றன. இத்தகைய இயக்கங்களில் இலக்கு முதன்மையாகின்றது; வழி முதன்மையாவதில்லை.

தொடக்கத்திலிருந்தே தமிழ் மறு மலர்ச்சிப் பணிகளில் நான் ஆர்வமுடன் ஈடு பட்டு வந்தபொழுதும் பிறவற்றினின்று அவற்றைத் தனிப்படுத்திக் கொள்ளாமல் செய்யத்தக்க பலவற்றுள் ஒன்றாகவே அதனைக் கண்டேன். முழுதளாவிய வாழ்க்கை மலர்ச்சியின் ஒரு கூறாகவே தமிழ்மறுமலர்ச்சி என்னை ஈர்த்தது. என் இயக்கம் நடுப்புள்ளி அற்ற இயக்கமாய் நின்றது. ஓர் இலக்கை நோக்கிய முற்செலவன்று அது. இலக்கே அற்ற வாழ்க்கை விழிப்புணர்வு என்பேன். அதில் சிறிது, பெரிது, உயர்வு, தாழ்வு, முதன் மையானது, முதன்மையற்றது என்றெல்லாம் முரண்கள் இல்லை. ஒன்றைப் புறக்கணித்து மற்றொன்றை முன்னிறுத்தும் தன்மை அதற் கில்லை. அது அது அதன் அதன் அளவில் மலர்தல் வேண்டும் என்று நான் எண்ணி னேன். ஒரு குறிப்பிட்ட கால, இட எல்லைக் குள் எங்கள் இருவரின் வினைப்பாடுகளும் ஒன்றாயிருந்த பொழுதிலும், உள்ளார்ந்த தன்மையில் இருவர் இயக்கமும் வேறு வேறா யிருந்தன. அவர் எல்லாவற்றையும் உணர்ந் திருந்தும், தெரிந்திருந்தும் தாமாகவே தம்மைச் சில கட்டுக்குள் புகுத்திக் கொண் டார். எந்தக் கட்டுக்குள்ளும் அகப்படாமை என் இயல்பாயிருந்தது. அவர்தம் இயக்கம் ஒளிக் குவியலாகவும் என் இயக்கம் ஒளிச் சிதறலாகவும் இருந்தன. இரண்டும் ஒன்று பட முடியாதன்றோ?

நான் தென்மொழியினின்று விலகியமைக் குக் காரணமான புற நிகழ்ச்சிகள், சூழல்கள் எல்லாமே இந்த அடிப்படை வேறுபாட்டின் வெளிப்பாடுகளாகவே இருந்தமையால் அவற்றை விரித்துச் சொல்லத்தேவையில்லை. அவற்றால் எந்த ஆக்கமும் விளையப் போவ தில்லை.

19. ○ பொதுவாகப் பழைய இலக்கியங் கள் மேல் உங்களுக்கு ஒருபற்று இருக்கிறது. 'திருக்குறளும் வாழ்வியலும்' என்று இப் பொழுது வந்துள்ள நூல் கூட அப்படித்தான். எல்லாவற்றிற்கும் பழைமையில் தீர்வு கண்டு விட முடியுமா?

□ பழையன யாவும் பொருந்தாதவை யும் அல்ல. புதியன எல்லாம் பொருந்துவன வும் அல்ல. எல்லாவற்றையுமே பழைமை புதுமை என்று பிரித்துக்காணத் தேவை யில்லை. சரியானது, நலமானது எங்கிருந் தாலும் அதை ஏற்றுக்கொள்வோம். எல்லா வற்றுக்கும் பழைமையில் தீர்வுகாண நினைக் கிறேன் என்று ஏன் எண்ணவேண்டும்? பழைய நூல்களில் பல வாழ்வியல் உண்மை கள் பொதிந்து கிடக்கின்றன. நம்மைவிட ஆழ மாகவும், நுணுகியும் பண்டைச் சான்றோர் எண்ணியிருக்கின்றனர். இதைக் கூறுவதால் அவர்களிடம் குறைகளே இல்லை என்றோ இக்காலத்திலும் முழுக்க முழுக்க அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றோ பொருள் ஆகாது. ஆயினும் இன்றைய அளவுகோல் களைக் கொண்டு அவர்களை அளந்து தீர்ப் புக்கு ஆளாக்குவது பிழை என்றே நினைக் கின்றேன்.

ஏற்றத் தாழ்வு மிக்க ஒரு குமுகாய அமைப்புக்குச் சார்புடையனவாகப் பழைய நூல்கள் இருந்திருக்கலாம். அறிவியற் பார்வையற்ற நம்பிக்கைகளை அவை வற் புறுத்தியிருக்கலாம். இப்படிச் சில பிழை களை நீக்கிவிட்டுப் பார்த்தால் புதுமையின் நலக் கூறுகளைவிடப் பழைமையின் நலக் கூறுகள் மிகுதி. புதுமையின் ஆரவாரத்தை விடப் பழமையின் அமைதி உயர்ந்தது. புது மையின் உடைமை சேர்ப்பு நாகரிகத்தைவிடப் பழமையின் வேண்டாமையன்ன விழுச் செல்வம் மக்கட்கு நலம் செய்தது.

○ ○ ○ ○



படிப்பகம்

www.padippakam.com

**சிறுகதைகள் :**

# உற்பத்தி

## சு. வேணுகோபால்

சேவா நிலையத்தில் கிருஷ்ணவேணியைப் பார்த்துவிட்டு வந்தபின் கிணறு தோட்டம் பற்றின தொந்தரவுகள் நிழல்போல் துரத்த ஆரம்பித்துவிட்டன. ஒவ்வொருத்தர் வாழ்விலும் ஒரு பொருள் அல்லது இடம் அந்யோன்யத்தோடு தெரியாமலே இயங்கி வந்திருக்கிறது. சின்னான் ஓடைக்கு வடக்கு இருக்கும் தோட்டத்தை 'சாமிக்கிணறு' என்று ஊர்க்காரர்களும் வீட்டில் 'சாமித் தோட்டத்தில வேலை' 'சாமி தோட்ட மோட்டார் ரிப்பேர்' என்றோ அதன் நிகழ்வு சார்ந்து பேசிக்கொள்வோம். இங்கு எல்லோரும்கும் கிணற்றுப் பாசனம் தான். நைனா வரப்பில் செருப்பை கழற்றி வைத்துவிட்டுத் தான் முருச வாய்க்காலில் இறங்குவார். செருப்பு போட்டால் கத்தரி செடியில் சூத்தை விழுமாம். ''நம்ம நடக்கிற மொறையிலதா பூமாதேவி பூரிப்பு கொள்றா'' நைனா பேச்சில் அது சந்தோச நிலம்.

வாயைக் கொப்பளித்துவிட்டு வராந்தாவில் வந்து உக்காந்தேன். சோபாவில் சாய்ந்திருந்த நைனா ''கோபாலா, ஈசான மூல வாங்கு செவ்வெளனி மரத்த கால வாசலுக்கு நூத்தம்பது ரூவாய்க்கி வெல பேசிட்டேன். இன்னிக்கு வெட்ட வர்றேன்னான்'' சொன்னார். சொல்லியதிலும் கேட்டதிலும் அதிர்வு இல்லாமலே போய்விட்டது. குருத்து முறிந்து நான்கு நாள் ஆகிவிட்டது. ''பக்கத்துத் தோட்டக்காரன் செய்வெண செஞ்சிருக்கணும். அவன் வெளங்குவானா? தொளங்குவானா....?'' அம்மாவின் சாபத்தோடு சாப்பாடு தட்டு வந்தது. ''எதையும் தீர விஜாரிக்காம கண்ட மேனிக்கி மொணங்காதம்மா?'' அதட்டிவிட்டு சாப்பாடு தட்டை இழுத்தேன். தலைவாசலுக்கு வந்த மனைவி அழும் குழந்தையை ''லோலே அட இந்தா... இந்தா... இந்தா வந்திட்டேன் கண்ணே...'' குரல் கொடுத்துக்கொண்டு மறுபடியும் அறைக்கு ஓடிவிட்டாள். நைனா தோட்டத்துக்குக் கிளம்பி போவது தெரிந்தது.

மேலு காலெல்லாம் சில நாட்களாக ஊரல் எடுக்கிறது. உள் உதடு ரணமாக இருக்கிறது. 'மசாலெ ஏம்மா இப்பிடி அள்ளிப் போடுற' வாய் முணுமுணுக்க எத்தனித்தாலும் வாய் புண்ணுக்கு அம்மாவின் சமையல் என்ன செய்யும்.

தள்ளிமுள்ளி சாப்பிட்டுவிட்டு கைகழுவிய வண்ணம் கொட்டத்தை எட்டிப்பார்த்தேன். அந்த வெள்ளாடு ரோமங்களையெல்லாம் உதிர்ந்து குரூரமாக மெலிந்துபோய் அசைபோடாமல் கண்கள் சொருக நின்று கொண்டிருந்தது. சதை ஒரு பணிக்கட்டியா? கொழுத்திருந்த ஆடு மூன்றுமாத செனையைக் கரைத்து தன் சதையை உருக விட்டுவிட்டது. ரோமமற்று சிரங்குபிடித்தத் தோலை போர்த்திக்கொண்டு துரும்பாக நிற்பதைப் பார்க்கும் போதெல்லாம் ஏண்டா பார்த்தோம்என்றிருக்கிறது.

டி.வி. மேல் இருந்த சீப்பை எடுத்து அலமாரி கண்ணாடியைப் பார்த்து சீவ நின்ற போது கண்ணாடிக்குள் என் மனைவியின் முதுகு. கண்ணாடியில் திரும்பி முதுகைக் காட்டியபடி போர்வையை உதறினாள். கண்ணாடியில் உருவம் மறைய திரும்பினேன். போர்வையை எடுக்க குழந்தை தொட்டியில் தொங்கும் அறைக்குப் போவது தெரிந்தது. என் மனைவிதான் அன்று கிருஷ்ணவேணியைப் பற்றி சொன்னது இதே மாதிரி தருணம் தான். மீசையை ட்ரிம் செய்து கொண்டிருந்தபோது என்ன ஏது என்றில்லாமல் பாதியில் ஒளிகல்லை உருவி போட்டது கனக்கா ''ஒங்க தங்கச்சியை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப்போனா என்ன'' என்றாள். அப்போதும் பேசாமல் மீசையை வெட்டிக் கொண்டிருந்தேன்.



நி—22

படிப்பகம்

www.padippakam.com

''சொல்றது காதில விழலையா?''

''விழுது அவளுக்கென்ன?''

''ஆஸ்பத்திரிக்கி கூட்டிட்டுப் போகச் சொன்னா என்ன எதுக்குன்னு தொழாவிக் கிட்டு....''

எனக்கு திக்கென்றது. திடுதிப்பென்று கேட்டதும் ஏதும் தகாத உறவு? மாசமாயிட்டாளா?... இப்படித்தான் மனசை ஏதோ ஒன்று இந்த பகுதிக்கு இழுத்துக்கொண்டு ஓடியது. கோவத்தில் கத்தரிக்கோலை வீசினேன். அது என் மூத்த மகனின் ஸ்கூல்பை அருகில் போய் விழுந்தது. ''வெண்ணெ என்னான்னு கேட்டா...'' நாக்கைத் துருத்தினேன். அந்தளவிலே மூடுங்க அசால்டாக சொல்லிவிட்டு திறந்திருந்த கதவை சற்று தள்ளிவிட்டு வந்தாள்.

மேலுகாலெல்லாம் கட்டிகட்டியா வீங்கியிருக்கு. 'தன் இடது முலையைத் தொட்டுக் காட்டி' 'இதுல வெண்குஷ்ட மாதிரி படர்ந் திருக்கு. நெஞ்சுக் கெடயில கட்டி ஒடஞ்சு தண்ணியா போகுது. நீரேத்தமோ என்னமோ? அழுகின முட்டவார்ப்பிட்டாணியைத் தொட்டு இங்கன கட்டி பழுத்து ஒடையற நெலமயில இருக்கு...'

சொல்லச் சொல்ல ரோமக் கண்கள் சுருக்கிட்டது. ''இதெல்லாம் மொதல்லயே சொல்லக்கூடாதா? அம்மாவுக்கு தெரியுமா?'' ''ஒங்க அம்மாவுக்கு தெரியாது ஆட்டுக்குட்டிக்கும் தெரியாது. ராத்திரி என்ன கிருஷ்ணவேணி ரெண்டு மூணு நாளா பேசாம உம்முன்னு இருக்கண்ணு கேட்ட பின்னாடிதான் சொல்லிச்சு'' இதற்குப் பின்புதான் கடா புடா வென்று சுதாரித்து திண்டுக்கல் சேவா நிலையத்துக்குக்கொண்டு போனது.

கிருஷ்ணவேணி வாழாவெட்டியாக குடும்பத்தோடு இருக்கும்படியாய் ஆகிவிட்டது. அவனோடு வாழ முடியாமல் போய்விட்டதே என்று கவலைகூட இல்லை. இளம் வயதில் எங்களை நம்பி மருகும் இவளுக்கு இப்படியொரு நோய் வந்துவிட்டதே என்கிற கவலைதான் நைனாவுக்கு. சேவா நிலையத்திற்குப் போன பின்பு மணிக்கட்டில் பெறப்பட்ட கவலை முந்தா நாள் போய் பார்த்த போது நீராக வடிந்து கொண்டிருந்தது. புஜத்தை அமுக்கினால் மணிக்கட்டில் நீர்ச்சலம் கசிந்தது. முகமெல்லாம் கவலை புதிது புதிதாய் தோன்றிவிட்டது. ஊதிய மேகங்களோடு அங்கு ஒத்தையில் உட்கார்ந்திருக்கிறாள்.

எங்கள் தோட்டத்தையும் தொழிற்சாலையையும் பிரிப்பது சின்னான் ஓடைதான். ஓடை வழியாக நடந்து கிணத்துமேடு ஏறும் வரை மூக்கை பொத்திக் கொண்டுதான் போகணும். ஓடைக்கருகில் சிமிண்டால் மூடியிருக்கும் கழிவுநீர்க் கிணறு அகலகலமானது. அதில் ஏறி நின்று பார்த்தால் வரிசை வரிசையாக பெரிய பெரிய இரும்பு கொக்கிகளில் மாட்டுத் தோல்கள் வௌவால் கணக்கா தொங்கிக் கொண்டிருப்பது தெரியும். இப்போது தொழிற்சாலைச் சுற்றி முள் கம்பி வேலி போட்டுவிட்டார்கள்.

அந்தக் காலத்தில் 4 கமலை வைத்து 108 கிணறளவு கொண்ட செவ்வகமாக வெட்டப்பட்ட கிணறு அது. ஊருக்கே மொத கிணறு என்பார்கள். சுத்துப்பிரகாரம் முழுக்க அப்புக்கல் வைத்து கட்டியிருக்கிறார்கள். மதிலோரமாக சுற்றிச் சுற்றி கீழிறங்கும் படிக்கட்டுகள் சுவரோரங்களில் ஈரநேமல் எப்போதும்.

மாரியம்மன் மௌப்பாரி ஊர்ச்சுற்று விழா முடிந்ததும் அந்தக் கிணற்றில்தான் இறங்கிப் போடுவார்கள். இறப்புச்சடங்கிற்கு நீர் மாலை எடுப்பார்கள். என் சின்ன வயசில் நைனா ''இங்கு குளிக்கக் கூடாது ஆகாது'' என்பார். இது நைனாவுக்கு நைனா சொல்லியதாக இருக்கும். ஆனாலும் களவாணித் தனமாக எல்லோரும் கமலையிலிருந்து குதித்து குளிப்பது நிற்கவில்லை. ''ஊர்ச் சாமிக்கிணறு' என்றாலும் நிறைய பேர் எங்கள் கிணற்றில்தான் நீச்சல் பழக வருவார்கள். அது என் மகனோடு முடிந்து விட்டது போலும்.

எப்போது போய் எட்டிப் பார்த்தாலும் சுவரோரங்களில் நீர்முத்துகள் இடைவிடாது விழுந்து கொண்டிருக்கும். ஓடைக்குள் பாதி



படிப்பகம்

வந்துவிட்டால், கிணற்றின் சலவைச் சத்தம் கேட்கும். நீர்க்காம்புகள் முளைத்த கிணறு. இது ஒரு காமதேனு. தொவைக்க வருபவர்களை ''சுத்த பத்தமா இருக்கனும் இப்படி வந்து அனியாயம் பண்றீங்களே'' அம்மா சத்தம் போட்டாலும் அது தன் பளிங்கு நீரை வாரி இறைத்துக் கொண்டுதான் இருந்தது. பனிகொட்டும் மார்கழி மாதத்தில் விடியக் காலை கேப்பை வாசத்தை நுகர்ந்தபடி ஓடுவோம். வாரியிறைக்கும் மோட்டார் நீரில் தலை வைத்தால் வெதும்பலாக இருக்கும். உடலில் ஆவி பறக்கும். குளிராது. வரப்பு புல்களில் ஜில்லிடும் உயிர்ப்பாக இருக்கும். நீரைப்போன்ற ஜீவக்களை ததும்பும் திரவம் வேறு உண்டா? அகமும் புறமும் இதங்கள் முளைத்த எங்கள் நிலம் மெல்ல மாறியாகி விட்டது. வள்ளுவன் என்னவானான்?

தோல் பதனிடும் தொழிற்சாலை வந்த பின்னாடி கூட எட்டு மாதம் கிணற்று நீர் நன்றாகத்தான் இருந்தது. பூமியின் அடியாழத்தில் ஒளிந்திருக்கும் சூதாடிகள் யார்? எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இடைவிடாது சுரக்கும் காமதேனு காம்புகளில் லேசான மஞ்சல் கலரில் வலிய ஆரம்பித்தது. நீரோட்டங்களை கற்பழித்துக் கொண்டிருக்கும் அரக்கன் தெரியவில்லை. அல்லது பூமாதேவியே இந்த விபச்சாரத்திற்கு பழகிக் கொண்டாளா? பழகும்படி ஆகிவிட்டதா? அதன் நரம்பு மண்டலங்களுக்குள் கிருமிகளை நுழைப்பது தெரியவில்லையா? தேவியின் சக்தி தான் என்ன! ஒரு நில நடுக்கம்-ஒரு பூகம்பம்—ஒரு எரிமலை—ஏதாவது ஒன்று போதும். மறுபடியும் ஜீவன்கள் நோயில்லாமல் வாழ.

குளிக்க வருபவர்களுக்கு முதலில் லேசான அரிப்பு ஏற்பட்டது. ஊருக்கே இது விநோதமாகப்பட்டது. மாரியின் சாபமோ? அம்மா பயந்து போய் மந்திரித்து சுருளித் தீர்த்த நீரை கூஜாவில் கொண்டுவந்து ஊற்றிவிட்டார். விடியும் நீர்துளிகளில் நுரையோடு கூடிய மூத்ரகலர் அதிகரிக்கத்தான் செய்தது. கிணற்றிலிருந்து எழுந்த துர் நாற்றம் நீராடலை நிறுத்திவிட்டது.

கிருஷ்ணவேணி சேவா நிலையம் போன பின் பூச்சித்தேவர் இறந்தார். சாயந்திரம் வரை யாரும் அதைப்பற்றி யோசிக்கவில்லை. நாலுமணி ஆனதும் தான் நீர்மாலை எடுக்க பெரியதனம் ஞாகப்படுத்தினார். அவர்களுக்குள் கசாபுசாவென்று பேச்சுக் கிளம்பியது. கொஞ்சம் வயதானவர்கள் ''அதெப்படி பரம்பரயா சாமிகெணத்தில நீர்மாலை எடுக்கிறதவிட்டுட்டு இங்கயே குளிக்கவேணுமங்கிறது? ''சாய்வாகவும் நீர்மால எடுக்கிறதில்தான் கொறச்சல்'' இளசுகள் எதிராகவும் கூச்சல்போட ஆரம்பித்தார்கள். ஒரு வழியாக 'கிணத்து நீர் எடுத்து குளிக்காமல் கிணற்றை எட்டிப்பார்த்துவிட்டு மட்டும் திரும்பலாம்' என்றார்கள். சிலர் 'நீரைத் தொட்டு தலை சுற்றிக் கொள்ளலாம் என்றார்கள் ஒரு வழியாக கிணற்றுமேட்டுக்கு வந்தார்கள்.

கயிறுகட்டி ஏழுவாளி நீர் இறைத்து வாளியில் வைத்ததும் இழவுவீட்டுக்காரர்கள் தொட மறுத்தார்கள். ''பெரிய நாகரீகக் காரங்கெ'' கூட்டத்தில் முணுமுணுப்பு எழுந்தது. நிலைமையைக்கண்ட பெரியதனம் பூவரசு ஒடித்து ஒவ்வொரு வாளி நீரிலும் முக்கி 'வாரிசுகளின் உடலில் படாமல் சுற்றி 'குளித்ததாக' அடையாளப்படுத்தினார். வெள்ளை வேட்டியின் நுனி, நான்கு கம்புகளில் கட்டப்பட்டு பந்தல்களைப் பிடித்துக் கொண்டு நின்றார்கள். நீரில் சுவராமலே வேட்டி காற்றில் படபடத்தது. மேலுகாலெல்லாம் விபூதியைப் பூசிக்கொண்டு நகர்ந்தார்கள். 'கூட்டத்தில்' ''இந்த கெணத்தில நீர்மால எடுக்க வரணுமா? நீர்மால எடுக்கலண்ணா தான் என்ன ''அமுங்கின குரலுல் கிண்டல் எழுந்தது.'' இப்பென்னாப்பில என்ன? பதில். நகரும் கூட்டத்தில் கெக்கலித்தது.

தோட்டத்தைச் சுற்றி நின்ற தென்னை மட்டைகள் திடுதிப்பென்று உதிரத் தொடங்கினது. எங்களுக்கெல்லாம் நடுக்கமாகிவிட்டது. காற்று வீசாதபோதும் பழுத்த இலை உதிர்வது போல பச்சை மட்டைகள் நாள் தோறும் உதிரத்தொடங்கின. என்னமோ தெரியவில்லை ஒண்ணுபோக ஒண்ணு தொடுத்துக் கொண்டு இருக்கிறது. எங்கள் வீட்டைச் சுற்றியே சனீஸ்வரன் முகாமிட்டிருக்கானா? வச்ச வெள்ளாமையை கண் கொண்டு பாக்க முடியவில்லை. தோட்டத்துக்குப் போகவே மனசில்லை. அப்படியே இருந்துவிடவும் முடிய

வில்லை. சரி மரம் வெட்டுவதைப் பார்த்து விட்டு வரலாமென்று கிளம்பினேன்.

மூணு வருசத்துக்கு முந்தி அமெரிக்காரனை கோயம்தூர் மொதலாளி இந்த இடத்தைப் பார்க்க கூட்டிவந்தபோது முதலில் எங்கள் நிலத்தைத் தான் விலைக்குக் கேட்டான். ஐந்தாறு முறை சினனமனூர் ஏஜண்ட் டாக்ஸியோடு நைனாவைப் பார்த்து வெறுங் கையோடு திரும்பிப் போனான். அப்புறம்தான் எங்கள் தோட்டத்துக்கு மேக்கால இருக்கும் ஹரிஜக்கு நாயக்கர் மாமா தோட்டத்தை வளச்சு பிடிக்க ஆள் வந்து வந்து மோதிக் கொண்டிருந்தது. அவரும் மனசில்லாமல் அந்தா இந்தா என்று இழுத்தடித்தார். காரணம் எங்கள் நைனாவிடம் யோசனை கேட்டுக்கொண்டு இருந்தது தான்.

சில நாட்களுக்குள் அவரும் மனசை மாத்திக் கொண்டார். சிகரெட் பெட்டியைத் தட்டிய வண்ணம் வெளித்திண்ணையில் நைனா பக்கம் வந்து உட்கார்ந்தார். ஜக்கு மாமா "தோட்டத்த விட்டிடலாமன்னு இருக்கேன் சுப்பு. கூலியாள் சம்பளம் தாக்கு பிடிக்க முடியல. பண்ணைக்கும் இப்ப யாரும் அமர வாரதில்ல. கேவலமன்னு நெனைக்கிறாங்க. நம்ம ஊர் கம்யூனிஸ்ட்காரன் மேடே போட்டான்னா என்ன தான் மொதல்ல வைறான். இருபது ஏக்கா நா வச்சிருக்கிறது அவனுக்கு பெருசா போச்சு...பையனும் லெதர் டெக்னாலஜி படிச்சிட்டு வேலையில்லாம திரியிறான். நெலம் விட்டா கம்பேனியில நல்ல ஆபிசர் போஸ்ட்டா தாரதா சின்னமனூர்க்காரன் உறுதியா சொல்றான். அதான் ஒரே யோசனையா இருக்கு. கத்தரி சிகரெட் கங்கை திண்ணையில் நசுக்கி அமர்த்தினார். நைனா பதில் எதுவும் அன்று சொல்லவில்லை.

எங்கஊர் சுத்துவட்டாரத்திலேயே கரும்புக்குப் பெயர்போன நிலம் அது. வேலைக்கி போயிட்டுவர்ற ஆம்பளை பொம்பளைகள் கை சும்மா இருக்காது. ஜக்குமாமா தோட்டக் கரையில் ஏறி நின்று சவளையின் தோகையை முறுக்கி சுண்டினால் அடிகணு தெறித்து முழுதட்டையும் கையோடு வருவதை கிணத்து மேட்டிலிருந்து எத்தனையோ முறை பார்த்திருக்கிறேன். கரையிலிருந்து ஓடைக்குள் குதித்து ஊர் சேரும் வரை ஈஞ்சி செவஞ்சக்கிட்டு போறது தெரியும். மறுநாள் காலையில் ஓடைவழியாகப் போனால் தின்று போட்ட சக்கைகளை எறும்புகள் இழுத்துக் கொண்டு போகும். சலவையோடு பேசும் கிணறு—காற்றோடு உராயும் கரும்புத்தோகை—இனிப்பு வரும் ஓடை—அது ஒரு காலம்.

ஜக்குமாமா தோட்டத்தை மையமாக வைத்து அந்த பரவு முழுசையும் அமெரிக்கா, கோயம்புத்தூர் கம்பேனி கூட்டாக வாங்கியது. 150 ஏக்கர் நிலப் பரப்பளவு என்று பெயர் பலகை அறிவித்துக் கொண்டு இருக்கிறது. இப்போது கரும்பு வௌஞ்ச மேட்டுப் பரப்பு முழுசும் கட்டிட கூடாரங்கள்.

கூட்டுக் குடிநீர் திட்டம் இன்னமும் எங்கள் கிராமத்துக்கு வராததால் ஊர் கடைசியில் இருக்கும் அடிபம்புகள் டங்டங்டங் ஓசை எழுப்பிக் கொண்டிருக்கும். சத்தம்-வரலை என்றால் ரிப்பேரில் இருக்கிறதென்று அர்த்தம். குழாயடி சண்டையை விட என் அம்மா வசவை காது கொடுத்து கேட்க முடியாது. என் மனைவி என்னிடம் குறைபட்டுக் கொள்வதும் இதில்தான். ஓடை வழியாக பம்மி பம்மி எங்கள் கிணத்துக்கு அம்மாவுக்குத் தெரியாமல் வந்து மோட்டார் நீரைப் பிடித்துக் கொண்டு ஒட்ட ஒட்டமாக ஓடைக்குள் இறங்குவார்கள். அம்மாவுக்கு அது தெரிந்தே இருக்கும். "பாத்தியே பாய மாட்டெங்கிது. எவளுக்காவது புத்தியிருக்கா? இவ்வளவு சொல்லியும் காத அடைச்சுக்கிட்டு பிடிச்சுக்கிட்டு போறாளே" சவுண்டு வரும். ஒரு நாளும் கொடத்தைப் பிடிங்கி நீரை கவிழ்த்துவிட்டு வெறுங்கொடமாக அனுப்பியது கிடையாது. என்னமோ நீர் பிடிக்க வரும் பெண்கள் வசவை பொருட்படுத்தாமல் நீர் எடுத்துக் கொண்டு ஓடுவதும், அம்மா திட்டுவதும் நிகழ்ந்தது. நைனா கண்டும் காணாதது போல் விட்டு விடுவார். எங்கள் முழு குடும்பத்துக்கும் முப்பது நடை நீராவது கிருஷ்ணவேணி சுமப்பாள். ஆடு மாடுகள் ஜாஸ்தியில்லையா? அதனால் தான். எளனி கணக்கா இருந்த தண்ணி மூத்ர கலரில் மாறியது மட்டுமல்ல குடித்தால் கரிப்போட வாயெல்லாம் நவ நவக்கும். இந்த ஒரு வருஷமா யாரும் தண்ணி பிடிக்க வாரதில்லை



படிப்பகம்

www.padippakam.com

அடிபம்பில் போய் மல்லுக்கட்ட முடியாது என்பதால் நாங்கள் மட்டும் சாமி கெணத்து தண்ணிய கொண்டு வந்தோம்.

ஓடையை விட்டு ஏறியதும் துர்நாற்றம் வந்தது. வாரியில் நின்று கிணற்றை எட்டிப் பார்த்தேன். கருத்து நீர் தெப்பமாக நுரைத்துப் போயிருந்தது. இரண்டு தவளைகள் செத்து ஊறி மல்லாக்கப் படுத்திருந்தன. காற்றில் நெளிந்து கொண்டிருந்த கோழி இறகு சுற்றுப்பட கிணற்றுள் இறங்கியது. ஊஞ்சல்போல பக்கவாட்டில் அலைந்து கொண்டே நுரைத்துப் போய் நிற்கும் அஞ்சாள் மட்ட நீரைத் தொட்டதும் நுரைகள் பொறிந்தன. எப்போதும் சலசலத்துக் கொண்டிருந்த கிணறு ஊற்றுக் கண்களுக்கு மேல் நீர் மட்டம் ஏறி மௌனத்தை கடைப் பிடித்து விட்டது.

சோளத்தட்டைகள் காஞ்சாரி நோய் விழுந்து தீப்புகையில் மூழ்கியது கணக்கா ஈன முடியாமல் பட்டுப்போய் சொடிந்து கொண்டிருந்தன. தண்ணீர் பாய்க்க பாய்க்க தாவரங்களுக்கு கடுஞ்சிதைவுகள் தான் நிகழ்கின்றன. குறுகி உள்ளுக்குள் வெந்து போகும் குரூரம். மண் விச சுரப்பிகளால் படிவம் கொண்டு விட்டது. அது தன் அற்புதமான வாசத்தை இழந்துவிட்டது.

நைனாவைக் காணவில்லை. உத்திவாங்களில் ஏறி நின்று பார்த்தேன். கொய்யா மரத்தடியில் எதையோ பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. கை வாய்க்கால் பூராம், எருமை மோண்டு தொடை இடுக்கில் உப்பரிந்திருப்பது போல வெள்ளையாக ஏதோ படிந்திருந்தது. இதைத் தான் நீலச்சீக்கு என்கிறார்களா? பழுதுபட்ட நிலத்தின் மீது தாவரங்களின் கருகிய துயில்!

ஒரு சமயம் நிழல் அடர்ந்த தென்னை வரிசை தோட்டத்தைச் சுற்றியிருந்ததில் வெயில் பரவியிருந்தது. சில தென்னைகள் தலையை இழந்து முண்டமாக வானை நோக்கி நிற்கின்றன. தரையில் உதிர்ந்து கிடக்கும் இமிங்கிய தென்னம்பூக்களை மிதித்துக்கொண்டு ஈசான மூலைக்கி நகர்ந்தேன். செவ்வெளனி தன் மணிமுடியை கவிழ்த்துக்கொண்டு நின்றிருந்தது. காலவாசல்காரன் வெட்ட இன்னும் வரவில்லை.

லேசாக சாய்ந்து உயரே நின்ற மரம். செல்பிடித்தாற்போல் சீசனுக்கு சீசன் காய்ந்த மரம். அதன் தலைக்குள் புதைந்திருந்த சுனை களவாடப்பட்டுவிட்டது. சிலசமயம் குலை நெருக்களில் திணறி தெறித்து உதிரும் பிஞ்சு கூட துவர்ப்பு அடிக்காது. இனிப்பு. அந்த பாம்பிஞ்சை எடுத்து குருத்தில் ஊழிக் குச்சியால் துவாரம் போட்டு குடிப்போம். கா டம்ளர் நீர் இருக்கும். குருத்தே தேங்காய் சில் மாதிரி நருச் நருச் என்றிருக்கும். வாய் வெத்தலை போட்டது கணக்கா ஆகிவிடும். இந்த செவ்வெளனி மரத்தின் இனித்த சுவையால் மட்டும் எங்கள் குடும்பத்தினருக்கு பிரியமல்ல. மட்டையின் கக்கங்களைச் சுற்றி படுத்திருக்கும் நெருக்கமான குலைகளின் அழகு வேறு எந்த மரத்திற்கும் வாய்க்கவில்லை. அண்ணாந்தால் சிவந்த முலையடைகள் தெரியும். மகோன்னதமான வாழ்வு அது நெத்துக்காக பாதி மரத்தில் சீமக்கருவேல் முள் தொட்டை கட்டி வைத்த வாக்கில் இருந்தாலும் அதை அவிழ்க்காமல் தாண்டி ஏறும் சாகசக்காரர்களுக்கும் விருந்து படைத்தது உண்டு. இருட்டில் முள்தொட்டை அவிழ்த்து தூரில்வைத்துவிட்டு ஏறிப்போய் கனங்களைப் பறித்துக்கொண்டு ஓடியவர்கள் நிறைய. காலையில் போய்ப்பார்த்தால் சிரித்து கொப்பளிக்கும். பச்சைக் கீற்றுகளின் பளப்பளப்போடு இயல்பாக அசைந்துகொண்டிருக்கும். கீழே முள் தொட்டிக்குள் உருண்டுபோய் மறைந்து கொண்ட தேங்காய்களை வீட்டுக்கு எடுத்து வந்ததுண்டு. தேரல் கை மந்தத்திற்கு இருக்கும். அதிகம் முற்றிவிட்டால் உதடுகளில் எண்ணெய் மினுமினுப்பும் வாசமும் தெரியும்.

காற்றில் ட்ட்ரிரிட்ட பச்சை கீற்றுகள் பழுத்த செவ்வட்டையாக மாறத்தொடங்கின. பினபு குலைகளில் ஒரு பிஞ்சு கூட தறிக்கவில்லை. அதன் நெருக்கம் குலைந்து ஓடு கனங்களாக.. பின் அதுவும் அற்று வெறும் மழை கீற்றுகீற்றுகளாக... பூக்கள் கூட தறிக்காமல் பொல பொலவென்று உதிரத்தொடங்கின. பளபளத்து வந்த பச்சைக்குடையை நினைத்துப் பார்த்தாலும் திரும்பவரவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

குடை மடங்கி உச்சியில் சரிந்து தொங்கும் காட்சி வருகிறது. அண்ணாந்து பார்க்கவே மனசில்லை நகர்ந்தேன்.

நைனா என்னை கவனித்த பின்னும் வேறொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு செப்பூத்து பறக்க முடியாமல் இறகுகள் புல்லரிக்க தள்ளாடி நடந்தது. ஊடு கரையில் ஏற முடியாமல் வாய்க்கால்குள் விழுந்தது. ''அப்ப இருந்து அது பறக்குமான்னு பாக்க றேன். கீழ் விழுந்து கிட்டு தான் இருக்கு" துண்டால் முகத்தைத் துடைத்துகொண்டார்.

கொய்யாமர இலைகள் மொரமொரத்து காணப்பட்டன. தொங்கும் கிளையை இழுத்து முக்காதர காயை எக்கி பிடிங்கி னேன். கருங்காம் பிடுங்கும் போதே கையில் நொச நொசவென்று நெளிந்தது. கை காசி புழுவை நசுக்கிய வாசம் வீசியது. பார்க்க காய். தொழு நோயால் பழுத்திருக்கிறது. தூர வீசினேன்.

செம்பூத்தால் பறக்க முடியவில்லை. இந்த கொய்யாமரத்திலும் தென்னை மரங் களிலும் தான் கொட்டமுத்தம் போடுகிற எத்தனை செம்பூத்துகள் இருந்தன- தாழப் பறந்து கிளை தாவும் தோகை நீண்ட செம் பூத்துக்களை காணவில்லை. கருத்து மின்னும் அடிபாகமும் கருஞ்சிவப்பில் வலுவலுக்கும் இறக்கைகளும் பார்க்க ரம்மியமாக இருக்கும். தொட்டியில் அமர்ந்து கொண்டு பார்த்தால் இறகில் சிதறும் நீர்த்துளிகளில் விதவிதமான வண்ண பூபாளம். ஒளிரும் கலர் கலரான நீர்த்துளிகள் பூமியில் விழுந்து நொறுங்கிக் கொண்டே இருக்கும். செம்பூத்துக்களின் சிலிர்ப்பில் கிளம்பும் நீர்துளி சூரியன்களின் வர்ண ஜாலங்கள் அது.

அக்கா குருவியைப் பார்க்காதவர்கள் இதைத்தான் அது என்கிறார்கள். தொண் டையில் காற்றைபெருக்கி 'ம்ம்ஊம், ம்ம்ஊம்' என்னும்போதோ 'அக்கூ' என்னும் போதோ எங்கோ ஒரு மூலையிலிருந்து இன்னொரு செம்பூத்து தொண்டைக்குள் சுருதி தட்டி ரீங்காரத்தை அனுப்பும். ஒருபக்கமாக பூமியில் சயனித்து சுட்டெரிக்கும் வெயிலில் மேற்புற இறக்கையை விசிறியாக விரிக்கும். அப்படி விரித்தால் மழை வரும் என்பார்கள். முன் கூட்டி அறிவிக்கும் சூட்சுமம் எந்த வெயில் நாள் என்பது அதுக்கு மட்டுமே தெரிந்த அந்தரங்கம்.

வாய்க்கால் கரையிலிருந்து கழுத்தை தோயவிட்டு விழுந்தது. நைனாவை விலகிப் போய் தூக்கினேன். எந்த முனகலும் இல் லாமல் தன் இயக்கத்தை நிறுத்தி விட்டி ருந்தது. எனக்கு சட்டென்று கிருஷ்ணவேணி ஞாபகம் தான் வந்தது. கொட்டத்தில் ரோமங்களை உதிர்த்து நிற்கும் ஆட்டின் உறைந்த கண்கள் புறவெளியெங்கும் மிதப் பது போல் பிரமை.

இறகுகள் சிலிர்த்து தலை சொணங்கிய செம்பூத்தை கட்டுகனப்பில் போட்டு விட்டு வெந்தபுல் வரப்பில் நடந்தோம். கையகல நிலத்திலே ஆதி ஜீவன்கள் அழியத்தொடங்கி விட்ட காலம் தெரிந்தது. ஓடைக் கரையில் ஏறியபடி அதிகம் பேசாத நைனா ''ஹிரோசி மாவில அணுகுண்ட மேல இருந்து போட் டான்னா எல்லா எடத்திலயும் அப்பிடி தான் போடணுமெங்கிறதில்ல. சத்தமில்லாம கீழ இருந்தும் போடலாம். பூமாதேவி செத்துப் போச்சான்னு தோணுது" என்றார். கரையில் ஏறி நின்றதும் தொழிற்சாலையின் சங்கு ஆங்காரமாய் ஒலிக்கத் தொடங்கியது. கருகிய காகித வார்த்தைகளாய் காற்றில் நொருங்கிப் போனது நைனா சொன்னதும் பாதச்சுவடில் நெமுறும் குறுமண ஓசையோடு ஓடையில் நடக்கலானோம்.

○ ○ ○



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலை

## சூத்ரதாரி

சிவமணி நாடார் புளியமரத்தில் தொங்கிக்கொண்டிருந்தார்.

காதர்பேட்டை புளியமரத்தின் விஸ்தாரம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மலையை கவிழ்த்துப் போட்ட மாதிரி கிளை யடர்ந்து அகன்ற அடிமரத்தூணுடன் வீசுகிற காற்றை உள்வாங்கி பயங்கரத்தைத் துப்புகிற சத்தத்துடன் பிரம்மாண்டமாயிருக்கும். தாவிப் பிடிக்க முடியாத உயரத்தில் கிளைகள் உருண்டு படுத்திருக்க... கொப்புகள் தணிந்து கூடாரமாய் விரிந்திருக்கும்.

சிவமணி நாடார் அந்த மரத்தில் எப்படி ஏறினார்.;எப்போது ஏறினார் தெரியவில்லை. தரையிலிருந்து குறைந்தபட்சம் பத்தடி உயரத்தில் அந்தரத்தில் தலைக்கு மேல் உயர்ந்த கைகள் கிளையைப் பிடித்திருக்க அவர் பாட்டுக்கு பாடிக்கொண்டு தொங்கி யிருந்தார்.

''ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்கா
காசுக்கு ரெண்டு விக்க சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளைக்
காரன்...''

கரம்பவுண்ட் ஜனமே கூடிவிட்டது. ''நாடாரே... அங்க எங்க தொங்கறீங்க... கீழ பாத்திங்களா பாழுங்கெணறு... விழுந்தா எண்றதுக்கு எலும்பு இருக்காது தெரியுமா?'' பொன்னுவேல் ஆசாரி எச்சரித்தார்.

''வந்தே மாதரம்... வந்தே மாதரம்''- நாடார் பொன்னுவேல் ஆசாரிக்கு பதில் சொன்னதாக தெரியவில்லை.

நாடார் தொங்கிக் கொண்டிருந்த இடத்தில் கீழே பயங்கரமான பாழுங்கிணறு. கல்லும் முள்ளுமாய் எந்தமூலையிலோ ஊறும் ஜலத்தில் சகதியுடன் வாய்பிளந்து கிடந்தது. சுற்றிலும் முள்ளுச் செடிகளும் கத்தாழையும் அடர்ந்து கால் வைக்க முடியாமலிருந்தது.

சிவக்குமாரும் ராமமூர்த்தியும் மளமள வென்று புளியமரத்தில் ஏறினார்கள். சரசர வென்று தாவித் தாவி சிவமணி நாடார் தொங்குகிற கிளைக்கு பக்கத்துக் கிளையில் நின்றபடி, ''நாடாரே...! கையக் குடுக்கிறீங் களா?'' என்று கத்த தலையை தூக்கி மேலே பார்த்தார். ராமமூர்த்தி கையை நீட்டிக்கிளை மரத்தில் கவிந்திருந்தான். அவனுக்கு சற்று தள்ளி சிவக்குமார் நின்றிருந்தான். மரம் மேலும் கீழுமாய் அசைந்திருந்தது.

''முடியாது... வெள்ளையனே வெளி யேறு!... ஜெய பேரிகை கொட்டடா... கொட் டடா...வெள்ளையனே வெளியேறு'' ஆவேசம் பொங்க கண்களில் வெறியுடன் கத்தினார் நாடார்.

யார் என்ன சொல்லியும் நாடார் கேட்ட பாடில்லை. நேரமாகிக் கொண்டிருந்தது. கைகள் சலித்து நழுவினால் அவ்வளவுதான். ஆளாளுக்கு பதற்றம் தொற்றிக் கொள்ள விதவிதமாய் யோசனை சொன்னார்கள். ஏணி வைத்து இறக்கவும் வகைச்சலில்லை. கயிறு கட்டி ஏதும் செய்ய யோசித்தால் நாடார் ஒத்துழைப்பில்லாமல் முடியாது.

''இந்தப் பைத்தியம் இப்படிப்போய் புளிய மரத்திலே ஏறிருச்சே... வம்பாப் போச்சே... ஏதாச்சும் செஞ்சாகணும்'' பொன்னுவேல் ஆசாரிதான் புலம்பிக் கொண் டிருந்தார்.

காம்பவுண்டில் மொத்தம் எட்டு விடுகள். வரிசை பிடித்தாற்போல ஒரே மாதிரியான எட்டு விடுகளுக்கும் சிவமணி நாடார்தான் சொந்தம். சாதாரண சிவமணி நாடாரில்லை, தியாகி,தேசபக்தர், சுதந்திர போராட்ட வீரர் சிவமணி நாடார். வயசு அறுபதானாலும்



படிப்பகம்

அஞ்சாத சிங்கம் - தளராத உடம்பு. மாசா மாசம் பென்ஷன் வருவது போக வீட்டு வாடகையை வாங்கிக் கொண்டு அதே வீடு களில் ஒன்றில் ஒத்தை ஆளாய் இருக்கிறார். சுதந்திரத்திற்காக கல்யாணம் காட்சி எல்லா வற்றையும் உதறியவர். கொடி காத்த குமர னின் ஊர்வலத்தில் கோஷமிட்டுப் போனவர். போலீஸ் தடியடியில் லத்தியொன்று வலது மண்டையை பதம் பார்க்க ஆஸ்பத்திரியில் இருந்து வரும்போது நாடார் நல்லபடிதானி ருந்தார்.

ஆனால் மூளையில் பட்ட அடியின் விளை வுகள்தான் அவ்வப்போது அவரை கோவ ணத்துணியுடன் புளியமரத்தில் தொங்கச் செய்கிறது. காயம் ஆறுகிறவரை மொட்டை யடித்துக் கொண்டிருந்தவர் நாலு விரலளவு தளும்பு புடைத்திருக்கவே தலையை மொட்டையாகவே இருத்திக் கொண்டார். இத்தனை வருஷமானாலும் இன்னும் அந்த கதர் பக்தியின் பிடியிலிருப்பவர். ஆகஸ்ட் பதினைந்தானால் போதும் காம்பவுண்ட் முழுக்க வெள்ளையடித்து பிரத்யேகமாய் கட்டின கொடி மரத்தில், கதர் தொப்பி அணிந்துகொண்டு, தேசியக் கொடியைப் பறக்க விடுவார். வீதியில் எல்லோருக்கும் தேசிய விடுதலை கீதங்களை பாடினபடி இனிப்பு தருவார்.

அந்த சிவமணி நாடார்தான் புளியமரத் தில் எசகுபிசகாய் தொங்கிக் கொண்டிருந் தார்.

யாரோ தகவல் சொல்லி இரண்டு பயர் சர்வீஸ் ஆட்கள் வந்துசேர்ந்தார்கள். நாடார் அப்போதும் உற்சாகமாய் ''பாரத் மாதா கீ ஜே!'' சொல்லியபடியேதானிருந்தார். கயிற் றேணியை உபயோகித்து வலுக்கட்டாயமாய் நாடாரை இறக்கினார்கள்.

நாடார் எதுவும் பேசாமல் நொண்டிய படியே பயர் சர்வீஸ்காரர்களுடன் வந்தார். திண்ணையில் உட்கார வைத்ததும், காலில் குத்தியிருந்த முள்ளினை எடுத்தார்.

''ஏய்யா... எதுக்காக மரத்தில போய் தொங்கின!'' -காக்கிச் சட்டையிலிருந்த பயர் சர்வீஸ் ஆள் மிரட்டுகிற தொனியில் கேட்டார்.

அவரையே பார்த்தபடி எழுந்து நின்ற நாடார் நொடிப் பொழுதில் பளாரென்று அவரது இடது கன்னத்தில் அறைந்தார். பொறி கலங்கி அதிர்ந்து பின்னகர்ந்தார் அவர். கூடியிருந்தவர்கள் ஒருநிமிடம் திகைத் திருக்க, இன்னொரு பயர் சர்வீஸ் ஆள்தான் சட்டென்று நாடாரின் கையைப் பிடித்து அவரது முதுகுப் பக்கமாய் முறுக்கித் திருப் பினபடி, ''எதுக்கய்யா அடிச்சே.... என்ன கொழுப்பா...?'' என்று கோபத்தோடு துவங் கினார்.

பொன்னுவேல்ஆசாரி உடனே சமாளித்த படி, ''அய்யா... அவருக்கு புத்திசரியில் லீங்க... என்ன செய்யறோம்ங்கறதே தெரி யாம செய்யறார். நீங்க கோபப்பட்டு அவரை அடிச்சிராதீங்க.... நல்ல மனுசன்.... தியா கிங்க... ஏதோ பாவம்... அவருடைய நேரம்... எப்பவாச்சும் இப்படி நடந்துக்கறார்... நீங்க போங்க.... நாங்க அவரப் பாத்துக்கறோம்....'' சமாதானப்படுத்தி அவர்கள் இருவரையும் அனுப்பி வைத்தார். அறை வாங்கினவர் நாடாரை முறைத்துக்கொண்டே நகர்ந்தார்.

கையை நீவிக்கொண்டே நாடார், வெள்ளக்காரனைத் தொரத்துரான்னா... என் கையப் புடிச்சு.... முறுக்கறான்.... துரோகிப் பய!" என்று திண்ணையில் உட்கார்ந்தார்.

நாடார் எப்போதும் இது மாதிரிதான் என்று தீர்மானித்துவிட முடியாது. புத்தி சரியில்லையென்பதை இது மாதிரி எல்லை மீறின சந்தர்ப்பங்களில் மட்டுமே ஊர்ஜிதப் படுத்திக்கொள்ள முடியும். மற்றபடி தேசப் பித்து பிடித்தவராய் பாட்டு பாடிக் கொண்டு, புறாக்களுக்கு தானியம் இறைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு காந்தி கதை சொல்லிக் கொண்டு, அபூர்வமாய் கதர் ராட்டை நூற்றுக்கொண்டு சமாதானமாகவே இருப்ப வர்தான். 'வந்தே மாதரம்' சொல்லுகிற குழந்தைக்கு நாடார் நிச்சயமாய் காசு தரு வார் என்பதால் காம்பவுண்ட் குழந்தைகள் எல்லாமே வந்தே மாதரத்தை நாலு வரி களாவது மனப்பாடம் செய்திருக்கும்.

## திருப்பூர் தமிழ்ச் சங்கம் இலக்கிய பரிசுகள் - 95

நாவல், சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு, நாடகம், கட்டுரை சிறுவர் இலக்கியம் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

முதல் பரிசு : ரூ 3000/-
இரண்டாம் பரிசு : ரூ 2000/-
மூன்றாம் பரிசு : ரூ 1000/-

ஒவ்வொரு நூலிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.
கடைசி நாள் : 30-4-1996

முகவரி :

திருப்பூர் தமிழ்ச்சங்கம்,
34, கே.பி.என். காலனி,
3வது வீதி,
திருப்பூர் - 641 601.

## மகாகவி பாரதியார் விருது

மகாகவி பாரதியார் பெயரில் கோவை இலக்கிய வட்டத்தின் சார்பில் வழங்கப்படும் சிறந்த தமிழ் நூல்களுக்கான 1996 ஆம் ஆண்டிற்கான விருது பெறுவதற்காக 1993, 1994, மற்றும் 1995 ஆகிய மூன்றாண்டுகளில் வெளியிடப்பட்ட தமிழ் நூல்கள் வரவேற்கப்படுகின்றன.

புதினம், கவிதை, நாடகம் உள்ளிட்ட படைப்பிலக்கிய நூல்களும் இலக்கிய மற்றும் பொது அறிவுத்துறை ஆய்வு நூல்களும், அறிவியல் தமிழ், அறிவாக்க பொதுக் கட்டுரை வடிவிலான பயனாக்கக் கட்டுரை நூல்களும் விருது பெறுவதற்குத் தகுதியுடையனவாகும்.

விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூலைப் படைத்த ஆசிரியர்க்கு ரூ 7000 மும், வெளியிட்ட பதிப்பகத்துக்கு ரூ 3000மும் பகிர்ந்தளிக்கப்படும்.

நூலாசிரியர், வெளியீட்டாளர் அல்லது நூலுக்காகப் பரிந்துரை செய்ய விரும்பும் ஆர்வலர், விருதுக்காக நூலின் இருபடிகளையும், தமிழ் இலக்கிய, சமூக அறிவு மரபுக்கும் வளர்ச்சிக்கும் அந்த நூல் எவ்விதத்தில் துணைபுரிந்துள்ளது என்பது பற்றி 100 வரிகளுக்கு மிகாத பரிந்துரையுடன் 30-4-96 ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்கலாம்.

முகவரி :

முனைவர் முல்லை ஆதவன்,
தமிழ் இணைப் பேராசிரியர்,
பாரதியார் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 046.

www.padippakam.com




இந்த இதழ் முன் அட்டையிலும், பின் அட்டையிலும் இடம் பெற்ற, சீன சிற்பங்கள் 'குத்த வசூல் முற்றம்' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப் பட்டவை. இந்தச் சிற்பங்கள் கடந்த காலத்தை நினைவில் பதித்துக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டவை. ஆனால் வரலாறு நம்மை கேலி செய்வது போ இந்தச் சிற்பங்கள் நம் இன்றைய - நாளைய நிலவரங்களையும் குறிப்பதாக நமக்கு அதிர்ச்சிை தருகின்றன.

★ ★ ★

இதுவரை நிகழிதழுக்கான அச்சுக் கட்டைகளை அழகுறச் செய்த, **செயின்ட் அந்தோனி பிராசஸ்** (தியாக புதுவீதி - 2, சுக்கிரவாரப் பேட்டை, கோவை) உரிமையாளருக்கும், உதவியாளர்களுக்கும் நிகழின் சார்பில் மனம் நிறை நன்றிகள்.

★ ★ ★



சிறப்பாசிரியர் : **எஸ்.என். நாகராஜன்**
ஆசிரியரும் வெளியிடுபவரும் : **கி. பழனிச்சாமி (ஞானி)**
**123, காளீஸ்வரர் நகர், கோவை - 641 009.**

Wrapper printed at AR prints 375-8 Arcot Road, MADRAS - 600 024.